...proved by the Text-Book Committee, Madras.
Vide Page 243 Part I B, Fort. St. George Gazette, Dated 12-4-1932.

Stories from Tolstoy.

கதைமணிக்கோவை.

K. கோதண்டபாணி பிள்ளை, B.A.,

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர்,
மதுரை & சென்னை.

 1931. Price As. 5.

Stories from Tolstoy

கதைமணிக்கோவை

R. கோதண்டபாணி பிள்ளை, B. A.

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

மதுரை & சென்னை.

 1933. [Price As 5.

Printed at
The Excelsior Power Press,
Madura.

பொருளடக்கம்

அத்தியாயம் ஒன்று

ராணுவத்தில் ஒரு மாலுமி

1

மிகவும் கொடூரமான போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஓர்ஷா நகரின் எல்லையில் ஜெர்மன் தற்காப்பு அணியை உடைத்துக் கொண்டு செல்வதற்கு மீண்டும் பிரயாசை எடுத்துக் கொண்டதன் விளைவாக அந்தப் பட்டாளம் பலவீன மடைந்திருந்தது. அந்த சமயத்தில், சண்டையிலிருந்து அந்தப் பட்டாளத்திற்கு ஓய்வு கொடுத்திருப்பதாக செய்தி வந்தது. மைல் கணக்கான தூரம், சகதி நிறைந்த கரடு முரடான பிரதேசத்தில் குழிகள் வெட்டி அவற்றில் பதுங்கியிருந்த வீரர்கள், தரை ஈரமில்லாத அமைதியான இடத்திற்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொண்டு இலையுதிர் காலத்தில் குளிரினாலும், சீதளத்தினாலும், தங்களுக்கு ஏற்பட்ட பாதகங்களைகுணப்படுத்திக் கொள்ளலாம். அவர்களுக்கு பதிலாக புதிய படைப் பகுதிகள் அங்கு அனுப்பப் படுவார்கள்.

அந்தப் பட்டாளத்தின் தளபதி மேஜர் கொவலோவின், தன்னுடைய உதவியாளர்கள், படையின் தலைமை அதிகாரி, மூன்று படைகளின் தளகர்த்தர்கள் ஆகியோரைக் கொண்ட மகாநாட்டைக் கூட்டினார். தங்களுக்கு ஓய்வு கொடுக்கப் பட்டிருக்கும் இந்தச் செய்தியை அவர்களிடம் கூறும் போது ஒளிவு மறைவற்ற மனச் சாந்தியால் அவருடைய முகம் பிரகாச மடைந்திருந்தது.

அந்த மகாநாட்டின்போது—இவர்கள் இருந்த இடத்தில் போரில் ஈடுபடுவதற்காக வரப்போகும் பட்டாளத்தின் வயதான ஒரு கர்னலும், வாலிபமான ஒரு மேஜரும் அங்கு வந்து சேர்ந்தனர். ஒரு சாதாரண விளக்கின் ஒளி மட்டுமே இருந்த, சதுப்புடன் காணப்பட்ட அந்த முகாமுக்கு வந்ததும் அவர்கள் தங்கள் அத்தாட்சிப் பத்திரங்களைக் காண்பித்தனர்; அங்கு சிறிய இரும்பு 'ஸ்டவ்' அடுப்புக் கருகில் இருந்த மரக் கட்டிலின் மீது உட்கார்ந்து குளிர்காய முற்பட்டனர்.

சிறிது நேரத்திற்கு அமைதி நிலவியது; காற்றின் சலிப்பை உண்டாக்கும் இரைச்சலும், காற்றினுல் அந்த முகாமின் மரக் கதவு பட படவென்று அடித்துக் கொள்ளும் ஓசையுமே அந்த அமைதியைக் குலைப்பனவாக இருந்தன. முகாமில் இருந்த ஒவ்வொருவரும் மற்றவர்களை கவனமாக உற்று நோக்கிய வண்ண மிருந்தனர்.

புதிதாக வந்தவர்கள் அந்தப் பட்டாளத்தின் அதிகாரி களுக்கு முற்றிலும் மாறுபட்ட தோற்ற முடையவர்களாக இருந்தனர். அவர்கள் நன்கு மழுங்க முகக்ஷவரம் செய்து கொண்டிருந்தனர். க்ஷவரம் செய்து கொள்ளும் போது உபயோகப்படுத்திய வாசனைத் தைலத்தின் நறுமணம் இன்னும் அவர்களிடமிருந்து வீசிக் கொண்டிருந்தது. நீண்ட ஓய்வுக்குப் பின்னும், நல்ல உணவுக்குப் பின்னும் அவர்களின் முகங்கள் செழிப்புடனும், பளபளப்புடனும் காணப்பட்டன. அவர்களின் பூட்சுகள், சிறிது சேறும், மண்ணும் மேலே தெறித்திருந்த போதிலும் இன்னும் மெழுகுடன் கூடிய மினு மினுப்புடன் காணப்பட்டன. ராணுவ வாழ்க்கை யிலும், சௌகரியமான வாழ்க்கையிலும் இவை எதிர் பார்க்கக் கூடியவைகள்தானே.

தன்னுடைய கரடு முரடான தோற்றமும், தன்னுடைய சகாக்களின் அசாதாரணமான தோற்றமும் கொலோவினுக் குக் கஷ்டமாக இருந்தது. க்ஷவரம் செய்யப்படாத படைத் தலைவர்களின் முகங்களைக் கண்டு, சிறிது சினமடைந்து, ''ஆம், நாங்கள் அலட்சியமாக இருந்துள்ளோம். காடு வனந்திரங்களில் அலைந்து கொண்டிருந்த ராபின்சன் குருஸோக்களைப் போல் நாங்கள் இருக்கிறோம்.'' என்று

கொலோவின் தனக்குத் தானே எண்ணிக் கொண்டார். ஆனால் படைத் தளகர்த்தர்கள் தாங்கள் இருந்த நிலையைக் கண்டு சிறிதும் வெட்கப்படவில்லை. "தற்பொழுது நீங்கள் இருப்பதைப் போலத்தான் நாங்களும் இருப்பதுண்டு; ஒரு சில வாரங்களில் நீங்கள் எப்படி ஆவீர்கள் என்பதை நாங்கள் பார்க்கத்தான் போகிறோம்," என்று அவர்கள், புதிதாக வந்திருப்பவர்களைப் பார்த்து அனேகமாக சவால் விடுவதைப் போன்ற தோற்றத்துடன் காணப்பட்டனர்.

இதே சிந்தனையே ஒருக்கால் அந்த இளம் மேஜருக்கும் ஏற்பட்டிருக்கலாம். அந்த ரெஜிமெண்டின் 'அதிகாரிகளை அவர் நோக்கிய முறையிலிருந்து, அவர் முகத்தில் அனுதாபம் காணப்பட்டது; போர்க்களத்தின் அந்தக் கடினமான அரங்கத்தில் தன்னுடைய ரெஜிமெண்டுக்கு என்ன ஏற்படப் போகிறதோ என்ற கவலையின் சாயலும் ஓரளவு தென்பட்டது. ஆனால் நரை விழுந்திருந்த அந்தக் கர்னல் போரில் நன்கு அனுபவம் பெற்றவர்; "நீங்கள் முகக்ஷவரம் செய்து கொண்டால் என்ன? கொரில்லா வீரர்கள் போல் காணப்படுகிறீர்களே!", என்று அவர் ஒரு உறுமலுடன் கூறியபோது, அவருடைய கண்களில் உறுதி நிரம்பிய ஒரு ஒளி வீசியது.

அதற்கு அந்த ரெஜிமெண்ட்டின் தளபதி சோர்வடைந்த தோற்றத்துடன், "ஆம், செய்து கொள்ள வேண்டியதுதான்; கர்னல், ஆனால் வெளிப்படையாகக் கூறவேண்டுமானால், இங்கு நிலைமை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்தப் பிர தேசம் பூராவும் பாழடைந்து கிடக்கிறது. விரோதி தான் பின் வாங்கிச் செல்லும் பொழுது, எல்லாவற்றுக்கும் தீவைத்து விட்டுச் சென்றான். குளிப்பதற்கு தண்ணீரைச் சூடாக்கு வதற்கு மரங்களோ, விறகோ, ஒன்றும் கிடையாது. கடந்த ஒரு மாதமாக மழை சக்கைப் போடு போட்டுக் கொண்டி டிருக்கிறது. பாதுகாப்புக் குழிகள் புதைந்து வருகின்றன; அவற்றை முட்டுக் கொடுத்து நிறுத்துவதற்கு ஒரு சாதனமும் கிடையாது. எங்கு பார்த்தாலும் சேற்றையும், சகதியையும் தவிர வேறொன்றையும் பார்க்க முடியாது. ஆயுதங்களை சுத்தப் படுத்துவதற்கு ஒரு இடமுமில்லை. நம் இயந்திரத்

துப்பாக்கிகள் ஒரே குவியலாகக் குவிந்து வருகின்றன. இதுவரையில் இல்லாதது இப்பொழுது இங்கு காணப்படு கிறது!'' காணப்படுகிறது, ''காணப்படுகிறது'' என்று திருப்பித்திருப்பிச் சொல்வதில் அவர் உற்சாகங் கொண்ட தாகத் தோன்றியது. அதற்கு அர்த்தம், அவருடைய கஷ்டங்களெல்லாம் தீர்ந்து விட்டன; இப்பொழுதுள்ளதை விட வேறுபட்ட நல்ல நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படப் போகிறது என்பதாகும்.

அந்தக் கர்னல் சலிப்பினல் முகஞ் சுளித்தார். ''சரி, அதில் நாம் இறங்குவோம்'', என்று வெடுக்கென்று கூறினர்.

அந்த அரங்கத்திலுள்ள நிலைமையை அவர்கள் அவருக்கு எடுத்துக் கூறினர்கள். போர் நடவடிக்கைகள் பற்றிய வரைப் படங்கள், ஏற்கனவே அவர்கள் தயாரித்து வைத் திருந்த பொறுப்பை ஒப்படைப்பது பற்றிய அறிக்கை ஆகிய வற்றை அவரிடம் தந்தனர். ஆனல் அந்தக் கர்னல் ஒரு கரு ரான பேர்வழியாகவும், வெறும் சம்பிரதாயங்களுடன் திருப்தியடையாதவராகவும் இருந்தது கொலோவினுக்குக் கொஞ்சம் ஏமாற்றத்தைத் தந்தது.

''முன்னணிப் பிரதேசத்தை நான் நேரில் பார்த்து, போர்முனையில் என்ன நிலைமையிருக்கிறது என்பதைச் சரி யாகத் தெரிந்துகொள்கிறேன்'', என்று கூறிய அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு ''இப்போதைக்கு விரோ தியைப் பற்றியும், அவனுடைய தாக்கும் சக்தி, தற்காப்பு அமைப்பு, அவனுடைய படைகளின் பலம், அவற்றின் தன்மை ஆகியவற்றைப் பற்றியும் நீங்கள் கொடுத்துள்ள தகவல் எங்களுக்குத் திருப்தி தரவில்லை. நீங்கள் பொறுப்பை ஒப்படைப்பதற்கு முன்னல் போர் சம்பந்தமான வேவு வேலை பார்த்தாக வேண்டுமென்று டிவிஷன் ஒத்துக்கொண்டுள் ளது. ஒரு சில மணி நேரத்திற்குள் அதுபற்றி உங்களுக்கு கிடைக்கும்.''

''போராடிக்கொண்டே வேவு பார்ப்பதா?'' என்று கொலோவின் ஒரு முறை திருப்பிக் கூறினர். ஒரு கணத்திற்கு அவருடைய முகத்தில் வலியால் கஷ்டப்படுவதைப்போன்று சுருக்கங்கள் ஏற்பட்டன.

போராடிக்கொண்டே வேவு பார்ப்பதென்ருல், ஏற்கனவே பெரிய அளவிற்கு நஷ்டமடைந்துள்ள ரெஜிமெண்டுக்கு மேலும் நஷ்டங்கள் ஏற்படும்.' எல்லாவற்றுக்கும் மேலாக, விரோதி, சாதகமான இடங்களில் தன் நிலேகளேப் பலப்படுத்திக்கொண்டுவிட்டதாலும், நம்பக்கம் பல மைல் தூரம் வெறும் மைதானமாக உள்ள இடத்தின் அமைப்பு அவனுக்கு நன்ருகத் தெரியுமாதலாலும், வெள்ளப் பெருக்கெடுத்தோடும் கரடு முரடான மலேப் பிரதேசம் மட்டுமே நமக்கு சாதகமாகப் பயன்படக்கூடும். பொறுப்பை எடுத்துக்கொள்வதற்கு முன்னுல் போர் அரங்கத்தை வேவு பார்த்து நிலேமையில் புரிந்துகொள்ள வேண்டுமென்று டிவிஷனின் கர்னல் வற்புறுத்தியது மிகவும் நியாயமானதே. அவ்வாறு வற்புறுத்துவதற்கு அவருக்கு எல்லா உரிமையும் இருக்கிறது. அவ்வாறு செய்வதற்கு அவர் கடமைப்பட்டவரும்கூட. ஆனல், அவர் கொடூரமான, நல்லெண்ணமற்ற முதியோன் என்றும், ஒரு கஷ்டமான அரங்கம் கொடுக்கப்பட்டுவிட்டதால், அதற்காக வஞ்சந்தீர்க்கும் எண்ணத்துடனும், ஓய்வுக்குச் செல்பவர்களேக் கண்டு பொருமையின் காரணமாகவும், போர் அரங்கத்தில் இவ்வாறு வேவு பார்க்க வேண்டுமென்று கோருகிருர் என்றும் கொலோவின் நினேத்தார்.

''சரிதான், நாங்கள் இதைச் செய்கிருேம்'', என்று கடுகடுப்பாகக் கூறினர். அவருடைய கண்கள், அதிகாரிகளே நோக்கி ஆராய்ந்தன. அந்தக் கஷ்டமான வேலேயை எந்த படைத் தளகர்த்தரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி அவர் முடிவு செய்ய வேண்டியிருந்தது. இரண்டாவது படைத் தளகர்த்தரான கேப்டன் லாப்ஜினுக்கு அந்த வேலேயை அவர் கொடுக்கலாம்.

கொலோவினுக்கு அவர்மீது விசேஷமான பிரியமொன்றும் கிடையாது. அவர் அளவுக்கு மீறிய முன்னெச்சரிக்கை கொண்டவராக இருந்தார். அனேகமாகக் கோழை என்று சொல்லலாம். மற்ற இருவரைவிட இவருக்காக அவர் அதிகம் இஷ்டப்படவில்லே. ஆனல், அந்த எண்ணம் அவருடைய மனதில் உதித்ததோ இல்லேயோ, உடனே அவர் உதறிக்

கொண்டு எழுந்தார். தன்னைத்தானே கடிந்துகொண்டார். அந்த உணர்ச்சியற்ற, வயதான கர்னல் என்ன நினைத்த போதிலும், அவருடைய உள் நோக்கங்கள் எதுவாக இருந்த போதிலும், கடமை என்றால் கடமைதான். விரோதியைப் பற்றிப் பூரவாகத் தகவல் தெரிந்துகொள்ளாத நிலைமையில், ஓய்வுக்குச் செல்லும் யூனிட்தான், பொறுப்பை ஒப்படைப் பதற்கு முன்பு, வேவு பார்த்து நிலைமையை அறிந்து கூறுவ தற்குக் கடமைப்பட்டுள்ளது. யுத்தத்தில் அது ஒரு விதி யாகும். எனவே அந்த வேலை, மிகவும் திடசித்தம் படைத்த, தனக்குப் பிரியமான முதல் படைத் தளகர்த்தரிடம் கொடுக்கப்பட வேண்டியிருந்தது.

"கேப்டன் அகிமோவ், நீங்கள் தயாராகுங்கள்", என்று கொலேவின், சோர்வடைந்த பார்வையுடன் அவரை நோக்கினார்.

தன் நீண்ட உருவத்தை நீட்டி நெளித்துக்கொண்டே "சரி, மிகவும் நல்லது" என்று அக்மோவ் கூறினார். அவ்வாறு கூறும்போது, அவரது பள பளக்கும், சுருட்டையான கருந் தாடிக்குப் பிரகாசமளிப்பதுபோல் புன்முறுவலும் அவரது முகத்தில் நெளிந்தது. அவர் தாடியை வழிக்காமல் விட்டு ஒரு மாதம்தான் ஆகியிருக்கும். அதற்குள் அவ்வளவு அடர்த்தி யான தாடி வளர்ந்துவிட்டது. ஆழமானதாகவும், குதூகலத் தொனியுடன் கூடியதாகவும் இருந்த அகிமோவின் குரல், பூகோளப் படங்களிலும், தஸ்தாவேஜிகளிலும் ஆழ்ந்திருந்த கர்னலின் கவனத்தைக் கலைத்தது. குரல் கொடுத்தவரை அவர் நிமிர்ந்து பார்த்தார். ஆஜானுபாகுவான ஓர் உட லின்மீது ஒரு பெரிய பூசனிக்காயைப் போன்ற தலையை உடையவராக அவருடைய தோற்றம் இருந்தது. அதன் பலத்தை, அழகில்லாத ராணுவ ஜாக்கெட்டினால்கூட மறைக்கமுடியவில்லை. அகிமோவிடம் பொங்கி வழியும் உத் வேகம் காணப்பட்டது. அவருடைய நடத்தை கண்டிப்பாக வும், கடுகடுப்பாகவும் இருக்குமேயானால் அது வெறும் தற் புகழ்ச்சியான தோற்றத்தையே ஏற்படுத்தியிருக்கும். அத னால்தான் என்னவோ அவர் தன்னுடைய தோள்பட்டை களைக் கொஞ்சம் முன்புறமாக வளைத்துக்கொண்டு அசிங்க

மாகக் காணப்பட்டார். அவர் கரடியைப்போல் அசைந்து வந்தார். வேண்டுமென்றே சோம்பேறித்தனமாக இருந்தார். அவருடைய கழுத்து—அவரது உடலிலேயே அது மட்டும்தான் துணியால் மூடப்படாமல் வெளியே தெரிந்தது—மெலிந்தாக இல்லாவிட்டாதும்—மிகவும் வெளுப்பாகவும், நாசூக்கானதாகவும், அவரது ஆடைக்குள் மறைந்திருந்த வலிமை வாய்ந்த தசைகளை வெளியே காட்டுவதற்குக் கூச்சப்படுவதாயும் காணப்பட்டது.

உயர்ந்த தெளிவாகத் தெரிந்த புருவங்கள் நீங்கலாக அவரது முகம் பூராவும் சிறு சிறு வடுக்களால் நிறைந்திருந்தது. அவரது குறுகிய பழுப்பான, பச்சை நிறமுமான கண்கள் அமைதி நிறைந்ததாகவும், தன்னம்பிக்கையுடையதாகவும் காணப்பட்டன.

படைத் தளபதியின் தோற்றம் கர்னலுக்குப் பிடித்திருந்தது. ஆனால், நபர்களை அவர்கள் என்ன செய்துள்ளார்கள் என்பதன் அடிப்படையில் எடை போடும் அவரது வழக்கத்திற்கேற்ப, அல்லது ஒரு சமயம் அந்த இளைஞனின் தோற்றத்தில் லயித்து அதிலிருந்து சமாளித்துக்கொள்ளும் முறையில், அவர் மீண்டும் தன் மேஜை மீதிருந்த தஸ்தாவேஜுகளுக்குள் ஆழமாகத் தன் சிந்தனையை செலுத்தினார். ''காரியத்தில் அவர் எப்படி இருக்கிறார், பார்க்கலாம்'' என்று அவர் தனக்குள்ளே பேசிக்கொண்டார்.

''எங்களுடைய ரெஜிமெண்டின் பீரங்கிப் படை பூராவினுடையவும், பீரங்கிப் படை ரெஜிமெண்டின் ஒரு பகுதியினுடையவும் முழு ஆதரவு உங்களுக்குக் கிடைக்கும்", என்று இதற்கிடையில் கொலோவின் அகிமோவுக்குத்தெரிவித்தார். மேற்கொண்டு அதிகப்படியான பீரங்கிகளைக் கொடுக்கும்படி நான் டிவிஷன் தளபதியைக் கேட்கிறேன். எங்களிடமுள்ள அனைத்தும் உங்களுக்குத் தருகிறோம். பாதையைச் செப்பனிடும் படையை (சேப்பர் கம்பெனி) உங்களுக்கு அனுப்புகிறோம். அவர் ஒரு நிமிஷம் தயங்கி பின்னர், இறுதி முயற்சியாக எனக்கு மனச்சாந்தி அளிப்பதற்காக, ''வேவு பார்க்கும் படையையும் கூட அனுப்புகிறோம்,'' என்றார்.

''ரொம்ப சரி'' என்றார் அகிமோவ்.

அவருடைய முகத்தில் ஒரு சிறு புன்னகை இன்னமும் தவழ்ந்து கொண்டிருந்தது.

"அவர் எதைப் பார்த்து புன்னகை பூரிக்கிருர்?" என்று வயதடைந்த அந்த கர்னல் மிகவும் ஆச்சரியத்துடன், மீண்டும் அவரைப் பார்த்தவண்ணம் கேட்டார்.

வேவுபார்க்கும் படையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடனே, கொலோவின் தனக்கு அந்த வேலையை நிச்சயம் கொடுப்பார் என்று உடனே தோன்றியதால்தான் அகிமோவின் முகத்தில் புன்னகை ஏற்பட்டது. அவர் எண்ணியபடியே ஏற்பட்டதால்தான் ஒருஅசாதாரணமான புன்னகை அவர் முகத்தைப் பிரகாசமாக்கியது. தன் ஊகம் சரியாகப் போயிற்று என்பதனுல் ஏற்பட்ட ஒரு தற்பெருமையுடனும், குதூகலத்துடனும் கூடியதாக இருந்தது அந்தப் புன்னகை. அதே சமயத்தில் கவலையும் ஏற்பட்டது.

அகிமோவ் சுவற்றில் தொங்கப்போட்டிருந்த தன்னுடைய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு, அப்பொழுது அங்கு இருந்த தன்னைவிட உயர்ந்த பதவியிலுள்ள கர்னலிடம் தான் கிளம்புவதற்கு அனுமதி கேட்டார்.

"நான் சீக்கிரம் வந்து உங்களைப் பார்க்கிறேன்" என்று கர்னல் கூறி தலையசைத்தார்.

"நீங்கள் வருவதை வரவேற்கிறேம்" என்று அகிமோவ் பதிலளித்தார். "வழி தவறிப்போன ஒரு செம்மறியாடு எங்களுக்குக் கிடைத்துள்ளது. அதை இன்று நாங்கள் சுட்டுத் தின்னப்போகிறேம். நீங்களும் வந்து எங்களுடன் சேர்ந்து கொள்ளுங்கள். எங்களுக்கு நாளைய தினம் நீங்கள் ஓய்வு கொடுத்து அனுப்பப்போகிறீர்கள் என்ற விஷயத்தை மட்டும் என்னுடைய மேலதிகாரிகளுக்குக் கூறிவிட வேண்டாம்."

"ஏன், சொன்னுல் என்ன?" என்று கர்னல் முகத்தை சுளித்த வண்ணம் கேட்டார்.

அகிமோவ் முதலில் பதில் கூறவில்லை. பிறகு அவர் மனம் திறந்து விபரமாகக் கூறினுர்: "ஆட்கள் அதிக ஓய்வு எடுத்துக் கொண்டுவிடக்கூடாது என்பதற்காகத்தான்." ஏதாவது, ஆட்சேபணை வருமா, என்பதற்காக அவர் காத்

திருந்தார். ஆனுல் யாரும் ஏதும் கூருததினுல், அவர் குறிப்பாக யாரைப் பார்த்தும் கூருமல் பொதுவாகப் பேசிக் கொண்டே போனுர்: "அதைப் பற்றி நானே மறந்து விடுவதற்கு நான் மகிழ்ச்சியடைவேன். ஆனுல், அவ்வாறு செய்ய முடியவில்லையே."

அவர் தன் துப்பாக்கியைத் தன் தோள்மீது சாத்திக் கொண்டு வெளியில் கிளம்பினுர்.

நேரம் அதிகமாயிராவிடினும் ஏற்கனவே நல்ல இருள் சூழ்ந்துவிட்டது.

ரெஜிமெண்டின் தளபதியின் அகழி அந்த மலையின் இடது சரிவில் ஒரு குகைபோல் வெட்டப்பட்டிருந்தது. அந்த அகழியிலிருந்து ஒரு குறுகலான சுரங்கப்பாதை, அந்த மலைக்குள்ளேயே சென்றது. அந்த சுரங்கப்பாதையின் சுவர்களைப் பிடித்துக்கொண்டே, அகிமோவ், இருளில் மெதுவாக முன் நடந்து சென்ருர். கடைசியில் அவர் அந்த சுரங்கப் பாதையின் வாயிலுக்கே வந்து சேர்ந்தார். கன்னங்கரேலென்ற, எல்லை காண முடியாத மலைப்பிரதேசம் அவருக்கு முன் விரிந்து கிடந்தது. சுற்றிலும் ஒரே நிசப்தம் குடிகொண்டிருந்தது. காற்று மட்டும் இன்னும் விர் விர்ரென்று அடித்துக்கொண்டிருந்தது. இடையிடையே படை வீரர்கள் குரல்களும் கலந்து கேட்டுக்கொண்டிருந்தன.

"காம்ரேட் கேப்டன்?" என்று அவருடைய உதவியாளர் சார்ஜெண்ட் மேபொரோடாவின் குரல் கேட்டது.

"ஆம், நான்தான் வாருங்கள்" என்று அகிமோவ் வரவேற்ருர்.

அவர் இப்பொழுது வேகமாகச் சென்ருர். இருளில் நடப்பதற்குப் பழக்கமாய்விட்டது. கருநிறமான பூமியையும் இருள் சூழ்ந்த வானத்தையும் பிரிக்கும் எல்லைக் கோட்டையும்கூட அவரால் இப்பொழுது பார்க்க முடிந்தது. தன் தலைக்குமேல் கொஞ்ச தூரத்திலேயே எட்டிப்பார்த்துக் கொண்டிருக்கும் மலையின் விளிம்பையும் அவரால் பார்க்க முடிந்தது.

“குளிராக இருக்கிறதா?” என்று அவர் தனக்குப் பின்னல் நடந்துவந்து கொண்டிருந்த சார்ஜெண்டைக் கேட்டார்.

“ஆமாம், அப்படித்தான்?” என்று பதில் வந்தது.

அதைத் தொடர்ந்து நிசப்தம் நிலவியது. “காம்ரேட் கேப்டன்!” என்று அந்த சார்ஜெண்ட் மீண்டும் அகிமோவைக் கூப்பிட்டார்.

“என்ன?”

“ரெஜிமெண்ட் கமாண்டரிடமிருந்து உங்களுக்கு பிடரியில் சரியான உதை கிடைத்ததா?” மேபொரோடா உஷாராகவே கேட்டார்.

“ஏன், இந்த இருட்டில்கூட உங்களால் அதைப் பார்க்க முடிகிறதா?” என்று சிரித்துக்கொண்டே அகிமோவ் கேட்டார்.

சார்ஜெண்ட் அமைதியாக சிரித்துக்கொண்டே, ஆனல் அகிமோவின் மழுப்பலான பதிலினல் திருப்தியடையாதவராய் “முக்கியமான செய்தியா, அல்லது வழக்கமானதுதானு? என்று கேட்டார்.

“இந்த இடத்திலிருந்து பாதை மேலே போகிறது” என்று அகிமோவ் கூறினர். நாம் தவறிவிடக்கூடாது. ஜாக்கிரதையாக இரு; மேபொரோடா தாழ்த்தபடியே செல். மண்ணில் உன்னுடைய துப்பாக்கியைப் போட்டுவிடாதே. நாம் கடந்து வெளியே வந்துவிட்டோம். ரொம்பவும் நல்லதாகப் போய்விட்டது.

குன்றின் மேலே வந்துவிட்ட அவர்கள் ஜெர்மானியர்கள் மெதுவாகப் பின்வாங்கிச் சென்று கொண்டிருந்ததைப் பார்த்தார்கள்.

செயலிழந்து போன டாங்கு ஒன்று பார்ப்பதற்குப் பெரிய கருமையான உருவமாகத் தோன்றியது. அவர்கள் அதைக் கடந்து சென்று மைதானத்தில் செல்ல வாரம்பித்தனர்.

“நாம் போரிடப் போகிருேம்” என்று நீண்ட நேர மௌனத்திற்குப் பின் அகிமோவ் கூறினர். “நாம் ஓர்ஷாவைப் பிடித்துக்கொண்டு பிறகு வார்ஸாவை நோக்கிச்

செல்லப்போகிறோம். உனக்கு மட்டும் ஒரு ராணுவ ரகசியம் சொல்லப்போகிறேன். நாம் பெர்லின்மீது படையெடுக்கப் போகிறோம். அதுதான் செய்தி, சார்ஜெண்ட் அவ்வளவு தான் அவ்வளவுதான் இருக்க முடியும்.''

சார்ஜெண்ட் மேபொரோடோவின் அரட்டைக்கு அது முற்றுப்புள்ளி வைத்தது. அவர்கள் மௌனமாகவே சென்றனர். தங்களது பட்டாலியன் சண்டைபோட்டுக்கொண்டிருந்த செங்குத்தான மலைச்சரிவுக்குச் சென்றனர். அது ஒரு கிராமத்தின் எல்லையில் இருந்தது. அந்த கிராமம் பூகோளப் படத்தில் குறிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்த கிராமத்தில் புகைப்போக்கிக் குழாய்கள் மட்டுமே காணப்பட்டன. பெரும்பகுதி அழிந்து கிடந்தது. எரிந்துபோன வீடுகளின் முகட்டில் கருமையான புகைப்போக்கி மட்டும் சிலைகளைப் போல் வரிசை வரிசையாகக் காணப்பட்டன. நெருப்பினுடையவும், இடிபாடுகளுடையவும் மூக்கைத் துளைக்கும் நெடி வீசிக்கொண்டிருந்தது. அதை மறக்கவே முடியாது.

அந்த மலைச்சரிவின் கீழே அகிமோவும், அந்த சார்ஜெண்டும் வேகமாக நடந்துகொண்டிருந்தனர். ஏனெனில் இங்கே ஒவ்வொரு அங்குல பூமியும் அவர்களுக்கு நன்கு தெரிந்திருந்தது. இந்த சந்தர்ப்பத்தில் மழை கனமாகப் பெய்ய ஆரம்பித்தது. படை வரிசைகள் பீரங்கிகள் இருந்த இடத்தை அவர்கள் தாண்டிச் சென்றனர். தூரத்தில் சேதமடைந்திருந்த பாதுகாப்பு மறைவிடங்களிலிருந்து மங்கலான வெளிச்சம் விட்டு விட்டுக் காணப்பட்டது தெரிந்தது. ஒரு இடத்தில் உயரமாகப் புகை சென்று கொண்டிருந்தது. அது ராணுவத்தின் சமையல் வீடு என்பதைக் காட்டிற்று.

தன்னுடைய பாசறை கூடாரத்திற்குள் நுழையும்போது அகிமோவ், ''நீங்கள் சென்று எல்லா அதிகாரிகளையும் அழைத்து வாருங்கள்,'' என்று குறிப்பிட்டார்.

2

அகிமோவ் இதற்கு முன் கடற்படையில் மாலுமியாக இருந்தார். கடற்படையைச் சேர்ந்த வீரர்களின் ஒரு படை

யுடன் தரையில் நடத்திய சண்டையில் நொவோ ரோசிஸ்க் என்ற இடத்தில் காயமடைந்ததின் காரணமாக, தற்செயலாக, அகிமோவ், ராணுவத்தில் சேர்ந்தார். தரையில் சண்டையிடுவதற்கு அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. ஏனென்ருல், பெர்லினுக்குக் கப்பல் மூலமாகச் செல்வதென்ருல், மிகவும் தூரம். ஆகவே தரை மூலம் விரைவில் பெர்லின் அடைவதற் கானவாய்ப்புக்கிடைத்ததே என்று அவர் சில சமயம் கூறி மழ்கிச்சியடைவார்.ஆயினும்மீண்டும் கடற்படைக்கேதன்னே மாற்றிவிடும்படி அவர் போட்ட எண்ணற்ற மனுக்களுக்கு பதிலே வராததால், அவர் தன்னுடைய கௌரவம் பாதிக் கப்பட்டதாக உணர்ந்தார். ஒன்ருே அவருடைய மனுக்க ளெல்லாம் எங்கோ ஓர் அலுவலகத்தில் தேங்கிப் போயிருக்க வேண்டும்; அல்லது கடற் படைக்கு மேற்கொண்டு அதிகாரி கள் யாரும் தேவைப் படாமலிருந்திருக்கலாம்.

சப்மரைன்களைத் துரத்திச் செல்லும் ஒரு கப்பலின் தளபதியாக — ஒரு லெப்டினென்டாக அவர் கருங்கடலில் பிரயாணம் செய்திருக்கிருர் மாலுமிகளைக் கடல் பிரயாணம் ஏன் அவ்வளவு கவர்ச்சிக்கிறது. என்பதைச் சரியாகச் சொல்வது கடினம். ஆபத்தான, மெய்சிலிர்க்கும் அவர்களது கடமையா, அல்லது உப்பு வாடையுள்ள கடற் காற்ரு, அல்லது கடல் பிரயாண வாழ்க்கை அவர்களிடை யில் ஒரு கூட்டு மனப்பான்மையையும் பஞ்ச பூதங்கள் (பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்) யாவற்றிலும் மிகவும் ஆபத்தானதின் நேர்க்கு அஞ்சாமையையும் போதிப் பதா என்பது தெரியவில்லே. இந்தப் பரந்த ரஷ்யாவில் மாலுமிகளே நாம் மிகவும் அரிதாகவே சந்திப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம். காரணம் எதுவாக இருந்தபோதி லும் சரி, இந்த முன்னுள் மாலுமியை ராணுவத்திலிருந்த வீரர்கள் போற்றிவந்ததற்கு, அவர் ஓர் 'கடல்வீரர்' என்பதே பெரிய அளவுக்குக் காரணம்.

முதல் பட்டாலியனேச் சேர்ந்த வீரர்கள் இதர யூனிட்டு களேச்சேர்ந்த தங்கள் தோழர்களிடம் "எங்கள் தளபதி ஒரு மாலுமியாக்கும்; அவர் எவ்வளவு திறமையானவர் தெரியுமா? அவருடன் எங்கு இருந்தாலும், உங்களுக்கு

ஆபத்தில்லை!'' என்று பெருமை யடித்துக் கொள்வது வழக்கம்.

சிறிது காலத்திற்குள் அகிமோவ், 'கேப்டன்' என்ற அந்தஸ்திற்கு உயர்ந்தார். 'கம்பெனி' தளபதியாகவும், பின்னர் 'பட்டாலியன் தளபதியாகவும் அவர் நியமிக்கப் பட்டார். இது மீண்டும் தன்னைக் கடற்படைக்கே மாற்றி விடுவார்களோ என்ற ஓரளவு கவலையையும் அவரிடம் ஏற்படுத்தியது. ஏனெனில் கடற்படையில் அவர் ஒரு லெப்டினென்டாக மட்டுமே இருந்தார். எனவே அவருடைய அறிவும், அனுபவமும், லெப்டினென்ட்காமாண்டர் அந்தஸ்துக்குச் சரியான ஒரு பதவியை அவர் வகிப்பதற்கு அனுமதித்திருக்காது. கடற்படையில் தொழில் நுட்பப் பகுதி மேலும் மேலும் அதிக சிக்கலானதாகவும், சூட்சுமம் வாய்ந்ததாகவும் ஆகி வந்தது. வீரம் நிறைந்தவராகவும், சிறந்த ஆர்கனைசராகவும் இருந்தால் மட்டும் போதுமான தல்ல என்ற நிலைமை ஏற்பட்டு வந்தது.

இருந்தபோதிலும், சில சமயங்களில், மீண்டும் கடற் படைக்கே குறிப்பாகக் கருங்கடலுக்கே சென்று விட வேண்டும் என்ற எண்ணம் அகிமோவுக்கு ஏற்படுவதுண்டு. ஏனெனில் கருங்கடலில் உள்ள எழில் மிகுந்த, ஜனக்கூட்டம் நிறைந்த, சுறுசுறுப்பு நிறைந்த துறைமுகங்களும் கண்ணைப் பறிக்கும் நீல வானமும், கொப்பளிக்கும் கடல் நீர்நுரையால் சதா கழுவப்பட்டுப் பிரகாசமுடன் ஒளி வீசும் மரகதக்கல் போன்ற கடற்கரைகளும் அகிமோவுக்கு அவ்வளவு கவர்ச்சியாக இருந்தன. மீண்டும் கடற்படைக்குச் செல்ல வேண்டுமென்பது — பிரிவாற்றுமை — போன்ற கவலையாகி விட்டது. அகிமோவுக்கு அந்தக் கப்பல் தான் எவ்வளவு பிரமிக்கத்தக்க சிக்கலான பல அம்சங்களும் சுமுகமாக ஒருங்கிணைந்த ஒரு அமைப்பு! அதுவே விவேகம் நிறைந்த ஒரு சிறிய உலகம்! அதில் உபயோகமற்றது என்பது ஒன்று கூடக் கிடையாது. பகுத்தறிவுக்குப் புறம்பானது ஒன்றுமில்லை; அதில் வசிப்பவர்கள் வாழ்விலும் சாவிலும் ஒன்றுகப் பிணைக்கப்பட்டவர்கள்; சோவியத் தாயகத்தின் ஒரு சின்னஞ் சிறிய துண்டின் மீது உள்ள முழுமையான தனியொரு

அமைப்பாகும், இசைக்கேற்ற அசைவுடன் சென்று கொண்டேயிருப்பது. இவ்வாறு அகிமோவின் மனதில் சிந்தனைகள் அலைமோதும்.

அகிமோவின் சகல அம்சங்களும் கடல் மாலுமியின் தோற்றமாகவே இருக்கும். அவருடைய கண்களும் கூட கடலின் பச்சை நிறத்தின் தோற்றத்தைப் பெற்றிருந்தது. அவருடைய முகத்தில் காணப்படும் தழும்புகளும் கூட அம்மை நோயால் ஏற்பட்டதல்ல; ஆனால் கடல் பிரயாணத்தில் கடலின் உப்பு நிறைந்த, மூக்கைத் துளைக்கும் வாடைக் காற்று சுரீல், சுரீல் என்று முகத்தில் அடிப்பதால் ஏற்பட்டவையாகும்.

பேவல் அகிமோவ் கொவரோவ் என்ற நகரத்தில் பிறந்தவர். அந்நகரம் கடலினின்றும் வெகு தூரத்தில் உள் நாட்டில் உள்ளது. அவர் கடற் படையில் சேர்த்துக்கொள் ளப்பட்டதின் காரணம் அவருடைய உயரமான ஆகிருதி—அவர் ஆறு அடிக்கும் மேலே உயரமாயிருந்தார். மற்றும் அவர் பலம் வாய்ந்தவராகவும் இருந்தார். தவிரவும் இளங் கம்யூனிஸ்ட் சங்கம் கடற்படைக்கு விரும்பி ஆதரவு கொடுத்து, தங்கள் சங்கத்தைச் சேர்ந்த சிறந்த இளைஞர்களை அதில் சேரும்படி அனுப்பி வைத்து வந்தது. ஒரு டர்னராகவும், இயந்திரக்கருவிகளைத் தயாரிப்பவராகவும் ஒரு சிறந்த சமூக ஊழியர் என்ற புகழையும் பெற்றிருந்த அகிமோவ், கடற்படையின் லட்சியத்திற்கு மிகவும் நெருங்கியவராக இருந்தார். மிகப்பரந்த நம் நாடு முழுவதிலும் இளங் கம்யூனிஸ்ட் சங்கம் (இ.க.ச.) தேடிப்பார்த்தாலும் இவரைப் போன்றவர் கிடைப்பது அரிது. அகிமோவ் ஏழு ஆண்டுகள் மட்டுமே பள்ளிக்கூடத்தில் படித்தார். பிறகு டர்னர் வேலை கற்றுக் கொள்ளச் சென்று விட்டார். ஆனால் மிக உயர்ந்த திறமை சாலியாகவும், கடுமையான உழைப்பாளியாகவும் இருந்ததால், வெகு சீக்கிரத்தில் நுட்பக்கருவிகளை இயக்குவதில் வல்லுனராக ஆனார். இளங் கம்யூனிஸ்ட் சங்கத்தின் (இ. க. ச.) டவுன், பிரதேச மகாநாடுகள் நடைபெறும் போது கூடவே நடத்தப்போகும் கண்காட்சிகளில் அகிமோ-வால் தயாரிக்கப்பட்ட கருவிகள் காட்சியில் வைக்கப்பட்

டிருந்தன. அவருடைய வயதைச் சேர்ந்த இதர வாலிபர்களைப் போலல்லாமல், அகிமோவ், இ.க.ச. தனக் கிட்ட பல வேலைகளை முடித்து நிறைவேற்றிவந்தார். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற் போல், அவர் தபால் மூலமும் கல்வி கற்று வந்தார். தன் கல்வியில் சிறந்த பாண்டித்யம் பெற்று வந்தார். மற்றும் தன்னுடைய உற்பத்தி வேலைகள் சமூக சேவை இவற்றின் பயனாகவும் எல்லாப் பாடங்களிலும் உயர்ந்த மார்க்குகளைப் பெற்றுவந்தார். இது மிகவும் அரிய சாதனையாகும்; ஏனெனில் தபால் மூலம் கல்வி கற்று முன்னுக்கு வருவது முற்றிலும் திடசித்தத்தைப் பொறுத்த விஷயமாகும். தபால் மூலம் கல்வி கற்கும் மாணவனை ஊக்கப்படுத்துவது அவனுடைய மனச்சாட்சி மட்டுமே. எத்தகைய — லேசாகக்கூட கட்டாயமுமில்லாமல் படிப்ப தென்பது சாதாரண விஷயமல்ல. மற்றும், தொழிற்சாலையிலுள்ள வேறு எந்த இன்ஜினியரைவிடவும் அகிமோவ் அதிகப் பணம் சம்பாதித்துவந்தார். எனவே இன்னும் அதிகப்பணம் சம்பாதிப்பதற்கல்ல, அவர் படித்து வந்தது; அதற்கு மாறாக அவர் மேலும் அதிக விஷயங்களைக் கற்றுக் கொள்ளவும், தன்னுடைய சக - ஊழியர்களுக்கு இன்னும் அதிக உபயோகமாக இருப்பதற்கும் விரும்பினர். இவை யெல்லாவற்றுக்கும் மேலாக, பழமையான ஒரு நெசவாளியின் குடும்பத்தில் பிறந்த அகிமோவ், மற்ற எல்லாப்பிள்ளைகளைக் காட்டிலும் கடமையில் சிறந்தவராக விளங்கினர். எனவே, இயற்கையாகவே, தான் பிறந்து, வளர்ந்த நகரத்தில் அகிமோவ், எல்லோராலும் விரும்பப்பெற்றவராக இருந்தார்.

கிளியாஸ் மாநதியின் செங்குத்தான கரையோரத்தில் கொவ்ரோவ் நகரம் அமைந்துள்ளது இந்நகரம் பன்னிரண்டாவது நூற்ருண்டில் தோன்றியது என்று பண்டைய வரலாறு கூறுகிறது. நான்கு நூற்ருண்டுகளுக்குப் பின்னர், நெஸ்டரின் வரலாற்று நூல் கூறுகிறபடி, இந்நகரம் கொவரோவ், சிற்றரசர்களுக்குச் சொந்தமாக இருந்தது. இவர்கள், ஸ்டாரோடப் அரச குடும்பத்தின் வம்சாவளியினர். மத்திய ரஷ்யாவில் உள்ள இதர எந்த தாலூக்கா நகரைப்

போலவே கொவரோவிலும் சர்ச்சுகள், கற்களால் கட்டப் பட்ட கடைகள், நீளமான வீதிகள், இரண்டு அடுக்கு வீடு கள் காணப்பட்டன. அவ்வீடுகளின் முதல் மாடி செங் கற்களாலும், இரண்டாவது மாடி மரத்தாலும் கட்டப் பட் டிருந்தன. புரட்சிக்கு முன்னுல் இந்நகரத்தில் 33 பொது வீடுகள், ஒரு உடற்பயிற்சிசாலே, ஒரு உயர்தரப்பள்ளிக்கூடம் ஒரு ஆஸ்பத்திரி, பல நூற்பு ஆலேகள், ஒரு மெழுகு உற்பத்தி தொற்சாலே, ஒரு மாவு மில், மாஸ்கோ நிஷ்னி — நொவ கொரோட் ரயில்வேயின் ஓர்க்ஷாப்புகள் ஆகியவை இருந் தன. அக்டோபர் புரட்சிக்குப் பின்னர் இந்த சிறிய நகரம் விரிவடைந்தது. பெரிதடைந்தது; இரைச்சலும் அதிக மாயிற்று. உயரமான வாலிபர்கள், புதிய விஷயங்களேத் தெரிந்து கொள்ளவேண்டுமென்ற ஆவல் நிறைந்தவர்கள் இந்நகரத்தில் இருந்தனர். பரம்பரையாக இந்தப் பிரதே சத்தில் உழுது பயிரிடுபவர்கள், மிருகங்களேத் தந்திரமாக வலேப்போட்டுப் பிடிப்பவர்கள் ஆகியோரின் வழி வந்த இந்த வாலிபர்கள், தங்கள் முன்ஞேர்களின் உணர்ச்சிகளே யும் உடலமைப்பையும் அப்படியே கொண்டவர்களாகக் காணப்பட்டனர்.

நூற்பவர்களேயும், நெசவாளிகளேயும் கொண்டதாக இருந்த இந்தநகரம், உலோகத் தொழிலாளர்களேக் கொண்ட தாக வளர்ந்தது. ரயில்வே ஓர்க்ஷாப்புகள் பெரிய தொழிற் சாலேயாக அபிவிருத்தியடைந்தது. மண்ணேத் தோண்டும் பெரிய கருவிகளே உற்பத்தி செய்தது. ஆமூர் நதியின் மீது மாஸ்கோவிலிருந்து கொம்சொமோல்ஸ்க் வரையிலுமுள்ள சிறியதும், பெரியதுமான எல்லா நிர்மாண வேலே ஸ்தலங் களிலும் அந்த மண்தோண்டும் கருவிகளேக் காணமுடியும் இங்கு தான் அகிமோவ் வேலே செய்தார்.

ஜாரெக்ஞயா ஸ்லோபோட்கா என்ற இடத்தில் ஒரு சிறிய வீட்டில் அகிமோவ் குடும்பத்தினர் குடியிருந்தனர். நகரத்துடன் ஒரு சிறியபடகு மூலமாகத்தான் இந்த கிராமத் திற்குத் தொடர்பு இருந்தது. கிளியாஸ்மா நதியின் மீது பாலம் வெகு காலம் வரையிலும் கட்டப்படவில்லே. கிளியாஸ் மாநதியிலும் யுவோட், நெரக்டா என்ற அதனுடைய

உபநதிகளிலும் தான் — குளிர்ந்த, சதுப்பு நிலப்புல் பூண்டுகள், பாசிபடர்ந்த, சுழற்சிகள் நிறைந்த சிறு நதிகளிலும் தான்—அகிமோவ் கடல் பிரயாணத்திற்கான பயிற்சியைப் பெற்ருன். ஆனுல், அப்பொழுது அவனுக்கு எதிர்காலத்தில், தான் இவ்வாறு ஆகப்போகிருேமென்பது தெரியாது. அங்கு, ஒரு குழந்தையாயிருக்கும்போதே அவன் நீந்தவும், தண்ணீருக்குள் மூழ்கி எழுந்திருக்கவும் கற்றுக்கொண்டான். குளிர்காலத்தில் பெர்ச் என்ற ஒருவகை மீனேயும், கோடை காலத்தில் பிரீம், பைக், பைக்பெர்ச் போன்ற மீன்களேயும் பிடிப்பான். நீரின்மீது வாழும் பிராணிகளேக் கண்டு அகிமோவ் புளகாங்கிதமடைந்தான். சுந்தரமான மலேயருவிகள் பாய்ந்து, பாய்ந்து பள்ளங்களே ஏற்படுத்தியிருப்பது ஒருபக்கம்; ஆங்காங்கே கும்பல் கும்பலாக நறுமணம் வீசும் செடி கொடிகள்; பச்சைப் பசேலென்ற அடர்ந்த புதர்கள்; 'ரை'தான்ய வயல்கள் மறுபக்கம்; பர்ச் மரத் தோப்புகள், உயரமான பைன் மரக்காடுகள், புல்வெளிகள், பலவிதமான பூக்கள் நிறைந்த பூஞ்சோலேகள் பிறிதொரு பக்கம்—இத்தகைய உள்ளத்திற்கு உவகையூட்டும் நாட்டில் சிறுவன் அகிமோவ் இயற்கையைப் புரிந்துகொள்வதற்குப் பழகிக்கொண்டான்; அதனுடன் நீங்காத அன்னியோன்யம் கொண்டான்; இயற்கையோடியைந்த வாழ்வு ரஷ்ய மக்களின் உன்னதமான பண்பாடுகளில் ஒன்ருயிற்றே.

எனவே, அகிமோவும் 'இயற்கையுடன் ஒன்றிணேந்தவனுகவே காணப்பட்டான். ஜனங்களின் கண்கள், அவர்களேச் சுற்றியுள்ள இயற்கையின் நிறத்தைப் பெறுவது உண்மையென்ருல், அது அகிமோவின் விஷயத்தில் முழுக்க, முழுக்க உண்மையாக இருந்தது. விளாடிமீர் குபெர்னியா என்று சொல்லப்படும் அந்தப் பிரதேசத்தில் சுற்றிலுமிருந்த மலேகள், வளேந்து வளேந்து செல்லும் சிறு சிறு ஆறுகள் ஆகியவற்றின் பச்சை நிறம் அகிமோவின் கண்களில் காணப்பட்டது.

நம் நாட்டின்மீது விரோதியின் ராணுவத்தாக்குதல் எந்த நிமிஷத்திலும் ஏற்படலாம் என்ற நிரந்தர ஆபத்து

இல்லாமலிருந்திருக்குமேயானுல், அகிமோவ் தன்னுடைய முழு பலத்தையும், உறுதியையும், புத்தி நுட்பத்தையும், மண் தோண்டும் கருவிகள், ரயில்வே பெட்டிகள், குளிர்பதன சாதனங்கள், அல்லது மோட்டார் கார்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கே உபயோகப்படுத்தி யிருப்பான். அவன் ஒரு தொழில் நுட்பக் கழகத்தில், கல்வி பயின் றிருப்பான், மற்றும் ஒன்ரூே கொவரோவ் நகரத்திலேயே தங்கியிருந்திருப்பான். அல்லது வேறு எங்காவது, ஒருக்கால் சைபீரியாவின் புதிய நகரங்களில் ஏதாவது ஒன்றுக்குச் சென்றிருப்பான். அவனுடைய பண்பாடு நிறைந்த மன துக்கும், மனப்போக்குக்கும், நம்முடைய மக்களின் மகத்தான நன்மைக்கு ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் தன்னுல் இயன்ற பணியை நிச்சயமாக ஆற்றியிருப்பான். ஆனுல், அவ்வழியில் நிலைமைகள் உருவாகவில்லை. ஏனெனில் ராணுவத்திற்கும், கடற்படைக்கும் ஆட்கள் தேவைப் பட்டனர். 1936ல், வரோஷிலோவின் திட்டப்படியான இயக்கத்தில், அகிமோவ்,கடற்படையில் சேர்த்துக்கொள்ளப் பட்டார். ஒரு திறமை வ்ாய்ந்த கப்பலோட்டியாகவும், பிறகு ஒரு சிறு அதிகாரியாகவும், பணியாற்றியபின் அவன் ஒரு கடற்படைப் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்குச் சென்ருன் இறுதியில் 4-ம் வகுப்புக் கப்பல் ஒன்றின் அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அவர் அந்தப் பதவியில் இருந்தார் என்பதைத் தவிர அவரால் யாருக்கும் எவ்விதப் பிரயோ ஜனமும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனுல், அவர் அந்தப் பதவியில் இருந்ததின் காரணமாகவே, பல வருடங் களாக நம்மை பயமுறுத்திவந்த சகலவிதமான விரோதி களையும் நம் கரைகளுக்கு அப்பாலேயே தடுத்து நிறுத்த முடிந்தது. யுத்தம் ஆரம்பமானபோது அவருடைய அனுப வமும், புத்தி நுட்பமும், நாம் சுவாசிக்கும் காற்றைப் போலவும்; நம் இருதயத்தை போஷிக்கும் ரத்தத்தைப் போலவும் நமக்கு அவ்வளவு அத்யாவசியமாயிற்று.

அவர் கடற்படையிலிருந்து வந்தார் என்ற யதார்த்தத் திஞல், கேப்டன் அகிமோவுக்கு சார்ஜெண்ட் மேபொ ரோடோ, அவருடைய உதவியாட்கள் அனைவரும் அதிக

மரியாதை காட்டினர். ஆயினும், மேபொரோடோ ஒரு சாதாரண மனிதராகவே, ஒரு கருமியாகவே இருந்தார். அவர் யுத்தத்திற்கு முன்னுல், ரயில்வே சிற்றுண்டி சாலேயின் மேனேஜராக இருந்தார். இந்த வேலேக்குப் பெரிய திறமை ஒன்றும் தேவையில்லே.

பொதுவாகச் சொல்லப்போனுல், குறைபாடுகள் இல்லாத மக்கள் இருக்க முடியும் என்பதை மேபொ ரோடோ நம்பவில்லே. அவர்களின் குறைபாடுகளே அவர் எப்பொழுதும் மிகைப்படுத்தும் பழக்கமுள்ளவராக இருந் தார். குறைபாடுகள் இல்லாத மனிதர்கள் இருக்கிறுர் களென்றுல், அவர்கள் தங்கள் குறைபாடுள்ள அம்சங்களே மறைத்துக்கொள்ளும் அளவிற்கு சாமர்த்தியசாலிகளாக இருக்கிறுர்கள், என்று அவர் நினேத்தார். அவர்களுடன் கொஞ்சநாள் சேர்ந்து வசித்தால், அவர்களுக்கும் பலஹீ னங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்பது அவரது அபிப்பிராயம்.

ஆயினும், கேப்டன் அகிமோவிடம் மூன்று மாத காலம் பணியாளாக இருந்தபோதிலும்—எவ்விதக் குறைபாடு களேயும் மேபொரோட்டா காணவில்லே. யுத்த காலத்தில் 3 மாதங்கள் என்பது அதிகமான காலமே. அகிமோவ் எவ்விதக் குற்றங்குறையும் இல்லாதவராக இருந்தார் என்பதல்ல, ஆனுல், அகிமோவிடம் என்ன குறைபாடுகளே அவர் கண்டாரோ, அவையெல்லாம் பொருட்படுத்தத் தேவையற்ற அவ்வளவு அற்பமானவை என்று அவர் கருதினுர். ஆனுல், அகிமோவ் விரைவில் கோபமடைபவராக இருந்தார். ''நீங்கள் இவ்வளவு குழப்பத்திலிருக்கும்போது கோபமடையக்கூடாது!'' என்று மேபொரோடா கூறுவார். தனக்குக் கீழ்ப்பட்டவர்களிடம் கேப்டன் நியாயமற்ற முறையில் கடுமையாக இருக்க நேரிட்டால், ''நம்முடைய சிப்பாய்களேப் போன்றவர்களிடம் மென்மையான உள்ளத் துடன் நடந்துகொண்டால், அவர்கள் நம்மையே ஏப்பம் போட்டு விடுவார்கள்'', என்று மேபொரோடா இதர சோல்ஜர்களிடம் கூறுவார்.

பெரிய தலையும், குறுகிய மூக்கும், பெரிய கண்களும் கொண்ட மேபொரோடா சதா மகிழ்ச்சியற்ற நினைவுகளைக் கொண்டவராகவே இருந்தார். ஏனெனில் அவரது குடும்பம் ஜெர்மானியர் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கொனோடோப் பகுதியில் இருந்தது. வாட்டி வதைக்கும் தன்னுடைய வேலைகளை நிறைவேற்றுவதில் அவர் உதாரணமாக விளங்கி வந்தார். ஆனால், அவர் எப்பொழுதுமே, ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி சர்வசதா அதிருப்தியடைந்திருப்பவரைப்போல்—மனவேதனையுடன் கூடியவராகவும், சலிப்படைந்தவராகவும் காணப்பட்டார். தன் நிலையைப்பற்றி அங்கலாய்த்துக் கொள்ள விரும்புவார். யாருடனாவது சம்பாஷித்துக் கொண்டிருக்கும்போது, பல சமயங்களில் "அப்படியானால் என்ன செய்வது ?" என்று இடைமறித்துக் கூறுவார், இது அவருடைய பல தோழர்களுக்கு எரிச்சலை உண்டு பண்ணியது. மொத்தத்தில், அவருடன் யாரும் சுமுகமாகக் காலங்கழிக்க முடியாத நிலைமை இருந்தது.

தான் காதலிக்கும் ஒரு பெண் தன் கூடவே இருக்கும் போது, ஒரு மனிதனிடம் எவ்வாறு மாறுதல் ஏற்படுமோ, அதுபோல் அகிமோவ் கூடவே இருந்தது தான் மேபொரோடாவிடம் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. உணர்ச்சிகளைச் சிறிதும் வெளிப்படுத்தாத கேப்டனின் தோற்றம்—இது மேபொரோடாவுக்கு நன்கு தெரியும்—அவரது விசால மதியையும், வாழ்க்கையைப்பற்றிய அவரது ஆழ்ந்த அறிவையும் மறைத்துக் கொண்டிருந்தது. அவர் எப்பொழுதும் பொருட்செறிவுடனேயே பேசுவார். சிந்தனையுடன் கூடிய புன்முறுவலையே அவரிடம் காணமுடியும். இடியோசை போல் சிரிப்பார். இவைகளெல்லாம், ஒரு நல்ல குதிரையைத் தட்டிவிடுவதுபோல், மேபொரோடாவுக்கு, உற்சாக மூட்டி ஊக்கமளித்தன. அது, தன்னைப்பற்றியும், தன் குழந்தைகள், தன் மனைவி, தன் நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவைகளைப் பற்றியும் சதா நினைத்து வருந்திக்கொண்டிராமல்-அவர் தன் வாழ்நாள் முழுவதும் இவ்வாறே வருந்திக்கொண்டிருந்தது துண்டு-அவரைத் தடுத்தது.

போர் முனையில் கொஞ்சம் ஓய்வு ஏற்பட்டிருக்கும் போது, அகிமோவ், வழக்கமாகப் படுத்துக்கொண்டுள்ள நிலையில் — கடற் சண்டைகளைப் பற்றியும்; பொதுவாக ஒரு மாலுமியின் வாழ்க்கையைப் பற்றியும் பலவிதமான கதை களைக் கூறுவார். கடற்படையில் உள்ள வாழ்க்கைபற்றியும், கடலைப் பற்றியும் மேபொரோடா அடிக்கடி அகிமோவைக் கேட்பார். ஏனெனில் மேபொரோடா சமுத்திரத்தைப் பார்த்ததே கிடையாது.

"அதை விவரிப்பது எளிதல்ல" என்று அகிமோவ், தன்னுடைய சிந்தனை நிறைந்த புன்முறுவலுடன் பதிலளிப்பார். அதை மேபொரோடோவின் முகம் உடனே பிரதிபலிக்கும்; ஒரு வேளை கொஞ்சம் மாறுபட்ட முறையில் இருக்கலாம். "உண்மையாகவே பரந்த நீர்ப்பரப்புத்தான் கடல் என்பது. ஆனால் நிலத்திலேயே வாழ்ந்தவனாகிய நீ புரிந்துகொள்வதைப் போல் அல்ல. அதுவே ஒரு தனி உலகமாகும். எவ்வாறு ஏராளமான புழுக்களைக் கொண்டு ஒரு பாம்பை உண்டாக்க முடியாதோ, அதுபோலவே ஏராளமான நதிகளைக் கொண்டும் ஒரு கடலை உண்டாக்க முடியாது. கடல் என்பது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். அதற்கென்று தனியாக வாசனை இருக்கிறது. அதற்கென தனி வானம் இருக்கிறது. தனக்கென வெளிச்சத்தையும், இருளையும் தனியாகப் பெற்றிருக்கிறது. நிலத்திலிருந்து பார்த்தால் அது கருமையாகத் தோன்றும். அடிவானத்திற்கருகில் உள்ள கடற்பகுதியைப் பார்த்தால் அது இன்னும் அதிகக் கருமையாகத் தோன்றும். வெள்ளாட்டுக் குட்டிகளைப் போன்ற வெண்மையான பொங்கும் நுரைகள் அந்தக் கறுப்பான பரந்த நீர்ப் பகுதியின் மீது துள்ளி வருவதைப் பார்க்கலாம். கரையிலிருந்து வெகு தூரத்திற்கப்பால் ஒரு கப்பலிலிருந்துகொண்டு கடலைப் பார்த்தால் அது நீல நிறமாகத் தோற்றமளிக்கும்." பல வார்த்தைகளைக் கொண்டு கூறினாலும் ஒரு சரியான விளக்கத்தைக் கொடுக்க முடியாத நிலையில் மனம் சலிப்படைந்து, அகிமோவ், தவிர்க்க முடியாமல் இறுதியில் "நீங்களாகவே அதைப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இதிலிருந்து உயிருடன் மீண்டால்

நான் உங்களை செபாஸ்டபோலுக்கோ அல்லது ஒடெஸ்ஸா வுக்கோ அழைத்துச் செல்கிறேன்'', என்று கூறி முடிப்பார்.

3

பூமியில் குழிவெட்டி மறைவாக ஏற்படுத்திக்கொள்ளும் பாசறைகளில் அகிமோவின் பாசறைதான் அங்கு அந்த பட்டாலியன் கம்பெனி பாசறைகளுக்குள்ளேயே மிகவும் பிரக்யாதி பெற்றதாக இருந்தது. எவ்வாறெனில், அங்கு சகல வசதிகளும் இருந்தன. சார்ஜெண்ட் மேபொரோ டோவின் முயற்சிகளின் பயனே இது. இத்தகைய உதவி யாளரைக் கொண்டிருப்பதற்காக எல்லா ராணுவ அதிகாரி களுமே அகிமோவைக் கண்டு பொருமைப் பட்டனர்.

தரை பூராவும் செங்கற்களால் பாவப்பட்டிருந்தது. நெருப்பின் காரணமாக அது பூராவும் கருநிறமாகியிருந்த போதிலும்கூட, செங்கற்கள் உடைசல் ஏதுமின்றி உறுதி யாக இருந்தன. தரையின் மீது வைக்கோல் பரப்பப்பட் டிருந்தது. அங்கு இருந்த சிறிய இரும்புஅடுப்பு(ஸ்டவ்)சிவப் பாகக் காய்ந்திருந்தது. அதனருகில் எப்பொழுதும் நிறையக் கட்டைகள் காய்ந்து கொண்டிருக்கும். அக்கட்டைகள் மேபொரோடோ விரும்பும் நல்ல பர்ச் அல்லது பைன் மர மாக இருக்காது. வில்லோ மரத்துண்டுகளாகத்தான் இருக்கும். ஆனல் இதர பாசறைகளில் அனேகமாக அதுகூட இருக்காது. ஜெர்மானியர் சுட்டுக்கொண்டிருக்கும்போதே, போர் முன்னணிப் பகுதியில் வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்த ஒருசிற்ருறின் கரையில் மேபொரோடா அம்மரத்துண்டுகளைச் சேகரித்தார். கட்டுக் கட்டாக அவர் அந்த மரச் செக்கைகளைக் கொண்டு வருவது வழக்கம். சில சமயங்களில் பழைய காலத்திய குபான் பகுதியைச் சேர்ந்த சாரணப் படையினர் போன்று, வயிற்றினுல் ஊர்ந்து கொண்டே அவற்றைச் சேகரித்து வருவார். ஒதம் நிறைந்த சுவர் ஓரங்கள் எங்கும் அந்த மரக் கழிகளை அடுக்கி வைப்பார்.

அந்தப் பாசறையில் ஒரு மேஜையும் இரண்டு பெஞ்சு களும் இருந்தன. அவற்றிலிருந்த ஒரு ஆணியில், ஒரு பீங்கான் பேசின் மாட்டப்பட்டிருந்தது. அதன் வெளிப் புறம் கருநீலமாகவும், உட்புறம் சமாதான வெண் புருவைப் போல் கண் கூசும் வெண்ணிறமாகவும் இருந்தது. அது எங் கிருந்து வந்ததென்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம். இதர பாசறைகளில் இருப்பதைப்போல், படுத்துறங்குவதற் கான மேடைகள் இங்கு மண்ணால் கட்டப்பட்டிருக்கவில்லை. ஆனால் மரப்பலகைகளால் ஆன உண்மையான மேடை களாக இருந்தன.

அங்கு ஓர் கிராமபோனும்கூட இருந்தது. ஆரம்பத்தில் அதற்கு ஊசி கிடையாது. பின்னர் மேபொரோடா, ஒரு சாதாரண தையல் ஊசியைக் கொண்டு, கிராமபோனுக் கான ஓர் ஊசியைத் தயாரித்தார். அது உண்மையான கிராமபோன் ஊசியைவிட எவ்விதத்திலும் மோசமான தாகிவிடவில்லை. அவர்களிடம் நான்கு இசைத்தட்டுகள் மட்டுமே இருந்தன. எல்லாம் இசைக் கருவிகளின் சங் கீதமே. பாட்டுகள் ஒன்றுகூடக் கிடையாது. இது பாசறை யிலிருந்தவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்தது. ஏனெனில் அந்த சங்கீதம் அவர்களுக்கு அலுப்புத் தட்டுவ தாக இருந்தது. ரசிக்கக்கூடிய அளவில் இல்லை. பின்னர் அவர்கள் அதை ரசிப்பதற்குப் பழக்கப்படுத்திக் கொண் டார்கள். அந்த சங்கீதத்தின் எடுத்துக்காட்டான நுட்ப மான நாதத்தைப் புரிந்து கொண்டனர். அது மெதுவாக ஆனால் உறுதியாக அவர்களின் நெஞ்சில் ஊடுருவியது. போர் ஓய்வுக் காலங்களில், வீரர்கள் ஈரம் நிறைந்த அகழ் களில் படுத்துக்கொண்டே பாடுவார்கள். தங்களுக்கு மிகவும் பிடித்த பாட்டுக்களையும், "சாஸ்திரீய" சங்கீதத் தையும் மாறி மாறிப் பாடுவார்கள். இதை கேப்டன் ரெமி ஸோவ் மிகுந்த மனக்களிப்புடன் ரசிப்பார். கேப்டன் ரெமி ஸோவ் ஓர் முன்னாள் சரித்திர ஆசிரியராவார். அகிமோவின் அரசியல் உதவியாளராக இருந்தார்.

பாசறையில் விரைவில் ஆட்கள் வந்து நிரம்பினர். ஒருவ ருக்குப்பின் மற்றொருவராக பட்டாலியன் அட்ஜுடன்ட்,

லெப்டினென்ட் ஒரேஷ்கின், துப்பாக்கிப் படை கமாண் டர்கள் பொகோசியான், பெல்ஸ்கி, பீரங்கிப் படை லெப்டி னென்ட், ப்ளாடூன் கமாண்ட் லெப்டினென்ட், ஆகிய உயிரு டனிருக்கும் பட்டாலியன் அதிகாரிகள் அனைவரும் வந்தனர். 'ட்யூடி'யிலிருந்த சிக்னல்மேன் ஒரு மூலையில் தொலைபேசிக் கருகில் தூங்கி வழிந்துகொண்டிருந்தான்.

அகிமோவ் தன்னுடைய ராணுவ உடையை மெதுவாகக் கழற்றிக்கொண்டிருக்கும் பொழுது, கேப்டன் ரெமிஸோவும் வந்து சேர்ந்தார். தட்ப வெட்பத்தால் பழுதடைந்திருந்த தன் மேலங்கியைக் கழற்றி எறிந்தார்; மூக்குக் கண்ணாடியில் தெறித்திருந்த மண்ணைத் துடைத்துவிட்டுக் கொண்டே "என்ன செய்தி?" என்று கேட்டார்.

மேஜையின்மீது தேசப் படத்தை விரித்துப் போட்டுக் கொண்டே "உட்காருங்கள், தோழர்களே", என்றார். நிமிர்ந்து பார்க்காமலேயே "நாம் போர்புரியப் போகி றோம்", என்றார்.

அதிகாரிகளிடத்தில் உறுதியான மனப்பான்மை ஏற்பட் டிருப்பதை அவர் புரிந்துகொண்டார். ஒவ்வொருவரும் தங்கள், தங்கள் பெட்டிகளிலிருந்து தேசப் படங்களை மெது வாக எடுத்தனர். சரசரவென்ற ஓசை.

அந்த சமயத்தில் மேபொரோடா திரும்பி வந்தார். ஓசையில்லாமல் சுவற்றின்மீது உரசிக்கொண்டே ஸ்டவ் அருகில் தன் இருப்பிடத்திற்குச் சென்றார். இறைச்சி வேக வைக்கும் வேலையை கவனிக்க ஆரம்பித்தார். ஆயினும், அவருடைய மனம் பூராவும் பூர்வாங்கப் போர்த் திட்டத் தைப்பற்றி அகிமோவ் கூறும் விளக்கத்தின்மீதே இருந்தது. அடிக்கொரு தடவை அவர் பெருமூச்சு விடுவதிலிருந்து இதை உணர முடிந்தது.

நெருப்பில் வாட்டிய இறைச்சியின், நாக்கில் நீர் ஊறச் செய்யும், போதையூட்டும் மணம் மெதுவாக பாசறை முழுவதும் பரவியது. சாப்பாட்டுக்கு எத்தனை பேர் இருக் கிறார்கள் என்பதை மேபொரோடா மனதிற்குள்ளேயே எண்ணினார். ஒவ்வொருவருக்கும் உரிய பங்கைக் கொடுக்க வேண்டும்; அதேசமயத்தில் யாருக்கும் அதிகமாகப் போட்டு

விடக்கூடாது என்பதே அகிமோவின் கவலை. அப்பொழுது தான் அடுத்த நாளுக்கும் கொஞ்சம் மீதம் வைக்க முடியும். "நாளைக்கு சாப்பாட்டுக்கு இவ்வளவு பேர் இருக்கமாட்டார்கள்", என்று, அவர் தலையை அசைத்துக்கொண்டே நினைத்துக்கொண்டார்.

அடுத்த நாள் காலையில் எட்டு மணிக்குத் தாக்குதல் நடத்துவதென்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது ஜெர்மானியர்கள் தங்கள் காலை உணவை அருந்திக்கொண்டிருப்பார்கள். அகழிகளில் குறைந்த ஆட்களே இருப்பார்கள். அவர்களை செயலிழக்கச் செய்வதற்கு 20 நிமிஷ நேரம் பீரங்கித் தாக்குதல் நடத்துவதென்று திட்டமிடப்பட்டது. முதல் ஜெர்மன் அகழியைக் கைப்பற்றி அதை உறுதிப்படுத்துவது முதல் திட்டம். இந்த நடவடிக்கைக்குப் பாதையை செப்பனிடுபவர்களை (Sappers) பட்டாளத்துடன் இணைத்துக்கொள்வது. ரெஜிமெண்டிடமிருந்து உத்திரவுகள் வந்ததும் இதர விபரங்களைப் பிறகு முடிவு செய்து கொள்வது.

"ஏதாவது கேள்விகள் உண்டா?" என்று அகிமோவ், சிறிது நேர அமைதிக்குப்பின் கேட்டார். அதற்கு பதில் ஏதும் வரவில்லை.

"குறிக்கோள் என்ன என்பது தெளிவாகிவிட்டதா?" என்று அவர் மீண்டும் சிறிது கோபத்துடன் கேட்டார்.

"நன்ருக", என்று அதிகாரிகளில் ஒருவர் தாழ்ந்த குரலில் கூறினர்.

"பீரங்கித் தாக்குதலின் ஆதரவு நமக்குப் போதிய அளவு இருக்கும். ரெஜிமெண்டுடையவும், டிவிஷனுடையவும் பீரங்கிப்படை முழுவதும் நமக்கு உதவியாக இருக்கும்", என்று அகிமோவ் மேலும் கூறினர்.

அவர் மீண்டும் மௌனத்திலாழ்ந்தார். அவருடைய முகம் திடீரென்று சிவப்பேறியது. தன் உணர்ச்சிகள் கொப்பளிக்க ஆவேசத்துடன் கூறினர். "இதை முன்னிட்டு பட்டாலியன் பெருமைப்பட்டுக்கொள்ள வேண்டும்; மூலையில் உட்கார்ந்து மனச்சோர்வடைய வேண்டிய விஷயமல்ல. உங்களிடத்தில் போதிய ஆட்கள் இல்லையென்று நீங்கள்

சொல்கிறீர்கள். நீங்கள் களைப்படைந்திருக்கிறீர்கள்? எனக்கு இதெல்லாம் தெரியும். டிவிஷன் கமாண்டருக்கும் இது தெரியும். முன்னணிக் கமாண்டருக்கும் கூட ஒருவேளை இது தெரிந்திருக்கும். உங்களுக்குப் புரிகிறதா ?

அவர் தன் பார்வையை உயர நிமிர்த்தி, முதல் தடவையாக அவர்களைப் பார்த்தார். இன்னும் அதிக எரிச்சலடைந்தார். அவருடைய முகம் மேலும் கசப்படைந்தது, பார்வை உக்ரமடைந்தது.

''உங்களைப் போன்ற அதிகாரிகளைப் பார்க்கும்போது நான் அவமானத்தால் தலைகுனிய வேண்டி ஏற்படுகிறது.'' கடைசியாக அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்தன. “குறைந்தபட்சம் உங்களுடைய குதிரை சவாரி ஆடைகளையாவது களைந்தெறியுங்கள்!'' தன்னுடைய கோபத்தின் குறியாக அவருக்கு ஏதாவது ஒரு பொருள் தேவைப்பட்டது. அதேசமயத்தில் போரில் அலுத்துக் களைத்துப்போன தன்னுடைய தோழர்களுக்காக அவர் பரிதாபமும் அடைந்தார். எதிர்நோக்கியுள்ள போருக்கு தயார்படுத்துவதற்காக அவர்களை உற்சாகப்படுத்த வேண்டியது அவரது கடமையாக இருந்தது. அந்த மோசமான இலையுதிர் காலத்தில் நடக்கப் போவதுதான் அவர்களின் கடைசி நடவடிக்கையாக இருக்கப்போகிறது என்பது, அவரை இன்னும் அதிகமாகத் தூண்டிவிட்டது. அவருக்கு எரிச்சலை உண்டுபண்ணியது. அதுதான் கடைசி நடவடிக்கை என்பது அவர்களுக்குத் தெரியாது. அதை அவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்குத் தனக்கு உரிமையிருக்கிறதென்றும் அவர் நினைக்கவில்லை. அநீதியான, அவமானப்படுத்தக்கூடிய முறையில் அவர் எரிந்து விழுந்ததைப் பொருட்படுத்தாமல் அவர்கள் அமைதியான முறையில், தரையில் விரிக்கப்பட்டிருந்த தங்கள் படுதாக்களை அவர்கள் சுருட்டிக்கொண்டு எழுந்ததைப் பார்த்தும் உடனே அவருடைய கோபம் தணிந்தது. அவர்களின் மேல் ஏற்பட்ட பச்சாத்தாப உணர்ச்சியில் அவர்களிடம் உண்மையைச் சொல்ல நினைத்தார். ஆயினும், கவலை தோய்ந்த சைகை மட்டும்தான் அவர் காண்பித்தார். மிகவும் அலுப்புத் தட்டிய பெருமூச்சு விட்டார். பின்னர்,

"மேபொரோடா, இறைச்சியும், வோட்காவும் கொண் டுவா!'' என்று உரக்கக் கூவினர்.

4

ரெமிஸோவ் ஒருவர் மட்டுமே, எல்லோருடனும் சேர்ந்து உணவருந்துவதற்கு மறுத்தார். அவர் என்றும் வோட்கா குடித்தது கிடையாது. மிகவும் குறைவாகவே சாப்பிடுவார். தன் பங்கு உணவில் பாதியை போகோசியா னுக்குக் கொடுத்துவிட்டார். போகோசியான் மற்றெல் லோரையும்விட அதிகம் சாப்பிட்டாலும், குச்சிபோல் ஒல்லி யாகவே இருந்தார்; அத்துடன் எப்பொழுது பார்த்தாலும் பசியுடனேயே காணப்படுவார். யுத்தம் வந்தும்கூட, வோட் காவிடம் ரெமிஸோவுக்கு இருந்த வெறுப்பு போகவில்லை. யுத்தம் காரணமாக அவரிடம் புதிய குணதிசயங்கள் தோன்றின. அவருக்கே அது தெரியாது. சில சமயங்களில் அது அவனே வியப்பிலும் ஆழ்த்தியது. உதாரணமாக, எவ்வளவு உடலுழைப்புச் செய்யவேண்டி யேற்பட்டாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் வலிவு ஏற்பட்டது. எப்பொ ழுதும் நோய் வாய்ப்பட்ட நிலையிலிருந்த ரெமிஸோவ் அத்தகைய பலம் தனக்கிருக்கிறதென்று என்றுமே சந்தேகப் பட்டதில்லை.

ரெமிஸோவின், கஷ்டத்தைத் தாக்குப் பிடிக்கும் சக்தியைக் கண்டு அகிமோவ் உண்மையாகவே ஆச்சரியப் பட்டார். யுத்தம் நீடிக்கும் வரையிலும் அவரால் தாக்குப் பிடிக்க முடியும், என்று சில சமயம் அவர் நினைத்ததுண்டு. யுத்தம் முடிகின்ற அந்த தினத்தில், அந்த மணி நேரத்தில், தான்யமணிகளைக் கொண்ட கதிர்போல அவர் திடீரென்று படுத்துக்கொண்டு விடுவார். அவருடைய பெரிய குழி விழுந்த கிட்டப்பார்வையுடைய கண்கள், வானவெளியில் ஏதோ ஒன்றை இமைக்கொட்டாது பார்ப்பதைப்போல் அசையாது இருக்கும். அவர் ஏதோ ஒன்றைப்பற்றி ஆழமாக சிந்திப்பவரைப் போன்றே, அல்லது வெறுமனே ஓய்வு எடுப்பதைப் போன்றே தோன்றும்.

திடீரென்று ரெமிஸோவ் துள்ளி எழுந்தார். அவருடைய வழக்கமான தாழ்ந்த குரலில் கூறினர். "சரி, நண்பர்களே, நீங்கள் சாப்பிடுங்கள். நான் கிளம்பப் போகிறேன். படைப் பகுதிகளில் (கம்பெனிகளில்) நான் கட்சி உறுப்பினர் கூட்டங்களைக் கூட்ட வேண்டும். ஆட்களை போருக்குத் தயார்ப் படுத்தவேண்டும். நாளைய தினம் செப்டம்பர் 24. சரியாக 154 ஆண்டுகளுக்கு முன்னல் இதே தேதியில்தான் ரைம்னிக் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் அலெக்ஸாண்டர் வாசிலியேவிச் சுவோரோவ், துருக்கியப் படைகளை முறியடித்தார். அத்தகைய தோல்வியை ஜெர்மானியர்களுக்குக் கொடுக்க நாம் முயற்சிப்போம். அதில் நான்கில் ஒரு பங்கு அளவு பலத்துடன் நாம் தாக்கினல்கூடப் போதும். சுவோரோவினுடைய திறமையில் நான்கில் ஒரு பங்கு மட்டுமே உங்களுக்கு இருப்பதாக நான் கூறுவதால், பேவல், நீங்கள் கோபித்துக்கொள்ள மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன்". என்ருர் ரெமிஸோவ்.

"அது 'கூட அதிகம்.'' என்று அகிமோவ் கவலையுடன் கிண்டல் செய்தார். "ஆனல் எனக்கு இருப்பதைப்போல் ஒரு அரசியல் உதவியாளர் சுவோரோவுக்கு இருந்ததில்லை.''

''சரி, ரொம்ப நல்லது. நண்பர்களே'', என்ருர் ரெமிஸோவ். அவருடைய குரல், அவர் ஓர் பள்ளிக்கூட ஆசிரியர் என்பதை எல்லோருக்கும் நினைவு படுத்தியது.

அவர் வெளியில் செல்லவும், அகிமோவ், அவருக்குப் பின்னலேயே, "ஆட்களுக்கு இரவு சாப்பாடு காலகாலத்தில் கிடைக்கும்படியும், இன்று அவர்கள் முன்னதாகவே தயாராகும்படியும் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என்று உரக்கக் கூவினர்.

இறைச்சியை அவர்கள் சரியாகக்கூட சாப்பிட்டிருக்க மாட்டார்கள், அதற்குள், படைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து மேலதிகாரி ஒருவர் வந்தார். போராடிக்கொண்டே உளவு பார்ப்பது சம்பந்தமான விபரமான எழுத்துமூலமான உத்தரவு ஒன்றை அவர் கொண்டுவந்தார். அவரைத் தொடர்ந்து ரெஜிமெண்டின் இஞ்ஜினியர் பிர்சோவ், பீரங்கிப்படை தளபதி குஸாரோவ், எதிரிப்படை நடமாட்

டங்களைப்பற்றி உளவு பார்க்கும் அதிகாரி கேப்டன் ட்ரோஸ்ட், ஆகியோர் வந்தனர். சிறிது நேரங் கழித்து, பொறுப்பை எடுத்துக்கொள்ளவிருக்கும் டிவிஷனின் வய தடை-ந்த கர்னல் திரும்பி வந்தார்.

அந்தக் கர்னல் யாரென்பது அகிமோவைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. எனவே, எல்லோரும் அவர் வருகையை சாதாரணமாகவே கருதினர். டிவிஷன் அல்லது படைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து யாரோ ஒரு சீனியர் ஸ்டாப் ஆபீசர் வருகிறார், என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால் அகிமோவ் குழப்ப மடைந்தார். கர்னலையே உற்றுப் பார்த்தார். தங்களுடைய ஒப்பந்தத்தை அவர் நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறாரா என்பதை அவருடைய பார்வையிலிருந்து தெரிந்துகொள்ள முயற்சிப்பதுபோல் அகிமோவ்பார்த்தார். கர்னல் தலையசைத்தார். அகிமோவும் அசைத்தார். தான் எவ்வளவு பீதியும் எரிச்சலும் அடைந்திருப்பதை அகிமோவ் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. பலவந்தமாகத் தன் முகத்தில் புன்சிரிப்பு வரவழைத்துக்கொண்டே, ''காம்ரேட் கர்னல், இங்கே இருக்கும் நிலைமையைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்,'' என்று கேட்டார்.

''உங்களுடைய பட்டாலியன் தலைமை கேந்திரத்தைப் பற்றி நீங்கள் குறிப்பிடுகிறீர்களா?'' என்று அந்தக் கர்னல், முகத்தில் எத்தகைய சலனமுமில்லாத தோற்றத்துடன் கேட்டார்.

''ஆம், அதைப் பற்றித்தான்'',

''அது ஒன்றும் மோசமில்லை.''

''அதெல்லாம் என்னுடைய உதவியாளருடைய வேலை தான்,'' என்று அகிமோவ் கூறினார். ராணுவ விதிக்கு முரணான வார்த்தையை உபயோகப்படுத்தியதால் கர்னல் முகஞ் சுளித்ததைக் காணாதவர் போலவே இதைக் கூறினார். ''தங்கியுள்ள இடத்தை வசதிகரமாக்குவதில் அவன் பெரிய ஆள்,'' என்றார்.

வேவு பார்க்கும் குழுவினர் ஒரு பெண் மொழிபெயர்ப் பாளருடன் வருகிறார்கள், என்று கேப்டன் ட்ரோஸ்ட்

அறிவித்தார். கைது செய்யப்படும் எதிரியின் ஆட்கள் கொண்டு வரப்பட்டவுடனேயே அவர்களைக் கேள்வி கேட்பதற்கு உதவியாக இருப்பதற்காக, அந்த பெண் மொழி பெயர்ப்பாளரை அகிமோவுடனேயே தங்கும்படி ரெஜிமெண்ட் கமாண்டர் உத்திரவிட்டிருந்தார்.

இதைக் கேட்டு அகிமோவ் வெகுண்டார். தன்னுடைய கூடாரத்தில் ஒரு பெண்ணையும் தங்கவைக்கும் யோசனை அவருக்குப் பிடிக்கவில்லை. சண்டையின்போது கடுமையான வார்த்தைகளைத் தான் உபயோகிப்பவன் என்பதை நன்கு தெரிந்துகொள்ள நிலைமையில். ஒரு பெண் தன் பாசறையில் தங்குவதை அவர் விரும்பவில்லை.

''அந்தப்பெண்ணை இங்கிருந்து வெளியே எங்கும் அனுப்ப கூடாது என்று ரெஜிமெண்ட் கமாண்டர் உத்திர விட்டுள்ளார்'', என்று ட்ரோஸ்ட் மேலும் கூறினார்.'' ஏனெனில், வேவு பார்க்கும் குழுவினருடன் வெளியே செல்வதற்கு அவளுக்கு விருப்பமிருக்கிறது.''

''அவள் விருப்பப்பட்டால் போகட்டும்,'' என்று, அகிமோவ் கொஞ்சம் முரட்டுத்தனமாகவே பதில் கூறினார். ''ஒரு பெண்ணை கவனித்துக்கொள்வது தான் எனக்கு வேலையா? எனக்கு வேறு வேலைகளிருக்கின்றன.''

புதிய மொழிபெயர்ப்பாளரைப்பற்றி அகிமோவ் ஏற்கனவே பலதும் கேட்டிருந்தார். ரெஜிமெண்டுடன் அவள் இருந்த 10 நாட்களுக்குள், தனக்கென்று ஓர் பெயரை சம்பாதித்துக் கொண்டாள். தொழிலில் பெயர்பெற்ற உளவுப் படையினர் கூட-அவ்வளவு சிலபத்தில் இவர்களிடம் நல்ல பெயர் வாங்கமுடியாது-அவளுடைய வீரத்தைப் புகழ்ந்து பேசினர். உதாரணமாகக் கடைசி சில நாட்களில், 2-வது பட்டாளத்தின் போர் நிலைகளுக்கும் முன்னால் இருக்கும் சூன்யப் பிரதேசத்தில் அவள் புகுந்து, 3 இரவுகள் ஓட்டமும் நடையுமாகவும், ஒளிந்தும், மறைந்தும் சென்று விரோதியின் முகாமில் என்ன நடைபெறுகிறது என்பதை எவ்வாறு கவனித்து வந்தாள் என்பதைப் பற்றி பேச்சு அடிபட்டு வந்தது.

ஜெர்மன் சோல்ஜர்கள் பேசிக்கொண்டவைகளிலிருந்தும், அவள் கேட்ட இதர ஓசைகளிலிருந்தும், ரெஜிமெண்டின் இடது பாரிசத்தில் ஓர் புதிய பட்டாளம் கொண்டுவரப்பட்டுள்ளது, என்பதை அவளால் கண்டுகொள்ள முடிந்தது.

வெளிப்படையாகச் சொல்லவேண்டுமென்றால், அவளைப் பார்ப்பதற்கு முன்பே கூட, எடுத்த எடுப்பிலேயே அகிமோவ் அவள்மீது வெறுப்புக் கொண்டார். விரோதியை ஏமாற்றுவதில் அசாதாரண வீரமும், மதி நுட்பமும் மிகுந்தவராக இருந்த அகிமோவ், வேறு யாராவது தீரமாகக் காரியம் சாதித்தனர் என்ற செய்தி எதையாவது கேட்டால் உடனே அவர் பொறுமையடைந்து வந்தார். அவர் மிகுந்த தற்பெருமை கொண்டவராக இருந்ததால், பிறருடைய வீரத்தைப்புகழ்வது போன்ற பேச்சுகள், அவரால் அவ்வாறு செய்யமுடியவில்லையே என்று அவரைப் பழிப்பது போன்றே அவருக்குப் பட்டது. இந்தத் தடவை அவரை இன்னும் அதிகமாகப் புண்படுத்திய விஷயம் என்னவெனில், இந்தப் பேச்செல்லாம் ஒரு பெண்ணைப் பற்றியதாக இருந்ததே.

எப்படியிருந்தபோதிலும், அவளைப்பற்றி நினைப்பதற்குத் தற்பொழுது அவருக்கு நேரமில்லை. ஒவ்வொரு நிமிஷமும் அவருடைய வேதனையை அதிகப்படுத்துவதாக இருந்தது. பாசறையின் கதவு ஒரு க்ஷணம்கூட மூடியிருக்காது. மறுநாள் நடவடிக்கையில் பங்கெடுத்துக்கொள்பவர்கள் வந்த வண்ணமும் போனவண்ணமுமிருந்தனர். அகிமோவுக்கு ஓய்வின்றி வேலையிருந்தது. பலவித உத்திரவுகள் போடுவது, துப்பாக்கி சுடுவோர் எந்த இலக்குகளைப் பார்த்துச் சுடுவது என்பதை நிர்ணயித்துக் கொடுப்பது, ராணுவம் முன்னேறுவதற்கு பாதை அமைப்பவர்களுக்கு (Sappers), நம்முடைய சுரங்க வெடிகள் எங்கே விதைக்கப்பட்டுள்ளன, விரோதியின் சுரங்க வெடிகள் எங்கே விதைக்கப்பட்டுள்ளன என்பதையும், முள்கம்பி வேலிகள் எங்கு போடப்பட்டுள்ளன என்பதையும் எடுத்துச் சொல்வது, என்னென்ன எதிர்பாராத நிலைமைகள் ஏற்படலாம் என்பதையெல்லாம் ஊகித்து அவைகளை சமாளிக்க என்ன நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது என்று தன் அதிகாரிகளுடன் கலந்தாலோசிப்பது ஆகியவற்றில்

அவர் இடைவிடாமல் ஈடுபட்டிருந்ததால், சில சமயம் அவர், போரைத் தொடர்ந்து என்ன செய்வது என்பதையே—அதாவது பின்னணிக்குப் பின் வாங்கிச் செல்வது என்பதையே அவர் மறந்தார். அது அவர் நினைவிலிருந்த பொழுது, அவர் ஒரு கணம் மௌனமாக இருப்பார். அவருடைய ரத்த நாளங்களில் ரத்தம் துடிக்கும். அவர் கர்னலை ஓரக்கண்ணுல் பார்ப்பார். அது, அவர் அங்கே உட்கார்ந்து தானிருக்கிருரா, என்பதையே ஓரளவு சந்தேகப்படும்படியாக இருக்கும். கர்னலை எந்த அளவுக்கு அவர் விரும்பாதவராக இருந்தபோதிலும், அடுத்த நாள் அவர்கள் வேலையிலிருந்து விடுவிக்கப்படப் போகிருர்கள் என்பதை அவர் அங்கே இருந்தது, சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்தது. ஒருக்கால், அவர் திரும்பிப் பார்க்கும்போது அங்கு கர்னல் இல்லையென்ருல்? அது அவருடைய வெறும் மனப் பிரமையா? அல்லது மூளையின் கனவா? ஆனுல் கர்னல் உண்மையாகவே அங்கு உட்கார்ந்திருந்தார். ஊனுடனும் உயிருடனும் உட்கார்ந்திருந்தார்.

பாசறையில் தணிந்த குரலில் சம்பாஷணைகள்; காற்றின் விர் விர் என்ற சப்தம் சில சமயம் உச்சஸ்தாயியிலிருந்தது; சில சமயம் தணிந்த ஓசையுடன் இருந்தது. கதவு திறக்கும் போதும், மூடும்போதும் காதில் பாயும் கூர்மையான ஒலி; இதற்கிடையில் பால் கொதித்து பொங்கி வரும்போது ஏற்படும் ஹிஸ் என்ற ஒரு ஓசை திடீரென்று பாசறையில் கேட்டது. அதைத் தொடர்ந்து பலமான ஓசையில் இனிமையான சங்கீதம். மேபொரோடா கிராமபோனை முடுக்கி வைத்தார்.

''இதற்கு அர்த்தமென்ன?'' என்று கர்னல் உரக்கக் கேட்டார். ''கிராமபோனை நிறுத்து. அதற்கு இது நேரமல்ல!'' என்ருர்.

சண்டையில் எந்தெந்த இலக்குகளைத் தாக்கவேண்டும் என்பதுபற்றி அகிமோவ் பீரங்கிப் படை அதிகாரிகளுக்கு உத்தரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தார். போர்முனைப் படத்தின் மீது பென்சிலை வைத்துக்கொண்டு, ஏதோ குறித்

துக்கொண்டிருந்தார். கர்னலை உற்றுப் பார்த்தவாறே, நிதானமாகப் பின்வருமாறு கூறினார்.

"அவளைத் தனியாக விட்டு விடும்படி நான் அவரிடம் கூறினேன். ஜெர்மானியர்கள் அதற்குப் பழக்கமானவர்கள். நாம் மாலை நேரங்களில் இசை முழங்காவிட்டால், ஜெர்மானியர்கள் சந்தேகப்படுவார்கள். இது ஒரு ராணுவத் தேவையாகும்; தோழர் கர்னல் அவர்களே."

போர் நடவடிக்கைக்கான தயாரிப்புகளை அவர் கவனித்து வந்த நிலையில், இளம் தளபதியின் நிதானமான, அலட்டிக்கொள்ளாத மனப்போக்கை அவரால் பார்க்காமலிருக்க முடியவில்லை. தன்னிடமுள்ள அதிகாரத்தின் காரணமாகவும், தனிப்பட்ட முறையில் அவருக்கிருந்த ஆண்மை (அஞ்சாமை) யின் பயனாகவும் அவர் அளவுகடந்த தன்னம்பிக்கையுடன் யாரிடமும் பழகி வந்தார்.

"ஜெர்மன் பீரங்கிப்படை இங்கேதான் இருக்கிறது," என்று அகிமோவ் போர் அரங்கப் படத்தில் ஓரிடத்தில் பென்சிலால் குறியிட்டுக்கொண்டே கூறினார். "அந்த இடத்தை நொறுக்கிவிட்டோமேயானால் வெற்றி நமதே", என்றார்.

கிர்ரென்று டெலிபோன் மணியடித்தது. உடனே ஆபரேட்டர் ரிசீவரை எடுத்து அகிமோவிடம் கொடுத்தார். "ரெஜிமெண்ட் கமாண்டர்", என்றார்.

அகிமோவ் கொலோவினிடம் பேசினார். பேசினார் என்று சொல்வதைவிட, அந்த மேஜர் தன்னிடம் சொல்ல வேண்டியிருந்ததை நிசப்தமான முறையில் கேட்டார். இடையிடையே "அது சரிதான்", "ஆமாம்", "ரொம்ப நல்லது", "நீங்கள் சொல்வது மிகவும் சரி", என்று முணுமுணுத்துக்கொண்டிருந்தார். இறுதியில் அவர் முகம் திடீரென்று சிவப்பேறியது. "என்ன தொந்தரவு, தோழர் மேஜர் அவர்களே! அந்த மொழி பெயர்ப்பாளர்தான்! உங்களுக்குப் புண்ணியமாகப் போகட்டும், அந்தப் பெண்ணை என்னிடமிருந்து அழைத்துக்கொள்ளுங்கள்! ஆம், ரொம்ப சரி, மிகவும் நல்லது", என்றார்.

ரிசீவரைக் கீழே வைத்துக்கொண்டே, அவர் கோபக்குறியுடன் 'சாதித்தே தீருவேன்' என்று சொல்லும் முகபாவத்துடன் கேப்டன் ட்ரோஸ்டைப் பார்த்தார்.

"உங்களுடைய அந்த மொழிபெயர்ப்பாளரைப்பற்றி எல்லோருக்கும் கவலையாக இருக்கிறது", என்று அவர் கூறினுர். அப்பொழுது அவர் மனதில் வஞ்சந் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற ஓர் எண்ணம் உதித்தது. ஒருக்கால் மேலதிகாரிகளில் யாராவது ஒருவர் அவள் விஷயத்தில் அக்கறை கொண்டவர்களாக இருக்கிருர்களோ, என்னவோ! அப்படியாஞல் அவளை அவர் தன்னுடனேயே வைத்துக்கொள்வது தானே!" என்ருர் அவர்.

"அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற அக்கறை எனக்கில்லை. அது என்னுடைய வேலையல்ல", என்று ட்ரோஸ்ட் ஜாக்கிரதையாக பதில் கூறினுர்.

சிறிய உருவமான, தடித்த வாரண்ட் ஆபீசர் ஒருவர் உள்ளே வந்து, வெடி மருந்து சப்ளைகள் வந்துவிட்டன என்ருர். அவருடைய பெரிய கோட்டிலிருந்து தண்ணீர் தாரையாக வழிந்துகொண்டிருந்தது. இதரர்கள் பலவிதமான ரிபோர்ட்டுகளுடனும், வேண்டுகோள்களுடனும் உள்ளே வந்தார்கள்.

"எல்லாம் சரியாக இருக்கிறது", என்று வயதான கர்னல் நினைத்தார். அவர் எழுந்து, "நான் வெளியே போக வேண்டும். முன்னணிப் பிரதேசத்தை நான் ஒரு முறை பார்க்க வேண்டும்" என்ருர்.

"நானும் உங்களுடன் வரவேண்டுமென்று விரும்புகிறீர்களா?" என்று எழுந்துகொண்டே அகிமோவும் கேட்டார்.

"நீங்கள் உங்கள் வேலையைப் பாருங்கள். என்னுடன் வேறு யாரையாவது அனுப்புங்கள்", என்ருர்.

லெப்டினென்ட் ஒரேஷ்கின், ஒல்லியான, இளஞ் சிவப்பான முகத்துடன் கூடிய அந்த அதிகாரி அகிமோவ் தலையசைத்ததைப் புரிந்துகொண்டார். தன்னுடைய துப்பாக்கியை எடுத்துக்கொண்டு கர்னலைப் பின்பற்றி நடந்தார்.

அந்த மலைப் பள்ளத்தாக்கில் ஒரு மூர்க்கமான காற்று அவர்களின் மீது பயங்கரமாக வீசியடித்தது. புதிய ஆட்கள்

தன்னுடைய தாக்குதலுக்கு இரையாகிறார்கள் என்ற மகிழ்ச்சிபோலும் அந்த சூறைக் காற்றுக்கு! சில்லிடும் மழைத் துளிகளை அவர்களின் முகங்களின் மீது வீசியடித்தது.

"நாம் வலது பக்கமாகப் போவோம்", என்றார் அந்தக் கர்னல்.

அவர்கள் காட்டுப் பிரதேசத்தின் வழியே நடந்தார்கள். அங்கு கும்மிருட்டாக இருந்தபோதிலும், தொடர்ந்து படைகள் சென்று கொண்டிருப்பதை உணர முடிந்தது. எல்லாத் திசைகளிலும் கருமையான நிழல்கள் நழுவிச் சென்றுகொண்டிருந்தன. துப்பாக்கித் தோட்டாக்களின் கூடுகள் நிறைந்திருந்த பூமியின்மீது கவச மோட்டார்களும், பீரங்கி வண்டிகளும் ஏறிச் சென்றபொழுது சடக், சடக்கென்ற ஓசை உண்டாயிற்று. இங்குமங்கும் சிகரெட்டு நெருப்பின் சிவப்பு ஒளி நட்சத்திரங்கள்போல் கும்பல் கும்பலாகத் தெரிந்தன. அந்தப் பள்ளத்தாக்குப் பாதை இடது பக்கமும் வலது பக்கமுமாக வளைந்து வளைந்து சென்றுகொண்டிருந்தது. அதற்கேற்பக் காற்றின் வேகம் தணிந்தும், அதிகரித்தும் வீசிக் கொண்டிருந்தது.

கர்னலும், லெப்டினென்டும் அந்தப் பள்ளத்தாக்கை விட்டு, அதிக ஆழமில்லாத போக்குவரத்து அகழ் ஒன்றின் வழியாகச் சென்றார்கள். ஜெர்மானியர்களின் பீரங்கிகளிலிருந்து எழுந்த தீ ஜுவாலை மெதுவாக எழுந்து பிறகு தணிந்து பூமியைத் தழுவியது. அப்பொழுது கடுமை நிறைந்த பச்சை வர்ண வெளிச்சம் இருண்ட, தண்ணீர் நிறைந்த பாதைகள், அகழ்கள், எஃகுப்போன்று கரு நிறமாக நீண்டு சென்று கொண்டிருந்த ஓடை ஆகியவைகளின் மீது பட்டு மறைந்தது. அந்த ஓடையின் இரு மருங்கிலும் அடர்த்தியான புதர்கள் வளர்ந்திருந்தன. குளிரால் அவை நடுங்கிக்கொண்டிருந்தன. பட்டாளத்தின் தளபதியின் பாசறையிலிருந்து வேதனை நிறைந்த தொனியில் இசையின் ஓசை வந்துகொண்டிருந்ததைக் கேட்க முடிந்தது.

"அகிமோவுடன் நீங்கள் நீண்ட காலமாக இருக்கிறீர்களா?" என்று கர்னல் கேட்டார்.

"ஆறு மாத காலமாக இருக்கிறேன்" என்று உடனே பதிலளித்தார் அவருக்கு முன்னல் இருந்த இளம் லெப்டி னென்ட். "நான் ப்ளாடூன் கமாண்டராக இருந்துள்ளேன். பின்னர் அகிமோவ் என்னை பட்டாலியன் தலைமைப் பதவிக்கு மாற்றினர்".

"அவர் ஓர் நல்ல கமாண்டரா?"

"நான் அப்படித்தான் நினைக்கிறேன்!" என்று உற்சாக மாக அந்த லெப்டினென்ட் பதிலளித்தார்.

"அந்த டிவிஷனிலேயே அவர்தான் சிறந்தவர். அவர் ஓர் கடற்படை மாலுமியாக்கும்."

அப்பொழுது குண்டுகள் அவர்களின் தலைக்கு சற்று உய ரத்தில் விர்ரென்று பறந்து சென்றன.

"இது மிகவும் அபாயகரமான இடம்", என்று லெப்டி னென்ட் கூறினர். "அகழ் இன்னும் முடிவடையவில்லை. நாம் பூமியின்மீது சுமார் ஐம்பது கெஜம் நடந்து போக வேண்டியிருக்கும்".

"என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பில் அகழ் தொடர்ந்து இருப்பதாகக் கூறப்பட்டுள்ளதே" என்று கர்னல் முணு முணுத்தார்.

அபாயகரமான பகுதியில் அவர்கள் அனேகமாக கை களாலும், முழங்கால்களாலும் தவழ்ந்தபடியே சென்றார்கள். பின்னர் அகழியில் தொப்பென்று குதித்தார்கள். நீர் ஊற்றுப்போல் தண்ணீர் மேலே தெறித்தது. இங்கே இருவர் அவர்களை வழிமறித்தனர். செடிகொடிகளால் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு இயந்திர பீரங்கியின் அருகில் அந்த இரு வீரர்கள் நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்கும் சற்று தொலைவில் சோல்ஜர்களின் கூட்டம் ஒன்று நின்றுகொண்டிருந்தது. அக்கூட்டத்திலிருந்து நட் புறவுடன் கூடிய ஓர் குரல் கேட்டது.

"ஓ, பயல்களே நீங்கள் அங்கேதான் இருக்கிறீர்களா? நியாயமான போர்களைப் பற்றியும், அநியாயமான போர்களைப் பற்றியும் நமது வரலாறு நமக்கு எடுத்துக் கூறுகிறது. பொதுவாக யுத்தத்தைப் பற்றியும், குறிப்பாக தற்போதைய மகத்தான தேசபக்த யுத்தத்தைப்பற்றியும்

அதுதான் நமது கட்சியின் கண்ணோட்டம். ஆம், நமக்குக் கஷ்டமாகத்தான் இருக்கிறது. நம்முடைய குடும்பங்களையும், நம் வாழ்நாள் பூராவும் நாம் ஈடுபட்டுள்ள வேலைகளையும் விட்டு விட்டு நாம் வந்துள்ளோம். நாம் சமாதானம் விரும்பும் மக்கள். ஆனால், நாம் போரில் ஈவிரக்கமின்றி ஈடுபடுகிறோம். கடைசி வரையிலும் நாம் போராடுவோம். ஏனெனில், நாம் நம்முடைய தாய் நாட்டின் விடுதலைக் காகவும் சுதந்திரத்திற்காகவும் போரிட்டுக்கொண்டிருக் கிறோம்; ஏன், சமுதாயத்தின் எதிர்காலத்திற்காகவும் போராடிக்கொண்டிருக்கிறோம்; போலந்து, செக்கோஸ்லோ வாக்யா, பிரான்ஸ், பெல்ஜியம், டென்மார்க், நார்வே ஆகிய நாடுகளில் ஹிட்லரால் அடிமைப்படுத்தப்பட்டுள்ள மக்களின் விடுதலைக்காகவும் போராடுகிறோம்.''

மழை பெய்துகொண்டிருந்த அந்த இரவில் கூறப்பட்ட அந்த சொற்களை அப்படியே பார்த்தால் சாதாரணமான வார்த்தைகளாகவே தோன்றும். ராணுவத்திலுள்ள எந்த அரசியல் ஊழியரிடமிருந்தும் அதைக் கேட்டிருக்க முடியும். ஆனால், அந்த வார்த்தைகள் கூறப்பட்ட தொனி, தாழ்ந்த குரலுடன் அமைதியான முறையிலும், தெளிவான முறை யிலும் அவை மொழியப்பட்ட தன்மை ஒருவருடைய இருதயத்தையே துளைத்துச் சென்றது.

தூரத்தில் அந்த சப்தம் மெள்ள மெள்ள தணிந்தது.

''யார் அங்கே?'' என்று கர்னல் கேட்டார்.

''நம்முடைய அரசியல் ஆலோசகர், கேப்டன் ரெமி ஸோவ்'', என்று லெப்டினென்ட் பதிலிறுத்தார். ''நம் ரெஜிமெண்டிலேயே மிகச் சிறந்தவர். அவர் ஓர் ஆசிரி யருங்கூட.''

''உங்களுடைய வீரர்கள் அனைவரும் சிறந்தவர்களே'', என்று அந்த இருளில் கர்னல் சிரித்தபடி கூறினார்.

அந்த இளம் லெப்டினென்டிடம் உற்சாகமூட்டும் விஷயம் ஏதாவது சொல்ல வேண்டுமென்று அவர் விரும்பி யிருப்பார். அந்த மிகவும் அசௌகரியமான, மழையின் தொல்லை நிறைந்த அரங்கத்தைவிட்டு அவருடைய படையும், மற்றவர்களும் மறுநாள் வேறிடம் போகப் போகிறார்கள் என்று அவரிடம் கூற விரும்பியிருப்பார். ஆனால், அகிமோவுக்குக் கொடுத்த வாக்குறுதி அவருக்கு நினைவிலிருந்தது. எனவே, ஒன்றும் கூறாதிருந்துவிட்டார்.

அத்தியாயம் இரண்டு

அனிஷ்கா பெலோஜ்யரோவா

1

கர்னல் புறப்பட்டுச் சென்றதும், அகிமோவ் தன்னுடைய 'சிக்னல்மென்'னுடன் சிறிது உரையாடினார். விரோதி தொலைபேசியை பழுதடையச் செய்துவிட்டால், காலையில் முதல் வேலையாக, கம்பியில்லாத் தந்தி வலையொன்றை அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று அகிமோவ் அவர்களிடம் தெரிவித்தார். பின்னர், பீரங்கிப் படை கண்காணிப்பாளர்கள் வந்தனர். போர் அரங்கத்தில் சரியான திசை நோக்கி பீரங்கிகளைச் சுடும்படி செய்வதற்காக, அவர்களை, படைகள் இருக்குமிடத்திற்கு அகிமோவ் அனுப்பி வைத்தார்.

இரும்பு அடுப்பின் மீது தேநீர் கொதித்துக்கொண்டிருந்தது. வைக்கோலின் மீது சௌகரியமாகப் படுத்துக்கொண்டு சில அதிகாரிகள் தூங்க முயற்சித்துக்கொண்டிருந்தனர். மேபொரோடா புதிய இசைத்தட்டு ஒன்றை முடுக்கி வைத்தார். இடையிடையே தொலைபேசி மணி அடித்துக்கொண்டிருந்தது. சுரங்கக் கண்ணிகள் விதைக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் எங்கெங்கு நடைபாதைகள் விடப்பட வேண்டும் என்பதுபற்றி அகிமோவ் ரெஜிமெண்ட் எஞ்ஜினீயருடன் விவாதித்துக்கொண்டிருந்தார். திடீரென்று வெளியிலிருந்து ஓர் பெண்ணின் பலத்த கணீரென்ற சிரிப்

பொலி கேட்டது. எல்லோரும் திரும்பிப் பார்த்தனர். மற்றொரு முறை சிரிப்பொலி கேட்டது. இந்தத் தடவை அது மிகவும் அருகிலேயே கேட்டது. கதவு திறந்தது, படுதா விலக்கப்பட்டது; வாசற்படியில் சிரித்துக்கொண்டு நிற்கும் ஓர் பெண் காணப்பட்டாள்.

''ஓ, இது மிகவும் வேடிக்கையான விஷயம்!'' என்று அவள், தன் முகத்தின் மீது இருந்த மழைத் துளிகளைத் தன் பெரிய மேலங்கியின் கையால் துடைத்தவண்ணம், சிரித்துக் கொண்டே கூறினாள். ஒரு கணம் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். பாதுகாப்புக் குழிக்குள் (பாசறையில்) இருந்த ஆட்களை சாந்தமாக, வியப்புடன் பார்த்தாள். ''இது போன்ற இசையை இங்கு நான் என்றும் எதிர்பார்த்திருக்க மாட்டேன்'' என்று கூறிக்கொண்டே அவள் கிராமபோன் இருந்த இடத்தின் அருகில் சென்றாள். திடீரென்று அவள் கடுமையாகவும், சிந்தனை நிறைந்தவளாகவும் மாறினாள். இசைத்தட்டு முடிந்ததும், ''ஓ, இங்கு சாஸ்திரீய சங்கீதப் பிரியர்கள்கூட இருக்கிறார்கள்!'' என்று முணுமுணுத்தாள்.

பிறகு தான் அவள் அங்கிருப்பவர்களின் சௌக்கியத் தைப்பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள்.

''நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? இங்கே தலைமைப் பொறுப்பில் இருப்பது யார்?''

''நான்தான்,'' என்று தன்னுடைய பெரிய தலையை அவள் பக்கம் திருப்பிய வண்ணம், நிதானத்தை வரவழைத் துக் கொண்டவராய் அகிமோவ் கூறினார்.

அவருடைய பதிலில், சினேகமற்ற தன்மை இருப்ப தாக அந்தப் பெண் உடனே உணர்ந்துகொண்டாள். அவ ளுடைய கண்கள் பிரகாசித்தன. ஆயினும் அவள் வழக்கம் போல் ''ராணுவ மொழிப்பெயர்ப்பாளர் பெலோஜ் யாரோ வா'' என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

அவளுக்கு யாதொரு மறுமொழி கூறாமலேயே அகி மோவ் எஞ்சினியர் பக்கம் மீண்டும் திரும்பினார். அந்தப் பெண், ட்ரோட்ஸ் அருகில் சென்று, ''வேவு பார்ப்பவர்கள் வந்திருக்கிறார்கள்'', என்று கூறினாள். பின்னர் அவள் கணப் புக்கு எதிரில் போய் அமர்ந்தாள்.

அவள் வந்ததிலிருந்து ஏற்பட்டிருந்த சிறிது சங்கடமான நிலைமை அகன்றது. எஞ்சினியருடன் அகிமோவ் தன் சம்பாஷணையைத் தொடர்ந்தார். எந்தெந்த இடங்களிலிருந்து சுரங்க வெடிகளை அகற்றவேண்டும் என்று பேசி முடித்தார். முன்னைக் காட்டிலும் சிறிது உரத்த குரலிலேயே அவர் பேசினார். அதுவரையிலும் வைக்கோலின்மீது அரைத் தூக்கத்துடன் படுத்துக்கொண்டிருந்த அதிகாரிகள் எழுந்திருக்கவில்லை; ஆனால் அவர்களின் அரைத் தூக்கம் ஓடி ஒளிந்துவிட்டது போல் தோன்றியது. கணப்பில் தன் கைகளை வெது வெதுப்பாக்கிக் கொண்டே, அவள் தாழ்ந்த குரலில், "அந்த இசைத்தட்டை மீண்டும் வைக்கிறீர்களா? இங்கு ஒரு நல்ல ஆசாமி இருக்கிறார்," என்று மேபொரோடாவின் காதில் கூறினாள்.

மேபொரோடா தலையசைத்தார்; மீண்டும் கிராமபோனை முடுக்கிவிட்டார். புகழ்மிகு நார்வீஜிய இசை அமைப்பாளரின் இனிமையான சங்கீதம் மீண்டும் அந்த அறையில் பரவி வசீகரித்தது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வேலையிலேயே கண்ணுங் கருத்துமாக இருப்பதாகக் காணப்பட்டது. ஆயினும் அனைவரும் அந்தப் பெண்ணை கவனித்துக்கொண்டிருந்தனர். எழில்நிறைந்த இளமைததும்பும் நீள்வட்டமான முகம்; அவ்ளது பெரிய மாநிறமான கண்கள் அவளது கண் இமைகளின் அசாதாரணமாக நீளமாயிருந்த ரோமங்களின் நிழலில் இருப்பதுபோல் காணப்பட்டன. அவைகளில்லாவிட்டால், ஆழங் காணமுடியாத அவளுடைய இளமையின் ஒளியும், வாழ வேண்டுமென்ற துடிப்பும் அவளது கண்களில் அனேகமாக துடுக்குத்தனமான முறையில் காட்சி அளித்திருக்கும். சிறிது தூக்கலாக இருந்த அவளது மோவாய்க்கட்டை, அவளது கம்பீரமான பெண்மை நிறைந்த முகத்திற்கு ஒரு வீரமான தோற்றத்தைக் கொடுத்தது; அவளுடைய உயரமான குதி உடைய பூட்சுகள்-மற்றவர்களுடைய பூட்சுகளுடன் ஒப்பிட்டால் மிகவும் சிறியவையாகவே காணப்பட்டன. அவளைப் பற்றிய எல்லாமே, அங்கு அவளைச் சுற்றியிருந்த ஆண்களிடையே ஒரு கவர்ச்சியை ஏற்படுத்துவதுபோல் தோன்றியது.

இதற்கெல்லாம் ஒரே காரணம், அவர்கள் ஒரு பெண்ணைப் பார்த்து அவ்வளவு நீண்ட காலமாய்விட்டதுதான்.

அகிமோவைப் பொறுத்தமட்டிலும், அவர் அவளை கவனிக்காதது போல் இருந்ததெல்லாம் வெறும் பாவனையே; உண்மையில், சில நிமிஷங்களுக்கு முன்னுல்தான், அவர், எங்கு திரும்பினுலும் அந்தப் பெண் மொழிபெயர்ப்பாளரை பற்றிய பேச்சாகவே இருக்கிறது என்று புகார் செய்ததை அவர் உடனேயே மறந்துவிட்டார். அவளைப்பற்றி இன்னும் அதிகம் ஏன் கூறப்படவில்லை என்றுகூட அவர் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தார். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் அவரது மனதிற்குள் ஏதோ அடித்துக்கொண்டது. அவள் யாராக இருந்த போதிலும், அவளுடைய பெயர் எதுவாக இருந்தபோதிலும், இலையுதிர் காலத்தின் அந்த இருள் சூழ்ந்த நேரத்தில் கணீரென்ற சிரிப்பொலியுடன் தோன்றிய அந்தப்பெண்தான் தான் எப்பொழுதும் கனவு கண்டு வந்தது என்று உடனேயே அவர் உணர ஆரம்பித்தார். அந்த இராணுவ மறைவிடம், முடிவற்ற நீர்க்கால்கள், சிதறுண்டு கிடக்கும்கிராமங்கள், உழவு இயந்திரத்தால் உழப்பட்ட நீர் நிறைந்த சமவெளிகள் உட்பட உலகம் பூராவுமே அவருக்கு ஒரு புதிய பிரகாசத்துடன் தோன்றியது. ஒரு தேவதைக்கதையில் காண்பதுபோல் அவை எல்லாம் பல்வேறு வர்ணங்களிலும், முற்றிலும் இதுவரையில் காணுத ஒரு தோற்றத்துடனும் காணப்பட்டன. அல்லது ஒரு சமயம் அவர்தான் தன்னுடைய முந்திய மனுேநிலையை மாற்றிக் கொண்டாரா? தன்னுடைய இயற்கையையும் உடல் நிலையையும் இதுவரையிலும் இல்லாத முறையில் மாற்றிக் கொண்டாரா? மலையில் ஏறும்போது ஏற்படும் ஓர் புதிய மனுே நிலையை அடைந்துவிட்டாரா? அல்லது ஓர் மிகவும் உயர்ந்த சிகரத்தில் ஏறியபின் ஓர் புதிய வாயுமண்டலத்தில், சுலபமாகவும் அதே சமயத்தில் மூச்சுவிடுவதற்கு முன்னைவிட அதிகக் கஷ்டமாகவும் உள்ள வாயுமண்டலத்திற்குள் பிரவேசித்தவனைப்போல் மாறிவிட்டாரா?

அவரிடம் அந்த ஒரு நிமிஷத்தில் ஏற்பட்ட மனக்கிளர்ச்சி-அவர் தான் இனி ஒருபோதும் பதினெட்டு வய

துடையவராக இல்லை, ஆனால் சுமார் முப்பது வயதடைந்தவரைப் போல் வாழ்க்கையைப் பற்றிய அறிவும், பெண்களைப் பற்றிய அனுபவமும் கொண்டவராய் மாறியது-தான் அசட்டுத்தனமாயும், இடம், காலம்தெரியாதவராய் இருப்பதுமட்டுமன்றி, பெரிய ஆபத்தை வரவழைத்துக்கொள்ளும் நிலையில் இருப்பதாகவும் உணர்த்தியது. தன் முகத்தோற்றத்தையும், தன்நெஞ்சின் உணர்ச்சிகளையும் கட்டுப்படுத்திக் கொள்ளும் பழக்கமுடையவராக அவர் இருந்தார். ஆனால் இப்பொழுது தனக்கு வெளியிலுள்ள ஏதோ ஒரு சக்தியின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி விடுவோம் என்ற, அதைத் தன்னால் எதிர்த்து நிற்க இயலாமற்போகுமென்ற உணர்ச்சியால் உந்தப்பட்டு, தான் ஈவிரக்கமற்றவனாக இருக்கவேண்டுமென்று அவர் முடிவுசெய்துகொண்டார், எனவே எதுவரினும் சரி, தன்னைத் தானே கல்லாக்கிக்கொள்வதுதான் முதல் முதலாகச் செய்யவேண்டியது, என்று முடிவுசெய்துகொண்டார்.

இவ்வாறு முடிவுசெய்துகொண்ட அவர், உயர்ந்த பதவியிலிருப்பவர் யாராவது அந்தப் பெண்ணுக்குப் பின் பலமாக இருப்பார்; அல்லது சுருக்கமாகக் கூறவேண்டுமெனில், உயர்ந்த பதவியும் செல்வாக்கும் உள்ளவரும், அவளை கவனித்து உதவும்படி ரெஜிமெண்ட் கமாண்டரையே நிர்ப்பந்தப்படுத்தும் அளவுக்கு செல்வாக்கு உள்ளவருமான ஒருவர் அவளுடைய காதலனாக இருக்கலாம்; என்ற தன்னுடைய முந்திய ஊகத்திற்கே மீண்டும் அவர் வந்தார். "அவர் யாராக இருக்கமுடியும்?" என்று அவர் தனக்குத் தானே கேட்டுக்கொண்டார். அந்த மனிதனைத் தான் வெறுக்கவில்லை. அல்லது அவர் யாரென்று தெரிந்துகொள்ளவும் விரும்பவில்லை என்று தான் நன்றாக உணர்ந்திருந்த போதிலும் கூட, அவர்மீது வெறுப்புணர்ச்சியை உண்டாக்கிக்கொள்ள முயற்சித்தார்.

ஏராளமான ஆண்களுக்கிடையில் அவள் ஒருத்தி மட்டுமே பெண்ணாக இருப்பதின் காரணமாகத்தான் அவள் அவ்வளவு கவர்ச்சியாகவும், எழில் நிறைந்தவளாகவும் இருக்கிறாள், என்ற முடிவுக்கு அவர் வந்தார். அவளுடைய கவர்ச்சி பொதுவாகப் பெண்களுக்குரியதே; ஒரு பெண்ணின்

உருவத்தைக் கண்டதும் இயற்கையாகவே வசீகரிக்கப்படுவது தான் இவள் விஷயத்திலும் ஏற்படுகிறது என்ற முடிவுக்கு அவர் வந்தார். அவளை ஒடெஸ்ஸாவிலோ அல்லது செபாஸ்ட பூலிலோ தெருவில் கண்டிருந்தால், ஒருக்கால் அவளை இரண்டாவது தடவை ஏறெடுத்துப் பார்த்திருக்க மாட்டேன், என்று அவர் தனக்குத்தானே நியாயம் கற்பித்துக்கொண்டார். ஏனெனில் அப்பொழுது பெண்ணுக இருப்பது அவள் ஒருத்தி மட்டுமல்ல, ஆனல் பல பெண்களில் அவளும் ஒருத்தியாக இருப்பாள், மற்றவர்களைக் காட்டிலும் எவ்விதத்திலும் மேம்பட்டவளாக இருக்கமாட்டாள்; ஒருக்கால், மற்றவர்களைப் போன்ற எழிலுடன்கூட இருக்க மாட்டாள், என்று தனக்குத்தானே கூறிக்கொண்டார்.

அதுவுந்தவிர, அப்பொழுது அவள் குனிந்து மேபொரோடாவிடம் ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருந்தாள். எனவே ஒருசமயம், அவள் ஆண் சமூகத்துடன் பழக்கப்பட்டவளாக இருப்பாள்; யாரிடம் வேண்டுமானலும் இங்கிதமாக நடந்து கொள்வதற்குத் தயாராக இருப்பாள், என்றெல்லாம் அவருடைய கற்பனை சிறகடித்துப் பறந்தது. மற்ருெரு விஷயமென்னவெனில், அவள் உள்ளே வந்தபொழுது, ''இது ரொம்ப, ரொம்ப வேடிக்கையாக இருக்கிறதே'', என்று சொல்லிக்கொண்டு வந்தாள். இது அவள் சிறந்த பண்புகளை உடையவள் என்பதை நிரூபிக்கவில்லை. ஆனல் துறைமுகத்தில் ஆண்களை மயக்குவதற்கு மினுக்கி, தளுக்கிப் பேசும் பெண்களின் போக்காகவே இருந்தது. ஆச்சரியம் என்னவெனில் இது குறிப்பாக அவரிடம் எரிச்சலை உண்டாக்கியது; அதேசமயத்தில் அதற்கு நேர்மாறுன முறையில் அவளுடைய நடத்தை அவருக்கு மகிழ்ச்சி தரக்கூடியதாகவும் இருந்தது; ஏனெனில், அவர் மக்களிடத்திலே அதிகம் பழகுகிறவராக இருந்தபோதிலும், ஏராளமான புத்தகங்களை அவர் படிக்க முடிந்துள்ளது. நிறையப்படித்து அதிகம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பது அவரது எண்ணம். சோவியத் அரசின் கீழ் இளம்பிராயத்தினர் கலாச்சாரத் துறையில் மிகவும் பின்தங்கியிருக்கின்றனர் என்பதையும், அதனுல்தான் இளம்பிராயத்தினரின் கல்விக்கு

சோவியத் அரசாங்கம் ஏராளமான சலுகைகள் கொடுத்து ஊக்க மூட்டி வருகிறது என்பதையும் அவர் உணர்ந்திருந் தார். இளம்பிராயத்தினரிடம் கட்டுப்பாடின்மை, சோம் பேறித்தனம் நிறைந்திருப்பதாகவும், அவர்கள் உபயோக மற்றவர்களாக இருக்கின்றனர் என்றும் அவர் கருதினர்.

மேலும், வெளித் தோற்றத்தில் அவள் எவ்விதத்திலும் சாதுர்யமான பெண்ணுகக் காணப்படவில்லை. அவள் எதைக் கண்டு அவ்வாறு சிரித்தாள்? சங்கீதம் அவளிடத்தில் ஏன் அத்தகைய விஞேதமான, கீழான பிரதிபலிப்பை ஏற்படுத்த வேண்டும்?

தன்னைச் சுற்றிலும் இத்தகைய, இன்னும் இதுபோன்ற மனக்கோட்டைகளை அகிமோவ் எழுப்பிக்கொண்டார்.

இதற்கிடையில், பதட்டமும், சிக்கல்களும் நிறைந்த வாழ்க்கை அதன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. நடவ டிக்கையில் இறங்கவேண்டிய நேரம் தங்கு தடையின்றி வேகமாக நெருங்கிக்கொண்டிருந்தது. புதிய பிரச்சினைகள் தோன்றிக்கொண்டே யிருந்தன. உத்திரவுகள் கொடுத்துக் கொண்டிருந்தபோதே, அகிமோவ் தன்னைத்தானே கவனித் துக்கொண்டிருந்தார். ஒரு அந்நியனைப்போல் தன்னுடைய குரலைத் தானே கூர்ந்து கவனித்துவந்தார்; எப்பொழுதும் போலவே அமைதியாக ஆலோசனை கேட்டுவந்தார். ஏதோ முக்யமான விஷயத்தைப் பற்றிச் சிறிது நேரம் தான் சிந்தித்துக்கொண்டிருப்பதாகவும், பின்னர் வழக்கமாக அவருக்குள்ள தெளிவுடன் ஒரு முடிவுக்கு வருவதாகவும், எப்பொழுதும் போன்ற பூர்ண அமைதியுடன் மற்றவர் களுக்கு அதுபற்றிக் கூறுவதாகவும் தானே உணர்ந்தார்; தான்எழுந்திருப்பதாகவும், தொலைபேசி யிருக்குமிடத்திற்குச் செல்வதாகவும், ரெஜிமெண்டின் கமாண்டரிடம், அவரது உதவி அதிகாரியிடம், அல்லது குறிப்பிட்ட டிவிஷனின் பீரங்கிப்படை தளபதியிடம் சகலவிதமான அதிமுக்யமான விபரங்களைப் பற்றிப் பேசுவதாகவும் அகிமோவ் உணர்ந் தார்.

எப்பொழுதும் போலவே, அகிமோவ் எல்லாக் காரியங் களையும் செய்து வந்தார். அதேசமயத்தில் அந்தப்

பெண்ணைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதின்மீதும் ஒரு கண் வைத்திருந்தார். தன்னுடைய ஏற்பாடுகளைப் பற்றிப் பேசி முடித்துவிட்ட அந்த பீரங்கிப்படை அதிகாரிகள், அந்தப் பெண்ணுடன் உரையாடிக்கொண்டு இன்னும் அங்கேயே இருப்பதை அகிமோவ் பார்த்தார். ஒரு அழகான பெண்ணின் முன்னிலையில் இருக்கும்போது ஆண் களின் முகங்களில் வழக்கமாக ஏற்படும் அசாதாரணமான தோற்றம் அவர்களின் முகங்களில் காணப்பட்டது. எப்பொழுதும் அரட்டை அடித்துக்கொண்டும், அடக்க ஒடுக்கமில்லாமலும் இருப்பவரான கேப்டன் ட்ரோஸ்ட், அந்தப் பெண் மொழிபெயர்ப்பாளரின் அருகில் இருக்கும் போது மிகவும் நாணமுடையவராகக் காணப்பட்டார். எஞ்சினியர் பிர்சோவ்கூட, அவருக்கு வயதாகிக்கொண் டிருந்த போதிலும்கூட, அவளிடத்தில் நயமாகப் பேசிக் கொண்டிருந்தார். கருமி என்று பெயர் பெற்ற மேபொ ரோடாவோ அவளுக்கு சாப்பிடுவதற்கு வறுத்த கரித் துண்டங்களைக் கொடுத்துக்கொண்டிருந்தான்.

வேறு எதையும்விட, அகிமோவுக்கு அதிக வேதனை தந்த விஷயம், போர் அரங்கத்திலிருந்து வந்த கேப்டன் ரெமிஸோவின் நடத்தைதான். தன்னுடைய சட்டையின் இடது ஜேபியில், கட்சி உறுப்பினர் அத்தாட்சிக் கார்டுடன் தன் மனைவி மரியா அலெக்ஸியேவ்னாவின் புகைப்படத் தையும் வைத்துக்கொண்டிருந்த அவர்-அவரை "சந்நியாசி" என்று இதர அதிகாரிகள் பரிகாசமாக அழைப்பார்கள்— அதிக அடக்கமாக நடந்துகொண்டிருக்க வேண்டும். ஆனால், அவரும்கூட புதிய மொழிபெயர்ப்பாளரால் வசீகரிக்கப்பட்டு விட்டார். அதை மறைத்துக்கொள்வதற்கும் அவர் முயற்சி செய்யவில்லை. ரெமிஸோவ் அசட்டுச் சிரிப்புடன் (அகிமோவ் இவ்வாறு நினைத்தார்), தன்னுடைய மனைவியின் புகைப் படத்தை அந்தப் பெண்ணுக்குக் காட்டிக்கொண்டிருந்த தையும், பின்னர் அவளுக்கு மூன்று சர்க்கரைக் கட்டிகளைக் கொடுத்ததையும், அவள் சூடான தேநீரைப் பருகிக்கொண் டிருக்கும்போது அவர் (ரெமிஸோவ்) சிரித்துக்கொண்டே யிருந்ததையும் அகிமோவ் தன் ஓரக்கண்ணால் பார்த்து

கவனித்துக்கொண்டேயிருந்தார். இதற்குள் ரெமிஸோவ் சர்க்கரை முழுவதையும் காலி செய்துவிட்டார். இது அகிமோவுக்கு படுகோபத்தை உண்டாக்கியது.

ரெமிஸோவைக் கொன்றுவிடுவதைப் போன்ற ஓர் பார்வையுடன், "வேண்டாமென்று சொல்லுவதற்குரிய மரியாதை அவளுக்கிருந்திருக்க வேண்டும்", என்று அகிமோவ் தனக்குள் கூறிக்கொண்டார்.

அந்த "இளம் பெண்"ணைப்பற்றி இவ்வளவு தடபுடல் நடப்பதைப்பற்றி மிகவும் மன வெறுப்படைந்தார். தன் இருக்கையிலிருந்து எழுந்து "பேசியது போதும்; உங்களுடைய படை வரிசைகளுக்குப் போங்கள்" என்று அனேகமாகக் கூச்சலிடும் பாவனையில் கூறினார்.

பீரங்கிப்படை அதிகாரிகள் உடனே எழுந்து, வேண்டா வெறுப்பாகச் சென்றனர். சமிக்ஞை கொடுப்பவர்கள் (சிக்னல் மென்) ஆரம்பத்தில் கொஞ்சம் தயங்கினார்கள். செய்தித் தொடர்பைப்பற்றி அகிமோவிடம் சில நிமிஷ நேரம் பேசிவிட்டு, அவர்களும் சென்றுவிட்டனர்.

தன்னுடைய பஞ்சடைத்த ராணுவ உடையைத் தரித்துக்கொண்டே, "நீங்கள் உங்கள் விருப்பம் போல் எங்கு வேண்டுமானாலும் போகலாம்", என்று அங்கு எஞ்சியிருந்தவர்களை நோக்கிக் கூறினார். பின்னர் அவர் "நான் படை வரிசைகள் இருக்கும் இடங்களுக்குச் செல்கிறேன்" என்று மேபொரோடாவிடம் கூறினார்.

அப்பொழுதுதான் ஜெர்மானியர்கள் வழக்கம்போல சுட ஆரம்பித்தனர். ஆனால் அது நீண்ட நேரம் நீடிக்கவில்லை. திடீரென்று ஆரம்பமானதைப் போலவே அது திடீரென்று நின்றுவிட்டது. ஜெர்மானியர்கள் எப்பொழுதும் இப்படித்தான் செய்வது வழக்கம். ஆனால், தங்கள் பாசறையின்மீது குண்டுகள் பொழியப்படலாம், என்ற பயம் அகிமோவைப் பீடித்தது.

சுடுவது நின்றதோ இல்லையோ, கதவு படீரென்று திறந்தது. கர்னலும், ஒரெஷ்கினும் உள்ளே நுழைந்தனர். விழுந்தடித்துக்கொண்டு வந்தனர் என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

"ஒரு பீரங்கி குண்டினிடமிருந்து மயிரிழையில் தப்பி ேனோம்." என்றார் கர்னல். அப்பொழுது அவர் உணர்ச்சி வயப்பட்டவராகவும், மிகவும் இளமையாகவும் காணப் பட்டார். முன்பு கவர்ச்சியாக உடையணிந்து காணப்பட்ட தெல்லாம் இப்பொழுது மாறிவிட்டது. உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை மண்ணாலும், சேறுலும் பூசப்பட்டுக் காட்சியளித்தார்.

தலைநிமிர்ந்தபோது, அந்த யுவதியைக் கண்டார். உடனே ஆச்சரியத்துடன் "அனிஷ்கா! நீ எப்படி இங்கு வந்தாய்?" என்று கேட்டார்.

அந்த யுவதி அவரை உற்றுப் பார்த்தாள். மகிழ்ச்சி பொங்க, தன் கரங்களை அவருடைய கழுத்தைச் சுற்றி அணைத்த வண்ணம்: "செமியோன்போமிச், என் அன்பே, நீங்கள் இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?"

"நான் அதுபற்றி பிறகு உனக்கு கூறுகிறேன். கொஞ்சம் பொறுமையாயிரு", என்று முணுமுணுத்த கர்னல். அருகி லுள்ள அதிகாரிகளைப் பார்த்து நாணத்தால் முகம் சிவந் தார். "நீ, போர்முனையில் இருக்கிறாயா? அல்லது இங்கேயா? உன்னுடைய அப்பா எங்கே?", என்றார்.

அந்தப் போர் முனை மறைவிடத்தில் (பாசறையில்) ஒரு போர் துவங்குவதற்கு முன்னால், உறுதியும், திட சித்தமும் வெளிப்படும் முகத்துடன் கூடிய அந்தக் கர்னல் கூறிய "அப்பா" என்ற அந்த சொல் நம்ப முடியாத அளவிற்கு அந்த இடத்திற்குப் பொருத்தமற்ற சொல்லாகவும், உணர்ச்சி வயப்பட்ட சொல்லாகவும் இருந்தது. அந்த சொல், சேவையும், பொதுவான கடமையையும் தவிர வேறு எதனாலும் பிணைக்கப்படாத அங்கிருந்தவர்களையெல்லாம் ஒருவரையொருவர் வேறு விதத்தில் பார்க்கச் செய்தது. ஒருவரையொருவர் மனிதர்களாக—பந்தபாசமுடையவர்க ளாக, தங்கள் தகப்பன்மார்களையும், அண்ணன்மார்களையும், பாட்டிமார்களையும் இதர உறவினர்களையும் எங்கோ வெகு தூரத்தில் விட்டு வந்திருப்பவர்களாக ஒருவரையொருவர் பார்க்கச் செய்தது.

பாசறையைவிட்டுக் கிளம்பும்போது அகிமோவ், கர்னலை முதல் தடவையாக அனுதாபத்துடன் பார்த்தார். அவரைப் பற்றித் தான் ஒருக்கால் தவருக நினைத்துவிட்டேனே என்று கூட நினைத்தார். வயதான அந்த ஆசாமி (கர்னல்) ஒரு சமயம் மென்மையான மனது படைத்த ரொம்ப நல்ல மனித ராக இருக்கலாம். அந்த யுவதிக்கு ஒரு தகப்பனர் இருக் கிருர்—பார்க்கப்போனுல் இது இயற்கையானது, சர்வ சாதாரணமானது—என்ற விஷயமும் அவருக்கு எப்படியோ மிகவும் மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகவும், முக்கியமானதாக வும் பட்டது. இவ்விஷயம், அவளைப்பற்றி முன்பு தவருக நினைத்ததற்கு இடமில்லாமல் செய்துவிட்டது என்று அவர் நினைத்தார் போலும். எனவே இந்த நிலைமை ஏற்பட்டது பற்றி அகிமோவ் மனச் சலிப்பு அடைவதற்குப் பதிலாக, மகிழ்ச்சி அடையும்படியாக நிர்ப்பந்திக்கப்பட்டார்.

2

அனிஷ்கா பெலோஜ்யரோவா பாசறைக்குள் நுழை யும்போது சிரித்ததற்குக் காரணம் இதுதான். காட்டுப் பிர தேசத்தில் வேவு பார்ப்பவர்களுடன் தான் இருந்தபோது, முதலில் தொலைவிலும், பின்னர் நெருங்கி நெருங்கியும் வந்த இசையை அவள் கேட்டபோது, அதன் ராகம் அவளுக்கு மிகவும் பரிச்சயமானதாக இருந்தது. யுத்தத்திற்கு முந்திய காலத்தை, மாஸ்கோவை, அவளுடைய இசைப் பாடங்களை, சமாதான காலத்துடன் சம்பந்தப்பட்டவைக ளனைத்தையும் அவளுடைய நினைவுக்குக் கொண்டுவந்தது. அந்த இசை வந்துகொண்டிருந்த அந்த இடத்தை அவள் நெருங்க, நெருங்க, அதிக உத்வேகமடைந்தவளானுள். அவள் நின்று, கூர்ந்து கேட்டாள். "யார் அதை இசைக் கிருர்கள்?" என்று வாய் திறந்து அவளால் கேட்காமலிருக்க முடியவில்லை.

மையிருட்டான அந்த நேரத்தில் திடீரென்று, "அவர் கள் அன்யூட்டாவின் நடன இசையை இசைத்துக்கொண் டிருக்கிருர்கள். நம்முடைய பட்டாலியன் கமாண்டரின் (படைத் தளபதியின்) பாசறையில்தான் இது நடைபெறு

கிறது'', என்று ஒரு படை வீரனின் அமைதியான, அதிகார பூர்வமான குரல் ஒலித்தது.

உடனே அனிஷ்கா அனிட்ராவின் நடனத்துக்கு கிரேக்க இசை கூட்டுவதை அறிந்துகொண்டாள். அதை ரஷ்ய பாணியில் அந்த சோல்ஜர் பெயரிட்டழைத்ததைக் கண்டு அவள் மேலும் மகிழ்ச்சி பொங்கச் சிரித்தாள். மேலும் பாசறைக்குச் செல்கின்ற வரைக்கும் வழி நெடுக, அவள் தன் அவயவங்களெல்லாம் குலுங்கும் வண்ணம் உரக்க சிரித்துக் கொண்டே வந்தாள். அந்த யுத்த சூழ்நிலையிலும், ஒரு போருக்கு முந்தி நிலவும் பரபரப்பான அமைதியிலும் அந்த சிரிப்பு மிகவும் பொருத்தமற்றதாக இருந்தது.

தன் தந்தையின் பழைய நண்பரும், தங்கள் குடும்பத்தின் தூரத்து உறவினர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டவருமான கர்னல் வெர்ஸ்டோவ்ஸ்கியைச் சந்தித்தது அவளுடைய உணர்ச்சிகளை உச்சநிலைக்கு உயர்த்தியது. அத்துடன் கிரீக்கின் இசையும் சேர்ந்ததானது உலகத்தைப்பற்றிய பளிங்கி போன்ற நினைவை அவளிடம் தூண்டியது. அந்த உலகம் அதுவரையிலும் அவளுக்கு மிகவும் அற்பமாகவே பட்டது. ஆகவே, வரையறைக்குட்பட்டதாகவும், ஓரளவு கொச்சையாகவும் பட்டது. ஆனால் தற்பொழுது போர்முனையில் உள்ள நிலையில், அப்படியொன்றும் மோசமாக இல்லை என்று அவளுக்குப்பட்டது.

சமீபத்திய சம்பவங்களைப்பற்றி, குறிப்பாக தன் தந்தையுடன் அவளுக்கு ஏற்பட்ட கருத்து வேற்றுமை பற்றி அனிஷ்கா சுருக்கமாக எடுத்துரைத்தாள். இதைக் கேட்ட செமியோன் போமிச் கடிந்துகொண்டார். மனச் சஞ்சலத்துடன் பெருமூச்சு விட்டார்.

அனிஷ்காவின் தகப்பனார்-அலெக்ஸாண்டர் மோடெஸ்டோவிச் பெலோஜ்பரோவ்-புகழ்பெற்ற ஒரு டாக்டராவார். வைத்தியப் படையில் ஓர் லெப்டினெண்ட் ஜெனரலாக இருந்தார். 1941-லிருந்து தென்பகுதியிலிருந்த ராணுவம் ஒன்றில் பிரதம சர்ஜனாக இருந்தார். அனிஷ்கா மாஸ்கோவில் தனிமையில்தான் இருந்தாள். அவளுடைய அன்னை இறந்து நீண்டகாலமாயிற்று.

அயல்மொழிக் கழகத்தின் ஜெர்மன் பிரிவில் அவள் இரண்டாம் வருட மாணவியாகப் படித்துக் கொண்டிருந்தாள். அந்தக் கழகத்தில் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் உட்பட அனைவரும் மாஸ்கோவைச் சுற்றிலும் அகழிகள், டாங்கி-எதிர்ப்புக் குழிகள் ஆகியவை வெட்டுவதில் ஈடுபட்டனர். பின்னர், அக்டோபர் மாதத்தில் கிழக்குப் பிராந்தியத்திற்கு வெளியேறிச் சென்றனர். அனிஷ்கா வால்கா நதிக்கரையில் உள்ள ஓர் பெரிய நகரத்திற்குப் போகும்படி பணிக்கப்பட்டாள். அங்கு அவள் மிகவும் மனவேதனை அடைந்தாள். ஏனெனில், அந்தக் கழகத்தில் நீடித்திருப்பது பயனற்றதாகவும், தனக்கே அவமானகரமானதென்றும் அவளுக்குப்பட்டது. தன்னுடைய சகமாணவர்களைக் காட்டிலும் அவளுக்கு ஜெர்மன் மொழி மிக நன்றாகத் தெரியும். ஏனெனில் ஜூரிச் பல்கலைக்கழகத்தில் வைத்தியக்கல்வி கற்ற அவளுடைய அன்னை, சிறு பிராயத்திலிருந்தே அனிஷ்காவுக்கு ஜெர்மன் மொழி கற்றுக்கொடுத்துவந்தாள். ஒரு சிறந்த தாயின் உறுதியுடனும், கட்டுதிட்டங்களுடனும் அனிஷ்காவை வளர்த்து வந்தாள். எனவே, அனிஷ்கா ஜெர்மன் மொழியில் லாகவமாகப் பேசும் திறமை பெற்றாள். அவளுடைய உச்சரிப்பைக் கண்டு ஜெர்மன் மொழி நிபுணர்களும் கூட ஆச்சரியப்பட்டனர்.

அந்தக் கழகத்தின்மீது உண்மையாகவே அனிஷ்காவுக்கு அவ்வுளவு வெறுப்பு ஏற்பட்டது. தான் அந்தக் கழகத்திற்குள் வந்தது தனக்கு ஏற்கனவே ஜெர்மன் மொழி தெரியும் என்ற ஒரே காரணத்தினால்தான், என்பதையும், தான் சிரத்தை எடுத்து ஆழ்ந்து நுட்பமாகப் பயிலுவதற்கு முடியாத அளவு கட்டுப்பாடு இல்லாமலும், சோம்பேறித்தனமாக இருப்பதையும் அவள் அப்பொழுது பூர்ணமாக உணர்ந்தாள். தான் அந்தக் கழகத்தில் சேருவதற்குத் தன் தகப்பனார் எதிர்ப்புத் தெரிவித்தது எவ்வளவு சரியானது என்பதை இப்பொழுது உணர்ந்தாள். ''கணவன் மார்களைத் தேடியலையும் பக்குவமடையாத இளம் பெண்களின் உறைவிடம்'', என்று அவள் தகப்பனார் அந்தக் கழகத்தை வர்ணித்திருந்தார். தன்னுடைய ஒரே மகள் ஓர் டாக்டராக

வேண்டுமென்று அவர் விரும்பினர். ஆயினும், அவள் தன் கருத்துப்படியே நடந்தாள். இப்பொழுது தான் செய்தது எவ்வளவு தவருனது என்ற எண்ணம் அவளையே வாட்டி வதைக்கிறது.

யுத்தம் ஆரம்பமானதும், படையெடுப்பாளர்களின் மீது அவளுக்கு உண்மையாகவே சொல்ல முடியாத வெறுப்பு ஏற்பட்டது. லட்சோப லட்சக்கணக்கான மக்களுக்கு ஏற்பட்ட சொல்லொணுத் துன்பம், தன்னுடைய கடமை எதில் இருக்கிறது என்பதை முதல் தடவையாக அவளுக்குத் தெளிவாகக் காட்டியது. எங்கு கஷ்டங்கள் அதிகமோ, அங்குதான், தான் வேலை செய்யவேண்டிய இடம் என்று அவள் முடிவு செய்துகொண்டாள். இந்தக் கருத்தோட்டங்கள், மாணவர்களின் மாறுதலற்ற ஒரே மாதிரியான வாழ்க்கை அற்பமானதென்று அவளுக்கு உணர்த்தியது. மேலும் இதனல், தன்னுடைய இதர சகாக்கள் ஆடம்பரமான உடைகளை அணிந்து கொள்வதிலும், வாலிபர்களுடன் சுற்றுவதிலும் காலங்கழிப்பது—இது முன்னைக்காட்டிலும் குறைவாக இருந்தபோதிலும்— அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதை வெறுக்க ஆரம்பித்தாள். ரெய்னர் மரியா ரில்கி, அன்ன அக்மடோவா ஆகியோரின் கவிதைகளைப் படித்து ஆஹா, ஊஹூ என்று இளம் பிராயத்தினர் பரவசமடைவதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. பொதுவான லட்சியத்திற்குத் தன்னுடைய சிறிய பங்கையும் ஆற்றவேண்டும் என்று உணர்வு பூர்வமாக விருப்பங்கொண்ட அனிஷ்கா, இயற்கையாகவே தன்னுடைய சொந்தக் குறைபாடுகளையும், பிறருடைய குறைபாடுகளையும் மிகைப்படுத்திக் கொண்டாள். ஆனல், இது எதிர்பார்க்க வேண்டியதே. இதனல் பலனும் கிடைத்தது.

தங்களுடைய சொந்த நகரங்களிலிருந்தும், கிராமங்களிலிருந்தும் ஜெர்மானியர்களால் வெளியேற்றப்பட்டு, அகதிகளாக்கப்பட்ட மக்கட் கூட்டத்தைக்கண்டு அனிஷ்கா அதிர்ச்சியடைந்தாள். ஆஸ்பத்திரி ரயில்கள், காயம்பட்ட வீரர்களை அமைதியான நகரத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கும். அவர்களின் துன்ப துயரங்களைப் பார்த்த

அனிஷ்கா, அவர்களுக்கு உதவி செய்ய சக்தியற்ற நிலையி லிருக்கும் தன் நிலைமையைக் கண்டு மனம் வெதும்பினுள்.

அவள் கழகத்தின் டைரக்டரிடம் சென்று தனக்கு ஒரு வருட விடுமுறை வேண்டுமென்று கேட்டாள். மாஸ்கோ வுக்குச் செல்லவும், பிறகு அங்கிருந்து போர் அரங்கத்திற்குச் செல்லவும் தனக்கிருக்கும் விருப்பத்தையும் அவள் மறைக்க வில்லை. பத்திரிகைகளில் சில பெண்களைப்பற்றிய செய்திகள் வெளியானதைப் போல், ஜெர்மன் அணிகளுக்குப் பின்னுல் போய், நாச வேலைகள் செய்வதும், கம்பியில்லாத் தந்தி மூலமோ, அல்லது இதர பொருத்தமான வழிகள் மூலமோ, விரோதியைப்பற்றி செய்திகள் அனுப்புவதும்தான் அவள் விரும்பியது.

ஆனுல், டைரக்டர் அவளுடைய கோரிக்கையை திட்ட வட்டமாக மறுத்தார். ஒன்ருே வெறும் சம்பிரதாயபூர்வ மாக மறுத்திருக்கலாம். அல்லது அனுபவமில்லாத ஒரு இளம் பெண்ணை, புகழ்மிகு சர்ஜன் ஒருவரின் ஒரே மகளை யுத்தகளத்திற்கு அனுப்புவதற்கு அவர் விரும்பாமல் இருந் திருக்கலாம். இதைக் கேட்டதும் அனிஷ்கா, உடனே, அவர் அறிவற்றவரென்றும், மனித இருதயம் அற்றவரென்றும் முடிவு செய்துகொண்டு, அவருடைய அனுமதியில்லாம லேயே செல்வதென்று முடிவு செய்தாள்.

டான்யா நோவிகோவா என்ற தன்னுடைய ஒரு சினேகிதியிடத்தில் மட்டுமே அவள் தன்னுடைய திட்டத் தைப்பற்றிக் கூறினுள். டான்யா இதைக் கேட்டதும் பெரி தும் மனக்கிளர்ச்சி அடைந்தாள். அவளுடன் செல்வதற்கு உடன்பட்டாள். இருவரும் ஒருநாள் முழுவதும் நகரத்தில் சுற்றி அலைந்தனர். பனிக்கட்டி உறைந்து கிடக்கும் வால்கா நதியின் கரைமீது நீண்ட நேரம் நின்றனர். மிகவும் இன்ப கரமான, அதேசமயத்தில் மனப்பூர்வமான பல விஷயங் களைப் பேசிக்கொண்டனர். எப்பொழுதும் நாணயமாகவும், நியாயமாகவும் நடந்துகொள்வதென்று பிரதிக்னை எடுத்துக் கொண்டார்கள்.

ஆனுல், அனுமதியில்லாமல் மாஸ்கோவுக்குத் திரும்புவது அவ்வளவு எளிதான விஷயமல்ல, என்பதை அவர்கள்

கண்டனர். தலைநகரம் இன்னும் போர் நடந்துகொண் டிருக்கும் பகுதியில் இருந்தது. அங்கு செல்வதென்றால், ஏதாவதொரு ஸ்தாபனம் அனுப்புவதாக இருக்கவேண்டும். அதில் ஏராளமான கஷ்டங்கள் உண்டு. நிறைய சம்பிரதாய சடங்குகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

ரயில் வண்டியிலிருந்து ஒரு குற்றவாளியைப் போல் கீழே இறக்கப்பட்டு கழகத்திற்கே மீண்டும் அனுப்பப்படும் அவமானத்தை நினைக்க டான்யாவுக்கு பயங்கரமாக இருந்தது. எனவே, அனிஷ்கா தான் மட்டும் தனியாகவே போவதென்று முடிவு செய்து கொண்டாள்.

பிரத்தியேக பாஸ் (அனுமதிச் சீட்டு) உள்ளவர்களுக்கு மட்டும்தான் மாஸ்கோவுக்கு டிக்கெட்டுகள் விற்கப்பட்டு வந்தன. எனவே டிக்கெட் இல்லாமலேயே அவள் ரயில் வண்டியில் ஏறினாள். ஏற்கனவே, அந்த வண்டியில் பிரயாணிகள் நிறைய இருந்தார்கள். மூட்டை முடிச்சுகளும் ஏராளமாக இருந்தன. ஒரு பெரிய ட்ரங்க் பெட்டியின்மீது அவள் உட்கார்ந்து கொண்டாள். ஆரம்பத்தில் அவளுக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவளைச் சுற்றிலுமிருந் தவர்கள் ஒரே இரைச்சல் போட்டுக்கொண்டிருந்தனர். பண்பாடில்லாதவர்களாகவும் காணப்பட்டனர். ஒவ்வொரு வரும் தங்களுக்கு உட்காருவதற்கு நல்ல இடம் கிடைக்க வேண்டுமென்பதைத் தவிர வேறு எதைப்பற்றியும் கவலை கொள்ளவில்லை. இதைக் கண்டு அனிஷ்கா மிகவும் அதிர்ச்சி யடைந்தாள். ஆனால் நிலையத்தை விட்டு வண்டி கிளம்பியதோ இல்லையோ, அவளுடைய சகபிரயாணிகள் மிகவும் நல்லவர்களாக மாறிவிட்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களை விசாரிக்கத் தொடங்கினர். ஒருவரை ஒருவர் பரிச்சயம் செய்து கொண்டு ஒருவருக்கொருவர் அன்பாகவும், நட்புறவுடனும் நடந்துகொண்டனர். இரைச்சலும் சண்டைகளும் தணிந்தன. ஒவ்வொருவரும் சுமாராகத் தங்களுக்குத் தாங்களே சௌகரியமாக உட்கார்ந்து கொண்டனர். ஒருவருக்கொருவர் நல்ல தோழமையை ஏற்படுத்திக்கொண் டனர்.

பிரயாணிகள் ஒவ்வொருவரையும் அடையாளம் தெரிந்துகொள்ளும் சோதனை நடைபெறுமோ என்று அனிஷ்கா ஆரம்பத்தில் பயப்பட்டாள். ஆனால், தன்னுடைய தகப்பனார் ஒரு ஜெனரலாக இருப்பதும், அதைக் குறிப்பிடும் ஓர் அத்தாட்சிப் பத்திரம் தன்னிடம் இருப்பதும் அவளுக்கு நம்பிக்கையைக் கொடுத்தது. ஆயினும் எல்லாவற்றையும்விட அவளுக்கு மிகவும் மனச்சாந்தியளித்த விஷயம், தான் எதற்காக மாஸ்கோ போகிறேன் என்ற விஷயத்தைச் சொன்னவுடனேயே, ரயில்வே அதிகாரிகள் தனக்கு எவ்விதத் தொந்திரவும் கொடுக்கமாட்டார்கள், என்ற எண்ணம்தான். இந்த நம்பிக்கையுடன் அவள் நிம்மதியாகப் பிரயாணத்தைத் தொடர்ந்தாள். அவளுடைய பெரிய கண்கள், வண்டியிலிருந்த ஒவ்வொரு பிரயாணியாகப் பார்த்துக்கொண்டே வந்தன. அவளுடைய இளமை அவர்களனைவரிடமும் ஓர் மகிழ்ச்சிகரமான உணர்ச்சியையும், அனுதாபத்தையும் கிளப்பியது. இதைப்பற்றி அவள் அப்பொழுதுதான் உணர ஆரம்பித்தாள்.

தன் பிரயாணத்தின் முதல் நாளை—தன்னுடைய கள்ளங் கபடற்ற உள்ளம், தன்னுடைய வனப்பு பற்றிய தெளிவற்ற ஆனால், அதேசமயத்தில் பலமான உணர்ச்சியைப்பற்றிய சிந்தனையில் கழித்தாள். உள்ளூர ஏற்படும் உறுதிப்பாட்டைத் தவிர, வேறு வலிமை வாய்ந்த சக்தி கிடையாது என்று உணர்ந்தாள்.

ஆனால், ஒரு சம்பவம் ஏற்பட்டது. விரைவிலோ காலங்கடந்தோ அது நிச்சயம் ஏற்படத்தான் செய்யும். அவள் உட்கார்ந்திருந்த பெட்டியின் கதவு திறக்கப்பட்டது. "உங்கள் அத்தாட்சிப் பத்திரங்களைக் காண்பியுங்கள்", என்று கண்டக்டர் உரத்த குரலில் இரைந்தார். பிரயாணிகளின் அத்தாட்சிப் பத்திரங்களைப் பரிசோதித்து வந்த சோல்ஜர்களை நோக்கி அனிஷ்கா, தன் கள்ளங் கபடற்ற, அமைதியான பார்வையைச் செலுத்தினாள். அவர்கள், அவளைத் தவிர மற்ற அனைவருடைய பத்திரங்களையும் பரிசோதிக்க விரும்பியது வியப்பாக இருந்தது. ஆனால், இதற்குக் காரணம், அவர்கள் அவள் இருப்பதை கவனிக்

காததினுல் அல்ல. அவளை அவர்கள் கவனிக்கவே செய்தனர். ஆனுல், ஒருவேளை, அவளைப்போன்ற வயதுடைய ஒரு யுவதி, தன்னுடைய தாயாரோ அல்லது தகப்பனுரோ உடன் இல்லாமல் தனியாகப் பிரயாணம் செய்யமாட்டாள் என்று அவர்கள் நினைத்திருக்கலாம். அவர்களில் ஒருவர் அவளைப் பார்த்து புன்முறுவலும் செய்தார். அவர் அவ்வாறு செய்யும்போது, அவருடைய அகலமான செங்கல் நிறமான முகத்தில் ஆழமான, அதேசமயத்தில் கருணை நிரம்பிய சுருக்கங்கள் ஏற்பட்டன. அவளும் பதிலுக்கு முறுவலித்தாள். ஆனுல், பின்னர், தான் அவ்வாறு நடந்து கொண்டதற்குத் தன்னையே கடிந்து கொண்டாள். ஏனெனில், பூர்ணமான சுய கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நிலையில், தன்னுடைய அத்தாட்சிப் பத்திரங்களை அந்த சோல்ஜர் கேட்காமல் இருக்கும் வண்ணம், அவரைத் தனக்கு சாதகமாகத் திருப்புவதற்கே அவ்வாறு செய்தாள் என்பதை அவள் உணர்ந்திருந்தாள்.

தான் தவருக நடந்துகொண்டதாக முடிவுக்கு வந்த அவள் அந்த சோல்ஜர்களின் பின்னே ஓடினுள். அவர்கள் அப்பொழுது அந்த ரயில் பெட்டியைக் கடந்து சென்று கொண்டிருந்தனர். மாஸ்கோவுக்குச் செல்வதற்குத் தன்னிடம் 'பாஸ்' (அனுமதிச் சீட்டு) இல்லையென்றும், ஆயினும் தான் அவசியம் மாஸ்கோ போயாக வேண்டுமென்றும் இரைந்து கூறினுள். ஆனுல், வண்டியின் சக்கரங்கள் உருளும் ஓசையில், அவள் கூறியது அவர்களின் காதுகளுக்கு எட்டவில்லை. அவள் மீண்டும் அதைக் கூறினுள். அப்பொழுது அந்த செங்கல் நிற முகத்தை உடைய ஆசாமி ஆச்சரியத்துடன் அவளை நோக்கினுர். சிவப்பு நிற உல்லன் தொப்பியையும், கழுத்தில் அதற்கு ஒத்த 'மப்ளரை'யும் கட்டிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணைத் தனக்கு நினைவிருப்பதாக அவர் நினைத்தார். ''உன்னுடைய கம்பார்ட்மெண்டில் நாங்கள் ஏற்கனவே பரிசோதித்து விட்டோம்,'' என்று கூறினுர். அவர் வியப்பும், லேசாகக் கோபமும் அடைந்தார் என்பது அவர் முகத்தில் பளிச்சிட்டது. பின்னர் அவர்கள் அடுத்த பெட்டிக்குள் சென்று மறைந்தனர். அனிஷ்கா தன் இருக்கைக்கே மீண்டும் சென்ருள். இந்த

சம்பவத்தால் ஒரு பக்கம் மனச் சங்கடமும், மறுபக்கம் மன மகிழ்ச்சியும் அடைந்தாள். இந்த சம்பவம் ஏன் இவ்வாறு நிகழ்ந்தது என்று அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. தன்னுடைய தோற்றமே பிறரிடத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தியது என்ற முடிவுக்கு—காரணமில்லாமலல்ல— அவள் வந்தாள். மக்களின்பால் அவளுக்கு அளவு கடந்த நன்றியுணர்ச்சி ஏற்பட்டது. அதேசமயத்தில் அவளுடைய வெகுளித்தனம், தன்னிடம் 'பாஸ்' இல்லாததால், தன்னை உளவாளி என்று கருதிவிடுவார்கள் என்று பயப்படவும் செய்தது. மற்றவர்களைப்போல் அவள் தன்னையே பார்த்துக் கொள்ள முடிந்திருந்தால், தன்னுடைய பயத்தைப்பற்றி அவள் பரிகாசச் சிரிப்பு சிரித்திருப்பாள்.

மனிதர்கள் ஏதாவது ஆழ்ந்த முடிவு எடுத்துவிட்டால் அவர்கள் எப்பொழுதும்காணப்படுவதைப்போல், அனிஷ்கா தன் சிந்தனைகளிலேயே மூழ்கி, யாருடனும் பேச்சுக் கொடுக்காத நிலையில், சுற்றிலும் வெறித்துப் பார்த்தாள். தான் பார்ப்பதெல்லாம் தனக்கு மிகவும் தூரத்தில் இருப்ப தாகக் கண்டாள். ஆயினும், அவை அவளிடம் இன்பகர மான உணர்ச்சிகளை ஏற்படுத்தின. தான் பிரயாணம் செய்த ரயில் பெட்டியில் சுருதிப் பெட்டியின் கனத்த ரீங்காரம், மகோர்காவின் (ஒருவித சுருட்டின்) மூக்கைக் துளைக்கும் வாசனை, பழகுவதற்கு இணக்கமான அந்தப் பெட்டியில் இருந்த மனிதர்களின் சிறிதுகூட முக்கியத்துவமற்ற வார்த் தைகளும் கூட, நிறைய ஆழ்ந்த பொருளுடன் கூடியதாக அவளுக்குப்பட்டது. அவளுடன் பிரயாணம் செய்துவந்த சகபிரயாணிகள், உணர்ச்சி வயப்பட்டவர்களாக அவளுக் குப்பட்டது. ஒரு சமயம் அவளை உள்ளூர எரித்துக்கொண் டிருக்கும் உணர்ச்சித்தீயின் காரணமாக அவளுக்கு அப் படிப்பட்டிருக்கலாம். சகபிரயாணிகள் அவளோடு நட்புற வுடன் பழகினர். அவளுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி அடைந்தனர். தங்களுடைய வாழ்க்கையைப்பற்றியும், தங் களின் வேலையைப்பற்றியும், நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ தங்கள் ஒவ்வொருவருக்கும் யுத்தம் ஏற்படுத் திய பெரும்பாதகத்தைப்பற்றியும் அவளிடத்தில் கூறினர்.

அந்தப் பெட்டியில் பிரயாணம் செய்துவந்த மெலிந்த, உயரமான ஓர் லெப்டினென்ட் அவளுடைய பேச்சை மிகவும் கவனமாகக் கேட்டுவந்தார். அந்தப் பெட்டியிலிருந்தவர்கள் அனைவரும் அவரை வித்யா என்றழைத்தனர். அவர் ஏற்கனவே போர்முனையில் சேவை செய்து காயம்பட்டிருந்தார். தற்பொழுது அவர் ஆஸ்பத்திரியிலிருந்து மீண்டும் போர்முனைக்குப் போய்க்கொண்டிருந்தார். வீர சாகஸச் செயலுக்காகத் தனக்குக் கிடைத்த ஒரு பதக்கத்தை அவர் அணிந்து கொண்டிருந்தார். யுத்தத்தின் ஆரம்ப நாட்களில் விருதுகள் கொடுப்பது குறைவாகவே இருந்தது. எனவே மேற்படி விருதைப் பெற்றிருந்த அந்தஅரட்டைக் கள்ளியும், குஷாலான பேர்வழியாகவும் இருந்த அந்த இளம் லெப்டினென்டிடம் அனிஷ்கா அதிக மதிப்புக்கொண்டாள். அவள் தன்னையே உற்றுப் பார்த்ததை அவரால் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அதற்கு அவர் வேறு காரணமும் கற்பித்துக்கொண்டார். தன்னுடைய விலாசங்களையெல்லாம் அவளுக்குக் கொடுத்தார். தன்னுடைய உணவை அவளுடன் பகிர்ந்து சாப்பிட்டார். அவளுக்கு வெந்நீர் கொண்டு வந்து கொடுத்தார். பொதுவாக அவளுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தார்.

அவளுக்குத் தன் இருக்கைக் கருகில் வண்டியின்மேல் பகுதியில் ஒரு இடம்பிடித்துக் கொடுத்தார். அங்கு வெதுவெதுப்பாகவும் இருந்தது. அங்கு மற்றவர்களால் அவளுக்கு அதிகத் தொந்திரவும் ஏற்படாது. இருள் சூழ்ந்ததும், லெப்டினென்ட் தனக்கு அருகில் நெருக்கமாக வந்திருப்பதை அவள் உணர்ந்தாள். தன் கைகளால் அவர் அவளை அணைத்தார். அவள் செத்த பிணம்போல் சலனமற்றுக்கிடத்தாள். பிறகு லெப்டினென்ட் இன்னும் துணிச்சல் கொண்டார். அனிஷ்கா வாயடைத்துப்போய் ஊமைபோல் இருந்தாள். ஓர் யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதும், எங்கும் மக்கள் கடும் துன்ப துயரங்களில் ஆழ்ந்திருந்த பொழுதும் சிந்திப்பதற்கு எத்தனையோ விஷயங்களிருந்தபோதும், அவர் எப்படி அவ்வாறு நடந்துகொள்ளமுடியும் என்பதை அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவள் கீழே இறங்கி

தான் முன்பு உட்கார்ந்திருந்த இடத்தில்—நடைபாதையில் யாரோ ஒருவருடைய பெட்டியின்மீது போய் உட்கார்ந்து கொண்டாள். இதைக் கண்ட லெப்டினெட் வெகுண்டார். நீண்ட நேரம் தனியாக மௌனத்தில் ஆழ்ந்தார். ஆனுல், அவரால் அவ்வாறு இனி ஒரு கணமும் இருக்கமுடியாத தெனக் கண்டு, அவரும் கீழே இறங்கினர். அனிஷ்காவுக்கு அருகில் உட்கார்ந்துகொண்டார். மேல் பலகையிலிருந்து அவள் ஏன் இறங்கிச் சென்ருள் என்று அவளிடம் கோப மாகக் கேட்டார், பின்னர், அவர் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருப்பதைப்பற்றியும் எங்கு பார்த்தாலும் துன்ப மும், துயரமும் நிறைந்திருப்பதுபற்றியும் பேச ஆரம்பித் தார். தான் சில நாட்களில் கொல்லப்படலாம் என்றும், அவள் அவ்வளவு கல்நெஞ்சினளாக நடந்துகொள்ள முடி யுமா, என்றும் அவர் கேட்டார். அவள் பதிலளிக்கவில்லே. அவளுடைய சிந்தனேகள் எங்கோ வட்டமிட்டுக் கொண்டி ருந்தன. தான் அந்த ரயில்பெட்டியிலேயே இல்லாதது போலவும் ஏதோ பாலேவனத்தில் தான்மட்டும் தன்னந் தனியாக இருப்பது போலவும் உணர்ந்தாள். இதற்கிடையில் வெளியில்அடர்த்தியான,சிறிது சிவப்பு சாயலான புகை மண் டலம்கிளம்பிக்கொண்டிருந்தது. அந்தப் புகை மேகங்கள், லெப்டினென்ட் அவளே அசையவைப்பதற்காகக் கூறிவந்த தெளிவற்ற புகார்களேப் போன்றதாக அவளுக்குப் பட்டது.

அவர் அதே பாணியில் பேசிக்கொண்டேயிருந்தார். கடைசியில் அவள், தான் அவரை விரும்பவில்லே என்று கூறும்வரையிலும் அவர் பேசிக்கொண்டிருந்தார். அவ்வாறு சொல்வது முட்டாள்தனமானது என்று அவள் நினேத் தாள். அவர் தானே அதை உணார்ந்துகொண்டிருப்பார் என் றும் நினேத்தாள்.

எப்படியிருந்தபோதிலும் அவர் அவளேவிட்டு அகன்று. மீண்டும் மேல்பலகையில் ஏறிப் படுத்துக்கொண்டார். அனிஷ்கா நடை பாதையிலேயே உட்கார்ந்து கொண்டிருந் தாள். பின்னர் ஒரே சமயத்தில் பல குரல்கள்—கேட்டன அவளுக்கு வேறு நல்ல இடத்தைக் கொடுப்பதாகக் கூறினர். இரண்டாவது மேல் பலகையில் அவள் படுத்துக்கொள்வ

தற்குக் கூட இடம்தர யாரோ முன்வந்தனர். ஆனல் இந்த உபசாரங்களையெல்லாம் அவள் மறுதளித்துவிட்டாள். அப்பொழுது லெப்டினென்ட் கீழே இறங்கிவந்து, அவள் தன்னுடைய பழைய இடத்திலேயே ஏறிப்படுத்துக் கொள்ள லாமென்றும், அங்கு வெதுவெதுப்பாகவும், சௌகரியமாக வும் இருக்கும் என்றும் கூறினர். அனிஷ்கா மறுக்கவே, அவர், தான் தன் பழைய இடத்திலேயே உட்கார்ந்து கொள் வதாகவும், அவள் பயப்படவேண்டிய அவசியமில்லை என்றும் கூறினர். அவரது வார்த்தைகள் உண்மையாகப்பட்டது; அவர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள விரும்புகிருரென்பதில் எவ்வித சந்தேகமுமிருப்பதாகத் தோன்றவில்லை. அவள் பலகைமீது ஏறிப் படுத்துக்கொண்டாள். அவர் கீழேயே உட்கார்ந்து கொண்டார். ஒரு ரயில் நிலையத்தில் வண்டி நின்றது. அவர் இறங்கி காற்றுவாங்கக் கொஞ்சம் உலாவி னர். அவர் திரும்பிவந்ததும், அவளருகில் உட்கார்ந்து கொள்வதற்கு அனுமதி கேட்டார். அவருடைய பணிவான வேண்டுகோள் அவளுடைய மனதை இளக்கியது. "சரி", என்ருள். அவர் உண்மையில் நேர்மையான வர். தன்னுடைய முட்டாள்த்தனமான நடத்தைக் காக உண்மையாகவே இப்பொழுது வருந்தினர். ஆனல் அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாரோ இல்லையோ, அவரால் தன்னையே கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. மீண்டும் அவள் தோள்மீது தன்கையைப்போட்டார். ஆனல் இந்தத் தடவை மிகவும் ஜாக்ரதையாக, வேண்டுமென்று போடாததுபோல் தோன்றும் வகையில் நடந்துகொண் டார். "உங்களுக்கு மனச்சாட்சி ஏதாவது இருக்கிறதா?" என்று அவள் கோபமாகக் கேட்டாள். அந்த வார்த்தைகள் சொல்லளவில் அவமானப்படுத்துவதாக இல்லாவிட்டாலும், மனம்நொந்து, பட்டவர்த்தனமாகக் கடுமையான தொனி யில் கூறப்பட்டதாக இருந்ததால், அதற்கு விரும்பிய பலன் கிடைத்தது. அந்த இளம் லெப்டினென்டின் வெறியுணர்ச் சியைத் தணித்து தலை குனிய வைத்தது. நீண்ட நேரம் வாதாடுவதோ அல்லது இரைச்சல் போட்டு எல்லோரும் பார்க்கும்படியாகச் செய்வதோ அவசியமில்லாமல் போய்

விட்டது. அவர் பரிகாசத்துக்குரிய முறையில் உதடுகளைப் பிதுக்கிக் கொண்டு நகர்ந்து உட்கார்ந்தார். அதற்குப் பிறகு அவளைத் தொடவேயில்லை. இதற்குத் தன் நன்றியைத்தெரிவித்துக்கொள்ளும் முறையில் அவள் அவர் தோள்மீது அன்பாகத் தட்டிக்கொடுத்தாள். இதை அவர் தனக்கு ஊக்கமூட்டுவதாகக் கருதிக் கொண்டு மீண்டும் அவள்மீது கை போட ஆரம்பித்தார். பின்னர், அனிஷ்கா கோபத்துடன் கீழே இறங்கினாள். மீண்டும் அவர் பக்கத்தில் உட்கார முடியாது என்று கண்டிப்பாக மறுத்துவிட்டாள்.

அவள் ஜன்னல் அருகில் சென்று வெளியில் பார்த்தாள். இருள் சூழ்ந்த, பனி நிறைந்த இரவைத் தவிர வேறொன்றையும் காண முடியவில்லை. ஜன்னல் கண்ணாடியின் வழியாகவே அவளால் குளிரை உணர முடிந்தது. பெட்டியில் எங்கோ ஒரு குழந்தை கத்திக் கொண்டிருந்தது. திடீரென்று அனிஷ்காவுக்கு, தன் வாழ்க்கை மிகவும் கடினமாக இருக்கப்போகிறது என்ற உணர்வேற்பட்டது. பொதுவாகவே வாழ்க்கை கஷ்டமாகத்தானிருக்கிறது என்று பட்டது. பெண்களைவிட ஆண்களுக்கு வாழ்க்கை மிகவும் இலகுவானது; அதனால் தான் பழைய நாடகங்களிலும், நாவல்களிலும் பெண்கள் அனேகந்தடவை ஆண்களாக வேஷம் போட்டுக் கொள்வதைப் பார்க்கிறோம், என்று நினைத்தாள். ரயில் பிரயாணத்தின்போது ஏற்பட்ட இந்த அனுபவம் ஒரு துரும்புபோன்றதாயினும், எதிர்காலத்தில் அத்தகைய அனுபவத்தைத்தான் பலமுறை அனுபவிக்கவேண்டியிருக்கும் என்ற உணர்ச்சி அவளிடம் பயங்கரத்தை ஏற்படுத்தியது.

எப்போது பொழுதுவிடியும் என்று அவள் பொறுமையிழந்தவளாய்க் காத்திருந்தாள். கடைசியில் சூரியன் உதித்தான். வெண்பனியால் மூடப்பட்டிருந்த சமவெளிகள் ரோஜா நிறம்பூண்டு பளபளத்தன, வைகறைச் சூரிய கிரணங்களின் ஒளியில் மரங்களெல்லாம் பழுப்பு நிறமான உறை பனியால் மூடப்பட்டுக் காட்சியளித்தன. இளஞ்சூரிய ஒளியில் வெண்மையான உறைபணி பளிச்சென்றும், கண்கள் கூசும் பிரகாசத்துடனும் காணப்பட்டது, ரயில் பாதைகளைக் கண்காணிக்கும் தொழிலாளர்களின் தனித்

தனி சிறு குடிசைகள் அந்த இளம் வெயிலில் தேவதைக் குடில்கள் போல் தென்பட்டன. லெவல் கிராசிங்குகளில் கோடிட்ட இரும்பு வேலிகள், புகைவண்டி செல்வதைக் கண்டு குலேக்கும் ஒரு கருப்பு நாய், சின்னஞ்சிறுர்கள் ஓடும் ரயில் வண்டியைப் பார்த்துத் தங்கள் கைகளை ஆட்டு வது, மிருதுவான மஞ்சள் சாயலான சாலை வழியே ஒரு தாழ்ந்த அகலமான 'ஸ்லெட்ஜ்' வண்டியைஒரு குதிரைமெது வாக இழுத்துச் செல்வது, ஆகிய ஒவ்வொரு சிறு அம்சமும் எழில் நிரம்பியதும், விழாக்கோலம் பூண்டிருப்பதுபோலவும் காணப்பட்டது. இந்த மகோன்னதமான காட்சியைக் கண்டு ரசித்தவளாய், அனிஷ்கா மனநிம்மதி பெற்றவளா ஞள். அவளுடைய உற்சாகம் அதிகரித்தது. தனக்குப் பின் ஞல் அந்த வண்டியில் உட்கார்ந்திருப்பவர்கள் தங்கள் குடும் பங்களினின்றும் பிரிக்கப்பட்டு, கவலையில் ஆழ்ந்தவர்களாய் காணப்படுகிருர்கள். ஆனுல், ஒவ்வொருவருக்கும் சில பல வீனங்கள் இருந்தபோதிலும்கூட உண்மையில் அவர்கள் அனைவரும் நல்லவர்கள். பல்வேறு வாழ்க்கைத் துறைகளில் செல்லும் ஆயிரக்கணக்கானவர்களின் எதிர்காலம் ஊகித்துப் பார்க்கவும் அரிதான முறையில் ஒன்றுக்கொன்று பின்னல் போல் இணைக்கப்பட்டு, ஒரு பெரிய பந்தாக உருவாகிறது. அனிஷ்கா ஒரு சாதாரண மனிதப் பிறவி அல்ல. அவளுடைய வாழ்க்கை அந்தப் போரின் ஒரு அம்சமே அவளுடைய எதிர் காலம் ஒருபுதிராக இருக்கிறது.—இவைகளெல்லாவற்றையும் புதியமுறையிலும் மிகுந்த வலிவுடனும் அவள் உணர்ந்தாள்.

தன்னைச் சுற்றியுள்ள அனைவரின்பாலும் வேதனையுடன் கூடிய ஒரு வாஞ்சை அவளுடைய இளம் இருதயத்தில் பொங்கி வழிந்தது. போர் முனைக்குச் செல்லவேண்டும் என்று அவள் பொறுமையிழந்தவளாய்த் துடித்தாள். அந்த வாஞ்சையை அங்கு செயல்கள் மூலம் காட்டமுடியு மல்லவா!

3

அந்த ரயில்வண்டி சாயந்திரம் மாஸ்கோ வந்து சேர்ந் தது. கொம்சொமால்ஸ்காயா சதுக்கத்தில் அவள் பிர

வேசித்த பொழுது தன்னுடைய சொந்த நகரத்தின் உறை பனியால் மூடப்பட்ட நிலத்தை முத்தமிடவேண்டும் போல் அனிஷ்காவுக்குத் தோன்றியது. மாஸ்கோவைத் தான் அவ்வளவு நேசித்ததாக அதற்கு முன்னுல் அவள் கருதியதே கிடையாது. அதற்கு மாருக, தான் அதுபற்றி முற்றிலும் அலட்சியமாக இருந்ததாகத்தான் அவள் நினைத்திருந்தாள். தலைநகரைப் பற்றி பாட்டுகளிலும், கவிதைகளிலும் முடிவில்லாமல் புகழ்மாலைகள் சூட்டப்பட்டு வந்ததைக் கண்டு அவள் வெகுண்டதும் உண்டு. ஆனுல், தன்னைச் சற்றிலும் மைல் கணக்காகப் பரந்து கிடக்கும் நகரம் உண்மையில் தனக்கு எத்தகைய உணர்ச்சியை ஊட்டுகிறது என்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வார்த்தைகள் பலவீனமானவை யென்பதையும், கவர்ச்சியற்றவை என்பதையும் இப்பொழுது அவள் உணர்ந்து கொண்டாள். ஒவ்வொரு அம்சமும் தன்னுடைய ஆத்மாவுக்குள் ஊடுருவுவதைப் போன்ற உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. பரிச்சயமான ஒவ்வொரு கட்டமும், விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருந்த அன்றைய செய்திப் பத்திரிகை, தியேட்டர் விளம்பரங்கள், தெருக்களில் காணப்படும் இரைச்சல், நகரின் வெளிப்புறங் களிலிருந்து வரும் பால்விற்கும் பெண்களின் இசையொத்த குரல்கள் ஆகிய ஒவ்வொன்றும் அவளது ஆத்மாவுக்குள் ஊடுருவுவதைப் போன்ற ஓர் உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. ஆயினும், அவளுக்குப்பட்ட பிரதானமான அம்சம் என்னவெனில், தலைநகருடன் ஒவ்வொரு நகரத்தையும், கிராமத்தையும், ஒவ்வொரு போர்முனையிலுமுள்ள ராணுவத்தையும் இணைக்கும் பிணைப்புகளை உணர்ந்தாள். தலைநகரின்பால் முழுநம்பிக்கையுடனும், விஸ்வாசத்துடனும் இருக்கிருர்கள் என்பதை லட்சக்கணக்கான மக்களின் கண்களில் வீசும் ஒளியினின்றும் உணர்ந்துகொண்டாள்.

தன்னுடைய மாடியை அடைந்தபொழுது அவளுடைய இருதயத் துடிப்பு நின்று விட்டதைப்போல் தோன்றியது. அந்த மாடி காலியாக இருந்தது; ஒருவரும் காணப்படவில்லை. வெறிச்சோடிப்போயிருந்தது. சாமான்கள் பழைய இடங் களிலேயே இருந்தன. ஆனுல் அவைகளிலிருந்து ஆத்மா

வெளிறியிருந்தது. பல மாடிகளைக் கொண்ட அந்த முழு வீடும் எப்படித் தோற்றமளித்ததென்றால், பிரயாணிகள் இறங்கிச் சென்றுவிட்டபின் நடுத்தெருவில் பரிதாபமாகத் தனியாக ஜீவனற்று, கவனிப்பாறற்று நிற்கும் பழுதடைந்த ட்ராம் வண்டியைப்போல் இருந்தது. அண்டை அயலார்களில் செம்பாதியினர் ஒன்றாே காலி செய்து விட்டுப் போயிருந்தனர்; அல்லது போர்முனைக்குப் போயிருந்தனர். இன்னும், அங்கு தொடர்ந்திருந்தவர்கள் அனிஷ்காவை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள். ஒவ்வொருவரும் அனிஷ்காவைத் தங்கள் மாடிக்கு அழைப்பதற்கு ஆவலாக இருந்தனர். அவளை அவர்களுக்குக் குழந்தையிலிருந்தே தெரியும். அவர்களுக்கு அவளுடைய தகப்பனாரைத் தெரியும். அவளுடைய அன்னையைப் பற்றியும் நினைவிருக்கிறது. முதல் தடவையாக அவளை ஒருதள்ளு வண்டியில் வைத்து வெளியே காற்று வாங்க அழைத்துச் செல்லப்பட்டதும் கூட பலருக்கு நினைவிருக்கிறது. அவளிடம் ரொட்டிக் கூப்பன்கள் இல்லை என்பதைக்கேட்க பலருக்கு அதிர்ச்சியாயிருந்தது. ஒவ்வொருவரும் சிறிது உதவி அவளுடைய உணவுக்கு வழி செய்தனர். அதைத் தொடர்ந்து பல நாட்களுக்கு அவளுக்கு உணவு கொண்டுவந்து கொடுத்தும் வந்தனர்.

பின்னர் ராணுவத்தில் சேருவதைப்பற்றிய சிக்கல் எழுந்தது. நகர ராணுவக் கமிஷ்ஸாரியேட்டுக்கும் இளம் கம்யூனிஸ்ட் சங்கத்தாரின் மாஸ்கோ கமிட்டிக்கும் விண்ணப்பம் போடவேண்டியிருந்தது. பேட்டிகளிலும், நமூனுக்களைப் பூர்த்தி செய்வதிலும், களைத்துப்போயிருந்த அவளைப் பயங்கரமான பசி பிடுங்கித் தின்றது. தலை சுற்றியது. ஆயினும், கால் தடுமாற்றமடையாமலும், சிறிதுகூட மனங் கலங்காமலும் அனிஷ்கா மாஸ்கோவில் அலைந்து திரிந்தாள். தெருக்கள், சதுக்கங்கள் கொண்டிருந்த கோலம், இரும்புத் தொப்பி அணிந்த படை வீரர்கள் எப்பொழுதாவது அணி வகுத்துச் செல்வது, பெரிய சாலைகளின் நடுவில் மேலே அந்தரத்தில் இருந்து கொண்டு, கனமான காற்று அடிக்கும் போது, தங்களை இழுத்துக் கட்டிவைத்துள்ள இரும்புக்

கம்பிகளை லேசாக அசைக்கும் பலூன்கள் ஆகியவற்றினு லெல்லாம் அவள் கண்களின் ஆவல் தணியவில்லை.

தன்னுடைய உறவினர்களைப் பார்க்க அனிஷ்கா போக வில்லை. திருப்தியான முழுச்சாப்பாடு கிடைக்கப் பெறுவதற் காகத் தன் அத்தை நாடியாவின் வீட்டுக்குப் போகலா மென்று சில சமயங்களில் அவள் நினைத்ததுண்டு. ஆனால், அவள் போகவில்லை. ஏனெனில், தான் ஏன் மாஸ்கோவுக்கு வந்தாள் என்பதைத் தன் அத்தையிடம் சொல்வதற்கு அவள் விரும்பவில்லை. அதே சமயத்தில் அவளிடம் பொய்யைச் சொல்வதற்கும் தயங்கினாள். ஆனால், சீக்கிரத்தில் அத்தை நாடியாவே, அனிஷ்காவைப் பார்க்க வந்தாள். யாரோ அனிஷ்காவைத் தெருவில் பார்த்தவர்கள், உடனே அவளுடைய அத்தையிடம் போய்த் தெரிவித் திருந்தார்கள்.

உயரமான, நல்ல கட்டான தேகத்தை உடையபெரிதும் அனிஷ்காவின் தந்தையைப் போலவே உள்ள நடேஜ்டா மோடெஸ்டோவ்னுவுக்கு மூன்ருவது மாடிக்கு நடந்து ஏறி வருவதற்குள் மூச்சுத் திணறிப்போய்விட்டது. காரணம், 'லிப்ட்' வேலை செய்யவில்லை. கடைசியாக ஆஸ்வாசமடைந்த அவள் தன் மருமகளைக் கேள்விமேல் கேள்வி போட்டுத் திணறடித்து விட்டாள். தான் ஏன் மாஸ்கோ வந்தாள் என்பதை அனிஷ்கா அவளிடம் கூறியபோது, அவள் திக்பிரமை அடைந்தவளாய் அப்படியே நாற்காலியில் சாய்ந்து விட்டாள். அப்பொழுது அவள் திடீரென்று தன்னுடைய (அனிஷ்காவினுடைய) ஏதோ ஒரு பாட்டியைப் போன்ற, அல்லது மாஸ்கோ கால்நடை வியாரிகளின் குடும்பத்திலிருந்து வந்த கொள்ளுப் பாட்டியைப் போன்ற தோற்றமுடையவளானாள். தன்னுடைய நயமான, கண்ய மான தன்மைகளையெல்லாம் மறந்தாள்; "என்ன முட்டாள்த் தனமான எண்ணங்கள் உன் மண்டையிலிருக்கின்றன! உன் மூளைகெட்டுவிட்டதா? அடீ, அலெக்ஸாரிண்டன் ஒரேமகளே! நீ உன் தகப்பனை சாகடித்து விடுவாய், நிச்சயம் சாகடித்து விடுவாய்," என்று காட்டுக் கூச்சல் போட்டாள்.

நாடியா அத்தையை அனிஷ்கா நேசித்தாலும்கூட அந்த நேரத்தில் உண்மையாகவே அவளை வெறுத்தாள்.

ஆனால். தன் அத்தையின் மூத்த மகன் வேலெரிக் 'ஹோம் கார்டு' தொண்டர் படையில் சேர்ந்து, பின்னர் காணமற் போனதாகக் கேட்டதும் அவள் அத்தையின் கழுத்தைச் சுற்றித் தன் கைகளைக் கட்டிக்கொண்ட நிலையில் இருவரும் நீண்ட நேரம் தேம்பித் தேம்பி அழுதனர். கடந்த வாரங்களின் கெடுபிடி நிலைமை பூராவும் அவர்களின் கண்ணீரில் வெளியாயிற்று. அவை. தன் அத்தையின்பால் தனக்கிருந்த தற்காலிக வெறுப்பை மன்னித்து விடச் செய்யும் வேண்டுகோளாக இருந்தன.

நடேஷ்டா மோடெஸ்டோவ்ன விரைவில் தன்னைத் தானே தேற்றிக்கொண்டாள். அனிஷ்கா தன்னுடைய திட்டத்தை அனேகமாகக் கைவிடும்படி செய்து விட்டதாக நினைத்துக் கொண்டாள். தன் மருமகள் (சகோதரன் மகள்) தன்னுடன் வந்து வசிக்க வேண்டுமென்பது அவளுடைய முதல் கோரிக்கை. அவளுடைய கணவன் இலியா இவானேவிச் மாஸ்கோ பகுதி விமானத் தற்காப்பு தலைமை நிலையத்தில் வேலை பார்த்து வந்தார். அவர்களுக்கும் போதுமான ரேஷன் (உணவுப் பொருள்கள்) கிடைத்து வந்தது. அந்த ரேஷன்களை அவள்தான் போய் வாங்கிக் கொண்டு வரவேண்டியிருந்தது. அதற்காக அனிஷ்கா தன்னுடன் வரவேண்டுமென்று அவள் வற்புறுத்தினாள். அனிஷ்கா அவ்வாறே செய்தாள். பல மாதங்களுக்குப் பின்னல் முதல் தடவையாக அவள் குழம்பு (Sausage), வேக வைத்த மீன், வெண்ணெ ஆகியவற்றைக் கண்டாள். அவற்றைக் கண்டு அவள் நாக்கில் ஜலம் ஊறிற்று. ஆயினும், நல்ல சாப்பாடு சாப்பிடுவதற்குத் தான் எவ்வளவு ஆவலாக இருக்கிறாள் என்பதைத் தன் அத்தையிடம் காட்டிக்கொள்ள அவள் வெட்கப்பட்டாள். அவளுடைய அத்தைக்கு ஒரு அருமையான யோசனை தோன்றியது. விமானத் தற்காப்பு தலைமை நிலையத்தில் அனிஷ்காவுக்கு ஒரு சிவிலியன் வேலையைத் தன் கணவர் ஏற்பாடு செய்வார். அவளுக்கு நல்ல ரேஷன்கள் கிடைக்கும். போர்முனையில் கிடைப்பது போன்ற அளவே கிடைக்கும். ஏனெனில், மாஸ்கோவை அந்தப் பருந்துகளிடமிருந்து பாதுகாக்க வேண்டி

யதும் போர்முனையில் போராடுவதைப் போன்ற அவ்வளவு முக்யமான வேலையே!

ஏதோ ஞாபகத்துடன் தன் அத்தையின் உணர்ச்சி பூர்வமான பேச்சைக்கேட்ட அனிஷ்கா சிரித்தாள். "மாஸ்கோவைப் பாதுகாப்பதும், நாடியா அத்தை வீட்டிலேயே வசிப்பதும், நல்ல மீன் உணவைச் சாப்பிடுவதும் எவ்வளவு நன்ருக இருக்கும்?" என்று தன்னைத்தானே கேட்பதுபோல் தன் ஆத்மாவையே பரிசோதித்தாள்.

அத்தை நாடியா குடியிருந்தது ஒரு பெரியமாடி. ஆனல், அனிஷ்கா தன்னருகிலேயே படுத்துக்கொள்ள வேண்டுமென்று அவள் வற்புறுத்திஞள். ஏனெனில், அவளுடைய கணவர் நகரத்துக்கு வெளியில் வேலை செய்தார். இரவில் வீட்டுக்கு வருவது மிகவும் அரிது.

நாடியா அத்தை குளிப்பதற்கு வெந்நீர் தயார் செய்தாள். நாற்பத்தியைந்து வயதான அந்த அம்மையாரும், அவளுடைய இளம் மருமகளும், உலகத்தையே மறந்தவர்களாய் ஒருவருக்கொருவர் தண்ணீரைவாரியடித்துக்கொண்டு கொட்டமடித்தனர். நாடியா அத்தை அந்த யுவதியை, தன் மருமகளைக் கூர்ந்து பரிசோதித்தாள். தன்னுடைய சதைப் பற்றுள்ள கரத்தால் அவளுடைய தோள்களையும் மார்பகத்தையும் தட்டிக்கொடுத்து, "நீ ஒரு அழகான பெண்ணுக வளர்ந்துவிட்டாய், அனிஷ்கா, சரிதான், ஏதாவது ஒருநாள் காதல் உன் வழியில் வந்து சேரும்", என்ருள்.

பின், அவள் தன் மகனை நினைத்துக்கொண்டு அழ ஆரம்பித்தாள். ஆனல், அவளுடைய வழக்கமான மேற்போக்காகப் போகும் குணத்திஞல், துயரத்திலிருந்து மாறி நம்பிக்கைக்கு வந்தாள். ஒருவேளை அவன் கொரில்லாப் படையினருடன் இருக்கலாம், என்ற நம்பிக்கையைத் தெரிவித்தாள். அவனைப் போன்ற ஓர் புத்திக்கூர்மை வாய்ந்த வாலிபன் பனிக்கட்டிச் சறுக்கல் விளையாட்டிலும் இதர ஆட்டங்களிலும் கைதேர்ந்தவன், எதற்கும் பிரயோஜனமில்லாமல் அவ்வாறு இறக்கமாட்டான். இந்த எண்ணங்கள் அவளுக்கு மன நிறைவை ஏற்படுத்தின. தன்னிடம் மறுக்க முடியாத சாட்சியங்கள் இருப்பதாக நினைத்துக்கொண்டு, தன்னுடைய

மகன் உயிரோடிருக்கிருன் என்று அவ்வளவு உறுதியாகக் கூறினள்.

இருள் கம்மிக்கொண்டிருந்தது. அனிஷ்கா தன் அத்தையினுடைய பெரிய இளஞ்சிவப்பு நிறப்பட்டாலான இரவு அங்கியை எடுத்து அணிந்து கொண்டாள். அவளுடைய வனப்புமிக்க புஜங்களேயும் கால்களேயும் அத்தை நாடியா கண்டு பரவசமானுள். ஆனந்தக் கண்ணீர் பெருக்கினுள். "ஆஹா, என்ன அழகு! நீ இவ்வளவு வனப்புமிக்கவளாக வளருவாய் என்று நான் நினைக்கவேயில்லை", என்று திரும்பத் திரும்பக் கூறினள்.

அவர்கள் படுக்கையிலிருந்தபொழுது, சோக மயமான விமான குண்டுவீச்சு எச்சரிக்கை சங்கு அலறுவதைக் கேட்டனர். ரேடியோவிலும் அந்த அபாய அறிவிப்புக் கேட்டது. அனிஷ்கா விளக்கை அணைத்துவிட்டு 'இருட்டுத் திரை'யை (Blackout curtain) உயரத் தூக்கினுள். வானத்தில் 'சர்ச் லைட்' ஒளிக்கற்றைகள் ஊடுருவின. அந்த வெளிச்சத்தில், ஆகாயத்தில் தூரத்தில் இருளில் அமைதியாக மிதந்து கொண்டிருக்கும் பலூன்கள் அவ்வப்போது தெரிந்தன.

"நான் குண்டுவீச்சுப் பாதுகாப்புக் குழிக்குப் போகப் போவதில்லை. அது சலிப்படையச் செய்கிறது", என்று அத்தை நாடியா, அனிஷ்காவைத் தன் பக்கம் சேர்த்து அணைத்தவாறே கூறினுள்.

அத்தை நாடியா பேசிக்கொண்டே தூக்கத்தில் ஆழ்ந்தாள். பஞ்சணையில் படுத்திருந்தபோதிலும், கடைசியாகத் தன் பசியை ஆற்றிக்கொண்டதினுல் மகிழ்ச்சி அடைந்திருந்தபோதிலும், நீண்ட நேரம் அனிஷ்கா, அத்தை நாடியாவின் கவலையற்ற மடிப்பு விழுந்த முகவாய்க்கட்டையையும் வெண்மையான கழுத்தையும் பார்த்துக்கொண்டே விழித்திருந்தாள். தன்னுடைய மகன் காணுமல் போயிருக்கும்போதும், விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட்டுக்கொண்டிருந்தபோதும், சிறிதும் கவலையின்றி உறக்கத்தை மேற்கொண்டிருந்த அந்த அம்மையாரின்பால் மீண்டும் அவளிடம் திடீரென வெறுப்புணர்ச்சி பொங்கி எழுந்தது. ஆயினும்,

தான் அவ்வாறு கருதுவது தவறு என்று அவள் நினைத்தாள். ஏனெனில் என்ன ஏற்பட்ட போதிலும் ஒருவர் தூங்காமலிருக்க முடியாது. இருந்தபோதிலும் அவளால் அந்த நினைப்பை மாற்றிக்கொள்ள முடியவில்லை. அவள் தூரமாகத் தள்ளிப் படுத்துக்கொண்டாள். ஏனெனில், குளித்துவிட்டுப் படுத்துக்கொண்டிருந்த தன் அத்தையின் உடம்பிலிருந்து வீசிக்கொண்டிருக்கும் சோப்பின் அருமையான நறுமணத்தை அவள் முகர விரும்பவில்லை.

''கடவுள் உன்மீது கருணை வைக்கட்டும்'', என்று அத்தை தூக்கத்தில் முனகினாள். கனவில் தன் மகனுடன் தான் அவ்வாறு பேசுகிறாள் என்று அனிஷ்கா புரிந்துகொண்டாள். ஆனாலும், பழங்காலத்திய அந்த எண்ணமும் அவளை மனச் சலிப்படையவே செய்தது. ஜெர்மன் மொழி கற்றுக் கொள்ளும் கழகத்தில் அவளுக்கு ஏற்பட்ட பழக்கத்தின்படி, அத்தை தூக்கத்தில் முனகியதை ஜெர்மானிய மொழியில் அவள் மொழி பெயர்த்தாள். தங்களுடைய புதல்வர்களுக் காகப் பிரார்த்தனை செய்யும்போது ஜெர்மன் தாய்மார் களும் அதே வார்த்தைகளைத்தான் உபயோகப்படுத்தினார் களென்று அவளுக்கு உடனே பட்டது. அந்த ஜெர்மானியப் புதல்வர்கள் அப்பொழுது மாஸ்கோவின் சுற்றுப் புறங்களில் குண்டுவீச்சு நடத்திக்கொண்டிருந்தார்கள்.

4

மூன்று நாட்களுக்குப் பிறகு பேராசிரியர் பெலோஜ் யொரோவ் போர்முனையிலிருந்து விமான மூலம் வந்து இறங்கினார்.

அவர் உயரமாகவும் பருமனாகவும் காணப்பட்டார். அவருடைய வனப்பு சிறிது குறைந்திருந்தது. அவருடைய மீசை பழுப்பு நிறமடைந்திருந்தது. அவருடைய தலை ஏற்கனவே நல்ல வெள்ளையாயிருந்தது. பழக்கமில்லாத பெட்ரோலின் வாசனை, தோல் சாதனங்கள். புகை ஆகியவற்றின் வாசனைகளும் அவருடன் கூடவே வந்தன. வெய்யிலினால் கருமை படர்ந்த சிவப்பு நிறமாயிருந்தார். வெய்யி

லிலும், மழையிலும், காற்றிலும், பனியிலும் அடிபட்டதின் தோற்றம் நன்கு தெரிந்தது. அவளுடைய பெரிய நீல நிறக் கண்கள்—அத்தை நாடியாவின் கண்களைப் போன்றே—இன்னும் அதிக நீலமாகவும். முன்னைவிடக் கருணை வடிவமாகவும் காணப்பட்டன.

''போர்முனையில் நீண்டகாலம் அடிபட்ட-வன், அன்பான உபசாரத்தை எதிர்பார்க்கிருன்'', என்று அவருடைய பலத்த நகைச்சுவையான குரலில் பெருமிதத்துடன் இரைந்தார்.

எப்போதும் போல் அவர் அங்கு இருந்தது அமைதியையும், கருணையையும், பரஸ்பர கருத்தொருமைப்பாட்டையும் ஏற்படுத்தியது. அவர் அளவற்று சிரித்துப் பேசினரென்ருே அல்லது கருணை நிரம்பப் பேசினரென்ருே அர்த்தமல்ல. அவர் அரிதாகவே பேசுவார். சிரிப்பதும் மிகக் குறைவு. ஒருக்கால், எல்லாவற்றுக்கும் மேலாக அவருடைய கண்களின் பார்வையே அதற்குக் காரணமாக இருக்கலாம். அவருடைய கண்கள் நம்பிக்கை நிறைந்து காணப்பட்டது, அன்பும் நிறைந்திருந்தது. அவைகள் நீங்களும் அவரை நம்பும்படியும், அவர்மீது அன்பு காட்டும்படியும் செய்தன. அது ஒரு பலஹீனம் என்ற அளவுக்கு அவர் கருணை மிகுந்தவராக இருந்தார். யாரும் பிறரால் அவமதிப்புக்குட்படுத்தப்பட முடியாத வகையில் அவ்வளவு அசாதாரணமான கருணை உள்ளம் படைத்தவராக இருந்தார்.

பேராசிரியர் பெலோஜ்யொரோவ் புகழ்மிகு ரண சிகிச்சை வைத்தியராக இருந்தார். தன் தொழிலை உலகத்தில் எதற்கும் மேலானதாகக் கருதினர். தன்னுடைய 57-வது வயதிலும்கூட, தன்னுடைய வாலிபத்தில் கருதியது போலவே அதே பயபக்தியுடன் அத்தொழிலைக் கருதி வந்தார். ஆயினும், வைத்தியத் துறையில் முன்னேற்றம் மிகவும் மெதுவாகவே இருந்ததைக் கண்டு அவர் பொறுமை இழந்தார். ஆனல், அவர் நம்பிக்கை இழக்கவில்லை. இதர விஞ்ஞானத்துறைகளில் ஏற்பட்டுள்ள சாதனைகளின் பயனக அடுத்த இருபது ஆண்டுகளில் வைத்தியத்துறையும் முன்னெப்பொழுதும் அடைந்திராத மகத்தான முன்னேற்றம் அடையும் என்று அவர் தீர்க்க தரிசனத்துடன்

கூறினர். இதர விஞ்ஞானத்துறையின் சில சாதனைகள் வைத்தியத்துறையில் எதிர்பாராததும், மிகவும் முக்யத்துவம் வாய்ந்ததுமான மாறுதல்களை ஏற்படுத்தும் என்றும் அவர் கருதினர்.

அத்தை நாடியாவின் வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக அவர் கை, கால் முகம் கழுவி சுத்தம் செய்துகொண்டார். அவர் தன் கைகளின் மீதுள்ள தண்ணீரை—ஒரு ஆபரேஷன் செய்யப்புகுமுன் செய்வதுபோல்—அவ்வளவு சுத்தமாகத் துடைத்துக்கொண்டார். அவ்வப்பொழுது அனிஷ்காவின்மீது கண்ணோட்டம் செலுத்தி "அருமை மகளே, எப்படியிருக்கிருய்?" என்று கேட்டுக்கொண்டார்.

அனிஷ்கா தற்பொழுது மாஸ்கோவில் இருக்கிருள் என்பதையும், அவள் என்ன செய்யத் திட்டமிட்டுக்கொண்டிருக்கிருள் என்பதையும் அத்தை நாடியாவின் கணவர் போர்முனையில் அவருக்கு (அனிஷ்காவின் தகப்பனுருக்குச் செய்தி அனுப்பியிருப்பார். எனினும், பேராசிரியர் ஆரம்பத்தில் தன் மகளிடம் விஷயத்தைக் கூறவில்லை. அவர் அவள் அருகில் அமர்ந்துகொண்டு, அவளிடம் கேள்வி கேட்பதற்கு பதிலாக, போர்முனையில் தன்னுடைய வேலைகளைப் பற்றி அவளிடம் கூற ஆரம்பித்தார். சிக்கலான ஆபரேஷன்கள், படுகாய மடைந்தவர்களுக்கு ரத்தம் செலுத்துவது பற்றி யெல்லாம் கூறினர். டாக்டரின் குடும்பத்தில் வளர்ந்ததால் அனிஷ்காவுக்கு வைத்தியச் சொற்கள் நன்கு பரிச்சயமாயிருந்தன. அவளிடம், ஒரு சக-டாக்டரிடம் பேசுவதைப் போல் லத்தீன் வார்த்தைகளை உபயோகப்படுத்தியும், யுத்த முற்காலத்திய தன் வைத்திய அனுபவங்களை எடுத்துக் கூறியும் பேசமுடிந்தது பேராசிரியருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

போர்முனையைப் பற்றிய தன் கருத்துக்களையும் அவளிடம் அவர் எடுத்துக்கூறினர். அங்கு வாழ்க்கை உற்சாகமற்ற முறையிலும், சலிப்புத்தட்டக்கூடிய முறையிலும் இருக்கிறது என்று தோன்றச் செய்யக்கூடிய வகையில் சிறிது மிகைப்படுத்தியே கூறினர்.

அவர் தன் மகளிடம் அளவற்ற அன்பும், பாசமும் வைத்திருந்தபோதிலும், பல விவேகமான தந்தைமார்களைப் போலவே அனிஷ்காவிடம் மிகவும் விமர்சனக் கண்ணோட்டத்துடன் கூடிய ஒரு போக்கையே கடைப்பிடித்து வந்தார். அவள் தன்னுடைய பழக்கங்களிலும், விருப்பங்களிலும் ஆடம்பரக்காரியாகவும், சோம்பேறியாகவும், இன்சுவைகளை விரும்பக்கூடியவளாகவும் இருக்கிறாள் என்று அவர் நினைத்தார். அதேசமயத்தில் அவளுடைய நற்பண்புகளையும் அவர் அங்கீகரித்தார். அவளுடைய புத்திக்கூர்மை, உடன்பிறந்த கருணை மனப்பான்மை, உற்சாகம், நல்ல நகைச்சுவை, உறுதியான நேர்மைக்குணம் ஆகியவற்றுக்கு உரிய மதிப்புத் தந்தார். ஆனால், அவளுடைய உறுதியான நேர்மைக் குணத்தில், அடிக்கடி, ஒரு நாகரிக யுவதியின் ஆடம்பரத் தன்மைக்குமேல் வேறெதையும் அவர் பார்க்கவில்லை. அவருடைய வாயால் ''நாகரிக யுவதி'' என்ற பதப் பிரயோகம் கடுமையான பழிச்சொல்லாகும். சோம்பேறியான, சுகபோகங்களை விரும்பும், தன்னைப்பற்றியே அதிகம் கவலைப்படக் கூடியவள் என்று அதற்குப் பொருள். இதை அவர் ''முதலாளித்வப் பிறப்பின் அடையாளம்'', என்று ஏளனமாகக் கூறுவார்.

குழந்தைகளைக் கடுமையான முறையில் வளர்க்க வேண்டுமென்பதிலும், அவர்கள் கஷ்டநஷ்டங்களிலும், கடும் உடல் உழைப்பிலும் அனுபவம் பெற வேண்டுமென்பதிலும் பெலோஜ்யொரோவ் நம்பிக்கை கொண்டவர். ஆனால், அது அவருடைய தத்துவக் கோட்பாடாகத்தான் இருந்தது. நடைமுறையில் தன் மகளிடம் பலஹீனத்தையே காட்டி வந்தார். அது அவரையே வதைப்பதாகவும், அறுவெறுப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. அவர் அரை மனதுடன், எப்படியிருந்தபோதிலும், தன் 13-வது வயதிலேயே அனிஷ்கா தாயை இழந்தவளாயிற்றே என்ற காரணத்தைக் கொண்டு அவர் சமாதானப்படுத்திக்கொண்டார். மேலும், அவருடைய வேலையிலேயே அவருடைய நேரம் பூராவும் செலவழிந்து வந்தது.

அனிஷ்காவுக்கு வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், பொதுவான சுற்றுச்சார்பிலும் கிடைத்த கல்வி போதனையைப் பற்றி வாஸ்தவத்தில் அவருக்கு நல்ல அபிப்பிராயம் கிடையாது. கல்வி போதனையில் பிரதானமாக பல்வேறு விதமான விதிகள், உபதேச வசனங்கள், புத்திமதிகள் ஆகியவையே அடங்கியுள்ளன என்ற பண்டைக்காலத்திய கருத்தையே அவர் விடாப்பிடியாகக் கொண்டிருந்தார். அந்தப் பெண்ணின் சுற்றுச்சார்புகள், தினந்தினம் காணும் தன்னலமற்ற உழைப்பின், மனப்பூர்வமான கடமை உணர்ச்சியின் உதாரணங்கள், அவளுடைய பல நண்பர்கள் இவ்வாறு நடந்துகொண்டது, குறிப்பாகத் தன்னுடைய தகப்பனாரின் உதாரணம் அவளிடம் ஓர் ஆழமான பிரதிபலிப்பை ஏற்படுத்தியது என்பதை அவர் மறந்தார். அவளுடைய வயதிற்கு ஒத்தமுறையில் வாழ்க்கையை அவள் விமர்சனக் கண்ணோடு பார்த்தாள் என்பதை அவர் புறக்கணித்தார். தன்னுடைய குடும்பமும், நெருங்கிய உற்றார் உறவினர்களும் வளர்ந்து உண்டாக்கி வந்துள்ள லட்சியத்துக்குப் புறம்பான முறையில் உள்ள எதையும் பார்த்த அளவிலேயே அவள் நிராகரித்து வந்தாள் என்பதையும் அவர் உணரவில்லை. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், விவேகமும், புத்திக்கூர்மையும் இருந்தபோதிலும் அந்தப் பேராசிரியர் தன்னுடைய மகளைப் பற்றியும், அவளுக்குள் என்ன ஏற்பட்டு வந்தது என்பதைப் பற்றியும் ஒன்றும் தெரியாதவராகவே இருந்தார்.

அதனால்தான், அந்த ஜெர்மன் மொழிப்பயிற்சிக் கழகத்தைவிட்டு வெளியேறி போர்முனைக்குச் செல்வது என்ற அவளுடைய முடிவைக்கண்டு அவர் ஆச்சரியமும், அச்சமும் அடைந்தார். இது மிகவும் எதிர்பாராததாகும் என்றும், அவளுடைய சுபாவத்திற்கு விரோதமானதாகும் என்றும் அவர் கருதினார்.

போர்முனையில் தன்னுடைய வாழ்க்கையைப் பற்றி அவர் சொல்லும்பொழுது அவருடைய பார்வை அவள்மீதே பதிந்திருந்தது. அவள் தன்னைப்பற்றி ஏதேனும் கூறுவாள் என்று எதிர்பார்த்தார். ஆனால், அவள் வாய்த்திறக்க

வில்லை. தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். அரைக்கண்ணை மூடிய வண்ணம் அவள் அவரை உற்று நோக்கி வந்தாள். நீண்டகாலம் ஒருவருக்கொருவர் பிரிந்திருந்ததற்குப் பின்னால், அத்தகைய ஆழமான பேச்சை ஆரம்பிப்பதற்கு அவருக்கோ அல்லது அவளுக்கோ துணிவு இல்லை. ஏனெனில் அத்தகைய பேச்சு கருத்து மாறுபாட்டிலும், பரஸ்பரம் வெறுப்புணர்ச்சியிலும் கொண்டுபோய் முடியும் என்று இருவரும் உணர்ந்திருந்தனர்.

கடைசியாகத் தகப்பனார் அந்த விஷயத்தை ஆரம்பிப்பதற்கு முடிவு செய்தார். தன்னை முதலில் கலந்து கொள்ளாமல் அத்தகைய அவசரப்பட்ட ஓர் நடவடிக்கையை அவள் ஏன் எடுத்தாள் என்று அவளைக் கேட்டார். தன்னுடைய சிந்தனையோட்டத்தையும், தன் நோக்கங்களையும் விளக்குவதற்கு அவள் முயன்றாள். அவளுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டு வருகையில், அவர் தன்னுடைய மகளாக இல்லாமல் இருந்திருப்பாளேயானால், அந்த சூழ்நிலையில் அவளுடைய நோக்கங்களின் வலிமையையும், நியாயத் தன்மையையும் தான் உணர்ந்துகொண்டிருக்க முடியும் என்று அவர் நினைத்தார். ஆனால், அவள் அவருடைய மகளாக இருந்தாள். உணர்ச்சியால் சிவந்த அவளுடைய இளமையான முகத்தை பார்த்துக்கொண்டிருந்தபோது, அவள் கொல்லப்பட்டுவிடலாம் என்று எண்ணியபோது, பயம் அவருடைய இருதயத்தை சலனமற்றதாக்கிவிட்டது. ஆம், அந்தப் பழைய மனோபாவம்தான்; எவ்வளவு எதார்த்த பூர்வமாக இருப்பதற்கு அவர் முயற்சி செய்தபோதும்கூட அந்த மனோபாவத்திலிருந்து அவரால் விடுபட முடியவில்லை. பின்னர் சொற்ப முக்யத்துவமுடைய வாதங்களால் உண்மையை மூடிமறைப்பதற்கு அவர் முயற்சி செய்தார். அவள் அந்தக் கடிதத்தை வாஸ்தவமாகவே வெறுத்த போதிலும்கூட, அதிலிருந்து தானாக ஓடிவருவது கட்டுப்பாட்டை மீறிய செயலாகும். யுத்தகாலத்தில் அது அனுமதிக்க முடியாததாகும், என்று அவர் கூறினார். அவள் ஓர் வைத்தியக் கழகத்தில் சேரலாம், அல்லது போர்முனைக்குச்

செல்வதற்கு அவளுக்கு அவ்வளவு ஆவல் இருக்குமெனில், தன்னுடன் வரலாம், என்று மட்டும் இறுதியாகக் கூறினர்.

தன்னுடைய வாதம் மிகவும் பலஹீனமானது என்பதை உணர்ந்த அவர், அவளுடைய திட்டங்களை கைவிடும்படிச் செய்வதற்கு, அவளை வசப்படுத்தத் தக்க, சிறந்த சொற் பிரயோகங்களை உபயோகப்படுத்தினர். ஆனால், அவருடைய முயற்சிகள் பயனற்றுப்போயின. அவருடன் செல்வதற்கு அவள் மறுத்தாள். ஏனென்றால், ''ஓர் பேராசிரியரின் மகளாகவே தன் வாழ்க்கை முழுவதும் இருப்பதற்கு'' அவள் விரும்பவில்லை. போர் முடிந்தபின் கழகத்தில் மீண்டும் சேருவதாகக் கூறினள்.

இந்நிலையில், அவள் ஏதோ வேறு காரணத்திற்காக முற்றிலும் தன்னை சம்பந்தப்பட்ட சொந்தக் காரணத்திற் காகத்தான் பொர் முனைக்குச் செல்ல விரும்புகிருள் என்று அவர் சந்தேகப்பட்டார். ஒருக்கால் போர் முனையிலிருந்து வந்த உயர்தர அதிகாரி யாரையாவது அவள் சந்தித்திருக்க லாம். அந்த ஆசாமி இந்தக் கருத்தை அவளுடைய மண்டை யில் ஏற்றியிருக்கலாம். இத்தகைய சம்பவங்களைப் பற்றிப் பேராசிரியர் கேள்விப்பட்டுள்ளார்.

இதை அவர் பட்டவர்த்தனமாகக் கூறவே, அவமானம் தாங்காமல் அனிஷ்கா சீறியெழுந்தாள். ஆனல் அவருடைய சந்தேகங்களுக்குச் சிறிதும் ஆதாரமில்லையென்பது அவளுக் குத் தெரியும். எனவே அவள் கம்பீரமாகத் தலையை அசைத்தவண்ணம், இந்த உரையாடலால் யாதொரு பய னும் ஏற்படப் போவதில்லையென்பது தனக்குத் தெரியுமென் றும், மிகவும் அருவெறுப்பையே ஏற்படுத்தியதென்றும், நல்லவர்கள்கூட அத்தகைய தீய எண்ணங்கள் கொண்டிருப் பதற்குத் தான் மிகவும் வருந்துவதாகவும் கூறினள்.

தன் மகளைத் தன் வழிக்குத் திருப்ப முடியாத நிலையில், மறுநாள் ஜெனரல் பெலோஜ்யொரோவ் போர் முனைக்கு விமானத்தில் பறந்தார்.

மாஸ்கோவிலுள்ள இளங் கம்யூனிஸ்ட் சங்கத்தின் கமிட் டிக்கும், ராணுவ மந்திரி இலாகாவிற்கும், தன்னைப் போர் முனைக்கு அனுப்புவதற்கு ஏற்றுக்கொள்ளும்படி கோரி

அனிஷ்கா அனுப்பிய விண்ணப்பங்களுக்கு இன்னும் ஒரு பதி லும் கிடைக்கவில்லை. கழகத்திலிருந்து அவள் ஓடி வந்து விட்ட விஷயம் இயற்கையாக அவர்களை ஜாக்ரதையாக இருக்கும்படி செய்தது. கடைசியாக அவள், படைத் தலைவரும், தன் குடும்பத்தின் பழைய நண்பருமான லெப்டினென்ட் ஜெனரல் சிலயேவ் என்பவருக்கு எழுதுவதென்று முடிவு செய்தாள்.

அதிர்ஷ்டவசமாக, அவர் தன் அலுவலகத்திலேயே வசித்துவந்தார். அவருடைய குடும்பத்தினர் தாங்கள் இருந்த வீட்டைக் காலி செய்துவிட்டு வெளியூர் சென்று விட்டனர். அவர்மட்டும் தனியாக, உற்சாகமேற்படுத்த முடியாத நிலையிலுள்ள தன் வீட்டில் தங்குவதற்கு விரும்ப வில்லை. நெஞ்சை விகசிக்கச் செய்யும் பல நினைவுகள் அத்துடன் சம்பந்தப்பட்டிருந்தது. மேலும், அவருக்கு ஏராளமான வேலைகள் இருந்ததாலும், வழக்கம்போல் காரியாலயத்தை விட்டு வீட்டுக்குப் போய்வர அவருக்கு நேரமில்லாமலிருந்தது.

ஜெனரல் சிலயேவ் அகலமான முகத்தையும், கனத்த, வலிமைவாய்ந்த கழுத்தும், ஒட்ட வெட்டிய தலை முடியும் கொண்டவர். முன்பு அவர் பண்ணைத் தொழிலாளியாக இருந்தார். நீண்டகாலத்திற்கு முன்னல் அவர் தன் வேலையை விட்டு விட்டு செஞ்சேனையில் சேர்ந்தார். அன்று முதல் அவர் செஞ்சேனையில் நீடித்து இருந்து வருகிறார். வேறு எந்த வேலை செய்வதற்கோ, ராணுவ உடுப்பைத் தவிர வேறு உடுப்பு எதுவும் அணிந்துகொள்ளவோ அவருக்கு சிறிதும் விருப்பமில்லை. அவர் மிகவும் சிறந்த படை வீரர். தன்னுடைய மேலதிகாரிகளுக்கு சிறிதும் பிறழாமல் கீழ்ப்படிந்து நடப்பதுடன், அதேபோலவே மற்றவர்களை யும் சிறிதும் பிசகாமல் தனக்குக் கீழ்ப்படியும்படி செய்யும் திறமைகொண்டவராகவும் இருந்தார். வெளிப்படையாக மிகவும் கண்டிப்பானவர். அனேகமாக முரட்டுத்தனமாக இருப்பதாகத் தோன்றும். அதேசமயத்தில் ஒரு சோல்ஜரின் உள்ளப் பாங்கைப்பற்றி ஆழ்ந்த அறிவுடையவராக இருந்தார். ராணுவ சரித்திரம்பற்றி நல்ல தேர்ச்சி உடையவர்.

ஒரு ஜெனரலின் அந்தஸ்துக்கு செலுத்தவேண்டிய மரியாதையும், முழு ஞானமும் பெற்றவர். இதர ஆட்களுடன் தன்னுடைய நடவடிக்கைகளில் இயற்கையானதும், அசைக்க முடியாததுமான ஜனநாயக உணர்வைக் கொண்டிருந்தார். இதனுல், தனக்குக் கீழ் உள்ளவர்களின் அன்பையும், பெரு மதிப்பையும் பெற்முர்.

அவளுடைய நடத்தையைப் பற்றி சந்தேகப்படுவதற்கு அவர் முயற்சிகூட செய்யாதது அனிஷ்காவுக்கு அளவற்ற ஆனந்தத்தை ஏற்படுத்தியது. அவர் உடனே விஷயத்தை புரிந்துகொண்டு அதைப் பாராட்டவும் செய்தார். அனிஷ்கா பயப்பட்டதற்கு நேர்மாருக, அவளை எதிர்நோக்கும் கஷ்டங்களைப் பற்றியோ, அல்லது அவள் "சொகுசாக வளர்க்கப் பட்டதைப்பற்றியோ" ஒரு வார்த்தைகூட-அவர் மூச்சே விடவில்லை.

"நல்லது, நான் நன்ருகப் புரிந்துகொண்டேன். சரி, நீ எங்கு போக விரும்புகிருய்?"

தனக்கு ஜெர்மானிய மொழி தெரியுமென்றும் தேவையான பயிற்சிக்குப் பிறகு, விரோதியின் அணிகளுக்குப் பின்னுல் போய் வேலை செய்ய முடியுமென்று தான் நினைப்பதாயும் அவள் பதிலளித்தாள். அவர் மேஜையின்மீது விரல்களால் தாளம் போட்டுக்கொண்டே "வாஸ்தவம், வாஸ்தவம்", என்று கூறினுர்.

"நான் ஒரு ஜெர்மானியனைப் போலவே ஜெர்மன் மொழி பேசுகிறேன்".

"வாஸ்தவமே, வாஸ்தவமே".

"விரோதியின் அணிகளுக்குப் பின்னுல் போய் எந்த வேலை கொடுத்தாலும் திருப்திகரமாகச் செய்து முடித்து விட்டு வருவேன்."

"உண்மையே, உண்மையே" அவர் தன் விரல்களால் தாளம் போட்டுக்கொண்டேயிருந்தார்.

கடைசியில் தாளம் போடுவதை நிறுத்திவிட்டு, நீண்டநேரம் அவர் மௌனமாக இருந்தார். தலையை அசைத்தவண்ணமிருந்தார். ஆழ்ந்து சிந்திப்பவரைப்போல. அவளுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கான சிறந்த,

விரைவான வழியை அவர் கண்டுபிடிப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருப்பவரைப்போல் காணப்பட்டார். ஆனல், உண்மையில், அதை எவ்வாறு தவிர்ப்பது என்பதுபற்றியே அவர் சிந்தித்துக்கொண்டிருந்தார். அவளுடைய அபிலாஷையைப் பூர்ணமாக உணர்ந்துகொண்டார், அவளுடைய உணர்ச்சிகளை முற்றிலும் அறிந்துகொண்டார். அவளுடைய நிலைமையில் அவர் இருந்தால்—இருபது வயதிலேயே விரோதியின் மொழியை அப்பழுக்கின்றித் தெரிந்துகொண்டுள்ள நிலையில்—ஒருக்கால் அவளைப்போன்ற அதே விருப்பத்தையே அவரும் கொண்டிருப்பார். ஆனல் அவர், பேராசிரியர் பெலோஜ்யொரோவிடம் மிகுந்த அன்பும், மரியாதையும் வைத்திருந்ததால், அவருடைய ஒரே மகளை அத்தகைய சிக்கலான, ஆபத்தான பணியில் அனுப்புவதற்கு விரும்பவில்லை. மாருக, இதுபற்றி அவளுடைய தகப்பனரின் விருப்பம் எப்படியிருக்கும் என்பதை அவர் ஊகித்தார்.

கடைசியாக அவர் கூறினர், "நாங்கள் இதுதான் செய்வோம். நாங்கள் இந்த முறையில் உன்னுடைய விருப்பத்திற்கு பரிகாரம் கூறுகிறேம். ராணுவ மந்திரி அலுவலகத்திற்குச் சென்று அவர்கள் உன்னை ராணுவத்தில் பதிவு செய்யும்படி செய்துகொள். பிறகு என்னிடம் வரவும். "உன்னை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும்படி ராணுவ அமைச்சராலயத்துக்கு உத்தரவு அனுப்பப்படும்."

அவளை, அவர் மாடிப்படி வரையில் அழைத்துச்சென்ருர். பிறகு மேலிருந்து அவளை நீண்டநேரம் வரையில் கவனித்துக் கொண்டே நின்ருர். தன் தலையை அசைத்தவண்ணம் வேடிக்கையாக உறுமிக்கொண்டிருந்தார்.

ஜெனரல் சிலயேவின் முயற்சிகளின் பயனுக மேற்குப் போர்முனை தலைமைக் காரியாலயத்துச்கு ஒரு மொழி பெயர்ப்பாளராக அவள் அனுப்பப்பட்டாள். ஒரு பெரிய அமைதியான கிராமத்தில் அவளுக்கு ஓர் அறை கொடுக்கப் பட்டது. அதே அறையில் க்ளாவா, மாஹ்ா என்ற இரண்டு டெலிபிரிண்டர் ஆபரேட்டர்களும் இருந்தனர். பனிக்காலம்

அதீத குளிராக இருக்கவில்லை. ஆனால், காற்றுமட்டும் விர் விர்ரென்று அடித்துக்கொண்டிருந்தது. பொதுவாக அங்கு மிகவும் அமைதியாக இருந்தது. போர்முனைக்குப் பின்னால் வெகுதூரத்தில் அனிஷ்கா இருந்து ஓடிவந்த வால்கா நதிக்கரை நகரத்தைவிட மிகவும் அமைதியாக இருந்தது. அகலமான அந்த வீதி தடுப்பு வேலிகளால் வெளி உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டிருந்தது. வேலியின் அருகில் செம்மறி ஆட்டு ரோமத்தால் ஆன மேலங்கிகளை அணிந்த வீரர்கள் காவல் காத்துவந்தனர். தலைமைக் காரியாலயத்தி லிருந்த அதிகாரிகளுக்கு நிறைய வேலை இருந்தது. ஆனால், அது பூராவும் வழக்கமாக தினமும் செய்யவேண்டிய ஆபீஸ் வேலையாகவே அனிஷ்காவுக்குப் பட்டது. அவர்கள் ஒரு குண்டுகூட வெடிக்கவில்லை. அவர்கள் செய்ததெல்லாம் எழுதுவதும், தொலைபேசியில் பேசுவதுமட்டுமே. அங்கு ஏராளமான டெலிபோன்கள் இருந்தன, அதனால் காரியாலயத்தின் அருகாமையில் வலைபோல் கம்பிகள் நிறைந் திருந்தன. சில கம்பிகள் தந்திக்கம்பிகளோடு இணைக்கப் பட்டிருந்தன. சில கம்பிகள் வெறுமனே தரையில் கிடந்தன.

ஆரம்பத்தில் கிளாவாவும், மாஹாவும், நீண்டகாலமாக இருக்கின்றவர்கள் என்ற முறையில் அந்த அறையிலுள்ள எல்லா வேலைகளையும் செய்வதைத் தங்கள் கடமையாகக் கொண்டனர். அறையை சுத்தம் செய்வது, தண்ணீர் கொண்டுவருவது, அனிஷ்காவின் கைக்குட்டைகளையும் கூட தங்களுடைய கைக்குட்டைகளுடன் சேர்த்து அலசி சுத்தப்படுத்துவது முதலிய எல்லாவற்றையும் செய்து வந்தனர். ஆரம்பத்தில் அனிஷ்கா இதை கவனிக்கவே இல்லை. அல்லது இதை இயற்கையானதாகவே எடுத்துக் கொண்டாள். ஆனால், ஒரு நாள் இது அவளுடைய மனதில் சுருக்கென்று தைத்தது. அது அவளுக்கு ஒரு அதிர்ச்சியையே கொடுத்தது. உடனே அவள் தன் பாத்திரத்தை மாற்றிக் கொண்டாள். வீட்டு வேலைகள் பூராவையும் தானே செய்ய ஆரம்பித்தாள். ஏனெனில், அலுவலக வேலைகள் மற்ற இரண்டு பெண்களைவிட இவளுக்குக் குறைவாகவே

இருந்தது. அந்த இருபெண்களும் தினந்தோறும் இரவு தவருமல் பூமி மட்டத்திற்கு அடியிலிருந்த தந்தி அறையில் உட்கார்ந்து வேலே பார்க்கவேண்டியிருந்தது.

அவர்கள் இருவரும் அனிஷ்காமீது அன்பு செலுத்தி அவளே விரும்பினர். கொஞ்சம் தாராளமாக அவள் பழகுவதில்லே என்பதைத் தவிர மற்றபடி அவள் மிகவும் நல்லவளாக இருக்கிருள் என்றும் கூறினர்.

அவள் சுமுகமாகப் பழகுவதில்லே என்று அவளேச் சுற்றியுள்ளவர்கள் உண்மையாகவே நினேத்தார்கள். ஆண்களுடன் அவள் முரட்டுத்தனமாகவும், நேசபாவமற்ற முறையிலும்தான் இருந்தாள். அவர்கள் மனம் புண்படும் படியாகப் பேசவும் செய்தாள். அவர்களில் யாராவது அவளுடன் நெருங்கிப் பழகுபவராக இருந்தால், அவள், எல்லோருக்கும் கேட்கக்கூடிய முறையில் உரக்கமாக உயர்தர அதிகாரிகளின் முன்னிலேயிலும் கூட, தன்னிடம் பழகுபவர் அவ்வளவு நெருங்கிவரக் கூடாதென்று—கள்ளங்கபடின்றிப் பேசுவதாகத் தோன்றிலுைம்—சொல்லி அவர்களேக் கண்டித்தாள். அவர்களே முட்டாள்களாக்கினுள். இத்தகைய நிலேயில் அவர்கள் அவள் அருகில் வரவே வெட்கப்பட்டனர். இந்த தற்பாதுகாப்பு முறை மிகவும் பயனுள்ளதாக இருந்தது. அவர்கள் அவளே "மகத்தான எதிர்ப்பு கேந்திரம்" என்று புனேப் பெயரிட்டு அழைத்தனர். அவளால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனேவரும் அவள் நடந்துகொண்ட முறையை விரும்பினர். அவளுக்கு மரியாதை செலுத்தினர். ஒருவிதத்தில் அவளேப்பற்றிப் பெருமைப்படவும் செய்தனர். ரயில்வண்டியில் நோஞ்சான் லெப்டினென்டுடன் அவளுக்கு ஏற்பட்ட அனுபவம் உண்மையிலேயே உதவிகரமாக இருந்தது.

"ஓ, இது உண்மையிலேயே ரொம்பவும் வேடிக்கையாக இருக்கிறது", என்று கிளாவா, தன்னேப் பாராட்டி விரும்புபவர்கள் விஷயத்தில் தான் எவ்வாறு நடந்துகொண்டாள் என்று அனிஷ்கா கூறியதைக் கேட்டபோது ஆச்சரியத்துடன் கூறினுள்.

"அனிஷ்கா நீ நடந்துகொண்டது மிகவும் சரி. அவர்களிடத்தில் அவ்வாறு தான் நடந்துகொள்ளவேண்டும்! நீதான் அவர்களுக்குச் சரியான ஆள்!"

ஆனால் தான் சரியான ஆள் என்று அனிஷ்கா நினைக்க வில்லை. ஆனால் அதற்கு மாறாக தான் கொடுமைக்காரி யாகவும், தன்னைப்பற்றியே அதிகம் கவலைப்படுபவளாகவும், நிதானமான மனப்பான்மை இல்லாதவளாகவும், பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப்பற்றி அதிகம் சிந்திப்பவ ராகவும், சுருக்கமாகச் சொல்லப்போனால், தான் அதிகமாகச் சிந்தித்துக்கொண்டே இருப்பவளாகவும், ஒரு விஷயத்தி னுடைய சாதக, பாதகங்கள் தெரியாமல் எந்தக் காரி யத்தையும் செய்யாதவளாகவும் இருப்பதாக அவள் நினைத்தாள். முன்கூட்டியே திட்டமிட்டுக்கொண்டு நல்லவ ளாக இருப்பது நேர்மையற்றதென்று அவள் நினைத்தாள். தன்னையறியாமலேயே ஒருவர் நல்லவராக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த நபர் அமைதியாகவும், மகிழ்ச்சி யுடனும் இருக்க முடியும்.

ராணுவத் தலைமைக் காரியாலயத்திற்கு வந்த வுடனேயே, அனிஷ்கா தான் விரோதியின் ராணுவத்தின் பின்னணிக்கு அனுப்பப்படுவதற்கும் அல்லது இன்னும் போர் முனைக்கு நெருங்கிய ஓர் இடத்திற்கு அனுப்பப்படுவதற்கு மான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டாள்.

ஆனால், அது கஷ்டமான காரியமாக இருந்தது. அதற்குக் காரணம் பெரிய அளவுக்கு ஜெனரல் சிலயேவி னுடைய "சூழ்ச்சிகளும்", ராணுவத் தலைமைக் காரியாலயத் திற்கு அவள் யாருடைய மகள் என்பது தெரிந்திருந்ததும் ஆகும். மேலும், போர்முனைக்கு இன்னும் அருகாமையில் உள்ள ஓர் ரெஜிமெண்டுக்கோ அல்லது டிவிஷனுக்கோ அனுப்பப்பட வேண்டுமென்ற அவளுடைய விருப்பமானது சிறுபிள்ளைத்தனமான துணிச்சல் என்று பலரும் கருதினர். எனவே அந்தக் கருத்தை ஆதரிக்கவில்லை.

ஆயினும், ராணுவத் தலைமைக் காரியாலயத்தில் அனிஷ்கா செலவழித்த மாதங்கள் அவளுக்குப் பிரயோஜன மில்லாமல் போகவில்லை. ராணுவத்தினுடைய தன்மை

யையும், வாழ்க்கை முறையையும் அவள் புரிந்துகொண்டாள். பல கோட்பாடுகளையும், பழக்கங்களையும் அவள் நன்கு பயின்றுகொண்டாள். ராணுவத்தில் இல்லாமல் ஒருவரால் இதைப் பழகியிருக்க முடியாது. இதுதவிர, அரிதாக வந்த யுத்தக் கைதிகளைக் கேள்வி கேட்கும் வேலையிலும் அவள் பங்கெடுத்துக்கொண்டாள். (மாஸ்கோ பகுதியில் நம் எதிர்த்தாக்குதல் ஏற்கெனவே முடிந்துவிட்டது. அதில் கைதிகளாகப் பிடிபட்டவர்கள் சொற்பமே.) மற்றும் ஜெர்மன் கடிதங்கள், தஸ்தாவேஜுகள் ஆகியவற்றை மொழி பெயர்ப்பதிலும் ஈடுபட்டாள். இதன் மூலம் ஜெர்மன் ராணுவ தஸ்தாவேஜுகள், பொதுவாகக் கடிதங்கள் ஆகியவை எழுதப்படும் முறையையும் தெரிந்து கொண்டாள். ஜெர்மன் ராணுவத்தின் அமைப்பு, விதிகள், ராணுவ உடைகள், ராணுவ அடையாளங்கள், விருதுகள் ஆகியவைபற்றியும் நன்கு ஆராய்ந்து பயின்றாள். ஜெர்மன் டிவிஷன்களின் எண்ணிக்கை இனி ஒருபோதும் அர்த்தமற்ற வார்த்தைகளாக இருக்கவில்லை. விரோதி இனி ஒருபோதும் ஆய்ந்தறிந்துகொள்ள முடியாத பயங்கர சக்தியாக இருக்கவில்லை. ஆனால் இரத்தமும் கறையுமாக, எண்ணிக்கையும், புள்ளி விவரங்களுமாக இருந்தாள்.

இறுதியாக, அவள் தான் நடந்து கொள்ளவேண்டிய முறை பற்றிய ஒழுங்கு விதிகளைத் தானே வகுத்துக்கொண்டாள். இது மற்றவர்கள் அவளை "சமூகமாகப் பழகாதவள் என்று கூறும்படி செய்தது. ஆனால் அதே சமயத்தில் எதையும் சந்தேகமறச் செய்பவள் என்ற ஓர் அபிப்ராயத்தை அவளைப்பற்றி ஏற்படுத்தியது.

இருந்தபோதிலும், அவள் தன் நோக்கத்தைப் பொறுமையாகக் கடைப்பிடித்து வந்தாள். படிப்படியாகப் போர் முனைக்கு அருகில் செல்வதில் வெற்றியும் பெற்றாள். போர் முனைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து ராணுவத்திற்கும், ராணுவத்திலிருந்து டிவிஷனுக்கும், கடைசியில் ரெஜிமெண்டுக்கும் போய்ச் சேர்ந்தாள்.

இந்த வரலாற்றையெல்லாம் அனிஷ்கா, கேப்டன் அகிமோவின் பாசறையில், போர் நடவடிக்கையின் முந்தின

நாள் இரவு கர்னல் வெர்ஸ்டோவ்ஸ்கியிடம் கூறினுள். சுருக்கமாகவே கூறினுள். மிகவும் சிக்கலான பகுதியை—தன்னுடைய சொந்த மன வேதனைகளைப்பற்றி ஒன்றும் கூற வில்லை.

கர்னல் வெறுமனே தலையை அசைத்து, பெருமூச்சு விட்டார்.

"உன்னுடைய தகப்பனுர்தான் மிகவும் வேதனைப் படுவார்," என்று கூறினுர்.

அவர் தன்னுடைய கைக்கடியாரத்தைப் பார்த்தார். தான் கிளம்பவேண்டிய நேரமாயிற்று என்ற நினைவு வந்தது. ஆயினும் அனிஷ்காவை விட்டு விட்டுப் புறப்படுவதற்கு அவருக்குக் கஷ்டமாயிருந்தது. தன்னுடைய நண்பர் ஜெனரல் பெலோஜ்யொரோவின் மகளை—அங்கு அவளைப் பார்த்துக் கொள்வதற்கு யாரும் இல்லாத நிலையில் தனியே விட்டுப்போவதின் மூலம், தன் நண்பன் பெலோஜ்யொரோவுக்கு ஓர் அநீதி இழைப்பதாக உணர்ந்தார்.

"நான் போயாக வேண்டும்" அவர் கடைசியாகக் கூறினுர். சண்டையின்போது நான் உன்னுடைய ரெஜிமெண்ட் கமாண்டருடன் இருக்கவேண்டும். நீயும் வந்துவிடு. இங்கு நீ செய்வதற்கு ஒன்றுமில்லை," என்ருர்.

அவளை நோக்கிக் குனிந்துகொண்டு, சுற்றிலும் ஆவலுடன் திரும்பிப் பார்த்து, நாளையதினம் ரெஜிமெண்டுக்கு ஓய்வு கொடுக்கப் போகிருர்கள் என்ருர்.

பின்னர் இருட்டான ஓரிடத்தில் மறைவாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தன்னுடைய காருக்குச் சென்று, ஏறி உட்கார்ந்துகொண்டு ரெஜிமெண்ட் தலைமைக் காரியாலயத்திற்குக் காரை விட்டுச் சென்ருர். ஆனல் காரிலும்கூட அவருடைய மனதிற்கு நிம்மதி ஏற்படவில்லை. "சரி, சரி, அனிஷ்கா எனக்குரியவள்", என்று தொடர்ந்து, திருப்பித் திருப்பிக் கூறியது கேட்டு ட்ரைவரே ஆச்சரியத்தில் மூழ்கினுர்.

அத்தியாயம் மூன்று

போராடிக்கொண்டே வேவு பார்ப்பது

வெர்ஸ்டோவ்ஸ்கி வந்துசேர்ந்த அதே நேரத்திலேயே டிவிஷனல் கமாண்டர் மேஜர் ஜெனரல் முகினும் மேஜர் கொலோவினுடைய தலைமை ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தார். வரப்போகும் போராட்டத்தின் தயாரிப்புகளைப் பற்றி ரெஜிமெண்ட் கமாண்டரின் ரிப்போர்ட்டைக் கேட்டபோது, "அகிமோவுடன் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை. கடற்படைக்குத் திரும்பவும் மாற்றுவதற்காக அவரை மாஸ்கோவுக்கு அனுப்பிவைக்கும்படி இன்று எனக்கு உத்தரவு வந்துள்ளது", என்று ஜெனரல் கூறினர்.

"கடைசி, கடைசியாக", என்று கொலோவின் ஆச்சரியத்துடன் கூறினர். தன் நண்பனுக்காக மகிழ்ச்சி அடைந்தார். "ஆயினும் வருந்தத்தக்க விஷயம். அவர் அவ்வளவு நல்ல அதிகாரி", என்ருர்.

ஜெனரல் அவரை உற்று நோக்கினர். அவரை இந்த நடவடிக்கையில் சண்டையில் பங்கெடுத்துக்கொள்ள நாம் அனுமதிப்பதா, அல்லது அனுப்பிவிடலாமா?" என்று கேட்டார்.

பதில் கூறு முன் கொலோவின் நீண்டநேரம் தயங்கினர்.

ஏனெனில் போர் நடவடிக்கையின் வெற்றிக்கு, அகிமோவை இப்பொழுதே அனுப்புவது உசிதமல்ல. ஆனல் மறுபக்கத்தில் யாருடைய இடத்தையும் மற்றவர்கள் நிரப்ப

முடியாத நிலைமையில்லை. ஆயினும் அவர் போய்விட்டால், நமக்கு நிலைமை மிகவும் கஷ்டமானதாகி விடும்.

மேஜர், ஜெனரலைக் கவனித்தார். இருவரும் அதே விஷயத்தைப்பற்றித்தான் நினைத்துக்கொண்டிருந்தனர்.

"போர் நடவடிக்கையில் பங்கு கொள்வது அவருக்கும் நல்லதுதான்", என்று ஜெனரல் மெதுவாகக் கூறினார்.

அந்த நிமிஷத்தில் அகிமோவ் போர்முனைப் பகுதியில் சுற்றி வந்துகொண்டிருந்தார். சோல்ஜர்கள் பதுங்கியிருந்து போர் புரிவதற்கு உதவும் ஒவ்வொரு குழியையும், ஒவ்வொரு பாதுகாப்பு ஸ்தலத்தையும் பார்வையிட்டார். ஒவ்வொரு இயந்திர பீரங்கி வீரரையும், ரைபிள் வீரரையும் தயாராக இருக்கும்படி மெதுவான குரலில் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு இயந்திர பீரங்கியையும் அவர் பரிசோதனை செய்து, பிறகு இருளில் ஒரு சிறிய குண்டை வெடிக்கும்படி உத்தர விட்டார்.

அகிமோவ் உத்தரவிட்டபொழுது, கண்காணிப்பில் ஈடுபட்டிருந்தவர்களைத் தவிர இதர பெரும்பாலான சோல்ஜர்கள் தூங்கிக்கொண்டிருந்தனர். சுற்றிலும் புழுக்கமாக இருந்தது. காற்றில் புகையிலையின் வாசனை வீசிக்கொண்டிருந்தது. தூங்கிக்கொண்டிருந்தவர்களின் குறட்டையும், பலமாக மூச்சு விடுவதும் கேட்டது. தூக்கத்தில் ஏதோ உளறுவதும் கேட்டது.

"தூங்குங்கள், என் நண்பர்களே, தூங்குங்கள்", என்று ஒரு பழைய பாட்டின் வார்த்தைகளை அவர் முணு முணுத்தார்..."நாளையதினம் புயல் வெடிக்கப் போகிறது".

தண்ணீர் தேங்கி நின்ற ஒரு குட்டையில் தன்னுடைய ஒரு கால் பூட்ஸின் நுனியை விட்டுக் கலக்கிக்கொண்டே, "விடியற்காலையில், "சாவு அல்லது வெற்றிப் புகழ் உங்களை அழைக்கிறது என்ற என்னுடைய அறைகூவலை நீங்கள் கேட்கப் போகிறீர்கள்", என்று அவர் தொடர்ந்து கூறினார்.

"யார் அங்கே செல்வது?" ஒரு குரல் அவருக்கு சவால் விட்டது. ஆனால், அந்த வீரர் உடனே அவரை அடையாளம் புரிந்துகொண்டு, அவருக்கு வணக்கம் செய்தார்.

"ஹலோ, நீ யார்?" என்று அகிமோவ் கேட்டார்.

"விட்டிய கோவ்."

"மாலை வணக்கம், சார்ஜெண்ட் தூங்கவில்லையா?"

"இல்லை, கேப்டன்."

"ஏன் தூங்கவில்லை?"

"என்னால் தூங்கத்தான் முடியாது."

"உன் துப்பாக்கியை சுத்தம் செய்து வைத்திருக்கிறாயா?"

"ஆம், எல்லாம் சரியாக இருக்கிறது."

"உனக்குத் துப்பாக்கி ரவைகள் கொடுத்தார்களா?"

"ஆம்!"

"எதிரியின் கவசத்தைத் துளைத்துக் கொண்டு போகுமா?"

"ஆம்!"

"ஜெர்மானியர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?"

"சற்று தாக்குப்பிடித்து வருகிறார்கள். அவ்வப்பொழுது கொஞ்சம் குண்டுகளை வெடித்து வருகிறார்கள். நாம் புகை பிடிக்கலாமா, காம்ரேட் கேப்டன்?"

"நிச்சயமாக."

அவர்கள் சிகரெட் பற்ற வைத்துக்கொண்டார்கள் தீக்குச்சியின் வெளிச்சத்தில் விட்டியகோவின் முகத்தைப் பார்க்க முடிந்தது. அது அமைதியாகவும், கருணை நிறைந்ததாகவும் இருந்தது.

"சொத சொதப்பான இந்த இடத்தில் நாம் நீண்ட நேரம் இருக்கப்போகிறோமா?" என்று அவர் கேட்டார்.

"அது கடவுளும், தலைமை சேனாதிபதியும் பதில் சொல்ல வேண்டிய கேள்வி."

"ஆம், நான் அப்படித்தான் நினைக்கிறேன்."

"என்ன விஷயம்? கஷ்டமாக இருக்கிறதா?"

"இல்லை, இது கொஞ்சம் சலிப்புத் தட்டுவதாயிருக்கிறது."

"போர் என்றால் கண்காட்சி அல்ல. சார்ஜெண்ட், கொஞ்சம் படுத்துத் தூங்குங்கள். உங்களுக்கு நல்ல தூக்கம் தேவைப்படுகிறது."

"கடலில் போரிடுவது, தரையில் போரிடுவதைவிட மேம்பட்டதா; காம்ரேட் கேப்டன்?"

"தரையைப் பொறுத்திருக்கிறது. இங்கு ஏராளமாகத் தண்ணீர் இருப்பதினுல், இதை தரையென்றே கூற முடியாது."

"ஹ...ஹ...ஹா! நீங்கள் சொல்வது சரிதான்."

"யார் அது, வாய்க்குள்ளேயே சிரித்துக்கொள்வது?"

"நான்தான், கோர்ஸிங்கின்"

"ஓ, வைத்திய உதவியாளரா, நீ கூட தூங்கவில்லையா?"

"இல்லை, பாருங்கள். பெய்ஸுலினுக்கும் எனக்கும் ஒரு தகராறு."

"பெய்ஸுலின், நீயும் இங்கேயே இருக்கிருயா? உனக்கு இது சரியல்ல. இளங் கம்யூனிஸ்ட் சங்க அமைப்பாளராக இருந்துகொண்டு ஒரு கெட்ட உதாரணத்தை ஏற்படுத்தலாமா?"

"ஓர் இளங் கம்யூனிஸ்ட் சங்க அமைப்பாளர் தூங்கக் கூடாது என்று எதிர்பார்க்கப்படுகிறது, காம்ரேட் கேப்டன்!"

"உன்னுடைய அயசியல் விவாதம் போதும்! நீ எதைப் பற்றிப் பேசுகிருய்?"

"பொதுவாக, வாழ்க்கையைப்பற்றி. யுத்தத்திற்குப் பிறகு எப்படியிருக்கும் என்று நான் யோசிக்கிறேன்."

"நீ ரொம்பவும் எதிர்காலத்தைப்பற்றி நினைக்கிருய்."

"பெய்ஸுலினை எடுத்துக்கொள்ளுங்கள். அவர் ஒரு மீன் ஆராய்ச்சிக் கழகத்திற்குப் போக வேண்டுமென்கிருர்."

"ஒரு மீன் ஆராய்ச்சிப் பள்ளிக்கூடம்தான்", என்று பெய்ஸுலின் திருத்தினுர்.

"சரிதான். அவர் சொல்லுகிருர், தான் வசிக்கக்கூடிய காஜானில்..."

"அவர் வசிக்கக்கூடிய ஊரைப்பற்றிய அத்தைப் பாட்டி கதைகள் போதும். படுத்துத் தூங்குங்கள். உங்களுடைய நன்மைக்காகத்தான் நான் இதைக் கூறுகிறேன். இப்படியிருந்தால் ஒன்றும் நடக்காது."

அகிமோவ் தன் தலையை அசைத்து, இருட்டில் சிரித்தார். பின்னர் ராணுவத்தின் சமையல் வீடு இருக்கும் திசை நோக்கிப் புறப்பட்டார். ஒரு பெரிய ஓடையின் அருகில் கண்ணுக்குத் தெரியாத ஒரு பாதையில் அது இருக்கிறது. அங்கு எரிந்துகொண்டிருந்த நெருப்பு, வெளிச்சத்தையும், வெது வெதுப்பையும் கொடுத்தது. சமையல்காரர் மகாரிசேவ் அமைதியும், திருப்தியும் முகத்தில் பிரதிபலிக்க, "எல்லாம் சரியாக இருக்கிறது," என்றார்.

"எங்களுக்குக் காலை ஆகாரத்திற்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள்?" அகிமோவ் கேட்டார்.

"தான்யக் கஞ்சி."

"இறைச்சி கிடையாதா?"

"நான் இறைச்சி ஒன்றும் தயாரிக்கவில்லையே. தயாரிக்கச் சொல்கிறீர்களா?"

"ஆம், செய்யுங்கள்."

"நம் ரேஷனைவிட ஏற்கனவே அதிகம் நம்மிடம் உள்ளது, காம்ரேட் கேப்டன்."

"அது, பரவாயில்லை. கொஞ்சம் தயார் செய்யுங்கள். தீனியை மிச்சம் பிடிக்க வேண்டுமென்பதற்காகக் குதிரையைப் பட்டினி போட முடியாது."

"என்னை இப்பொழுது இறைச்சி தயார் செய்யச் சொல்கிறீர்களா, காம்ரேட் கேப்டன்?"

"ஆம், என்றுதான் சொல்கிறேன், புரிந்ததா?"

"ஆம்."

"விடியற்காலை ஐந்தரை மணிக்கு காலை ஆகாரம் கொடுங்கள். கெடியாரம் இருக்கிறதா?"

"என்னிடம் இருக்கிறதே"

அகிமோ அருகில் சென்று சமையல்காரரின் கெடியாரம் சரியாக ஓடுகிறதா என்று பார்த்தார். அது ஒரு பழைய காலத்திய வெள்ளிக் கடியாரம்.

"அது மெதுவாகப் போகிறது. பனிரெண்டு நிமிஷம் அதிகமாகத் திருப்பி வையுங்கள்.", என்றார்.

சமயலறை நெருப்பின் இதமான வெது வெதுப்பை அனுபவித்துக்கொண்டே, மௌனமாக அவர் அங்கே சிறிது

நேரம் இருந்தார். பின்னர் தன்னுடைய கண்காணிப்பு நிலையத்திற்குச் சென்றூர். ஒரு குறுகிய சந்து வழியாக அங்கு வந்து சேர்ந்தார். அது முட்டுச் சந்தாகப் போய் முடிந்தது. அங்கு மேலே இரண்டு பரப்பாக மரக்கட்டை கள் கூரையாகப் போடப்பட்டிருந்தன. அதன் மீது மண்ணைப் போட்டு மூடப்பட்டிருந்தது. இதன் கீழ் அந்த சந்து கொஞ்சம் அகலப்படுத்தப்பட்டிருந்தது. பீரங்கி வாயிக்கு அளவாக ஒரு துவாரம் வெட்டப்பட்டிருந்தது. வழக்கமாக அங்கு ஒரு இயந்திர பீரங்கி பொறுத்தப் பட்டிருந்தது. ஆனால் தற்பொழுது அது ஓர் கண்காணிப்பு கேந்திரமாக மாற்றப்பட்டிருந்தது. கம்பியில்லாத் தந்தி இயக்குநர் (ஆபரேட்டர்), தன்னுடைய இயந்திரத்தை நிர்மாணித்து, அது சரியாக வேலை செய்கிறதா என்பதை பரிசோதிப்பதற்காக, அரைத் தூக்கத்தில் "ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து........." என்று எண்ணிக் கொண்டிருந்தார்.

தரையில் பல டெலிபோன்கள் ஒரே வரிசையில் வைக்கப்பட்டிருந்தன. மரக்கிளைகளாலும், இலைகளாலும் அவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன. மேபொரோடா வுக்கு இங்கேயும் கூட எல்லாவற்றையும் சரியாக வைத்துக் கொள்வதற்கு நேரம் கிடைத்துள்ளது. சிறிது தள்ளி ஒரு பெஞ்ச் போடப்பட்டிருந்தது இதைக் காட்டியது.

அகிமோவ் அந்த பெஞ்சியின்மீது உட்கார்ந்து பீரங்கி வாய் அளவுக்கு வெட்டப்பட்டிருந்த துவாரத்தின் வழி யாகப் பார்த்தார். இடைவிடாமல் பெய்துகொண்டிருந்த மழையால் மனச்சலிப்பு ஏற்பட்டது. எங்கும் இருள் சூழ்ந் திருந்தது. மற்றும், கொஞ்சம் தாழ்வான பகுதிகளில் பனி மூட்டம் போட்டிருந்தது. இதன் காரணமாக ஓடை கூடக் கண்ணுக்குத் தெரியாமல் இருந்தது. அவ்வப்பொழுது பீரங்கி சுடுவதால் ஏற்படும் நெருப்பின் வெளிச்சம்மட்டும் இருளை ஊடுருவிச் சென்றது. மெதுவாக மேலே எழும் புகையைப் போல் மூடுபனி, அந்த வெளிச்சத்தில் தோற்றமளித்தது. ஓடையின் கரைகளில் உயரமாக வளர்ந்திருந்த புற்கள் பலத்த காற்றினல் ஊசலாடுவதைப்போல் காட்சியளித்தன.

மேடாக இருந்த ஓடையின் அக்கரை நல்ல தற்காப்பு அரணாக இருந்தது. அங்கு காடுகள் இருந்தன. கிராமங்களில் வீடுகள் மரப் பலகைகளால் அமைக்கப்பட்டிருந்தன. அவைகளுக்குப் பின்னால் ஓர்ஷா நகரம் இருந்தது. அதைப் பற்றிப் பள்ளிக்கூடப் புத்தகங்களில் மட்டுமே அகிமோவ் படித்துள்ளார். அதை அவர் நேரில் பார்த்தது கிடையாது. ஆனால் கடந்த ஒரு மாதமாக அதைப் பிடிப்பதென்ற அவரது லட்சியம், நாள்தோறும் அவரது கனவின் கருப் பொருளாக இருந்தது. போரிலிருந்து தங்களது படைக்கு ஓய்வு கொடுக்கப் போகிறார்கள் என்ற எண்ணம் இயற்கையாகவே அவருக்குத் திருப்தியைக் கொடுத்தபோதிலும், ஓர்ஷாவைப் பிடிப்பதற்கான வாய்ப்பு தனக்கு கிடைக்காமல் போகிறது என்பது அவருக்கு வருத்தத்தை அளித்தது. அவருக்கு அதிக ஏமாற்றத்தைக் கொடுத்த விஷயம் என்னவெனில், போர்முனையிலிருந்து அவரால் பார்க்க முடிகிற உயர்ந்த காட்டுப் பிரதேசத்தைத்தான் இனிமேல் என்றும் பிடிக்க முடியாமல் போகிறதே என்ற எண்ணம்தான். விடாமல் தொடர்ந்து கவனித்து வந்ததின் காரணமாக அப்பிரதேசத்தை அங்குலம், அங்குலமாக அவர் தெரிந்து வைத்திருந்தார். அங்கு எவ்வளவு விறகு கிடைக்கும்; அந்தப் புதர்களில் தங்கள் படை நிலைகளை எவ்வளவு நன்றாக மறைத்துக் கொள்ள முடியும்! எவ்வளவு வசதியான பதுங்கு மிடங்களையும், குளிக்கும் அறைகளையும் அங்கு மரங்களால் ஆன சுவர்களைக் கொண்டு கட்ட முடியும்! அந்த கேந்திரமான இடத்தை படை வீரர்கள் எப்பொழுதுமே ஆசை நிறைந்த பார்வையுடன் பார்த்து வந்தனர். அதை "மோக்ஷஸ்தலம்" என்று மேபொரோடா அழைத்தான். இவ்வாறு இடங்களுக்குப் பெயரிடுவதில் அந்த ஆசாமி நிபுணன். பின்னர், நாசகரமான் மழைக்கு பதிலாக உறை பனி தோன்றும். அப்பொழுது அவர்கள் உண்மையான போர் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

ஒரே ஒரு சிறிய நிலப்பரப்புமட்டும் முக்யமானதல்ல என்பது வாஸ்தவமே. இருந்தபோதிலும், ராணுவத்தில் போர்முனையில் இருக்கும்போது மனிதனுடைய நலவுரிமை

களும், விருப்பங்களும் மிகவும் குறுக்கப்பட்டுவிடுகின்றன. ராணுவம் முழுவதுக்கும் ஓர்ஷாவினுடைய முக்யத்துவத்தை அகிமோவ் எப்பொழுதும் மறந்துவிடவில்லை. அது ராணுவ முக்யத்துவம் வாய்ந்ததும், சப்ளை மார்க்கங்களின் சந்திப்பாகவும் இருந்தது. அங்கிருந்து நம் துருப்புகள் நேராகப் போலந்துக்குள் செல்ல முடியும்.

காற்று பீரங்கிக் குழாய்களுக்குள் வீசி அடித்தது. மழைத்துளிகளையும் உள்ளே தள்ளியது. அகிமோவ் தன் முகத்தைத் துடைத்துக்கொண்டார். வேகமாக முன்னேறிச் செல்வது எவ்வளவு மகோன்னதமாக இருக்கும் என்ற எண்ணம் அகிமோவின் மனதில் மின் வெட்டுப்போல் பிரகாசித்தது. அவருக்குக் கிடைத்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதுபோல் சில நூறு கெஜங்கள் அல்ல; ஆனல் மேலும் மேலும் முன்னேறி பைலோ ரஷ்யப் பிரதேசத்தில் ஊடுருவுவது, விடுதலை வீரர்களாக போலந்துக்குள் நுழைவது எவ்வளவு மகிழ்ச்சி தரக்கூடியதாக இருக்கும் என்று அவரது மனதில் சிந்தனை ஒளிவிட்டது. அதற்கு வெகு தூரத்தில் ஜெர்மனியும், பிரான்சும், அட்லாண்டிக் கடற்கரையும் இருக்கின்றன.

தன்னுடைய அநீதமான யுத்தத் திட்டங்களைப் பற்றித் தனக்குள்ளேயே அகிமோவ் சிரித்துக்கொண்டார். ஏனெனில் அத்திட்டங்கள் அதுவரையில் ஒரு யூனிட்டின் படைகளுக்கு அப்பாற்பட்ட திட்டங்களாக இருந்தன. தற்போதைக்கு, அவர்கள் அந்த சில நூறு கெஜ தூரத்திற்கு எதிரியின் பீரங்கித் தாக்குதலை சமாளித்து முன்னேறவேண்டியிருப்பதாகவே தோன்றியது. "நாங்கள் வருவோம், நிச்சயமாக நாங்கள் வருவோம், ஆனல் எங்களுக்கு அவகாசம் வேண்டியிருக்கிறது, என்று போலந்துக்கும், பிரான்சுக்கும் கூறுவதைப்போல் அகிமோவ் பேசினர். முன்னேறிச் சென்று இவ்விரண்டு நாடுகளுக்கும் செல்வதைப்பற்றி அடிக்கடி அவர் ஆழமான உணர்ச்சியுடன் நினைத்து வந்தார்.

அப்பொழுது மழைபெய்துகொண்டேயிருந்தது. அந்தச் சமயத்தில் சண்டை நடக்கும்போது, எங்கெங்கு என்ன நடக்கின்றது என்பதைச் சரியாகப் பார்க்க முடியாது.

அப்பொழுது செய்தித் தொடர்பு பிழையற்றதாக இருக்க வேண்டும். அதற்கு மாறாக, படைவீரர்கள் விரைவில் சிறிது தூரம் முன்னேறுவதற்கு மூடுபனி உதவியாக இருக்கும். நிலைமையை சரியாகக் கணித்தபின், அகிமோவ் மேஜர் கொலோவினுக்கு டெலிபோன் செய்தார். ஆனால் அவர் வெளியில் சென்றிருந்தார்.

"உங்களைப் பார்க்கத்தான் அவர் வந்துகொண்டிருக்கிறார்", என்று ரெஜிமெண்ட்டின் தலைமைக் காரியாலயத்தில் இருந்த ட்யூடி ஆபீசர் கூறினார்.

"பத்தாவது இலக்கத்துடன் தொடர்பு கொடுங்கள்."

சிக்னல்மென்கள் தனக்குப் பின்னால் மெதுவான குரலில் பேசிக்கொள்வதை அகிமோவ் கேட்டார்.

"அங்கே யார், மேபொரோடாவா", என்று அவரும் தணிந்த குரலில் கேட்டார். எவ்வளவு இருள் சூழ்ந்திருந்த போதிலும் சரி, தன்னுடைய உதவியாளர் அருகிலிருப்பதை அவர் எப்பொழுதும் உணர்ந்துகொள்ள முடிந்தது.

"ஆம்."

'கம்பெனி' கமாண்டர்களை அழைத்துவரச் சொல்லி மேபொரோடாவை அனுப்பிவிட்டு, அகிமோவ், பத்தாவது ரெஜிமெண்டல் கமாண்டர்-டிவிஷனல் ஜெனரலுடன் வருவதை எதிர்பார்த்து உட்கார்ந்தார்.

ஐந்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. சந்துகளின் வழியாக வெளிச்சம் பளிச்சிட்டது. அகிவோவ் வெளியில் சென்று, "முதல் பட்டாலியன், தனக்குக் கட்டளையிடப் பட்ட பணியை நிறைவேற்றுவதற்குத் தயாரித்துக்கொண்டிருக்கிறது. பட்டாலியன் கமாண்டர் கேப்டன் அகிமோவ் பேசுகிறார். என்று கூறினார்.

"ஸ்டேண் அட் ஈஸ்", என்று ஜெனரலின் குரல் ஒலித்தது. இருளில் அவர் கேப்டன் கரத்தை பிடித்துக் குலுக்கினார். "நல்லது, நிலைமை எப்படி இருக்கிறது? பட்டாலியன் கமாண்டர்?", என்றார்.

அகிமோவ் தன்னுடைய போர் நடவடிக்கைத் திட்டத்தைக் கூறினார். மூடுபனியைத் திரையாக உபயோகப் படுத்திக்கொள்ள உத்தேசித்திருப்பதைப் பற்றிக் கூறினார்.

"ரொம்ப சரி", என்று கூறிய டிவிஷனல் கமாண்டர், "ஆனால் ஒரு சமயம் விரோதி இதைக் கண்டு கொண்டால்"? என்று திருப்பிக் கேட்டார்.

"மூடுபனியில் விரோதியால் எப்படியும் சரியாக. குறி தவருமல் சுடமுடியாது," என்று மேஜர் கொலோவின் கேப்டனுக்கு ஆதரவாகக் கூறிவைத்தார்.

"துருப்புகளின் மனோதைரியம் எவ்வாறு உள்ளது?" டிவிஷனல் கமாண்டர் கேட்டார்.

"நன்றுயிருக்கிறது."

"நல்லது. அந்த உணர்ச்சிதான் வேண்டும். இங்கு நீங்கள் தண்ணீரில் கஷ்டமில்லாமல் இருக்கிறீர்களல்லவா?"

"எங்களுக்கு டாங்குகள் ஏதாவது கொடுக்க மாட்டீர்களா?" அகிமோவ் கேட்டார்.

"இல்லை".

"ரொம்ப சரி"

"அது அவசியம் என்று நான் நினைக்கவில்லை?"

"உங்களுக்கு டாங்குகள் எதற்காக வேண்டும்?" முதல் முதலாக, மூடுபனியில் உங்களால் சரியாகப் பார்க்க முடியாது. இரண்டாவதாக, தரை மிகவும் மோசமாக இருப்பதினல், டாங்குகளைக் கொண்டு முன்னேற முடியாது. மூன்ருவதாக, டாங்கிகள் முன்னேறிச் செல்லும்பொழுது நம்மைக்காட்டிக் கொடுத்துவிடும்."

"ரொம்ப சரி."

"ரொம்ப சரி! ரொம்ப சரி! 'ரொம்ப சரி' யென்று நீங்கள் திருப்பித் திருப்பி சொல்லிக்கொண்டேயிருக்கிறீர்கள். ஆனல் உங்கள் நெஞ்சார நீங்கள் கடுங்கோபத்துடன் இருக்கிறீர்கள்! நான் உங்களுக்கு நிறைய பீரங்கிகளைத் தருகிறேன். நாம் தொடுக்கின்ற பீரங்கித் தாக்குதலில், என்ன செய்வதென்றே தெரியாமல் அவர்களைத் திண்டாட வைத்து விடுவோம்."

"ரொம்ப சரி"

"சரி அவ்வளவுதான். அதன்படி செய்யுங்கள். நான் உங்களுக்கு கனபரிமாண உருவங்களைக் காட்டும் தூர திருஷ்டிக் கண்ணுடி ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். உங்களு

டைய தலைமையின் கீழ் ஓர் ராணுவம் இருப்பதைப் போல் உங்கள் கண்களைத் திறந்து கொண்டு உஷாராயிருக்கவேண்டும். பீரங்கிப்படை, துப்பாக்கிப்படைகளின் இரண்டு பிரதிநிதிகள் தற்பொழுது வருவார்கள். 'கட்யூஷா, பீரங்கித் தாக்குதலுடன் நம் எதிர்த் தாக்குதல் ஆரம்பமாகும். டிவிஷனுக்கு வேண்டியதெல்லாம் இருக்கிறதா?''

''ரொம்ப நன்றி, காம்ரேட் ஜெனரல்'' ''எனக்கு எதற்காக நன்றி செலுத்துகிறீர்கள்? ஜூனியர் அதிகாரிகள் சீனியர் அதிகாரிகளுக்கு நன்றி செலுத்தவேண்டுமா? நீங்கள் இதை நிறைவேற்றிவிட்டால் நான் உங்களுக்கு நன்றி செலுத்துவேன்.

''நான் வருந்துகிறேன், காம்ரேட் ஜெனரல்!''

''அது நல்லது.''

ஜெனரல் ஒரு நிமிஷத்திற்கு மௌனமாக இருந்தார். பின்னர் அவர் திடீரென்று தன் டார்ச் லைட்டின் வெளிச்சத்தை பட்டாலியன் கமாண்டர் முகத்தின்மீது வீசினார். கருமையான தாடியின் மத்தியில் அவருடைய முகம் கடுமையாகவும், பரபரப்புடனும் இருப்பது தெரிந்தது.

''கடலுக்கு மீண்டும் போவதற்கு நீங்கள் விரும்புவீர்களா?'' என்று ஜெனரல் எதிர்பாராத விதமாகக் கேட்டார்.

சம்பந்தா சம்பந்தமில்லாத அந்தக் கேள்வி அகிமோவை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. பதில் கூறுவதற்கு அவருக்கு அவகாசம் அளிக்காமலேயே, ஜெனரல் தொடர்ந்து பேசினார். ''இங்கிருந்து முடிந்த அளவு தொலைவாக இருப்பதாக நீங்கள் உணர்வதற்காக, நீலக்கடலில் எங்காவது செல்கிறீர்களா என்ன?

அகிமோவ் அர்த்தமற்ற தலையசைப்புடன், ''நான் இப்பொழுது இருப்பதற்கு மிகவும் ஆவலாக இருக்கும் ஒரே இடம், அதோ தூரத்தில் உள்ள ஜெர்மன் அகழிதான்,'' என்றார்.

ஜெனரல் தன்னுடைய டார்ச் வெளிச்சத்தை அணைத்துக்கொண்டு, '' அவ்வளவு நீளம் பட்டாலின் கமாண்டர்!''; என்று சிறிது மாறுபட்ட குரலில்கேட்டார்.

அவர் சந்தின் பக்கம் மெதுவாகப் பின்னுல் சென்று அகிமோவுடன் மனதாரக் கைகுலுக்கினர். அவரைப் பின் தொடர்ந்தார். வெகு சீக்கிரத்தில் கார் புறப்பட்டுப் போகும் ஓசை கேட்டது.

"பொழுது மட்டும் விடிந்தால்!" என்று யாரோ கூறினர்கள்.

"சுரங்க வெடிகள் விதைக்கப்பட்ட பிரதேசங்களில் பாதைகள் சீர்படுத்தப்பட்டுவிட்டனவா?" அகிமோவ் கேட்டார்.

"ஆம்" பிர்ஸோவின் குரல் இருளில் கேட்டது. பள்ளத்தாக்கில் சற்று தொலைவில் சாப்பாட்டு தகர டப்பாக்களின் உரசல் ஓசை கேட்டது. படைவீரர்கள் தங்கள் காலை ஆகாரத்தை அருந்திக் கொண்டிருக்கிறார்கள்.

மிகவும் மெதுவாக, வேண்டா வெறுப்பாக வருவது போல் பொழுது விடிந்தது. இருந்தபோதிலும் ஒருவருக்குப்பின் ஒருவராக நின்றுகொண்டிருந்த வீரர்கள் ஒவ்வொருவரின் முகத்தையும் அகிமோவ் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. அவர் தன்னுடைய கைக் கடிகாரத்தைப் பார்த்தார். தலையை நிமிர்ந்து பார்த்தபொழுது, மற்றவர்களுடன் மொழிபெயர்ப்பாளரும் இருப்பதை அவர் பார்த்தார். மிகவும் அலட்சியமாக அவர் தன் பார்வையை அப்பால் திருப்பினர். தான் அலட்சியமாக இருப்பதை உணர்ந்து திருப்தியும் அடைந்தார்.

"உங்களுடைய கைக்கெடிகாரங்களை சரிபார்த்துக் கொள்ளுங்கள்" என்று கனத்த குரலில் அவர் கூறினர். அதிகாரிகளின் கைகளில் ரிஸ்ட் வாட்சுகள் மின்னிப் பிரகாசித்தன. சிலர் பாக்கெட் வாட்சுகள் வைத்திருந்தனர். நேரம் விடியற்காலை 5 மணி 4 நிமிஷமாக இருந்தது.

பிறகு அவர் கம்பெனி கமாண்டர்கள் பக்கம் திரும்பினர்.

"பொகோசியான், நீங்கள் முன்னுல் நகருவதற்கு ஆரம்பிக்கலாம். பெல்ஸ்கி, நீங்கள் 20 நிமிஷ நேரத்தில் கிளம்பலாம். ஓசை ஏதும் கூடாது.

எப்பொழுதும் தொடர்பை நிலை நிறுத்துங்கள். தேவைப் பட்டால் தூதுவர்கள் மூலம் தொடர்பு வைத்துக்கொள் ளுங்கள்:''

இரண்டு கம்பெனி கமாண்டர்களும் ஒரு நிமிஷம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு வெளியில் சென்றனர்.

அகிமோவ் தன்னுடைய இடத்திற்குத் திரும்பிச் சென் ருர். அவருடைய தூரதிருஷ்டிக் கண்ணுடி ஏற்கனவே அத னுடைய இடத்தில் இருந்தது. மேபொரோடா தன் முழங் கால்களைக் கட்டிக்கொண்டு ஒரு மூலையில் உட்கார்ந்திருந்தார். கம்பியில்லாத் தந்திக் கருவியை இயக்குபவர் அக்கருவியின் பக்கம் குனிந்துகொண்டிருந்தார். அருகிலுள்ள பீரங்கிப் படை கண்காணிப்பாளர்கள் மறைவாகப் பதுங்கிக்கொண் டிருக்கும் குழியிலிருந்து மெதுவான குரல்கள் கேட்டன.

மூடு பனி கனமாகிக்கொண்டிருந்தது. சில சமயங்களில் விடியற்காலையில் கடலில் காணப்படும் மூட்டத்தைப்போல் இருந்தது. பழுப்பு நிறமான அந்த மூடு பனி உண்மை யாகவே கடலை மறைத்தது; அது மறைந்தவுடனே கண்ணைப் பறிக்கும் பிரகாசத்துடன் கூடிய நீல நிறமான தண்ணீரை யும், தூரத்தில் கப்பல்களின் உருவத்தையும் பார்க்க முடியும் என்று அகிமோவ் திடீரென்று கற்பனை செய்துகொண்டார்.

அவருடைய கற்பனை அவரையும் மீறியது. தனக்கு முன் ஞல் கப்பல் துறை காணப்படுவதையும், பலவித அளவும், உருவங்களும் கொண்ட கப்பல்கள் குறுகிய கப்பல் துறையில் நங்கூரம் பாய்ச்சி நிற்பதையும், அவைகளிலிருந்து எழும் பல வித ஓசைகளையும் மனக்கண்ணுல் கண்டார். உப்பு வாடை வீசும் காற்றைத் தான் முகர்வதாகவும் அவர் நினைத்தார்.

ஒரு கடற்கரைப் பட்டணத்திற்கும், வேறு எந்தப் பட் டணத்திற்கும் இடையில் உண்மையில் அதிக வித்யாசமில்லை என்று அவர் நினைத்தார். தெருக்கள், வீடுகள், நடைபாதை கள் ஆகிய எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. வசந்த காலத்தில் சுவர்களில் கற்களுக்கிடையில் பசும்புல் முளைப்பது எல்லா நகரங்களிலும் ஒரே மாதிரிதான். மிகவும் சாதாரணமான தெரு ஒன்றின் வழியாக நீங்கள் செல்லுங்

கள். திடீரென்று நீங்கள் ஒரு மூலையில் திரும்பினால், வரிசையாக மேலே போகப் போகக் குறுகலாகச் செல்லும் கம்பங்களும், மைதானங்களும் உங்களுக்கு முன்னால் தோன்றுகின்றன. உடனே உலகம் பூராவும் மாற்றமடைகிறது. சாதாரணமாக இருந்தது, அசாதாரணமாகிறது. நகர்ந்து செல்வதற்கும், பிரயாணம் செய்வதற்கும் உங்களுக்கு மட்டுப்படுத்த முடியாத விருப்பம் ஏற்படுகிறது. புதியவைகளைக் காண வேண்டுமென்ற வேட்கை எழுகிறது.

இவ்வாறு தன் கற்பனையை ஓட்டிக்கொண்டிருக்கும் பொழுதே, அது மேற்போக்கான கற்பனைதான் என்பதையும் தன்னுள்ளே ஆழமாக ஓர் சர்வாம்ச எண்ணம் உறுத்திக் கொண்டிருப்பதையும் அகிமோவ் எப்பொழுதும் உணர்ந்து வந்தார். பழுப்பு நிறத்திலிருந்து பால் போன்ற வெண்மை நிறமாகிவிட்ட அந்த மூடு பனிக்குப் பின்னால் உண்மையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறியும் ஆவலே அகிமோவின் சிந்தனையில் மேலோங்கியிருந்தது. அவருடைய ஆட்கள் எங்கே? பொகோசியான், விட்டியகோவ், மற்றும் பலரின் முகங்கள் அவருக்கு நன்கு அறிமுகமானவை. அவர்களைப் பற்றிய ஆவல் அவர் நெஞ்சில் ஊடாடிக்கொண்டிருந்தது. ஒளிவு மறைவின்றிச் சொல்ல வேண்டுமானால், அந்த நிமிஷத்தில் அவர்களைப்பற்றி, மனிதர்கள் என்ற முறையில் அல்ல அகிமோவ் சிந்தித்தது. ஆனால் எல்லாவற்றுக்கும் மேலாக சித்தத்தை அமுல் நடத்தக் கூடியவர்கள் என்ற முறையில்தான் அவர்களைப்பற்றி அகிமோவ் சிந்தித்தார்.

டிவிஷன் கமாண்டர், கர்னல் வெர்ஸ்டோவ்ஸ்கி, மேஜர் கொலோன் கேப்டன் அகிமோவ், துப்பாக்கிகளை ஏந்திக் கொண்டிருப்போர், சிக்னல்மென், பாதை செப்பனிடுவோர், ரெஜிமெண்ட் பூராவுமே, ராணுவம் முழுவதுமே, போராட்டத்தில் தங்கள் உயிர்களைப் பணயம் வைக்குமாறு அந்த சித்தம் அவர்களை நிர்ப்பந்தப்படுத்திக் கொண்டிருந்தது. அவர்கள் செய்துகொண்டிருக்கும் வேலையை, யாரும் நிர்ப்பந்தப்படுத்தி அவர்களைச் செய்ய வைக்க முடியாது. அவர்களின் இரத்தத்திலும், தசைகளிலும் ஆழமாக ஊறிப் போயிருந்த, அழியாத கடமை உணர்ச்சிதான் அவர்களை அவ்வாறு செய்யும்படி நிர்ப்பந்தப்படுத்தி வந்தது.

"காம்ரேட் கேப்டன், கொஞ்சம் காலை ஆகாரம் சாப் பிடுங்கள்", என்று மேபொரோடா கூறினர். வேறெதையும் விட, தன் மனச்சாட்சியைத் திருப்திப்படுத்துவதற்கே அவர் இதைக் கூறினர். ஏனெனில், அதுபோன்ற ஒரு சமயத்தில் அகிமோவ் ஒன்றும் சாப்பிடமாட்டார் என்று அவருக்கு நன் ருகத் தெரியும். அகிமோவ் அவருக்கு பதில் கூடச் சொல்ல வில்லை. அவர் காத்திருந்தார். திடீரென்று தாழ்ந்த தொனி யில் டெலிபோன் மணியடிக்கும் ஓசை கேட்டது. தாக்குத லில் ஈடுபடுவதற்குத் தயாராக தங்கள் யூனிட்டுகள் அணி வகுப்பதாக லிலாக்கும் (பொகோசியானுக்குப் புனைப்பெயர்) பின்னர் வயலெட்டும் (பெல்ஸ்கி) தெரிவித்தனர்.

2

அகிமோவின் கடியாரத்தில் மணி எட்டாகிக் கொண்டி ருந்தது. பதட்ட நிலைமை சகித்துக்கொள்ள முடியாததாக இருந்தது. திடீரென்று முதல் பீரங்கிக் குண்டின் வெடி ஓசை வானைப் பிளந்தது.

பாசறையே அதிர்ந்தது. ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டு அகிமோவ், ஆடிக்கொண்டிருக்கும் ஒரு பெரிய மரக்கட்டையையே உற்று நோக்கிக்கொண்டிருந்தார். அதி லிருந்து அவ்வப்போது களிமண் கட்டிகள் கீழே விழுந்து கொண்டிருந்தன. பீரங்கிகள் முழங்கிக்கொண்டிருந்தன. அவைகளின் இடியோசை சக்தியான, பயங்கரமான ஓசை யாக மாறியது. பின்னர் சிறு சிறு தனித் தனி ஓசைகளாக மாறின.

பாசறையில் பீரங்கியின் வாய் பொருத்தப்படும் இடத் திற்கு அகிமோவ் சென்ருர். எதிரிலே தூரத்தில் ஒரே மூடு பனியாக இருந்தது. பீரங்கிகள் சுடுவதால் கிளம்பும் புகை யினுல் அந்த மூடுபனி மெதுவாக கரு நிறமாகிக் கொண்டி ருந்தது. அருகில் சிறு தூறலாக மழை பெய்து கொண்டே யிருந்தது. அந்த மழைத் தூறல் அவருக்கு எதிரில் சாய்வாக ஒரு வலை போடப்பட்டிருந்தது போலிருந்தது.

பீரங்கிகள் சுடுவது நின்றவுடனே, கட்யூஷாக்கள் என்று சொல்லப்படும் குண்டுகள் ஒரு புயற்காற்றைப்போல் கருமை

யான ஆகாயத்தில் வீறிட்டுப் பாய்ந்தன. அதன் பின்னர் அகிமோவின் காதில் ஒரு சத்தம் கேட்டது. பனிப் புயலினால் மந்தப்படுத்தப்பட்டாலும் கூட, அந்த சத்தம் கேட்கவே செய்தது. "ஹுர்ரா!" என்ற மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வீரர்கள் தாக்குதலில் இறங்கும் சத்தம்.

மூடுபனி தற்பொழுது ஓர் இடைஞ்சலாகவே இருந்தது. காலாட் படையினரை பீரங்கிப் படை தொடர்ந்து செல்வது கஷ்டமாக இருந்தது. போர் நடவடிக்கைகளுக்கு உத்திரவு கள் கொடுப்பதற்கு அது அகிமோவுக்குத் தடையாகவும் இருந்தது. மூடுபனியில் என்ன நடக்கிறது என்பது தெரிந்து கொள்ள முடியாததாகவும், வெளியிலிருந்து அதற்கு வழி காட்ட முடியாததாகவும் இருந்தது.

தொலைபேசி மூலம் அகிமோவ் முதல் கம்பெனியுடன் தொடர்பு கொண்டார். இயந்திரத் துப்பாக்கிகள் சுடுவது தங்கள் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தி வருவதாகவும், மூடுபனியில் போர் நடந்துகொண்டிருப்பதாகவும் அவர்கள் அறிவித்தனர்.

"எங்கிருந்து சுடுகிறார்கள்?" அகிமோவ் கேட்டார்.

"வலது பக்கத்திலிருந்து பக்கவாட்டில் சுடுகிறார்கள்."

"நீங்கள் விரோதியின் நிலைகளிலிருந்து நீண்ட தூரத்தில் இருக்கிறீர்களா?"

"எவ்வாறு சொல்ல முடியும்? அவ்வாறு தோன்ற வில்லை."

"சாதாரண துப்பாக்கிகளின் மூலம் சுடுகிறார்களா?"

"அதிகமாக ஒன்றுமில்லை."

"விரோதி இயந்திரத் துப்பாக்கிகள் மூலம் சுட்டால் நீங்களும் எதிர்த்துச் சுடுங்கள். முன்னேறிச் செல்லுங்கள். முன்னேறிக்கொண்டே யிருங்கள்."

இரண்டாவது கம்பெனியின் நிலைமை மோசமாக இருந் தது. அது பெல்ஸ்கியின் தலைமையின்கீழ் இருந்தது. ஓடை யைக் கடந்ததற்குப் பின்னால், பலத்த பீரங்கித் தாக்குதல் அவர்களை நோக்கி வந்தது. உடனே அவர்கள் ஓடையின் கரையில் பச்சைப் புல் முளைத்துள்ள சதுப்பு நிலத்திலேயே தரைமட்டமாகப் படுத்துக்கொள்ள வேண்டியேற்பட்டது.

"துணிந்து முன்னேறிச் செல்லுங்கள். லிலாக் வெகு தூரம் முன்னேறியுள்ளது. நீங்கள்தான் பின்தங்கியுள் ளீர்கள்."

கால நிலை சரியில்லாத காரணத்தால் ஏற்படும் மனத் தளர்ச்சி நிலையில் உற்சாகம் பெறுவதற்காக யாரோ கற்பனு உணர்ச்சி மிகுந்தோ, அல்லது தமாஷாகவோ, பல்வேறு யூனிட்டுகளுக்கு பரிபாஷையாக மலர்களின் பெயர்களைக் கொடுத்துள்ளார். மூடு பனியிலும், மழையிலும், சேற்றிலும் லிலாக், வயலெட், மல்லிகை, ஐரிஸ் போன்ற வார்த்தை களைப் பரிமாறிக்கொள்வது விநோதமாக இருந்தது. உதா ரணமாக பீரங்கிப் படைக்கு 'டெய்ஸி' என்ற பூவின் பெயரை இட்டிருந்தனர். மிக பயங்கர நாசத்தை உண்டாக்கும் கட் யூஷா பீரங்கிகளுக்கு 'ப்ளூபெல்' என்ற பூவின் பெயரை இட் டிருந்தனர். காட்டுப் பூக்கள், வயலில் விளையும் பூக்கள், தோட்டத்துப் பூக்கள் முதலிய பலவிதப் பூக்களும் ஒன்றை யொன்று பீதியுடன் அழைத்துக்கொண்டன. பல அநாவ சியமான நினைவுகளும் இதனுல் தூண்டிவிடப்பட்டன.

இதற்கிடையில் நம்முடைய தாக்குதல்களால் சிறிது நேரம் அடங்கியிருந்த ஜெர்மன் பீரங்கிகள் மீண்டும் உக்ர மாக நெருப்பை உமிழ ஆரம்பித்தன. நம்முடைய பீரங்கி களும் பதிலுக்கு சுட்டன. இரு தரப்பு பீரங்கிகளுக்குமிடை யில் சுடுவதில் போட்டாபோட்டி ஏற்பட்டது. அடுத்திருந்த பாசறையிலிருந்து பீரங்கிப் படையினருக்கு உத்தரவுகள் பறந்துகொண்டிருந்தன. எ.'.குத் துண்டுகள், மிகவும் நாச கரமான குண்டுகள், குண்டுகளின் துண்டுகள் ஆகியவை பல் வேறு கோணங்களிலும், பல்வேறு அளவிலும் வெடித்துக் கொண்டிருந்தன. தனித்தனி பீரங்கிகளும், அல்லது ஓர் பீரங்கிப் படை பூராவுமே அல்லது சில சமயங்களில் ஒரு டிவி ஷன் பீரங்கிப்படை பூராவுமே மூடுபனித் திரையின் வழியாக சுட்டன. இத் தாக்குதல்களால் பால் போன்று வெண்ணிற மாயிருந்த மூடுபனி தீயொத்த சிவப்பு நிறமாயிற்று.

கடைசியில் மூடுபனி மெதுவாக விலகியது. நீண்ட நேர மாகக் காணவேண்டுமென்று அகிமோவ் துடித்துக்கொண் டிருந்த முன்னணிப் போர்க்களம் அவருடைய கண்களுக்கு

முன்னுல் விரிந்து, பரந்து காணப்பட்டது. அவ்வப்போது பழுப்பு நிற மேலங்கிகளுடன் சிறிய உருவங்கள் அங்குமிங்கும் ஓடுவதுமட்டும் தெரிந்தது. அவர்கள் அவ்வளவு குனிந்து சென்றதின் காரணமாக, அனேகமாக அவர்கள் தரையுடன் ஒன்ருகக் கலந்துவிட்டதாகவே காணப்பட்டது. மிகச் சிலரே அங்கு இருப்பதாகத் தோன்றியது. உண்மையிலேயே மிகச் சிலர்தான் அங்கு இருந்தனர்.

"உங்களேத் தடுத்து நிறுத்திக் கொண்டிருப்பது எது?" என்று அகிமோவ் தொடர்ந்து தொலேபேசியில் கேட்டுக் கொண்டேயிருந்தார். "நான் சொல்வது புரியவில்லேயா, வயலெட்? உங்களேத் தடுத்து நிறுத்திக்கொண்டிருப்பது எது?"

ஆனுல் பெல்ஸ்கி பதில் கூறுமுன் தொலேபேசித் தொடர்பு அறுந்துவிட்டது. அதைச் செப்பனிடுவதற்கு சிக்னல்மேன் புறப்பட்ட நேரத்தில், பொகோசியானுடன் இருந்த தொடர்பும் அறுந்துவிட்டது. அப்பொழுதுதான் கொலோவினிடமிருந்து தொலேபேசிச் செய்தி வந்தது.

"அகிமோவ், நிலேமையைப் பற்றிய ரிபோர்ட்டைக் கேளுங்கள்."

அவருடைய தொடர்பும் அறுந்துவிட்டது

"நான் பெல்ஸ்கியிடம் செல்கிறேன்," ரெமிஸோவ் கூறினுர். "பாவம் அந்த மனுஷனின் நிலேமை மிகவும் மோசமாயிருக்கிறது."

அகிமோவ் தலேயசைத்துவிட்டு, தூரதிருஷ்டிக் கண்ணுடியின் அருகில் மீண்டும் அமர்ந்தார்.

பொகோசியானின் தொலேபேசி மார்க்கம் சீர்பட்டவுடனே, அவர், தான் ஜெர்மன் பாதுகாப்புக் குழிகள் அருகில் சென்றுவிட்டதாகவும், அங்கு போரிட்டுக் கொண்டிருப்பதாகவும் வெற்றிக் களிப்புடன் அறிவித்தார்.

"நீங்கள் புரிந்துகொள்ள முடிகிறதா?" என்று பொகோசியான் மிகவும் உணர்ச்சி வயப்பட்டுக் குரலெழுப்பினுர். "நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா, இல்லேயா? விரோதி இங்கே சுரங்கக் கண்ணிகளே விதைத்துள்ளான். நான் அவைகளே அகற்றிக்கொண்டிருக்கிறேன். பெரும் போராட்டம் நடை

பெறுகிறது. நான் சொல்வது உங்களுக்குப் புரிகிறதா, இல்லையா? நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது.''

''பலத்தைத் திரட்டிக்கொள்ளுங்கள்,'' அகிமோவ் அவரிடம் கூறினர். ''பெல்ஸ்கிக்கு உதவி செய்யுங்கள். உங்களுக்கு இடது பக்கத்திலுள்ள பாதுகாப்புக் குழியினின்றும் விரோதியை அப்புறப்படுத்துங்கள். உங்களுடைய பீரங்கிகளைத் தயாராக்கிக் கொள்க. உங்களுடைய டாங்கி-எதிர்ப்பு பீரங்கியை முன்னே எடுத்துச் செல்க. விரோதி கிராமத்தில் தன் படைகளைத் திரட்டுவதையும், எதிர்த் தாக்குதலுக்குத் தயாராவதையும் நான் பார்க்க முடிகிறது. உங்களுடைய இயந்திர பீரங்கிகளின் சத்தத்தை என்னல் ஏன் கேட்க முடியவில்லை?''

''அவர்கள் முன்னேறி வந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுக்குப் புரிகிறதா? அவர்கள் இப்பொழுது இங்கேயே வந்துவிட்டார்கள். எல்லா இடத்திலும் சுரங்கக் கண்ணிகளை விதைத்துள்ளனர்.''

''பெல்ஸ்கிக்கு உதவி செய்க. அவர் மாட்டிக் கொண்டுள்ளார். அவர் முன்னேற முடியாமல் இருப்பதற்குக் காரணமென்ன என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா?''

''பெல்ஸ்கி? முன்னேற முடியாமல் தடுக்கப்பட்டுள்ளாரா? அவரை எதுவும் தடுத்துக் கொண்டிருக்கவில்லை. அவர் ஏன் முன்னேறாமல் இருக்கிறார் என்பது எனக்குப் புரியவில்லை. இங்கே உண்மையிலேயே நிலைமை மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நான் கூறுவதை உங்களால் புரிந்து கொள்ள முடிகிறதா, இல்லையா? ஆனால் பெல்ஸ்கியின் அரங்கம் கல்லறை போல் அவ்வளவு அமைதியாக இருக்கிறது.'' அவர் சிறிது நேரம் தாமதித்து, தாழ்ந்த குரலில் கூறினர்: ''நாங்கள் இங்கு இரண்டு இயந்திர பீரங்கிகளைக் கைப்பற்றி விட்டோம்.'' இன்னும் மெதுவான குரலில், ''இரண்டு பெட்டி சீமைச் சாராயமும் (ஒயின்)கூட—''

''அதை யாரும் தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.'' அகிமோவ் எச்சரிக்கை செய்தார். ''இல்லாவிட்டால், நான் அங்கு வரும்போது உங்கள் எல்லோரையும் சும்மா விடமாட்டேன்.''

பெல்ஸ்கியுடன் தொடர்பு மீண்டும் ஏற்படுத்தப்பட்டு விட்டது. "சுரங்க வெடிகளால் தடை செய்யப்பட்டுள்ளோம், காம்ரேட் கேப்டன்; இந்த இடத்தில் அவை நிறைய உள்ளன," என்று அவர் கூறினர்.

"பாதையை செப்பனிடுபவர்கள் எங்கே?"

"அவர்கள் இங்கே வேலை செய்துகொண்டுதானிருக்கிறர்கள். ஆனல், சுரங்க வெடிகள் ஏராளமாக இருக்கின்றன."

"பொகோசியான் எவ்வளவு தூரம் போயிருக்கிறர் என்று பாருங்கள். அவர் விரோதியின் பாதுகாப்புக் குழிகள் அருகிலேயே சென்று விட்டார்.

"அவர் அதிருஷ்டக்காரர், விரோதி அவருக்கு எவ்வித எதிர்ப்பும் கொடுக்கவில்லை......"

"போதும், போதும்," அகிமோவ் இடை மறித்தார். "அவருக்கும் அப்படியொன்றும் கஷ்ட மில்லாமலில்லை. ரெமிஸோவ் எங்கே?"

ரெமிஸோவ் டெலிபோன் ரிசீவரைக் கையில் எடுத்தார்.

"ரெமிஸோவ், பெல்ஸ்கி நிலைமையின் நெருக்கடித் தன்மையை உணரவில்லை. ஏன் அவ்வாறு இருக்கிறர் என்று கவனியுங்கள். அவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலையை நிறைவேற்ருவிட்டால், ராணுவ நீதிமன்றத்தில் அவருக்கு தண்டனை கிடைக்கும் என்று எச்சரிக்கை செய்யுங்கள்," என்று அகிமோவ் கூறினர்.

ஒரு நிமிஷ நேரங்கழித்து அகிமோவ் அதையே டெலிபோனில் கொலோவின் கூறக் கேட்டார்: "இந்தப் பணியில் நீங்கள் வெற்றியைத் தேடாவிட்டால்" நீங்கள் ராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரிக்கப்படுவீர்கள், என்று உங்களிடம் தெரிவிக்கும்படி டிவிஷனல் கமாண்டர் என்னிடம் கூறினர்."
'அப்படியா?" அகிமோவ் தனக்குத்தானே கூறிக்கொண்டார். "எனக்கும் அப்படியே" என்று கொலோவின் கூறி முடித்தார்.

வெகு சீக்கிரத்தில் ஜெர்மானியர்கள் பொகோசியானின் அரங்கத்தில் எதிர்த் தாக்குதலைத் தொடங்கினர்கள். ஜெர்மானிய சிப்பாய்களின் உருவங்கள் உயர்ந்தும், தாழ்ந்தும் தென்பட்டுக் கொண்டிருந்தன. அவர்கள் ஒரு மலைச்

சரிவில் உருண்டு கொண்டு, தந்திரமான ஒரு சாகஸத்தில் இறங்கியிருப்பதைப்போல் காணப்பட்டது. விரோதியின் 2-வது வரிசை பாதுகாப்புக் குழிகளின் மீது காலாட் படையும் குறிவைத்துத் தாக்கிக் கொண்டிருந்தது.

மற்ெருரு கட்யுஷா பீரங்கிக்குண்டு தலைக்குமேல் விர்ரென்று சென்றது. விரோதியின் முன்னணிப் பிரதேசத்தில் நெருப்பு ஜுவாலை விட்டு மேலே கிளம்பியது. அந்த ஜுவாலை தணிந்த சமயத்தில், ஜெர்மானியர்கள் பின்வாங்கி ஓடுவதை அகிமோவினல் பார்க்க முடிந்தது.

"ஓடுகிருர்கள்", என்று மேபொரோடா கூறினர்.

பாதுகாப்புக்குழிகளில் வீரர்கள் சிகரெட்டுகளைப் பற்ற வைத்தனர். தணிந்த குரலில் ஒருவருக் கொருவர் பேசிக் கொள்வதும் கேட்டது. ஒவ்வொருவரும் உணர்ச்சிவயப் பட்டிருப்பதாகத் தோன்றியது.

காயமடைந்தோர் பின்னணிக்குக் கொண்டு போகப் பட்டனர். சிலர் வேதனை தாங்காமல் முனகிக் கொண்டிருந்தனர். காயமடைந்த இதர மூன்று பேர்கள் பகிரங்கமாகத் தரை மீது மெதுவாகவும், அமைதியாகவும் நடந்து வந்து கொண்டிருந்தனர். தங்களை மறைத்துக் கொள்வதற்குக் கூட அவர்கள் முயற்சி செய்யவில்லை. தாங்கள் பெற்றுள்ள காயங்கள், மேற்கொண்டு காயமடையாமல் இருப்பதற்கு உத்தரவாதம் என்று அவர்கள் நினைத்தார்கள் போலும். அகிமோவ் வெகுண்டார். பதுங்கும் குழியிலிருந்து அவர் தன்னுடைய தலையை வெளியே நீட்டி, "முட்டாள்களே, மறைவிடத்திற்குச் செல்லுங்கள்," என்ருர்.

அந்த ஆட்கள் உடனே கீழ்ப்படிந்து குழியில் இறங்கி, கண்காணிப்பு நிலையத்திற்கு சற்று அருகிலேயே பதுங்கிக் கொண்டனர்.

முதல் ஜெர்மன் எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்து, இரண்டாவது எதிர்த்தாக்குதல், மூன்று டாங்கிகள் ஆதரவாக வர, நடைபெற்றது. அந்த டாங்கிகளும், சோல்ஜர்களைப் போலவே, மிகவும் வேண்டா வெறுப்புடன் வளைந்து வளைந்து வந்தன. நம்முடைய ஆட்கள் பதுங்கியிருந்த குழிக்கு அருகில் அந்த டாங்கிகள் வந்து விட்டன. மிகவும்

அவசியமாயிருக்கிற அந்தநேரத்தில், டெலிபோன் தொடர்பு மீண்டும் வேலை செய்யாமல் போயிற்று.

"ஒரெஷ்கின், பொகோசியானிடம் செல்லுங்கள்," என்று அகிமோவ் குரல் கொடுத்தார்.

"லெப்டினென்ட் பொகோசியான் கொல்லப்பட்டு விட்டார்," என்று அகிமோவ், குழிக்குள் இறங்கச் சொன்ன அந்த காயமடைந்த மூவரில் ஒருவர் தெரிவித்தார்.

"கொல்லப்பட்டுவிட்டாரா?" அகிமோவ் திருப்பிக் கேட்டார். சிறிது நேரமௌனத்திற்குப் பின்னுல் அவர், "ஒரேஷ்கின், 1-ம் நெம்பர் கம்பெனியின் (படையின்) தலைமையை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்," என்ருர்.

தூரதிருஷ்டிக் கண்ணுடியிலிருந்து தன் பார்வையை அப்புறம் நகர்த்தாமலேயே, அவர் டெலிபோனைக் கையில் எடுத்துக் கொண்டு, "ஹல்லோ, லில்லி! டாங்கிகளின் கவசங்களைத் துளைத்துச் செல்லும் குண்டுகளை ஏவுங்கள். நான் சொல்வது உங்களுக்குக் கேட்கிறதா?" என்ருர் அகிமோவ்.

அந்த சமயத்தில் கம்பியில்லாத்தந்தி (வயர்லெஸ்) மூலம் டிவிஷனல் கமாண்டர் அவருடன் தொடர்பு கொண்டார். "நாங்கள் விரோதியின் முதல் பாதுகாப்புக் குழியைப் பிடித்து வைத்துக் கொண்டுள்ளோம். ஆனுல், விரோதி பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கிருன்," என்று அவர் அறிவித்தார்.

இடது பாரிசத்தின் நிலைமையைப் பற்றி கமாண்டர் கேட்டார். "வயலெட் பின் தங்கி நிற்கிருர்." என்று அகிமோவ் பதிலளித்தார்.

"ரெமிஸோவ் அங்கு சென்றுள்ளார். நாங்கள் அதை சீர்படுத்தி விடுகிருேம். அந்த கிராமத்தின் மீது அவர்கள் குண்டு மாரி பொழிய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். எதிர்த் தாக்குதலுக்காக விரோதி அங்கே தன் பலத்தைத் திரட்டிக் கொண்டிருக்கிருன்."

கடைசியாக ரெமிஸோவ் தொலைபேசியில் பேசினுர். "நாங்கள் சமாளித்துக் கொண்டோம். நாங்கள் விரோதியின் அணியில் இரண்டு இடைவெளிகளை ஏற்படுத்தினுேம்.

சதுரமான தோட்டத்தை நோக்கி பீரங்கிகளைத் திருப்பி ஞேம். அங்கு இரண்டு இயந்திர பீரங்கிகள் இருக்கின்றன.''

பீரங்கி வீரர்கள் சுட ஆரம்பித்தனர். தொலைபேசியை விட்டு அப்புறம் நகராமலேயே, ரெமிஸோவ்: ''சபாஷ்! இலக்கின் மீது சரியாகத் தாக்கினுர்கள்! ஒரு ஜெர்மன் பாதுகாப்பு மேடைமீது நேராக குண்டுகள் பாய்ந்தன! சுடுவது என்ருல் இப்படியல்லவா சுடவேண்டும்! எங்கள் சார்பில் அவர்களுக்கு நன்றி தெரிவியுங்கள். நாங்கள் இப்பொழுது நெருக்கடி கட்டத்தைவிட்டு மீண்டு விட்டோம்'' என்று அவர் மிகவும் குதூகலத்துடன் அறிவித்தார்.

இரண்டாவது கம்பெனியைச் சேர்ந்த வீரர்கள், பீரங்கிப் படையினரின் வெற்றிகரமான நடவடிக்கையால் மிகவும் உற்சாக மடைந்து, கீழே குனியாமலும்கூட முன்னேறிச் செல்வதை அகிமோவாலேயே பார்க்க முடிந்தது. சற்று நேரத்தில் ஒரு 'ரன்னர்' (செய்தி கொண்டுவரும் தூதுவர்) ஓடி வந்து இரண்டாம் நெம்பர் கம்பெனி பாய்ந்து முன்னேறி, விரோதியின் பாதுகாப்புக் குழிக்கே சென்று விட்டது. அங்கே நம் வீரர்களுக்கும், விரோதியின் ஆட்களுக்குமிடையே நேருக்கு நேரான கைகலப்பு நடந்து கொண்டிருக்கிறது, என்ற செய்தியை அறிவித்தார்.

ரெஜிமெண்ட் காமண்டருக்கு அகிமோவ் இத்தகவலை அறிவித்தவுடனே, மேஜர் கொலோவின்: ''என்னுடைய ரிசர்வ் படையிலிருந்து உங்களுக்கு ஒரு ப்ளாடூனை அனுப்புகிறேன். உங்களுடைய உசிதம் போல் அதை உபயோகப் படுத்துங்கள்'' என்ருர். சிறிது மௌனத்திற்குப்பின், ''விரோதியின் அந்தப் பாதுகாப்புக் குழியிலிருந்துகொண்டு நீடித்து உங்களால் சண்டை போட முடியுமா?'' என்று கேட்டார்.

''முடியும்'' என்று பதிலளித்தார் அகிமோவ்.

அவர் ரிசீவரைக் கீழே வைத்தார். அவரது முதல் சிந்தனை பொகோசியான் மீது சென்றது. அவர் நல்ல சாப்பாட்டையும், நல்ல பானத்தையும் மிகவும் விரும்பினுர். பெண்களையும் அவர்நேசித்தார். ஒருபெண்ணைப் பார்த்தால், அவள் வனப்பு வாய்ந்தவளாக இருந்த போதிலும் சரி, அல்லது சாதாரணமாக இருந்தாலும் சரி, பருவமங்கையாக

இருந்தாலும் சரி, அல்லது ஏற்கனவே வயதாகிவிட்டவளாக இருந்தாலும் சரி, அவருடைய கண்கள் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும். அவர்களை அவர் சுயநலமற்ற முறையில் நேசித்தார், கலா சிருஷ்டிகளை ஒருவர் நேசிப்பதைப்போல, "அவர்களைப் படைத்தவர் யாராயிருந்தாலும், அவர் முட்டாளல்ல" என்று அவர் கூறுவது வழக்கம். கிண்டலாக அல்ல, ஆனால் அனேகமாக மிகவும் அடக்கத்துடனேயே கூறுவார். பாவம் பொகோசியான், அடக் கடவுளே, இனி அவர் சாப்பிட முடியுமா? ரெமிஸோவுக்கு நேர் எதிரான தன்மைகளைக் கொண்டவர்.

அகிமோவ் மெதுவாக டெலிபோனைக் கையிலெடுத்து, 'வயலெட்'டைக் கூப்பிட்டார். அவர்கள் பதிலளித்தவுடனே, "ஒ. பி. யில் என்னுடன் தொடர்பு கொள்ளுமாறு ரெமிஸோவிடம் கூறுக. புரிந்ததா? எங்கே திருப்பிச் சொல்."

வயலெட் திருப்பிக் கூறினார்.

அகிமோவ் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தார். ஆட்கள் தணிந்த குரலில் பேசிக் கொள்வதைக் கேட்டார்.

"சண்டையின் போது மேகங்கள் கீழாக இருப்பதை நான் விரும்புகிறேன்," மேபொரோடா கூறினார்.

"சரிதான்," டெலிபோன் ஆப்ரேட்டர் ஒத்துக் கொண்டார். "போருக்கு சாதகமான காலநிலை அல்ல, இது."

"நாங்கள் எல்னியா அருகில் போராடிக் கொண்டிருந்த பொழுது..." மற்றொரு வீரர் பழைய விஷயங்களை நினைவுக்குக் கொண்டுவர முயன்றார்.

"ரெஜவ் அருகில் வந்தபோது..." மற்றொருவர் ஆரம்பித்தார்.

'வயர்லெஸ்' மூலமாக அகிமோவை மீண்டும் ஜெனரல் கூப்பிட்டார்.

இந்தத் தடவை டிவிஷனல் கமாண்டர் மிகவும் மகிழ்ச்சியுடனிருந்தார். "வணக்கம் அகிமோவ், நீங்கள் தாக்குப் பிடிப்பீர்களா?" என்று கேட்டார்.

"ஆம், ஜெனரல் அவர்களே," என்றார் அகிமோவ்.

இந்த உரையாடலுக்குப் பின்னே உடனேயே, விரோதியின் பாதுகாப்புக் குழியிலிருந்து தன்னுடைய ஆட்கள் துரத்தியடிக்கப்பட்டு விட்டார்கள் என்று ஒரேஷ்கின் அறிவித்தார்.

"நான் வருகிறேன்," என்ருர் அகிமோவ்.

அவர் தன் இருக்கையினின்றும் எழுந்தார். தன் பெரிய மேலங்கியை எடுத்து மாட்டிக் கொண்டார். மேபொரோடாவும் அதே சமயத்தில் எழுந்தான். அவனுடைய முகம் பீதியால் வெளிற ஆரம்பித்தது. அகிமோவ் மீண்டும் உட்கார்ந்தார். மேபொரோடாவும் பெருமூச்சு விட்டுக் கொண்டே உட்கார்ந்தான்.

அதற்குப்பின், கூரிய மூக்கும், பெரிய கண்களும் கொண்ட ஒரு இளம் ஜூனியர் லெப்டினெண்ட் உள்ளே வந்தார்.

"ப்ளாடூன் கமாண்டர் ஜூனியர் லெப்டினெண்ட் பில்கோவ்," என்று தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டே, "உங்களிடம் வேலைக்கு ஆஜராகும்படி எனக்குக் கூறப்பட்டது," என்ருர்.

"உங்களிடம் எவ்வளவு ஆட்கள் இருக்கிருர்கள்?" அகிமோவ் கேட்டார்.

"பதினெட்டு."

"அது அதிகமில்லையே."

அகிமோவ் சுற்றிப் பார்த்தார். ஓ. பி. யிலிருந்து பின்னல் வரையிலும் நீண்டிருந்த குழியில் காயமடைந்தோர் ரன்னர்களுடனும், சிக்னல் மென்களுடனும் உட்கார்ந்து கொண்டோ அல்லது நின்று கொண்டோயிருந்தனர். இடைவிடாது விரோதி குண்டுமாரி பொழிந்து கொண்டிருந்ததால் வெளியே செல்வதற்கு தங்கள் மனதை அவர்களால் திடப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

"சமையல் வீட்டிலுள்ள மகாரிசெவிடம் ஓடிச் சென்று, அவரும் சமையல் வீட்டிலுள்ள ஆட்களும், ட்ரைவர்களும் எவ்வளவு விரைவில் இங்கு வரமுடியுமோ, அவ்வளவு விரைவில் வருமாறு கூறவும். அங்கு யாரும் தங்கிவிடாமல் பார்த்துக் கொள்க. எல்லோரையும் இங்கே அழைத்து வரவும்" என்று அகிமோவ் மேபொரோடோவிடம் கூறினர்.

மேபொரோடா கிளம்பினர், பாதுகாப்புக் குழியின் கதவருகில் அகிமோவ் சென்ருர்.

"மூன்று சிக்னல்மென்களும், வயர்லெஸ் ஆப்பரேட்டரும் இங்கே இருப்பார்கள்" என்று அகிமோவ் உத்திர விட்டார். மற்றவர்கள் ஜூனியர் லெப்டினென்ட் பில்கோவிடம் வேலைக்கு ஆஜராவார்கள். சொற்பக் காயம் பட்டவர்களும் ஆஜராக வேண்டும்."

அகிமோவ் தூரதிஷ்டிக் கண்ணுடியருகில் சென்று ஒரு நிமிஷம் அதன் வழியாகப் பார்த்தார். பின்னர் லெப்டினெண்டின் பக்கம்திரும்பி, 'நீங்கள் நீண்ட காலமாக போர் முனையில் இருந்தீர்களா?"

"இது என்னுடைய இரண்டாவது நாள்." பில்கோவ் தாழ்ந்த தொனியில் கூறினர். "ஆனல் என்னல் முடிந்த வரை சிறப்பாகப் பாடுபடுவேன்" என்ருர்.

"நான் புரிந்து கொண்டேன்" என்று அகிமோவ் நட்புறவுடன் கூடிய தொனியில் அவருக்கு ஆறுதல் கூறினர்.

சற்று நேரத்தில் பின்னணியிலிருந்து ஆட்கள் வந்தனர். மகாரிசெவும் இதர எட்டுப் பேர்களும். பில்கோவ் என்ன செய்ய வேண்டுமென்பதை அகிமோவ் அவரிடம் கூறினர். "ஒரெஷ்கின் இருக்கும் போர் முனைக்கு நீங்கள் சென்றவுடனே டெலிபோன் மூலமாகவோ, அல்லது ரன்னர் மூலமாகவோ என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். மற்ருெரு முறை, குறைந்த நேரத்திற்கு பீரங்கி குண்டு மாரிபொழியும் படி நான் டிவிஷனல் கமாண்டரிடம் கூறுகிறேன்."

அகிமோவ் பில்கோவுடன் குழிக்குள் சென்ருர். சுமார் 200 கெஜம் நடந்ததற்குப்பின், அவர், ஜூனியர் லெப்டினென்டின் படை மலைச் சரிவில் சற்று தொலைவில்தான் இருப்பதைப் பார்த்தார். அவர் அருகில் வந்ததும் ஆட்கள் எழுந்து நின்ருர்கள். அவர்கள் மிகவும் களைத்துப் போய்க் காணப்பட்டார்கள். ஆனல் அமைதியுடன் இருந்தனர். நம்பிக்கையூட்டும் வண்ணம் காணப்பட்டனர்.

பில்கோவ், யாந்திரீகமாக, "விடை பெற்றுக் கொள்கிறேன்" என்று கூறி, தன் பிளாடூனின் தலைமையில் அணிவகுத்துப் புறப்பட்டார். மகாரிசேவ் பின்னணியைத் தயார்

படுத்தி வந்தார். அவரது முகம் சிவப்பேறியிருந்தது. வியர்வை வேர்த்துக் கொட்டியது. சிறிது நொண்டி நொண்டி நடந்தார். பயம் நிறைந்த அவருடைய பார்வை அகிமோவின்மீது பதிந்தது. சிறிது பின்தள்ளி நின்று ''இரவு சாப்பாட்டைப் பற்றி என்ன, காம்ரேட் கேப்டன்? யார் சாப்பாட்டைத் தயார் செய்கிறுர்கள்,?'' என்று கேட்டார்.

"நான் தயார் செய்வேன்'', என்று கடுமையாகக் கூறினுர். பின்னர் அவர் ஓ. பி. க்குத் திரும்பிச் சென்ருர். அங்கு ரெமிஸோவ் இவருக்காகக் காத்துக் கொண்டிருந்தார். ரெமிஸோவ் புகையால் கருமை படிந்தும், சேரும் சகதியும் படிந்தும் காணப்பட்டார். மூக்குக் கண்ணுடிக்குப் பின்ஞல் அவருடைய கண்கள் உணர்ச்சி வயப்பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன.

''விரோதியின் எதிர்த் தாக்குதலை கை குண்டுகளைக் கொண்டே திருப்பி யடித்து விட்டோம்.'' என்று அவர் கூறினுர்.

''நீங்கள் இங்கே என்னுடைய இடத்தில் இருங்கள். கொலோவினுக்குத் தகவல் அறிவியுங்கள். நான் ஒரேஷ்கின் இருக்கு மிடத்திற்குச் செல்கிறேன்.''

"அவர் எங்கே இருக்கிறுர்?"

"பெகோசியானின் இடத்தில். பெகோசியான் கொல்லப்பட்டு விட்டார்."

"உண்மையாகவா?'' ரெமிசோவ் கேட்டார். ''நான் அவரைப் பார்த்து ஒரு மணி நேரம்கூட ஆகவில்லையே?''

"நாம் போகலாம்'', என்று அகிமோவ் மேபரோடாவிடம் கூறினுர்.

3

அவர்கள் குழியின் வழியாகவே சென்று, பின் மற்ருென்றில் திரும்பினர். விரோதி மோர்டார் குண்டுகளைப் பொழிந்து கொண்டிருந்தான். அவை சுற்றிலும் விழுந்து வெடித்துக் கொண்டிருந்தன. ''முன்னேறிச் செல்வதற்கு அவருக்கு என்ன தேவையாக இருந்திருந்தது?'' மேபொரோடா களைப்பு மிகுந்தவராய் ஆச்சரியப்பட்டார். போக்கு வரத்துக் குழியின் சுவற்றை அணைத்த வண்ணமே

சென்றார்," அவருடைய வேலை படைக்கு வழி காட்டுவதே தவிர, முன்னணிப் பிரதேசத்தில் மோப்பம் பிடித்துக் கொண்டு செல்வதல்ல." "அவரை யார் போகச் சொன்னார்கள்? யாராவது அவரைப் போகும்படி உத்திர விட்டிருந்தால் அது வேறு விஷயம். ஆனால் அங்கு அவராகவே போய்க் கொண்டிருந்தார். ஏன் என்பது கடவுளுக்குத் தான் வெளிச்சம் . . . . !

ஜெர்மன் குண்டுகள் வெடித்த ஒவ்வொரு சமயத்திலும், அகிமோவ், உரத்த குரலிலும், அதை ஆமோதிப்பதைப் போன்ற தொனியிலும், "ரொம்ப நல்லது, நன்றாகச் செய்தீர்கள். நல்லது, நல்லது" என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

விரோதி அடிக்கடியும், பலமாகவும் சுட்டுக் கொண்டிருந்தது பற்றி உண்மையிலேயே அகிமோவுக்கு சந்தோஷம்தான். ஏனென்றால், அதன் மூலம் விரோதியின் பீரங்கிகள் எங்கே யிருந்து சுடுகின்றன என்பதை சரியாக உணர்ந்து கொள்வதற்கு நம்முடைய பீரங்கி நிபுணர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. பார்க்கப் போனால் போரின் லட்சியமே அது தானே.

"அதுதான் வழி" என்று அவர் முணு முணுத்துக் கொண்டே வந்தார். தனக்கு இடது புறத்திலும், வலது புறத்திலும் குண்டுகள் வந்து விழுவதை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே வந்த அவர் வெகுண்டார்; அதே சமயத்தில் குதூகலமும் அடைந்தார்.

பாதுகாப்புக் குழியானது வரவர மேடாகிப் பின்னர் பூமியுடன் சமதரையாயிற்று. அருகாமையில் ஓர் சிறிய ஓடை இருந்தது. அதனுடைய கரைகளை காண முடியவில்லை. ஏனெனில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிக் கொண்டிருந்தது. இருந்த போதிலும் தண்ணீருக்கு மேல் தலை தூக்கிக்கொண்டு காணப்பட்ட புல், செடிகளின்றும், காற்றில் முதுகு வளைந்து காணப்படும் லேசான நாணலிலிருந்தும் ஓடையின் கரைகளை ஊகித்துக்கொள்ள முடிந்தது. மழைத் துளிகள் சொட்டு சொட்டாகத் தண்ணீரின் மேல் விழுந்து சிறிய அலைகளை ஏற்படுத்தியது. சிறிது தூரத்தில்

ஒரு டெலிபோன் ஆபரேட்டர் ஒரு மண் மேட்டின் அருகில் குனிந்துகொண்டு காணப்பட்டார். அவருடைய தலை ஈர மண்ணில் அனேகமாகப் புதைந்து கிடந்தது. அவருடைய பாதங்கள் தண்ணீரில் அமிழ்ந்திருந்தன. டெலிபோனில் தொடர்ந்து முணு முணுத்துக் கொண்டிருந்தார். "ஸ்நோட்ராப், ஸ்நோட்ராப், ஸ்நோட்ராப்! காம்ரேட் அகிமோவ்! காம்ரேட் அகிமோவ்!"

"சற்று கவனியுங்கள், உங்களுடைய ஸ்நோட்ராப் உங்களுக்கு அருகேயே இருக்கிறது!"

ஆபரேட்டர் தன் முகத்தைத் திருப்பினர். கண்ணீர் வழிவதைப் போன்று அவரது முகத்தில் தண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அகிமோவைப் பார்த்ததும் அவரது முகம் மலர்ந்தது.

"காம்ரேட் கேப்டன், பில்கோவ் வந்து விட்டதாக லிலாக் உங்களுக்கு அறிவிக்கிறது. பீரங்கிகள் எப்பொழுது தாக்க ஆரம்பிக்கும் என்று அவர் தெரிந்து கொள்ள விரும்புகிறுர்.

"நான் இப்பொழுது அங்கே வருகிறேன் என்று அவரிடம் கூறவும். ஒரேஷ்கின் எங்கே?

"அங்கே இருக்கிறுர்!" ஓடையின் அக்கரையில் குவியலாக இருந்த புதர்களை ஆபரேட்டர் சுட்டிக் காட்டினுர்.

அகிமோவ் தலை நிமிர்ந்து நடந்து சென்றுர். மேபொரோடாவும் அவ்வாறே செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆனுல் அவர் தன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுதான் நடந்தார். ஏனெனில் பெர்லின் வரையுள்ள ஒவ்வொரு ஜெர்மானியனும் தன்னைப் பார்க்க முடியும் என்று நினைத்தார்.

அவர்கள் அந்த ஓடையையும், வெள்ளம் புரண்டு ஓடும் பிரதேசத்தையும் கடந்து சென்றனர். தண்ணீரில் இங்கும் அங்கும் மேலே காணப்படும் மேடுகளையும், பாறைகளையும், உடைந்துபோன ஒரு பாலத்திலிருந்து எஞ்சி நின்ற மரக் கட்டைகளையும் பிடித்துக் கொண்டே தண்ணீரைக் கடந்து சென்றுர்கள். தண்ணீர் அவர்களின் பாதங்களின் கீழ் நுரையிட்டுக் குமிழ் விட்டுக் கொண்டு சென்றது. பழுத்த மஞ்சள்

நிற இலைகளை அடித்துச் சென்று கொண்டிருந்தது. மறு பக்கத்தில் தண்ணீர் ஆழமில்லாததாக இருந்தது. ஏனெனில் அங்கு கரை செங்குத்தாக இருந்தது. புதிதாகத் தோண்டப்பட்ட ஆழமில்லாத பாதுகாப்புக் குழிகள் பார்வையில் பட்டன, நம்முடைய வீரர்களால் கொஞ்ச காலத்திற்கு முன்தான் அவைகள் தோண்டப்பட்டிருக்கும். அதற்கும் அப்பால், பில்கோவின் படை வீரர்கள் சில புதர்களின் கீழ் சுற்றிலும் படுத்துக் கிடந்தனர். அவர்களை அகிமோவ் சுற்றிப் பார்த்து, சமையல்காரர் மகாரிசேவைக் கண்டு பிடித்தார். அவர் ஏற்கெனவே மனத் தெம்பு அடைந்து இதர ஆட்களுக்கு ஓர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். அவர்கள் சிரிப்பை அடக்கிக் கொண்டு கதை கேட்டுக் கொண்டிருந்தனர். அடிக்கடி முன்னே நிமிர்ந்து பார்த்துக் கொண்டனர்.

ஒரேஷ்கின்; பில்கோவ், கேப்டன் ட்ரோஸ்டு ஆகியோர் ஒரு பாதுகாப்புக் குழியில் உட்கார்ந்து கொண்டிருந்தனர். "நிலைமை எப்படி யிருக்கிறது?" என்று அவர்கள் பக்கம் குனிந்த வண்ணம் அகிமோவ் கேட்டார்.

ஒரேஷ்கின் முகமலர்ச்சியுடன் சிரித்தார். அவருடைய அழகான முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது. அகிமோவைக் கண்டதும் நிலைமையே முற்றிலும் மாறியதுபோல் தோன்றியது.

"நீங்கள் இங்கு ஏன் உட்கார்ந்திருக்கிறீர்கள்?" என்று அகிமோவ் சிறிது ஏளனமான தொனியில் கேட்டார். "பெகோசியான் விரோதியின் பாதுகாப்புக் குழியைக் கைப்பற்றினார். நீங்கள் உங்களையே அதை விட்டுத் துரத்தும் அளவிற்கு விட்டுக் கொடுத்தீர்கள், உங்களை ராணுவ நீதி மன்றத்தில் விசாரிக்க வேண்டும்; அடப் பாவிகளே, உங்களுடைய ஆட்கள் எங்கே?

ஒரேஷ்கினின் முகம் வெளுத்தது. குழியை விட்டு மேலே வந்தார்.

"உங்களுடைய வேவுகாரர்கள் எங்கே?," என்று அகிமோவ் ட்ரோஸ்டைப் பார்த்துக் கேட்டார்.

"இங்குதான், என்னுடனேயே இருக்கிறார்கள்.

அவர்களை மற்றவர்களுடன் முன்னேறிச் செல்லச் செய்யுங்கள். ஒவ்வொரு ஆளும் இப்பொழுது முக்கிய மானவர்.''

"அவர்களை .... சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை. அவர்களுக்கு இதர வேலைகள் இருக்கின்றன,'' என்று ட்ரோஸ்ட் முகஞ் சுளித்த வண்ணம் கூறினார்.

''ஆனால் அவர்கள் அதைச் செய்யவில்லையே.'' என்று அகிமோவ் கூறினார். அவரது முகம் கடுமையாயிற்று. அவர்கள் இங்கேயே சுற்றிக் கொண்டிருந்தால், தங்கள் கடமைகளை என்றுமே செய்ய மாட்டார்கள்.''

''மல்லிகையும், டெய்சியும் இப்பொழுது ஆரம்பிக்கப் போகிறார்கள்,'' என்று டெலிபோன் ஆப்ரேட்டர் பாதுகாப்புக் குழியிலிருந்து குரலெழுப்பினார்.

பீரங்கிப் படையின் இடியோசை மீண்டும் கேட்டது. அகிமோவ் முன் நோக்கிச் சென்றார். சென்று கொண்டே பில்கோவிடம், ''உங்களுடைய ஆட்களை எங்களுக்குப் பின்னே அழைத்துக் கொண்டு வாருங்கள், பீரங்கிகள் வெடிப் பதன் பின்னே நாம் செல்வோம்,'' என்றார்.

முதலாவது கம்பெனியின் வீரர்கள் சுமார் 100 கெஜ தூரம் முன்னே இருந்தனர். அவர்கள் எழுந்து, அதிகாரி களுடன் தவழ்ந்து கொண்டே சென்றனர். துரதிஷ்ட வச மாக பீரங்கிகளின் தாக்குதல் குறுகிய காலமே நீடித்தது. அது 7 நிமிஷமே நீடித்தது. ஒன்று வெடி மருந்து காலி யாகிப் போயிருக்கலாம். அல்லது உத்தரவே அந்த அளவிற் குத்தான் இருந்திருக்கலாம். அகிமோவ் பல்லைக் கடித்தார். முன்னே நடந்து சென்றார். அவருடைய உயரமான உருவம், ஏற்கெனவே அவற்றைச் சுற்றிலும் விர்ரென்று பறந்து கொண்டிருந்த குண்டுகளையும் பொருட் படுத்தாமல் பிடி வாதமாக நிமிர்ந்தபடியே முன் சென்றார். திடீரென்று சாவுக் களைபோல் அவரது முகம் வெளுத்தது. முஷ்டியை இறுக்கிய வண்ணம், கையை மேலே வீசினார். தன்னுடைய பலங்கொண்ட மட்டும் புயலடிக்கும்போது மாலுமிகள் கத்து வதைப் போல்—

“தோழர்களே! முன்னேறிச் செல்லுங்கள்! நம்முடைய தாய் நாட்டுக்காக!” என்று குரலெழுப்பினர். எல்லோரும் ஆச்சரியப்படும் முறையில்—ஒரு புத்தகத்தில் அவர் படித்த ஒரு பழைய பழமொழியையும் கூடச் சேர்த்துச் சொன்னர்; “விரோதியின் முன்னே ரஷ்ய ஆயுதங்களை அவமதிப்புக் குள்ளாக்காதீர்,” என்பதே அது.

“ஹுர்ரா!” போர்முனை முழுவதும் ஒலித்தது; எல்லா வீரர்களும் முன்னேறிப் பாய்ந்தனர். சுட்டுக் கொண்டே சென்றனர். மூச்சுப் பிடித்துக் கொண்டு சென்றனர். கால் வழுக்கி விழுந்தனர், மீண்டும் எழுந்தனர்; இன்னும் அவர் களின் காதுகளிலே ஒலித்துக் கொண்டிருந்த அந்த மகத் தான அறை கூவலினல் உற்சாகம் பெற்று முன்னேறினர். பின்னுலிருந்தும், பக்கவாட்டுகளிலிருந்தும், இயந்திர பீரங் கிகள் முழங்கின. கை குண்டுகள் வெடித்துக் காற்றைப் பிளந்தன. பின் அமைதி நிலவியது. மேபொரோடா குழிக் குள்ளே பதுங்கி யிருந்த ஒரு ஜெர்மானியனின் தலைமீது தொப்பென்று குதித்தார். அவனது முகத்தைத் தன் கை களால் பிடித்து அமுக்கினர். அவனது தலையின் பின் புறத்தை மண்ணில் மோதி பயங்கரமாகத் தேய்த்தார். பின்னர் அவர் தன்னுணர்வு பெற்று சுற்றிலும் திரும்பிப் பார்த்தார். அந்தப் பாதுகாப்புக் குழியில் நம் வீரர்கள் நிறைந்திருந்தனர். இயந்திர பீரங்கிகளும், டாங்கி எதிர்ப்பு பீரங்கிகளும் அவசர அவசரமாக சரியான இடங்களில் நிலை நிறுத்தப் பட்டன. அகிமோவ் தன் குதிகால்களில் உட் கார்ந்து கொண்டே, டெலிபோனில், வெறிபிடித்தவரைப் போல் உறுமினர். டெலிபோனில் வரும் பதிலைக் கேட்பதற் குக் கூட அவருக்குப் பொறுமையில்லை.

“சுடுங்கள்” என்று கூவினர், “வெடி மருந்தை உடனே கொண்டு வாருங்கள், நிறைய கை எறி குண்டுகளையும், துப் பாக்கி ரவைகள் நிறைந்த பீப்பாய்களையும் கொண்டு வாருங் கள், யாரது அங்கே? தூங்குகிறீர்களா, அயோக்கியர்களே! நான் திரும்பி வரும் வரையில் சற்றுப்பொறுங்கள், உங்க ளுக்கு ஆக வேண்டியதைச் செய்து காட்டுகிறேன்! நாய்

ஜென்மங்களே! பீரங்கி அதிகாரிகளை இங்கே அனுப்புங் கள் இங்கு நீங்கள் நன்ருகப் பார்க்க முடியும்!''

இப்பொழுது தாக்குப் பிடித்து நில்; உனக்குப் புரிகிறதா?'' என்று எழுந்து ஒரேஷ்கினுக்குக் கூறினர், அகிமோவ். அவருடைய தொப்பி ஒரு துப்பாக்கி ரவையால் தாக்கப்பட்டு பறந்தோடி விட்டது.'' உன்னுடைய ஒ. பி. இங்கே இந்த பாதுகாப்புக் குழியிலேயே இருக்கும். என்னுடையது அந்தப் புதரில்-நீ உட்கார்ந்து பல்லிளித்துக் கொண்டிருந்தாயே, அங்கே இருக்கும்,'' என்ருர். அவர் சுற்றிலும் பார்த்துவிட்டு களைப்புடன் சிரித்தார்." இந்தப் பாதுகாப்புக் குழி நன்ருக இருக்கிறது. ஜெர்மானியர்கள் ஒழுங்கை விரும்புகிறவர்கள்,'' என்ருர்.

அந்தப் பாதுகாப்புக் குழி உண்மையிலேயே நன்ருகக் கட்டி யமைக்கப்பட்டிருந்தது. கவர்ச்சிகரமாகவும் இருந்தது. அதனுடைய ஓரங்களில் மரப் பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன. அது வளைந்து வளைந்தும் இருந்தது. படுத்துறங்குவதற்கான மேடைகளும் ஓரங்களில் மரப் பலகைகள் கொண்டதாகவும் இருந்தன. தரையில் வைக்கோல் பாய்கள் போடப்பட்டிருந்தன. வெண்ணெய் வைத்துக் கொள்வதற்கான ஆரஞ்சு நிற பிளாஸ்டிக் தட்டுகளும், சாப்பிட்டு எஞ்சிய இதர பொருள்களும் சுற்றிலும் காணப்பட்டன. கொல்லப்பட்ட ஜெர்மானியர்களும், நம்மவர்களும் அங்கேயும் கூட அக்கம் பக்கமாக சுற்றிலும் கிடந்தார்கள். அவை நம்மால் பிடிக்கப்பட்ட விரோதியின் பாதுகாப்புக் குழிகள் என்பதை அவற்றின் வாசனையிலிருந்தே தெரிந்து கொள்ள முடிந்தது. ஆம், அங்கிருந்த காற்றே வேறு விதமாக இருந்தது. நமக்குப் பகைமையானதாகத் தோன்றியது.

அகிமோவ் அந்தப் பாதுகாப்புக் குழிகளின் வழியே நடந்து சென்ருர். அங்கே இருந்த வீரர்களிடம் பாதி தமாஷாகவும், பாதி கடுமையாகவும் உரையாடிக் கொண்டு சென்ருர்.

''கடைசியாக நமக்குத் தங்குவதற்கு நல்ல இடம் கிடைத்து விட்டது. காய்ந்த இடம். இதை விடாமல் பிடித்

துக் கொள்ளுங்கள், மீண்டும் நம்மை சேற்றிலும், சகதியிலும் அவர்கள் தள்ளுவதற்கு நீங்கள் விட்டீர்களேயானல், உங்களுக்கு அது பெரிய அவமானமாகும்.''

திடீரென அவர் மௌனமானுர். எங்கோ சற்று அருகாமையிலேயே ஒரு பெண் குரல் ஜெர்மன் மொழி பேசுவதை அவர் கேட்டார். அதுதான் அனிஷ்கா. காலியாக இருந்த ஒரு வெடி மருந்துப் பெட்டியின்மீது, கையில் ஒரு குறிப் புப் புத்தகத்துடன் அவள் உட்கார்ந்து கொண்டு ஒரு கைதியைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள்.

''நீ இங்கே ஏன் இருக்கிருய்?'' அகிமோவ் கேட்டார். அவள் நிமிர்ந்து பார்த்து, முகவாய்க் கட்டையை துடுக்காக முன்னுல் தள்ளிய வண்ணம் ''மேற்கொண்டு சிறிதும் முன்னேறுவதற்கு ஜெர்மானியர்கள் என்னை அனுமதிக்கவில்லை,'' என்றுள்.

படை வீரர்களிடம் அடக்கமான சிரிப்பொலி எழுந்தது.

''தமாஷ் பண்ணுவது ஒருபுற மிருக்கட்டும்;'' அகிமோவின் முகம் கோபத்தால் சிவந்தது.'' இது நீ ''இருக்க வேண்டிய இடமல்ல.''

''சரி'': என்று அவள் மறுமொழி பகன்றுவிட்டு, வெறுப்புணர்ச்சியுடன் எழுந்து தன் பெரிய மேலங்கியை சரி செய்து கொண்டே, ''அவர்களை நீங்களே கேள்வி கேட்டுக் கொள்ளுங்கள்,'' என்றுள்.

''ரொம்ப சரி, ஆனுல் இது அதற்கு ஏற்ற இடமல்ல.''

''ரொம்ப சரி, அவன் காயம் பட்டுள்ளான். அவனுல் நகர முடியாது.''

அந்தக் கைதியை கேப்டன் தன் கடைக் கண்ணுல் பார்த்தார். அக் கைதியைப் பொருட்படுத்தாத தோரணையில், கோபித்துக் கொள்வதா, சிரிப்பதா என்று தெரியாமல், ''நீ விரும்பி யிருந்ததைவிட இது அதிகம்'' என்று முணுமுணுத்தார். பின்னர் அவரும், ட்ரோஸ்டும், மொழி பெயர்ப்பாளர் அந்தக் கைதியுடன் பின்னணிக்குச் செல்ல வேண்டுமென்றும், பழைய ஓ. பி. யில் ரெமிஸோவுடன் தங்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

சோல்ஜர்களிடையில் மகாரிசேவ் இருக்கிருரா என்று அவர் பார்த்தார். பின்னர், கடுமையாகப் பேசுவதைப் போன்ற பாசாங்குடன், "உனக்கு இப்பொழுது போராடும் வேலை ஒன்று இருக்கிறது. திரும்பிச் செல், இரவு சாப்பாட்டைத் தயாராக்கு. என்ன, புரிந்ததா? வேலை நடக்கட்டும்?" என்று கட்டளை யிட்டார், அவர்.

அனிஷ்கா அந்தக் கைதியுடன் போர்க்களத்தின் பின்னணிக்குப் புறப்பட்டாள். உளவு பார்ப்பவர்கள் இருவரும், பட்டாளத்தின் சமையல்காரரும் உடன் சென்றனர். அந்தக் கைதி நடக்க முடியாத நிலையிலிருந்தான் என்பது உண்மையே. அவர்கள் அவனைச் சிறிது தூரம் தூக்கிச் செல்லவும் சிறிது தூரம் இழுத்துச் செல்லவுமாகச் சென்றனர். ஓடையின் மறு கரைக்கு அவர்கள் போய்ச் சேர்ந்த போது, ஜெர்மன் பீரங்கிகள் மீண்டும் முழங்க ஆரம்பித்தன. அவர்கள் மண்ணில் குப்புறப் படுத்துக் கொள்ள வேண்டி யேற்பட்டது. பீரங்கிக் குண்டுகள் சுற்றிலும் வெடித்துக் கொண்டிருந்தன. அந்த ஜெர்மன் கைதி கொல்லப்பட்டு விடுவானே என்று அனிஷ்கா மிகவும் பயப்பட்டாள். ஆனால் வேறு அசம்பாவிதம் ஒன்றும் நிகழவில்லை. விரைவில் அவர்கள் ரெமிஸோவ் இருக்குமிடம் போய்ச் சேர்ந்து விட்டனர்.

அனிஷ்காவின் மேலங்கியின் மீது படிந்திருந்த மண்ணை அகற்றுவதற்கு அவன் அனிஷ்காவுக்கு உதவினன். அப்பொழுது அவன் தன்னையே நொந்து கொள்ளும் முறையிலும், சோகத்துடனும் தன் தலையை அசைத்தான். "இவ்வளவு நேரமும் நான் உங்களைப் பற்றி மிகவும் கவலையாக இருந்தேன்." என்று அவன் கூறினன். "என்னுடன் கோபிக்காதீர்கள். இது ஒரு பெண் வரக்கூடிய இடமல்ல. நான் உண்மையாகச் சொல்கிறேன். நீங்கள் அந்தக் கழகத்தில் ஸ்ச்சில்லரைப் பற்றி ஒரு வியாசம் எழுதியதைப் பற்றி ஜெர்மனியர்களுக்கு ஒன்றும் தெரியாது. உங்களுக்குத் தெரியுமா? அதனல் அவர்கள் உங்களைக் கொல்லாமல் விட்டுவிட மாட்டார்கள். அவர்கள் நாஜிகள் என்பதை மறந்து விடாதீர்கள்!"

ரெமிஸோவ், ஓடையின் அக்கரையிலுள்ள புதிய ஓ. பி. க்கு மாறிச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந் தார். ஆனால் ஓ. பி. முன்னேறிச் செல்வதற்கு ரெஜி மெண்ட் கமாண்டர் இன்னும் அனுமதியளிக்கவில்லை. மலைச் சாரலில் கிராமபோன் இருக்கக்கூடிய அந்தப் பாடி வீட்டுக்கே திரும்பிச் செல்லும்படி ரெமிஸோவ் அனிஷ் காவை மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். ''அங்கு நீங்கள், உங்கள் கைதியை நன்றாகக் கேள்வி கேட்டு விசாரிக்க முடியும். சங்கீதத்தையும் அனுபவிக்க முடியும்,'' என்றார், டெலிபோனை மீண்டும் கையில் எடுத்துக் கொண்டே.

அனிஷ்காவும், உளவு பார்ப்பவர்களும், அந்தக் கைதி யுடன் மீண்டும் அந்த மலைச்சாரல் பாடி வீட்டுக்கு வந்து சேர்ந்தனர். அதற்கு முந்தின நாள் இரவுதான் அனிஷ்கா அங்கு வந்து இறங்கி யிருந்தாள். விரோதி சுடுவது நின்றி ருந்தது. எனவே பள்ளத்தில் தாழ்ந்து இருக்க வேண்டு மென்ற அவசிய மில்லாமலிருந்தது. அவர்கள் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தனர். அந்தக் கைதி மிகவும் கனமாக இருந்ததால், அவர்கள், சிதறுண்டு போன, எரிக்கப்பட்டுக் கிடந்த ஓர் கிராமத்தின் ஓரத்தில் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்வதற்காக உட்கார்ந்தார்கள். பாழாக்கப்பட்டிருந்த ஒரு சிறிய வீட்டின் கருமை பூத்திருந்த புகைப் போக்கிகளின் அருகில் அவர்கள் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டார் கள். அதற்கு சற்றுத் தொலைவில்தான் டெலிபோன் நிலையம் இருந்தது. அனிஷ்கா அங்குபோய் கைதியை விசாரித்து, உடனே டெலிபோன் மூலம் தகவல் அனுப்புவ தென முடிவு செய்தாள்.

அந்த சோல்ஜரின் (கைதியின்) சம்பளப் புத்தகத்திலி ருந்து, அவன் 78வது தாக்குதல் படையில் உள்ள லான்ஸ் கார்ப்பொரல் என்று அனிஷ்கா அடையாளம் கண்டு கொண் டாள். அவனுடைய பெயர் ஹான்ஸ் கூஹல். அவனுடைய சொந்த ஊர் ஹனேவர். அவனது படையின் 78 என்ற எண் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. அந்தப் படைப் பிரிவு (டிவிஷன்) முன்பு அங்கு இல்லை. அனிஷ்கா

வியப்புடனும், திருப்தியுடனும் வாயிக்குள்ளேயே சீட்டி யடித்துக் கொண்டாள். அவனை விசாரிக்கத் தொடங்கினுள்.

ஒரு பெண்மணியால், அதுவும் அழகும், இனிய குரலு முடைய ஒருத்தியால் கேள்வி கேட்கப்படுவது அந்தக் கைதிக்கு இன்பமாக இருந்தது. அவர்கள் தன்னை சுட்டுக் கொல்லமாட்டார்கள் என்றும் அவன் நினைத்தான். அவன் கொஞ்சம் சுறுசுறுப்பும் அடைந்தான். இது வரையிலும் தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டு மென்ற மனப் பாங்கில் இருந்தான். ஆனுல் இப்பொழுது அவன் தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டான். அவ் வாறு எல்லா விஷயங்களையும் சொல்லி விடுவது தவருகு மென்றும் ஒரு ஜெர்மானிய சோல்ஜரின் கவுரவத்திற்கும் இழுக்காகும் என்றும் நினைத்தான். எனவே அதற்குப்பின் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அவனுடைய பதில்கள் தட்டிக் கழிப்பதாக இருந்தன. கடைசி, கடைசியாக அவன் வாயைத் திறக்கவே மறுத்தான். அவ்வளவு நல்ல ஜெர்மன் மொழியில் தன்னைக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த அந்தப் பெண்மணி உட்பட ரஷ்யர்கள் அனைவரும் சித்ரவதை செய்பவர்கள் என்றும், நெஞ்சீரமற்றவர்கள் என்றும், ஒரு காயம் பட்ட மனிதனை வதைத்து தகவல் சேகரிக்கின்றன ரென்றும் இன் னும் பலவாருகக் கூறும் அளவுக்குத் தனக்குத் தானே வெறி யேற்றிக் கொண்டான்.

கடைசியில் அனிஷ்கா தன் பொறுமை எல்லாவற்றை யும் இழந்தாள். அவனை உற்றுப் பார்த்து, தன்னுடைய கேள்விகளுக்கு பதில் சொல்லப் போகிருயா இல்லையா, என்று கேட்டாள். மீண்டும் பதில் இல்லை.

“ரொம்ப சரி”, என்று அவள் அழுத்தமாகக் கூறினுள். “அப்படியானுல், உன்னை சோல்ஜர்களிடம் ஒப்படைக்கப் போகிறேன் அவர்கள் உன்னை எங்கள் ராணுவத் தலைமைக் காரியாலயத்துக்கு அழைத்துப் போவார்கள்” என்ருள். பின் னர் அவள் திரும்பிப் பார்த்து, உளவு பார்ப்பவர்களில் ஒருவ ரான பிர்யூகோவைக் கூப்பிட்டாள்.

பிர்யூகோவ் அந்தக் கைதியிடம் சென்று குனிந்து நின் ருர். அவர் மிகவும் அமைதியான சாந்தமான சுபாவம்

உடையவர். யூரல் மலைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர். ஊகித்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவ்வளவு மென்மையான இதயம் படைத்தவர். ஆனல் அவரைத் தெரியாதவர்களுக்கு, அவருடைய தட்டையான முகமும், சாய்வான கண்களும், சிவப்பானதும் காற்றில் மிகவும் அடிபட்டதுமான கன்னங்களும் பார்ப்பதற்கு பயங்கரமாகத் தோன்றும். அவரைப் பார்த்ததும் கூஹல் பயத்தால் வெலவெலத்துப் போய் உடனே தனக்குத் தெரிந்தவை அனைத்தையும் சொல்ல ஆரம்பித்தான்.

தன்னுடைய ராணுவத் தந்திரத்தின் வெற்றியால் பெருமித மடைந்த அனிஷ்கா, கைதி சொன்னவைகளை யெல்லாம் உடனுக்குடன் குறிப்பு எடுத்துக் கொண்டாள். மிகவும் முக்கியமான விபரங்களை ரெஜிமெண்டின் பிரதம தளபதிக்கு டெலிபோன் மூலம் தெரிவித்தாள். பின்னர் உளவுகாரர்களுடன் கைதியைப் பின்னணிக்கு அனுப்பி வைத்தாள்.

பின்னர் அவள் ரெமிஸோவ் இருக்கக் கூடிய ஓ. பி. க்குச் சென்ருள். அவள் மலைச்சரிவின் அடிவாரத்திற்குச் சென்ருளோ இல்லையோ, ஜெர்மன் பீரங்கிகளும், இயந்திர பீரங்கிகளும் இடியோசையென முழங்க ஆரம்பித்தன. விரோதி ஒரு சமயம் இதர பகுதிகளிலிருந்தும் பீரங்கிப் படைகளைக் கொண்டு வந்திருக்கலாம். அனிஷ்கா அகிமோவின் பாதுகாப்புக் குழிக்கு ஓடிச் சென்று தப்பினுள். குண்டு மாரியினல் அந்த மலைச் சரிவே அதிர்ந்தது.

அந்தப் பாதுகாப்புக்குழியில் ஒருவரும் இல்லாதிருந்ததைக்கண்டு அனிஷ்கா மகிழ்ச்சியடைந்தாள். அவள் தன் கண்களை மூடினுள், தன் விரல்களால் காதுகளைப் பொத்திக் கொண்டு சுவிட்சுகள் வரிசையாக இருந்த சுவற்றின்மீது அழுத்தி சாய்ந்தாள். அவள் மிகவும் பயந்து போனுள். பயந்த மனிதர்கள் செய்யும் எல்லாவற்றையும் செய்தாள்.

அப்பொழுது கதவு கிரீச்சென்று திறந்தது. கம்பிகள் சுற்றப்பட்டிருந்த உருளைகளைத் தூக்கிக்கொண்டு ரெஜிமெண்ட் சிக்னல்மேன் உள்ளே நுழைந்தார்.

அவரைத் தொடர்ந்து மகாரிசேவும், வேறு சிலரும் வந்தனர். அனிஷ்கா உடனே மேஜையின்மீது உட்கார்ந்

தாள். அவள் சிறிதும் பதட்ட மடையாத மனேபக்குவத்தில், தன் குட்டையான தலை முடியை வாரிக்கொள்ள ஆரம்பித் தாள். விஷயம் தெரிந்த குரலில் பேச ஆரம்பித்தாள்:

''பலமான குண்டு வீச்சா? ஜெர்மானியர்கள் நம்முடைய அரங்கத்திற்கு அதிகமான பீரங்கிகளைக் கொண்டுவந்துள் ளார்கள் என்று தெரிகிறது. நம்முடைய தாக்குதல் அவர் களை மிகவும் பீதியடையச் செய்துள்ளது. நம் ஆட்கள் சமாளித்து நிற்பார்களா?'' என்ருள். ''பட்டாலியன் கமாண்டர் கொல்லப்படாதவரைக்கும்'' என்று மகாரிசேவ் கூறினர். அவருடைய முகம் சாவுக்களையுடன் காட்சி யளித்தது.

அனிஷ்கா தன் தலையை வாரிக்கொண்டே, ''என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க நான் மிகவும் ஆவலாயிருக்கி றேன்'', என்ருள்.

தன்னுடைய வார்த்தைகள் எவ்வளவு போலித்தனமாக இருந்தன என்பதை அவளே உணர்ந்தாள். பின்னர் தன் பயத்தை சமாளித்துக் கொண்டவளாய் அவள் வெளியே புறப்பட்டாள். மலையின் மேற்குச் சரிவு ஓரமாக அவள் முன் சென்ருள். விரைவில் குண்டுமாரி நின்றது. வெகு தூரத்தில் கொஞ்ச நேரம் விட்டு விட்டு இயந்திர பீரங்கிகள் சுடுவது மட்டும் கேட்டுக் கொண்டிருந்தது. மீண்டும் குண்டு மாரி பொழிய ஆரம்பித்தது. அவளை அடுத்து ஒரு வண்டி, வண்டியோட்டி இல்லாமலேயே வேகமாகச் சென்றது. அனிஷ்காவின் இருதயம் படபடவென்று அடித்துக்கொண் டது. அகிமோவைப்பற்றித்தான் அவளுடைய சிந்தனையெல் லாம். ஏற்கனவே நடைபெற்ற சண்டையின்போது அவள் முழுக்க முழுக்க அவருடனேயே அவருடைய ஓ.பி.யில் இருந் தாள். அப்பொழுது அவர் பேசும் தொனி உட்பட எல்லா வற்றையும் அவள் கூர்ந்து பார்க்கவும் கேட்கவும் செய்தாள். அவர் பேசிய தொனி எப்படியோ அவளுடைய காதைக் கூட புண்படுத்தவில்லை. அவர் கொல்லப்பட்டால் நிலைமை மிகவும் பயங்கரமாயிருக்கும் என்று நினைத்தாள். பட்டா லியன் பூராவுக்கும், ரெஜிமெண்டுக்கும், அவளுக்கும் கூட பயங்கரமாகவிருக்கும்.

சண்டையின் ஓசை படிப் படியாகத் தணிந்தது. தற்பொழுது எல்லாம் அமைதியாக இருந்தது. அனிஷ்கா நீள துவாரத்தின் அருகில் இருந்தாள். அதனுடைய கடைசியில்தான் ஓ.பி. இருந்தது. அவள் அருகில் வரவர, அந்தப் பிரதேசமே அடையாளங் கண்டுகொள்ள முடியாமல் உருமாறியிருந்தது. விடாமல் பீரங்கிகள் சுட்டு வந்ததால் எல்லாமே அலங்கோலமாகக் கிடந்தது. ஓ. பி. இருந்த இடத்தில் ஒரு அகலமான பள்ளம் இருந்தது. அதில் ஆட்கள் தோண்டிக்கொண்டும் இருந்தனர். அதனுடைய ஓரத்தில் ஒரு மனிதன், ஓர் வளைந்து உருமாறிக்கிடந்த மரக் கட்டையின் முனையில் உட்கார்ந்திருந்தான். அவனுடைய தலையில் தொப்பியும்கூட இல்லை. அகிமோவ் தான் அவன்.

தோண்டிக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் பள்ளத்திலிருந்து ஊர்ந்து வெளியே வந்து அங்கு நின்றார். தன்னுடைய மண் வெட்டியை வீசி எறிந்தார். அனிஷ்கா அவன் அருகில் சென்று, அவன் மேபொரோடா என்பதை அறிந்தாள்.

''என்ன நடந்தது'' என்று கேட்டாள்.

''ஒரு குண்டு நேராக வந்து தாக்கி கேப்டன் ரெமிஸோவைக் கொன்றது.''

அனிஷ்காவின் முகம் வெளுத்தது. பல்லைக் கடித்தாள். பல்லைக் கடித்த வேகத்தில் அவளுடைய காதுகளும்கூட வலி கண்டுபோயின. பின்னர் அவள் அகிமோவைப் பார்த்தாள். அவர் அசைவின்றி உட்கார்ந்துகொண்டிருந்தார். கண்ணீர் அவர் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது. அனிஷ்கா நடுங்கினாள். ஒரு நாள் பூராவும் தான் கூர்ந்து கவனித்த அந்த உருக்கு மனிதன் அழக்கூடியவன் என்று அவள் எப்பொழுதும் நினைத்தது கிடையாது. அவனால் அழமுடியும் என்பதையும், உண்மையில் அழுது கொண்டிருந்ததையும் பார்க்க அவள் உடம்பும், உள்ளமும் நடுங்கியது. அவரருகில் சென்று, தன் கைகளால் அவரை அணைத்துக் கொள்ள விரும்பினாள். அகிமோவ் நிமிர்ந்து அவளைப் பார்த்தார். மெதுவாக எழுந்தார்.

“நீ இங்குதானிருக்கிருயா?” அவர் கேட்டார். பின்னர் அவர் மீண்டும் கீழே பார்த்து பள்ளத்தைச் சுட்டிக்காட்டினுர். “அவனுடைய அடையாளம்கூட ஒன்றும் மீதமில்லே; ஒன்றும் மீதமில்லே.”

அருகில் பள்ளமான இடத்தில் டெலிபோன் ஆப்ரேட்டர் “லில்லி, லில்லி, லில்லி......” என்று விடாமல் பிடிவாதமாக அனேகமாக மூச்சைப் பிடித்துக்கொண்டு, சில சமயங்களில் தாழ்ந்த குரலிலும், சில சமயங்களில் உரத்த குரலிலும், சில சமயங்களில் வற்புறுத்தலுடனும், சில சமயங்களில் விநயத்துடனும் கூப்பிட்டுக்கொண்டே இருந்தார்.

காயமடைந்த ஆட்கள் ஒரு சிறு கும்பலாக வந்தனர். அகிமோவ் நின்று கொண்டிருந்த இடத்தை அவர்கள் அணுகினவுடனே, அவர்களில் ஒருவர், “விடைபெற்றுக் கொள்கிருேம். காம்ரேட் கேப்டன். நாம் இனிமேல் ஒருவரை ஒருவர் என்றும் பார்க்க முடியாமல் போக நேரிடலாம்”, என்று கூறினுர். “விட்டியகோவ்! என்ன, காயமடைந்தாயா?” என்று ஆச்சரியத்துடன் கேட்டார் அகிமோவ்.

“ஆம்” என்று சிரித்துக்கொண்டே சார்ஜெண்ட் கூறினுர். “ஆனல் அபாயம் ஒன்றுமில்லே”, என்ருர். அவர் நடந்து சென்று, அகிமோவின் பக்கம் திரும்பினுர். “பரிதாபப்பட வேண்டிய விஷயம், நீங்கள் அனைவரும் ஒய்வெடுத்துக் கொள்ள வெளியே போகிறீர்கள். நான் ஆஸ்பத்திரியில் இருக்கப் போகிறேன், என்ருர்.

விட்டியகோவ் கூறியதின் பொருளை அகிமோவ் உடனடியாகப் புரிந்துகொள்ளவில்லே. காயமடைந்த வீரர்களின் சமீபம் சில அடிகள் எடுத்துவைத்தார்.

“நீ என்ன சொன்னுய்? யார் ஒய்வெடுத்துக் கொள்ளப் போகிருர்கள்?” என்று கேட்டார். விட்டியகோவ் பட்டாலியன் கமாண்டரின் பக்கம் திரும்பி, அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, கூறினுர்:

“ஏதோ உங்களுக்குத் தெரியாததுபோல் பேசுகிறீர்களே! இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். நேற்றிரவு ஸ்கோப்ட்சோவும் அல்யோஷினும் பீல்ட் ஆம்புலன்ஸ் பட்டாலியனிலிருந்து திரும்பிவந்தனர். அங்கு துருப்புகளுக்கு

ஒன்றும் குறைவில்லை. எங்களுக்கு ஓய்வு கிடைக்கப் போகிறது." அவர் ஒரு கணம் மௌனமாக இருந்தார். பின்னர் மீண்டும் கூறினார், "சென்று வருகிறோம், காம்ரேட் கேப்டன். உங்களை நாங்கள் என்றும் மறக்கமாட்டோம்."

காயமடைந்தவர்கள் நடக்கலானார்கள். அகிமோவ் நீண்ட நேரம் அவர்களையே கவனித்துக்கொண்டிருந்தார். பின்னர் அவருடைய தலை கீழே சாய்ந்தது. தன் கைகளை விரித்து அர்த்தமற்றமுறையில் பெருமூச்சுவிட்டார். முன்னே நடக்கலானார்.

இலையுதிர் காலத்தில் ஏற்படுவதுபோல் விரைவில் இருள் சூழ ஆரம்பித்தது. ஜெர்மன் பீரங்கிகள் சுடுவதினால் ஏற்படும் தீ ஜுவாலைகள் ஆகாயம் நோக்கிப் பறந்தன. மற்றொருதாக்குதல் ஏற்படலாம், என்று விரோதி பயந்தான். மலைச்சரிவுகளிலும், பாதுகாப்புக் குழிகளிலும் வீரர்கள் அனைவரும் அமைதியாக இருந்தனர். ஒவ்வொருவரும் நின்று கொண்டிருந்த இடத்திலேயே அப்படியே சாய்ந்தனர். மழையும் நின்றுபோயிருந்தது. ஆனால் இரவு ஒரு மணிக்கு உஷார் கொடுக்கப்பட்டது. வீரர்கள் அனைவரும் குதித்தெழுந்தனர். அவர்கள் கண்ட காட்சி இதோ!

துப்பாக்கிகள் உரசிக் கொள்ளும் சத்தம், சாப்பாட்டு டப்பாக்கள் ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளும் சத்தம், பூட்ஸுகள் ஈர மண்ணில் தொப் தொப்பென்று அடி எடுத்துவைக்கும் சத்தம்! இந்த ஓசையோடு புதிய துருப்புகள் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் நல்ல ஆடைகள் அணிந்து கொண்டிருந்தனர். தேவையான சாதனங்களையும் கொண்டிருந்தனர். அவர்களின் முகங்களில் அவ்வளவு மகிழ்ச்சியில்லை. ஆயினும் அவர்கள் நம்பிக்கையற்றவர்களாகக் காணப்படவில்லை. யாருக்கு ஓய்வு கொடுத்தனுப்ப வந்திருக்கிறார்களோ அவர்களின் முகங்களில் காணப்பட்ட சோர்வைக் கண்டு இந்த வீரர்கள் சிரித்தார்கள். அவர்களின் மனச்சோர்வுக்கு காரணம் என்ன என்பதைப்பற்றி அவர்களுக்கு சிறிதும் சந்தேகம் இருக்கவில்லை. வெடி மருந்தினுடையவும், நெருப்பினுடையவும் நெடி அவர்களின் மூக்கைத் துளைத்தது. கடினமான எதிர்காலம் தங்களை

எதிர் நோக்கியிருக்கிறது என்பதை அவர்கள் பூரணமாக உணர்ந்தனர். ஆனுல் அவர்களின் நெஞ்சங்களிலே எத்தகைய பயங்கர உணர்ச்சிகளும் இல்லை. மற்றவர்கள் கட்டி வைத்திருந்த பாதுகாப்புக் குழிகளில் அவர்கள் இறங்கி ஆங்காங்கே தங்கள் நிலைகளை எடுத்துக்கொண்டனர். பின்னர் அவர்கள் தங்கள் பூட்சுகளை மாற்றிக்கொள்ளும்போது உறுமல்களும், பெரு மூச்சுகளும் கேட்டன.

"நன்கு ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி மற்றவர்களை வழியனுப்பிவைத்தனர். அவ்வாறு வழியனுப்பும்போது அவர்களிடம் எத்தகைய பொருமையோ, கெட்ட எண்ணமோ ஏற்படவில்லை. ஓய்வு எடுத்துக்கொள்ளச் செல்லும் படையினர் அணிவகுத்து நின்று புறப்பட்டனர்.

அத்தியாயம் நான்கு

காதல்

1

படை வீரர்களை ஏற்றிக்கொண்டு ஒரு ரயில் வண்டி கிழக்கு நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. அதன் வேகம் மிதமாக இருந்தது. போர் முனைக்கு அல்லாது உள் நாட்டை நோக்கிப் போகும் வண்டி வேகமாகப் போகவேண்டிய அவசியமென்ன? வீரர்கள் நாள் பூராவும் உட்கார்ந்து கொண்டோ அல்லது நின்று கொண்டோ வந்தனர். முடி வற்ற பழுப்பு நிறமான வயல்களின் எல்லையற்ற அமைதியை அனுபவிக்க அவர்கள் திறந்த கதவுகளின் அருகே கும்பலாகக் கூடி நின்றனர். பறவைக்கூட்டங்கள் தெற்கு நோக்கிப் பறந்தன. வழியெங்கும் தங்க நிறமான பிர்ச் மரங்களும், பசுமையான 'பர்' மரங்களும் மாறி மாறி வந்தன. இடை யிடையே ஒரு கிணற்றுக்குப் பக்கத்தில் சிவப்பு நிறமான, ஈரமான சாம்பல் குன்றுகள் காணப்பட்டன. ஆனால் வீரர்களிடத்தில் அமைதியையும், சமாதானத்தையும் ஏற் படுத்தியது அவர்கள் கண்ட மரங்களல்ல—அவர்கள் ஏராள மான, பலரகமான மரங்களைப் பார்த்திருக்கிறார்கள்— ஆனால் புகைவண்டி நிலையங்கள், சிக்னல் விளக்குகள், சிக்னல் பெட்டிகள், இணக்கமாகச் செல்லும் ரயில்வே அமைப்பு ஆகியவைதான் அத்தகைய பிரதிபலிப்பை அவர்களிடம் ஏற்படுத்தியது. நீண்டதூரம் அணிவகுத்துச் சென்றும்,

அல்லது லாரிகளில் பிரயாணம் செய்தும் பழக்கப்பட்ட படை வீரர்கள், போராட்டத்தின்போது பல தடவை, அவர்கள் கவனியாமலேயே ரயில் பாதைகளைக் கடந்து சென்றிருந்தபோதிலும்கூட, ரயில் மூலமாகவும் பிரயாணம் செய்ய முடியும் என்பதை அவர்கள் அனேகமாக மறந்து விட்டார்கள்.

அமைதியான கிராமங்கள், பழுப்பு நிறமான வயல்கள், ரயில் இஞ்ஜினின் 'கூ ஊ ஊ' ஒலி, தடக் தடக் என்ற சக்கரங் களின் ஓசை ஆகியவை அவர்களிடத்தில் அமைதி உணர்ச் சியை ஏற்படுத்தியது. இந்த அமைதியான சூழலில் அவர் கள் தூங்க ஆரம்பித்தனர். நிம்மதியாக நன்ருக உறங்கினர். பூனைக்குட்டிகளைப் பற்றியும், பெட்டைக் கோழிகளைப்பற்றி யும் குழந்தைகளைப் பற்றியும் அவர்கள் கனவு கண்டனர். அவைகளெல்லாம் ஏதோ காரணத்திற்காக, சதுப்பான அந்த மலைச்சரிவுப் பகுதியில் அங்குமிங்கும் ஓடிக்கொண்டி ருப்பதாகவும் கனவு கண்டனர்.

இரும்பு அடுப்புகளில் நெருப்பைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கவேண்டியவர்கள் மட்டுமே விழித்துக்கொண்டி ருந்தனர். மற்றவர்கள் ஆழ்ந்த நித்திரையிலிருந்தனர். அவர்கள் தூக்கமில்லாமல் கழித்த பல இரவுகளுக்காகச் சேர்த்துத் தூங்க வேண்டியிருந்தது. குளிர்தான் அவர் களைத்தட்டி எழுப்பியது. ஏனெனில் காலை நேரங்களில் உறைபனி விழ ஆரம்பித்துவிட்டது. அவர்கள் தங்கள் மேடைகளிலிருந்து குதித்து எழுந்து கணப்பு இருக்குமிடத் திற்கு, வெறுங்காலுடனேயே ஓடினுர்கள். காட்டமான சிக ரெட்டுகளைப் பற்றவைத்துக்கொண்டு மகிழ்ந்தனர். பின்னர் தங்கள் பூட்சுகளைப் போட்டுக்கொண்டே கொட்டாவி விடவும், கை கால்களை நீட்டிப்படுக்கவும் ஆரம்பித்தனர். முதல் ரயில் நிலையம் வந்ததோ இல்லையோ, அவர்கள் தங்கள் சாப்பாட்டு டின்களுடன் இறங்கி சமையல் அறை இருக்கும் பெட்டிக்கு ஓடினர். அதிக பசியில்லாமலிருந்த போதிலும்கூட காலை ஆகாரத்தை சாப்பிட்டு முடித்தனர். அவர்கள் பகல் பூராவும் ஒன்ருே தூங்கினர்; அல்லது தங்களைக் கடந்து செல்லும் சமவெளிகளையே பார்த்துக்

கொண்டும், சுத்தமான, குளிர்ந்த, பனிக்காலக் காற்றை ஆழமாக சுவாசித்துக்கொண்டும் வந்தனர்.

அவர்கள் எங்கு கொண்டுபோகப்படுகிறுர்கள் என்பது யாருக்கும் தெரியாது. அதைப்பற்றி ஒருவரும் கவலைப்படவும் இல்லை. டிவிஷனல் கமாண்டருக்கே அவர்கள் போய்ச் சேரவேண்டிய இடம் பற்றித் தெரிவிக்கப்படவில்லை. பெரிய ரயில் நிலையங்களிலிருந்த ராணுவ தளபதிகளுக்கு அவர்கள் எதைத் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியமிருந்ததோ, அதற்குமேல் அவர்களுக்குத் தெரியாது. குறிப்பிட்ட இலக்கமிட்ட ராணுவ ரயில், அடுத்து குறிப்பிட்ட பெரிய ரயில் நிலையத்திற்கு அனுப்பப்படவேண்டும், என்பதுதான் அவர்களுக்குத் தெரியும்.

சமீபத்திய போரில் மிகவும் களைத்துப்போன முதல் பட்டாலியனுக்கு ரயிலில் எல்லா வேலைகளினின்றும் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. அவர்கள் நாளொன்றுக்கு 15 மணி நேரம் தூங்கினர். கேப்டன் அகிமோவ் தன்னுடைய இருக்கையிலேயே நாள் பூராவும் படுத்துக்கிடந்தார். எழுந்திருப்பது கூடக்கிடையாது. பேசாமடந்தையாக இருந்த மேபொரோடா அவருக்கு சாப்பாடு கொண்டுவந்து கொடுப்பார். பிறகு தட்டுகளை எடுத்துக்கொண்டு செல்வார். படைத் தளபதியுடன் உரையாடத் துணியமாட்டார். படைத்தளபதி மிகவும் அரிதாகவே மோசமான மனே நிலையில் இருந்ததால், அந்நிலையில் பேச்சுக் கொடுக்காமல் இருப்பதே நல்லது, என்று அவர் நினைத்தார்.

அகிமோவ் படுத்திருந்த மேடை ரயில் ஜன்னலுக்கருகில் இருந்தது. மணிக்கணக்காக ஜன்னல் வழியே பார்த்துக் கொண்டேயிருந்தார். ஆனல் தான் விழித்துக்கொண்டிருப்பதை பிறர் அறியக்கூடிய முறையில் ஒரு சிறு ஓசையைக் கூட உண்டாக்கவில்லை. அந்தப் பெட்டியிலுள்ள இதர யாரும் பேசுவதற்கு துணியவில்லை. அவருடன் அதே பெட்டியில் பிரயாணம் செய்து கொண்டுவந்த பட்டாலியன் உயர் அதிகாரிகளுக்கும், தலைமை நிலையப் பணியாளர்களுக்கும் மௌனமாக இருப்பது மிகவும் கஷ்டமாகத் தோன்றியதால் அவர்கள், அண்டையிலுள்ளவர்களிடம் சென்று விட்டனர்.

தற்பொழுது மேபொரோடா மட்டும் தனியாக இருக்க வேண்டியதேற்பட்டது. தனியாகவும், மௌனமாகவும் இருப்பது அவருக்குப் பழக்கமாகிப் போய்விட்டது. எனவே அதுபற்றி அவர் எவ்விதப் புகாரும் செய்யவில்லே. கணப்பைத் தூண்டிவிட்டுக் கொண்டே, தன் தனிமையை அனுபவித்தார். அவ்வப்பொழுது தலே நிமிர்ந்து நோக்கினுர். தளபதி ஏதாவது பேசினுரா, அல்லது அசைந்தாரா என்பதை கவனித்தார்.

கடைசியில் மூன்ருவது நாளன்று அகிமோவ், தான் படுத்திருந்த மேடையிலிருந்து கீழே இறங்கி, முகங்கழுவிக் கொள்வதற்குத் தண்ணீர் கேட்டார். பின்னர் "கோர்ஸின்கின் உயிருடனிக்கிருரா?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"பெய்ஸுல்லின் என்ன ஆனுர்?"

"அவர் காயமடைந்துள்ளார்."

"நாம் யாருடன் பிரயாணம் செய்து வருகிருேம்?"

"முதலாவது, இரண்டாவது பட்டாலியன்களும், ரெஜிமெண்டின் தலேமைக் காரியாலயப் பணியாளர்களும்" என்று மேபொரோடா கொஞ்சம் உணர்ச்சியுடன் கூறினுர். பின்னர் செய்திகளேயெல்லாம் அவர் கூறினுர். "ரெஜிமெண்டைச் சேர்ந்தவர்கள் இரண்டு ட்ரெயின்களில் பிரயாணம் செய்து வருகின்றனர். நாம் இரண்டாவது ட்ரெயினில் பிரயாணம் செய்கிருேம். ரெஜிமெண்டின் தளபதி மூன்ருவது பட்டாலியனுடனும், பீரங்கிப் படையினருடனும் முதல் ட்ரெயினில் உள்ளார். இரண்டாவது படையும்கூட. நாம் போர் முனேக்குச் செல்லும்போது அவர்கள் பின்னணியில் வருகின்றனர். ஆனுல் நாம் போர் முனேயை விட்டுத் திரும்பும்போது அவர்கள் நமக்கு முன்னணிப் படையாகச் செல்கின்றனர். டிவிஷன் முழுவதும் பத்து டிரெயின்களில் பிரிந்து பிரயாணம் செய்கிறது. நாளொன்றுக்கு ஒரு டிரெயின் வீதம் புறப்படுகிறது. ரயில் நிலேயமொன்றில் உங்களுக்காக நான் கொஞ்சம் பீர் வாங்கியுள்ளேன். காம்ரேட் கேப்டன், அதைக் கொஞ்சம் குடியுங்கள். அப்பொழுது தான் உங்கள் உடம்புக்குத் தெம்பு ஏற்படும். பணம்

கொடுத்து நான் அதை வாங்கினேன்...... நாம் பணம் கொடுத்து ஏதாவது வாங்கி நீண்ட காலமாகிறது.''

அகிமோவ் மௌனமாக பீரைக் குடித்தார். யுத்தம் ஆரம்பித்ததிலிருந்து இப்பொழுதுதான் முதல் தடவையாக பீர் குடிக்கிறுர் போலிருக்கிறது !

''ஆனுல் பணமில்லாமலேயே உயிர் வாழ்வது மிகவும் நன்ருயிருக்கிறது,''மேபொரோடா மேலும் கூறினுர்.''போர் முனையில் தருவதுபோல்—நமக்கு வேண்டிய துணிகள், உணவு, இதர சாமான்கள் எல்லாம் கிடைக்கின்றன. ஆனுல் யுத்தத்தினுல்தான் இவைகளெல்லாம் நமக்குக் கொடுக்கப் படுகிறது. யுத்தம் மட்டும் இல்லாவிட்டால்.........''

''ஆகவே இந்த சாதனங்களெல்லாம் காசில்லாமல் கொடுக்கப்படுவதுபற்றி உனக்குக் கவலையில்லை. ஆனுல் யுத்தத்தை மட்டும் நீ விரும்பவில்லை, இல்லையா?'' அகிமோவ் ஏளனமாகச் சிரித்தார். ''ஆனுல் வேலை செய்யவேண்டுமே ?''

''வேலையா ? ஏன், வேலை செய்யாமல் உயிர் வாழ முடியாதா?'' என்று மேபொரோடா கொஞ்சம் கோபமாகக் கூறினுர்.

''அது சரிதான், அது அனேகமாகக் கம்யூனிஸம் வந்தாற் போலத்தான்,'' என்று அகிமோவ் கூறினுர். ''யுத்தம் கூடாது. சமாதான பூர்வமான வேலை. போர் முனையில் கிடைப்பதைப்போலவே எல்லாப் பொருள்களும் கிடைக்க வேண்டும். ஆமாம், நீங்கள் நம்பிக்கை பூர்வமான ஒரு கம்யூனிஸ்ட் போலிருக்கிறது. சார்ஜெண்ட் மேபொரோடா.''

''அதற்கு அர்த்தம் அதுதான்'' என்று மேபொரோடா அர்த்தமில்லாமல் முணுமுணுத்தார். பின்னர் சிறிது நேர மௌனத்திற்குப்பின் அவர் ஸ்தலச் செய்திகளைப் பற்றிக் கூற ஆரம்பித்தார். ''உங்களைப் பார்க்க சிலர் வந்தார்கள். ரெஜிமெண்ட் எஞ்ஜினியரும், ஏதோ பறவையின் பெயரைப் போன்ற பெயரைக் கொண்ட ஒருவரும், த்ரஷ்ஷோ அல்லது அதுபோன்ற ஏதோ, ஆம் நினைவுக்கு வருகிறது ட்ரோஸ்ட் என்பவரும் வந்தார்கள். அவர்களுடன் மொழிபெயர்ப் பாளரும் வந்தார். நீங்கள் எவ்வாறிருக்கிறீர்கள் என்று

கேட்டார்கள். மற்ருெரு கிராமபோன் ரிகார்டை வைக்கும் படியும் கேட்டார்கள். ஆனல் நாம் வண்டி யேறும்போது அவர்களையெல்லாம் நான் தட்டிக் கழித்துவிட்டேன். நாம் எங்கு போகிருேமென்பது யாருக்கும் தெரியாது. மாஸ்கோ வுக்குப் போவதாக சிலர் கூறுகின்றுர்கள். எப்படியும் புனரமைக்கப்படுவதற்குத்தான்.

“அவர்களும் நம்முடன் இதே ட்ரெயினில் இருக்கிருர் களா?”

“யார்?”

“அதுதான், ட்ரோஸ்டும் மற்றவர்களும்.”

“ஆமாம், ஆமாம்.”

அடுத்த ரயில் நிலையத்தில் அகிமோவ் கொஞ்சம் உலாவு வதற்காகக் கீழே இறங்கினர். வண்டியைத் தொட்டாற் போல் நடந்தார். கொஞ்சம் சிதைவு ஏற்பட்டிருந்த அந்த ஸ்டேஷனின் பிளாட்பாரத்தில் நிறைய படை வீரர்கள் மேலும் கீழுமாக நடந்துகொண்டிருந்தனர். உயர் அதிகாரி களின் ஒரு கூட்டம் ஒரு கடைக்குப் பக்கத்தில் நின்றுகொண் டிருந்தது. அக் கூட்டத்தில் அனிஷ்கா இருப்பதை அகிமோவ் உடனே அடையாளம் கண்டுகொண்டார். அப்பொழுது யாரோ ஒருவர், “கேப்டன் அகிமோவ்! கடைசி கடைசியாக நன்ருகத் தூங்கினீர்களா?” என்று உரக்கக் கேட்டார்.

“ஆம்” என்று அவர் சுருக்கமாகப் பதிலளித்தார்.

அனிஷ்கா அவர் பக்கம் திரும்பி, “அகிமோவ், இங்கே வாருங்கள்” என்ருள். அவ்வாறு கூறிக்கொண்டே அவரை நோக்கிச் சென்று, மன மகிழ்வுடன் அவரோடு கை குலுக் கினுள். அவருக்கு எக்கச்சக்கமாகிவிட்டது. ஆயினும் தெவிட்டாத ஆவலுடன் அவளை ஏற இறங்கப் பார்த்தார். அவள் உண்மையில் எப்படி இருக்கிருள்? முதல் நாளன்று அவனுக்குத் தோன்றியதுபோலவே அவள் இருக்கிருளா?

ஆம், அவள் அப்படியேதானிருக்கிருள் என்று தோன்றி யது. கொஞ்சம் மங்கலான பகல் வெளிச்சத்தில்தான் அவள் பூமிக்கு அருகில் இருப்பதைப்போல் தோன்றியது. அவ்வளவு அகங்காரமுடையவளாகவும், மமதை உள்ளவளாகவும் இல்லை. அவருக்கு அவள் முகமன் கூறிய விதத்திலும், அவரை

நோக்கி அவள் நடந்துவந்த விதத்திலும் நல்லெண்ணம் இருப்பதை அவர் உணர்ந்தார். அதைத்தவிர வேறென்று மில்லை. அல்லது வேறு ஏதாவது இருக்குமோ? எதுவாக யிருந்தாலும், அவள் நடந்துகொண்ட விதத்தில், கொஞ்சம் மேம்பட்ட தன்மையும், அதைப்பற்றி அவள் உணர்ந்திருப் பதும்கூடத் தெரிந்தது. அவள் வாலிபமாக இருந்தபோதி லும், கருஞ் சிவப்பான முடிக்கற்றை அவளுடைய கம்பளித் தொப்பிக்கு அடியிலிருந்து, வெண்மையான, மிகவும் மிருது வான நன்கு வளைந்துள்ள புருவத்தின்மீது விழுந்துகொண் டிருந்தபோதிலும், இவைகளெல்லாவற்றையும் பொருட் படுத்தாத முறையில், அவள் அங்கிருந்தவர்களனைவருக்கும் சீனியர் என்ற முறையில் நடந்துகொண்டிருந்தாள். அகிமோ விடம், எதிர்பாராத முறையில் அவள் மிகவும் நட்புறவாக நடந்துகொண்டபோதிலும், அதுவும் திட்டமிட்டுக்கொண்டு அதுபோல் நடக்கவேண்டுமென்று செய்ததாகவே இருந்தது.

"உங்களுடைய தாடியை இன்னும் க்ஷவரம் செய்து கொள்ளவில்லையா?" என்று இன்ஜினியர் பிர்சோவ் ஆச்சரி யத்துடன் கேட்டார். "உங்களுடைய தோற்றத்தை சரி செய்துகொள்வதைப்பற்றி நீங்கள் கொஞ்சம் சிந்திப்பது அவசியம்."

"ஆம், அவசியம்தான்". என்று அகிமோவ் ஏதோ மறந்த நினைவில் கூறினார். "நான் அதைப்பற்றியே பூர்ணமாக மறந்துவிட்டேன்.

"ஆம், நீங்கள் முக க்ஷவரம் செய்துகொள்ளவேண்டியது மிகவும் அவசியம்;" என்று அனிஷ்கா வற்புறுத்தினாள். இங்கு ஸ்டேஷனில் சிகை அலங்கரிப்பவர் ஒருவர் இருக்கிறார். உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்."

அவளுடைய விருப்பத்தை உடனே நிறைவேற்றுவதற்கு அவர் தயாராக இருந்தார். ஆனால் ஏதோ பிடிவாதமான, கெட்ட உள்ளுணர்வு, அவளுக்கு அவமதிப்பானதும், அனேக மாக விரோத பாவமானதுமான பதிலைக் கொடுக்கும்படி அவரைத் தூண்டியது." என்னுடைய தாடி உனக்குத் தடையாக ஒன்றும் இல்லை, அல்லவா?" என்றார்.

இந்த பதில் அவளுக்கு வியப்பை ஏற்படுத்தியதுடன். அவளுக்குக் கோப மூட்டவும் செய்தது. ஆயினும் அவள் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு, ''மரியாதையற்ற முறையில் நடந்துகொள்வது, ஒரு தாடியை விடவும் எந்த விதத்திலும் உங்களுக்கு ஏற்றதாக இல்லை'', என்று சுருக் கென்று தைப்பதைப்போல் கூறினாள். பின்னர் அவள் அவருடைய முகத்தை நேருக்கு நேர் உற்றுப்பார்த்து, ''தரக்குறைவாக நடந்துகொள்வதற்கு அவசியமொன்று மில்லை'', என்றாள்.

அகிமோவ் பதிலளிக்கவில்லை. மனச் சோர்வடைந்து ட்ரெயினுக்குத் திரும்பிச் சென்றார். தான் ஏன் அவளிடம் அவ்வளவு முரட்டுத்தனமாக நடந்துகொண்டோம் என்று அவரால் ஊகித்துப்பார்க்க முடியவில்லை. ஆனால் உடனே, அவள் தன்பால் அவ்வளவு அதிகமான உணர்ச்சியை காட்டிய தால்தான் என்று அவர் உணர்ந்தார். ஆம் அதனால்தான். அவள் மற்றவர்கள்பால் நடந்துகொள்வதைப்போலவே தன்னிடமும் நடந்துகொள்ள விரும்பவில்லை. ஒரு சமயம் வேறொரு விஷயமும் இருந்திருக்கலாம். அவளுடைய குரலில் மோகமூட்டுவதின் சாயல் இருந்ததைத்தான் கண்டதாக அவர் நினைத்தார். தான் யாரென்று தெரியாமல் தன்னிடமே அவள் மோகமூட்டக்கூடிய முறையில் நடந்துகொண்டாள் என்றால், எவரிடமும் அவள் அவ்வாறு நடந்துகொள்ளலாம், இது அவரிடம் ஒரு மோசமான பொறாமையை ஏற்படுத் தியது

''நான் அதை ஒத்துக் கொள்ள வேண்டும்'', அவர் நினைத்தார். ''நான் அந்தப் பெண்ணிடம் காதல் கொண் டுள்ளேன். நான் அவ்வளவு காதல் கொண்டிருப்பதால், அவள் என்னிடத்திலேயே மோகம் மூட்டக்கூடிய விதத்தில் நடந்து கொள்வதை கூட நான் சகிக்க முடியாது.''

தன்னுடைய எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதற்குத் தனக்கு இருந்த ஒரே ஒரு நபர் ரெமிஸோவ். அவரும் இறந்து விட்டார். அவர் என்ன சொல்லி யிருப்பார்? அகி மோவ் தன்னுடைய மேடையில் படுத்துக் கொண்டே அதைத்தான் ஊகிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார்.

“என் அருமை நண்பனே, சில விஷயங்கள் சம்பந்தமாக நீங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அதனாலேயே அவைகள் மோசமாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. மேலும், நீங்கள் அவளிடத்தில் ஒரு பிரதிபலிப்பை ஏற்படுத்தி யிருக்கிறீர்கள் என்பதை ஒத்துக் கொண்டால் என்ன? அவள் ஒரு பண்புள்ள பெண், அதுவும் அழகாகவும் இருக்கிறாள். உங்களுடைய நாணத்தை மிகைப் படுத்திக் காட்டிக் கொள்ள வேண்டாம். அவளுடைய காதலுக்கு உரியவனல்ல என்று நினைக்கு மளவுக்கு நீங்கள் அவ்வளவு நாணமுடையவர்களல்ல. அதற்கு மாறாக, உங்களிடத்திலுள்ள தவறென்னவெனில், நீங்கள் மிகவும் மண்டைக்கனம் பிடித்தவராக யிருக்கிறீர்கள். அங்கிருந்துதான் உங்களுடைய சந்தேகங்களெல்லாம் கிளம்புகின்றன. அவள் உங்களுக்காகக் கவலைப் படுகிறாள் என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள். அப்படி நீங்கள் நிச்சயமாக இருக்கிறீர்கள் என்றால், உடனே அவளிடத்தில் நீங்கள் ஓடிப்போய், உங்களுடைய ஆதிக்கத்தின் கீழ் அவளைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்யுங்கள். நீங்கள் அனேகமாக அவள் விஷயத்தில் எஜமானனைப் போல் நடந்து அவளுக்குக் கட்டளைகள் இடுங்கள்; அவள், மேலும் அதிகமாக உங்களை நேசிக்கும்படி செய்வதற்காக நீங்கள் அவளுக்காக கவலைப் படாதவன் போல் பாசாங்கு செய்வீர்கள். ஒரு மனிதன் தான் காதலிப்பவளைத் தனக்குக் கீழ்ப் படிபவளாக்குவதற்கு முயற்சி செய்யும்போது, அவன் அவளுக்காகத் துடித்துக் கொண்டிருந்த போதிலும், அவளைத் தனக்கு அடிமையாக்குவதற்குச் செய்யும் தந்திரத்தை நான் அறிவேன்,” என்று ரெமிஸோவ் என்னிடம் சொல்லி யிருப்பான். ரெமிஸோவின் குரல் மணியோசை போல் ஒலித்திருக்கும். இறுதியில்: “அது உன்னுடைய மனதில் உள்ள முதலாளித்துவ மனப் போக்கின் மீத மிச்சமாகும். அதைக் களைந்தெறிந்தாக வேண்டும்”, என்று வறட்டுத் தனமாக முடித்திருப்பான்.

அகிமோவ் துயர் நிறைந்த ஒரு சிரிப்புச் சிரித்தார். கேப்டன் ரெமிஸோவ் உயிருடன் இருந்திருந்தால் நிச்சயமாக அதைத்தான் சொல்லி யிருந்திருப்பார்.

சாயங்கால வேளையில் ரோஸ்லாவல் என்ற இடத்தில் டிரெயின் நின்றது. இரண்டாவது பட்டாலியனின் தளபதி கேப்டன் லாப்ஸின் அகிமோவைப் பார்க்க வந்தார். அவர் அகிமோவ் படுத்திருந்த மேடையின் மீதேறி,'' என்னுடன் வாருங்கள். இந்த ரயில் நிலையத்திற்கு அடுத்து வசித்து வரும் ஒரு பெண்ணை நான் அறிவேன். நான் ஒரு ஆண்டு கால மாக அவளுக்குக் கடிதங்கள் எழுதி வருகிறேன். நாம் சற்று போய் விட்டு வரலாம், இங்கு டிரெயின் மூன்று மணி நேரம் தாமதிக்கும். நான் கேட்டேன் ....'' என்று அகிமோவின் காதில் மெதுவாகக் கூறினர்.

''நான் எதற்காக உங்களுடன் வர வேண்டுமென்கிறீர் கள்''? என்று அகிமோவ் கேட்பதற்கு முனைந்தார். ஆனல் திடீரென்று, ''ரொம்ப சரி'', என்று கூறி, எழுந்து உடைகளை அணிந்து கொண்டார்.

ரயில்வே ஷெட்டுகள் வரிசையாக உள்ள, அருகிலுள்ள ஒரு தெரு வழியாக அவர்கள் நடந்து சென்றனர். பின்னர் திரும்பி வேருெரு தெரு வழியாக நடந்தனர். கடைசியில் ஒரு பூந்தோட்டத்தின் அருகில் நின்றனர். அத்தோட்டத் திற்குள் ஒரே ஒரு சிவப்பு சாம்பல் குன்று இருந்தது. லாப் ஸின் முதலில் ஒரு சிறிய நேர்த்தியான வீட்டிற்குள் நுழைந் தார். அவருக்குக் கொஞ்சம் பதட்டமாகத்தான் இருந்தது. ஏனெனில் இதற்கு முன்பு அவர் அந்தப் பெண்ணைப் பார்த்த தில்லை. ''யூனிட்டில் சரியாகக் குறி பார்த்துச் சுடுவதில் வல்லவன்,'' என்ற முறையில் அவருக்கு அவளிடமிருந்து முதல் கடிதம் வந்ததிலிருந்து அவர் அவர்களுடன் தொடர்ந்து கடிதப் போக்கு வரத்து நடத்தி வந்தார். இதர ஆயிரக் கணக்கான கடிதங்களைப் போலவே, கடிதம் பெறுவதைவிட கடிதம் எழுதுபவருக்கு சாந்தியும் ஊக்கமும் அளிப்பதற்காகவே அது எழுதப்பட்டது.

மிகவும் அவசியமான தேவைப் பொருள்களை மட்டும் கொண்டிருந்த அந்த சிறிய அறையில் ஒரு மெழுகு திரி ஒளி வீசிக் கொண்டிருந்தது. இந்த இரண்டு உயர் அதிகாரிகளை யும் உள்ளே வரும்படி உயரமான, ஆனல் மெலிந்த, சுமார் 30 வயதுடைய பெண்மணி ஒருத்தி வரவேற்ருள். அவள்

மிகவும் களைப்புடன் கூடிய தோற்றத்துடன் காணப்பட்டாள். அவளுடைய அழகான வனப்பு மிக்க தலைமுடி பின்னல் போடப்பட்டு, தலையின் உச்சியில் வட்ட வடிவமாக மலர் வடம் போல் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. இது அவளை இளமையாக்கியதுடன், அவளுடைய மங்கைப் பருவத்தையும் நினைவுக்குக் கொண்டு வந்தது.

இரண்டு ராணுவக் கேப்டன்கள் வருவதைப் பார்த்த அந்த மாது பெரிதும் உணர்ச்சி வயப்பட்டாள். அவர்களில் ஒருவர் அவளுடைய நண்பர் என்று கருதப்படக் கூடியவர். முகமன் கூறக்கூடிய வார்த்தைகளை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டபின், லாப்சின் தன்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவனானன். அவரது உணர்ச்சிகள் விரைவில் மேலே எழுந்தன. அவர் ஒரு புட்டி வோட்காவையும், கடித்துத் தின்பதற்கு ஏதோ ஒன்றையும் வெளியில் எடுத்தார். இது அகிமோவுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது.

"உன்னுடைய நண்பர்களில் ஒருவரைக் கூப்பிடேன், நடாஷா. நாம் இங்கு உட்கார்ந்து கொஞ்சம் ஓய்வாகப் பேசுவோமே," என்று லாப்ஸின் கூறினர்.

நடாஷா ஒரு கருப்பு நிறமான போர்வையை மேலே எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியில் சென்றுள். லாப்ஸின் ஆவலுடன் அகிமோவை நோக்கி, "சரி, நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? அவள் எல்லாம் சரியாக இருக்கிருள், இல்லையா?

அகிமோவின் முன்னிலையில் அவர் எப்பொழுதும் சங்கோஜமுடையவராகவே இருந்தார். இப்பொழுது, நடாஷா தோற்றத்தால் அவர் எவ்விதத்திலும் கவர்ச்சிக்கப் படாதவராக இருந்தபோதிலும்—புகைப் படத்தில் அவள் மிகவும் இளமையாகத் தோற்றமளித்தாள்—அகிமோவ் அவளை விரும்ப வேண்டுமென்று அவர் விரும்பினர். அகிமோவ் அங்கு வந்து அலட்சியமாக, தன்னுடைய பெரிய தலையைத் தன்னுடைய ஒரு கையில் தாங்கிக் கொண்டு, உட்கார்ந்து கொண்டிருந்தார். இது லாப்சினை பதட்டத்திற்குள்ளாக்கியது.

பத்து நிமிஷங்கள் கழித்து நடாஷா ஒரு சிநேகிதியுடன் திரும்பினாள். அவளுடைய பெயர் ஆன்யா என்று கேட்டதும், அகிமோவ் பதட்டம் அடைந்தார். அவள் உயரமாக இருந்தாள். பெரிய பழுப்பு நிறமான கண்களுடன் கூடிய அவளுடைய முகம் ரத்தம் சுண்டிப்போய் வெளுத்துக் காணப்பட்டது.

அவர்கள் மேஜையைச் சுற்றிலும் உட்கார்ந்து மது அருந்தினார்கள். அடக்கமும், நாணமும் மறைந் தொளிந்தன. லாப்ஸின் வேடிக்கையாகப் பேசினார்; தொடர்ந்து அகிமோவைப் புகழ்ந்தும், தன்னைத் தானே தாழ்த்திக் கொண்டும் பேசினார். அகிமோவ் அதிகம் பேச வில்லை. ஆனால் விரைவில், லாப்ஸினை விடவும் தன்னையே நடாஷா விரும்பினாள் என்பதை உணர மிகவும் சங்கடத்திற்குள்ளானார். அவரிடம் (அகிமோவிடம்) மட்டுமே அவள் பேசினாள். ஆயினும் அவளைப் போலவே பெரும் பாலும் மௌனமாகவே இருந்தாள். அவள் அகிமோவையே விரும்புகிறாள் என்பதை விரைவில் லாப்ஸினும் உணர்ந்தான். ஆனால் அதனால் அவன் கோபம் ஏதும் அடையவில்லை. அவனுடைய கவனத்தை ஆன்யா ஈர்த்தாள். சிறிது நேரத்தில் இருவரும் ஒன்றாக வெளியே கிளம்பி விட்டனர்.

நடாஷாவுடன் தனியாக விடப்பட்ட அகிமோவ் மிகவும் சங்கடத்திற்குள்ளானான். இது அவன் தன்னைத் தானே நொந்து கொள்ளும்படி செய்தது. பொதுவாக கப்பல் மாலுமிகளுக்கு உள்ள துணிச்சல் எதுவும் அவனுக்கு இல்லாதது போல் தோன்றியது. "நான் போக வேண்டியதுதான்", என்று அகிமோவ் நினைத்தான். ஆயினும் அதற்கும் தன் மனதைத் திடப்படுத்திக்கொள்ள முடியவில்லை. அவள் மெழுகு திரியை அணைத்துவிட்டு," தற்பொழுது நம்முடைய இடத்தில் இருட்டாயிருக்கிறதல்லவா; ஜெர்மானியர்கள் மின் விசை நிலையத்தைத் தகர்த்து விட்டனர்," என்றாள்.

பின்னர் அவள் மீண்டும் அவன் அருகில் உட்கார்ந்தாள். அவர்கள் இருவரும் சங்கடப்பட்டு, மனசஞ்சலமடைந்தனர். அவன் ஒருவிதமான பதட்டமான ஆனந்தத்துடன் அனிஷ்காவைப்பற்றி நினைத்தான். "எல்லாம் முடிந்துவிட்டது.

தீர்ந்துவிட்டது. ஆம்! அது அப்படித்தான். ரொம்ப ஜோர். நான் உன்னை மறந்துவிட்டேன். என்னை இனி ஒருபோதும் வருத்திக்கொள்ள மாட்டேன். அதுதான் அதனுடைய முடிவு''. இவ்வாறு நினைத்துக்கொண்ட அகிமோவ், நடாஷாவின் கையைத் தன் கையில் எடுத்து வைத்துக்கொண்டான். அது மிகவும் சூடாக இருந்தது. அவள் உடம்பு முழுவதுமே நெருப்பைப்போல் இருந்தது.

பின்னர் அவள் ஏதோ சொல்லி, பெருமூச்சுவிட்டாள்...

அவன், அவளுக்குப் பக்கத்தில் கிடந்தான். அவன் மனம் அனேகமாக சூன்யமாக இருந்தது. ''தற்பொழுது எல்லாம் சரியாய்ப் போய்விடும், என்று அவன் தன் சுய உணர்வு அற்ற நிலையில் அவளுடைய தலைமுடியின் மடிப்பு களைக் கூர்ந்து கவனித்தவாறே கூறினான். அவளுடைய தலைமுடி அவிழ்ந்திருந்தது. அவள் மிகவும் தாழ்ந்த குரலில், ''ரொம்ப வந்தனம்; நீங்கள் இன்பமாக இருக்கிறீர்கள்'', என்றாள்.

அவனுடைய தன்நிலை மறந்த கருணை மிகுந்த அன்புக் குத்தான் அவள் நன்றி தெரிவித்தாள். அதற்கு முன்னால் நடந்து போனதற்காக அல்ல.

''நான் உங்களை மிகவும் விரும்புகிறேன்'' என்றாள்.

திடீரென்று சந்தித்துத் தான் அவளைப் பரிச்சயம் செய்து கொண்டபோதிலும் கூட அகிமோவ் அவள் கூறியதை நம்பினான். ஏதோ தற்செயலாக நடந்ததாக அவன் கருதியதை தன்னுடைய தலைவிதி என்று அவள் கருதினாள். அவளை இதற்கு முன்பு அவன் பார்த்திராவிட்டாலும் கூட அவளுடைய முகம் அவனுக்கு பழக்கப்பட்டதாகவும், அழகு நிறைந்ததாகவும் காணப்பட்டது. தன்னுடைய உணர்ச்சி ஆவேசத்தைத் தணித்துக் கொள்வதற்காக அவளை ஏதோ ஆத்மா இல்லாத ஜடப்பொருளாக நடத்தியது பற்றி அவன் தன்னையே நொந்து கொள்ளவும் செய்தான். தான் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி, மகிழ்ச்சிகரமாக இருக்க லாம் என்று திடீரென்று ஓர் எண்ணம் அவனுக்கு உதித்தது. ஒரு ஏகாந்தமான வாழ்க்கையின் கதையை அவளுடைய அரவணைப்பில் உணரவும், அவளுடைய அகல விரிந்த கண்

களில் படித்தறியவும் அவனுக்கு முடிந்தது. அதே யுத்தம் தான், ஆனல் அதனுடைய வேறெரு அம்சம்.

சற்றே அருகிலிருந்து கேட்ட ரயில் இன்ஜினின் ஓசை, அவன் எங்கிருக்கிருன் என்பதை அவனுக்கு நினைவூட்டியது. உடனே அவசரமாக எழுந்தான். அவளும் தன் போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டு அவனுடன் வெளியே கிளம்பினுள்.

நிலையத்தில் ரயில் நின்றுகொண்டிருந்தது. இருளும், அமைதியும் சூழ்ந்திருந்தது. ரயிலின் முன்னே இஞ்ஜின் நெருப்புப் பொறிகளை பறக்க விட்டுக்கொண்டு புறப்படத் தயாராக இருந்தது.

ரயில் நிலயக் கட்டிடத்தின் கருமையான நிழலில் அவர்கள் இருவரும் சிறிது நேரம் நின்ருர்கள். அவனே இனி ஒரு நிமிஷம்கூடத் தடுத்து நிறுத்தி வைத்துக்கொள்வதற்கு அவளுக்கு உரிமையோ, அல்லது சக்தியோ கிடையாது. இருட்டில் அவள் தன்னுடைய தலையை அவனது நெஞ்சின் மேல் புதைத்துக்கொண்டாள். சிறிதும் கபடமற்ற மன வருத்தத்துடன் அவள் அவனுக்கு நிரந்தரமான வழி யனுப்புக் கூறினுள். அகிமோவ் குனிந்து அவளுடைய தலையைப் பார்த்தார். தன்னிடத்தில் எத்தகைய கெட்ட எண்ணம் இருப்பதாகவும் அவன் உணரவில்லை. பரிதாப உணர்ச்சியும், குழப்பமுமே இருந்தது.

2

ரயிலில் தன்னுடைய பெட்டிக்கு அருகில் தனியாக ஒரு உருவம் நின்றுகொண்டிருப்பதை அகிமோவ் பார்த்தான்.

''நீங்களா, காம்ரேட் கேப்டன்,'' என்று மேபொரோடா கேட்பது, அவருக்குக் கேட்டது.

''ஆமாம். நீ இன்னும் தூங்கவில்லையா? போய்ப் படுத்துக்கொள்.''

''உங்களுக்காக நான் காத்துக்கொண்டிருந்தேன்.''

''இதோ, நான்தான் வந்துவிட்டேனே!''

மேபொரோடா வண்டிக்குள் ஏறிக்கொண்டார். ஆனல் அகிமோவ் வெளியிலேயே நின்றிருந்தார்.

டிரெயினுக்கு வெளியில் எங்கேயோ இனிமையான குரலில் கைதார் வாத்ய இசையோடு யாரோ பாடிக்கொண் டிருந்தார்கள். அது ட்ரோஸ்டினுடைய குரல்தான் என்று அகிமோவ் நினைத்தார். கிராமபோன் இசைத் தட்டுகளைப் பற்றி அனிஷ்கா மேபொரோடாவிடம் கேட்டதை நினைத்து அகிமோவ் சிரித்தான். "ராப்பாடுங் குருவி (nightingale) இல்லாவிட்டால், ஒரு சாதாரணக் குருவியுடன் திருப்தி யடைய வேண்டியதுதான்", என்று அகிமோவ் நினைத்தான். எப்படியும் ட்ரோஸ்டினுடைய குரல் ஒன்றும் அவ்வளவு மோசமில்லை.

பாட்டைக் கேட்டுக்கொண்டே யிருந்த அகிமோவின் மனதில், அனிஷகாவின் மீது ட்ரோஸ்ட் காதல் கொண் டிருப்பான் என்று திடீரென்று ஒரு எண்ணம் உதித்தது. எப்படியிருந்தபோதிலும், கைதார் வாத்யம் தாழ்ந்த ஓசை யில் சுருதி கெட்டு வாசிக்கப்பட்டு வந்ததானது அகிமோவின் மனதில் வேதனையை ஏற்படுத்தியது; அனிஷ்காவைப் போய்ப் பார்க்கவேண்டும் என்று அவன் நினைத்தான். நடாஷாவையும், அவளுடைய தலைவிதியான தனிமை வாழ்க்கையையும் நினைத்து, அகிமோவ், அனிஷ்காவைப் போய்ப் பார்க்க வேண்டுமென்ற எண்ணத்தை மறப்பதற்கு முயற்சித்தான். ஆயினும் நடாஷாவைச் சந்தித்தது தன் மனக் கிளர்ச்சியை சமாதானப்படுத்துவதற்கோ, அல்லது அனிஷ்காவை மறந்துவிடுவதற்கோ உதவவில்லை, என்பதை இப்பொழுது அவன் உணர்ந்தான்.

ரயில்வேக்காரர்கள் தங்கள் சமிக்ஞை விளக்குகளை ஆட்டி அசைத்து, வண்டி புறப்படலாம் என்பதற்கு அறிவிப்புக் கொடுத்தது இருளில் தெரிந்தது. "நாம் சீக்கிரம் கிளம்பப் போகிறோமா?" என்று யாரோ கேட்டார்கள். "பாதை அடைக்கப்பட்டுள்ளது. நீங்கள் இங்கே இன்னும் அரை மணி நேரம் இருப்பீர்கள்", என்று மற்றொரு குரல் பதிலளித்தது.

அகிமோவ் வண்டியின் ஓரமாகவே நடந்தான். கடைசி யில் கதவு பாதி அளவு திறந்திருந்த பெட்டியின் பக்கம் வந்து நின்றான். அந்தப் பெட்டியில்தான், ராணுவத்

தலைமைக் காரியாலய ஊழியர்கள் பிரயாணம் செய்து வந்தனர். கைதார் வாத்ய இசை நின்றுவிட்டது. பெட்டியின் உள்ளிருந்து மெதுவான குரல்கள் கேட்டன. கதவின் அருகில் சிறிது நேரம் நின்றுவிட்டுப் பிறகு அகிமோவ் உள்ளே நுழைந்தார். பெட்டியிலிருந்தவர்கள் கணப்புக்கு சுற்றிலும் உட்கார்ந்திருந்தார்கள். அது சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தது.

''ஆஹ், காம்ரேட் அகிமோவ், உள்ளே வாருங்கள் எங்கள் கணப்புக்கு அருகில் வந்து உட்காருங்கள்'' என்று பிர்சோவ் கூறினர்.

அகிமோவ் காதைக் கூர்மையாக்கிக்கொண்டு கவனித்தார். இல்லே. பெண் குரல் ஒன்றும் கேட்கவில்லே. ஆயினும், அவள் மௌனமாக அருகிலேயே உட்கார்ந்து கொண்டிருப்பதாக அகிமோவ் உணர்ந்தார். ஆண்கள் நடத்தையிலிருந்தும், மிகவும் அடக்கத்துடன் அவர்கள் பேசியதிலிருந்தும், ஒரு பெண் அங்கே இருக்கிருள் என்பது தெளிவாயிற்று. யாராவது அவளிடம் ஏதாவது பேசுவார்களா, ஏதாவது கேள்வி கேட்பார்களா என்று அகிமோவ் காத்துக் கொண்டிருந்தார். அப்பொழுது அவளுடைய குரலேக் கேட்கலாம் என்று நினேத்தார். ஆனுல் யாரும் அதைச் செய்யவில்லே.

தன்னுடைய இடத்திற்கே அவர் திரும்பிப் போகும் அந்தத் தருவாயில், ட்ரெயின் அசைந்து கொடுத்தது; இன்ஜினும் ஊதிற்று. வண்டி புறப்பட்டது. ட்ரெயின் வேகமாகப்போக ஆரம்பிக்கு முன்னர் அகிமோவ் கீழே குதித்துத் தன்னுடைய பெட்டியில் சுலபமாக ஏறிக்கொண்டிருந்திருக்க முடியும். ஆனுல் அவர் அதை விட்டுப்போக விரும்பவில்லே, வண்டி புறப்பட்டு விட்டது என்ற சாக்கை உபயோகப்படுத்தி அங்கேயே இருந்துவிட்டான்.

அகிமோவ் அங்கிருப்பதின் காரணமாக, அனிஷ்கா அப்பொழுதும் மௌனமாகவே இருந்தாள். தன்னுடைய மேடையின் ஒரு மூலேயில் உட்கார்ந்திருந்தாள். அவன் பால் அவளுடைய உணர்ச்சிகளே இன்னதுதான் என்று நிர்ணயிப்பது அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனுல் தங்களிருவருக்குமட்டுமே தெரிந்துள்ள ஒரு ரகசியம் இருக்கிற

தென்றும், அது யாருக்கும் தெரிந்திராத ஒரு ரகசியம் என்றும் ஒரு உணர்ச்சி எப்பொழுதும் அவளிடம் இருந்தது. ஒருக்கால், அவன் அழுவதை அவள் பார்த்திருக்கக்கூடும்.

அவன் ஓர் உண்மையான வீரன் என்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த மற்றவர்களும் அத்தகைய வீரர்களே. ட்ரோஸ்ட், விரோதியின் அணிகளுக்குப் பின்னே பல தடவை போய் வந்திருக்கிறான். விரோதியின் அணிகளுக்குப் பின்னே செல்வதற்குப் பாதை அமைத்துக்கொண்டு போவதில் அனுபவமும், வீர பாக்கிரமமும் உடையவர் பிர்சோவ். அவர் ஓராயிரம் தடவை தன் உயிரையும் திரணமாக மதித்து சாகஸச் செயல்கள் புரிந்துள்ளார். மற்றவர்களும் அதுபோலவேதான். அவர்கள் பழைய போர்களை நினைவுக்குக் கொண்டு வந்தும், தங்கள் ராணுவம் போகவேண்டிய இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் தங்களுக்கு என்ன ஏற்படப் போகின்றது என்பது பற்றி ஊகித்தும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டனர். ஒரு வார்த்தையில் சொல்லவேண்டு மென்றால், அவர்களுடைய உரையாடல்கள் மிகவும் சாதாரணமானவையாக இருந்தன. ஆனால், அவர்களுடைய உரையாடல்கள் சாதாரணமாக இருந்ததற்குக் காரணம் அறிவுத்திறன் இல்லாததல்ல என்பதை அவள் அறிவாள். ஆனால் அடக்கமாகப் பேசும் பழக்கம், தயக்கம், விஷயங்களை உயர்ந்த தரத்தில் பேசுவதற்குப் பழக்கமின்மை ஆகியவையே அதற்குக் காரணம். இருள் கம்மியிருந்த போதிலும்கூட, அங்கு உட்கார்ந்திருந்த மனிதர்கள் ஒவ்வொருவரையும் அவளால் பார்க்க முடிந்தது. அகிமோவைத் தவிர மற்றவர்கள் அனைவரையும். அவர், தன்னைப் பிறர் கண்டு கொள்ளக்கூடாது என்ற முறையில் ஒதுங்கியிருந்தார். ஆழமான சிந்தனையிலாழ்ந்தவராக, யாரும் கிட்ட நெருங்க முடியாதவராக, மற்றவர்களுடன் முற்றிலும் வேறுபட்டவராக இருந்தார். தனக்கு என்ன கோளாறு ஏற்பட்டு விட்டது என்பதை அவளால் உணர முடியவில்லை. கடைசி கடைசியாக அவளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. அந்த இருளில் அந்த எண்ணம் அவள் முகத்தில்

புன்முறுவலை வரவழைத்தது. ''ஆம், உண்மை என்ன வெனில், நான் அவரை நேசிக்கிறேன்''.

இருந்தபோதிலும், ஏன் அவரை நேசிக்கிருள் என்பதை அவள் கண்டுபிடிக்க முயன்ருள். அவரிடத்தில் உடல் வலிமையும், ஆன்மீக வலிமையும்—மிகவும் அரிதாக ஒன்ருக சேர்ந்திருப்பதுதான் தன்னை வசீகரித்துள்ளது என்ற முடிவுக்கு அவள் வந்தாள். அவர்மீது நம்பிக்கை வைக்க முடியும். அவருடன் சேர்ந்திருப்பதால் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் சம்மந்தமாகக் கவலைப்படவேண்டிய அவசியமே யில்லை. ஆனல் அவளாகவே பலம் வாய்ந்தவளாகவும், பெரிய அளவுக்கு சமாளிக்க முடியும் என்றும் நினைத்துக்கொண்டிருப்பவளல்லவா? ஆம், அவளால் முடியும், தன்னுள் மறைந்து கிடக்கும் சக்திகள் அவருடைய சக்திக்கு சமமானவை என்பது அவளுக்குத் தெரியும். ஆனல் தன்னலமற்ற, சுயலாபம் பாராத உன்னதமான எண்ணம் மழைக்கு சிந்திக்கும் திறன் இருக்குமேயானல், அது பூமியின் மீது விழும்போது எத்தகைய எண்ணம் கொண்டிருக்குமோ அது போன்ற எண்ணம் அவளை அவனை நோக்கி உந்தித் தள்ளியது.

அகிமோவ் அந்தப் பெட்டிக்குள் ஏறுவதற்கு முன்பு வரையிலும் அவர்கள் அவரைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் அவரைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தனர், ட்ரேர்ஸ்டைத் தவிர. எப்படியோ ட்ரோஸ்ட் மட்டும் அகிமோவைப்பற்றி வெறுப்புடனேயே பேசிக்கொண்டு வந்தார். உதாரணமாக, அகிமோவ் தலைக்கனம் பிடித்தவரென்றும், பிறரிடம் முரட்டுத்தனமாக நடந்து கொள்பவரென்றும், கடற்படையில் தன்னுடைய சேவையைப் பற்றி மிகைப் படுத்திக் கூறுபவரென்றும் ட்ரோஸ்ட் கூறினர்.

இந்தப் போக்குக்குக் காரணமென்ன வெனில், அனிஷ்காவின்மீது ட்ரோஸ்ட் பயங்கரமாகவும், அவ்வளவு ஆழமாகவும் காதல் கொண்டிருந்தான். தவிரவும் மற்றவர்கள் அனைவரும் சந்தேகப்பட்டது போலவே, அனிஷ்கா அகி

மோவை விரும்பலாம், என்று ட்ரோஸ்டும் சந்தேகப் பட்டுக் கொண்டிருந்தான்.

கேப்டன் ட்ரோஸ்ட் மிகவும் சிறந்த மனிதர். ஒரு உயர் அதிகாரி என்ற முறையில் அவர் திறமை சாலியாகவும், துணிவு மிகுந்தவராகவும் இருந்தார். ஆனல் அவர் உண்மையில் தான் இருப்பதைவிட மோசமாகத் தோன்றுவதற்கு முயற்சித்தார். ஏனெனில் வேவு பார்க்கக்கூடிய ஒருவர் தன்னைத்தானே நம்பியிருக்க வேண்டுமென்றும், வாயாடியாக இருக்க வேண்டுமென்றும் அவர் நினைத்தார். ஒரு ஜிப்ஸியைப்போல கருப்புத் தோலும், ஒளிவிடும் கருநிறமான கண்களும் கொண்ட அவர் மிகச் சிறிய விஷயத்திற்கும் பொறிபறக்கக் கோபித்துக் கொள்வார். போர்க்களத்தில் சண்டையிடும் வேலை வந்தபிறகுதான், அவர் நிதானமாகவும், சிறிதும் விட்டுக்கொடுக்காமல் பிடிவாதமாகக் காரியத்தை நிறைவேற்றுபவராகவும் மாறினர். அத்தகைய சமயங்களில் அனிஷ்கா உண்மையிலேயே அவரை விரும்பினுள். ஆரம்பத்தில் அவர் அவள்பால், பரிகாசம் செய்கிற, எதையும் பொருட்படுத்தாத ஒரு போக்கைக் கடைப்பிடித்து வந்தார். ஆனல் வெகு சீக்கிரத்திலேயே அவர் தன்னுடைய தவறை உணர்ந்தார். வேவு பார்க்கும் நபர்கள், தங்களுடைய யுத்த அனுபவத்தின் காரணமாக முரட்டுத்தனமுடையவர்களாக இருந்தபோதிலும், புதியமொழி பெயர்ப்பாளருக்கு முன்னிலையில், நிதானம் தவறிப் பேசவோ, அல்லது கொச்சையான பரிகாசங்களில் ஈடுபடவோ செய்யாதது முதல் முதலாக ட்ரோஸ்டின் மனதில்பட்டது. இது அவரையும் உஷாராக இருக்கச் செய்தது. அனிஷ்காவை அவர் அதிகக் கூர்மையாகப் பார்க்க முற்பட்டார். அவளுடைய வீரம், சுயபலத்தில் நம்பிக்கை, அற்பத்தனமாகப் பிறரிடம் கொஞ்சிப் பேசுவதை முற்றுக வெறுப்பது முதலிய குணங்கள் அவரை ஆழமாக ஆகர்ஷித்தன. ஆயினும் இதனலெல்லாம் அவளுடைய பெண்மையின் வனப்பின் மீது அவருக்கிருந்த கவர்ச்சி குறைந்து விடவில்லை. அது ட்ரோஸ்டின் மீது ஆச்சரியப் படத்தக்க பிரதிபலிப்பை ஏற்படுத்தியது. ஒரு குண்டு அவளது அருகில் வெடித்தபோதோ

அல்லது விரோதியின் விமானங்கள் நெருங்கிய போதோ, அவளுடைய முகம் சிறிது வெளுக்கும். "ஓ, என்ன பயங்கரம்!" என்று சாதாரணமாகக் கூறுவாள். ஆயினும் முன்னைப் போன்ற அதே உறுதியுடனும், கருருடனும் தன் வேலையைத் தொடர்ந்து செய்வாள்.

"ஓ, என்ன பயங்கரம்!" என்று அவள் ஆச்சரியமாகக் கூறுவதைக் கேட்கும்பொழுது, அவனுடைய இருதயம் புல்லரிக்கும். அந்த வார்த்தைகளைக் கேட்பதற்கே, விரோதி பலமாகத் தாக்க வேண்டும் என்று விரும்பக்கூடிய அளவிற்கு அவன் செல்வான். அந்த வார்த்தைகளைக் கூறும்பொழுது, அவள் பலஹீனமாக இருப்பதாக அவனுக்குத் தோன்றும். அதனுல் அவள் தனக்கு மிகவும் நெருங்கியவளாக இருப்பதாகவும், அதிக அளவுக்கு அவளை எளிதாக நெருங்க முடியுமென்றும் அவன் நினைத்தான்.

அனிஷ்காவின்பால் ட்ரோஸ்ட் கொண்டிருந்த எண்ணம் அகிமோவின்பால் அவனை பயப்படச் செய்தது. அகிமோவின் பலம் அவர் திறந்த மனதுடன் வெட்ட வெளிச்சமாகப் பேசுவதில் அடங்கியிருந்தது. அவர் எப்பொழுதும் பாசாங்கு செய்தது கிடையாது. போலித்தனமாக என்றும் இருந்ததில்லை. பிறருக்கு ஏற்ருற்போல் தன்னை வளைந்து கொடுத்துக் கொள்வதில்லை. பிறர் இவருக்கு ஏற்ருற்போல் வளைந்து கொடுக்கவேண்டும்.

அகிமோவ் பட்டவர்த்தனமாகப் பேசுபவராயிருந்தார். ஆயினும் அவர் ஏதோ மர்ம மனிதராகவும் சிக்கலானவராகவும் காணப்பட்டார். முதல் பார்வையில் தோற்றமளிப்பதைப் போல் அவர் ஒன்றும் பட்டை தீட்டப்படாத வைரமல்ல. அவர் வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசுவது அவருடைய நாகரிகமற்றதன்மையின் அடையாளமல்ல. ஆனுல் எதையும் வழ வழா கொழ கொழா என்று விட்டு வைக்க விரும்பாத ஒருவருடைய குணமே அது.

ட்ரோஸ்டும் கூட எடுத்த எடுப்பில் பட்டை தீட்டப்படாத ஒரு வைரமாகத் தோன்றுவார். உங்களைப் பற்றி அவர் என்ன நினைக்கிருர் என்பதை உங்கள் முகத்திற்கு நேராகவே கூறிவிடக்கூடிய சுபாவம் உடையவர். ஆனுல்

பார்வைக்குத்தான் அப்படிக் காட்சி அளிக்கிறார். இதை வேறு எவரையும்விட அவரே நன்கு உணர்ந்துள்ளார். எதார்த்தத்தில் விட்டுக்கொடுப்பதற்கு அவர் எப்பொழுதும் தயாராயிருப்பவர். அவர் வெளிப்படையாகப் பேசுவது அவ்வளவு இயற்கையானதல்ல. அவர் அதிக முயற்சி எடுத்து, வெளிப்படையாகப் பேசுவதுபோல் தன்னையே நிர்ப்பந்தப்படுத்திக் கொள்வார். பிறகு ரம்யமானவராக இருப்பதற்கு அவர் விரும்பினார். மற்றவர்கள் தன்னை விரும்ப வேண்டுமென்று விரும்பினார். இதன் விளைவாக பல சந்தர்ப்பங்களில் அவர் உண்மையற்றவராக நடந்துகொண்டார். அதனால்தான் தன்னுடைய நெஞ்சில் உள்ளூர, தான் வெறு மனே நடிப்பதாகவே, ''தந்திரமாக'' நடந்துகொள்வதாகவே தன்னைப்பற்றிக் கருதினார். அந்த எண்ணம் சதா அவரை வதைத்து வந்தது.

அகிமோவ் இயற்கையாகவே ஓர் தலைவன். ஆட்களை சமாளித்து நிர்வாகம் செய்பவனாக இருந்தான். ஆனால் ட்ரோஸ்ட், தலைவனாக இருப்பதற்கு விரும்பினான். தலைவனாக இருப்பதாகக் கனவு கண்டான், ஆனால் அவர் பலஹீனமானவர். போலித்தனமும், முரட்டுத்தனமும் வெகு எளிதில் வந்துவிடும். ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், அவருக்கென்று திட்டவட்டமான செயல் முறை வழி ஒன்றும் கிடையாது.

அகிமோவின்பால் அனிஷ்காவின் போக்கிலோ, அல்லது அனிஷ்காவின்பால் அகிமோவின் போக்கிலோ ட்ரோஸ்ட் விசேஷமாக எதையும் பார்க்கவில்லை. ஆனால் அகிமோவ் தன்னைவிடச் சிறந்தவர் என்று கருதப்பட்ட நிலையில், அனிஷ்கா மிகவும் சிறந்தவருக்குத்தான் உரியவள் என்ற நிலையில், அவர்கள் இருவரும் ஒன்றுவார்கள் என்று ட்ரோஸ்ட் அச்சப்பட்டான். ஏனெனில் இருவரும் ஒருவருக்கொருவர் பொருத்தமானவர்கள்.

இருள் சூழ்ந்த, வெது வெதுப்பான பெட்டியில் உட்கார்ந்து, ருசிகரமான உரையாடலில் பங்கு கொண்ட ட்ரோஸ்ட், அனிஷ்காவோ அல்லது அகிமோவோ சொல்லக்கூடிய ஒவ்வொன்றையும் கூர்ந்து கவனித்தார். ஆனால்

அவர்கள் ஒரு வார்த்தையும் கூருமல் அங்கு உட்கார்ந்திருந் தார்கள். அவர்கள் அவ்வாறு மௌனமாக இருப்பதிலேயே அவர்களுக்கிடையில் கண்ணுக்குத் தெரியாத இணைப்பு இருப்பதை அவர் உணர்ந்தார். ஆயினும் அதுவும் கூட எல் லாம் கானல் நீராகவே இருந்தது. அதனுல் அவர்களுக்கிடை யில் பிணைப்புகள் என்பது தன்னுடைய கற்பனையில்தான் இருக்கிறது என்றும் கூட அவன் சில சமயங்களில் நினைத்தான்.

ஆனுல் இவ்விஷயத்தில் அவன் அவ்வாறு நினைத்தது தவறு—அந்தப் பிணைப்புகள் உண்மையில் இருக்கத்தான் செய்தன.

கடைசியாக அகிமோவ் பேசினுர்.

''நான் ஒரு பையனுக இருந்தபொழுது, எப்பொழுதா வது ஒருநாள் படை வீரர்களுடன் ரயில் பிரயாணம் செய்ய வேண்டுமென்று கனவு கண்டு வந்தேன். படை வீரர்கள் உள்ள ஒரு ரயில் வண்டியில் சேர்ந்து பிரயாயாணம் செய் வது மிகவும் குஷியாக இருக்கும் என்பது என்னுடைய எண்ணம்.''

''இல்லை, தீய எண்ணம் படைத்த ஒருவன் அவ்வாறு பேசமாட்டான்.'' என்று அனிஷ்கா நினைத்தாள். அகிமோ வின் வார்த்தைகளைவிட அவரது குரலையே அனிஷ்கா மிகவும் கவனித்து வந்தாள். அகிமோவ் மீண்டும் பேசினுர்.

''ஆனுல் இப்பொழுது, நான் மகிழ்ச்சியாகவே இல்லை. யாராவது ஒருவர் பின்னுல் தங்கிவிடலாம், அல்லது ஒரு துளி அதிகம் குடித்துவிடலாம். பொதுவாகப் பார்க்கப்போனுல், ராணுவத்தில் ஓர் சாதாரண சிப்பாயாக இருப்பதே மேலா னது. அவனுடைய வாழ்க்கை எவ்வளவு கடினமான்தாக இருந்தபோதிலும், அவன் நன்கு பராமரிக்கப்படுகிருன். தான் எதிலிருந்து ஆரம்பித்தானே அதற்கே மீண்டும் செல்ல விரும்புவது ஒரு கேப்டனுக்கு ஏற்றதாயில்லாமலிருக்லாம். ஆனுல் உண்மையாகச் சொல்ல வேண்டுமென்ருல், நான் சில சமயங்களில் எதைப்பற்றியும் நினைக்க விரும்புவதில்லை; அல்லது யாருக்காகவும் எந்தப் பொறுப்பையும் நிறைவேற்றி

வைக்க வேண்டிய நிலையிலிருப்பதற்கும் நான் விரும்புவதில்லை.''

அகிமோவ் பட்சமான, நட்புறவுடன் கூடிய தொனியில் பேசினர். சாதாரண காலங்களில் அவர் எப்பொழுதும் இப்படித்தான் பேசுவார். ஒரு மணி நேரத்திற்கு முன்பாகத்தான், ரயில் நிலயத்திற்கு அருகில் அந்தச் சிறிய வீட்டில் நடந்த சம்பவங்களுக்குப் பிறகு, தான் எவ்வாறு இவ்வளவு சாதாரண சுவையற்ற விஷயங்களைப் பேச முடியும் என்று அகிமோவ் தனக்குத்தானே ஆச்சரியப்பட்டுக்கொண்டான். ''ஒரு மனிதன் தன்னுடைய அருவறுக்கத்தக்க ரகசியங்களை மறைத்துக்கொள்ள முடிவது எவ்வளவு மோசமானது'', என்று அவன் நினைத்தான். திடீரென்று, தாங்க முடியாத அவமானம் அவனைக் கவ்வியது. எத்தகைய அருவறுக்கத்தக்க ரகசியங்களும் இருக்கக்கூடாது, என்று அவன் நினைத்தான். ஆனல் அது அவ்வளவு சுலபமானதல்ல.

''அன்று நீங்கள் வீரர்களை எதிர்த் தாக்குதலில் இறங்க அனுப்பினீர்களே, அன்று என்ன நினைத்தீர்கள்'', என்று யாரோ கேட்டார்கள்.

''எனக்கு நினைவில்லை.''

''தாக்குதலில் இறங்கும்படி வீரர்களை அனுப்புவது பயங்கரமானது'', என்று குஸாரோவ் கூறினர்.

''அவர்கள் போக மாட்டார்கள் என்று நீங்கள் அச்சமடைந்தீர்கள்.''

''நான் அச்சமடையவில்லை,'' அகிமோவ் பதிலளித்தார். ''அவ்வாறு மட்டும் நீ நினைக்கவே கூடாது. அப்படி பயப்பட்டால், ஆட்கள் போகமாட்டார்கள். அவர்கள் அதைப் பற்றியே நினைப்பார்கள். தாக்குதல் பயனில்லாமல் போகும். அவர்கள் அனைவரும் ஒரு மனிதன் போல் தாக்குதலில் இறங்குவார்கள் என்ற உறுதியுடன் நீங்கள் இருக்க வேண்டும். அதற்கு, நீங்கள் சரியான சமயத்தில் அவர்களைக் களத்தில் இறக்கவேண்டும். இல்லாவிட்டால் அது காற்றுடி இயந்திரத்தை எதிர்த்து சண்டையிலிறங்குவதாகத்தான் ஆகும். அரசியலிலும் அதே மாதிரித்தான். சரியான கோஷத்தை சரியான நேரத்தில் கொடுக்க வேண்டும்.''

இந்த சமயத்தில் ட்ரோஸ்ட் பின்வருமாறு நினைத்துக் கொண்டிருந்தார்: "அவர் எப்படிப் பேசுகிருர்? அரசியல் இலாகாவிலிருந்து வந்துள்ள விரிவுரையாளரைப்போல் அல்லவா பேசுகிருர்! மிகவும் கவர்ச்சியாக இருக்கிறது. தான் என்ன பேசுகிருேம் என்பது அவருக்குத் தெரியும்."

"ரெமிஸோவ் இவ்வாறுதான் என்னிடம் சொல்வது வழக்கம்", என்று சிறிதுநேர மௌனத்திற்குப் பின் அகிமோவ் கூறினர்.

"ரெமிஸோவைச் சரியான சமயத்தில் பாராட்டினர்", என்று ட்ரோஸ்ட் சஞ்சலத்துடன் கூறினர். "சிறிது தன்னடக்கமாக இருப்பது எவ்வித ஹானியையும் விளைவிக்காது என்பதை உணர்ந்துகொண்டார். மிகவும் தந்திரமான ஆசாமி. நாசமாய்ப்போக."

ரைபின்ஸ்க் என்ற நகரத்தில் ஏற்பட்டதாகக் கருதப் படும் ஒரு சம்பவத்தைப் பற்றி குஸாரோவ் சொல்ல ஆரம் பித்தார். போர் முனையிலுள்ள ஒரு சோல்ஜர், ஆஸ்பத்திரியி லிருந்து வெளியே வந்தபோது, தனக்கு முன்பின் தெரியாத ஓர் ஆசாமியுடன் தன் மனைவி இருப்பதைப் பார்த்தார். உடனே தன் மனைவியை சுட்டுக் கொன்றுவிட்டார். இது பற்றி நீதி மன்றத்தில் வழக்கு நடந்தபொழுது, அவனுடைய செய்கை நியாயமானதுதான், என்று கூறி கோர்ட்டார் அவனை விடுதலை செய்துவிட்டார்களாம்.

அனேகமாக அங்கிருந்தவர்கள் அனைவரும், அந்தத் தீர்ப்பு சரிதான் என்று ஆமோதித்தனர். அகிமோவ் மட்டும் உற்சாகமற்ற தொனியில், "ஒருக்கால் அந்த ஆள் ஆஸ்பத் திரியிலும் சரி, போர் முனையிலும் சரி, எந்தப் பெண்ணையும் சும்மா விட்டிருக்கமாட்டான்," என்று கூறினர்.

அகிமோவ் இவ்வாறு கூறியது, வீடுகளுக்குத் திரும்பி யுள்ள மனைவிமார்களின் ஒழுக்கத்தைப் பற்றிய ஒரு விவாதத் தையே கிளப்பியது. ஒரு வார்த்தைகூடப் பேசாமல் இன்னும் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்த அனிஷ்கா, அகிமோவை ஆதரிக்காமல் இருக்கமாட்டாள் என்று நன்கு தெரிந்திருந்த போதிலும் ட்ரோஸ்ட் அகிமோவுடன் காரசாரமான விவா தத்தில் இறங்கினர். ட்ரோஸ்ட்டுக்குக் கோபம் பொங்கியது.

"அனிஷ்காவைத் திருப்திப் படுத்துவதற்காக அகிமோவ் பெண்களுக்கு ஆதரவாகப் பேசுகிறான்," என்று ட்ரோஸ்ட் நினைத்தார். "பெண்களுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுவதின் மூலம்தான் எவ்வளவு சிறந்த மனிதன் என்று தனக்குத் தானே வேடம் போட்டுக் காட்டிக்கொள்ளப் பார்க்கிறான்."

"நீ என்ன நினைக்கிறாய், காம்ரேட் பெலோஜ்யோரோவா?" என்று யாரோ அனிஷ்காவைக் கேட்டனர்.

அவள் தூங்குவது போல் பாசாங்கு செய்தாள். அக் கேள்விக்குப் பதிலளிக்கவில்லை. அகிமோவ் கூறியதைக் கேட்டுக்கொண்டிருந்த அனிஷ்கா, தனக்குத் தகுதியற்ற ஒருத்தியை அவர் தன்னுடைய வாழ்க்கைத் துணைவியாகத் தெரிந்தெடுத்துக்கொண்டு விடலாம், என்று திடீரென்று பயத்தால் தாக்கப்பட்டவளானாள். இந்த எண்ணம், அவளிடத்தில் ஒரு இனந்தெரியாத, வேதனை மிக்க அனுதாபத்தை--வெளிப்படையாக இது மிகவும் ஆதாரமற்றதாக இருந்தபோதிலும்—அவர்பால் அவளிடத்தில் ஏற்படுத்தியது.

3

அடுத்த நாள் விடியற்காலையில் ரயில் வண்டி ஒரு சிறிய ஸ்டேஷனில் நின்றது. தூக்கம் பிடிக்காத அகிமோவ், பெட்டியை விட்டுக் கீழே இறங்கி ப்ளாட்பாரத்தில் நடந்தார். ட்ரெயினிலிருந்தவர்கள் பூராவுமே தூங்கிக்கொண்டிருந்தனர். வயதான சோல்ஜர்களில் ஒரு சிலர் மட்டுமே கீழே இறங்கி, புல் அடர்ந்த வரப்பின் மீது உட்கார்ந்து புகை பிடிக்க ஆரம்பித்தனர்.

கேப்டன் லாப்ஸின் அகிமோவ் இருந்த இடத்திற்கு வந்து, அதற்கு முந்தின நாள், தான் துணிவுடன் ஈடுபட்ட காரியம் எவ்வாறு முடிந்தது என்பதைப் பற்றி உடனேயே வர்ணிக்க ஆரம்பித்தார். அது ஒரு தோல்வியில் முடிந்தது. அந்தப் பெண்மணி கராரான ஒழுக்கமுடையவளாக இருந்தாள். ஆயினும் அர்த்தமில்லாத கர்வத்தின் காரணமாக, தன்னுடைய காரியம் பூர்ண வெற்றியுடன் முடிந்ததாக

லாப்ஸின் கூறினார். அதைக் கேட்பதற்கு அகிமோவின் மனம் புண்பட்டது. அவமானமேற்பட்டது. உடனே இடை மறித்து, "சரி சரி, போதும், போதும், போனது போகட்டும். அதைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொள்வதற்கு ஒன்றுமில்லை. பாவம், தனிமையில் வாடும் பெண்கள்! அவர்களுக்காக நான் மிகவும் வருந்துகிறேன். அவ்வளவு தான்."

இன்ஜின் 'கூ' என்று கத்தியது. லாப்ஸின் தன்னுடைய இடத்திற்குச் சென்றார். சோல்ஜர்கள் தங்கள் தங்கள் இடங்களுக்கு முண்டியடித்துக்கொண்டு ஓடினார்கள். வண்டி புறப்பட்டது. கதவின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டிருந்த அகிமோவ் உள்ளே குதிப்பதற்குத் தயாராக இருந்த சமயத்தில், அனிஷ்கா ஸ்டேஷனிலிருந்து வண்டியை நோக்கி ஓடி வருவதைப் பார்த்தார். அவளுடைய கையில் சாப்பாட்டுத் தகரம் (டப்பா) இருந்தது. அதிலிருந்து பால் வெளியே சிந்திக்கொண்டிருந்தது. அவள் பெரிய மேலங்கியை அணிந்துகொண்டிருக்கவில்லை. சாம்பல் பூத்த பச்சை நிறமான யூனிபாரம் கவுன் மட்டும் அணிந்துகொண்டிருந்தாள். அந்தக் கவுனின் தோள்பட்டைகள் குறுகலாக இருந்தன. உயரமான குதி உடைய பூட்ஸுகளுக்குப் பதிலாக லேஸ் வைத்த அழகான காலணிகளை அணிந்துகொண்டிருந்தாள். அவள் ஓடிவந்த போது, நீளமான, சரியான உருவத்துடன் கூடிய அவளுடைய கால்கள் எவ்வளவு லேசாகவும், வேகமாகவும் அசைந்தன என்பதை அகிமோவ் கவனித்தார்.

அகிமோவ் தான் பிடித்துக்கொண்டிருந்த கதவின் கைப்பிடியை விட்டுவிட்டுக் கீழே இறங்கி நின்றார். அனிஷ்கா வண்டியில் ஏறுகிறாளா, இல்லையா என்பதைக் கவனிக்கவே அவர் கீழே நின்றார். அவளால் வண்டியைப் பிடிக்க முடியவில்லை என்பதைப் பார்த்த அகிமோவ், அவள் பக்கம் திரும்பினார். வண்டியின் வேகம் அதிகரித்து, ஒவ்வொரு பெட்டியாகத் தாண்டிச் சென்றுகொண்டிருப்பதை உணர்ந்தார். ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் "காம்ரேட் கேப்டன், உள்ளே குதியுங்கள்!" என்ற கூக்குரல்கள் கேட்டன.

அவர் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அனிஷ்காவையே கவனித்துக்கொண்டிருந்தார். தன்னால் வண்டியைப் பிடித்து ஏறமுடியாதென்பதைக் கடைசியாக உணர்ந்த அவள், மெதுவாக நடக்க ஆரம்பித்தாள். பின்னர் அசையாமல் நின்றாள். கூக்குரலிடாமல் தன்னையே தடுத்துக்கொள்வதற்காகவோ என்னவோ அவள் தன் கையைக்கொண்டு தன் வாயைப் பொத்திக்கொண்டாள். வண்டியைப் பிடிக்க முடியவில்லையே என்ற ஆத்திரத்தினால் அவள் முகபாவத்தில் ஏற்பட்ட மாறுதல் அவ்வளவு நகைப்பூட்டக் கூடியதாக இருந்ததால், அகிமோவ் புன்முறுவல் பூத்தார். ரயில் பூராவும் கடந்து போகின்ற வரையிலும் அவள் அகிமோவைப் பார்க்கவில்லை. மஞ்சள் நிறமான ரைதான்யச் செடிகளின் முன்னே அகிமோவ் நின்றார்.

தண்டவாளங்களின் மீது ரயில் சக்கரங்கள் ஓடுவதினால் ஏற்படும் கடகடவென்ற ஓசை மெள்ள மெள்ளத் தணிந்து தாழ்ந்த ஓசையாக மாறி படிப்படியாக நின்றது. அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி மெதுவாக நடந்தனர்

"ஓ, நீங்களும் வண்டியில் ஏறமுடியாமல் பின்தங்கி விட்டீர்களா?" அனிஷ்கா கேட்டாள்.

"ஆம்."

"எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நாம் இருவரும் சேர்ந்தாற் போல் இருப்பது அதிக மகிழ்ச்சி தரக்கூடியதே. அடுத்த வண்டி எப்பொழுது வரும் என்பது உங்களுக்குத் தெரியுமா?"

"எனக்குச் சரியாகத் தெரியாது. ஒவ்வொரு நாளும் ஒரு வண்டி புறப்படுகிறது என்று சொல்கிறார்கள்.

"அப்படியென்றால், நாளை வரை நாம் புறப்பட முடியாதே! நாம் எங்கே தங்க முடியும்?"

"ஸ்டேஷனில்தான்!"

"என்னிடத்தில் ஒரு ஒற்றைக் கோபெக்கும் கூடக் கிடையாது. உங்களிடத்தில் இருக்கிறதா?"

"இல்லையே."

அவள் மகிழ்ச்சி பொங்க சிரித்தாள். திடீரென்று முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு, "என்னால்தானே நீங்களும் தங்கிவிட்டீர்கள்," என்று கேட்டாள்.

"ஆம்!"

இருவரும் மௌனமாக இருந்தனர். தான் அவ்வாறு செய்ததற்கான காரணத்தை அகிமோவ் விளக்க முயன்ருர். "நீ தனியாக எப்படி சமாளிப்பாய் என்பது எனக்குத் தெரியவில்லை......"

"எனக்காக நீங்கள் வருத்தப்படுகிறீர்கள்?"

"வருத்தப்படுவது என்பது சரியான வார்த்தையல்ல. உன்னைத் தனியாக விட்டுச் செல்வது நன்ருக இருக்காது என்றுதான் நான் நினைத்தேன்."

"நீங்கள் இவ்வளவு பட்சமாக இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியாது," என்று அவள் கூறினுள். அவள் கூறியதில் சிலேடை ஒன்றும் கிடையாது.

"உங்களுக்கு மிகவும் நன்றி. ஆம். நாம் இரண்டு பேராக இருப்பது நிச்சயமாக நல்லதுதான்."

"நாம் இன்றே கிளம்புவதற்கு முயற்சி செய்வோம். ஒருக்கால் வேருெரு ட்ரெயின் இருக்கலாம். நம்முடைய வண்டியை நாம் பிடிப்பது சாத்யமாகலாம்."

அவளுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

"நான் மறந்தாற்போல் இருந்துவிட்டேன். நீங்கள் சிக்கலுக்கு உள்ளாக நேரிடலாம். உங்களுடைய பட்டாலியனை விட்டுத் தனியே பிரிந்து விட்டீர்கள். எல்லாவற்றுக்கும் இந்தப் பால்தான் காரணம். திடீரென்று எனக்குப் பால் மீது ஆசை ஏற்பட்டது." பால் இருந்த டப்பாவை அவள் பார்த்தாள். "நீங்களும் கொஞ்சம் அருந்துங்களேன்!" என்று உண்மையாகவே கூறினுள். அவர் சிரித்தார். அவளும் சிரித்தாள். உடனே இருவரும் முகங்களில் அசடு வழிய, திரும்பி சுற்றிலும் பார்த்துக்கொண்டார்கள். ரைதானிய வயல்கள் சுற்றிலும் பரந்து கிடந்தன. சில வயல்களில் இன்னும் அறுவடை நடைபெறவில்லை. அவர்களுக்கு நேர் எதிரில் ஒரு வயலில் ஒரு பாதை காணப்பட்டது. அந்தப் பாதையின் மறு கோடி 'பிர்ச்' மரங்கள் நிறைந்த தோப்புக்கு இட்டுச் சென்றது. காற்றில் 'பிர்ச்' மரங்களின் இலைகள் சலசலத்தன; மரங்கள் அசைவதால் பெருமூச்சு விடுவது போல் ஓசை கேட்டது. ஒரு சிறிய செங்கல் கட்டிடத்தில்

அந்த ரயில் நிலையம் அமைந்திருந்தது. அதன் மீது ஒரு சிறிய 'பால்கனி' (முன்னால் நீட்டிக்கொண்டிருக்கும் மாடிப் பகுதி); அதன் மேல் "ப்ளாக் ஹவுஸ்" என்று எழுதப்பட்டிருந்தது. ரயில் நிலையத்தைச் சுற்றிலும் நீண்ட காலத்திய மரங்கள் இருந்தன. அருகிலிருந்த ஒரு பெஞ்சின் மீது மிகவும் வயதான ஒரு அம்மையார் உட்கார்ந்திருந்தாள். அவளிடத்தில் இரண்டு பெரிய புட்டிகள் நிறையப் பால் இருந்தது. அகிமோவுக்கும் அனிஷ்காவுக்கும் ஏற்பட்ட சங்கடத்திற் கெல்லாம் அவள்தான் காரணம்.

பின்னர் இருவரும் ஸ்டேஷன்-மாஸ்டரிடம் சென்று, அடுத்த ரயில் எப்பொழுது வருகிறது என்று கேட்டனர். நீண்ட நேரத்திற்கு வண்டியொன்றும் வராது என்று தெரிந்ததால், அவர்கள் சற்று உலாவி வரப் புறப்பட்டார்கள்.

பிர்ச் மரத் தோப்பின் நடு மையத்திற்குச் சென்றார்கள். கீழே தரையில் காய்ந்த பழுப்பு நிற இலைகள் கம்பளம் விரிக்கப்பட்டிருப்பது போலிருந்தது. பழுப்படைந்த சில இலைகள் இன்னும் மரக்கிளைகளில் ஒட்டிக்கொண்டிருந்தன. சுற்றிலும் எழில் மயமாயிருந்தது. இலையுதிர் காலத்தின் மனோரம்யமான வாசனை அவர்களின் சுவாசப் பைகளை நிரப்பியது. ஆம். எங்கு நோக்கினும் தங்க நிறம் ஒளிவிடும் இலையுதிர் காலம்! உலகத்தில் ஒவ்வொரு பொருளும் அது எப்படியிருக்க வேண்டுமென்று விரும்புவோமோ, அப்படியே இருப்பதாகத் தோற்றமளித்தது. ரயில் நிலையக் கட்டிடத்தில் இலையுதிர் கால ஈக்கள் கொடூரமாக ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. காக்காய்க் கும்பல் ஒன்று வயலில் இறங்கி அமர்ந்தது. பின்னர் உரக்கக் கரைந்து கொண்டு மேலே கிளம்பிச் சென்று ரயில் நிலையத்தைச் சுற்றியுள்ள பழைய மரங்கள் மீது அமர்ந்தன. இலையுதிர் காலத்தில் சடைசியாகக் கிடைக்கும் தேனைப் பருகுவதற்காக தேனீக்கள் ரீங்காரமிட்டுக் கொண்டு கும்பலாகப் பறந்து சென்றன. எப்பொழுதும்போல் உள்ள சாதாரண வாழ்க்கையின் இந்த அம்சங்கள் எல்லாம் அகிமோவுக்கும், அனிஷ்காவுக்கும்

ஏதோ முற்றிலும் புதுமையாகக் காணப்பட்டன. தாங்களே புதியவர்களாக இருப்பதாகவும் அவர்கள் உணர்ந்தனர்.

அந்தச் சோலையின் வழியாக அவர்கள் மெதுவாகவும், மௌனமாகவும் நடந்து சென்றனர். தரையில் உதிர்ந்து கிடந்த பழுத்த இலைகள் பஞ்சு போல் மெதுவாகவும், 'ஸ்பிரிங்'கைப் போல் அவர்களின் பாதங்களை மேல்நோக்கி உந்துவதைப் போலும் இருந்தன. அந்த இலைகளின் மீது சலசலத்துக்கொண்டு நடப்பது அவர்களுக்கு ஒரு விதமான இன்பத்தைக் கொடுத்தது. மௌனமாக வருவது அகிமோவுக்குச் சங்கடமாக இருந்தது. விலை மதிக்க முடியாத நேரத்தை விரயமாக்கி வருவதாக அவர் நினைத்தார். அவளைக் காதலிப்பதாக அனிஷ்காவிடம் சொல்லாவிட்டால், அவளை மகிழ்விப்பதற்கும், திருப்திப்படுத்துவதற்கும் முயல வேண்டும், அல்லது குறைந்தபட்சம் எப்படியாவது அவள் விரும்புகின்றபடியாவது நடக்க வேண்டும்'' என்று அவர் நினைத்தார். தான் எதைச் சொல்வது என்று யோசித்துக் கொண்டே வந்தார். சொல்வதற்குப் பொருத்தமானதாக அவருக்கு எதுவும் படவில்லை. தன் மீதே அவருக்குக் கோபம் ஏற்பட்டது. 'காதலிப்பது கஷ்டம்தான், இல்லையா, பேவல் அகிமோவ்? அதற்கு புத்திக் கூர்மை வேண்டியிருக்கிறது போரிடுவதைப் போலல்ல', என்று சிலேடையாக நினைத்துக் கொண்டார்.

தான் சந்தேகப்படாவிட்டாலுங் கூட, யாதொன்றும் பேசாமல் நடந்து வரும் அந்த ஒரே சரியான நடைமுறையை அவர் பின்பற்றி வந்தார். அவருடைய மௌனம் அனிஷ்காவுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவருடைய வாயிலிருந்து அர்த்தமற்ற வார்த்தைகள் வருவது அவளால் சகித்துக் கொள்ள முடியாததாக இருந்தது.

அவளுடைய வாழைத் தண்டு போன்ற கைகளையும், ஒல்லியான விரல்களையும், சிறு குழந்தையின் நகங்களைப் போல் அவளுடைய நகங்கள் விரலின் தோலுக்குள் பதிந்திருப்பதையும் அவர் தன் ஓரக்கண்ணால் பார்த்தார். அவளுடைய ஒரு கை வெள்ளை பிர்ச் மரங்களை நினைவற்ற முறையில் தட்டி ஓசை உண்டாக்கிக்கொண்டே வந்தது.

மறு கை சாப்பாட்டு டப்பாவை ஆட்டிக்கொண்டே வந்தது. மரியாதைக்காவது அவர் சாப்பாட்டுத் தகரத்தைத் தான் வாங்கிக்கொண் டிருந்திருக்க வேண்டும். ஆனல் அத்தகைய துணிச்சலான காரியத்திற்கு அவர் தன்னைத் தயாராக்கிக் கொள்ளவில்லை. அவள் ஒரு பெண்ணுக இருப்பதால், அவளுக்காக ஒரு ஆண், அந்தத் தகரத்தைத் தன் கையி லெடுத்துக் கொண்டு செல்வது என்ற எண்ணம் அவருக்குக் கேலியாக இருந்தது. ஆனல் ஒரு கேப்டன் என்ற முறையில் ஒரு லெப்டினென்டுக்கு விட்டுக்கொடுத்து நடப்பது தனக்குச் சரியானதல்ல என்று நினைத்தார்.

முழுவதும் அவளைப் பற்றியே நினைத்துக்கொண்டு வந்தார். விசித்திரமான எண்ணங்கள். என்னருகில் நடந்து வரக்கூடிய பெண் உண்மையாகவே நான் நினைத்து வந்திருக் கக்கூடிய பெண்தானு? கடந்த சில தினங்களாக அவர் இடைவிடாது நினைத்து வந்திருக்கக்கூடிய நங்கை மிகவும் தூரத்திலிருந்தாள்—அவள் அவனருகே இருக்க முடியாது— ஆனல் அங்கு நடந்து வரக்கூடிய நங்கை மிகவும் நெருங்கி யிருந்தாள். அவனுடைய பக்கத்திலேயே இருந்தாள். அவனுடனிருக்கும் நங்கையின் கையைப் பிடித்து, அவளுடன் பேசமுடியும். ஆனல் மற்றவள் மேகங்கள் சூழ்ந்த உலகத் தில் வாழ்கிருள். அவள் அவனுடைய இதயத்தில் ஆட்சி செலுத்தி வருகிருள். நீங்கள் காதலிக்கும் நபர் உங்க ளருகிலேயே இருப்பது மிகவும் இன்பகரமானதல்லவா ? ஏனெனில், தானுகவே உங்கள் கையின் மீது அமர்ந்த பறவையைப் போன்றவள் அவள். ஆனல் அவளுடைய உண்மையான இடம் உயரத்தில், ஆகாயத்தில் உள்ளது. உங்களிடத்திலிருந்து நீண்ட தூரத்தில் உள்ளது.

அகிமோவ் மனக் களிப்புடன் இருந்தார். அனிஷ் காவால் அதை உணர முடிந்தது. அவளுக்காக அவர் வண்டியைத் தவறவிட்டதால் மட்டும் அவள் அதை உணர வில்லை. அவர் மிகவும் நேர்த்தியாக நடந்துகொண்டார். அவளைத் தெரிந்த எந்த அதிகாரியும் அல்லது சோல்ஜரும் அதே மாதிரித்தான் நடந்துகொண்டிருந் திருப்பார்கள். ஆனல் இதில் முக்யமான விஷயம் என்னவெனில், அவ்வாறு

நடந்துகொண்டது அகிமோவாக்கும். ஏதோ முக்யமான காரணம்தான், அசாதாரணமான விஷயம்தான். அகிமோவை இவ்வாறு நடந்துகொள்ளச் செய்யமுடியும் என்பதை அனிஷ்கா உணர்ந்திருந்தாள். வெறும் மரியாதைக்காக மட்டும் அவ்வாறு நடந்துகொள்ளக்கூடிய நபர் அகிமோவ் அல்ல.

அவள் அடிக்கடி அகிமோவின்மீது கண்ணோட்டம் செலுத்தி வந்தாள். சூரிய வெப்பத்தால் சாக்லெட் நிறமாக மாறியிருந்த அவருடைய பெரிய, கைகளில் ஒன்று அவருடைய ராணுவச் சட்டைப் பையின் பித்தான் ஒன்றை ஞாபக மறதியாகப் பிடித்துத் திருகிக்கொண்டே இருந்தது. ஒரு நீண்ட குச்சியைப் பிடித்துக்கொண்டிருந்த அவளுடைய கையும், சட்டைப் பையின் பித்தானைப் பிடித்துக்கொண்டிருந்த அவரது கையும் ஒன்றுக்கொன்று நெருங்கியிருந்தன. அனிஷ்காவின் கையைப் பார்த்து, தன் கையையும் பார்த்துக்கொண்ட அகிமோவுக்கு அவ்விரண்டும் ஏதோ ஒன்றை நினைவுக்குக் கொண்டுவந்தன. அது என்ன என்பதை அவரால் சரியாக நினைத்துப் பார்க்க முடியவில்லை. சிறிது நேரங்கழித்து அது அவரது நினைவுக்கு வந்தது. ஒரு நீளமான வனப்புமிக்க 'வில்லோ' மரத்து இலை ஒரு பெரிய மேபிள் இலைக்கு அருகில் இருக்கும் தோற்றம் அவரது நினைவுக்கு வந்தது. அவர்களின் கண்கள் சந்தித்தன. அவர்களின் அதரங்களிலே புன்முறுவல் நெளிந்தது. ஏதோ பேசவிரும்பினர். ஆனால் திடீரென்று ரயில் நிலையம் இருந்த திசையிலிருந்து ஒரு குரல் கேட்டது. ஆவலோடு தேடிக்கொண்டிருக்கும் ஒருவரின் குரல்.

"காம்ரேட் கேப்டன்! காம்ரேட் கேப்டன்!"

"மேபொரோடா! என்று ஒரு பெருமூச்சுடன் அகிமோவ் கூறினார்.

உண்மையே, மேபொரோடாதான் அது. பட்டாலியன் கமாண்டர் ரயிலைத் தவறவிட்டு விட்டார் என்று மற்றவர்கள் சொல்லவே, அவன் ஓடும் ரயிலிலிருந்து குதித்து பின்னால் ஓடினான். மரங்களின் ஊடே இருந்து இப்பொழுது அவன் வெளிப்பட்டான். வழக்கம்போல் அவன் முகம் பீதி

யுடன் காணப்பட்டது. அவனுடைய தொப்பி சிரிப்பை உண்டாக்கும் முறையில் அவன் தலையில் ஒட்டிக்கொண்டிருந்தது. யாதொன்றும் ஏற்படாததுபோல் அவன் தன் மேலதிகாரியிடம் போய் நின்றான். மொழி பெயர்ப்பாளரும் அங்கிருப்பதுகண்டு ஆச்சரியமடையாதவன்போல் சமாளித்துக்கொண்டான். அகிமோவின் பெரிய மேலங்கி அவனுடைய தோள்மீதிருந்தது.

மூன்று பேரும் ரயில் நிலையத்திற்கு திரும்பச் சென்றனர். அகிமோவுக்குக் கொஞ்சம் இக்கட்டான நிலைமை ஏற்பட்டது கொஞ்சம் கோபமாகவும் இருந்தார். ரயில் நிலையத்தில் மற்றொரு ஆச்சரியம் அவர்களை எதிர் நோக்கியிருந்தது. ரெஜிமெண்டின் வேவு பார்க்கும் யூனிட்டைச் சேர்ந்த பிர்யூகோவும் மோல்ச்சானோவும் அங்கிருந்தனர். அனிஷ்காவுக்கு அவளுடைய பெரிய மேலங்கியைக் கொடுப்பதற்காக இவ்விருவரும் ரயிலைவிட்டு இறங்கி வந்திருந்தனர். கேப்டன் ட்ரோஸ்ட் அவர்களுக்கு அனுமதியளித்திருந்தார். ஏனெனில் அவர் அவர்களைப்பற்றி மிகவும் கவலையடைந்தார், என்று அவர்கள் கூறினர்.

இவ்வாறு அவர்களின் எண்ணிக்கை ஐந்து ஆகப் பெருகியது. ரயில் நிலையத்திலுள்ள பெஞ்சியின்மீது எல்லோரும் உட்கார்ந்தனர். வெகு சீக்கிரத்தில் ஸ்டேஷன் மாஸ்டரும், இதர ரயில்வே ஊழியர்கள் சிலரும் வந்து அவர்களுடன் சேர்ந்து கொண்டனர். இயற்கையாகவே யுத்தத்தின்மீது பேச்சு திரும்பியது. யுத்தம் முடிவதற்கு இன்னும் எவ்வளவு காலம் ஆகும்? ஜெர்மானியர்கள் இன்னும் நன்றாகப் போரிடுகிறார்களா, அல்லது முன்னைப்போல் அவ்வளவு நன்றாகப் போரிடவில்லையா? இன்னும் எவ்வளவு காலம் கழித்து நேசநாடுகள் கடைசியாக மேற்கில் இரண்டாவது போர் முனையைத் துவக்கப் போகிறார்கள் என்பதைப்பற்றிப் பேச்சுகள் எழுந்தன.

பையன்களின் ஒரு சிறு கும்பல் அவர்களைச் சூழ்ந்து நின்று இமை கொட்டாமல் மௌனமாக, அவர்களது சம்பாஷணையைக் கேட்டனர். வேவுப்படை ஆட்களின் மாற்று உருவத் தொப்பிகளையே அந்த சிறுவர்கள் உற்றுப்

பார்த்துக்கொண்டிருந்தனர். பழக்கத்தின் காரணமாக எப்பொழுதும் அத் தொப்பிகளேயே அணிந்து வந்தனர். அகிமோவ் தன் சட்டையில் குத்திக் கொண்டிருந்த மெடல்களும், அனிஷ்காவின் பிரகாசமான புன் முறுவல் தவழும் முகமும் அச்சிறுவர்களின் கவனத்தைக் கவர்ந்தன.

4

அடுத்த ட்ரெயின் மூன்று மணி நேரம் தாமதித்து வந்தது. ஏற்கனவே அவர்கள் பிரயாணம் செய்து வந்த ட்ரெயினைத் தொடர்ந்து வந்த ராணுவ போக்குவரத்து ட்ரெயின் அது. அதில் ஜெனரல் முகினும், டிவிஷனின் தலைமைக் காரியாலய ஊழியர்களும் இருந்தனர். உரிய நேரத்திற்கு மிகவும் முன்பாகவே அது வந்திருந்தது. அகிமோவும், அனிஷ்காவும் தவறவிட்ட டிரெயினை அனேகமாகப் பிடிக்கும் அளவுக்கு வந்து விட்டது. அவர்களெல்லாம் ஏதோ ஒரு விபத்தில் சிக்கிக்கொண்டு மீண்டவர்களைப் போன்று வரவேற்கப்பட்டு, ரயிலில் உணவும், இடமும் கொடுக்கப்பட்டனர்.

வண்டியில் சோல்ஜர்கள் பாடிக் கொண்டிருத்தனர். பாட்டுக் குழுவினரின் தலைவனாக இருந்த கருஞ்சிவப்பு நிறமான, பார்வைக்கு தரந்திரம் நிறைந்தவனைப்போல் தோற்றமுடைய உக்ரேனிய சார்ஜெண்ட் மேஜர் மிகவும் உணர்ச்சி வயப்பட்டுப் பாடினர். தன்னுடைய வலிமையான கனத்த குரலைப்பற்றி கள்ளங் கபடற்ற முறையில் கர்வத்துடன் காணப்பட்டார். பாட்டுகளுக்கிடையில் அவர் அனிஷ்காவின்மீது பார்வை செலுத்துவார். பெண்கள் யாரும் பாடுவதற்கு முன்வரவில்லையே என்று சூசகமாகக் குறிப்பிடுவார்.

"ஒரு பெண் குரல் இல்லாமல் பாட்டு இருக்க முடியுமா?" என்று வேறு வழியில்லாமல் கடைசியாகக் கேட்டே விட்டார்.

அகிமோவிடம் அனுமதி கேட்கும் தோரணையில் அனிஷ்கா பார்த்தாள், அவரும் தலையசைத்தார். தன்னுடைய சொந்த விருப்பப்படி பாடுவதற்கு பதிலாக. அவரு

டைய அனுமதியை அவள் கேட்ட முறையானது, ஏதோ நீண்ட காலமாக அவள் அவருடைய உரிமையாக இருந்தது போன்று, அவர்களை இன்னும் நெருக்கமாகக் கொண்டு வந்ததுபோல் காணப்பட்டது. இது அகிமோவின் நாவை வறண்டு போகச் செய்தது. அவள் பாட ஆரம்பித்தாள். இன்னும் தானகவே பாடிக் கொண்டிருந்த சார்ஜெண்ட் மேஜர், திருப்தியுடன் குதூகலமாகத் தலையசைத்தார்.

என்ஜின் 'கூ' ஓசை கேட்டது. தன்னுடைய காதல்தான் வேகமாக முன்னேறிச் செல்வதாகவும், அமைதியாக இருக்கும் சமவெளியில் அதனுடைய வெற்றிகரமான முழக்கத்தை எதிரொலிப்பதாகவும் அகிமோவ் நினைத்தார்.

அடுத்து வந்த முதல் ரயில் நிலையத்தில் அகிமோவ் கீழே இறங்கினர். விரைவில் திரும்பி வந்து விடுவதாக அனிஷ்காவிடம் சொல்லிச் சென்றார். எதையும் லேசாக எடுத்துக் கொள்ளும் குழந்தையைப்போல் தனக்குத் தானே சிரித்துக்கொண்டார். கீழே இறங்கி நேராக சிகை அலங்கரிப்போனின் கடைக்குச் சென்றார். சமீபத்தில் சண்டை நடைபெற்ற இதர எல்லா இடங்களைப் போலவே, அந்த ரயில் நிலையமும் சிதைந்து கிடந்தது. தற்காலிகமாக மரத்தினல் ஆன ஒரு பெரிய கட்டிடம் அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அடுத்தாற்போல் தபால் நிலையமும், சிகை அலங்கரிப்போனின் கடையும்கொண்ட ஒரு மரக் கட்டிடம் இருந்தது. சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பலர் காத்துக்கொண்டிருந்தார்கள். அகிமோவும் தன்னுடைய வாய்ப்பை எதிர்பார்த்து ப்ளாட்பாரத்தில் காத்துக்கொண்டு நின்றார். அப்பொழுது டிவிஷனல் கமாண்டர் சில அதிகாரிகளுடன் மெதுவாக மேலும் கீழும் நடந்து கொண்டிருந்தார். அவரைக் கூப்பிட்டு, ஜெனரல் கைகுலுக்கினர். தன்னுடைய பட்டாலியனை எப்பொழுது ஒப்புவிக்கப் போகிறார் என்று கேட்டார். அகிமோவினுடைய வேலை மாற்றத்தைப்பற்றி அவரிடம் தெரிவிப்பதற்கு கோலோவினுக்கு நேரமிருந்திருக்கவில்லை என்பதை தெரிந்த ஜெனரல் தானே அந்த மகிழ்ச்சிகரமான செய்தியைக் கூறுவதற்கு அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டார். அவருடைய மௌனத்தைக்

கண்டு ஜெனரலுக்கு ஓரளவுக்கு ஆச்சரியமாகத்தான் இருந்தது.

''நீங்கள் எவ்வாறு எங்களுடை ட்ரெயினில் வந்து சேர்ந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''நான் பின்னுல் விடுபட்டுப் போனேன்.''

''அது ரொம்பவும் மோசமாயிற்றே. எப்படியானுலும், உங்களை விட்டுப் பிரிந்து அவர்கள் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டியதுதானே.''

மீண்டும் அகிமோவ் பதிலளிக்கவில்லை. இவ்வாறு அகிமோவ் பலவந்தமாக மௌனமாக இருப்பது கண்டு ஜெனரல் மிகவும் சங்கடப்பட ஆரம்பித்தார்.

ஜெனரல் தலையசைத்துக்கொண்டு தொடர்ந்து நடந்தார். அகிமோவ் சிகை அலங்கரிப்புக் கடைக்கே திரும்பச் சென்ருர். தன்னுடைய வாய்ப்பு வருகின்ற வரையிலும் காத்திருந்தார். ஆனுல், அப்பொழுது, உள்ளே போக வேண்டியது தன்னுடைய வாய்ப்பு என்று ஒரு லெப்டினென்ட் கூறவே, அவரை வெறிக்க, வெறிக்க உற்றுப் பார்த்தார். பின்னர், வெள்ளைக் கோட்டு அணிந்திருந்த அந்த சிகை அலங்கரிப்போனைப் பார்த்தார். கையால் தன்னுடைய தாடியைத் தொட்டுப் பார்த்தார். ''இல்லை, இப்பொழுது அவசியமில்லை,'' என்று கூறிவிட்டு, எல்லோரும் ஆச்சரியப்படும் முறையில் சரேலென்று வெளியே சென்றுவிட்டார்.

அனிஷ்கா இருக்கக்கூடிய பெட்டி அருகில் சில நிமிஷங்கள் நின்ருர். ட்ரெயின் புறப்படும் வரையிலும் உள்ளே ஏறவில்லை. பின்னர் ஏறி உள்ளே உட்கார்ந்தார். அனிஷ்காவைக்கூடப் பார்க்காமல் மௌனமாகப் புகை பிடித்துக் கொண்டிருந்தார்.

அனிஷ்கா இதை கவனித்தாள். அவளும் மனச் சலிப் படைந்தாள். ஆயினும் அவளுடைய மனச் சோர்வு நீண்ட நேரம் நீடிக்கவில்லை. ஏனெனில் அவள் அவரை கவனிக்காதவள்போல் இருந்தாள். சோல்ஜர்களின் கும்பலுடன் அவள் சேர்ந்துகொண்டாள். ஜெர்மன் யுத்தக் கைதிகளைப் பற்றிய கதைகளைச் சொல்ல ஆரம்பித்தாள். பெரும்பாலும் ஹிட்லரைப் பற்றியும், கொயபெல்ஸைப் பற்றியும் சுவையான

சம்பவங்களையும், வேவு பார்க்கும் வீரர்களின் வாழ்க்கையிலிருந்து முக்கிய அம்சங்களையும் சொல்ல ஆரம்பித்தாள். அகிமோவைப் பற்றி முற்றிலும் மறந்து போனதாகக் காணப்பட்டாள். தான் அகிமோவ் இருப்பதை மறந்து விட்டதாகக் காட்டுவதற்கு எப்படியெல்லாம் நடந்து கொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் நடந்துகொண்டாள். சோல்ஜர்கள் பயபக்தியான பார்வையுடன் அவளைப் பார்த்தனர். மேபொரோடாவும் கூட, வாய் திறக்காத தன்னுடைய மேலதிகாரியை விட்டு அப்பால் சென்று அனிஷ்காவின் அருகில் போய் உட்கார்ந்துகொண்டான்.

பொழுது சாய்ந்துகொண்டிருந்தது. எஞ்சினின் சோகமயமான 'கூ' ஓசை கரு நிறமான அந்த சமவெளியில் எதிரொலித்தது. வண்டியில் அவ்வப்போது கேட்டுவந்த சிரிப்பு வெடிகள் அகிமோவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அவன் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து வெளியேறுவதற்கு விரும்பினான். அடுத்த பெட்டிக்குப் போய்த் தனக்குத் தெரிந்த சில அதிகாரிகளுடன் சேர்ந்து கொள்வதற்கு அடுத்த ரயில் நிலையம் எப்பொழுது வரும் என்று காத்துக் கொண்டிருந்தான்.

அடுத்த ஸ்டேஷனில், முன்னாலிருந்த ஒரு ட்ரெயினைத் தாண்டிச் சென்று இந்த ட்ரெயின் நின்றது. இரண்டு வண்டிகளும் ஒன்றையொன்று அடுத்து நின்றன. அகிமோவ் வெளியில் இறங்கி பிளாட்பாரத்தில் நடந்தார். ஒரேஷ்கின், பெல்ஸ்கி, இன்னும் தன்னுடைய பட்டாலியனைச் சேர்ந்த இதரர்களின்—மிகவும் சுலபத்தில் கண்டுபிடித்துவிடக்கூடிய-குரல்களைக் கேட்டார். அவர் மேபொரோடாவைக் கூப்பிட்டு, அனிஷ்காவுக்கும் கேட்கக்கூடிய அளவு பலமான குரலில், "நம்முடைய ட்ரெயினைப் பிடித்துவிட்டோம். சென்று வருகிறோம் ('குட்பை')!" என்றார்.

பகல் பூராவும் அவர் சுறு சுறுப்பாக இருந்தார். பிரயாணம் இன்னும் நீடித்துக்கொண்டேயிருந்தது. தன்னுடைய ஆட்களுடன் பேசினார். அவர்களின் குடும்ப விவகாரங்களைப் பற்றிக் கேட்டார். தன்னுடைய அரசியல் உதவியாளர் இல்லாத நிலையில், அவர்களுக்காகத்தானே

பத்திரிகைகளை வாசித்தார். ஒவ்வொரு பெட்டியிலும் அரசியலைப்பற்றிப் பிரசங்கங்கள் புரிந்தார். கடைசியாக நடந்த போரைப் பற்றித் தன்னுடைய அதிகாரிகளுடன் விவாதித்தார். ஒவ்வொரு யூனிட்டினுடைய நல்ல அம்சங்களையும், பலவீனங்களையும், பீரங்கிப் படையுடன் ஒத்துழைப்பு விஷயத்தில் அவர்களின் குறைபாடுகள் பற்றியும் சுட்டிக் காட்டினார். தன்னுடைய வழியனுப்பு உபசாரத்தையும் கூறிக் கொண்டார். ஒரு சமயம் அவர் தனியாக இருக்க நேர்ந்த போது, கடலைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தார். நொவோரோஸிஸ்க், பாடூம் ஆகிய துறைமுகங்களைப் பற்றி நினைத்தார். கடற்படையில் அமுலிலுள்ள சமிக்ஞை (சிக்னல்) களையும், உத்தரவு கொடுக்கும் வார்த்தைகளையும் நினைவுக்குக் கொண்டுவர முயன்றார். கப்பல்களில் விளக்குகள் உள்ள இடங்கள், அதிகப் பிரகாசமுள்ள ஒளி விளக்குகள் உள்ள நிலைகள், கடற்படையில் உள்ள சர்வீஸ் ஒழுங்கு விதிகள் ஆகியவற்றையெல்லாம் நினைவுக்குக் கொண்டுவர முயன்றார்.

அப்பொழுது இருந்ததைப் போல் அவ்வளவு உற்சாகத்துடனும், நட்புறவு மனப்பான்மையுடனும் என்றும் அவர் இருந்ததில்லைபோல் தோன்றியது. ஆயினும் இருதயத்தில் அவ்வளவு வேதனையை அவர் என்றும் கொண்டதில்லை.

தன் கேப்டன் போகப்போவதைப்பற்றி மேபொரோடா கேள்விப்பட்டதும், அவர் தன்னுடைய வழக்கமான அலுவல்களையெல்லாம் கைவிட்டார்; தன்னுடைய மேடையில் உட்கார்ந்துகொண்டு மேல்நோக்கிப் பார்வையை செலுத்திய வண்ணம் மணிக்கணக்காக சலனமற்று இருந்தார். அகிமோவ் உட்பட எல்லோர் மீதும் அவர் எரிந்து விழுவார். அகிமோவ் தன் தலையை அசைத்து, அவரைத் தனியே விட்டுப் போகும்படி மற்றவர்களுக்கு உத்திரவிட்டார். தானும் மேபொரோடாவுக்கு எத்தகைய கஷ்டத்தையும் கொடுக்கவில்லை.

இதற்கிடையில் ட்ரெயின்கள் மாஸ்கோவை விட்டுத் தாண்டி அக்டோபர் ரயில்வே பாதை வழியாகச் செல்ல ஆரம்பித்தன. இரவில், கடைசியாக வண்டி போலோகோய் என்ற ரயில் நிலையத்தில் வந்து நின்றது. அவர்கள் அங்கு

தான் இறங்க வேண்டும். ஏற்கனவே அங்கு டிவிஷன், ரெஜிமெண்ட் அதிகாரிகளெல்லாம், எங்கு செல்வது என்பதைப் பற்றி அங்கலாய்த்துக்கொண்டிருந்தனர். தன்னுடைய யூனிட்டுகளின் வருகைக்காக மேஜர் கொலோவின் காத்துக்கொண்டிருந்தார். வீரர்கள் வண்டியிலிருந்து இறங்க ஆரம்பித்தனர். தான் வந்துவிட்டதைத் தெரிவிப்பதற்காக அகிமோவ் கொலோவினிடம் சென்றார்.

''காம்ரேட் மேஜர், பட்டாலியனை நான் யாரிடம் ஒப்புவிப்பது?'' என்று உடனேயே கேட்டார்.

''பொறுங்கள், எல்லோரும் இறங்கட்டும்; ஆர அமர இது பற்றி நாம் முடிவு செய்வோம்,'' என்று சுருக்கமாகப் பதிலளித்தார்.

''முடிவு செய்வதற்கு என்ன இருக்கிறது? நான் போயாக வேண்டும்?''

''அவசரம் ஒன்றுமில்லை; நீங்கள் ஒருநாள் தாமதிக்கலாம்'', என்று மேஜர் கோபமாக பதில் கூறினர்.

விடியற்காலையில் ராணுவ லாரிகள் வந்து சேர்ந்தன. அவர்கள் அவற்றில் ஏறிக்கொண்டு ஸ்டேஷனைவிட்டுக் கிளம்பி, சந்தடி நிறைந்த, விகாரமான ஒரு ரோடு வழியாகச் சென்றனர். ஒவ்வொரு யூனிட்டும் எங்கு போக வேண்டுமென்பதற்கு ஏற்கனவே அறிவிப்புப் பலகைகள் போடப்பட்டிருந்தன.

முதல் பட்டாலியன் வீரர்கள் ஒரு கிராமத்திற்குள் வந்ததும், அவர்களைக் குறிப்பிட்ட இடங்களில் சேர்ப்பதற்குப் பொறுப்பான அதிகாரிகள் அவர்களை சந்தித்தனர். அவருடைய ஆட்களுடன் அகிமோவ் போய்த் தங்க வேண்டிய இடத்தைக் காட்டினர். அந்த இடம் பூராவும் சிக்னல்மென் இருந்தனர். அவர்கள் டெலிபோன் கம்பிகளைப் போட்டுக் கொண்டிருந்தனர். சார்ஜெண்ட் மேஜர்கள், முதல் பட்டாலியனின் ஆட்களை ஒவ்வொரு குடிசையிலும் எவ்வளவு பேர் தங்க வேண்டுமென்று அனைவரையும் பிரித்து அனுப்பினர். அந்த கிராமத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும் அவர்களைப் பார்ப்பதற்குத் திரண்டு வந்தனர். பெண்கள் வேலிகளின் அருகில் நின்றுகொண்டு ஒவ்வொரு சோல்ஜரின் முகத்

தையும் பேச்சில்லாத சிந்தனையுடன் கூர்ந்து கவனித்தனர். அத்தகைய சந்தர்ப்பங்களில் சகஜமாக எல்லோரது சிந்தனையிலும் ஏற்படுவதுபோல, ''ஒருக்கால் என்னுடைய கணவரும் அவர்களில் ஒருவராக இருக்கலாம்'', என்று எண்ணினர்.

மேஜர் கொலோவின் தன்னுடைய ராணுவ அதிகாரிகள் அனைவரையும் திரட்டினர். ஸ்தலக் கூட்டுப் பண்ணை பொழுதுபோக்கு சங்கத்தில் ('கிளப்') கூட்டம் நடைபெற்றது. இதையொட்டி அந்தக் கட்டிடம் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அதிகாரிகள் அனைவரும் நல்ல உற்சாகத்துடன் இருந்தனர். முக க்ஷவரம் செய்துகொண்டு, குளித்துவிட்டு, பளபளக்கும் பூட்ஸுகளுடனும், சுத்தமான ராணுவ உடைகளுடனும் இருந்த அவர்கள் சுறு சுறுப்பாகக் காணப்பட்டனர். அவர்களில் சிலர் சமாதான காலத்துத் தொப்பிகளைத் தேடிப் பிடித்து அணிந்துகொண்டிருந்தனர். போர்முனையிலிருந்தபோது அணிந்திருந்த நொறுங்கிப்போன தோல் பட்டைகளுக்குப் பதிலாக, தற்பொழுது புதிதாகத் தோற்றமளிக்கும் பிரகாசமான மஞ்சள் நிற தோள் பட்டைகளை அணிந்து கொண்டிருந்தனர்.

திருப்தியுடன் கூடிய ஒரு புன்னகையுடன் கொலோவின் தன் அதிகாரிகளைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தார். புதிய படைகள் அடுத்த சில தினங்களில் வந்து சேரும், என்று அவர் அவர்களிடம் கூறினர். எல்லா சாமான்களும், சாதனங்களும், பீரங்கிகள் உட்பட—தேவைக்கேற்பக் கொண்டு சேர்க்கப்படும். போர்ப் பயிற்சியும், அரசியல் பயிற்சியும் அடுத்த நாள் தொடங்கும். சமாதான காலத்தைப்போல வேலைத் திட்டமும், கால அட்டவணையும் கருராகக் கடைப்பிடிக்கப்படும்.

முதல் பட்டாலியனுக்கு, எதிர்த் தாக்குதல் நடத்துவதைப் பற்றிய பயிற்சி அளிக்கப்படும். இரண்டாவது, மூன்ருவது பட்டாலியன்களுக்கு சுடும் 'ரேஞ்ச்' பற்றி போதிக்கப்படும். சட்டதிட்டங்கள், தாக்கீதுகள், பயிற்சி வேலைத் திட்டம், கால அட்டவணை ஆகியவை அடங்கிய

புதிய சிவப்பு மேலட்டையுடன் கூடிய பிரசுரங்கள் உடனே அனைவருக்கும் விநியோகிக்கப்பட்டது.

கூட்டத்திற்குப் பிறகு அனைவரும் கலைந்து சென்றனர். அகிமோவ் அங்கேயே இருந்து, ரெஜிமெண்ட் கமாண்டரிடம் 'பட்டாலியனை நான் யாரிடம் ஒப்புவிப்பது?'' என்று கேட்டார்.

கொலோவின் திடீரென்று கோபங்கொண்டு, ''அகிமோவ், நீ கொஞ்சங்கூட இருதயமில்லாத ஆசாமியப்பா; திரும்பவும் நீ கடற்படையில் போய்ச் சேர வேண்டுமென்று துடித்துக்கொண்டிருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனால் எங்களிடத்திலிருந்து வெளியேறிச் செல்வதற்கு நீ எவ்வளவு அவசரமாயிருக்கிறாய் என்பதை எல்லோருக்கும் காட்டிக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. உண்மையாக, இது கொஞ்சங்கூட நாசூக்காக நடந்துகொள்ளும் முறையல்ல; கொஞ்சமும் சமயோஜிதமாக நடக்கத் தெரியவில்லை'' என்றார்.

''அப்படியொன்றுமில்லை'' என்று அகிமோவ் ஆட்சேபம் தெரிவித்தார். திகைப்படைந்தார். ''நான் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று தான் விரும்புகிறேன். வேதனையை நீடித்துக்கொண்டிருப்பதில் பலன் ஏதும் இல்லை. பட்டாலியனை நான் யாரிடத்தில் ஒப்படைத்துவிட்டுப் போக வேண்டும் என்பதைக் கூறுங்கள். அத்துடன் விஷயம் முடிந்துவிடும்.'' பின்னர் கொஞ்சநேரங் கழித்து, ''நீங்கள் அனைவரும் எனக்கு சகோதரர்கள் மாதிரி. ஆம். உண்மையான சகோதரர்கள். அதுதான் மனப்பூர்வமான உண்மை. ஆனால் இதை ஒத்திப் போட்டுக்கொண்டு போவதில் பிரயோஜனம் என்ன? நான் எப்படியும் போயாக வேண்டும். அவ்வளவுதான். அத்துடன் விஷயம் முடிந்தது'' என்றார்.

அகிமோவின் இந்த வார்த்தைகளால் சிறிது சாந்தமடைந்த கொலோவின், ''நான் இன்று ஜெனரலைப் பார்த்தேன். தற்போது நமக்குப் போதிய அதிகாரிகள் இல்லை. எனவே நமக்குப் புதிய அதிகாரிகள் கிடைக்கும் வரையிலும் அந்த பட்டாலியனின் தலைமைப் பொறுப்பில் நீங்கள் இருந்தாக வேண்டும். பத்து நாட்களுக்கு மேலாகாது. அதற்குப்

பிறகு, உங்களை அனுப்புவதற்கு ஏன் தாமதமாயிற்று என் பதை விளக்கி நாங்கள் உங்களுக்கு ஒரு கடிதம் தருகிறோம். நாங்கள் கவனிக்கிறோம், வேறு ஏதாவது இருக்கிறதா? போராடிக்கொண்டே எதிரியின் நிலைமை பற்றி உளவு சேக ரித்ததற்காக உங்களுக்கு "ஆர்டர் ஆப் தி ரெட்பேனர்" கொடுப்பதற்கு உங்கள் பெயரை ஜெனரல் சிபாரிசு செய் துள்ளார்" என்று கூறினர்.

"அவருடைய உதார குணத்தைப் பாராட்டுகிறேன். ஆனால் எனக்கு ஒரு சகாயம் செய்யுங்கள். நான் நாளைய தினம் செல்வதற்கு அனுமதி கொடுங்கள்."

கொலோவின் தன் கையால் சைகை காண்பித்து அகி மோவுக்கு விடை கொடுத்தார்.

சாயந்திர நேரம் வரும் வரையிலும் எல்லாம் சரியாக இருந்தது. ஆனல் பிறகு, அனிஷ்காவைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று அகிமோவுக்கு அடக்கமுடியாத ஆசை ஏற் பட்டது. என்ன செய்வதென்றே அவருக்குப் புரியவில்லை. மிகவும் முன்நேரத்திலேயே, படுக்கைக்குச் செல்வதென்று முடிவு செய்தார். வாரக்கணக்காகக் கழற்ருமல் அணிந்து கொண்டிருந்த தன் ராணுவ உடைகளைக் கழற்றினர். சுத்த மாக, தூய வெண்மையாக இருந்த படுக்கையில் சாய்ந்து போர்த்திக்கொண்டார். இவர் தங்குவதற்கு ஏற்பாடு செய் யப்பட்டிருந்த வீட்டிலிருந்த வயதான தம்பதிகள், இவரைத் தங்கள் சொந்த மகனுகவே பாவித்தனர். தன் சொந்த வீட்டிலிருப்பதைப்போல் அவர் நினைக்கும்படி செய்ய சகல வசதிகளும் செய்து கொடுத்தனர். மேபொரோடாவை ராணுவ முகாமுக்கு--ரோடுக்கு எதிரேயுள்ள வீட்டுக்கு போகும்படி அகிமோவ் உத்திரவிட்டார். "என்னை விட்டுப் பிரிந்து இருப்பதற்குப் பழகிக்கொள்" என்று அவர் கூறினர்.

இவ்வாறு கூறிவிட்டு அகிமோவ் படுக்கையில் சாய்ந்தார். ஆனல் அவருக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. அவரது மனம் தத்தளித்துக்கொண்டிருந்தது, படுக்கையைவிட்டு எழுந்தார். உடை அணிந்துகொண்டார். ஒழுங்கு விதி முறைகளின் ஒரு பகுதியைப் படித்தார். விளக்கை மீண்டும் அணைத்தார். ஜன்னல் அருகில் உட்கார்ந்துகொண்டு கருநீல நிறமாக

இருந்த வானத்தையும் கண் சிமிட்டிக்கொண்டிருந்த விண் மீன்களையும் பார்த்தார். பின்னர் எழுந்து வெளியில் சென்றார். யுத்தகால விதிகளின்படி விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டிருந்ததால் கிராமத்தில் எங்கும் இருள் சூழ்ந்திருந்தது. ஆனால் எல்லா இடத்திலும் வாழ்க்கை சகஜமாக நடந்து கொண்டிருந்ததை உணர முடிந்தது. நாய்கள் குரைத்துக்கொண்டிருந்தன. படை வீரர்கள் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தனர். பெண்களின் குரல்களும் காதில் விழுந்தன.

அவர் தன்னுடைய அறைக்குத் திரும்பிச் சென்றார். முக க்ஷவரம் செய்துகொள்வதென்று கடைசியாக முடிவுக்கு வந்தார். அடுப்பின் மேலிருந்த பாத்திரத்திலிருந்து கொஞ்சம் வெந்நீர் எடுத்துக்கொண்டார். சோப்பு நுரையை உண்டாக்கினார். தன் பெட்டியிலிருந்து க்ஷவரக் கத்தியை எடுத்தார். அடுப்புக்குப் பின்னாலிருந்த சிறிய அறையிலிருந்து அந்தப் பெரியவர் வெளியே வந்தார். அகிமோவைக் கவனித்தார். அவருடன் பேச முயன்றார்.

"உன்னுடைய தாடியை க்ஷவரம் செய்துகொள்வதற்கு நீ வருந்தவில்லையா, மகனே? எவ்வளவு அருமையான தாடி. ஒரு ஜெனரலுக்குப் பொருத்தமானது. எல்லா ஜெனரல்களும் தாடி வைத்துக்கொள்வது வழக்கம். தாடியில்லாத ஜெனரலை நீ கற்பனை செய்துகூட பார்க்க முடியாது."

அந்தப் பெரியவருடைய மனைவியும் கூட சேர்ந்துகொண்டார். நன்கு அடர்ந்து வளர்ந்திருந்த தன் தாடியை அவர் க்ஷவரம் செய்துகொள்வதை அந்த அம்மையார் அனுதாபத்துடனும், வேதனையுடனும் கூர்ந்து கவனித்தார்கள்.

"என்னுடைய அன்புக்குப் பாத்திரமானவனே, நீ மிகவும் இளைஞனாகத்தான் காணப்படுகிறாய். உன்னுடைய தாடி உன்னை அதிக வயதானவனாகத் தோற்றமளிக்கச் செய்கிறது" என்றார்.

வயதான அந்த சதிபதிகளின் குடும்பப் படங்களுக்கு இடையில் இருந்த ஒரு கண்ணாடி வழியாகத் தன் முகத்தைப் பார்த்தார். தன்னுடைய முகம் நம்ப முடியாத அளவுக்கு இளமையாக இருப்பதை அவர் உணர்ந்தார். ஆனால்

அந்த சமயத்தில் தன்னுடைய முகம் அழகாக இல்லை என்பதையும் அகிமோவ் கவனித்தார். அந்த தாடி அவருடைய முகத்தை நீளமாகக் காண்பித்ததுடன், அதற்கு ஒரு கம்பீரத்தையும் கொடுத்திருந்தது. ஆனால் இப்பொழுது முகம் வெறிச்சென்றிருந்தது. மோவாய்க்கட்டை குறுகியதாகக் காணப்பட்டது. மீசையையும் க்ஷவரம் செய்துகொண்டிருந்தார். தன் வாயிக்கும் மூக்குக்கும் இடையே இடைவெளி மிகவும் பெரியதாய் இருப்பதாக உணர்ந்தார். அவருடைய முகத்தில் மூக்கு மட்டும், தாயும் தகப்பனும் அற்ற ஒரு அநாதைக் குழந்தைபோல் காணப்பட்டது.

"இதுவும் நல்லதுக்குத்தான்," என்று பலமாகக் கூறி சிரித்தார். "கடல் ராணிகள் என்மீது காதல் கொள்ள மாட்டார்கள். ஆழத்தில் தங்கள் வீட்டிற்கு என்னை இழுத்துக்கொண்டு போக மாட்டார்கள்."

மீண்டும் படுக்கையில் படுத்துக்கொண்டார். ஆனால் அவருக்குத் தூக்கம் வரவேயில்லை. பலவாறாக சிந்தனைகள் ஓடின. பத்துமணி சுமாருக்கு யாரோ கதவு தட்டும் சத்தம் கேட்டு அவர் மகிழ்ச்சியுடன் துள்ளி எழுந்தார். ஒரு சீனியர் லெப்டினெண்ட் உள்ளே வந்தார். அரசியல் இலாகாவிலிருந்து அவர் வந்திருந்தார். காலமான ரெமிஸோவுக்கு பதிலாக, அரசியல் உதவியாளராக இவர் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் வலிமையும், சுறுசுறுப்பும் மிக்க வாலிபராகக் காணப்பட்டார். அங்கே இருந்த அகலமான பெஞ்சியின் மீது அகிமோவுக்கு அருகில், சுடர் விட்டுக்கொண்டிருந்த பெரிய அடுப்புக்கு சாத்தியமான அளவுக்கு அருகாமையில் அமர்ந்தார்.

புதிதாக வந்தவரை சலனமற்று அகிமோவ் கவனித்தார். அவர் சிறிதும் ரெமிஸோவைப்போல் இல்லை. தனக்கு உதவியாளனாக ரெமிஸோவின் இடத்தை அவரால் பூர்த்திசெய்ய முடியாது என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் தன்னை வீட்டை விட்டு வெளியே போகும்படி உந்திக்கொண்டிருக்கும் எண்ணத்தை மறப்பதற்கு உதவி செய்வதற்கு பேச்சுத் துணைக்கு யாராவது ஒருவர் இருப்பது நல்லதுதான்.

5

அனிஷ்கா சிறிதும் உற்சாகமின்றி நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தாள். தனக்கும் அகிமோவுக்கு மிடையில் எல்லா உறவும் முடிந்துவிட்டதாக நினைத்தாள். தன்னை இடைவிடாமல் வருத்திவந்த துயரத்தினின்றும், ஏக்கத்தி னின்றும் விடுவித்துக்கொள்வதற்குத் தன்னுல் முயன்றதை எல்லாம் செய்தாள். ரயிலில் தன்னிடம் அவர் ஏன் கொடூர மாகவும் முரட்டுத்தனமாகவும் நடந்துகொண்டார் என்பதைத் தெரிந்துகொள்ள அவளுக்கு விருப்பமில்லை. அவருக்கு நிதான புத்தியும், மனேதிடமும் இல்லாததுதான் அவ்வாறு அவர் நடந்துகொண்டதற்குக் காரணமாக இருக்க முடியும். ஆனுல் அவ்வாறிருப்பது சாத்யமல்ல. அப்படியெனில் மூடத் தனமான, அற்பமான பெண்களைக் கொல்வோரின் தந்திரங்களின் மூலம் அவள்மீது தன் செல்வாக்கை நிலைநாட்டிக் கொள்வதற்கு அவர் முயற்சித்ததுதான் அதற்குக் காரண மாக இருந்திருக்க முடியும்.

ஆனுல் ஒரு நாள் மாலையில், ரெஜிமெண்டின் தலைமை அலுவலகத்தில் அவள் தன் வேலையைப் பார்த்துக்கொண் டிருந்தபொழுது, அகிமோவ் விரைவில் கடற்படைக்குத் திரும்புவதுபற்றி ராணுவத் தலைமை அதிகாரி, சாதாரண அதிகாரி ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தது அவள் காதில் விழுந்தது. இதைக் கேட்டதும் அவள் மேற்கொண்டு ஊகித்து, எல்லா விஷயங்களையும் புரிந்துகொண்டாள்.

மறுநாள் அவளுக்கு ஓய்வு. அன்று முதல் வேலையாக, எவ்விதத் தயக்கமுமின்றி அருகாமையிலுள்ள கிராமத்திற் குப் புறப்பட்டாள். அந்த கிராமத்தில்தான் முதல் பட்டாலியனைச் சேர்ந்த துருப்புகள் ஒய்வெடுத்துக்கொண்டிருந்தனர். அந்த கிராமம் ஜன நடமாட்டமில்லாதது போல் காணப் பட்டது. படையினர் போர்ப் பயிற்சியின் நிமித்தம் வெளியே சென்றிருந்தனர். காவல் பணியிலிருந்த ஒரு சார்ஜெண்ட்—கையில் ஒரு சிவப்புப் பட்டையுடனும், அரைக்கச்சையில் ஒரு பயனெட்டுடனும் காட்சியளித்த அந்த சார்ஜெண்ட் தெருவில் மேலும் கீழும் நடந்துகொண்

டிருந்தார். அவர் அவளுக்கு அகிமோவின் குடிலைக் காட்டினார். அனிஷ்கா அதனுள் சென்றாள்.

நரைத்த தலையுடன் காட்சியளித்த ஒரு வயோதிகர் அந்த வீட்டின் அருகில் ஒரு மேட்டின்மீது உட்கார்ந்து கொண்டு புகை பிடித்துக்கொண்டிருந்தார். ஒரு வெண்மை நிறமான பூனை அவர் அருகில் படுத்துக் கிடந்தது.

அந்த வயோதிகருக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, "கேப்டன் உள்ளே இருக்கிறாரா?" என்று அனிஷ்கா கேட்டாள். "தாடியுடன் கூடிய ஒரு உயரமான மனிதர்" என்று அவருடைய அடையாளத்தையும் அனிஷ்கா கூறினாள்.

அந்த வயோதிகர் அரை-புன்முறுவலுடன், 'அவர் உயரமாக இருப்பார், என்பது சரியே. ஆனால் அவருடைய தாடியைப் பொறுத்தமட்டிலும் எனக்குத் தெரியாது. நான் தாடி எதையும் பார்க்கவில்லை. அவருக்கு தாடியே இருந்திருக்காது என்று நான் கூறவில்லை. அவர் அதை சிறைத்துக்கொண்டிருந்திருக்கலாம்," என்று கூறினார். அனிஷ்கா அப்படியே அவர் அருகில் அமர்ந்துவிட்டாள்.

"மிகவும் இளம் பிராயமுள்ள பெண்ணாக இருக்கும் நீ நம்முடைய வீரஞ்செறிந்த ராணுவத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை நான் கேட்கலாமா?" என்று அந்தப் பெரியவர் கேட்டார்.

தான் ஒரு மொழிபெயர்ப்பாளர் என்று அனிஷ்கா கூறியதும், அவளைப்பற்றி இன்னும் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவலையும், உற்சாகத்தையும் அவரிடம் தூண்டியது. ஜெர்மானியர்களைப்பற்றி பலவிதமான கேள்விகளையும் கேட்க ஆரம்பித்தார். தங்களுடைய ராணுவம் எப்பொழுது தோற்கடிக்கப்படும் என்று அவர்கள் நினைக்கிறார்கள், என்று அவர் கேட்டார். ஜெர்மானியர்களுடைய சொந்த அபிப்பிராயம் என்ன, என்பதைப்பற்றித் தெரிந்து கொள்ள அவர் அக்கறை காட்டியது விந்தையாக இருந்தது.

ப்ளாடுன், ப்ளாடுனாக பாடிக்கொண்டே வீரர்கள் கிராமத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தனர். நீண்டநேரம் கழித்து, தூரத்தில் அகிமோவின் குரலை அனிஷ்கா கேட்டாள். தான் அவர்மீது காதல் கொண்டிருக்கிறாள்

என்ற எண்ணம் அவளிடம் துடிதுடிப்பை ஏற்படுத்தியது. அகிமோவ் நெருங்கி வரவும், அவருடைய உயரமான உருவத்தை அனிஷ்கா கவனித்தாள். அவரைச் சுற்றிலும் இதர அதிகாரிகள் கும்பலாக வந்துகொண்டிருந்தனர். அகிமோவ் பலத்த குரலில் பேசிக்கொண்டே, தான் வலியுறுத்த விரும்புகின்றவற்றை, வலது கரத்தால் உறுதியான சைகைகளைக் காட்டியவண்ணம் பேசிக்கொண்டு வந்தார்.

அனிஷ்கா அவருடைய கண்ணில் பட்டதும், தன்னுடைய கன்னங்களின் நிறம் மாறுபாடடைவதாக அகிமோவ் உணர்ந்தார். ஒரு கணம் அப்படியே நின்றார். தாடியில்லாத நிலையில் தன்னைப்பற்றி அவள் என்ன அபிப்பிராயம் கொள்வாள் என்ற எண்ணம்தான் அவரிடத்தில் முதல் முதலாகத் தோன்றியது என்பது அசட்டுத்தனமாக இல்லையா?

ஆனால் அவருடைய தோற்றத்தின் மாறுதலை அனிஷ்கா கவனிக்கவும்கூட இல்லை. அவள் அவசர அவசரமாக இதர அதிகாரிகளுக்கு வணக்கம் கூறிவிட்டு, அகிமோவின் பக்கம் திரும்பி, "நீங்கள் எங்களை விட்டுப் போவதாகக் கேள்விப் பட்டேன். அதற்காக நான் உண்மையிலேயே மிகவும் வருத்தப்படுகிறேன்," என்றாள்.

"நீ வருத்தப்படுகிறாயா?" என்று அகிமோவ், இக்கட்டான நிலைமையை அடைந்தவராய்க் கேட்டார்.

இதர அதிகாரிகள் நாணமடைந்தவர்களாய் அப்பால் சென்றனர்.

"நீங்கள் எப்பொழுது போகிறீர்கள்?" அனிஷ்கா கேட்டாள்.

"இன்னும் சில தினங்களில் எனக்குப் பதிலாக வேறு அதிகாரி வரும் வரையில் இருப்பேன்."

"ஓ, அப்படியா!"

"நான் புறப்பட்டு வந்து உன்னைப் பார்க்கவேண்டுமென்று விரும்பினேன். ஆனால் நான் என் மனதைத் திடப்படுத்திக்கொள்ள முடியவில்லை" என்று கூறும்போது அகிமோவின் குரல் கம்மியது. "இதற்குப் பிரதானமான காரணம் என்னவெனில், நான் வந்து உன்னைப் பார்த்தால்,

எத்தகைய நன்மையும் ஏற்படாதென்றும், ஒருக்கால் பாதகமான விளைவே ஏற்படலாமென்றும் நான் நினைத்தேன். நீ என்னவேண்டுமானுலும் நினைத்துக்கொள்ளலாம். ஆனுல் நான் உண்மை முழுவதையும் உன்னிடத்தில் கூறப்போகிறேன். நீ இல்லாமல் என்னுல் உயிர்வாழ முடியாது. என்னுல் முடியவே முடியாது.'' இவ்வாறு கூறியதால் அவள் கோபித்துக்கொள்ளலாம் என்று அச்சமடைந்த அகிமோவ்—ஏனெனில் இவ்வாறு யாராவது கூறினுல் அவள் மகா கோபக்காரியாக மாறிவிடுவாள் என்ற அபிப்ராயம் நிலவி வந்தது—தான்கூறியவற்றை சிறிது மட்டுப்படுத்த முயன்ருர். "ஒருக்கால் நான் அவ்வாறு கூறியிருக்கக்கூடாது. நான் சொல்வதை நம்பு, இந்த நிலைமைக்கு வரக்கூடாது என்பதற்காக என்னுல் முடிந்ததெல்லாம் நான் செய்தேன். நான் போகவேண்டியிருப்பதினுல்தான் இவ்வாறு செய்ய வேண்டியது மேலும் அவசியமாயிற்று. நான் உண்மையிலேயே கடலையும், கடற்படையையும் நேசிக்கிறேன். ஆனுல் அது வேறு விஷயம். நான் போய்த்தான் ஆகவேண்டும். நியாய பூர்வமாக நான் உனக்குச் சொல்லவேண்டியது அவ்வளவுதான். ஆனுல் இவ்வாறு ஏற்பட்டிராமலிருந்தால் நன்ருயிருக்கும்தான். அதற்குரிய நேரம் இதுவல்ல. கோபித்துக்கொள்ளாதே. உன்னை சந்திக்க நேர்ந்ததற்காக நான் வருந்துகிறேன். சமாதான காலமாயிருந்தால் நன்ருக இருந்திருக்கும்."

விநோதமான இந்தக் காதல் பிரகடனத்தை அவள் தன்னுல் வர்ணிக்க முடியாத ஒரு உணர்ச்சியுடன் காது கொடுத்துக்கேட்டாள். அவருடைய கபடமற்ற நேர்மையான உளப்பாங்கு பெருந்தன்மையையும் கொண்டிருப்பதாக அவர் நினைத்தாள்.

"தயவுசெய்து கொஞ்சம் தேநீர் பருகுங்களேன்", என்று அந்த வயதான பெரியவர் கூறினுர். அவரைப்பற்றி அவர்கள் முற்றிலும் மறந்து விட்டார்கள்.

அவர்கள் குடிலுக்குள் சென்றனர். மேஜையின்மீது இரும்பு அடுப்பில் தேநீர் தயாரிக்கும் பாத்திரத்தில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருந்தது. வீட்டுக்குள்ளிருந்த

பெரியம்மா அனிஷ்காவை வரவேற்ருள். எல்லோரும் தேநீர் பருக அமர்ந்தனர். அகிமோவின் வார்த்தைகள் எவ்வளவு விநோதமாக இருந்தன என்று அனிஷ்கா இன்னும் சிந்தித்துக் கொண்டிருந்தாள். அவள் அவரை காதலிக்கிருளா என்று கேட்காமலுங்கூட, அவர் தன்னைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார். அவளிடம் அந்தக் கேள்வியைக் கேட்பதற்கு அவர் பயப்படுவதாகத் தோன்றியது. ஆனல் தன்னை அவள் நிராகரித்து விடுவாளோ என்று அவர் அச்சங் கொள்ளவில்லை. ஆனல், அவரைக் காதலிப்பதாக அவள் சொல்லிவிடுவாளோ என்றுதான் அச்சப்பட்டார். அவருடைய அச்சத்திற்கான காரணத்தைப் புரிந்துக்கொண்ட, அவள் அதற்காக அவர்பால் நன்றியுணர்ச்சி காட்டினுள்; அவருடைய மனேபலத்தையும், சிறந்த குணுதிசயத்தையும் அவள் வியந்தாள்.

மீண்டும் சாயந்திரம் வருவதாக வாக்களித்துவிட்டு, அவள் சீக்கிரமாகவே கிளம்பினுள். பின்னர் அவர்கள் இருவரும் சாயந்திரம் உலாவிவிட்டு வரக் கிளம்பினுர்கள். வயல்கள் வழியாகவும், எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும் கிராமங்கள் வழியாகவும் நடந்தனர். அனேகமாகப் பொழுது விடியும் வரையிலும் நடந்தனர். அடுத்த நாளும் அவ்வாறே செய்தனர், ஒவ்வொரு நாளும் அவ்வாறே செய்தனர். ஒருவரை ஒருவர் விட்டுப்பிரிவது அவர்களுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. அவர்கள் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்து போவதற்கான காலம் மிகவும் சமீபத்துவிட்டது. எனவே, புதிதாகக் காதல் பிறக்கும்போது ஏற்படும் அடக்கவுணர்ச்சி, சங்கடமான நிலைமைபோன்ற எதுவும் அவர்களிடம் ஏற்படவில்லை. வாழ்க்கை பூராவும் ஒன்ருக இருந்த தம்பதிகளைப்போல் அவர்கள் பேசிக் கொண்டனர். உறவினர்களின் குணவிகாரங்களைப் பற்றிப் பேசி அவர்கள் இருவரும் ஒன்ருகச் சிரித்தனர். அவர்களில் ஒருவருக்கு மட்டுமே தெரிந்தவர்கள் இறந்து போனதைப்பற்றி மன வருத்தம் தெரிவித்தனர். கொவ்ரோவ் நகரின் சுற்றப்புறப் பகுதியாகிய ஜாரெக்னயா ஸ்லோபோட்ரே கிராமத்திலுள்ள அந்தச் சிறிய வீடும், அதில் வசிப்பவர்களும் அனிஷ்கா

வுக்கு மிகவும் பழக்கமானவர்களாகி விட்டனர். மாஸ்கோவில் நிகோேலோ பெஸ்கோவ்ஸ்கி தெருவில் உள்ள பேராசிரியரின் விசாலமான வீடு அகிமோவுக்கு எப்படி மிகவும் பழக்கமானதாகிவிட்டதோ, அதுபோல்.

ஒரு நாள் அவர்கள் வெளியில் உலாவி கொண்டிருக்கும்போது, அவள் திடீரென்று நின்று ''நீங்கள் இதுவரையிலும் எனக்கு முத்தம் கொடுக்கவேயில்லையே? முதலில் நான் உங்களுக்கு முத்தம் கொடுக்க வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள், அல்லவா?'' என்று கேட்டாள்.

''எனக்கு அச்சமாக இருக்கிறது'', என்ற வார்த்தைகளை அவரது வாய் முணு முணுத்தது. பின்னர் தன்னுடைய முகத்தை அவளது முதத்திற்கு அருகாமையில் கொண்டு வந்து (அவளுடைய முகம் என்று மில்லாதவாறு கள்ளங் கபடற்றுக் காணப்பட்டது.) அவளை முத்தமிட்டார்.

அவளுடைய முகத்திலிருந்து செந்நிறம் வடிந்தது. ''நீங்கள் அப்படி ஒன்றும் பயப்பட்டவராகத் தெரியவில்லையே'', என்றாள் அனிஷ்கா.

சோல்ஜர்கள், விவசாயிகள், குழந்தைகள் ஆகியோர் எங்கு பார்த்தாலும் காணப்பட்ட போதிலும்கூட, அந்த வாரம் முழுவதும் மிகவும் தனிமையில் இருப்பதைப்போன்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டது.

ஏழாவதுநாள் விடியற்காலையில், தாக்குதல் பயிற்சிக்குப் பொறுப்பு எடுத்துக்கொள்வதற்கு அகிமோவ் புறப்படுவதற்கு முன்னால், கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. ஒரு ட்ரங் பெட்டியைக் கையிலேந்திய வண்ணம் கேப்டன் ஒருவர் உள்ளே வந்தார். அகிமோவின் நெஞ்சு பட படத்தது. பட்டாலியனின் தளபதியாக அவருக்குப் பதிலாக வந்திருக்கும் புதிய அதிகாரியே அவர். செர்னிச் என்பது அவருடைய பெயர்.

அகிமோவ் பயிற்சி கொடுப்பதற்குப் போகவில்லை. புதிதாக வந்திருப்பவரைத் தனக்குக் கீழுள்ள அதிகாரிகளுக்கும் படை வீரர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தார். பட்டாலியன் தங்கியுள்ள பகுதியை அவருக்குச் சுற்றிக் காண்பித்தார். அந்த யூனிட்டை அவரிடம் ஒப்புவித்தார். செர்னிக்

அமைதியான, எல்லாவற்றையும் கூர்ந்து கவனிக்கக்கூடிய, அதிகம் பேசாத சுபாவமுடையவராக இருந்தார். அழகான கம்பிபோன்ற அவரது தலைமுடி சதா அவரது நெற்றியின் மீது விழுந்து கொண்டிருந்தது. அலெக்ஸாண்டர் நெவ்ஸ்கி யின் பேரால் அளிக்கப்பட்ட விருது (மெடல்) ஒன்றை அவர் அணிந்திருந்தார். அகிமோவ் அவரை நேசித்தார். படை வீரர்களும் அவரை நேசிப்பதை அகிமோவ் எத்தகைய பொறுமையுமின்றி கவனித்தார்.

''நல்ல வாய்ப்பு'', ''இப்பொழுது நான் போகலாம்'', என்று அகிமோவ் நினைத்தார்.

ரெஜிமெண்டின் தலைமை அலுவலகத்திற்குச் சென்றார். அகிமோவை மேஜராகப் பதவி உயர்த்தும் உத்தரவு அப்பொழுதுதான் வந்திருந்தது. அதை முன்னிட்டு கோலோவின் அவருக்கு வாழ்த்துக் கூறினார்.

''பொறுப்பை ஒப்படைத்து விட்டீர்களா'' கொலோவின் கேட்டார்.

''ஆம்''

''சிறிது நேரம் உட்காருங்கள்''

இருவரும் அமைதியாக உட்கார்ந்தனர்.

''செர்னிக்கைப் பற்றி உங்கள் அபிப்ராயம் என்ன?''

கமாண்டர் கேட்டார்.

''மிகவும் நல்ல அபிப்பிராயம்; அவர் ஓர் சிறந்த அதிகாரி.''

''சைபீரியாவைச் சேர்ந்தவர்.''

''ஆம், எனக்குத் தெயும்.''

அகிமோவ் சிறிது நேரம் அமைதியாக இருந்தார். பின்னர் அலுப்புடன் கூடிய புன்முறுவலுடன்: ''தங்களுடைய தளபதி ஓர் மாலுமி என்று படை வீரர்கள் பெருமைப் பட்டுக்கொள்வது வழக்கம். இப்பொழுது, தங்களுடைய தளபதி ஓர் சைபீரியக்காரர் என்று அவர்கள் பெருமையடித்துக் கொள்வார்கள்.''

''ஆம்'', கொலோவின் சிரித்தார். அவர்கள் பெருமைப் பட்டுக்கொள்வார்கள் என்று துணிவுடன் கூறுகிறேன்;

அதாவது, அவர் ஓர் சிறந்த தளபதியாக நடைமுறையில் நிரூபித்துக்கொண்டால்.''

''அவர் நிரூபித்துக்கொள்வார்'', அகிமோவ் கூறினர், ''என்னுடைய மதிப்பீட்டை நம்புங்கள்.''

''நீங்கள் போக விரும்பவில்லை என்று கூறப்படுகிறது; நான் கேள்விப் பட்டேன், நீங்களும் பெலோஜ்யொரோவாவும்.........என்னை மன்னியுங்கள்.........பேச்சு அடிபடுகிறது......''

''ஓ, அதெல்லாம் சரி தன்னுடைய யூனிட்டால் நடப்பதெல்லாம் ரெஜிமெண்டின் கமாண்டருக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதில் ஏதும் தவறு இருப்பதாக நான் நினைக்கவில்லை. ஆம். எனக்குப் போக விருப்பமில்லை என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். நான் உண்மையாகவே அவள் மீது காதல் கொண்டுள்ளேன்.

''அவள் ஓர் மிகவும் நல்ல பெண்.''

''ஆம், அவள் மிகவும் நல்ல பெண் தான்.''

''அழகானவளும்கூட.''

''ஆம்.''

''அவள் இதைக்காட்டிலும் அழகாக இருப்பாள். அவளுக்கு அழகான நீண்டகூந்தல் இருந்தது. ஆனல் நம்முடைய ரெஜிமெண்டுக்கு வந்தவுடனே அவள் அதை வெட்டிக் குறைத்துக் கொண்டாள். போர்முனையில் பணியாற்றும் போது நீளமான கூந்தல் சங்கடமானது. வேலைக்கு இடையூருக இருக்கும். அவள் அதை வெட்டிக் கொண்டாள் என்பதைக் கேட்டபோது நான் திடுக்கிட்டேன். அவளுடைய அழகான பின்னல் மடிப்புகள் போய் விட்டனவே என்று நான் மிகவும் வருத்தமடைந்தேன். ஆனல் தன் கீழ் வேலை செய்யும் ஊழியரின் தலை முடியைப்பற்றி நினைத்துக் கொண்டிருக்க முடியுமா, கமாண்டருக்கு வேறு எத்தனையோ வேலைகளிருக்கின்றன. சரி, நீங்கள் எப்பொது போகிறீர்கள்.?''

''நாளைக்குப் போகலாம், என்று நினைக்கிறேன்.''

''அப்படியா! இன்னும் சில தினங்களுக்கு இருந்துவிட்டுப் போங்கள். கடற்படை புறப்பட்டுப் போய்விடாது.

கடலும் வற்றிவிடாது. நீங்கள் வருவதற்கு ஏன் கால தாமதமாய் விட்டது என்பதற்கு நாங்கள் ஒரு அத்தாட்சிப் பத்திரம் தருகிறோம்.''

''பிரயாணத்தை ஒத்திப் போடுவது மனக் கஷ்டத்தைக் குறைத்துவிடாது.''

''இல்லை, அவ்வாறு அது குறைக்கும் என்று நானும் கூற வில்லை.''

சிறிது நேரம் கழித்து கொலோவின், பொறுமை கலந்த ஆச்சரியத்தை வெளிப்படுத்தும் முகபாவத்துடன், ''ஆனால், யாராலும் அவளைப் பணிய வைக்க முடியாது என்று நான் நினைத்திருந்தேன். ஆனால், நீங்கள் அவளைச் சரியாக சமாளித்து வென்றுவிட்டீர்கள்.''

''நான் ஒன்றும் செய்யவில்லை. அது எவ்வாறு ஏற்பட்ட தென்று எனக்கே தெரியாது.''

பின்னர் அவர்கள் கைகுலுக்கி விடை பெற்றார்கள். அகிமோவ் அனிஷ்காவைக் காண்பதற்குக் கிளம்பினார்.

முதல் உறைபனி பெய்ய ஆரம்பித்தது. எல்லாமே மெல்லிய நுரை போன்றவற்றால் மூடப்பட்டிருந்தது. அதில் உறைபனியின் ஒவ்வொரு துகளையும் சுலபமாகத் தனித்தனி யாகப் பார்க்கலாம். உறைபனி பெரிய அளவில் நீள-நீள மாகவும் படிந்திருந்தது. பருவ காலத்தின் மாறுதலை அது குறித்தது. தான் இனி ஒருபோதும் சோல்ஜராக இல்லை என்ற எண்ணம் இன்னும் அவரது மனதில் படியவில்லை. படை வீரர்களுக்குப் பனியில் சறுக்குவதற்குப் பயிற்சி கொடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டதென்றும், அவர் களுக்குப் பனிக்கால உள்ளாடைகளும், உரோமத்தால் ஆன பூட்ஸுகளும் வாங்கிக் கொடுக்க வேண்டுமென்றும் அகி மோவ் நினைத்தார்.

ரெஜிமெண்டின் வேவு பார்க்கும் குழுவினர் தங்கி யிருந்த வீட்டின் முற்றத்தில் அனிஷ்காவை அகிமோவ் கண்டுபிடித்தார். புதிய படை வீரர்கள் வந்திருந்தனர். அவர்களிடம் கேப்டன் ட்ரோஸ்ட் பேசிக்கொண்டிருந்தார். யுத்தகால வாழ்க்கை சம்பந்தமான அனுபவங்களை அவர் களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார். உளவு பார்ப்

பவர்கள் எவ்வாறு வீரம் நிறைந்தவர்களாகவும், நுண்மதி படைத்தவர்களாகவும், திறமைசாலிகளாகவும், அரசியல் விழிப்புணர்ச்சி உடையவர்களாகவும் இருக்க வேண்டுமென் பதைப் பற்றி அவர் விளக்கிக்கொண் டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் அனிஷ்கா நின்றுகொண் டிருந்தாள்.

அகிமோவை அவள் பார்த்ததும், ஏதாவது நடந்திருக்க வேண்டுமென்று ஊகித்தவளாய், அவரைச் சந்திக்க முன் சென்றாள். திடீரென்று, ட்ரோஸ்ட், தான் சொல்லிக் கொண்டிருந்ததை நிறுத்தினார். "இன்று இவ்வளவு போதும்," என்று கூறினார். ஆட்களைப் போகச் சொல்லி விட்டு, அவர் தன் குடிலுக்குள் நுழைந்தார்.

உளவு அதிகாரியினுடைய கன்னங்கள் வெளுத்தும் குழி விழுந்தும் கிடப்பதை அகிமோவ் கவனித்தார். அனிஷ்கா தன்னை நோக்கி விரைவதைப் பார்த்ததும், அவர் உள்ளத் தில், ட்ரோஸ்ட் அங்கே தங்கியிருந்துகொண்டு அனிஷ்காவை தினந்தோறும் பார்க்க முடியும் என்ற பொறாமையின் வேதனை திடீரென்று ஏற்பட்டது. அகிமோவ் கலங்கிய முகத்துடன் இருப்பதைப் பார்த்ததும், உடனே அனிஷ்கா விஷயத்தைப் புரிந்துகொண்டாள்.

"அவர் வந்துவிட்டாரா?"—அவள் கேட்டாள்.

"ஆம்."

"அப்படியா, ரொம்ப சரி," என்று அவருடைய கையைப் பிடித்தவண்ணம் கூறினாள். "நாம் உற்சாகமாக இருப் போம். கவலைப்படக்கூடாது. ஆறு மாதங்கள், அல்லது ஒரு ஆண்டுதான் நமக்கு எம்மாத்திரம்? என் அன்புக் குரியவரே, நான் உங்களை மிகவும் நேசிக்கிறேன்." தன் னுடைய காதலைப் பற்றி இப்பொழுதுதான் அவள் முதல் முதலாக பகிரங்கமாக வெளியிட்டாள். "நான் இவ்வளவு சொன்னது உங்களுக்குப் போதுமா?"

இல்லை; இது போதுமானதாக இல்லை. தன்னுடனேயே அவளையும் அழைத்துச் செல்லவேண்டும் என்பதுதான் அவர் விரும்புவது. ஒரு தீப்பெட்டிக்குள் அவளை வைத்து மறைப் பதற்கு அவரால் முடியுமேயானால், அவர் திருப்தியடைந் திருப்பார்.

அவர்கள் வயல்கள் வழியாக அவருடைய கிராமத்திற்குச் சென்றனர். அவர் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்றனர்.

அவர்கள் தாங்கள் போட்டுக்கொண்டிருந்த பெரிய கோட்டுகளைக் கழற்றி வைத்துவிட்டு ஸ்டவ் அருகில் உட்கார்ந்தனர். அவருடைய சாமான்களையெல்லாம் அவருடைய பெட்டியில் அடுக்கி வைத்தாள். மீண்டும் இருவரும் ஸ்டவ் அருகில் மௌனமாக உட்கார்ந்தனர். இருவரும் ஒருவரையொருவர் பார்த்தவண்ணமே இருந்தனர். இருவரும் சேர்ந்து சாப்பிட்ட பின்னர் உலாவி வருவதற்காக வெளியே கிளம்பினர். மீண்டும் திரும்பி வந்தனர். பின்னர் அவள் வெளியே கிளம்பினாள். அவள் திரும்பி வந்தபொழுது, அகிமோவ் மேஜையின் பக்கத்தில் தலையைக் கீழே தொங்கப்போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ரெமிஸோவ் கொல்லப்பட்ட போது எப்படி உட்கார்ந்திருந்தாரோ, அதே போல் இப்போது உட்கார்ந்திருந்தார்.

அவருடைய சிந்தனையைக் கலைக்காமலேயே அவள் அவருடைய படுக்கையை விரித்து சரி செய்தாள். படுக்கை விரிப்புகள் எடுத்துப் போடும்போது ஏற்பட்ட சலசலப்பு அவர் காதில் விழுந்தது. ஏற்கெனவே இருளடைந்துகொண்டிருந்ததால் அவர் விளக்கை ஏற்றுவதற்கு விரும்பினார். ஆனால் விளக்கை ஏற்றுவதற்கு அவள் விடவில்லை.

"நீங்கள் படுக்கைக்குச் செல்லலாம். நான் உங்களுடன் இருக்கிறேன். நான் போவதற்கு விரும்பவில்லை," என்று அவள் கூறினாள்.

அவர் திடுக்கிட்டது போல் தோன்றியது.

"நீ இங்கு தங்கக்கூடாது," என்றார். பின்னர் அவளிடத்தில் கேட்டுக்கொள்ளும் ரீதியில், "உண்மையாகவே, நீ இங்கு தங்கக்கூடாது. நீ அப்படி நினைக்கவில்லையா?" என்று கேட்டார்.

அந்த இருளில் அவளது குரல் மிகவும் தாழ்ந்து கேட்டது.

"நான் எதைக் கண்டும் பயப்படவில்லை. நாம் இருவரும் என்றுமே ஒருவருக்கொருவர் சொந்தமானவர்கள். நான் சொல்வது உங்களுக்குக் கேட்கிறதா ?"

ஒரு சில நாட்களுக்கு முன்னர் இத்தகைய வார்த்தைகள் கூறப்பட்டிருக்குமேயானால், அது கேலிக்கூத்தாகவும், அனிஷ்காவுக்குக் கூட அது அர்த்தமற்ற, புளித்துப்போன வார்த்தைகளாகவும் இருந்திருக்கும். ஆனால் இன்று அவள், அந்த வார்த்தைகளைத் தானே முதன்முதலாகக் கண்டுபிடித்தது போலவும், இதற்கு முன்னால் உலகத்தில் யாரும் அவ் வார்த்தைகளை என்றுமே உபயோகப்படுத்தாதது போலவும் அவ்வளவு உணர்ச்சியுடன் கூறினாள்.

அவளுடைய தோள் மீது தன் கைகளைப் போட்டார். ஆனால் இதற்கு அவள் மனப்பூர்வமாக உடன்பட்டது கண்டு அவருடைய இருதயத் துடிப்பே நின்றுவிட்டது. அவள் பொல-பொலவென்று கண்ணீர் உகுக்க ஆரம்பித்து வேதனை மிக்கவளாய்த் தேம்பித்தேம்பி அழலானாள். தன் உள்ளக் கிடக்கையை எவ்வாறு வெளிப்படுத்துவது என்று தெரியாமல், "நான் இதற்கு முன்பு இவ்வாறு செய்ததில்லை", என்றாள். அவள் விஷயத்தில் தான் முன்பு வெறுக்கத்தக்க முறையில் அவநம்பிக்கை கொண்டது குறித்து அவர் தன்னைத்தானே நொந்துகொண்டார். தன் மீது செலுத்தப் பட்ட மென்மையான அன்பைக் கண்டு தான் அப்படியே உருகிப் போனதாக அவருக்கு ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அந்த அன்பு அவரை அப்படியே ஆட்கொண்டு விடுவதாக இருந்தது. இது போன்ற அன்புணர்ச்சியை அவர் எப் பொழுதும் அனுபவித்தது கிடையாது. ஆயினும் அந்த உணர்ச்சி வெள்ளத்திலும் கூட அவள் வேதனையைத்தான் அனுபவித்தாள்; ஒருக்கால் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டதின் இனிமையை அனுபவித்தாள் என்பதை அவர் புரிந்துகொண்டார்; உணர்ந்தார்.

எல்லையற்ற வியப்புடனும், பெருமையுடனும், சிந்தனையுடனும் அவர் அவளையே நோக்கினார். "நான் கனவு கண்ட அந்தப் பெண்தான் அனிஷ்கா. அல்லது நான் இன்னும் கனவு கண்டு கொண்டிருக்கிறேனா ?"

அவள் இன்னும் அவருக்கு நெருக்கமாக வந்தாள். அவருக்குப் பக்கத்திலேயே இருப்பதைத் தவிர இன்பகர மானது வேறொன்றும் இருக்கமுடியாது என்று அவள் நினைத்தாள். எதை மிகவும் முக்கியமானது என்று மக்கள் நினைத்தார்களோ, உண்மையில் அது எந்த வகையிலும் அவ்வளவு முக்கியமானதல்ல. ஆனால் அதுதான் மிகவும் கஷ்ட மானதாகவும் அறிந்துகொள்ள முடியாததாகவும் இருக்கும்.

அந்த இரவுக்குப் பின்னால் முழு ஐந்து நாட்களுக்கு அவர்கள் ஒன்றாக இருந்தார்கள். அவர் போகவேண்டிய தாயிற்று. ஆனால் அவளிடமிருந்து பிரிந்து செல்வதற்கு அவரால் முடியவே இல்லை. ஹீய்ன் என்பவரால் சொல்லப் பட்ட பழைய ஜெர்மன் புராணக் கதையில் வரும் வீரன் டான்ஹௌஸர் எவ்வாறு வீனஸிடமிருந்து பிரிந்து போக முடியவில்லையோ அது போல். இலக்கியத்திலிருந்து இந்த ஒப்புவமை காட்டப்பட்டது அனிஷ்காவைப் பெரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. ஏனெனில் அவர்களின் காதலும் அன்புணர்ச்சியும், இதர எல்லாமும் ஒரு மாந்திரீக மலையின் மீதல்லாது சிறிய மரப்பலகைகளாலான ஒரு குடிலுக்குள் ஏற்பட்டபோதிலும், அவை டான்ஹௌஸர்-வீனஸ் இடையில் ஏற்பட்டிருந்த காதலுக்கும் அன்புணர்ச் சிக்கும் எள்ளளவும் குறைந்ததல்ல.

ஆறாவது நாளன்று வெகு சீக்கிரத்திலேயே அகிமோவ் படுக்கையைவிட்டு எழுந்தார். இன்னும் தாங்கிக்கொண் டிருந்த அனிஷ்காவின் முகத்தைப் பார்த்தார். பின்னர் வெளியே சென்றவர் சீக்கிரத்தில் ஒரு காருடன் திரும்பி வந் தார். அனிஷ்கா மௌனமாக உடையணிந்துகொண்டாள். அவர்கள் மோபொரோடாவை அழைத்துக்கொண்டு ரயில் நிலையத்திற்குச் சென்றனர். அங்கு காரை நிறுத்தினர். பின்னர் ஒரு க்ஷணம் அகிமோவ் சிந்தித்தார். தங்களை நகரத் திற்குக் கொண்டு போகும்படி கார் டிரைவரிடம் கூறினார். நகரில் பதிவாளர் அலுவலகம் எங்கிருக்கிறது என்று விசா ரித்தனர்.

''நாம் உள்ளே போகலாமா?'' அகிமோவ் கேட்டார். தன்னுடைய இந்த யோசனை அவருக்கு மிகவும் மகிழ்ச்சியைத்

தந்தது. ''நாம் உண்மையிலேயே உள்ளே போக வேண்டிய அவசியமிருக்கிறதா?'' என்று அனிஷ்கா கேட்டது அகி மோர்வை வியப்பில் ஆழ்த்தியது.

ஒரு கணம் அவள் அங்கிருந்த சிறிய பெயர்ப் பலகையைப் பார்த்து மௌனமாக நின்ருள். பின்னர் அவள் கூறிஞள்: ''எவ்வளவு உணர்ச்சியற்ற அரசாங்கப் பெயர்? சிவில் நடவடிக்கைகள் பதிவு அலுவலகம்...''

அவர்கள் உள்ளே சென்ற அறை சிறியதாக இருந்தது. ஆயினும் விழாக்கோலம் பூண்டிருந்தது. ஒரு அம்மையார் அங்கு உட்கார்ந்திருந்தாள். அவள் ஒரு இள மங்கையல்ல. மூக்குக் கண்ணுடி அணிந்திருந்தாள். ராணுவத்தினர் அங்கு திருமணப் பதிவு செய்துகொள்ளலாமா, என்று அனிஷ்கா கேட்டாள். ''அவர்கள் விரும்பினுல் பதிவு செய்து கொள்ளலாம்'' என்று அவள் கூறிஞள். அவள் பதிலில் ஓரளவு பொருமை இல்லாமலில்லே.

சம்பிரதாய சடங்குகள் எல்லாம் முடிந்தபின், அவள் நிமிர்ந்து பார்த்தாள். அவள் கண்கள் சிவப்பாக இருந்தன. ஒருக்கால் கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்திருக்கலாம். தம்பதிகளுக்கு ஆசி கூறிஞள். அவர்கள் நீண்ட காலம் மகிழ்ச்சியுடன் மண வாழ்க்கை நடத்த வேண்டுமென்று வாழ்த்திஞள். பின்னர் அவர்கள் அந்த அமைதியான அறையை விட்டு வெளியே வந்தனர். அந்த அறையிலே அந்த யுத்த காலத்தில் திருமணங்களே விட மரணங்களே பதிவாகி வந்தன. அவர்கள் பயபக்தியுடன் கூடிய மனேபக்குவத்தில் ரயில் நிலேயத்திற்குச் சென்றனர். ஒரு மணி நேரத்திற்குப் பின் அகிமோவ் புறப்பட்டார்.

அத்தியாயம் ஐந்து

கடல்

1

அகிமோவ் தலைநகரில் வந்திறங்கியதும், ரயில் நிலையத்திலிருந்து நேராக கடற்படை அலுவலகத்திற்குச் சென்றார். அது, சோவியத் கடற்படையின் உறுப்பினர்கள் வேலையில் சேருமுன் ஆஜராகும் பெரிய கட்டிடம்.

அந்தக் கட்டிடம் மாஸ்கோவின் நடு மையத்தில் இருந்தது. அதைச் சுற்றிலும் தெருக்கள், சதுக்கங்கள், அதற்குப் பின்னல், வயல்கள், காடுகள், எண்ணற்ற இதர நகரங்கள், கிராமங்கள் ஆகியவை இருந்தன. அப்படியிருந்தபோதிலும் கூட, அகிமோவ், அக்கட்டிடத்தின் வாயிற் படியைத் தாண்டினரோ இல்லையோ, உடனேயே அவருக்குத் தான் ஏற்கனவே கடலில் இருப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. உண்மையில், அது மாஸ்கோ பூமியுடன் பலமாக நங்கூரத்தினல் இணைக்கப்பட்ட ஒரு பெரிய கப்பலாகும். கப்பலின் தளத்தில் வாழ்க்கை எப்படியிருக்குமோ, அதேபோல் தான் அந்தக் கட்டிடத்தில் இருந்தது. நாள் பூராவும் குழாய் ஊதும் சப்தமும். கடற்படை உத்தரவுகளும் கேட்க முடியும். அங்கிருந்த கடியாரங்களும் கடற்படை கடியாரங்களாகவே இருந்தன. அதன் 'டயலில்' 24 மணிகள் குறிக்கப்பட்டிருந்தன.

கடற் பழக்கமும், கடற்படைப் பழக்கமும் விட்டு நீண்ட காலமாய்விட்ட போதிலும், அந்தக் கட்டிடத்திலிருந்த வர்கள், எல்லோருக்கும் பொதுவான தரையை 'டெக்' என்ற பெயராலும், வளைவான இரும்புத் தண்டவாளங்களுடன் கூடிய கருங்கல்லால் ஆன மாடிப்படிகளை ஒரு ஹாட்ச் (hatch) என்றும், சாப்பிடும் அறையை 'மெஸ்கேபின்' என்றும், மாஸ்கோ தெருக்களை நோக்கிய வண்ணமிருந்த ஜன்னல்களை, கப்பலிலுள்ள துவாரங்கள் (porthals) என்றும் அழைத்தது அசாதாரணமாக மனதைத் தொடுவது போலிருந்தாலும் கேலிக்கூத்தாகவே பட்டது.

வெளிநாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு, வீடு திரும்பிய ஒரு மனிதனைப் போல், அகிமோவுக்கு எல்லாம் ஆச்சரியத்தை உண்டுபண்ணும்படியாகவே இருந்தது. "'கயிறு' ('rope') என்ற வார்த்தையை உச்சரிப்பதினின்றும் கடவுள் என்னைக் காப்பாற்றுவாராக," என்று அவர் நினைத் தார். "நான் அர்த்தப்படுத்துவது ஒரு கோடுதான் என் பதை அவர்கள் என்றும் உணரமாட்டார்கள்."

தன்னுடைய "பச்சை"களை—ராணுவ உடையை அவர் கள் எல்லோரும் அப்படித்தான் அழைத்தார்கள்—துணிக் கிடங்கில் உள்ள சிறிய அதிகாரியிடம் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக முழு கடற்படை யூனிபாரத்தை, ஒரு கருப் புத் தொப்பியும், ஒரு நண்டும் (கடற்படைத் தொப்பியின் பேட்ஜுக்கு மாலுமிகள் கொடுத்த பெயர்) உட்பட பெற் றுக்கொண்ட பின்னர்தான், கடைசியாக அகிமோவ், தான் ஒரு மாலுமி என்பதை உணர்ந்தார். கடற்படை நிலையத் தின் இதர எந்த உறுப்பினரைப் போலவே, அவர், தனக்கு வேலை நிர்ணயிக்கப்படுகின்ற வரையில் காத்திருக்கும்போது மாஸ்கோவில் தினம் உலாவச் சென்று வருவதை 'கடற்கரை விடுமுறை," என்றுகூடச் சொல்ல ஆரம்பித்தார். அந்த முடிவுற்ற 'கரை விடுமுறை"யின்போது இரவில் வெகுநேரம் வரை அவர் வெளியில் உலாவி வந்தார். எவ்விதக் குறிக் கோளுமில்லாமல், தெருத் தெருவாக நடந்து வந்தார். ஒரு நாள் நிக்கோலோ—பெஸ்கோவ்ஸ்கி தெருவிலுள்ள அனிஷ் காவின் வீட்டின் அருகில் நின்றார்.

கடைசியாக அவரை வேலையில் நியமித்த நாளும் வந்தது. ஆனால் அவருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை என்னென்பது? தன்னை ஒரே ஒரு கடற்படைக்கு—கருங்கடல் கடற்படைக்குத்தான் அனுப்புவார்களென்றும், ஒரே ஒரு கடலுக்கு—கருங்கடலுக்குத்தான் அனுப்புவார்கள் என்றும் அவர் நினைத்தார். ஆனால் அவர் வட பிராந்திய கடற்படைக்கு, ஆர்க்டிக் வட்டத்திற்கு (வட துருவத்திற்கு) அப்பாலுள்ள பேரன்ட்ஸ் கடலுக்குச் செல்லும்படி நியமிக்கப்பட்டார்.

அவர் இரயிலில் மூர்மான்ஸ்டிக்குப் புறப்பட்டார். அங்கு இறங்கி நேராக துறைமுகத்திற்குச் சென்றார்.

தென் பகுதியிலுள்ளவர்களுக்கு அங்கு எல்லாமே மாறுபட்டதாக இருந்தது. கருங்கல் பாறைகளெல்லாம் வெண்மையான உறைபனியால் மூடப்பட்டிருந்தன. கருமையான கடல் நீரின்மீது பனிப் புகை மூடிக்கொண்டிருந்தது. கரை முழுவதும் கனமர்ன வெண்ணிற பனிக்கட்டியால் மூடப்பட்டிருந்தது. அந்த துருவப் பிரதேசத்தில் இரவு நேரங்களில் மனதிற்கு சலிப்பை உண்டாக்கும் நீல நிற நிழல்கள் கடலில் படர்ந்திருந்தன. ஆயினும் மூக்கைத் துளைக்கும் உப்பு வாடை வீசும் கடலாகவே அது இருந்தது. போக்குவரத்துக் கப்பல்கள், படகுகள், மோட்டார்ப் படகுகள், கிரேன்கள், காற்றில் அசைந்தாடும் கொடிகள் ஆகியவை அந்த துறைமுகத்தில் நிறைந்து காணப்பட்டன. வேகமாகச் செல்லும் மோட்டார் படகுகள் அலைகளைப் பிளந்துகொண்டு எல்லா திசைகளிலும் சென்றுகொண்டிருந்தன.

கடைசியாக, அகிமோவுக்கு ஏற்பட்டிருந்த ஸ்தம்பித நிலைமை, மன வேதனை ஆகியவையெல்லாம் பறந்துவிட்டதாகத் தோன்றியது. அனிஷ்காவைவிட்டு வெகு தூரத்தில் இருந்தபோதிலும் அகிமோவ் மீண்டும் உயிர்த் துடிப்புப் பெற்றவனானான். கப்பல்களிலிருந்து சாமான்களை ஏற்றி, இறக்கும் ஸ்டீப்டோர் தொழிலாளர்களைத் தள்ளிக்கொண்டு அகிமோவ் கரை அருகில் வந்தார். கடற்படை தளத்திற்குச் செல்வதற்கு ஒரு மோட்டார் படகை எதிர்பார்த்து நின்றார். தரையில் இரண்டு ஆண்டுகள் இருந்ததற்குப்

பின்னர் முதல் தடவையாகக் கப்பலில் காலடி எடுத்து வைத்ததும் அவருடைய இதயம் பட படவென்று அடித்துக் கொண்டது. கப்பலின் கொடி மரத்தில் பறந்துகொண்டிருந்த கடற்படையின் கொடிக்கு வணக்கம் செலுத்தினர். அந்த மோட்டார்ப் படகு இரண்டு கப்பல்களுக்கிடையில் மிதந்து, வேகமாகச் சென்றது. வெப்ப நிலை இளஞ் சூடாக இருந்தது. கரையில் இருந்த சமிக்ஞை காட்டும் கொடிகளைக் கொண்ட கம்பங்கள், வழி காட்டும் ஒளி விளக்குகள் ஆகியவை படிப்படியாக மறைந்தன. அருகில் ஒரு நாசகாரிக் கப்பல் மெதுவாக நகர்ந்து வந்தது. கடற்படை தளபதி வருகிறார் என்பதற்கு அடையாளமாக ஓசை கிளப்பப் பட்டது. உடனே படகிலிருந்த ஆட்கள், நாசகாரிக் கப்பலின் பக்கமாகத் திரும்பித் தங்கள் கைகளை உயர்த்தி வணக்கம் தெரிவித்தனர். நாசகாரிக் கப்பலிலிருந்த ஆட்களும் அவ்வாறே பதிலுக்கு வணக்கம் தெரிவித்தனர். விரைவில் துறைமுகத்திலிருந்து வெகு தூரம் வந்துவிட்டனர். மங்கலான பச்சை நிறக் கடல்நீர் பொங்கி எழுந்து படகின் அடிப்பாகத்தில் நுரையாகக் கொப்பளித்தது.

சுற்றிலும் எங்கு நோக்கினாலும் இன்னும் மங்கலான நீல வெளிச்சமே காணப்பட்டது. விரைவில் அது வெண்மையாகவோ அல்லது கரு நீலமாகவோ மாறும் என்று அகிமோவ் நினைத்தார். ஆனால் வெளிச்சம் ஏற்படவுமில்லை; இருளடையவுமில்லை.

வெகு சீக்கிரத்தில் அகிமோவுக்குக் கரை தென்பட்டது. அதில் கம்பியில்லாத் தந்தி நிலையத்தின் கம்பங்கள் காணப்பட்டன. ஒரு குன்றின்மீது திறந்தவெளி நாடக அரங்கைப் போன்ற கட்டிடங்களும் காணப்பட்டன. அகிமோவ் ஏறிச் சென்றிருந்த மோட்டார்ப் படகு தன் அடையாளத்தைத் தெரிவித்தது. உடனே கரையிலிருந்த கம்பில்லாத் தந்திக் கம்பங்கள் ஒன்றிலிருந்து "எல்லாம் சரியாக இருக்கிறது." என்ற செய்தி ஒலிபரப்பப்பட்டது. மோட்டர்ப்படகு துறைமுகத்திற்குள் நுழையலாம் என்று அதற்கு அர்த்தம். விரைவில் துறைமுகத்திற்குள் செல்வதற்கான வழி திறக்கப்பட்டது. கப்பல்கள் போய்ச் சேர்ந்து நங்கூரம் பாய்ச்சி நிலை

கொள்ளும் இடத்தைக் குறிக்கும் கரை தென்பட்டது. அது முழுவதும் பனிக்கட்டியால் மூடப் பெற்றிருந்தது: படகிலிருந்த ஆட்கள் கறையேறி அணிவகுத்து நின்றனர்.

கடற்படை தலைமை நிலையத்தில் அகிமோவ் நீர் மூழ்கிக் கப்பல்களைத் துரத்திப் பிடிக்கும் கப்பலின் கேப்டனின் உதவியாளனாக நியமிக்கப்பட்டார். அவர் எதிர்பார்த்த படியே, நீண்டகாலமாகக் கடற்படையிலில்லாமலிருந்ததற்குப் பின்னால் இப்பொழுது உடனே அவரைக் கடற்படை தளபதியாக நியமிப்பது சரியாகாது என்று கருதப்பட்டது. சிறிதும் கால தாமதம் செய்யாது அகிமோவ் தன்னுடைய கப்பலைத் தேடிச் சென்றார்.

நீர் மூழ்கிக் கப்பலைத் துரத்திப் பிடிக்கும் அந்தக் கப்பலின் தளபதியின் பெயர் லெப்டினென்ட் படேய்கின். அவர் குள்ளமாகவும், பருமனாகவும், பிறருக்குத் தெம்பூட்டாத முகபாவமுடையவராகவும், மூப்படைவதற்கு முன்பே வழுக்கை விழுந்தவராகவும் காணப்பட்டார். அவர் நீண்ட காலமாக ஒரு சிறிய அதிகாரியாக இருந்தவர். உயரமான, பரந்த தோள்களை உடைய லெப்டினென்ட் கமாண்டர் எதற்காகத் தன்னைப் பார்க்க வருகிறார் என்பதைக் கேள்விப்பட்டவுடனே, அவருக்கு மிகவும் சங்கடமாகப் போய்விட்டது. அகிமோவுக்கு அருகில் அவர் நாணம் மிகுந்த, பருமனான ஒரு சிறு பையனைப் போல் காணப்பட்டார்.

அவர் அகிமோவுக்குக் கப்பலைச் சுற்றிக் காண்பித்தார். பின்னர் பாலத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு, அவர், தனக்குக் கீழே அடுத்த அதிகாரியான ஜூனியர் லெப்டினென்ட் கிளிமாஹினுக்கும், பிரதம கீழ் அதிகாரி ஹிகாலோவுக்கும் அகிமோவை அறிமுகம் செய்து வைத்தார். அந்தப் பிரதம கீழ் அதிகாரி முப்பது வயதிற்கு மேற்படாதவராகவே காணப்பட்டார். ஆயினும் அவர் தான் ஒரு அதிகாரியாகக் காட்சியளிக்க வேண்டுமென்பதற்காகக் கடல் யானையின் மீசை போன்றதொரு மீசையை வைத்துக்கொண்டிருந்தார். மங்கிய, அனேகமாக வெண்மை நிறமான கண்களைக் கொண்டிருந்த அவர் செயற்கையான முகபாவத்துடன் காணப்பட்டார்.

"நீங்கள் எங்கு தங்குவதாக முடிவு செய்திருக்கிறீர்கள்?" என்று படேய்கின் அகிமோவைக் கேட்டார்.

"தற்போதைக்கு என்னுடைய தோல் பெட்டியை தலைமை நிலையத்தில் வைத்துள்ளேன். நீங்கள் எங்கு தங்குகிறீர்கள்?"

படேய்கினின் பதில் தெளிவற்றதாக இருந்தது. உடனே அகிமோவ், இந்தக் "குள்ளன்" தாராளமாகப் பழகும் உதார குணமுள்ள ஆசாமியில்லை என்று முடிவு செய்து கொண்டார்.

அந்தக் கப்பலின் போர் வரலாற்றைப் பற்றி படேய்கின் அகிமோவுக்கு எடுத்துக் கூற ஆரம்பித்தார். நீர் மூழ்கிக் கப்பலைத் துரத்தும் அந்தக் கப்பல் 27,000 மைல்கள் தூரம் கடலில் பிரயாணம் செய்துள்ளது; 96 போக்குவரத்துக் கப்பல்களுக்குத் துணையாகச் சென்றுள்ளது. மூன்று விரோதி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியுள்ளது. ஒரு பகை சப்மரைனை மூழ்கடித்துள்ளது. விரோதியால் ஆக்ரமித்துக்கொள்ளப் பட்டிருந்த கடற்கரைகளின் மீது பதினாறு தடவைகள் படையெடுத்துள்ளது; அதனுடைய ரீசவைகளுக்காக அதற்கு பாதுகாப்புக் கப்பல் என்ற ஓர் விருது வழங்கப்பட்டிருந்தது. படேய்கின் தன்னுடைய மேலதிகாரியிடம் செய்தி சொல்வதைப் போன்று கை கால்களை அடக்கமாக வைத்துக் கொண்டு, "அட்டென்ஷ"னில் நின்றார். அவருடைய சங்கடமான நிலைமையைப் பார்த்த அகிமோவ், அந்த நிலைமையை போக்கக் கருதி, "இங்கே பாருங்கள், படேய்கின், நீங்கள் எனக்கு இவ்வளவு மரியாதை செலுத்தி நிற்க வேண்டிய அவசியமில்லை. உங்களிடம் பயிற்சி பெறுவதற்காகவே நான் இங்கே வந்துள்ளேன். நபரின் உருவத்தைப் பற்றியும், படையில் வகிக்கும் அந்தஸ்தைப் பற்றியும் கவலைப்பட வேண்டாம். இவ்விஷயம் நமக்குள் உடன்பாடு இருக்கிறது அல்லவா?" என்று அகிமோவ் வெளிப்படையாகவும், சிறிது சினம் கலந்த சாயலுடனும் கூறினர்.

"ஏய், ஏய்" என்று படேய்கின், தன் விரல்களால் தன் கால் சட்டையின் ஓரங்களைத் தடவிய வண்ணம், வெலவெலத்துக்கூறினர். அகிமோவ் மகிழ்ச்சி பொங்கச்சிரித்தார்;

படேய்கினும் அவ்வாறே சிரித்தார். அவர் சிரித்த பொழுது அவருடைய தட்டையான, உணர்ச்சி பாவங்களற்ற முகம் மிகவும் விரும்பத்தக்கதாகவும், நகைச்சுவையுடன் கூடியதாகவும், புத்திக் கூர்மை படைத்ததாகவும் காணப்பட்டது. இதைப் பார்த்ததும் அகிமோவ், தான் இந்தக் குள்ள மனிதனின் கீழ் இருந்து வேலை செய்ய வேண்டுமென்று அனுப்பப்பட்டிருப்பது ஏன், என்பதைப் புரிந்துகொண்டார். படேய்கின் தனக்கு மிகையாக மரியாதை செலுத்துவது ஒரு தந்திரம் என்று அகிமோவ் சந்தேகப்பட ஆரம்பித்தார்.

சிரித்ததினுல் தன் கண்களிலிருந்து வெளியான நீர்த் துளிகளைத் துடைத்துக்கொண்டே, படேய்கின், "நீங்கள் எங்களுடன் ஒரு பிரயாணத்திற்கு வருகிறீர்களா, அல்லது ஓரிரு நாட்கள் ஓய்வெடுத்துக்கொள்ளப் போகிறீர்களா?" என்று கேட்டார்.

"நான் கடந்த இரு வாரங்களாக ஒரு வேலையுமில்லாமல் இருக்கிறேன். நானும் உங்களுடன் வருகிறேன். பொதுவாக, என் விருப்பத்தைக் கேட்காதீர்கள்? எனக்கு உத்தரவு கொடுங்கள்," என்ருர் அகிமோவ்.

அந்தச் சிறிய கப்பலின் தளத்தில் வழக்கமாக நடைபெறும் நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருந்தன. தளத்தின் மீது படிந்திருந்த பனிக்கட்டியைச் சிலர் வெட்டிக் கொண்டிருந்தனர். இதரர்கள் கப்பலின் 'கிய'ரைப் பரிசோதனை செய்து சீர்படுத்திக் கொண்டிருந்தனர். கப்பலின் கீழே இருந்து யாரோ தாக்குவதுபோல் கேட்டது. நீரில் மூழ்கும் கவசமணிந்தவர்கள், தண்ணீர் மட்டத்திற்குக் கீழே உள்ள கப்பலின் அடிப்பாகத்தைபரிசோதனைச்செய்துகொண்டிருந்தார்கள். மின்சார மணிகளும், எஞ்சின் அறை தந்தி இயந்திரமும் மணி அடிப்பதும், 'வயர்லெஸ்' அறையிலிருந்து இன்னிசை வந்துகொண்டிருந்ததும் கேட்பதற்கு இன்பமாக இருந்தது. ஹிகாலோ கப்பல் தளத்தின்மீது மெதுவாக நடந்து சென்ருர். கப்பல் நடவடிக்கையில் இறங்குவதற்கு எல்லாவற்றையும் தயார் படுத்திக்கொண்டிருந்தார். அவர் கட்சி அமைப்பாளருங்கூட. அவர் தளத்தின்மீது செல்லும்

போதோ, மாலுமிகளுடன் கலந்து அடுத்த செய்தித் தாளுக்கு வேண்டிய செய்திகளுக்கு ஏற்பாடு செய்தார்.

எல்லா வழக்கமான சல சலப்பும் திடீரென அகிமோவின் உற்சாகத்தை உயர்த்தியது. தனக்குக் கொடுக்கப்பட்ட முதல் வேலையை தான் ஏற்றுக்கொண்டது சரியானதே என்ற திருப்தியை அவருக்கு ஏற்படுத்தியது.

"இது மிகவும் நேர்த்தியாக இருக்கிறது. இதைக்காட்டிலும் மேம்பட்டது இருக்க முடியாது" என்று அவர் திடீரென்று கூறியது பெடேய்கினுக்கு வியப்பை உண்டாக்கியது. "உங்களுடைய அஞ்சல் இலக்கத்தை இப்பொழுது கூறுங்கள். எத்தகைய விலாசமும் இல்லாமல் வாழ்ந்து எனக்கு சலித்து விட்டது."

உடனே அனிஷ்காவுக்கு சில வரிகளை வரைந்தார். ஆனுல் கடிதத்தைத் தபாலில் போடுவதற்கு அவருக்கு நேரமில்லை. சிலர் தளத்தின் மீது கூட்டமாக வந்தார்கள். பெடேய்கின் அவர்களைப் பார்த்ததும், "நாம் சிறிது நேரத்தில் புறப்படுவோம்" என்ருர்.

அவர்கள் வேவு பார்க்கும் படை வீரர்கள். ஜெர்மானியரின் அவர்களுக்குப் பின்னுல் கொண்டுபோய் இறக்கப்பட வேண்டியவர்கள். துப்பாக்கிகள், எரிகுண்டுகள், வேட்டைக்காரர்களின் கத்திகள் ஆகியவற்றுடன் ஆயுதபாணிகளாக இருந்த அவர்கள் ஒரே வரிசையில் தளத்தின் மீது மௌனமாக அணிவகுத்து வந்தனர்; தளபதியின் அறைக்குப் பக்கத்தில் எல்லோரும் நெருங்கி உட்கார்ந்தனர். நெற்றியில் ஒரு சிவப்பான தழும்பும், வெளுத்த முகத்தையும் கொண்ட ஓர் மனிதர்—அவர்களின் மேலதிகாரி—பாலத்தின் மீது வந்தார்; படேய்கின் அவரை அகிமோவுக்கு "சீனியர் லெப்டினென்ட் லிடியாகின்," என்று அறிமுகப்படுத்தி வைத்தார்.

கப்பலின் மாலுமிகளுக்கு வேவுப் படையைச் சேர்ந்த ஆட்களின் பெயர்கள் எல்லாம் தெரியும். அவர்களுடன் மாலுமிகள் மகிழ்ச்சி பொங்கக் கைகுலுக்கினுர்கள். நட்புறவு மிக்க உரத்த குரலில் வாழ்த்துரைகள் பரிமாறிக் கொள்ளப் பட்டன: "ஹலோ கேஸ்டியா!" "பெட்யா நீங்கள் எவ்வா

றிருக்கிறீர்கள் ?'' ''உங்களைப் பார்த்து எத்தனையோ யுகங்களாயிற்றே!'' ''ஏற்கனவே ஆஸ்பத்திரியை விட்டு வந்துவிட்டீர்களா ?''

கடைசியாக அவர்கள் பிரிந்து சென்றார்கள். படேய்கின் உத்தரவுகளைப் பிரகடனம் செய்தார். அகிமோவின் இருதயம் துடிக்க ஆரம்பித்தது. அந்தச் சிறிய கப்பல் ஆட்டங் கொடுத்தது; தன் வழியே புறப்பட்டது. சுற்றி வந்து, முன்னால் மிதந்து சென்று, கப்பல் துறையிலிருந்து திறந்த கடலில் பிரவேசித்து பாய்ந்து சென்றது.

2

திறந்தவெளிக் கடல்! மங்கலான பச்சை நிறமான மனிதனால் நேசபாவங் கொள்ள முடியாத கடல், பனிக்கட்டியின் குளிமை கொண்ட கடல்! சர்வாதிகாரி ஐவானின் காலத்தில் இந்தக் கடலைப்பற்றி இவ்வாறுதான் தேசப்படங்களில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் எல்லையற்ற நீர்ப்பரப்பையும், உப்பு நிறைந்த அலைகள் ஒன்றின்பின் மற்றொன்றாக உயர-உயரமாக எழுந்து, கீழே மோதி, மீண்டும் உயரமாக ஓங்கி எழும் காட்சியைக் கண்டு அகிமோவ் குதூகலத்துடன் எக்காளமிட்டிருக்க முடியும்.

தன் இளமையில் கேப்டனின் பாலத்தின் மீது, காற்றுக்கெதிராக தன் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு நிற்கும் பொழுது ஏற்பட்ட பெருமிதத்தை அகிமோவ் மீண்டும் ஒருமுறை உணர்ந்தார். தடைகளையும், எதிர்ப்பையும் பொருட்படுத்தாது, முன்னேறிச் செல்லும்பொழுது ஏற்படும் உணர்ச்சியை, தரையில் வேறு எங்கு ஏற்பட்டதைக்காட்டிலும் அதிகமாக இங்குதான் அகிமோவ் உணர்ந்தார். அவருக்கு அருகில் கப்பலின் தலைவன், இரண்டாம் வகுப்பு கப்பல் அதிகாரி காஷெவரோவ் நின்றார். தன்னைப்போலவே உயரமாகவும், ஆஜானுபாகுவாகவும் இருந்தார். அவருடைய உணர்ச்சி நிறைந்த முகத்தை அகிமோவ் பார்த்ததும், 1936-ல், கருங்கடலில் கப்பல் தலைவனாகத் தான் பணியாற்றியபோது இருந்த தன் இளமைத் தோற்றத்தையே அவரிடம் காண்பதாக நினைத்தார். திடீரென்று ஏற்பட்ட

அந்த நினைவு அவரை ஓரளவு உணர்ச்சி வயப்படுத்தியது. அவர் பக்கவாட்டாகக் காஷேவ்ரோவைப் பார்த்தார். "எவ்வளவு மகிழ்ச்சியும், எவ்வளவு துயரமும் உங்களுக்கு ஏற்படவிருக்கிறது? எவ்வளவு சிகரங்களையும், பள்ளங்களை யும் நீங்கள் தாண்டிச் செல்லவேண்டியுள்ளது! நீங்கள் எவ்வளவு குதூகலத்தையும், எவ்வளவு வேதனையையும் அனுபவிக்கப் போகிறீர்கள்! உங்களுடைய உறுதியான தலைவழியாக எவ்வளவு வெவ்வேறான சிந்தனைகள் ஓடப் போகின்றன!"

தன் கையை தன் கால்சட்டைப் பையில் நுழைத்தார். அனிஷ்காவுக்கு எழுதிய கடிதம் இன்னும் அங்கேயேதான் இருந்தது. பலமாக ஓர் பெருமூச்சு விட்டார். பின்னர் தனக்குத் தானே மெதுவாகச் சிரித்துக்கொண்டார். "ஊம், இப்பொழுது நீ பெருமூச்சு விடுவதற்கு ஆரம்பித்துவிட்டாய், இல்லையா? அதற்குக் கடல் ஏற்ற இடமல்ல. இப்பொழுது போதிய அளவு நல்ல குளிர்ச்சியான காற்று வீசிக்கொண் டிருக்கிறது.

திடீரென்று அவர் மகிழ்ச்சியும், இன்பமும் நிறைந்தவ ரானார். ஏனெனில், அவர் முன்பு எப்பொழுதோ—அவரால் நினைவுபடுத்திக்கொள்ள இயலாத ஒரு சமயத்தில்—அதே இடத்தில் இருந்ததாகவும், இப்பொழுது ஏற்பட்டது போன்ற அதே சிந்தனைகளும், உணர்ச்சிகளும் அப்பொழுதும் ஏற்பட்டதாகவும் அவர் உணர்ந்தார்.

அந்தச் சிறிய படகு அலைகளால் இங்கும் அங்கும் உந்தப் பட்டது. அவ்வப்பொழுது ஒரு அலை படகின் மேல் பாயும். உடனே படகு பூராவும் ஈரமாகி விடும். படகின் தளத்தில் காய்ந்த இடம் ஒரு பொட்டு கூட இல்லாமல் போய்விடும். உடனே தண்ணீர் பனிக்கட்டியாக உறைந்து விடும். கப்பல் ஊழியர்கள் சதா பனிக்கட்டியை வெட்டி வெட்டி தண் ணீரில் எறிந்து கொண்டே இருப்பார்கள். இல்லாவிட்டால் படகு அதிக கனமாகி தண்ணீருக்குள் மூழ்க ஆரம்பித்து விடுமல்லவா! அகிமோவ் அவர்களையே உற்றுக் கவனித்தார். அவர்களுடைய கை கால்கள், உடம்பு முழுவதும் வேகம் வேகமாக ஒரே சீராகச் செயல்படுவதையும், 'இந்த வேலை

யைச் செய்' என்று ஒருவர் சொல்வதற்குக் காத்திராமல், அவர்கள் வேலை செய்ததையும் கண்டு வியந்தார். படகின் சிப்பந்திகள் தங்கள் கடமைகளைச் செய்வதை அவர் கவனிக்க, கவனிக்க, அவர்கள் மீது அவருடைய மதிப்பு அதிகரிக்கவே செய்தது. அந்தச் சிறிய கட்டுக்கோப்பான படகில் நிலவிய ஒழுங்கை அவர் மேலும் அதிகமாகப் பாராட்டினார்.

அந்தப் படகில். ஈரம் படாமல் காய்ந்திருந்த அறையை வேவு பார்க்கும் குழுவினர் தங்குவதற்கு—எவ்வித உத்திரவுமின்றியே—படகின் சிப்பந்திகள் வசதி செய்துகொடுத்ததில் அவர்களின் உயர்ந்த மனிதாபிமானத்தையும், குழு உணர்ச்சியையும், ஒழுங்கையும் அகிமோவ் கண்டார். காய்ந்த அறையை வேவு பார்க்கும் குழுவினர் தங்குவதற்குக் கொடுக்கவேண்டுமென்று யாரும் எவ்வித உத்திரவும் போடவில்லை. இருந்தபோதிலும், அவர்கள், விரோதியின் பிரதேசத்தில் குளிராலும், தூக்கமில்லாமலும், அபாயகரமான நிலைமையிலும் பல இரவுகளைக் கழிக்க வேண்டியிருக்கும், என்ற காரணத்தால், அவர்களின்மீது ஏற்பட்ட அனுதாபத்தின் காரணமாகவே படகின் சிப்பந்திகள் அவ்வாறு செய்தனர்.

சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் பயங்கரமான அலைகளை சமாளிக்க வேண்டியிருந்த போதிலும், அது உறுதியுடன், அந்த அலைகளை துச்சமென மதித்துத் தன் வழியே சென்று கொண்டிருந்தது.

அகிமோவினுடைய பர பரப்பு மெதுவாகத் தணிந்தது. எல்லாம் எளிதாகவும் சாதாரணமாக இருப்பதாகவும் காணப்பட்டது. இது, கருங்கடலில் அவருடைய பயிற்சியை பெரிதும் நினைவுபடுத்தியது. ஆனால் ஒரே ஒரு வித்தியாசம்: இங்கு நீல நிறமான மங்கலான வெளிச்சம் காணப்பட்டுக் கொண்டேயிருந்தது. எங்கோ சற்று அருகிலேயே மறைந்துள்ள ஒரு ஆச்சரியகரமான ஒளியிலிருந்து அந்த மங்கல் வெளிச்சம் வருவதைப்போல் தோன்றியது.

கரை கண்ணுக்குத் தென்பட்டது. கரை நெடுகிலும் செங்குத்தான கருங்கல் பாறைகள் நிறைந்திருந்தன.

அந்தப் பிரதேசம் வெறும் பொட்டலாகவும், மனிதன் வாழ முடியாததாகவும் காணப்பட்டது; இத்தகைய இடத்தில் இந்த வேவு பார்க்கும் குழுவினர் இறங்கவிருக்கிறார்களே யென்று அகிமோவால் அவர்கள் மீது பரிதாபப்படாமல் இருக்க முடியவில்லை.

கரையில் இருந்த கருங்கல் குன்றுகள் எல்லாம் ஒரே மாதிரியாகக் காட்சி அளித்தன. படகை எங்கு நிறுத்தி அவர்களை இறங்கும்படிச் செய்வது என்பதே புரியவில்லை, சம தரையே காணப்படவில்லை. மிக உயரமான சிகரங்களும் கிடையாது. அல்லது எத்தகைய வர்ணத் திட்டுகளும் இல்லை. ஒரே இருள் மயமாக இருந்தது. அதில் எல்லாமே கறுப்பாகத் தென்பட்டது. எத்தகைய பயிர் பச்சைகளும் இல்லை. ஆயினும் அதனுடைய கரடு முரடான, கொடூரமான அழகு கண்ணைக் கவருவதாக இருந்தது,

''இதுதான் வாரங்கர் திட்டுப் பகுதி'' என்று படேய்கின் சுட்டிக் காட்டினார்.

கரை மிகவும் அருகில் வந்துவிட்டபோதிலும் படேய்கின் படகின் வேகத்தைக் குறைக்காமல் சென்றது அகிமோவுக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது.

“நாம் போய் இறங்கவேண்டிய இடம் இன்னும் வெகு தொலைவிலிருக்கிறது'' என்று லெப்டினென்ட் கூறினார். “வெகு சமீபத்தில் வந்துவிட்டோம் என்று நீங்கள் நினைத்தீர்கள் அல்லவா? இத்தகைய தோற்றத்தைப் பார்த்து நீங்கள் அனுபவம் பெறவேண்டும். ஒளிச் சிதறலின் காரணமாக இவ்வாறு தோன்றுகிறது.”

படேய்கின் உத்திரவுகள் கொடுக்கும்போது, அவ்வப்போது, அதற்கான காரணங்களையும், சில நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் விளக்குவதற்கு மறந்துவிடவில்லை. யாரும் குறை கூற முடியாதவாறு நுண்மதியுடன் அவர் இதைக் கூறினார். உதாரணமாகப் படகின் அறையில் (கேபின்) உள்ள விளக்கை அணைத்து விடும்படி அவர் உத்திரவிட்டபொழுது, அவர் தனக்குத்தானே கூறிக்கொள்வது போல், “இது வேவு பார்க்கும் குழுவினருக்காகச் செய்யப்படுகிறது. அவர்கள் இருட்டில் செல்வதற்குப் பழக்கப்பட

வேண்டுமல்லவா?'' என்று கூறினர். அவர் இவ்வாறு கூறியது, உண்மையில் அகிமோவுக்காகத்தான்.

படேய்கின் அகிமோவைக் கூர்ந்து கவனித்து வந்தார். புதிதாக வந்துள்ள, மிகவும் அமைதியாகவும், தன்னைச் சுற்றிலும் நடப்பவை எதையும் தவற விடாமல் கண்களால் பார்த்தும், காதுகளால் கேட்டுக்கொண்டும் வரும் அகிமோவின் மீது அவருக்கு ஓரளவு பொறுமையும் ஏற்பட்டது. "நாம் பின்னர் கவனித்துக்கொள்வோம்", என்று அவர் தனக்குத் தானே நினைத்துக்கொண்டார்.

தரையிலேயே நீண்ட காலம் இருந்ததினால் மந்திந்துப் போன அகிமோவ் சிறிது காலத்தில், தனது அடக்கமான தன்மையை சிறிது இழப்பார், அப்பொழுது பார்த்துக்கொள்ளலாம், என்று படேய்கின் மனதிற்குள் நினைத்துக்கொண்டிருந்திருக்கலாம். கடற்படையில் வாழ்க்கை எப்பொழுதும் ஒரே சீராக சுமுகமாக இருக்காது என்பதையும், தினமும் அளிக்கப்படும் உணவு ரேஷனுடன் கூடவே பிரமோஷனும், வெகுமதிகளும் கொடுக்கப்படுவதில்லை என்பதையும், ராணுவ அதிகாரிக்கு (அகிமோவுக்கு)க் காட்டவேண்டுமென்று அவர் நினைத்தார். ஆனால் அவரை அவமானப் படுத்துவதற்காகவோ என்னமோ, எல்லாம் அகிமோவைத் தட்டிக் கொடுப்பது போலவே உற்சாகமாக இருந்தது. இதைத் கண்டு படேய்கின் மகிழ்ச்சியடைந்தாலும், ஏதாவது சிக்கல் ஏற்படாதா, என்று காத்துக்கொண்டிருந்தார்.

சிறிய அதிகாரிகளும், கப்பல் ஊழியர்களும் கூட அகிமோவைக் கூர்ந்து கவனித்து வந்தனர். அவர் படகில் கேப்டனுக்கு உதவியாளர்தான் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தபோதிலும், அவருடைய ஆழ்ந்த, ஊடுருவும் பார்வை, இதர ஒவ்வொருவரிடமும் ஏற்படுத்தியதுபோலவே அவர்களிடமும் உற்சாகத்தை ஏற்படுத்தியது. அதனால் அவருக்குத் திருந்தி ஏற்படுத்தும் வண்ணம் நடந்துகொள்ள வேண்டுமென்றும், அவருடைய அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென்றும் ஓர் எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தியது. படேய்கினும் இதை உணர்ந்துகொண்டார். இதனாலும், எல்லாவற்றையும் விட அகிமோவின் ஆஜானுபாகுவான உருவமும்,

நம்பிக்கை மிகுந்த தோற்றமும் படேய்கினிடம் அகிமோவின் மீது ஓரளவு பொறுமையையும் ஏற்படுத்தியது.

கரை நெருங்கி வந்துகொண்டிருந்தது, அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தென்பட்ட விளக்குகளின் ஒளி பளிச்சிட்டது. ஒருக்கால் அவர்கள் ஜெர்மன் கரையோரப் பாது காவலர்களாக இருக்கலாம். அல்லது தங்கள் அமைதியான தொழிலைச் செய்துகொண்டிருக்கும் நார்வீஜிய செம்படவர்களாக இருக்கலாம். ஆம். அது வியப்பாகத்தான் தோன்றியது. அந்தக் கட்டாந்தரையான பிரதேசம் நார்வேதான். அகிமோவால் அதை நம்பவே முடியவில்லை. ஏனெனில் கருங்கடலில் கடற்கரையில் பணி புரிந்த பின், நார்வே மிகவும் தூரத்திலுள்ள பிரதேசம் என்று அவர் நினைத்திருந்தார். இதாலியை விடவும், ஆப்பிரிக்காவை விடவும் தூரத்தில் இருப்பதாக அகிமோவ் நினைத்திருந்தார். ஆயினும் நார்வே அருகில் வந்துவிட்டது. அவ்வப்போது சில விளக்குகளின் ஒளி மட்டும் தோன்றி மறைந்தது. செங்குத்தான குன்றுகளும், கடல் நீர் அரித்து, இடைவெளிகளை ஏற்படுத்தியிருந்த கூர்மையான பாறைகளும் சூழ்ந்திருந்தன. ஆனால் தற்பொழுது அவை கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட்டன.

கரைக்கு சமீபமாகக் கப்பல் வர, வர, கப்பலிலிருந்த மாலுமிகள், ஊழியர்களின் முகங்கள் கடுமையான தோற்றத்தை அடைந்தன. லெட்டியாகின் பாலத்திற்கு அருகில் வருவதும் ஒரு வார்த்தையும் பேசாமல் மறைவதுமாவக இருந்தார். பீரங்கிகளைச் சுடுபவர்கள் பீரங்கிகளின் அருகில் வந்து தயாராக நிள்றுகொண்டார்கள். சில மாலுமிகள், கப்பல் கரையைச் சேர்ந்தததும் தரையில் இறங்குவதற்கு கப்பலையும் தரையையும் இணைக்கும் ஏணியைப் போடுவதற்குத் தயாராக நின்றனர். மற்றவர்கள் எண்ணெய் ஊறும் தோல் உடைகளைப் போட்டுக்கொண்டனர். ஒவ்வொரு வேலையும் விரைவாகவும், கருராகவும், துல்லியமாகவும் நடைபெற்றன நீண்ட நாள் அனுபவத்தின் வாயிலாகவே இது சாத்திய மாகிறது.

கரைக்கு வெகு அருகில் கப்பல் வந்துவிட்டது. கிளிமாஷின் பர பரப்புடன் காணப்பட்டார். படேய்கினிடம் ஏதோ கவலையுடன் தெரிவித்தார். லெட்டியாகின் ஓசையில்லாமல் பாலத்தின் மீது தோன்றினார். அங்கே இருந்து கொண்டே கரையைக் கூர்மையாக கவனித்தார். கரையில் அவருக்கு மட்டுமே தெரிந்த அடையாளங்களை கவனித்துக் கப்பலைச் செலுத்துவதற்கு உதவினார்.

கடைசியாக, கப்பல் கரையோரத்தில் நிற்கவேண்டிய இடமும் வந்தது. “கப்பல் மிகவும் மெதுவாகச் செல்லட்டும்”, என்று படேய்கின் உத்திரவிட்டார். அகிமோவ், கப்பலின் போக்கை மௌனமாக கவனித்து வந்தார். கரையில் எல்லாம் அமைதியாக இருந்தது.

வேவு பார்க்கும் படையினர் ‘கேபின்’ உள்ளிருந்து வெளியே வந்தனர். பாலத்திற்கு இடது பக்கமாக அனைவரும் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமாகச் சேர்ந்து நின்றனர்.

கரைக்கு வெகு அருகாமையில், எதிர்பாராத விதமாக, கனமான மூடுபனி கீழாக மூட்டம் போட்டிருந்தது. சப்மரைன் எதிர்ப்புக் கப்பல் அந்த மூடுபனிக்குள் புகுந்து சென்றது. கப்பலின் தளம் மூடுபனியால் மூடப்பட்டது. அதனால் மேலேயுள்ள பாலத்திலிருந்து கப்பலின் சிப்பந்திகளின் இடுப்பு வரையுள்ள பகுதியைத்தான் காண முடிந்தது. கீழ் பகுதி பூராவும் கனமான பால் போன்ற மேகத்தால் மூடப்பட்டிருந்தது. அதனால் மனிதர்களின் அரை உடம்புகள் காற்றில் நீந்துவதைப் போன்ற ஒரு விநோதமான காட்சி தென்பட்டது.

அகிமோவ் மூடுபனிக்குள் ஊடுருவிப் பார்த்துக் கொண்டிருந்தார். மூடுபனி விலகுமேயானால் கரைக்குப் பின்னே ஒரு சிறிய ஓடையும், அதற்கும் அப்பால் மேல்நோக்கிச் செல்லும் சரிவும், பாதுகாப்புக் குழிகளும், போக்குவரத்து அகழ்களும், குமிழியிடும் புதுத் தண்ணீரைக் கொண்ட சேறு நிறைந்த கால்வாய்களும் காணப்படும் என்று எப்படியோ எதிர்பார்த்தார். இந்த விநோதமான, எதிர்பாராத சிந்தனை, கடலிலிருந்து மிகவும் தூரத்தில் உள்நாட்டில் உள்ள

அனிஷ்கா, ரெமிஸோவ், கொலோவின், பொகோசியான், மேபொரோடா, இன்னும் மற்றவர்களைப் பற்றி அவர் நினைக்கும்படி செய்தது.

ஆனால் மூடுபனி—எவ்வளவு விரைவாக ஏற்பட்டதோ அவ்வளவு விரைவாகக் கலைந்தது. அகிமோவ் மீண்டும் அந்தச் சிறிய கப்பலின் தளத்தையும், பேரன்ட்ஸ் கடலின் பழுப்பு நிறமான அலைகளையும், கருங்கல் பாறைகளான குன்றுகள் சூழ்ந்துள்ள சிறிய நதியையும் பார்த்தார்.

''நீங்கள் இங்கேயே இருங்கள். கப்பலை நான் பத்திரமாகக் கரைசேர்க்கிறேன் என்று அகிமோவ் படேய்கினிடம் கூறினார். அவர் கூறிய முறை அனேகமாக ஒரு உத்திரவு போன்றே தொனித்தது.

அவசரப்பட வேண்டியது அவசியம் என்று அவர் உணர்ந்தார். கரையிலிருந்து கப்பலிலுள்ள அவர்களைக் கண்டு பிடித்துவிட முடியும். அவ்வாறு நிகழ்ந்தால், அந்த நடவடிக்கை பூராவுமே தோல்வியில் முடியும். தவிர, மாலுமிகள் கவலையுடன் வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதை அகிமோவ் கண்டார். விரோதி விமானங்கள் தாக்கலாம் என்று அவர்கள் ஐயம் கொண்டனர். நிலைமையை மேலும் சிக்கலாக்கக்கூடிய முறையில் சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் கரைக்கு நெருக்கமாகச் செல்ல முடியவில்லை. கரைக்கு சமீபம் தண்ணீரில் மூழ்கி மறைந்துள்ள பாறைகள் மீது கப்பல் மோதி அபாயம் ஏற்படும் போலிருந்தது. கப்பலுக்கும் கரைக்கும் இடையில் பத்து கெஜம் இடைவெளி இருந்தது.

உத்தரவுக்குக் காத்திராமலேயே, பலகைப் பாலத்தை (gangway) கைகளில் தாங்கிக் கொண்டிருந்த மாலுமிகள் தண்ணீரில் இறங்கினர். தண்ணீரின் ஆழம் அங்கு இடுப்புக்கு மேல் இருந்தது. பலகைப் பாலத்தின் கடைசி முனையைத் தங்கள் தோள்மீது வைத்துக்கொண்ட அவர்கள், ''கிளம்புங்கள், சீக்கிரம் வாருங்கள்!'' என்று பொறுமையிழந்து குரல் கொடுத்தனர்.

உளவுபார்க்கும் படையினர் பலகைப் பாலத்திற்கு அருகில் வந்தனர். பலகைப் பாலத்திற்கும் நீட்டிக்கொண்டிருக்கும் பாறைகளுக்கும் இடையில் கொப்பளித்துக்கொண்டிருக்

கும் அகலமான திட்டாக இருந்த, 'ஜில்'லென்று விறு விறுப்பான தண்ணீரைக் கண்டதும் அவர்களின் உடம்பு நடுங்காமல் இருக்கமுடியவில்லை. வேவு பார்ப்பவர்களை கவனித்துக் கொண்டிருந்த அகிமோவ் "அவர்களை நாம் தூக்கிக்கொண்டு செல்லவேண்டும்?" என்று ஐயுற்றார். பின்னர், மேற்கொண்டு சிந்தனை செய்யாமல், பலவிதமான உணர்ச்சிகளால் உந்தப்பட்டவராய் (அவற்றைப் பரிசீலனை செய்வதற்கு அவருக்கு நேரமிருக்கவில்லை) பலகை பாலத்தின் மீது நடந்து சென்று, ஐஸ் போன்ற தண்ணீரில், திடீரென்று குதித்தார். நடு நடுங்கவைக்கும் குளிரினால் மூச்சுத் திணறிய அகிமோவ், அதிலிருந்து சமாளித்துக் கொண்டவராய், "லெட்டியாகின்!" என்று குரல் கொடுத்தார்.

அவர் எளிதாக லெட்டியாகினை தன் தோள் மீது ஏற்றிக் கொண்டு, அவரை சுமந்த வண்ணம் ஒரு அலையைத் தொடர்ந்து, கரைக்குச் சென்றார். ஒரு பெரிய பாறையின் மீது வந்து அவரை உட்காரவைத்தார். அடுத்த அலை பாறையின் மீது வந்து மோதும்வரை காத்திருந்துவிட்டு, பின்னர் பலகைப் பாலத்திற்கே திரும்பிச் சென்றார். அங்கு அவர் அடுத்த நபரைத் தன் தோள்மீது ஏற்றிக்கொண்டு புறப்பட்டார். தன்னைத் தொடர்ந்து மூன்று மாலுமிகளும் அதே போல் செல்வதையும் கவனித்தார். இவ்வாறு அசாதாரண முறையில் கரையேறுவது விரைவில் முடிந்தது. இது, இடுப்பளவு தண்ணீரில் நின்று கொண்டிருந்த, அல்லது ஐஸ் போன்று 'ஜில்'லென்ற தண்ணீரில் தங்கள் உடம்பைத் தூக்கிக் கொண்டு கஷ்டப்பட்டுத் தள்ளாடி நடந்து வந்து கொண்டிருந்த மாலுமிகளிடையே எதிர்பாராத குதூகலத்தையும் ஏற்படுத்தியது. தண்ணீர் ஐஸ் போன்று விறு விறுப்பாக இருந்தபோதிலும் அவர்கள் சிந்தனையற்ற துணிச்சலைக் காட்டினர். "உறுதியுடன் நில்லுங்கள்," காத்துக் கொண்டிருங்கள்," "நான் உங்களைத் தண்ணீரில் அமுக்குகிறேன்," "தண்ணீர் சூடாக இருக்கிறது!" என்ற குரல்கள் விட்டு விட்டுக் கேட்டன.

வேவுபார்க்கும் படையின் கடைசி நபரையும் அகிமோவ் தூக்கிக்கொண்டுபோய்க் கரையில் சேர்த்தார். கடைசி

ஆளைத் தூக்கிச்செல்லும்பொழுது, அவருடைய உடுப்புகளும், இதர சாதனங்களும்கொண்ட மூட்டையில் தலையை மோதிக் கொண்டார். அந்த மூட்டையில் துப்பாக்கி ரவைகள் நிறைந்திருந்தன. பின்னர் அகிமோவ் பலகைப் பாலத்தின் மீது தொத்தி, திரும்பவும் கப்பலின் தளத்திற்கு வந்து சேர்ந் தார். உளவு பார்க்கும் படையினர் ஏற்கனவே செங்குத் தான பாறைகளுக்கிடையில் சென்று மறைந்துவிட்டனர். கப்பல் கரையோரமாக மெதுவாக நகர்ந்து சென்றது.

''கேபினுக்குள் சென்று உடம்பை வெது வெதுப்பாக்கிக் கொள்ளுங்கள்,'' என்று ஓர் மாலுமி அகிமோவிடம் கூறினர். அவர் அவ்வாறே கேபினுக்குள் சென்று விரைவாகத் தன் உடைகளைக் களைந்தார். உள்ளே இன்னும் இருட்டாகவே இருந்தது. யாரோ, கப்பலின் பக்கவாட்டில் இருந்த துவா ரங்கள் வழியாக வெளிச்சம் போகாமல் சரியாக அடைக்கப் பட்டிருக்கிறதா என்பதை ஊர்ஜிதம் செய்துகொள்ள இரு ளில் தடவிக்கொண்டிருந்தார். பின்னர் விளக்குப் போடப் பட்டது. அது வேறு யாருமல்ல; படேய்கின் தான். அவர் அகிமோவுக்கு இரண்டு போர்வைகளைக் கொடுத்தார். அவருடைய முகம் மிகவும் கடுமையாக அருந்தது. அவர் அங்கிருந்து சென்றார். ஆனல், ஒரு புட்டி வோட்காவுடன் சீக்கிரமே திரும்பிவந்தார். மீண்டும் மறைந்துவிட்டார். பின்னர் மீண்டும் திரும்பிவந்தார்.

''நான் எந்த உடைகளை அணிந்துகொள்வது?'' என்று அகிமோவ் கேட்டார்.

படேய்கின் அதைப்பற்றியும் நினைத்திருந்தார். உள் ளாடை (அண்டர்வேர்) மாலுமியின் ட்ரவுசர்கள், ரப்பர் பூட்ஸுகள் ஆகியவற்றைக் கொண்டுவந்தார்.

''இவை எனக்குச் சரியாக இருக்குமோ?'' என்று அகி மோவ் சந்தேகப்பட்டார்.

''கப்பல் தலைவரான காஷெவரோவிட மிருந்து நான் இவைகளைப் பெற்றேன்.''

''அப்படியானல் அவை எனக்குச் சரியாக இருக்கும்,'' என்று அகிமோவ் கொஞ்சம் புன்முறுவலுடன் கூறினர்.

''உங்களுடைய முதல் கடல் அனுபவம் இதுதான் போலும்'' என்று படேய்கின் கூறினர்.

''கடல்—அனுபவம் என்ரு கூறுகிறீர்கள்?'' அது பூரா வும் நனைந்திருந்தன. அவ்வளவுதான்.

அவர் தன்னைத்தானே நொந்துகொண்டார். தானே போவதற்கு பதிலாக மாலுமிகளைத் தண்ணீருக்குள் அனுப்பி யிருந்திருக்க வேண்டும், என்று அவர் நினைத்தார். அவர் ஒரு அதிகாரியாக அல்லாமல் ஒரு சாதாரண மாலுமியாக நடந்து கொண்டார். அந்த உளவு பார்க்கும் படையினருக்காக அவர் வருத்தப்பட்டார். அவர்கள் நனையாமல் கரைக்குப் போய்ச் சேர்ந்திருக்க முடியாது. ஆனால் அது ஒன்று மட்டும் தான் காரணமா? தான், எவ்வளவு துணிச்சலான ஓர் ராணுவ அதிகாரி என்பதை படேய்கினுக்கும், மாலுமிகளுக் கும் காட்டுவதற்கு அவர் விரும்பவில்லையா? அவர் ராணுவத் திலிருக்கும்பொழுது, ஒரு கடற்படை அதிகாரியைப் போலவே எப்பொழுதும் உணர்ச்சி கொண்டிருந்ததும், இப் பொழுது கடற்படையில் இருக்கும்பொழுது, தான் ராணு வத்திலிருந்ததை அவரால் மறக்க முடியாமல் இருப்பதும் வேடிக்கையாக இல்லையா?

ஆம், தன்னுடைய புதிய தோழர்களின் முன்பும், நடுக் கும் குளிர் வதைக்கும் கொடூரமான பேரண்ட்ஸ் கடலுக்கு முன்பும் (அவருக்கும் கூட இது புதிதுதான்.) தன்னுடைய பராக்கிரமத்தை நிலை நாட்ட வேண்டுமென்று, தன்னை எப் பேர்ப்பட்டவர் என்பதைக் காட்டிக்கொள்ள வேண்டு மென்று கொஞ்சம் விருப்பம் இருக்கத்தான் செய்தது.

'நான் ஓர் வெறும் உதவியாளனுக இல்லாமல், இங்கு தலைமை அதிகாரியாக இருந்திருப்பேனேயானல், நான் அதைச் செய்திருக்கமாட்டேன். ஆனல் எனக்குக் குறிப்பாக இன்ன வேலைதான் என்றில்லாமல் ஓர் உதவியாளனுகமட்டும் இருப்பதால், ஒரு போர்ட்டரின் வேலையை நான் செய்வதால் ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை'', என்று அவர் சிறிது சங் கோஜப்பட்டுக் கூறினர்.

படேய்கின், அகிமோவ் தன்னைப்பற்றித் தானே கூறிக் கொண்டதை ஒத்துக்கொண்டபோதிலும் கூட, அவர் முகத் தில் புன்னகை ஏதும் வரவில்லை.

வெளியில் பீரங்கி வெடிக்கும் ஓசை கேட்டது. அதைத் தொடர்ந்து மற்ெருரு வெடி சத்தமும் கேட்டது. படேய்கின் மரம் போல் அசைவற்று நின்ருர்.

''நம்மை அவர்கள் கண்டுகொண்டார்கள்'', என்ருர் அவர். ''லெட்டியாகின் தப்பிவிட்டார் என்று நான் நம்புகிறேன். நான் பாலத்தின் மீது போகிறேன்.''

அவர் வெளியே சென்ருர். வெடி சத்தங்கள் தொடர்ந்து கேட்கவாரம்பித்தது. அகிமோவ் தளத்தின் மீது சென்ருர். கரையோரத்தில் பீரங்கிகள் சுடப்படும் ஒளி இங்கும் அங்கும் காணப்பட்டது.

''அது வார்டோவிலிருந்து'', என்று ஷிகாலோ கூறினர்.

''கப்பலுக்குப் பின்னுல் விமானம் வருகிறது, ஐந்து போக்கி உல்ப்—190!'' என்ற பலமான குரல் கேட்டது.

இவ்வளவு ரத்தினச் சுருக்கமாக விஷயத்தைக் கூறியதை அகிமோவ் பாராட்டுவதற்கு நேரமில்லை; அதற்குள் அபாய அறிவிப்பு மணி ஒலித்தது. அதைத் தொடர்ந்து உடனே கப்பலிலிருந்த பீரங்கிகள் 'பூம்' என்ற ஓசையுடன் வெடித்தன; இயந்திர பீரங்கிகள் சட சடவென்று சுட்டுத் தீர்க்கவாரம்பித்தன. எந்த ஓசை முதலில் கேட்டது? காவல் பார்த்துக்கொண்டிருந்தவரின் அறிவிப்பா, அபாய அறிவிப்பு மணியின் ஓசையா, அல்லது பீரங்கிகள் சுட்டதா—எது முதலில் கேட்டது என்பதை உங்களால் கூறவே இயலாது. அவை எல்லாம் ஒன்ருகக் கேட்டதுபோல் தோன்றியது. ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த அகிமோவின் கண்களுக்கு முன்னுல், ஐந்து ஜெர்மன் விமானங்களுக்கும், பார்ப்பதற்குப் பாதுகாப்பற்றதாகத் தோற்றமளித்த சிறிய சோவியத் கப்பலுக்குமிடையே மின்வெட்டுப் போன்ற சண்டை நடைபெற்றது.

அனேகமாக நம்பமுடியாத அளவு வேகத்தில் விமானங்கள் பறந்தன. ஆனுல் கப்பல் தாக்கப்பட முடியாததாகத் தோன்றியது. படேய்கின் உரத்த குரலில் கொடுத்த, பரபரப்பான உத்தரவுகளுக்கேற்ப, கொந்தளிக்கும் அலைகளின் மீது நம்ப முடியாத வேகத்தில் கப்பல் பாய்ந்து சென்றது. குதிப்பது போலவும், இப்பக்கமும், அப்பக்கமும் திரும்புவது

போலவும், திடீரென்று திரும்பி பின்புறம் செல்வது போலவும் காணப்பட்டது. சில சமயங்களில் கப்பல் தண்ணீரின் மீது செல்வதாகவே அகிமோவுக்குத் தென்படவில்லை. ஆனல் ஒரு பாம்பைப்போல் வளைந்து வளைந்து செல்வதாகவும், நெளிந்து செல்வதாகவும் காணப்படது. அதனுடைய அசைவுகள் அவ்வளவு எதிர்பாராத விதமாகவும், திணறடிப்பதாகவும் இருந்தது.

அகிமோவ் படேய்கினைப் பார்த்தார். கப்பல் தலைவரின் சிறிய உருவம் அடையாளம் கண்டுகொள்ள முடியாததாக இருந்தது. அவர் ஓர் பந்தினுள் அமுக்கப்பட்டிருப்பது போன்றும், அதனுள்ளிருந்து ஒரு தலை வெளியே நீட்டிக் கொண்டிருப்பது போலவும், அது எல்லாப் பக்கங்களிலும் உருண்டையாக இருப்பதுபோலவும் தோன்றியது. அவர் தொடர்ந்து உத்தரவுகளை உரத்த தொனியில் கொடுத்துக் கொண்டேயிருந்தார். கப்பலின் அசைவுகளுக்கேற்றாற்போல் நகைப்புக்கிடமளிக்கும் வண்ணம் அவரும் அந்த அசைவுகளையெல்லாம் செய்துகொண்டு வந்தார். சாய்ந்து நிற்பது, சில அடிகள் பின் எடுத்து வைப்பது, அல்லது அசையாமல் நிற்பது ஆகியவைகளைச் செய்து வந்தார். அவரது முகம் உருமாறித் தென்பட்டது. கப்பலின் பிரதம மாலுமியான காஷெவரோவும் ஒரு மனிதனுகத் தென்படவில்லை. அவர் கேப்டனுடன் ஒன்றுபட்டு வித்யாசமில்லாமல் நின்றார். ஒரு இயந்திர மனிதனைப்போல் கேப்டனுடைய உத்திரவுகளைக் கரூராக நிறைவேற்றி வந்தார். அவர் மேலேயோ, கீழேயோ அக்கம்பக்கமோ, அல்லது முன்னாலேயோ பார்க்கவில்லை. அவர் பேசாமல் காது கொடுத்துக் கேட்டு, உத்திரவுகளை களை நிறைவேற்றி வந்தார்.

கப்பல் கரையிலிருந்து வெகு தூரம் போய்விட்டது. பரந்த கடலில், தங்கு தடையின்றிக் கப்பல் சென்றுகொண்டிருந்தது. இது அகிமோவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. கரையோரம் குன்றுகளுக்கு சமீபம் இருந்தால்தான் விரோதி விமானங்களின் கண்ணுக்கு அவ்வளவு சுலபமாகத் தெரியாது என்று அகிமோவ் நினைத்திருந்தார்.

படேய்கின், தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொண்டு (இது அகிமோவை வியப்பில் ஆழ்த்தியது) தன் உதவியாளனைப் பற்றி நினைத்தார். அவர் பக்கம் பாதியளவு திரும்பினார். "தந்திர உபாயங்களைக் கையாளுவதற்கு இங்கே நமக்கு அதிக சுதந்திரம் கிடைக்கும்", என்று அவர் கூறினார்.

விமானங்கள் வேகமாகப் பாய்ந்து செல்லுகையில் சில குண்டுகளைக் கீழே வீசின. ஆனால் அவைகள் கப்பல் அரை நிமிஷத்திற்கு முன்பு இருந்த இடத்தில் விழுந்தன. வேகம் தான் தீர்மானிக்கும் அம்சமாக இருந்தது. விமான-எதிர்ப்பு பீரங்கிகள் தொடர்ந்து சுட்டுக்கொண்டிருந்தன. இயந்திர பீரங்கிகளும் சுட்டுக்கொண்டே யிருந்தன. கப்பல் அப்படியும், இப்படியும் அசைந்துகொண்டு சென்றபோதிலும் கூட, பீரங்கிகள் குறி பார்த்து விமானங்கள் தென்பட்ட இடத்தை நோக்கியே சுட்டுக்கொண்டிருந்தன. கப்பலின் பின் பாகத்தில் கடைசியில் இருந்த தானியங்கி ('ஆடோமேடிக்') பீரங்கியும் இடைவிடாமல் சுட்டுக்கொண்டிருந்தது.

அந்தச் சிறிய கப்பலல்ல, ஆனால் ஜெர்மன் விமானங்கள் தான் தண்டனை பெற்றன, என்று கூறுவது விந்தையாக இருக்கும். அவை இங்குமங்கும் கீழ் நோக்கிப் பாய்ந்தன; தண்ணீரின் மீது அவை தொட்டாற்போன்று பறந்து சென்றன. காது செவிடு படும்படியான இரைச்சலுடன் கடலில் குண்டு மழை பொழிந்தன. பின்னர் குன்றுகளுக்குப் பின்னால் விமானங்கள் ஓடி மறைந்தன. மீண்டும் தோன்றி ஒன்றோ, இரண்டோ குண்டுகளை வீசின; ஆனால், விரோதி பிடிப்பதற்கு முயன்ற இடத்தில் சப்மரைன் எதிர்ப்புக் கப்பல் இல்லை.

கடைசியில், அந்தச் சிறிய கப்பலின் தலை விதியை நிர்ணயிக்கும் நம்பிக்கையை விமானங்கள் கைவிட்டன. தங்கள் இஞ்சின்களின் கோபமான இரைச்சலுடன் அவை பறந்தோடின. மீண்டும் அமைதி நிலவியது. காற்றின் வீர்றென்ற ஓசையும், கடல் அலைகளின் பயங்கர கர்ஜனையும் இப்பொழுது குழந்தைகளின் தெளிவற்ற பேதலைப் போன்று கேட்டன. கப்பலின் தளபதி இயந்திர பீரங்கியை விட்டு அப்பால் நகர்ந்தார். மனச் சோர்வுடன் காணப்பட்டார்.

தான் உட்பட கப்பலிலிருந்த ஒவ்வொருவர் மீதும் உறைந்த கடல் நீர் படிந்து ஒளி வீசிக்கொண்டிருப்பதை அது வரையிலும் அகிமோவ் கவனிக்கவில்லை. கப்பலின் தளத்திலும் புகைந்துகொண்டிருந்த சூடான இயந்திர பீரங்கி, பீரங்கி ஆகியவற்றின் குழாய்களைத் தவிர, மற்றவை அனைத்தும் ஐஸ் போன்று விறு விறுப்பாகவும், வெண்மை யான ஒளியைப் பரப்பும் நீர்த் துளிகளால் பூசப்பட்டதாக வும் காணப்பட்டன.

3

“நான் தூங்குவதற்காகக் கீழே செல்கிறேன்”, என்று படேய்கின் கூறினர்.

கப்பலின் பிரதான மாலுமியும், தளபதியும் அகிமோவ் மீது கொண்ட வியப்பு தணிந்து விடவில்லை. கடல் பிரயா ணத்தின்போது தூங்கும் பழக்கம் படேய்கினுக்கு இருந்த தில்லைஎன்பதை அவர் எளிதில் ஊகித்தறிந்தார். இந்நிலை யில் கப்பலை அகிமோவே வழி நடத்திச் செல்வதற்கு ஓர் வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கவே விரும்பினர் என்பது வெளிப்படை.

பாலத்தின்மீது தனியாக இருந்துகொண்டு, அகிமோவ் கப்பலை நடத்திச் செல்லும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அவரிடத்தில் இருந்த சிறிதளவு தயக்க உணர்ச்சி விரைவில் மறைந்தது. ஏனெனில் திரும்பிச் செல்லும் பிரயாணத்தில் எதிர்பாராத சம்பவங்களால் சிக்கல் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. அந்தச் சிறிய கப்பலின் ஊழியர்கள் அவரு டைய எல்லா உத்திரவுகளையும் அட்டியில்லாமல், உடனடி யாகவும் நிறைவேற்றி வந்தார்கள். இதைக் கண்டு அகிமோவ் மகிழ்ச்சியடைந்தார். இதன் பெருமை தனக்குச் சேராது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஆனல் எல்லாவற்றையும் விட அவருக்கு அதிக மகிழ்ச்சி அளித்த விஷயம் என்னவென்ருல், கடற்படை சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவர் தெரிந்திருந்தார்: நன்கு ஞாபகம் வைத்துக் கொண்டிருந்தார். கடற்படையின் எல்லா

பயிற்சி உத்தரவுகள், கடற்படை வாழ்க்கையின் சகல விதி முறைகள், சம்பிரதாயங்கள்; கப்பலின் பல்வேறு பகுதிகளுக் கிடையில் ஒத்துழைப்பு ஆகியவற்றையெல்லாம்—அவர் ஒரு சமயம் நினைத்ததைப்போல்-ஒருபொழுதும்மறந்துவிடவில்லை. இதை அவர் படிப்படியாக உணர்ந்தபொழுது, மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மிகவும் சின்னஞ்சிறிய விஷயமும் கூட அவருக்கு விரைவாகவும், சிறிதும் கஷ்டமின்றியும் நினைவுக்கு வந்தது. மறந்துவிட்டதாக நினைத்த ஒரு பாட்டைப்போல. இதை உணர்ந்ததும் அகிமோவ் குதூகல மடைந்தார். ஆனால் அவர் எதையும் சொல்லக்கூடாது என்று முடிவு செய்துகொண்டார். தனக்கு எல்லாம் தெரியு மென்ற அபிப்ராயத்தை ஏற்படுத்துவதைத் தவிர்ப்பதற்கா கவும், ஸ்தல நிலைமைகளைப் பூர்ணமாக அறிந்து கொள்வதற் காகவுமே அவர் இவ்வாறு செய்தார்.

துறைமுகத்திலுள்ள பிரகாசமான விளக்குகள், ரேடியோ கம்பங்கள், குன்றுகளின் மீதுள்ள வீடுகள் ஆகிய யாவும் தென்படவாரம்பித்தன. சப்மரைன்-எதிர்ப்புக் கப்பல் துறைமுகச் சுவற்றில் இழுத்துக் கட்டப்பட்டது. படேகின் கப்பலின் மேல் தளத்திற்கு வந்து கரைக்குச் சென்றார். கடற்படை தலைமை நிலையத்திற்கு அறிக்கை கொடுப்பதற் குச் சென்றார். காவலிலிருந்த மாலுமி, சாயந்திர நேரத்தில் ஊத வேண்டிய குழலை எடுத்து ஒலி கிளப்பினார். கப்பலின் பக்கத்தில், கப்பலில் பணியாற்றுவோர் அனைவரும் அணி வகுத்து நின்றனர். அவர்களை கவனித்துப் பார்ப்பது அகிமோவுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியைத் தந்தது. அவர்க ளிடையில் பல சிறந்த, கள்ளங்கபடற்ற மாலுமிகளின் முகங்கள் காணப்பட்டன. அகிமோவ் அவர்களைப் பார்க்கப் பார்க்க, படேய்கின்மீது அவருக்குப் பொறாமை ஏற்பட்டது. அன்பு நிறைந்த, சகல வசதிகளும் அமையப் பெற்ற ஒரு பெரிய குடும்பத்தின் தகப்பனார் என்ற முறையில் அந்த மனிதர் எத்தகைய குடும்ப கர்வமும் இல்லாதவராக இருந்தார்.

கப்பல் தலைவன் மெதுவாகக் கப்பலின் தளத்தின் மீது நடந்து சென்றார். எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக்

கொண்டு சென்ருர். அமைதி குடிகொண்டது. வாழ்க்கை வழக்கமான சகஜ நிலைக்குத் திரும்பியது.

படேய்கின் திரும்பி வந்ததும், பாலத்தின் மீது சென்று அகிமோவிடம் தான் ஏற்கனவே ஒரு தடவை கேட்ட நினைவு மறந்தவரைப்போல், "நீங்கள் எங்கே தங்குவதற்கு முடிவு செய்துள்ளீர்கள்?" என்று கேட்டார்.

'தற்காலிகமாக, நான் என்னுடைய பெட்டியை தளத்தில் வைத்திருக்கிறேன்." என்று அகிமோவும், அந்தக் கேள்வி அப்பொழுதுதான் முதல் தடவையாகக் கேட்டதுபோல், பதிலளித்தார்.

"நீங்கள் விரும்பினுல் என்னுடைய இடத்திற்கு வரலாம்," என்று படேய்கின் சிறிது நேரம் கழித்து கூறினுர். "என்னுடைய மனைவி என்னுடன் இருக்கிருள். நான் ஒரு குடும்பஸ்தன்" என்ருர்.

அகிமோவ் அவருடன் சென்ருர். அவர்கள் பெரிய கட்டிடங்களைக் கடந்து சென்ருர்கள். விரைவில் ஒரு குன்றின் மீது இருந்த ஒரு சிறிய வீட்டின் முன்னுல் போய்ச் சேர்ந்தனர். லெப்டினென்டின் வீட்டுக்குள் நன்ருக வெப்பமாக இருந்தது. ஜன்னல் சுவர்களின்மீது இருந்த தொட்டிகளில் பலவிதமான பூக்கள் மலர்ந்திருந்தன. அவைகளில் தூரமான தென் பிரதேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்த கேக்டஸ் பூக்களும் இருந்தன.

"செடிகள் நன்ருக வளர்வதற்காக ஒரு சிறிய வெப்ப நிலை வீட்டையும் நாங்கள் வைத்துள்ளோம்; ஆனுல் இங்கு எல்லாம் நன்ருய் வளரும் என்று பார்க்க முடியாது", என்று படேய்கின் கூறினுர்,

"பளபளப்பான வர்ணத்துடன் கூடிய காலை நேர கவுனை அணிந்துகொண்டு கரு நிறமான ஓர் அம்மையார் உள்ளே வந்தார்.

"என்னுடைய மனைவி", என்று படேய்கின் சிரித்துக் கொண்டே கூறினுர்.

அவள் அன்பு செறிந்த பார்வையுடன் அகிமோவுக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு, உணவு கொண்டு வருவதற்காக உள்ளே சென்ருர்.

"நானே ஒரு வடக்கத்தியான்தான்," என்றார் படேய்கின். "செம்படவர் குடும்பம் ஒன்றில் மூர்மான்ஸ்கில் நான் பிறந்தேன். ஆனால் நீனா தெற்கில் ஜார்ஜியாவிலிருந்து வருகிறாள்," என்று கூறிவிட்டு, பிறகு குறைந்த தொனியில், "அவள் தெற்கில், தன் வீட்டுக்குப் போக வேண்டுமென்று ஏக்கம் பிடித்தவளாய் இருக்கிறாள்," என்றார். பிறகு வழக்கமான தொனியில், "நான் இந்தக் கடற்படையின் ஆரம்ப காலத்திலிருந்து இதில் இருக்கிறேன். அப்பொழுது நீனா மூர்மான்ஸ்கில் இல்லை. உங்களுக்குத் திருமணம் ஆகிவிட்டதா?"

"இல்லை", என்று அகிமோவ் சிறிதும் சிந்திக்காமல் கூறிவிட்டார். பின்னர் அவர்தானே சிரித்துக் கொண்டே, தன்னைத் திருத்திக் கொண்டார். "அதாவது, ஆமாம், எனக்குத் திருமணமாகிவிட்டது. விளையாட்டாக, நான் என் மனைவியை மறந்துவிட்டேன்." மனைவி என்ற சொல் அவருக்கு மிகவும் பழக்கமில்லாத சொல்லாகத் தோன்றியது. அதை உபயோகிப்பதற்கு அவரது மனத்தை திடப்படுத்திக் கொள்ள முடியவில்லை. "என்னுடைய அனிஷ்கா ராணுவத்தில் இருக்கிறாள். நாங்கள் திருமணம் செய்து கொண்டு சிறிது காலமே ஆகியுள்ளது. எனவே திருமணமானவன் என்ற எண்ணம் இன்னும் எனக்குப் பழக்கமாகவில்லை."

படேய்கின் தம்பதிகளின் அமைதியான வாழ்க்கைக்கும், அரைமணி அல்லது ஒரு மணி நேரத்திற்கு முந்திய சம்பவங்களுக்குமிடையில் எவ்வளவு வித்தியாசம்! நீனா, ஓசையில்லாமல் சாப்பாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்து வந்தாள். அவளிடமிருந்து வீசிய சோப்பின் நறுமணமும் மருந்துகளின் நெடியும், அவள் ஆஸ்பத்திரியில் நர்ஸ் வேலையில் இருப்பவள் என்பதை வெளிப்படுத்தியது. படேய்கின் தன்னுடைய ராணுவ உடையைக் கழற்றிவிட்டு, பழைய மாதிரியான, காலை நேரத்தில் அணியும் மேல்சட்டையை அணிந்து கொண்டார். ராணுவ பூட்சுகளுக்குப் பதிலாக வீட்டிற்குள் நடப்பதற்கு உபயோகப்படுத்தும் செருப்புகளைப் போட்டுக் கொண்டார். அவருடைய முகத்தில் காணப்பட்ட திருப்தி மனப்பான்மையை அகிமோவ் அதுவரையில் வேறு எப்

14. ந. (B.D. 97)

பொழுதும் கண்டதில்லை. சாப்பாட்டின்போதும், அதற்குப் பிறகும், "பேரண்ட்ஸ் கடலில் கப்பல் பிரயாணம்" என்ற புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தவண்ணம், அகிமோவ், படேய்கினையும், அவரது மனைவியையும் மிகவும் கூர்ந்து நோக்கினர். தன்னுடைய மனைவியை நின்யூஸியா என்று படேய்கின் அழைத்தார். அவரை அவள் வியோஷென்கோ என்று அழைத்தாள். அந்தப் பெயர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் அகிமோவுக்கு வேடிக்கையாகப் பட்டிருக்கும். ஆனால் தற்பொழுது அவை அப்படி அர்த்தமற்றதாகப் படவில்லை என்று நினைப்பதற்கு அவருக்கே ஆச்சரியமாகவிருந்தது. அப்பெயர்களை அவர் விரும்பவும் செய்தார். அது போன்ற வாழ்க்கையை அவர் அனிஷ்காவுடன் நடத்துவதற்கும் தயங்கியிருக்கமாட்டார். மற்றவர்களின் முன்னால் தன்னுடைய மனைவி தன்னை பாவ்லிக் என்றோ அல்லது பாஷெங்கா என்றோ அழைத்திருந்தாலும், தற்பொழுது அவர் ஆட்சேபித்திருக்கமாட்டார். ஆனால் அனிஷ்காவைத் தெரிந்துகொள்வதற்கு முன்னால் அவ்வாறு செய்திருப்பார்.

இவ்வாறு சிந்தனையைத் தொடர்ந்த அவர் பின்வரும் முடிவுக்கு வந்தார்: கப்பலில் போய்க்கொண்டிருந்த பொழுது, ஜெர்மன் விமானங்களின் தாக்குதல் ஏற்பட்ட வேளையில் படேய்கின் எவ்வாறு நடந்துகொண்டார் என்பதைப் பார்த்திராவிட்டால், இந்த அமைதியான, அனேகமாகக் கொச்சையான வாழ்க்கையைப் பற்றி முற்றிலும் வேறு விதமான முடிவுக்கு வந்திருப்பேன், அப்பொழுது படேய்கின் எவ்வாறு, காற்றின் திசைகாட்டும் கருவியைப் போல், கப்பலின் ஒருபக்கத்திலிருந்து மறுபக்கத்திற்குச் சுழன்றார். அப்பொழுது அவர் சிறிதாவது பரிதாபத்திற்குரியவராகக் காட்சியளிக்கவில்லை. ஆனால், கண்களில் கனல் தெறிக்கும் கோபத்துடன், ஆக்ரோஷமாக, அனேகமாக பயங்கரத்தை உண்டாக்கும் தோற்றத்துடன் காணப்பட்டார். இப்பொழுது ஏதாவது அபாய அறிவிப்பு மணி ஓசை கேட்குமேயானல், அந்தக் குட்டையான மனிதர், தன்னுடைய காலைநேர மேலங்கியையும், செருப்புகளையும் கழற்றி எறிந்துவிட்டு, இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் எப்படி

யிருந்தரோ, மீண்டும் அந்த மாதிரி ஆகிவிடுவார்.''—இவ்வாறு அகிமோவின் சிந்தனை ஓடியது.

அடுத்த நாள், அகிமோவ் படேய்கினுடன் கப்பலுக்குப் புறப்பட்டார். அன்று முடிவில்லாத ஒரே நீலநிற சந்தி வெளிச்சமாயிருந்தது.

குன்றுகளின் மீது மாலுமிகள் தங்கியிருந்த முகாம் ஜீவன் நிரம்பியதாய், மகிழ்ச்சியால் பொங்கி வழிந்துகொண்டிருந்தது. ஒலிபெருக்கிகளிலிருந்து காதுகள் செவிடுபட இசையின் ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. குன்றுகளின் மீது இருந்த பள்ளங்களில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த இள நீலநிறமான பூக்குவியல்களுக்கிடையில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அந்தப் பள்ளங்களைக் கடப்பதற்கு ஒற்றையடிப் பாலங்கள் போடப்பட்டிருந்தன. ஆம், அங்குகூடக் குழந்தைகள் இருந்தனர். சுற்றிலும் எங்கும் சொந்த வீட்டின் சூழ்நிலை காணப்பட்டது. வசதி நிறைந்ததாயும், மனதிற்கு ரம்மியமாகவும் காணப்பட்டது. குன்றிலிருந்து கீழே இறங்கி, கடலின் கரு நீலநிறத் தண்ணீரின் அருகில் சென்றபோது, வீடுகள், குழந்தைகள், துவைத்த துணிகள் உலர வைக்கப்பட்டிருப்பது ஆகிய சகல பழக்கமான அம்சங்களும் தொலை தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. நீர்மூழ்கிக் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள், மோட்டார்ப் படகுகள், தண்ணீரில் மெதுவாக மிதந்து சென்றன. 'சிக்னல்' வெளிச்சங்கள் பளிச்சிட்டன; காற்றில் கொடிகள் பறந்தன. கப்பல்களின் ஊதல் ஓசை, நங்கூரத்தின் சங்கிலிகள் அசைக்கப்படும் நாதம் ஆகியவை காதில் கேட்டுக்கொண்டே யிருந்தன.

ஒரு பலமான குரல் அகிமோவின் சிந்தனையைக் கலைத்தது.

''அகிமோவ்! பேவல்! அடப் பாவி, ஆமாம், அவனே தான்!'' என்ற குரல்.

அந்த மிகவும் தூரமான பிரதேசத்தில் தன்னை யாரோ பெயரிட்டு அழைத்தது அகிமோவை வியப்பில் ஆழ்த்தியது. அகிமோவ் திரும்பிப் பார்த்தார். கும்பலாக நின்றுகொண்டிருந்தவர்களிடையில் இருந்து குட்டையான, தடித்த ஒரு

கப்பற்படை அதிகாரி வந்துகொண்டிருந்தார். தன்னை நோக்கி ஓடிவந்து கொண்டிருந்தார் என்றே கூறலாம். என்ன நடக்கிறது என்பதை உணருவதற்குள்ளாகவே, தன்னை ஒரு மனிதர் கட்டிப்பிடித்து அணைத்துக்கொண்டதை அகிமோவ் உணர்ந்தார். ஆரம்பத்தில் அவர் யாரென் பதைக் கூட அகிமோவால் புரிந்துகொள்ள முடியவில்லை. கடைசியில் அவரை நன்ருகப் பார்த்த பின்தான், "மிகுனேவ்! ஆஹ ஹாஹ், கருங்கடல் பகுதியைச் சேர்ந்த ஒருவனை இங்கே சந்திப்போம் என்று நான் எதிர்பார்க் கவேயில்லை!" என்று ஆச்சரியத்துடன் கூறினர்.

"நாங்கள் பலபேர் இங்கே இருக்கிறேம்," என்று மிகுனேவ் பதிலளித்தார். "லிஸ்கோவ், ஸ்டெபானேவ், இன்னும் பலபேர். ஆனல் உங்களை சந்திப்பேன் என்று நான் எதிர்பார்க்கவேயில்லை. சரி, நீங்கள் எப்படியிருக்கிறீர் கள்?" அவர் அகிமோவின் முதுகில் நட்புறவுமிக்க முறையில் பலமாகத் தட்டினர். "இப்பொழுது நீங்கள் ஒரு கமாண்டர், அப்படியா! என்னைக்காட்டிலும் முன்னல் சென்றுவிட்டீர் கள்!"

"அதற்காக நான், ராணுவத்திற்கு நன்றி செலுத்த வேண்டும். அவர்கள் என்னை மேஜர் பதவிக்கு உயர்த்தினர் கள்," என்று அகிமோவ் மகிழ்ச்சி பொங்கக் கூறினர்.

அங்கு இன்னும் நின்று கொண்டிருந்த இதர அதிகாரி களிடம் அகிமோவை மிகுனேவ் அழைத்துச் சென்ருர். "இவர்தான் கருங்கடலில் என்னுடன் சேர்ந்து பணியாற்றிய வர், பேவல் அகிமோவ்," என்ருர்.

அகிமோவ் தரைப்படையில் இருந்துவிட்டு, சமீபத்தில் தான் போர்முனையை விட்டு வந்ததாக அறிந்த மிகுனேவ், திடீரென்று அமைதியடைந்தார். பின்னர் யுத்தத்தின் பிரதான அரங்கத்தில் நடைபெறும் போர் நடவடிக்கை களைப் பற்றி பலவிதமான கேள்விகளைக் கேட்க ஆரம்பித் தார். "அங்கே எப்படியிருக்கிறது நிலைமை? போர் மிகவும் கடுமையாக யிருக்கிறதா?" என்று கேட்டார்.

அவர் கேட்ட கேள்விகளிலிருந்தெல்லாம், கடற்படை வீரர்கள், கடற்படையை ஒரு துணைப் படையாகத்தான்

கருதுகிறார்களென்பதும், ராணுவத்தைத் தான் பிரதான படையாகக் கருதுகிறார்களென்பதையும் அகிமோவால் உணராமலிருக்க முடியவில்லை. இது அகிமோவுக்குப் புதிதாகப் பட்டது. ஏனெனில் சமாதான காலங்களில் மாலுமிகள், ராணுவத்தைக் காட்டிலும் தங்களை உயர்வாக நினைப்பதற்கே விரும்புவது வழக்கம். யுத்தத்தின் போதுதான் அவர்களின் கண்ணோட்டத்தில் மாறுதல் ஏற்பட்டது. தற்பொழுது அகிமோவைச் சுற்றி வளைத்துகொண்டு கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்த கடற்படை வாலிபர்கள், யுத்தத்தைப் பற்றி எவ்வளவு நிதானமான பார்வையைக் கொண்டுள்ளார்கள், என்பதைக் காட்டியது.

தான் ஒரு வெறும் பயிற்சியாளராகவே நியமிக்கப்பட்டிருப்பதாக அகிமோவ் கூறியதைக் கேட்டதும் மிகுனோவ் மனம் நொந்ததுடன், கோபமும் அடைந்தார். "தரையிலுள்ளவர்கள் எப்போதுமே இப்படித்தான் செய்கிறார்கள். நீங்கள் நீர்மூழ்கிக் கப்பலின் மாலுமியாக இல்லாதது வருந்தத்தக்கதே. நாங்கள் அப்படிப்பட்டவர்களல்ல. நீங்கள் எங்கே தங்கியிருக்கிறீர்கள்? நீங்கள், திருமணமானவர்களிடமிருந்து விலகி தனியே வந்து விடவேண்டும்," என்று அவர் கூறினார். சம்பாஷணையில் பங்கு கொள்ளாமல், சற்று தூரத்தில் தள்ளி நின்று கொண்டிருந்த படேய்கினைத் தன் ஓரக் கண்ணால் அவர் பார்த்தார். "தனிக்கட்டையாக இருப்பவர்களெல்லாம் எங்களுடன் வந்து சேர்ந்து வசியுங்கள். நாங்கள் உங்களுடைய வாழ்க்கையை இன்னும் குதூகலமானதாக ஆக்குவோம்!" என்றார் அவர்.

"நீங்கள் ஒரணுவும் கூட மாறவில்லையே!" என்று அகிமோவ் சிரித்துக்கொண்டே கேட்டார்.

அவருடைய பழைய கருங்கடல் நண்பர்கள் சிலரை அங்கு காண அவர் மகிழ்ச்சியடைந்தார். அடங்காப்பிடாரியான லெப்டினென்ட் கமாண்டர் மிகுனோவும் அவர்களில் ஒருவராக இருந்தார்.

அவர்கள் கூறியதைப் பரிசீலிப்பதாக வாக்களித்து, அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு மீண்டும் படேய்கின் தன் இருப்பிடம் சென்றார்.

“மிகுனேவை உங்களுக்குத் தெரியுமா?” என்று அவரைக் கேட்டார்.

“ஓரளவு தெரியும்.”

“மிகவும் பட படப்பான ஆசாமி, இல்லையா?” என்று கூறியவண்ணம் அகிமோவ் முறுவலித்தார்.

“அவர் ‘சோவியத் யூனியனின் வீரர்’ என்ற பட்டம் பெற்றவர்,” என்று படேய்கின் கடுமையாகக் கூறினர்.

“நீங்கள் அவ்வாறு சொல்லக்கூடாது! நான் அவரைக் காட்டிலும் நன்கு வேலை செய்வதாக அவர் கூறுகிறார்.”

அகிமோவ் படேய்கின் குடும்பத்துடன் தொடர்ந்து வசித்து வந்தார். மிகுனேவ் அவரைப் பார்ப்பதற்கு அடிக்கடி வந்தார். குட்டையான அந்த லெப்டினென்டிடம் அவர், ஓரளவு பொறுமையும் கொண்டார். அகிமோவை மயக்கி, அந்த இடத்திலிருந்து பிரித்து பிரம்மச்சாரிகள் வசிக்கும் தங்கள் இடத்திற்கு அழைத்துப் போவதற்கு அவர் சகல முயற்சியும் செய்தார்.

“ஆனல், நானும் திருமணமான ஆசாமி ஆயிற்றே,” என்று அகிமோவ் வாய்நிறைய சிரித்துக்கொண்டே ஒத்துக் கொண்டார்.

“அப்படியா, உண்மையாகவா?” என்று மிகுனேவ் வியப்புடன் கேட்டார். பின்னர் திடீரென்று ஏற்பட்ட ஓர் சிந்தனைக்குப்பின், மனச்சோர்வடைந்த தொனியில், “நல்ல ஆட்கள் எல்லோரும் கல்யாணம் செய்துகொண்டு விடுகிறார்கள்; விரைவில் என்னுடைய சந்தர்ப்பம் வரும், என்று நான் நினைக்கிறேன்,” என்ருர் அவர்.

அகிமோவ் தன்னுடைய நேரம் பூராவையும் அந்த சப்மரைன்—எதிர்ப்புக் கப்பலிலேயே கழித்தார். மாலுமிகளின் எல்லாக் கூட்டங்களிலும், பயிற்சிகளிலும் கலந்து கொண்டார். பேரண்ட்ஸ் கடலைப்பற்றி அவர்களுக்குத் தெரிந்ததையெல்லாம் கூறும்படி அவர் மாலுமிகளைக் கேட்டார். அங்குள்ள கப்பல் துறைகள், கப்பல்களை நிறுத்தி வைக்கும் இடங்கள், கடல் மார்க்கங்கள் ஆகியவற்றைப் பற்றிய சாத்தியமான எல்லாத் தகவல்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அவற்றைத் தவிர—அனிஷ்காவிடமிருந்து வரும் கடிதங்களையும் தவிர—வேறெதைப்பற்றியும் அவர் நினைக்கவில்லை. அவர் சதா மனத்தை வருத்தி எதிர்பார்த்துக்கொண்டேயிருந்தார். அவளிடமிருந்து கடிதங்கள் வருவதைப் பற்றிய எண்ணம் அவருடைய மனதிலிருந்து ஒரு நிமிஷம் கூட—அவர் என்ன செய்து கொண்டிருந்த போதிலும்—அகலவேயில்லை. அவளுடைய கையெழுத்து எப்படியிருக்கும் என்பதுகூடத் தனக்குத் தெரியாதென்ற எண்ணம் திடீரென்று அவருக்கு ஏற்பட்டது. அவளுடைய முதல் கடிதம் எப்படியிருக்கும் என்பது பற்றி அவர் கற்பனை செய்ய முயற்சித்தார். அவள் அவரை "அருமைக்காதலரே" என்று அழைப்பாளா, அல்லது "அன்புக்குரியவரே" என்று அழைப்பாளா, அல்லது அதுபோன்று வேறு ஏதாவது சொல்லி அழைப்பாளா என்று அவருடையசிந்தனை ஓடியது. அவளிடமிருந்து தனக்கு இந்தத் தேதியில் நிச்சயம் கடிதம் வரும் என்று அடிக்கடி தேதிகளை நிர்ணயித்து வந்தார். கடற்படை தளத்திலிருந்து தான் முதல் கடிதம் எழுதிய சமயத்திலிருந்து, அவள் அதைப் பெற்றுக்கொண்ட சமயம்வரை நாட்களை அவர் எண்ணிக் கொண்டிருந்த விதத்தைப் பற்றித் தன்னைத் தானே அவர் நையாண்டி செய்து கொண்டார். அவள் உடனே பதில் எழுதுவாள் என்பது உறுதியாதலால், அவளுடைய பதில் இன்ன குறிப்பிட்ட தேதியில் வந்து சேரும் என்று நினைத்தார். அவர், தான் வகுத்துக் கொண்ட கால வரம்புக்குள் பதிலைப் பெருததால், இருவருக்குமிடையிலுள்ள தூரம் காரணமாக இருக்கும் என்று முடிவு செய்து கொண்டார். வேதனை நிறைந்த இதயத்துடன் அவர் மற்ருெரு தேதியை நிர்ணயித்தார். பின்னர் மீண்டும் ஒருதேதி, அதற்குப் பிறகு ஒரு தேதி என்று நிர்ணயித்துக்கொண்டேயிருந்தார். கரையில் அவரது அமைதியான வாழ்க்கையில் சில சமயங்களில் குறுக்கீடுகள் வந்தன. தளத்திற்கு சற்று தொலைவில் கண்டு பிடிக்கப்பட்ட விரோதி சப்மரைன்களை வேட்டையாட வேண்டி வந்தது. மூன்று வாரங்களுக்குப் பிறகு அந்த சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் வாரங்கர் பியோர்ட் என்ற இடத்திற்கு இரண்டாவது முறை சென்றது. இந்தத் தடவை

அகிமோவ் அந்தக் கப்பலின் தளபதியாக இருந்தார். படேய்கின் கீழேயே தங்கிக்கொண்டார். அரிதாக சில சமயங்களில் மட்டுமே அவர் பாலத்தின் மீது வந்தார். அந்தக் குட்டையான லெப்டினெண்ட் தன் கைகளைத் தேய்த்துக் கொண்டு, "என்னுடைய சகாவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்? அவர் தன் வேலையை சரியாகச் செய்கிறாரா?" என்று கேட்பார்.

"அவர் மிகவும் திறமையாகக் காரியங்களை நடத்தி வருகிறார், காம்ரேட் லெப்டினென்ட்", என்று கப்பல் மாலுமி பதிலளித்தான். "அவர் ஒரு மாலுமி" என்று கப்பல் தலைவர் சுருக்கமாகக் கூறினார்.

கப்பல் தலைவனிடமிருந்து நீங்கள் எதிர்பார்க்கும் மிகப் பெரிய புகழுரை அதுதான். அவருடைய தீர்ப்பைக் கேட்டு படேய்கின் மகிழ்ச்சியடைந்தார். ஏனெனில் அவர் திடீரென்று அகிமோவிடம் மிகுந்த பிரியமுள்ளவராக ஆகிவிட்டார். யாரிடமும் அதிகம் பேசாமல் ஒதுங்கியிருக்கும் நபர்கள் பல சந்தர்ப்பங்களில் இப்படித் தான் இருக்கிறார்கள்.

எந்த இடத்திற்குப் படகு போகவேண்டுமென்று உத்திரவிருந்ததோ அந்த இடத்திற்கு அருகே படகு நெருங்கிக் கொண்டிருந்தது. கரையில் எத்தகைய சலனமும் இல்லாதது போல் தோற்றமளித்தது. படேய்கின் பாலத்தின் மீது ஏறிச் சென்றார்.

"நீங்கள் ஏதும் பார்க்க முடியவில்லையா?" என்று அவர் கேட்டார்.

"எல்லாம் அமைதியாக இருக்கிறது" என்று அகிமோவ் பதிலளித்தார்.

அவர்கள் சுமார் 40 நிமிஷ நேரம் காத்திருந்தனர்: கரையோரமாக நகர்ந்தனர். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

கடைசியாக அகிமோவ் பொறுமை இழந்தார். "ஒரு சமயம், நான் போய் அவர்களைத் தேடவேண்டும், என்று நினைக்கிறேன்", என்று கூறினார்.

"தேவையில்லை", என்று அகிமோவ் பலமாகக் கூறினர். "அவ்வாறு செல்வதற்கு நமக்கு உத்தரவு இல்லை."

அவர்கள் அனேகமாகப் புறப்பட விருந்த தருணத்தில், நீண்ட நேரமாக எதிர்பார்த்திருந்த வெளிச்சம் தோன்றியது. மிகவும் தூரத்தில் தென்திசையில் வானத்தில் மூன்று பச்சை நிற ஒளியும், இரண்டு சிவப்பு நிற ஒளியும் தென்பட்டன. அந்த இடத்திலிருந்தே சுடுவதும் கேட்டது.

"வேகமாக முன்னே செல்லுக", என்று அகிமோவ் உத்திரவிட்டார்.

சுடுவது தீவிரமாயிற்று. அந்த சப்மரைன்—எதிர்ப்புக் கப்பலில் இருந்த ஒவ்வொரு நபரும் போர் ஆயத்தத்தில் இருந்தனர். கப்பல் கரையை நோக்கிச் சென்றது. ஒப்புக் கொள்ளப்பட்டதின் அறிகுறியான சிக்னலை-தொடர்ந்த பல சிவப்பு ஒளிகள்—கொடுக்கும்படி அகிமோவ் சிக்னலருக்கு உத்திரவிட்டார். அகிமோவ் எதிர்பார்த்தபடி, அதன் உடனடியான விளைவு என்னவெனில், கப்பலின் மீது சுடுவதற்கான வாய்ப்புக் கொடுப்பதாகும். இயந்திர பீரங்கியின் அருகில் தயாராயிருந்த கப்பல் தலைவன் திருப்பிச் சுட்டான்.

நீண்ட இறகுகளை உடைய 'கல்' என்ற கடற்பறவையொன்று கீச்சென்ற சத்தத்துடன் வானத்தில் மேலே பறந்து சென்றது.

வெகு அருகில் கரையிலிருந்து ஒரு கனத்த குரல் கேட்டது.

"இதோ, நாங்கள் வந்துவிட்டோம், நண்பர்களே!"— கப்பலிலிருந்து கரையிறங்குவதற்கான பாலம் கரைமீது தள்ளப்பட்டது. தங்களால் முடிந்த அளவு வேகத்தில் இயந்திர பீரங்கிகள் சுட்டன.

"வாருங்கள், சீக்கிரம் வாருங்கள்," என்று அகிமோவ் பாலத்தின் மேல் பகுதியிலிருந்துகொண்டு குரல் கொடுத்தார்.

உளவு பார்க்கும் வீரர்கள் மெதுவாக வந்துகொண்டிருந்தனர். அவர்கள் தங்கள் தோள்மீது எதையோ சுமந்து கொண்டு வந்தனர். அது என்னவென்றுபார்ப்பதற்குக் கூட அகிமோவுக்கு நேரமில்லை. குன்றுகளின் மறைவில் கண்ணுக்

தெரியாத நிலையில் இருந்துகொண்டு சுட்டுக்கொண்டிருக்கும் விரோதியின்மீது இயந்திர பீரங்கியினுலும், துப்பாக்கிகளாலும் மாலுமிகள் சுடுவதற்கான உத்திரவுகளைக் கொடுத்துக்கொண்டிருந்தார்.

''எல்லோரும் இருக்கிருர்களா?'' என்று அவர் உளவு வேலைக்காரர்களைப் பார்த்துக் கேட்டார்.

''ஆம்'' என்று, கடைசியாக வந்த வேவுப்படை வீரர் சுற்றிலும் பார்த்துக்கொண்டு, தன் கைத் துப்பாக்கியைத் தாழ்த்தியவண்ணம் கூறினுர்.

பாலம் கப்பலுக்குள் இழுத்துக்கொள்ளப்பட்டது. கப்பல் கரையினின்றும் சிறிது தூரம் சென்ற பிறகே, அகிமோவ், சுடுவதை நிறுத்தும்படி உத்திரவிட்டார்.

கப்பல் தன் இருப்பிடம் நோக்கித் திரும்பியது. உளவுப் படையினர் கப்பலின் தளத்திற்குக் கீழே சென்று மறைந்தனர். வழக்கம்போல் கேபின் அறை அவர்களின் உபயோகத்திற்கு விடப்பட்டது.

லெட்டியாகின் விரைவில் பாலத்தின்மீது வந்து அகிமோவுக்கு வாழ்த்துக் கூறினுர்.

''உங்களைப் பார்க்க மகிழ்ச்சியடைகிறேன்,'' என்று கூறிய அகிமோவ், ''அது எப்படி முடிந்தது'' என்று கேட்டார்.

''அது திருப்திகரமாக முடிந்தது; ஆனுல் பிரதம வாரண்ட் ஆபீசர் கிராம்ட்ஸோவ் உயிரிழந்தார். அவர் ஓர் சிறந்த உளவுப் படை வீரர். அவரது சடலத்தை இங்கு கொண்டு வருவது என்று முடிவு செய்தேன். அவரது சொந்த மண்ணலேயே அதைப் புதைப்போம். அப்பொழுது தான் விரோதி அதை ஒன்றும் செய்ய முடியாமல் போகும். நார்வேயிலேயே அவரது சடலத்தைப் புதைத்திருக்கக்கூடும். அவர்கள் சிறந்த மனிதர்கள்; அவர்கள் ஜெர்மானியர்களை வெறுக்கிருர்கள். அதே சமயத்தில் ஜெர்மன் முகாம்களிலிருந்து தப்பி வரும் நம் ஆட்களை சேர்த்துக்கொள்கிருர்கள். ஆம், நாங்கள் அவரது சடலத்தை அங்கேயே புதைத்திருக்கக்கூடும். ஆனுல் நாம் திரும்பிக்கொண்டிருந்ததால், அந்த சடலத்தை எங்களுடனேயே எடுத்துக்கொண்டு வந்துவிட்

டோம். நார்வீஜியர்கள் நல்ல மனிதர்கள். எங்களுக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறார்கள்,'' என்றார் அவர். அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பின்னர் உற்சாகத்துடன் பேசவாரம்பித்தார்: நாங்கள் எங்கள் வேலையைச் செவ்வனே செய்தோம். முதல் தரமாகச் செய்தோம். நம்முடைய தலைமை நிலையத்திற்கு மிகவும் உபயோகப் படக்கூடிய, மிகவும் முக்கியமான செய்திகள் எங்களிடமுள்ளன''. அடக்கமான புன்னகை அவர் முகத்தில் நெளிந்தது. ''உங்களுடைய ராசியான கையின் பலனாக'' என்றார்.

''அல்லது என்னுடைய ராசியான முதுகின் காரணமாக இருக்கலாம்'', என்று அகிமோவ் வருத்தங் கலந்த புன்முறுவலுடன் கூறினார். இறந்த நபருக்காக—அவர் அகிமோவுக்குத் தெரிந்திராமலிருந்த போதிலும் கூட—வருத்தப்பட்டார்.

லெடியாகின் பாலத்திலிருந்து போவதற்கு விரும்பாதவர் போல் காணப்பட்டார். அவர் ஏதோ சொல்ல நினைத்தார் என்பது தெளிவு. கரையில் குளிர் நிறைந்த பல இரவுகளுக்குப் பின்னால் உஷ்ணத்தை அனுபவிக்கும் முறையில் அவருடைய குரல் மேலும் மேலும் அதிக பலமாக ஒலித்தது. அவர் நார்வேக்காரர்களைப் பற்றிப் பேசினார். அவர்களைப் புகழ்ந்தார். அதே சமயத்தில் படையெடுப்பாளர்களுக்கெதிரான போராட்டத்தில் போதிய அளவு தீவிரமாக இயங்காததற்காக அவர்களைக் கடிந்துகொள்ளவும் செய்தார்.

தளத்திற்கு வந்து சேர்ந்ததும் அகிமோவ் லெடியாகினுடன் கரைக்குச் சென்றார். தன்னுடைய அறைக்கு வரும்படி லெடியாகின் அகிமோவை அழைத்தார். ஆனால், அந்த உளவுப் படை அதிகாரியை அகிமோவ் நேசித்தாலும் கூட, அவருடைய அழைப்பை மறுப்பதற்கு அவர் ஒரு காரணத்தை உண்டாக்கினார். தனக்கு ஏதாவது கடிதங்கள் வந்திருக்கின்றனவா என்று பார்ப்பதற்காக கடற்படை தலைமைக் காரியாலயத்திற்கு விரைந்தார். கொவரோவிலிருந்து, அவருடைய தாயாரிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. ஆனால் அனிஷ்காவிடமிருந்து ஒன்றும் வரவில்லை. அவர் திகைப்படைந்தார்; ஏமாற்றமடைந்தார். ஏனெனில்

தன்னுடைய கடிதத்தைப் பெற்றுக்கொண்ட ஒரு வாரத்திற் குள்ளாக அவளால் பதில் எழுத முடியாமலிருந்திருந்தாலும் கூட, குறைந்தபட்சம் அன்ருவது அவருக்கு அனிஷ்காவிட மிருந்து ஒரு கடிதம் வந்திருக்க வேண்டும் என்று அவர் நினைத்தார்.

ஆமாம், அவள் ஒரு வார காலம் தாமதித்திருந்தாலும் கூட, அவளிடமிருந்து தற்பொழுதாவது பதில் வந்திருக்க வேண்டும்.

தன் உடைகளை உலர வைத்துக் கொள்வதற்கும், சாப் பாட்டை முடித்துக்கொள்வதற்கும் அவர் வீடு திரும்பும் வழி யில், வீட்டில் படேய்கினும் அவரது மனைவியும் எவ்வளவு சுக சௌகரியங்களுடனும், பரஸ்பர அன்புடனும் வாழ்க்கை நடத்துகிருர்கள் என்பது அவரது நினைவுக்கு வந்தது. திரும் பிப் பார்த்தார். அந்த சுக சௌகரியமும், அன்பும் இப் பொழுது அவருக்கு எரிச்சலைக் கொடுத்தது.

"அது அப்படித்தான்", என்று அவரது உதடுகள் முணு முணுத்தன. கப்பலின் மேல் தளத்தில் நடைபோட்டார். "ஒரு மனைவி மற்ருெருவனைத் தேடிக்கொள்ளலாம். ஆனுல் ஒரு தாய் தன் மகனை என்றும் மறப்பது கிடையாது. உனக்கு முன்பாக மற்றவர்களுக்கு அது தெரியும். தற்பொழுது நீயும் அதைத் தெரிந்துகொண்டாய்."

இப்பொழுதெல்லாம் அவர் வீட்டுக்கு எழுதுவதே கிடையாது. தற்பொழுது அனிஷ்கா தனக்குக் கடிதம் எழுதவில்லையே என்பதனுல் ஏற்பட்ட வேதனையும் வருத்த மும் ஒரு பக்கம். தன் தந்தையையும், தாயையும் மறந்ததினுல் தன் மனச்சாட்சி உறுத்துவது மறு பக்கம். இதெல்லாம் சேர்ந்து அவருடைய மனதில் கசப்பான உணர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் தன்னைத்தானே மிகவும் நொந்துகொண்டார். கீழே இறங்கி கேப்டனின் அறைக்குச் சென்று, வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதினுர். தான் பிறந்த வீடு, தன் தாயார், தகப்பனுர், சகோதரி ஆகியவர்களைப் பற்றிய சிந்தனை அவருக்கு மன நிம்மதியைக் கொடுத்தது. "எனக்கு அவர்கள் இருக்கிருர்கள்", என்று தனக்குத்தானே

நினைத்துக்கொண்டார். ''அவர்களை யாரும் என்னிடமிருந்து பிரிக்கமுடியாது!''

பின்னர் மீண்டும் அவர் கப்பலின் தளத்தின் மீது சென்ருர். கேபின் அறையில் கப்பல் சிப்பந்திகள் உணவருந்திக் கொண்டிருந்தனர். அவர்கள் உற்சாகத்துடன் பேசிக் கொண்டிருப்பது கேட்டது. விரைவில் காஷெவ்ரோவ் பாட ஆரம்பித்தார். ஜிகாலோவும், கிளிமாஷினும் கம்பிகளுக் கிடையில் நின்றுகொண்டிருந்தனர். ஜிகாலோ புகை பிடித் துக்கொண்டும் தணிந்த குரலில் பேசிக்கொண்டுமிருந்தார்.

'அவளுக்கு யாரோ ஒரு அமெரிக்கனைத் தெரியும். 'நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னை நேசிக்கிறேன்' என்று அவன் கூறினன். ஆனல் அவள் வெறுமனே பல்லை இளித் தாள். பின்னர் அவன் 'நீ என்னிடமிருந்து ஒரு அன் பளிப்பை ஏற்றுக்கொள்வாயா?' என்று கேட்டான். பிறகு அவன் அவளுக்கு பட்டினல்ஆன காலுறை ஒன்றைக் கொடுத் தான். ஒன்றே ஒன்றுதான், தெரியுமா! அவள் வாய்விட்டுச் சிரித்தாள். ஒரு காலுறையை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று நீ எதிர்பார்க்கிருய், எனக்கு இரண்டு கால் கள் இருப்பது உனக்குத்தெரியாதா, என்று அவள் கேட்டாள்.

'உனக்கு மற்ருென்று பிறகு கிடைக்கும்' என்று அவன் பதிலளித்தான். அவள் மிகவும் கிண்டல்காரி; அவனுடைய முகத்தில் துப்பினுள். உடனே அவன் ஒரு பெரிய சண்டை யைக் கிளப்பினன். நகர ராணுவ அதிகாரியிடம் சென்று, "தன்னை அவள் அவமானப்படுத்தியதாக புகார் கூறவும் செய்தான்."

ஜிகாலோ மகிழ்ச்சியின்றி சிரித்தான்.

''மிகவும் கீழ்த்தரமானவர்கள்'', என்று கிளிமாஷின் மன வெறுப்புடன் தலையை அசைத்தவண்ணம் கூறினன்.''

''வாண்ட்—எனி''க்கள் என்ருன் ஜிகாலோ.

இந்தப் பெயர், மூர்மான்ஸ்க் மக்களால், சிறிய தெருக் களில் நின்றுகொண்டு பட்டுக் காலுறைகளையும், சிகரெட்டு களையும் விற்கும் அமெரிக்கர்களுக்குக் கொடுக்கப்பட்ட பெயராகும். "வாண்ட் எனி?'' (ஏதாவது வேண் டுமா?) என்று கேட்பார்கள். அந்தச் சிறிய சொற்ருெடர்

போகிற போக்கில் தணிந்த குரலில் கூறப்படுவதுதான் உலகம் முழுவதிலுமுள்ள வர்த்தக சூதாட்டக்காரர்களின் 'ட்ரேட்-மார்க்' ஆக இருக்க முடியும்.

கிளிமாஷின் அப்பால் சென்றார்; ஜிகாலோ தனியாக நின்றுகொண்டிருந்தான்; அவன் தனக்குத்தானே ஏதோ முணு முணுத்துக்கொண்டும், இருமிக்கொண்டுமிருந்தான். பின்னர் அவன் அகிமோவைப் பார்த்தான்.

''நீங்கள் இன்னும் இங்கேயா இருக்கிறீர்கள்?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான். ''நீங்கள் போய்விட்டீர்கள் என்றல்லவா நான் நினைத்தேன்?''

''இல்லை, நான் இன்னும் இங்கேதான் இருக்கிறேன்'', என்று அகிமோவ் பதிலளித்தார். இங்கே இருப்பது உனக்குக் கஷ்டமாக இருக்கிறதா?'' என்று பின்னர் அவர் கேட்டார்.

''இல்லை, எங்கிருந்தாலும் சேவை, சேவைதான். ஆரம்பத்தில் இந்த இடம் கொஞ்சம் சலிப்படையச் செய்யும், என்பது வாஸ்வதந்தான். அதிக வனப்பு ஒன்றுமில்லை; கரடு முரடாக இருக்கிறது. ஆனால், நான் இருந்து பழகிய பின்னர் அவ்வளவு மோசமாகத் தென்படவில்லை. சொல்லப்போனால், அதை விரும்பவும் ஆரம்பித்தேன்.'' அவன் அகிமோவைத் துளைத்துவிடுவதைப்போல் பார்வையை செலுத்தினான். ''உங்களைப்பற்றியென்ன? நீங்கள் இதை விரும்பவில்லையா?''

''நான் இதைப்பற்றிப் பொருட்படுத்தவில்லை. எல்லாம் நன்றாகத்தானிருக்கிறது''. அகிமோவ் அவசரமாக பதிலளித்தார். பின்னர் சீறிப் பாய்ந்து வரும் அலைகளைப் பார்த்து, ''சீதோஷ்ண நிலை மகா மோசமாக இருக்கிறது'' என்றார்.

கனவு காண்பவனைப்போல் ஷிகாலோ பெருமூச்சு விட்டான்.

''நல்ல சீதோஷ்ண நிலையில் மட்டுமே நாங்கள் கடலில் பிரயாணம் செய்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் சீதோஷ்ண நிலை எப்படியிருந்தாலும் இப்பொழுது அதுபற்றி யாரும் பொருட்படுத்துவதில்லை. இதுபோன்ற ஒரு கப்பலில் சமாதான காலத்தில் புயலடிக்கும்போது கடலில் நான் சென்

திருப்பேன் என்று நினைக்கிருயா? ஆனால் பயமில்லை! தற்பொழுது நாங்கள் செல்கிறோம். இன்னும் கடலில்தான் இருக்கிறோம்! ஒரு யுத்தம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை கப்பலே புரிந்துகொள்ளும் என்று நீ நினைக்கலாம். ஆட்களைப்பற்றியென்ன? வேலையில்லாமல் ஓய்வில் இருக்கும் மனப்பான்மையே இப்பொழுது அவர்களுக்கு இல்லை. ஒவ்வொருவரும் நான்கு ஆட்களின் வேலையைச் செய்கிருர்கள். ஆயினும் யாரும் எவ்வித மனச் சலிப்பும் அடைவதில்லை. எப்படியும் அதிகமில்லை. அவ்வப்பொழுது சிறிது ஏற்படும். பெரும்பாலும் ஹிட்லரின் மீதுதான்!''

அவன் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பின்னர் அவன் அகிமோவை உற்றுப் பார்த்தவண்ணம், ''ஒருக்கால் இங்கு நீங்கள் ஓய்வெடுக்க விரும்புகிறீர்களாக்கும், காம்ரேட் கமாண்டர்? உங்களுக்கு ஒரு படுக்கையை அமைத்துத் தருகிறோம்......சாப்பிடுவதற்கும் ஏதாவது உங்களுக்குக் கொண்டுவந்து தருகிறோம்.''

''அது ரொம்ப நல்ல யோசனை. ஆம். அதுதான் நாம் செய்யவேண்டும்'', என்ருர் அகிமோவ்.

தான் எவ்வளவு விரக்தியடைந்தவனுக இருக்கிருன் என்பதை கப்பல் தலைவன் தெரிந்துகொள்வதை அவமானமாகக் கருதினுர். ''கடந்த காலத்தில் அவ்வாறு ஏற்பட்டிருக்கவே செய்யாது'', என்று கோபங்கலந்த ஆச்சரியத்துடன் அவரது சிந்தனை ஓடியது.

அந்த நாளிலிருந்து அகிமோவ் அந்த சப்மரைன்—கப்பலிலிருந்து எங்கும் வெளியே போகவில்லை. படேய்கின் மிகவும் வற்புறுத்திக் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பார். கப்பலில் வாழ்க்கை எவ்வாறு இயங்குகிறது என்பதைத் தெரிந்து கொள்ளவும், மாலுமிகளுடன் பேசவும் தான் விரும்பியதாகக் கூறினுர். அவைகளெல்லாம் தனக்கு மிகவும் உபயோகமாயிருந்ததாகக் கூறினுர். படேய்கின் அதைக் கேட்டு சிறிது மன வருத்தமடைந்தார். ஆனல் அவர் அதை ஆட்சேபிக்கவில்லை.

அத்தியாயம் ஆறு

கடலும் தரையும்

"ஓய்வில் இருப்பதைப்போன்ற மனோபாவம் கூடாது." ஷிகாலோ வேறு அர்த்தத்தில் இதைக் கூறுவிட்டாலும் கூட இந்த வார்த்தைகள் அகிமோவுக்கு ஒரு நிந்தனையாகப் பட்டது. அந்த வார்த்தைகள் அவரை உறுத்திக்கொண்டே யிருந்தன. அனிஷ்காவைப் பற்றி அதிகம் சிந்திக்காமலிருக்க முயன்றார். அவளிடத்திலிருந்து இன்னும் அவருக்குக் கடிதம் ஒன்றும் வரவில்லை. எனவே, தானே ஒரு கெடுவை நிர்ணயித்துக்கொண்டார். அதுதான் கடைசி கெடு, என்று தனக்குத் தானே கூறிக்கொண்டார். அதற்குப் பிறகு அனிஷ்காவை மறக்க முயல்வதாகவும், அவளைப்பற்றிய நினைவைத் தன் இதயத்திலிருந்தே வேருடன் களைந்து விடுவதாகவும் கூறிக் கொண்டார். ஆனால் அது சாத்தியமில்லாத காரியம். அதை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை அமுல் நடத்துவதாகவும் அவர் கருதவில்லை. ஆனால் அவளைப்பற்றிய நினைவைத் தன் இதயத்தின் அடியாழத்தில் எங்கோ ஒரு மூலையில் மட்டும் வைத்துக்கொள்வதென்றும், இதர சிந்தனைகள், நினைவுகள்—எல்லாவற்றுக்கும் மேலாகக் கரையிலுள்ள வேலை ஆகியவற்றின் மூலம் அனிஷ்காவைப் பற்றிய நினைவை மறந்து விடவும் அகிமோவ் உறுதிகொண்டார்.

1944, புத்தாண்டு பிறப்பு நாள் தான் கடைசி கெடு என்று முடிவு செய்தார்.

அதற்கு முந்தினநாள் இரவு, மலையின் மீது முகாமடித்திருந்தவர்கள் அனைவரும் புத்தாண்டின் பிறப்பைக் கொண்

டாடுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தனர்; சப்ளை அதிகாரிகள் வோட்கா கொடுத்துக் கொண்டிருந்தனர்; பெண்கள் கேக் தயாரித்துக் கொண்டிருந்தனர்; குழந்தைகள், தாங்களே செய்த பொம்மைகளை சிறு ஆர்க்டிக் பர் மரங்களில் வைத்து அலங்காரம் செய்து கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் கப்பல்களின் கோஷ்டி ஒன்றுடன் லெப்டினென்ட் படேய்கினின் கப்பல், கடலில் புறப்பட வேண்டுமென்று உத்திரவு வந்தது. இந்த திடீர் உத்தரவால் நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தது நன்கு தெரிந்தது. ஆயினும் அவர்கள் கப்பலில் தங்கள் தங்கள் இடங்களுக்கு முண்டியடித்துக் கொண்டு ஓடினர்.

படேய்கின் கரையிலேயே இருக்க வேண்டுமென்றும், அவருடைய உதவியாளர் மட்டுமே கப்பலின் தலைமையை ஏற்று நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்றும் கடற்படை தலைமைக் காரியாலயம் உத்திரவிட்டது. புத்தாண்டைத் தன் மனைவியுடன் கழிக்க விரும்பிய படேய்கினுக்கு இது மிகவும் ஏற்றதாக இருந்தது. ஆயினும் அவர் கவலையடைந்தார். தான் இல்லாமல் தன் கப்பல் கடலில் செல்வதை அவரால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை. மற்றவர்களுடன் கடலில் பாய்ந்து இருளில் அது மறைவதை அவர் சங்கடமும் ஏக்கமும் நிறைந்த பார்வையுடன் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

கடலில் வந்து கொண்டிருக்கும் அமெரிக்கக் கப்பல் கோஷ்டி ஒன்றை சந்தித்து அதை மூர்மான்ஸ்குக்கு அழைத்துச் செல்லும்படி அக்கப்பலுக்கு உத்திரவிடப் பட்டிருந்தது.

அந்த இருளில் கப்பலைக் காண்பது அசாத்தியமாயிருந்தது. ஆயினும் தனிமையாகச் செல்வதாக எவ்வித உணர்ச்சியும் ஏற்படவில்லை. அதற்கு இடமிருக்கவில்லை. அவ்வப்பொழுது சிக்னல் விளக்குகள் இருளில் கண்சிமிட்டின. அமெரிக்க கப்பல் கோஷ்டியின் கமாண்டரிடமிருந்து வந்த செய்திகளை வயர்லெஸ் ஆபரேட்டர், கப்பலின் பாலத்தின் மீது இருந்த அகிமோவுக்கு அவ்வப்போது அனுப்பிக்கொண்டிருந்தார். நடுநிசி சமயத்தில் வானத்திலிருந்த மேகங்கள் அகன்றன. வடதுருவப் பிரதேச ஒளியால் வானம் பிரகாச

மாகக் காணப்பட்டது. அகிமோவ் மெகாபோனை எடுத்து, கப்பல் தளத்திலிருந்தவர்களுக்கு மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக்களைக் கூறினார். கப்பலில் கீழே இருந்தவர்களுக்கும், தகவல் குழாய் வழியாக வாழ்த்துக்களை அனுப்பினார். வாழ்த்துக்கூறும் சிக்னல்கள் (அடையாள வெளிச்சம்) கப்பலுக்குக் கப்பல் ஒளி வீசிப் பரிமாறிக் கொண்டன.

தூரத்தில் புகை தெரிவதாக ஒரு சிக்னலர் அறிவித்தார்.

அமெரிக்கக் கப்பல் கோஷ்டி கண்ணுக்குத் தென்பட்டது. அதில் பெரியதும், சிறியதுமாக 25 கப்பல்கள் இருந்தன. அதன் பக்கங்களிலும் கடற்படை யூனிட்டுகள் வந்து கொண்டிருந்தன.

அந்த அந்நியக் கப்பல்களில் சிலவற்றை மாலுமிகள் அடையாளம் கண்டுபிடித்துக் கொண்டனர். "அதோ, லேடி ஜேன், கோல்டன் ஸ்டெல்லா" என்று காஷெவரோவ், அமெரிக்கக் கப்பல்கள் வந்து கொண்டிருந்த திசை நோக்கித் தலையை அசைத்துக் காட்டினார். அவருடைய கைகள் ஏதோ வேலை செய்து கொண்டிருந்தன.

விரைவில், அந்த வர்த்தகக் கப்பல்களில் இருந்த ஆட்களின் மீது எண்கள் வரையப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது. 4 மாடிகள் உள்ள வீடுகளின் அளவு உயரமாயிருந்த அந்தக் கப்பல்களின் மேல் தளங்களில் நின்று கொண்டிருந்த அவர்கள், தங்களைப் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லுவதற்கு வந்து கொண்டிருக்கும் சோவியத் பாதுகாப்புக் கப்பல்களை நோக்கித் தங்கள் தொப்பிகளை அசைத்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

நம்முடைய நாசகாரிக் கப்பல்கள், சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்கள், எஸ்கார்ட் கப்பல்கள், ட்ராலர்கள் ஆகியவை வேகம் குறைந்து, ஏற்கனவே ஒத்துக்கொண்ட வியூகத்தில் அமைந்து கொண்டன. அகிமோவ், தங்கள் கப்பல் கோஷ்டியின் ஒரு கோடியில் இருந்தார். சிக்கலான பிரயாணத்திற்குப் பின் கப்பல் கோஷ்டி மூர்மான்ஸ்க் துறைமுகத்தை நோக்கிச் சென்றது. கப்பல்கள் மெதுவாகத்தான் செல்ல வேண்டியிருந்தது. ஏனெனில் மிகவும் கனமான வர்த்தகக்

கப்பல்களாக இருந்ததால் அதற்கேற்றபடி வேகத்தைக் குறைக்க வேண்டியிருந்தது.

ரைபாச்சி தீபகற்பம், கன்னங்கரேலென்ற தண்ணீரி னின்று கண்கள் கூசும் வெண்ணிறமான உறைபனியால் மூடப்பட்ட மலையொன்று எழுவதைப் போன்று கண் முன்னே தோன்றிய நேரத்தில், துறைமுகத்திற்குச் சிறிது தூரத்தில் கடல் அலைகளினூடே ஒரு குழாய் (peris cope) ஒரு விஞடி நேரம் மேலே காணப்பட்டது. அகிமோவும், அவரது இதர மாலுமிகளும் இதைப் பார்த்துவிட்டனர்.

ஒரு விநாடி கூட தாமதிக்க முடியாது. "தாக்குங்கள். முழு வேகத்துடன் முன் செல்லுங்கள்," என்று அகிமோவ் உத்தரவிட்டார்: "கடலில் ஆழ எறியும் குண்டுகளைத் தயா ராக வைத்திருங்கள்," அந்த பெரிஸ்கோப் குழாய் எந்த இடத்தில் தோன்றி மறைந்ததோ அந்த இடத்திற்குக் கப்பல் விரைந்து செல்ல, சம்பிரதாயப்படி கப்பலின் கொடிமரத் தில் அபாய அறிவிப்புக் கொடி ஏற்றப்பட்டுள்ளதாகவும், பீரங்கிப் பிரயோகம் செய்யப்படுவதாகவும் நினைத்துக் கொண்டார். ஆழமாகச் செல்லும் குண்டுகள் கடலில் வீசப் பட்டன. தண்ணீர் வெகு உயரமாக மேலே எழுந்தது.

சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் சுற்றி வந்து திரும்பிச் சென்றது. ஆகாயத்தில் வெடிக்கப்பட்ட அபாய அறிவிப்பு வெள்ளை ரார்க்கெட்டுகளால் வானம் பிரகாசமாகத் தோற்ற மளித்தது. பின்னர் தீபகற்பத்தின் மீது பீரங்கிப் பிரயோ கத்திஞல் ஏற்பட்ட ஜுவாலை, இரவைப் பகலாக்கியது. மிக வும் அருகிலிருந்த அமெரிக்கக் கப்பலின் மேல் தளத்தில் நின்று கொண்டிருந்தவர்கள் பீதியிஞல் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

"ஒன்றும் கவலைப்படவேண்டாம், உன்னை பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்," என்று அகிமோவ், அந்தக் கப்பலுக்கு ஆறுதலளிப்பது போல் முணு முணுத்தார். அமைதியான தண்ணீரில் ஒளிந்து கொண்டிருக்கும் விரோதி யின் பால் ஏற்பட்ட வெறுப்பு அவரது மனதில் நிறைந்திருந் தது. அதே சமயத்தில் அயல்நாட்டுக் கப்பல்களைப் பற்றிய கவலையும் அவருக்கு ஏற்பட்டது. ஏனெனில் அந்தக் கப்பல்

களில் மேஜர் கொலோவின், மேபொரோடா, பெய்ஸூல்லின், விட்யகோவ், பில்கோவ், ஒரேஷ்கின் ஆகியோருக்கு, அனிஷ்காவுக்குக் கூடத்தான் பெரிதும் அவசியமான சாமான் கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அபாய அறிவிப்பு மணி இன்னமும் கணகண வென்று ஒலித்துக்கொண்டே இருந்தது. "ரெடி!'' அகிமோவ் உத்திரவிட்டார். மீண்டுமொருமுறை, தண்ணீரில் ஆழச் செல்லும் குண்டுகள் சுடப்பட்டன மீண்டுமொருமுறை பளபள வென்று ஒளி வீசும் அலைகள் உயரக்கிளம்பி தண்ணீரில் அமிழ்ந்தன. பின்னர் அகிமோவின் உத்திரவுக்கிணங்க, கப்பல் பின்னால் சுற்றித் திரும்பி, தீபகற்பக் கடலில் இருந்து பரந்த கடலை நோக்கிச் சென்றது. கிளிமாஷின் கப்பலின் பின்புறத்தில் நின்று கொண்டு, கடலில் ஆழமாகப் பாய்ந்து வெடிக்கும் குண்டு களைப் போடுவதற்குத் தயாராக இருந்தார்; அவர் ஏதோ உரத்த குரலில் சொன்னார். கீழேயிருந்து, கப்பலை செலுத்து பவர் தளதளத்த குரலில் "வலதுபக்கத்தில் தாக்கவும். ஒன்று, மூன்று ஐந்து,'' என்றார்.

மேலும் பல குண்டுகள் வீசப்பட்டன. சப்மரைன் எதிர்ப்புக் கப்பல் பின்னால் சுற்றித் திரும்பியது. அகிமோ வுக்கு உதவும்படி கப்பல் கோஷ்டியின் கமாண்டர் விடுத்த உத்திரவின்படி வேறு இரண்டு கப்பல்களும் வந்துகொண் டிருந்தன. அக்கப்பல்கள் அருகில் சமீபித்தன. அப்பொழுது மாலுமிகளில் ஒருவர் பாலத்தை நோக்கி தன் முகத்தைத் திரும்பி, மகிழ்ச்சி பொங்க திடீரென்று ஆரவாரம் செய்தார்.

சற்று தூரத்தில், நுரை கொப்பளித்துக் கொண்டிருக் கும் கடலில், தண்ணீர் மட்டத்தின் மீது குறுகலான எண்ணெய் வட்டம் ஒன்று மெதுவாகப் பரவிக் கொண்டி ருந்தது. முன்பு ஆரவாரம் செய்த அதே மாலுமி, வெற்றிக் களிப்புடன் "ஹூர்ரா!" என்று குரலெழுப்பினார்.

ஆனால் அந்த ஜெர்மன் சப்மரைன், தப்பித்துக் கொள்ளும் முயற்சியில்தான் செயலற்று நாசமடைந்து போனதாகப் பாசாங்கு செய்யும் முறையில் எண்ணெயை வெளியே விடுவதற்கான சாத்தியப்பாடும் இருந்தது, என்பது வாஸ்தவம்தான். அந்த சப்மரைனை நாசமாக்கு

வதற்கும், அல்லது அது மூழ்கிவிட்டதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், ஒரு வாரம் முழுவதும் காவல் போடுவதற்கு அகிமோவ் ஒத்துக் கொண்டிருந்திருப்பார். ஆனால் கப்பல் கோஷ்டியுடன் வந்து சேரும்படி அவருக்கு உத்திரவிடப்பட்டிருந்தது. அவர் அப்படியே செய்யவும் செய்தார். வேறு இரண்டு சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்களை, அந்தக் குறிப்பிட்ட ஸ்தலத்தில் ரோந்து வேலைக்கு ஏற்பாடு செய்தார். தான் சப்மரைனைக் கண்டுபிடித்து, உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டதின் காரணமாக, ஆபத்தான டார்பிடோவை வெடிக்காமல் செய்ய முடிந்தது, என்ற எண்ணத்தால் அவர் மன நிறைவு பெற்றார்.

கப்பல் கோஷ்டியை மூர்மான்ஸ்க் துறைமுகத்திற்கு அழைத்துச் சென்றதற்குப் பின், அகிமோவ் இதர கடற்படை யூனிட்டுகளுடன் தன் தளத்திற்குத் திரும்பினார். அவருடைய கப்பல், இதர சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்களின் அருகில், வழக்கமாக அது கட்டப்படும் இடத்தில் கரையுடன் கட்டப்பட்டு நங்கூரமிடப்பட்டது.

அப்பொழுதுதான், தபால் கொண்டுவரக்கூடிய, வேகமாகச் செல்லும் சிறிய நீராவிக் கப்பல், துறைமுகத்தை நோக்கி வந்தது. அதனுடைய பளிச்சிடும் பச்சைவண்ணம் அதை நன்கு அடையாளம் காட்டியது. அது சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்களுக்கு சிக்னல் காட்டியது. "உங்களுக்குத் தபால் வந்துள்ளது. நான் உங்கள் அருகில் வரட்டுமா?" என்று அது சைகையின் மூலம் கேட்டது. இதர எல்லாக் கப்பல்களிலிருந்த மாலுமிகளும், கப்பல் தளத்தின்மீது வந்தனர். தங்கள் தபாலுக்காகக் காத்திருந்தனர். இதற்கிடையில் அகிமோவ், படேய்கினிடம், விரோதி சப்மரைனுடன் தங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றிக் கூறிக்கொண்டிருந்தார். விரோதி சப்மரைனைத் தாக்கிய விபரங்கள் எதையும் ஒன்றுவிடாமல் அவர் கூறிக்கொண்டிருந்தார். அதே சமயத்தில், அவருடைய கவனம் பூராவும் தபால் கத்தையின்மீதே இருந்தது. கப்பல் தலைவன் ஷிகாலோ அக்கடிதங்களை உரியவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார். சில கடிதங்கள் வண்ண மேலுறைகளைக் கொண்டதாக

இருந்தன. இதர கடிதங்கள் வெள்ளை நிற முக்கோணங்க ளாக இருந்தன. சற்று நேரத்திற்குள் ஐந்தே கடிதங்கள் தான் எஞ்சியிருந்தன. பின்னர் இரண்டு, இறுதியில் ஒன்று மட்டுமே எஞ்சியிருந்தது. அதை ஷிகாலோ தன் கையில் வைத்துக் கொண்டு திருப்பிப் பார்த்த வண்ணம், பல்லை இளித்துக்கொண்டே, பிரித்துப் படிக்க ஆரம்பித்தார்.

''அவ்வளவுதானா?'' என்று அகிமோவ் கேட்டார்.

''மிகவும் நல்ல வேலை செய்தீர்கள், கமாண்டர்!'' என்று படேய்கின் பெருமிதத்துடன் கூறினார்.

''மிகவும் மகிழ்ச்சி தரும் சிறந்த வேலை!'' என்று கண் களில் ஒளி வீசும் குதூகலத்துடன் கூறினார்.

அகலமான, செக்கச் சிவந்த நிறமான முகத்துடனும், பிதுங்கும் முழியும், கிட்டப் பார்வையுள்ள கண்களுடனும் கூடிய ஒரு சீனியர் லெப்டினென்ட், சப்மரைன் எதிர்ப்புக் கப்பலின் தளத்திற்கு வந்தார். ''யுத்த நிருபர் கொவ லேவ்ஸ்கி,'' என்று அவர் அகிமோவிடம் கூறினார். பின்னர் அவர் தன்னுடைய குறிப்புப் புத்தகத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, ஜெர்மன் சப்மரைன் மூழ்கடிக்கப்பட்டது பற்றிய தகவல்களை உடனே கேட்க ஆரம்பித்தார்.

''அது மூழ்கடிக்கப்படவேயில்லை'' என்று அகிமோவ் கவலையுடன் கூறினார்.

முற்றிலும் அதிர்ச்சி அடைந்தவராய் கொவலேவ்ஸ்கி வெறுமனே படேய்கினைப் பார்த்தார். ''என்ன சொல்கிறீர் கள்? தலைமை நிலையத்தில் அவர்கள் என்னிடம் கூறினார் களே...'' என்று அவர் கேட்டார்.

''தலைமைக் காரியாலயத்திற்கு நிச்சயமாகத் தெரியாது. ஜெர்மானியர்களுக்கு மட்டும்தான் தெரியும்,'' என்று அகிமோவ் கூறினார்.

ஆனால் கொவலேவ்ஸ்கியை அவ்வளவு சுலபத்தில் தட் டிக் கழித்து விட முடியாது. இறுதியில் அகிமோவ், அந்த நடவடிக்கையைப் பற்றிய எல்லா விபரத்தையும் அவருக்குக் கூற வேண்டியேற்பட்டது. படேய்கின் அவரையும், நிருப ரையும் தன் அறைக்கு அழைத்துச் சென்றார். அகிமோவி னுடைய அடக்கமான தன்மையை அவர் ஏற்றுக்கொள்ள

வில்லை. ''எழுதிக்கொள், எழுதிக்கொள்'', என்று அவர் கொவலேவ்ஸ்கியிடம் அடிக்கடி கூறிக்கொண்டேயிருந்தார்.

பிறரை பேச வைப்பதில் கொவலேவ்ஸ்கி ஒரு அலாதியான குணம் படைத்தவராக இருந்தார். இதுபோன்ற கடினமான நிலைமைகளில், ஆசாமிகள் ஏதும் பேச மறுக்கும் பொழுது, அவர் தன் முகத்தில் வரவழைத்துக் கொள்ளும் பாவங்களைப் பார்க்கும்போது, ஒருவர் தனக்குத் தெரிந்த யாவற்றையும் சொல்லாமலிருப்பது ஏதோ ஒரு குற்றமாக அவரை நினைக்க வைத்துவிடுகிறது.

கொவலேவ்ஸ்கி கடலையும், மாலுமிகளையும் மிகவும் நேசித்தார். தான் ஒரு போரிடும் ராணுவ அதிகாரியாக இல்லாமல் வெறும் நிருபராக இருப்பதற்காக சிறிது வெட்கப் படவும் செய்தார். மாஸ்கோவில் சாதாரண ஜனங்களிடம் அவர் பேசும்போது, தானும் ஒரு கப்பலில் ஒரு அதிகாரி என்ற எண்ணத்தை உண்டுபண்ணுவதற்கு முயற்சி செய்தார். அவர் இவ்வாறு செய்ததற்குக் காரணம் இயற்கையாகவே பிறரை ஏமாற்றும் தன்மை உடையவராக இருந்ததினுல் அல்ல. அதற்கு மாருக அவர் மிகவும் நேர்மையான மனிதர். ஆனுல் ஒருவித தற்பெருமையின் காரணமாகவே அவ்வாறே செய்தார். தான் பிறவியிலேயே ஒரு மாலுமி என்று அவர் மனப்பூர்வமாகவே நினைத்தார். ஆனுல் துர்ப்பாக்கிய சந்தர்ப்பச் சூழ்நிலைகளின் காரணமாகவே தான் கரை மீதே இருக்கும்படியான நிலைமை ஏற்பட்டது என்று கருதினுர். எல்லா வகையான கடற்படை யூனிட்டுகளைப் பற்றியும் துல்லியமாகத் தெரிந்து வைத்திருந்தார். சகல ஜெர்மன், பிரிட்டிஷ், அமெரிக்க சண்டைக் கப்பல்கள், விமானந் தூக்கிக் கப்பல்கள் அல்லது குருய்ஸர்கள் ஆகியவை கட்டப்பட்டது, மூழ்கடிக்கப்பட்டது—ஆகியவை பற்றியெல்லாம் துல்லியமான தகவல்களை தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். 'பீம்ஸ்', 'கோமிங்ஸ்' 'ஹல்' போன்ற கடற்படை சம்பந்தப்பட்ட ஏதாவது சில வார்த்தைகள் வராமல் அவரால் பேசவே முடியாது.

சம்மரைன்கள், டார்பிடோ படகுகள், நாசகாரிகள் ஆகியவற்றின் போர் விபரங்கள் பற்றிய ஏராளமான கதை

களைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார். ஏதாவதொரு வழியில் புகழ் பெற்றிருந்த வட பிராந்திய கடற்படை அதிகாரி அல்லது மாலுமி ஒவ்வொருவரையும் நேரில் அறிமுகமாக்கிக் கொண்டிருந்தார்.

''தற்பொழுது உங்களை நான் அறிமுகம் செய்து கொண்டுவிட்டேன்''. என்று அவர் அகிமோவிடம் கூறினர். அகிமோவிடம் சிறிது உரையாட வேண்டுமென்று அவர் விருப்பம் கொண்டிருந்தார். ஆனல் அகிமோவின் கடுமையான, கடுகடுப்பான தோற்றம் அவருக்கு சங்கடமான நிலைமையை உண்டுபண்ணியது. தன் மனது எங்கோ தூரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருப்பதை உணர்ந்த அவர் விடை பெற்றுக்கொண்டு கரைக்குச் சென்ருர்.

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று படேய்கின் அகிமோவைக் கேட்டார். என்னுடைய இடத்திற்கு வாருங்கள். உங்களுக்காக நாங்கள் புத்தாண்டு கேக் கொஞ்சம் வைத்திருக்கிருேம்,'' என்ருர்.

''உண்மையாகவா, மன்னித்துவிடுங்கள் படேய்கின். நான் வர இயலாது'', என்று அகிமோவ் எங்கோ பார்த்துக் கொண்டு கூறினர். ''மிகுனேவைப் பார்ப்பதாக நான் வாக்களித்துள்ளேன்.''

நீர் மூழ்கிக் கப்பலின் ஊழியர்கள் தங்கியிருந்த இடத்தில் மிகுனேவைப் பார்ப்பதற்கு உண்மையாகவே அகிமோவ் சென்ருர். ஒரு நிமிஷத்திற்கு முன்னல் வரைக்கும் அங்கு செல்வதாக அவருக்கு உத்தேசமேயில்லாமல் இருந்தது.

ரோந்து வேலையை முடித்துக்கொண்டு மிகுனேவ் இரண்டு மணி நேரத்திற்கு முன்புதான் அங்கு வந்து சேர்ந்திருந்தார். அவருடைய சப்மரைன் ஒரு ஜெர்மன் நாசகாரிக் கப்பலை சேதத்திற்குள்ளாக்கியிருந்தது. அதற்குப் பின் தானே ஆபத்தில் மாட்டிக் கொண்டது. மூன்று விரோதிப் புயல் படகுகள் அந்த சப்மரைனைத் தாக்கின.

''நாங்கள் எப்படியோ தப்பினேம். இரண்டு மணி நேரம் அவை எங்களைத் துரத்திக்கொண்டே வந்தன. நாங்கள் செத்தோம் என்று உண்மையாகவே நினைத்தோம். கப்பற் படை தளபதி இப்பொழுதுதான் வந்து எங்களைப்

பார்த்துவிட்டுப் போனர். "அந்த நாசகாரிக் கப்பல் மூழ்கி விட்டது என்று நம்முடைய விமானங்கள் அறிவித்தன", என்று அவர் கூறினர். அதற்காக எங்களுக்குப் பரிசுகள் கிடைக்கும். பேவல், நீங்கள் வந்ததைப் பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நீங்கள் அந்த படேய்கினை விட்டு வந்ததிலிருந்து மிகவும் மனம் சோர்ந்து காணப்படு கிறீர்கள். உங்களுடைய உற்சாகத்தைத் தட்டி எழுப்ப நாம் கொஞ்சம் மது அருந்துவோம். உங்களுடைய முகம், உண்மையிலேயே ஒரு சிறை வாயிலைப்போல் இருக்கிறது", என்று மிகுனேவ் கூறினர்.

"ஜெர்மானியர்கள் வெற்றி போதையில் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒரு சோவியத் சப்மரைனை மூழ்கடித்து விட்டதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருப்பார்கள். அவர் களின் தலைமைக் காரியாலயத்தில் அவ்வாறுதான் ரிபோர்ட் தயார் செய்துகொண்டிருப்பார்கள்; அவர்களுடைய பத் திரிகை நிருபர்கள் அதைப்பற்றித்தான் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருப்பார்கள், என்று நான் அறுதியிட்டுக் கூறு கிறேன்", என்று அகிமோவ் கூறினர்.

"இங்கு நாம் அவைகளை எண்ணி, எண்ணி சிரித்துத் தமாஷ் பண்ணிக்கொண்டிருக்கிறோம்", என்று மிகுனேவ் இடைமறித்துக் கூறினர். இந்த விஷயம் அவருக்கு மிகவும் வேடிக்கையாகப் பட்டது.

அவர் தன்னுடைய தோழர்களைக் கூப்பிடச் சென்றார். சாப்பாட்டு மேஜையில் எல்லாம் விரைவில் கொண்டு வந்து வைக்கப்பட்டு தயாராயிற்று. சப்மரைன் ஊழியர்கள் அண்மையில் நடந்த போர் நடவடிக்கையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். ஓரளவு தற்பெருமையாகவும் பேசாமல் அவர்களால் இருக்க முடியவில்லை. சப்மரைனை ஓட்டிச் செல்லும் ஊழியர்களே கடற்படையில் மிகவும் முக் கியமான நபர்களென்றும், ஜெர்மானியர்களுக்கு அவர்கள் தான் மிகவும் அதிகமான நஷ்டத்தை உண்டாக்கியவர்க ளென்றும், ஒரு நிதான மனேபாவம் கொண்ட ஒரு லெப்டி னெண்ட் அகிமோவுக்குப் புரிய வைப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார். அகிமோவ் மிகவும் களைப்படைந்திருந்

தார். ஆகவே அவர் ஆட்சேபணை ஏதும் கூறவில்லை. ஆனால் சப்மரைனின் ஆட்களை நையாண்டி செய்தார். ''நாசகாரிக் கப்பல்கள் எப்படி? அவைகளால் ஏதும் உபயோகமில்லையா?''

சப்மரைன் ஆட்களுக்கு நாசகாரிக் கப்பல்களைப் பற்றி ஆட்சேபம் ஏதும் கிடையாது. ஆயினும் கடற்படையின் எல்லாப் பிரிவுகளையும்விட சப்மரைன்தான் உயர்ந்த ஸ்தானத்தை வகிப்பதாக வலியுறுத்தினர். அப்பொழுதும் அகிமோவ் அவர்கள் கூறியதை மறுத்துச் சொல்லவில்லை. ஆனால் உடனே கேட்டார்: ''கடற்படையைச் சேர்ந்த விமானங்களோ? அவ்வளவொன்றும் உபயோகமில்லை, இல்லையா?'' என்று.

அவர்கள் விமானப் படைக்கு உரிய முக்யத்துவத்தை ஒப்புக்கொண்டனர். ஆயினும் அது சப்மரைன்களின் முதல் ஸ்தானத்திற்கு பாதகமில்லாத முறையிலேயே.

அகிமோவ், ஏராளமாக மது அருந்தினர். ஆனால் அது அவரிடம் வெளிப்படையாக எந்தவித மாறுதலையும் ஏற்படுத்தவில்லை.

திடீரென்று மிகுனேவின் மனம் இளகியது. பாராட்டுதல் தெரிவிக்கும் முறையில் சுற்றிலும் ஒரு முறை பார்வையை செலுத்திவிட்டு, ''நீங்களெல்லாம் எவ்வளவு சிறந்தவர்கள்? நீங்கள் எல்லோருமே! அவரைத் தவிர''—என்று அகிமோவைச் சுட்டிக்காட்டினர். ''அவர் என்னுடைய மிகச் சிறந்த நண்பர். அவர் தன்னுடைய திறமை எல்லாவற்றையும் இனிமேல் உங்களுக் காட்டுவார். அவரைப்பற்றி எனக்கு நன்ருகத் தெரியும். பேவல் நீர் ஓர் திறமையான ஆசாமி! உங்களிடத்தில் ஒரே ஒரு குறைபாடு மட்டுமே இருக்கிறது. நீங்கள் சப்மரைனில் செல்லும் ஆளல்ல'', என்று கூறிவிட்டு ''பேவல் அகிமோவுக்காக!'' என்று சொல்லி மதுக் கிண்ணத்தை உயர்த்தினர்; அவர்கள் அனைவரும் அதை ஆமோதித்தனர். பின் கடற்படைக் 'கிளப்'புக்குப் போவதற்கு ஒத்துக் கொண்டனர்.

குதூகலமாக இருந்த அந்த கோஷ்டியினர் தங்களுடைய கோட்டுகளை அணிந்துகொண்டு வெளியில் கிளம்பினர். வழியில் ஒரு கடுமையான உறைபனிக் காற்று அடித்து அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. உறைபனி மேகமாகப் படர்ந்தது. அதில் அருகில் நடக்கும் ஆளையே பார்க்க முடியாது.

ஒரு மேகம் உங்களைக் கடந்து செல்லும். உறைபனி பெய்த தாகவே நீங்கள் நினைக்கமாட்டீர்கள. உடனே திடீரென்று மற்ருென்று பாய்ந்து வரும். தூரத்தில் வால்ட்ஸ் இசை கேட்டது. திடீரென்று அகிமோவின் மனதில், ஓர்ஷா அருகில் அந்த இலையுதிர் கால இருள் சூழ்ந்த இரவில், தன்னுடைய போர் முனை மறைவிடத்திலிருந்து வரும் இசையின் வழிகாட்டுதலைக் கொண்டு அனிஷ்கா, மலைச்சரிவில் நடந்து போய்க்கொண்டிருப்பதாகக் கற்பனை எழுந்தது. ஒருகணம் அவருக்கு இனந்தெரியாத ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. தானே அனிஷ்காவாக, அந்தப் பனி நிறைந்த இரவில் தனியே நடந்து போய்க்கொண்டிருப்பதாகவும், வால்ட்ஸ் இசை கேட்டுக்கொண்டிருப்பதாகவும், ஒரு சமயம் அவளுக்காகக் காத்துக்கொண்டிருப்பது போன்றதுமான உணர்ச்சி அகிமோவிடம் ஏற்பட்டது.

பிறகு அந்த விநோதமான உணர்ச்சி கலைந்துவிட்டது. தான் காதலித்த பெண் தனக்கு வெகு அருகில் இருப்பதாக அவருக்கு ஏற்பட்டிருந்த உணர்ச்சி மறைந்துவிட்டது. அதற்கு பதிலாக விரக்தியும், தன்னைப்பற்றியும் அனிஷ்காவைப் பற்றியும் சந்தேகங்களும் இப்பொழுது அவரை வாட்டத் தொடங்கின. ஒரு பயங்கரமான துரதிருஷ்டத்தினுல் தான் பழி வாங்கப்பட்டிருப்பதாக அவர் உறுதியாக எண்ணினுர். அனிஷ்கா தன்னைப் பூர்ணமாக மறந்துவிட்டதாகவும் கருதினுர். ஏன் இந்த நிலை ஏற்பட்டது என்று சிறுபிள்ளைத்தனமாக கற்பனை செய்து பார்க்க முயன்ருர். இதைத் தவிர வேருென்றையும் எதிர்பார்க்க முடியாது என்று நினைத்துக் கொண்டார். அவர் எப்பொழுதும் தன்னை நினைவில் கொள்வாள் என்றும், தன்னைக் காதலிப்பாள் என்றும் அவர் ஒரு காலத்தில் நினைத்திருந்தார். ஆனுல், சூரியனுடைய கிரணங்களை ஒரு கண்ணுடி ஜாடிக்குள் பிடித்து அடைத்து வைத்துவிட முடியும் என்று பழங்காலத்தில் ரசாயன நிபுணர்கள் நினைத்தமாதிரி, அகிமோவின் எண்ணம் விவேகமற்ற பிரமையாகத்தான் இருந்தது.

அகிமோவுடன் அவ்வளவு விரைவாக அவள் காதல் கொண்டுவிட முடியுமென்ருல், வேருெருவருடன் அவ்வாறு

அவள் காதல் கொள்வதற்குத் தடையாக இருப்பதுதான் என்ன?

இன்னும் எவ்வளவோ நல்ல வாலிபர்கள் இருக்கிறூர் கள். உதாரணமாக, புதிய முதலாவது பட்டாலியன் தளபதி கேப்டன் செர்னிக் இருக்கிறூர். அவரைப் படை வீரர்களும் நேசிக்கிறூர்கள்; அதிகாரிகளும் நேசிக்கிறூர்கள்; கொலோவி னும் நேசிக்கிறூர். செர்னிக் அழகான தோற்றமுடையவர். அமைதியும், தன்னடக்கமும் கொண்டவர். நுண்மதியுட னும் சுறு சுறுப்பாகவும் இயங்கி வேலே செய்பவர். தன்னைப் போல் ஒழுங்கற்ற முறையிலும், தான்றேன்றித்தனமாகவும் செயல்படுபவரல்லர். இந்த விஷயத்தைப் பற்றி அகிமோவ் சிந்திக்க, சிந்திக்க, கேப்டன் செர்னிக்-கேப்டன் செர்னிக் மட்டுமே அனிஷ்காவின் காதலேப் பெறத் தகுதி வாய்ந்தவர் என்ற முடிவுக்கே வந்தார்.

“இன்னும் நாங்கள் புருஷனும் மனேவியும்தான்’’, என்று அகிமோவ் சினங்கொண்டு தனக்குத்தானே வாதித்துக் கொண்டார். ஆனுல் உடனேயே இந்த எண்ணம் அவருக்கு சிரிப்பையும் உண்டுபண்ணியது. எங்கோ, அனேகமாக இந்தக் கோளத்தின் மறுபுறத்தில் ஒரு பெரிய அரசாங்கப் பதிவுப் புத்தகத்தில் அனிஷ்காவின் பெயரும், தன்னுடைய பெயரும் அக்கம் பக்கத்தில் எழுதி வைத்திருப்பது தனக்கு எவ்வகையில் பிரயோசனப்படும்? இந்த இரண்டு பெயர்களே யும் எழுதும்போது கை நடுங்கிய, நடுத்தர வயதுடைய பெண்ணுகிய அந்தப் பதிவு அதிகாரியால் இதைப்பற்றி என்ன செய்ய முடியும்?

துயரத்தின் வேதனே தன் நெஞ்சைப் பிளப்பதாக அகிமோவ் உணர்ந்தார். ஆலங்கட்டிகளேப் போல் தன் முகத்தைத் தாக்கிய காற்றினூடேயும், உறைபனியினூடே யும் பல்லேக் கடித்துக்கொண்டு, “இன்னும் பலமாக, பல மாகத் தாக்குங்கள்! ஒரு முட்டாள் விஷயத்தில் தாக்குவதைத் தவிர நீங்கள் வேறு என்ன செய்யமுடியும்!” என்று முணு முணுத்தான்.

பின்னர், தான் எவ்வளவு உயிரற்ற மனே நிலேயில் இருக் கிறேம் என்பதை அகிமோவ் உணர்ந்தார். உடல் தளர்ச்சி

யும், வோட்காவும்தான் தன்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்று தன்னுடைய வழக்கமான தெளிவான சிந்தனையுடன் காரணம் கூறிக்கொண்டு, விரைவில் தன்னைத்தானே திடப்படுத்திக்கொண்டார்.

"நீ அங்கு எப்படியிருக்கிறாய், இன்னும் உயிருடனிருக்கிறாயா?" என்று மிகுனேவை நோக்கி உரக்கக் கேட்டார்.

"யாதொரு குறைவுமில்லாமல் உற்சகமாகத்தான் இருககிறேன்!" என்று மிகுனேவ் உரக்க பதிலளித்தார். காற்றின் இரைச்சலினாலும், உறைபனி விழுந்துகொண்டேயிருப்பதினால் ஏற்படும் ஒருவித ஓசையினாலும் மிகுனேவின் வார்த்தைகள் தெளிவாகக் கேட்கவில்லை.

"அதற்காக மிகவும் நன்றி! நீ சொல்வதை ஏன் கேட்க முடியாமலிருக்கிறது. என்று நான் ஆச்சரியப்பட்டு கொண்டிருந்தேன். உன்னைப்போல் அது ஓசையில்லாமல் இல்லை. ஒரு பாட்டுப் பாடுகிறாயா?"

"உயர் அதிகாரிகள் நாம் பாடுவதைக் கேட்டுவிட்டால் என்ன நினைப்பார்கள்? நாம் குடிவெறியில் இருப்பதாக அல்லவா சொல்லுவார்கள்?"

"நாம் நிதானமாகத்தான் இருப்பதாக உனக்கு எண்ணமோ? நாம் குடிவெறியில்தான் இருக்கிறோம் அதிலென்ன சந்தேகமா? மேலதிகாரிகளை நாம் ஏமாற்றக்கூடாது..."

எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். வால்ட்ஸ் இசையின் ஓசை அருகில் வந்து கொண்டிருந்தது. கடைசியாக, ஒரு பெரிய கட்டிடம் அவர்கள் பார்வையில் பட்டது. அதனுடைய படிகளில் புதிதாக உறைபனி அப்பொழுதுதான் படிந்து கொண்டிருந்தது. கட்டிடத்தைச் சுற்றிலும் சலனமற்றிருப்பதைப் பார்க்கும்போது, கட்டிடத்தில் யாருமே இல்லையோ என்ற எண்ணத்தை உண்டாக்கும். ஆனால் அக்கட்டிடம் நிறைய ஆட்கள் இருக்கிறார்கள். அக்கட்டிடத்தில் மிருதுவான கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. அமைதியான, ஒரே சீரான மின்சார வெளிச்சம் அக்கட்டிடம் முழுவதும் பரவியிருந்தது. அங்கு கடற்படை அதிகாரிகளும், கடல் விமானப்படை அதிகாரிகளும் இருந்தனர். கணிசமான எண்ணிக்கையில் பெண்களும் இருந்தனர். டாக்டர்

கள், செய்தி அனுப்பும் ஊழியர்கள், அதிகாரிகளின் மனைவி மார்கள் ஆகியோரும் இருந்தனர். பெண்கள்—அவர்களில் பலர் பட்டாலான மாலைநேர உடைகளை அணிந்திருந்தனர்—சுவருக்கு அருகாமையில் ஒரு கும்பலாக உட்கார்ந்து, அதிகாரிகளைப் பார்த்த வண்ணமிருந்தனர். சிலர் ஓரளவு புகழ்ச்சியாக மெதுவாகப் பேசினர். இதைக் கேட்டு இதரர்கள் வாய்க்குள்ளேயே சிரித்தனர். இந்தக் காட்சி முழுவதும் இன்னும் தென்பகுதியிலுள்ள சீதோஷ்ண நிலையில், சாதாரண காலங்களில் எந்த ஒரு கடற்படைக் கிளப்பில் இருப்பது போலவே இருந்தது.

மீண்டும் நடனம் ஆரம்பமாகியது. தரையில் தவழ்ந்து கொண்டிருந்த நடனமாடிக் கொண்டிருந்தவர்களின் கட்டமைந்த கால்களை நீண்ட சால்வைகள் வட்டமாகச் சுற்றி வந்தன. சில மாலுமிகள், அவ்வளவு மகிழ்ச்சியில்லாத, ஆனால் தவிர்க்கமுடியாத கடமையைச் செய்யும் மனிதனைப் போன்று கடுமையான முகபாவத்துடன், தங்களது ஜோடிகளை வேகமாக சுழலச் செய்தனர். சில சமயங்களில், வழக்கத்திற்குச் சிறிது அதிகமாகவே குடித்துவிட்டவரின் பிரகாசமான முகம் தோன்றிக் கடந்து செல்லும். அவர் தனது முகத்தைக் கடுமையாக வைத்துக் கொள்வதற்கு அனேகமாக மனித யத்தனத்தையும் மீறிய முயற்சிகளைச் செய்வார். ஆனால் தன்னை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் யாருடைய கண்களையாவது அவர் பார்க்க நேரும்பொழுது அவருடைய முகம் பாதி கெஞ்சும் தோரணையிலும், பாதி ஏளனம் செய்யும் தோரணையிலும் மாறிவிடும். "இது புத்திகெட்டது தான், ஆனால் முதியவனே, அதைப்பற்றி நீ என்ன செய்ய முடியும்," என்று அந்த முகம் கூறுவதுபோல் இருந்தது.

'ட்யூடி' அதிகாரியின் அதிகாரதோரணையான குரல் அவ்வப்போது கேட்காமலிருந்திருக்குமேயானால், எல்லாமே சமாதான காலத்தில் நடப்பது போலவே இருந்திருக்கும். அடிக்கடி அவர் வாசற்படி அருகில் தன் உணர்ச்சியற்ற முகத்தைக் காண்பித்து கறாரான உத்திரவுகளை உரத்த குரலில் கொடுத்துவந்தார்: இந்த லெப்டினென்ட் கப்பலுக்குப் போகவேண்டும்; இந்த கமாண்டர் கமாண்டிங் அதிகாரி

யிடம் போய் ஆஜராகவேண்டும்; கப்பலின் சர்ஜன் இன்னூர், வியாதியஸ்தர்களை கவனிக்கும் அறையில் தேவைப்படுகிரு: அல்லது கப்பல் ஊழியர்கள் பூராவுமே கப்பல்களுக்கு அல்லது சப்மரைன்களுக்குப் போகவேண்டும்—இவ்வாறு உத்தரவுகள் கொடுத்துவந்தார். சில சமயங்களில் ஒரே சமயத்தில் பலரைக் கூப்பிட நேர்ந்தபோது, மண்டபத்தில் திடீரென்று பாதி காலியாகிவிட்டதாகத் தோன்றும். அவ்வாறு கூப்பிடப்பட்டவர்கள் நடனமாடிக் கொண்டிருக்கும்போது நடுவில் தங்கள் ஜோடிகளை அப்படியே விட்டு விட்டுப் போய் விடுவார்கள். பெண்கள் தங்கள் ஜோடியின் தோள்மீது ஒரு கையைத் தூக்கி வைக்கும் நிலையில் அப்படியே ஒரு விநாடி நிற்பார்கள். அவர்களது முகங்களில் சக்தியற்ற, சிறிதே போதையுடன்கூடிய புன்முறுவல் தவழ்ந்துகொண்டிருக்கும்; பின்னர் அவர்கள் யாரும் கவனியாத முறையில், சுவருக்குப் பக்கத்திலுள்ள தங்கள் ஆசனங்களுக்கு நழுவிச் சென்று விடுவார்கள். வெளியிலிருந்து வரும் ஏதோ ஒன்றைக் காது கொடுத்துக் கேட்பார்கள். வெளியில் காற்றின் இரைச்சலிலும், பனிக்கட்டிகளைப் பிளப்பவர்கள் போடும் சத்தத்திலும் வேறு என்ன அவர்களுக்குக் கேட்கப்போகிறது?

இந்தக் காட்சியை உற்று நோக்கிக் கொண்டே வந்த அகிமோவ் திடீரென்று ஆச்சரியத்துடன், “ஒருக்கால் அனிஷ்கா கொல்லப்பட்டு விட்டாளோ, அல்லது காயமடைந்தாளோ?” என்று எண்ணினுன். இந்த எண்ணம் தனக்கு அதற்கு முன்னுல் ஏற்படாதது அவனுக்கு வியப்பாக இருந்தது. இது சம்மந்தமாகத் தனக்குக் கவலை ஏதும் ஏற்படாதது ஏன் என்று அவனுல் கற்பனை செய்து பார்க்கமுடியவில்லை. பல வகைப்பட்ட இதர விஷயங்களையெல்லாம் அவன் நினைத்ததுண்டு. ஆனுல் அனிஷ்காவுக்கு ஏதாவது ஏற்பட்டிருக்குமோ என்று அவன் கனவுகூடக் கண்டதில்லை. “அது சாத்தியமேயல்ல,” என்று தனக்குத் தானே ஆறுதல் சொல்லிக்கொண்டான்.

“கொலோவின் என்னிடத்தில் தெரிவித்திருந்திருப்பார்,” என்று தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டார். பின்னர், தான் எவ்வளவு நிராதரவான நிலையிலிருக்கிறேம் என்

பதை நினைக்க அவர் உடம்பு வெட வெடத்தது. அவளிருக்கும் இடம் தேடிச் செல்லவோ, தன்னைப் பார்க்க வரும்படி அவளைக் கூப்பிடவோ, அல்லது அவளுக்கு ஒரு தந்தி அடிப்பதற்கும் கூட முடியாத—அவரால் ஒன்றும் செய்ய முடியாத—நிலைமை இருந்தது.

அவருடைய வேதனை நிறைந்த சிந்தனையை மிகுனேவ் கலைத்தார். வைத்தியத் துறையிலிருந்த ஒரு அழகான பெண்ணுடன் அந்த சப்மரைன் அதிகாரி இனிமேல் தன்னுல் முடியாது என்று களைத்துப்போகும் வரையிலும் நடனமாடினுர். இப்பொழுது அவர் அகிமோவிடம் வந்து, "பேவல், நாம் வால்யாவின் அறைக்குப் போவோம். மிகவும் வனப்பு மிக்கப் பெண்கள் அங்கு இருக்கிறுர்கள்," என்று அவருடைய காதில் மெதுவாகக் கூறினுர்.

அகிமோவ் தலையசைத்துவிட்டு, நூல்நிலையம் இருக்குமிடம் சென்ருர். அங்கும் நிறைய ஆட்கள் இருந்த போதிலும், அமைதியான சூழ்நிலை நிலவியது. பத்திரிகையைப் படித்துவிட்டு, அனிஷ்காவுக்குக் கடிதம் எழுதுவதென்று அகிமோவ் முடிவு செய்தார்.

அவர் பின்வருமாறு எழுதினுர்: "அன்புள்ள அனிஷ்கா, உன்னிடமிருந்து பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்லாவிட்டாலும் கூட, நான் மீண்டும் உனக்கு எழுதுகிறேன். நீண்டகாலத்திற்கு முன்பே, உனக்கு எழுதுவதை நான் கைவிட்டிருக்கவேண்டும். ஆனுல் ஒவ்வொரு நாளும் ஒரு நிமிஷம் எனக்கு ஓய்வு கிடைத்தாலும் கூட, உனக்கு எழுதாமல் இருக்க முடியவில்லை. நீ இல்லாமல் எனக்கு வாழ்க்கையே இருண்டுவிட்டது. உன்னிடத்தில் உண்மையாகச் சொல்கிறேன், ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து ஒருநாளைத் தனியாகக் கழிக்கமுடியாத அந்த அளவுக்கு ஒருவர் மற்ருருவரைக் காதலிக்க முடியுமென்று நான் எப்பொழுதும் நம்பியதில்லை என்றபோதிலும் கூட, நீ இல்லாமல் என் வாழ்க்கை கசந்துவிட்டது. நான் பார்க்கின்றவைகளில் உனக்கு விருப்பமுள்ளவைகளை நான் ஞாபகப்படுத்திக் கொள்ள முயலுகிறேன்; உன்னிடத்தில் அவைகளைப் பற்றிச் சொல்லுவதாக. முன்பு இதற்கு முன் இவ்வாறு நான் எண்ணங்கொண்டதே

கிடையாது. என்னையே உணர்ந்து கொள்ளுவதற்கும், என்னுடைய சிந்தனைகள், செயல்கள் ஆகியவற்றின் அந்தரங்கத்தை உணர்ந்து கொள்வதற்கும், நான் முன் எப்பொழுதையும் விட அதிகமாக முயற்சி செய்கிறேன். ஏதாவது புத்திக் கூர்மையான சிந்தனை தோன்றினால்—அவ்வப்பொழுது அத்தகைய சிந்தனை தோன்றுவதுண்டு—அதை மறக்காமலிருப்பதற்கு நான் முயற்சி செய்கிறேன்; ஏனெனில் நாம் மீண்டும் சந்தித்தால், அந்த சிந்தனை அப்பொழுது தான் ஏற்பட்டது போல் உன்னிடத்தில் கூறுவதற்காக; உன்னுடைய கணவன் எவ்வளவு நுண்மதி படைத்தவனாக இருக்கிறான் என்று உனக்குக் காட்டுவதற்காக. இதெல்லாவற்றையும் இப்பொழுது நான் ஏன் எழுதுகிறேன் என்பது எனக்கே தெரியாது; இதைக்கண்டு ஒருக்கால் நீ என்னைப் பார்த்து சிரிக்கத்தான் செய்வாய். நீ என்னிடம் எவ்வாறு காதல் கொண்டாய் என்பதை நான் புரிந்து கொள்ளாத காலம் ஒன்றிருந்தது. ஆனால் நீ எவ்வாறு என்னை மறக்க முடியும் என்பதை இப்பொழுது என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.''

கடிதத்தை எழுதி முடித்ததும் போவதற்கு அவர் எழுந்தார். அப்பொழுது ''கமாண்டர் அகிமோவ், கடற்படைத் தலைமை நிலையத்தில் போய் ஆஜராகவேண்டும்'' என்று ட்யூடி ஆபீசர் ஹாலில் அதிகார தோரணையில் கூறுவது கேட்டது.

தன்னைப்போலவே பெயருடைய வேறொரு அதிகாரி இருக்கவேண்டும் என்று முதலில் அகிமோவ் நினைத்தார். ஏனெனில் தன்னைப் பார்க்க விரும்புபவர் யாரேனும் இருக்க முடியுமா என்பதை அவரால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை. பின்னர், மிகுனேவ் தன்னை நோக்கி ஓடி வருவதைப் பார்த்தார்.

''உங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்'' என்று மிகுனேவ் அவசர அவசரமாகக் கூறினார். ''உங்களுக்கு வழி தெரியாவிட்டால், வாருங்கள் நான் உங்களை அங்கு கூட்டிக் கொண்டு போகிறேன்'', என்றார்.

தன்னுடைய நண்பனைப் பற்றி அகிமோவின் நெஞ்சம் இளகியது. ஏனெனில் நடனமாடுவதை விட்டுவிட்டு ஒரு

நண்பனுக்கு உதவி செய்வதற்கு வரவேண்டுமென்ருல் எவ்வளவு தியாக உள்ளம் உடையவராக இருத்தல் வேண்டும் என்பதை அவர் உணர்ந்தார்.

"பரவாயில்லை முதியவரே, நான் சமாளித்துக்கொள்வேன், நீங்கள் போய் நடனத்தைக் கவனியுங்கள்", என்று கூறினுர்.

அகிமோவ் அவரை நடன ஹாலில் திரும்பத் தள்ளிவிட்டுவிட்டு, தன் கோட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு, வெளியே இருளில் கிளம்பினுர். வெளியில் காற்று விர், விர்ரென்று வீசிக்கொண்டிருந்தது.

அகிமோவ் தான் தேடப்பட்டவர் என்பதில் சந்தேகமில்லை. ரியர்-அட்மிரல் ஒருவர் அகிமோவை வரவேற்று, அவரை சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் ஒன்றின் தலைமை அதிகாரி என்ற புதிய பதவிக்கு நியமித்தார். இது, படேய்கினின் தலைமையின் கீழ் இருந்த கப்பலைவிடப் பெரியதும், நன்கு ஆயுதபாணியாக இருக்கும் கப்பலுமாகும்.

படேய்கினைப் பற்றி நினைக்க அவர் மனம் துவண்டது. ஏனெனில், தனக்கு அருகதையில்லாத ஒரு பெரிய பதவிக்குத் தான் உயர்த்தப்படுவதாகவும் அதே சமயத்தில் படேய்கின் சிறுமைப்படுத்தப்படுவதாகவும் உணர்ந்தார். அவ்வாறு வாய்விட்டுச் சொல்வதற்குத் துணிவும் கொண்டார். ஆனுல் "உங்களைவிட எங்களுக்கு நன்கு தெரியும்" என்று ரியர்-அட்மிரல் கடுமையாகக் கூறினுர்.

பின்னர், படேய்கினுடைய கப்பல் நங்கூரம் பாய்ச்சிக் கட்டப்பட்டிருந்த துறையை நோக்கி அகிமோவ் சென்ற போது, அதை விட்டுச் செல்வது எவ்வளவு கடினமானது என்பதை உணர்ந்தார். அந்த சப்மரைன் எதிர்ப்புக் கப்பலிலிருந்து ஷிகாலோவின் கனத்த குரலும், காஷெவரோவின் பாட்டும் அகிமோவின் காதுகளுக்குக் கேட்டது.

"நம்முடைய கம்பீரமான 'வார்யாக்' கப்பல் என்றும் விரோதியிடம் அடி பணியாது", என்று அந்தப் பாட்டு கூறியது. "கம்பீரமான வார்யாக்" என்று ஒரு சிறிய படகை அழைப்பது மிகவும் படாடோபமாகத் தொனித்தது. ஏனெனில் அந்தப் படகுக்கு இன்னும் ஒரு பெயர் கிடை

யாது. அதற்கு ஒரு இலக்கம்தான் உண்டு. இருந்தபோதிலும் அது, அந்த சந்தர்ப்பத்தில் அகிமோவிடம் எத்தகைய சிலேடையான எண்ணத்தையும் உண்டாக்கவில்லை. அந்த சப்மரைன் எதிர்ப்புப் படகுக்கும் அதன் கமாண்டருக்கும் அந்தப் பாட்டின் வார்த்தைகள் பொருத்தமாக அமைந்திருப்பதாகவும் கூடத் தோன்றியது.

"தன்னுடையதாகப்போகும்" கப்பலின் தலைமைப் பொறுப்பை ஏற்ருர். பின்னர் விடைபெற்றுக் கொள்வதற்காக படேய்கினிடம் சென்ருச். ஆனல் அதற்குள் படேய்கினுடைய கப்பல் கடலில் சென்றுவிட்டது. அந்தக் குன்றின் மீதிருந்த சிறிய வீட்டில் ஒருவரும் இல்லை. அவ்வீட்டின் சாவியை வழக்கமாக வைக்கப்பட்டிருக்கும் இடத்தில் அகிமோவ் கண்டார். தன் மூட்டை முடிச்சுகளையெல்லாம் கட்டிக்கொண்டு வெளியே சென்ருர். கதவை சாத்திவிட்டு, சாவியை முன்பிருந்த இடத்திலேயே வைத்துவிட்டார். தான் கிளம்பிச் செல்லும்போது, ஜன்னலிலிருந்த மலர்களின் மீது விடை பெற்றுக்கொள்ளும் பார்வையைச் செலுத்தினர் "போய் வருகிறேன் படேய்கின், போய் வருகிறேன் நீனு," என்று உரக்கக் கூறினர். பின்னர் தன்னுடைய கப்பலை நோக்கிக் கிளம்பினர்.

"அட்டென்ஷன்!" புதிய தளபதி கப்பலின் தளத்துக்கு வந்தபோது, யாரோ இவ்வாறு கோஷம் கொடுத்தார். மாலுமிகள் அனைவரும் அசைவற்று நின்றனர். அகிமோவின் பார்வை அவர்கள் அனைவரின் மீதும் சென்றது. பின்னர் அவர், சோவியத் கடற்படைக் கொடிக்கும், தன்னுடைய புதிய மாலுமிகளுக்கும் வணக்கம் செலுத்தினர். தன்னுடைய சொந்த தனிப்பட்ட கவலைகளும், நம்பிக்கைகளும் தற்பொழுது கடந்த காலத்திய விஷயங்களாய் விட்டன, என்று அவர் நினைத்தார். கடலின் கரு நிறத் தண்ணீரைப் பார்த்ததும், தன் குதூகலமான வாழ்க்கையைப் பற்றிய கனவுகளுக்கெல்லாம் விடை கொடுத்தார். அவைகளெல்லாம் இப்பொழுது அவருக்கு அற்பமானவைகளாகத் தோன்றின. "ஸ்டேண் அட் ஈஸ்!" என்று குரல் கொடுத்துவிட்டுப் பாலத்தின்மீது ஏறிச் சென்ருர்.

3

அகிமோவின் கடிதங்களுக்கு அனிஷ்கா பதில் போட வில்லை. ஏனெனில் அவளுடைய வாழ்க்கையில் பெரிய திடீர் மாறுதல்கள் ஏற்பட்டன. அவள் இனி ஒருபோதும் தன் னுடைய ரெஜிமெண்டில் இல்லை, ராணுவத்திலேயே இல்லை என்பதோடு, அவருடைய விலாசமும் அவளிடத்தில் இல்லை. செர்னிக்கைப் பொறுத்த மட்டிலும் அவரைப் பற்றி அவள் அறியமாட்டாள்; அவருடைய பெயரைக் கூட அவளால் நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை; அவர் எப்படியிருப் பார் என்றுகூட அவளால் சிந்தித்துப் பார்க்க முடியவில்லை. தனக்கு எவ்விதத்திலும் தெரியாத, தனக்கு ஏதுமற்ற அவரைப் போன்ற ஒரு மனிதன் மீது பொறுமை கொண் டுள்ளார் என்பது அவளுக்குத் தெரியவந்திருக்குமேயானால், அவள் முற்றிலும் உணர்விழந்தவளாகப் போயிருப்பாள்.

அகிமோவ் சென்று இரண்டு வாரங்கள் முடிவதற்குள் ளாகவே, பொலேகோய் பிரதேசத்தில் ரெஜிமெண்ட் மீண்டும் ராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டது. அப் பொழுது, அகிமோவ் மாஸ்கோவிலிருந்து எழுதியிருந்த இரண்டு கடிதங்கள் அவளுக்குக் கிடைத்திருந்தன. ஆனால் மாஸ்கோ கடற்படை நிலையத்தில் அவரது விலாசம் தற் காலிகமாகவே இருந்ததால், அவள் அவருக்கு பதில் எழுத முடியாமல் இருந்தாள். தனக்கு ஒரு நிரந்தர விலாசம் கிடைக்கும் வரை பதில் எழுத வேண்டாம் என்று அவரே அவளைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

நவம்பர் 1-ந்தேதியன்று, ரெஜிமெண்ட் தயாராக இருக்க வேண்டுமென்று உத்திரவு வந்தது. இதர ரெஜி மெண்டுகளுடன், அவள் இருந்த ரெஜிமெண்டும் ரயிலில் ஏற் றப்பட்டு, அவசரமாகத் தென் பகுதிக்கு அனுப்பப்பட்டனர், அனேகமாக அந்த வண்டிக்குமுன்னால் ஒரு எஞ்ஜினும் பின் னால் ஒரு எஞ்ஜினும் இருக்கும். நவம்பர் 3-ந்தேதியன்று அவர்கள் உக்ரேனியத் தலைநகர் கீவில் இறங்கினர். அங் கிருந்து டிவிஷனும் இதர பலரும் மேற்கு நோக்கிச் சென்று, முதல் உக்ரேனிய ராணுவத்துடன் சேர்ந்துகொண்டனர்.

கீவ் நகரை ஜெர்மானியர்களிடமிருந்து விடுதலை செய்யும்படி யாக அவர்களுக்கு உத்திரவிடப்பட்டிருந்தது.

போரின் ஆரம்பத்திலிருந்தே, பெரும் தயாரிப்புகளுடன் எதிரியின் அணியை ஊடுருவும், சண்டைகளுக்கு முன்னுல் இருப்பதைப்போன்ற பரபரப்பான, ஏதோ நடக்கப்போகிற தென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலைமை இருந்ததை உணர முடிந்தது. தலைக்குமேல் விமானப் போர் அனேக மாக சதா நடைபெற்றுக்கொண்டிருந்தது. ஏனெனில் விரோதியின் விமானப்படை தொடர்ந்து நம் ராணுவத்தை பின் பற்றிக்கொண்டே வந்தது. நம் துருப்புகளைப் பய முறுத்துவதின் மூலமாக தாக்குதலைத் தாமதப்படுத்தவும் அதை அவ்வளவு பயனுள்ளதாக இல்லாமல் செய்யவும், நம் ராணுவத்தின்மீது குண்டுகளை வீசியும் இயந்திர பீரங்கிக ளால் தாக்கியும் அலைக்கழித்துக்கொண்டே வந்தது. இலை யுதிர்கால மழையால் சாலைகள் அனேகமாகப் போக்குவரத் துக்கு உபயோகமில்லாமல் போயிருந்தன. அடிக்கடி, சேற் றிலும், சகதியிலும் சிக்கிக்கொண்ட வண்டிகளை ஆட்கள் கூப்பிடப்பட்டு வெளியே கொண்டுவர வேண்டியிருந்தது. குதிரை மீது வந்துகொண்டிருந்த மேஜர் கொலோவின், பின்னணியில் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த பிரதேசத்தி லிருந்து அதிகாரிகளும், படை வீரர்களும் புறப்பட்டபோது இருந்த துடி துடிப்பும், திருப்தி மனப்பான்மையும் படிப்படி யாக மறைந்து போனதைக் கண்டு மனம் உடைந்தார்.

ஆயினும் நாம் முன்னேறிக்கொண்டிருந்தோம். சாலை கள் மோசமாக இருந்த போதிலும், தொடர்ந்து ஆபத்தான சூழ்நிலைமை இருந்தபோதிலும்,நம் துருப்புக்களும், ராணுவ சாதனங்களும் பெரும் பிரவாகமாகச் சென்றுகொண்டிருந்த தையும், சேதமடைந்த ஜெர்மன் டாங்குகளும், ராணுவ வண்டிகளும் சாலையோரங்களில் அப்படியே விட்டு விடப் பட்டுப் போயிருந்ததையும், அவைகளில் சில இன்னும் எரிந்துகொண்டிருந்ததையும் பார்க்க உற்சாகமாக இருந்தது.

நீப்பர் நதியை ரெஜிமெண்ட் அடைந்தது. பலத்த குண்டு வீச்சுக்கும், பீரங்கித் தாக்குதலுக்கும் இடையில் ராணுவம் நதியைக் கடக்க ஆரம்பித்தது. நதியின் அக்கரையி

லிருந்த உயர்ந்த குன்றுகள் இலையுதிர்காலத்து பழுப்பு இலை களால் மஞ்சள் நிறமாகக் காட்சியளித்தன. தீயினால் எரிக்கப் பட்ட கீவ் நகரத்துக் கட்டிடங்கள் கறுப்பாகக் காட்சியளித் தன.

சண்டையின் காது செவிடுபடும்படியான இரைச்சலோ, ஆயிரக்கணக்கான மக்களின் உணர்ச்சி வசப்பட்ட கூக் குரல்களோ, அனிஷ்காவின் அதிசயிக்கத் தக்க அமைதியைக் கலைக்க முடியவில்லை. அவளுடைய மனோ நிலை அவளைச் சுற்றியிருந்தவர்களிடையே நம்பிக்கையையும், உற்சாகத்தை யும் ஏற்படுத்தியது. வேகமாகக் கடந்து சென்ற கவச மோட்டார் படையினர், டாங்குகளின் திறந்த வாயில் நின்றுகொண்டு சென்ற வீரர்கள் அனிஷ்காவை நோக்கி கைகளை ஆட்டிக்கொண்டே உற்சாகமாகச் சென்றனர். நதி யின் அக்கரையில் தீவிரமாகச் சண்டை நடந்துகொண் டிருந்த போர்க்களத்திற்குள் சென்று மறையும் வரையிலும் அவர்கள் பின்னால் திரும்பி அனிஷ்காவைப் பார்த்த வண்ணமே சென்றனர். மாறுவேடத் தொப்பிகள் அணிந்து முகக்ஷவரம் செய்துகொள்ளாத, மௌனமாகச் சென்று கொண்டிருந்த ஒரு டஜன் வேவுப் படையினரின் முன்பாக ஒரு பெண்ணும் போர்க்களம் நோக்கிச் சென்றுகொண் டிருந்த காட்சி வியக்கத் தக்கதாயிருந்தது. இதர டிவிஷன் களில் சென்றுகொண்டிருந்த வீரர்கள் நட்புறவு மிக்க, சில சமயங்களில் தெளிவற்ற முறையில் அவ்வப்பொழுது கோஷ மிட்டுக்கொண்டு சென்றதும் ஆச்சரியமாயிருந்தது.

“நீங்கள் கோஷமிட்டது போதும். வேலையைப் பார்த் துக்கொண்டு செல்லுங்கள்” என்று, உளவுப் படையினர் அந்த வீரர்களைப் பார்த்துக் கூறி அவர்களின் வாயடைத் தனர்.

அந்த பயமுறுத்தலுக்கு உடனடியாகப் பயன் கிடைக்க வும் செய்தது. வீரர்கள் தங்கள் நடையைத் துரிதப்படுத்தி னர். அந்தப் பெண்ணிடம் அந்த உளவுப் படையினர் அவ் வளவு மரியாதை காட்டியதையும், அவளைப் பாதுகாப்பதற்கு அவர்கள் கொண்டிருந்த உறுதி அவர்களின் குரல்களிலே

பிரதிபலித்ததையும் கண்டு இதர படை வீரர்கள் இன்னும் அதிக ஆச்சரியமடைந்து வேகமாக நடக்க ஆரம்பித்தனர்.

இடைவிடாது பீரங்கிகள் முழங்கின. சிவப்பு நட்சத்திர சின்னம் கொண்ட நூற்றுக்கணக்கான விமானங்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிர்க்கரையின் மீது பாய்ந்தன. குண்டுகளைப் போட்டுவிட்டுத் திரும்பி வந்தன. அதற்கு அடுத்த நாள் ஒரு புனிதமான நாள்—அக்டோபர் புரட்சியின் 26வது ஆண்டு விழா—இந்த சந்தர்ப்பம் கீவ்நகருக்கான சண்டையை இன்னும் அதிக முக்யத்துவம் வாய்ந்ததாகவும், புனிதமானதாகவும் ஆக்கியது.

ஆற்றைக் கடந்துகொண்டிருந்த பொழுது அனிஷ்கா திடீரென்று சுகவீனமடைந்தாள். அவளுடைய முகம் வெளுத்தது; தலைசுற்றியது. ஆரம்பத்தில் இதை அவள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. தாக்குதல் பாலத்தின் மீது இருந்த ஆயிரக்கணக்கான வீரர்களின் தலைமீது எந்த நிமிஷத்திலும் சாவு வரலாம் என்ற பயபீதி சதா இருந்து வந்த நிலையில், அந்த பயம் காரணமாகத் தன் தலை சுற்றுவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டிருக்கலாம் என்று ஆரம்பத்தில் அனிஷ்கா நினைத்திருந்தாள். ஆனால் கீயெவ் நகரத்திற்கான சண்டைக்கு சில நாட்களுக்குப் பிறகு, அது எதனால் ஏற்பட்டது என்ற உணர்வு திடீரென்று அவளுக்குத் தோன்றி அதனால் கலவரமும் அடைந்தாள்.

இதனால் அவள் கதிகலங்கினாள், என்று கூறுவது விநோதமாக இருக்கும். வேறு யாரை விடவும் அவள் ஒன்றும் தெரியாத அப்பாவியாக இல்லாவிட்டாலும் கூட, அக்டோபர் ரயில்பாதை மீதுள்ள பொலோகோய் ரயில் நிலயத்திற்கருகிலுள்ள சிறிய கிராமத்தில், தான் நேசித்த மனிதனுடன் சில இரவுகள் கழித்ததானது—அந்த இரவுகள் அவளுக்குப் பூரண மகிழ்ச்சியாக ஒன்றும் இல்லாத இரவுகள்—தனக்குள்ளே ஒரு புதிய உயிர் தோன்றுவதற்குக் காரணமாயிருந்திருக்கும் என்பதை அவளால் புரிந்துகொள்ளவே முடியவில்லை; அது முட்டாள்தனமானதென்றும், பயங்கரமானதென்றும் கருதினாள். அதன்பின் அவள் ஒரு வெறுப்பான மனோபாவம் கொண்டாள். குழந்தை பிறந்த பின், அதை நாடியா

அத்தையிடம் விட்டுவிட்டு, ராணுவத்திற்கே திரும்பிப் போய் விடலாம் என்று நினைத்தாள். ஆனுல் அது தவருனது என் பதை உடனேயே உணர்ந்தாள். தன்னுடைய குழந்தையை யாரிடமும் விட்டுவிட்டுப் போக முடியாது. ஏனெனில் அதைப் பாலூட்டி வளர்க்க வேண்டும். பெரியவ(ளா) ளுக்கி, படிக்க வைக்க வேண்டும். அது ஏதோ ஒருவித பொம்மை யல்ல; மனித ஜீவன், ஒரு குழந்தை, தன்னுடைய குழந்தை "என்னுடைய குழந்தை", என்றுஅவள் தனக்குத் தானே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டாள். சிரித்துக்கொண் டாள். அவளால் அதை நம்பவே முடியவில்லை. அவளுடைய கங்குகரையற்ற, ஒருக்கால் புரிந்துகொள்ளும்படியான, கபட மற்ற எண்ணத்தால், அவ்வளவு சீக்கிரம் அது எவ்வாறு ஏற் பட்டிருக்கமுடியும் என்று அவள் ஆச்சரியப்பட்டாள். நீண்ட கால அமைதியான மணவாழ்க்கைக்குப் பின்னர் குழந்தை கள் பிறப்பதுதான் சாதாரணமாக நிகழ்வது என்று அவள் நினைத்திருந்தாள்.

உளவுப் படையினருடன் அவள் போர் முனைக்குச் செல்லும் சாலை வழியாக சென்றபோது—அந்தச் சாலை ராணுவ வீரர்கள், வண்டிகளால் நிரம்பியிருந்தது—அவள் தன் அறுவறுப்பைச் சமாளித்துக் கொண்டாள்; தன்னு டைய உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். எல்லா நேரமும் தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந் தாள். தன்னிடம் எதிர்பார்க்கப்படுவதெல்லாவற்றையும் செய்தாள். ஆனுல் தன்னைச் சுற்றிலுமிருந்த ஆட்களைப் பார்த்தபோது, எப்படியோ தான் அவர்களிடமிருந்து துண்டித்து நிற்பதாக உணர்ந்தாள். தான் இருந்த தாய்மை நிலையின் காரணமாக, ஏதோ ஒரு கண்ணுக்குத் தெரியாத, கடக்க முடியாத ஒரு தடுப்புச் சுவர் தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கும் இடையில் இருப்பதாக அவளிடத் தில் ஒரு உணர்ச்சி ஏற்பட்டது. அவர்கள் மிகவும் தூரத்தில் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது. தானும் ஏதோ தூரத்திலிருந்து அவர்களைப் பார்ப்பதாக ஒரு எண்ணம் அவ ளிடத்தில் ஏற்பட்டது. அவர்களெல்லாம் கடந்த காலத் திய விஷயமாக அவளுக்குப்பட்டது. அவளுடைய சகல

பழைய அபிலாஷைகளுக்குப் பதிலாக ஒரு புதிய அபிலாஷை அவளிடத்தில் நிர்ப்பந்தமாக ஏற்பட்டது. தான் வைத்திருந்த ரகசியம் தன்னை எல்லோருக்கும் கீழானவளாக்கியுள்ளது என்றும், வாழ்க்கையில் பரந்த நோக்கங்களும் அதிக முக்யமான கவலைகளும் உள்ள அனைவரையும் விடவும் கீழானவளாகத் தன்னை ஆக்கியுள்ளது என்றும் அவள் நினைத்தாள்.

இரவில் ஒரு கூடாரத்திற்குள், அல்லது அவளுக்கென ஒதுக்கப்பட்ட குடிசையில் படுத்திருக்கும்போது, அவளுக்குத் தூக்கம் வரவில்லை. ஆனால் யுத்தத்தைப் பற்றியும், வெற்றியைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்த சோல்ஜர்களின் குரல்களைக் காது கொடுத்துக் கேட்டாள். தற்பொழுது மற்றவர்கள் ஒவ்வொருவருக்கும் அவ்வளவு முக்யத்துவமுடைய விஷயங்களாயிருப்பவை, எப்படியோ தனக்கு இரண்டாம் பட்சமானவையாகவும், தனக்கு மிகவும் அப்பாற்பட்டவையாகவும் தோன்றுவதை உணர்ந்தபொழுது அவள் அழுதேவிட்டிருப்பாள்.

தனக்கு என்ன ஏற்பட்டுள்ளது என்பதைப்பற்றி வெளியில் சொல்ல வேண்டுமா, அல்லது விளக்கங்கள் தேவைப்படாதபடி தன்னுடைய நிலைமை மிகவும் வெளிப்படையாகவே எல்லோருக்கும் தெரியும் அளவிற்கு சம்பவங்கள் அதனுடைய போக்கில் செல்லட்டும் என்று விட்டுவிடலாமா என்பதை அவளால் முடிவு கட்ட முடியவில்லை.

தன்னுள்ளே குழந்தை வளர்ந்து வருவதை அவளால் விரைவில் உணர முடிந்தது. அக்குழந்தையின்பால் அவளிடம் ஒரு விநோதமான, கவலையுடன் கூடிய பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது. இது தன்னுடைய ஒவ்வொரு அசைவையும் மெதுவாகவும், ஜாக்ரதையாகவும், உஷாராகவும் செய்யும்படி செய்தது. இதுதான் அவளை மிகவும் மகிழ்ச்சியற்றவளாக்கியது. குதிரைமீது சவாரி செய்வதற்கும்கூட அவள் மறுத்தாள். இது மற்றவர்களை மிகவும் வியப்புக்குள்ளாக்கியது. ஏனெனில் முன்பெல்லாம் அவள் மிகுந்த மகிழ்ச்சியுடன் குதிரை சவாரி செய்வாள்.

கொரோஸ்டெனுக்காக நடந்த சண்டையின்போது மேஜர் கொலோவினுக்குக் காலில் காயம் ஏற்பட்டது. அனிஷ்கா, அவர் தங்கியிருந்த குடிசைக்குச் சென்று அவரைப் பார்த்தாள். அவர் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள். அப்பொழுது அவர், தன்னுடைய பொறுப்பிலேயே தான் இருக்கப் போவதாகவும், ஆஸ்பத்திரிக்குப் போகப் போவதில்லையென்றும் கூறினர். அதைக் கேட்டதும் அவளுக்குத் திடீரென்று அழுகை வந்துவிட்டது. பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள். "அப்படியென்ருல் நான் என்ன செய்வது?'' என்ருள். பின்னர் அவரிடம் அவள் எல்லா விஷயங்களையும் கூறினர்.

அவளைவிடவும் மேஜருக்கு மிகவும் இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. "சரி, அதைப் பற்றி இப்பொழுது நாம் என்ன செய்ய முடியும்? ஒன்றும் செய்வதற்கில்லை...'' என்று முணுமுணுத்தார். ஒரு கணம் அவர் சிந்தித்தார். பின்னர் கூறினர்: ''அகிமோவின் விலாசம்கூட நம்மிடத்தில் இல்லையே, என்ன துரதிர்ஷ்டம்? அவருக்குப் பாராட்டுத் தெரிவித்து நான் ஒரு தந்தி அனுப்ப வேண்டும்''

"எல்லாம் மிகவும் திடீரென்று ஏற்பட்டது. எப்படியோ அது சரியல்ல,'' என்ருள் அவள்.

''ஆனல் அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும். என்று கொலோவின் கேட்டார். "ஒன்றும் செய்ய முடியாது'' என்று அவரே பதிலும் கூறினர். அவளுடைய முகத்தை அவர் நிமிர்ந்து பார்த்தார். நடந்து போனதற்கு என்ன செய்ய முடியும் என்ற அவளுடைய மனே நிலையை, கண்டு திடீரென்று, மிகுந்த பரிவு கொண்டார்.

''நீ ஏன் அவ்வாறு நினைக்கிருய்? இதில் தவறு ஏதும் இல்லை. அது ஏதோ தற்செயலாக ஏற்பட்ட சந்திப்பு மாதிரியல்ல. எல்லாம் சரியாகவே நடந்துள்ளது. நீ படையிலிருந்து ஒய்வு பெற்று மாஸ்கோவிற்குச் சென்று, ஒரு தாய் என்ற முறையில் உன் கடமையை கவனிக்க வேண்டும். இது ஒரு கடினமான வேலை, தெரியுமா? நீ அதை சரியான முறையில் பார்த்தால், காம்ரேட் பெலோஜ்யோரோவா, குழந்தைகளைப் பெறுவது என்பது அரசாங்கம் சம்பந்தப்பட்ட

விஷயமாகும். மிகவும் முக்கியமான விஷயமும்கூட". அவர் சிறிது நேரம் தாமதித்து, பிறகு மீண்டும், கொஞ்சம் கம்மிய குரலில் "உண்மையில் இது பற்றி நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீ கொல்லப்பட்டுவிடலாம், என்று நான் சதா பயந்து கொண்டிருந்தேன், அப்பொழுது நான் அகிமோவுக்கு என்ன சமாதானம் கூறியிருக்க முடியும்?'' என்றார்.

இருவரும் நீண்ட நேரம் மௌனமாக இருந்தனர். வெளியில் இரண்டு வீரர்கள் பேசிக்கொள்வது காதில் விழுந்தது.

"உன்னுடைய ரீய்னெட்களைப் பற்றியும் ஷாப்ரான்களைப் பற்றியும் என்னிடத்தில் பேசாதே. அண்டோனேவ்காவை விடச் சிறந்த ஆப்பிள் பழம் கூடக் கிடையாது.''

மற்றவர் கொஞ்சம் கடுமையான தொனியில், "நீ கிரீமியாவில் இருந்ததே கிடையாது. அதனால்தான் நீ உன்னுடைய அண்டொனேவ்காக்களைப்பற்றியே இவ்வளவு நினைக்கிறாய்,'' என்றார்.

"எனக்கு இரண்டு குழந்தைகள்கூட இருக்கின்றன. அவர்கள் உல்யானேவ்ஸ்க்குக்கு அனுப்பப்பட்டு உள்ளனர். ஒரு பெண்ணும், ஒரு பையனும். காட்யா, வானயா என்பது அவர்களின் பெயர்.''

அவருடைய குரல் நடுங்கியது. அந்தத் தளபதி உணர்ச்சி வசப்பட்டதையும், கவலையடைந்ததையும் அனிஷ்கா அப்பொழுதுதான் முதற்தடவையாகக் கண்டாள்.

"அதெல்லாம் நரம்புத் தளர்ச்சியினால் ஏற்படுபவை,'' என்று வேறு பக்கம் திரும்பியவண்ணம் கூறினார்.

சில நாட்களில், தன்னை ராணுவ சேவையிலிருந்து விடுதலை செய்யும் அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டு, அனிஷ்கா, விடை பெற்றுக்கொள்வதற்காக உளவு பார்க்கும் இலாகாவின் நிலையம் இருந்த பண்ணைக்குச் சென்றாள். ஆனால் அங்கு அந்த நிலையம் இல்லை. தான் தலைமை நிலையத்தில் இருந்தபோது, வேவுபார்க்கும் பிரிவினர் முன்னேறிச் செல்ல வேண்டுமென்று உத்தரவு வந்திருந்ததாகக் கேள்விப்பட்டாள். அந்தப் பண்ணையில் ஒருவரும் இல்லை.

மஞ்சள் நிறமான சாலை வழியே ரெஜிமெண்ட் புறப் பட்டது. வீரர்கள், பீரங்கிகள், வண்டிகள் யாவும் மெது வாக மேற்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தன. விரைவில் பைன் மரங்கள் நிறைந்த காடு ஒன்றின் ஓரத்தில் அனிஷ்கா மட்டும் தனியாக நின்ருள். வீரர்கள் அவளைக் கடந்து வேகமாகச் சென்ருர்கள். ஒவ்வொருவரும், ஒவ்வொரு பொருளும், காடுகளும், வயல்களும்கூட மேற்கு நோக்கிச் செல்வதுபோல் அவளுக்குத் தோன்றியது. கிழக்கு நோக் கிச் செல்வதற்கு உலகத்தில் ஒரு காரணமுமில்லை.

"சென்று வருகிறேன், தோழர்களே!" என்று அவள் கண்களில் நீர் மல்கக் கூறினுள். பின்னர் அவள் தன் தோல் பெட்டியைத் தோள்மீது போட்டுக்கொண்டு கிழ்க்கு நோக்கிப் புறப்பட்டாள். அந்தக் கோட்டிலிருந்து சிறிது தூரம் பின்னுல் வரிசை வரிசையாகக் கார்கள் போய்க் கொண்டிருந்தன. சில கிழக்கு நோக்கியும், சில தெற்கு நோக்கியும், சில வடக்கு நோக்கியும் சென்றன. ராணுவ மோட்டார் ரோடுகள், போக்குவரத்துக் கட்டுப்பாடு முனை களுடனும், கண்டரோலர்களுடனும், ஓய்வுபெறும் குடிசை களுடனும் எல்லா திசைகளிலும் சென்றன. ரயில்வே நிலையங் கள் மீண்டும் கலகலப்பாக இருந்தன. ட்ரெயினுக்குப் பின் ட்ரெயினுக, நிறையத் துருப்புக்களுடன் அமைதியாக மேற்கு நோக்கி ஓடிக்கொண்டிருந்தன. அவைகள் எல்லைக்குப் போய்க்கொண்டிருந்தன. இதர ட்ரெயின்களில் ரொட்டி, குண்டுகள், மகோர்க்கா பெட்டிகள், துப்பாக்கி ரவைப் பெட்டிகள் ஆகியவை நிரம்ப ஏற்றப்பட்டு சென்று கொண் டிருந்தன. போர் முனை சமையல் வீடுகள், வீரர்கள் கால் களில் கட்டிக் கொள்ளும் பட்டிகள், குளிர்காலத் தொப்பி கள், வெதுவெதுப்புத் தரும் உள்ளாடைகள், போர் முனை ரொட்டிக் கிடங்குகள், புதைக்கும் கோஷ்டியினர், ஆஸ்பத் திரி வெளியேறும் பஸ்கள் எல்லாம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தன. அனிஷ்கா கிழக்கு நோக்கிப் பிரயாண மானுள். முதலில் காரிலும், பின்னர் ரயில் வண்டியிலும் சென்ருள். எங்கு பார்த்தாலும் நிறைய ஆட்கள் இருப்ப தைக் காண அவள் ஆச்சரியப்பட்டாள். எல்லோரும் ஏதா

வது ஒன்று செய்து கொண்டிருந்தனர். வேலை செய்து கொண்டோ அல்லது காத்துக்கொண்டோ இருந்தனர். குழந்தைகளின் பக்கம் அவளது கவனம் விசேஷமாகச் சென்றது. தன் வாழ்க்கையிலேயே இது வரை ஒரு குழந்தையைப் பார்த்திராத முறையில் அவ்வளவு ஆர்வத்துடன் அவள் குழந்தைக்ளை உற்று நோக்கினுள்.

"எப்படியும், என் நாட்டுக்காகச் செய்வதாக நான் கனவு கண்டேன்!" அனிஷ்காவின் உள்ளத்தில் கசப்பு மேலிட்டது, ஆனுல் அவள் மாஸ்கோவை நெருங்க, நெருங்க, வெளிப்படையாக யுத்தத்திற்கு முக்கியமில்லாத சாதாரண வேலைகளை எவ்வளவு பேர்கள் செய்கிருர்கள் என்பதை அவள் கவனித்தபொழுது, அவள் மனம் நிம்மதியடைந்தது. போர்ப் பிரதேசத்திற்கு வெளியில் நடைபெறும், அல்லது போருடன் நேரடியாக சம்பந்தமில்லாத எதையும் கண்டு சீறி விழும் போர்க்கள முன்னணி வீரனின் குறுகிய கண்ணேட்டத்தை அவள் கைவிட்டு விடலானுள். ஏதோ ஒரு ஸ்தூலமான இடத்தை நோக்கிச் செல்லும்பொழுது, தூரமும், அசைவும் தவிர, காலமும் உள்ளது. ஒரு பெரிய நாடு உரிய காலத்தில் தன் குறியிடத்தை நோக்கிச் செல்கிறது, சரித்திர ரீதியான மட்டத்தில் செல்கிறது என்று அவள் திடீரென்று சிந்திக்க ஆரம்பித்தாள். பரந்த, அளக்க முடியாத சரித்திர ரீதியான அசைவில் தனக்கும், தன்னுடைய எதிர் காலக் குழந்தைக்கும் தங்களுக்குரிய இடம் இருக்கிறதென்றும், அது எவ்வளவு அடக்கமானதாக இருந்தபோதிலும் அடையக்கூடியதுதானென்றும் அவள் வியப்புடன் உணர்ந்தாள். ஆனுல் அனிஷ்கா தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றி பத்தாம் பசலியான, ஒரு பக்கமான கண்ணேட்டத்தைக் கொண்டுள்ள வரையிலும் அவர்கள் அந்த இடத்தை அடையவே முடியாது.

அவளுடைய இந்த ஆழ்ந்த சிந்தனையின் நடைமுறைப் பயன் என்னவெனில், அவள் மாஸ்கோவை அடைந்தவுடனேயே, இலையுதிர் காலத்தில் தன் படிப்பைத் தொடங்குவதற்காக, ஒரு மெடிகல் இன்ஸ்டிடியூட்டில் சேருவதற்குத் தயார் செய்ய ஆரம்பிக்க வேண்டுமென்ற முடிவுதான்.

அவ்வாறு, தன்னுடைய தகப்பனாரின் உதவியுடன், தான் ஒரு மிகவும் நல்ல சர்ஜன் அல்லது குழந்தைகளின் டாக்டர் ஆக முடியும். இந்த முடிவு எடுத்தாளோ இல்லையோ, தன்னிடம் ஒரு புதிய சக்தி ஊற்றெடுப்பதைப்போல், ராணுவத்தில் சேரும்படி தன்னைத் தூண்டிய உற்சாகம் மீண்டும் தோன்றுவதைப்போல் உணர்ந்தாள். அவளுடைய தற்போதைய முடிவு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எடுத்ததுபோலவே அதே உற்சாகம் நிரம்பியதாகவும், உணர்ச்சி ததும்புவதாகவும் இருந்தது. ஆனால் அதற்கும்மேலாக, தற்பொழுதைய முடிவு பக்குவமடைந்த மனதின் முடிவு ஆகும்.

4

1943-ம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட மாஸ்கோ, 1942-ன் தொடக்கத்தில் இருந்த மாஸ்கோவைப்போல் இல்லை; முற்றிலும் வேறுபட்டுக் காணப்பட்டது. அப்பொழுது ஏராளமான மக்கள் மாஸ்கோவை விட்டு காலி செய்து கொண்டு வேறிடம் போயிருந்தனர். தெருக்களெல்லாம் வெறிச்சென்று இருக்கும். கடுமையான சோதனைக் காலம். மக்கள் பலர் கிழக்கு நோக்கியும்; பலர் மேற்கு நோக்கியும் வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் தற்பொழுது அவர்கள் திரும்பி வந்துகொண்டிருந்தனர். வெளியேறியவர்களின் தொகையை விட திரும்ப வருவோரின் தொகை அதிகமாகக்கூட இருக்கலாம். கும்பல் கும்பலாக, உற்சாகத்துடன், வந்துகொண்டிருந்தனர். மாஸ்கோ மீண்டும் ஜீவகளை பெற்றது. எங்கு பார்த்தாலும் மக்கள்; மோட்டார்கார்கள்; வாழ்க்கை பரபரப்பாகவும், ஒரே இரைச்சல் நிரம்பியதாகவும் இருந்தது. சாயங்கால வேளைகளில் மட்டும் சில நிமிஷங்களுக்கு அமைதியாயிருக்கும். செஞ்சேனையின் வெற்றிகளை அறிவிக்கும் வானொலிச் செய்திகளைக் கேட்பதற்கு மக்கள் கூடுவர்.

நகரத்தின் அந்த ஓசை நிறைந்த பரபரப்பான வாழ்க்கையில் அனிஷ்கா எளிதில் ஒன்றினாள். அநேகமாக சமாதான வாழ்க்கை ஏற்பட்டுவிட்ட தலைநகரில், அனிஷ்கா நிறைய எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். தன்னுள்ளே

வளர்த்துக் கொண்ட உறுதியுடன் அவள் தன்னுடைய முடிவை நிறைவேற்றும் ரீதியில் செயலாற்றி வந்தாள். கையேடுகள், குறிப்புப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள் ஆகியவற்றை நண்பர்களிடமிருந்து பெற்று பயில ஆரம்பித்தாள்.

பள்ளிக்கூட நாட்களிலும், பின்னர் ஜெர்மன் மொழிக் கழகத்திலும், ஆராய்ந்து பயில்வதை ஒரு தொந்தரவான வேலையாக அனிஷ்கா கருதியதுண்டு. ஆனால் தற்பொழுது சூத்திரங்கள், விதிவாய்ப்பாடுகள் ஆகியவை விஷயத்தில் அமோக ஈடுபாடு கொண்டாள். முன்பெல்லாம், ஒரு கடினமான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிப்பதற்கு அவள் துணிவு கொண்டதேயில்லை. ஆனால் தற்பொழுது மகிழ்ச்சியுடன் அவள் அவற்றை மேற்கொண்டாள். ஒருக்கால், போர் முனையில் நீண்ட கால, உடலுக்குக் கஷ்டம் தரும் அலைச்சலுக்குப் பின்னால், அறிவுத்துறை ஆராய்ச்சியை மனதிற்கு நிம்மதி தரும் சிறந்த சாதனமாக அவள் கருதியிருக்கலாம். கணிதம், பௌதீகம் ஆகியவை தவிர, ரசாயனம் அவளுக்கு மகிழ்ச்சிகரமான பள்ளி நாட்களின் நினைவைத் தூண்டியது. தற்பொழுது மீண்டும் திரும்ப முடியாத அந்தக் கடந்த காலம்தான் அவளுடைய வாழ்க்கையில் வனப்பு மிக்க காலமாக அவளுக்குத் தோன்றியது. தன்னிடம் ஏற்பட்டுள்ள மாறுதலைச் சரியாக வியாக்யானம் செய்யும் முறையில் நான் முதுமை அடைந்து வருகிறேன். என்று அவள் கூறுவதுண்டு. கற்றுக்கொள்வதற்கு அவளுக்கிருந்த ஆர்வமும், அவளுக்குக் கிடைத்த வெற்றிகளும் அவளுக்கு மனத்திருப்தியையும், மகிழ்ச்சியையும் கூட ஏற்படுத்தியது. வாழ்க்கையைப்பற்றி ஓரளவு அனுபவம் பெற்றதற்குப் பின்னால் கல்வி பயிலுவதை மீண்டும் தொடர வேண்டும் என்ற முடிவுக்கு அவள் வந்தாள். ஏனெனில் அப்பொழுது தான் ஒருவர் புதிய அறிவின் மதிப்பையும், வாழ்க்கையின் ரகசியங்களைக் கண்டு பிடிப்பதற்காகத் தன் வாழ்க்கையைப் பயன்படுத்தும் ஒரு மனிதன் உன்னதமான குணம்சத்தையும் சரியாக உணர்ந்து கொள்ள முடியுமென்றும் அவள் முடிவுக்கு வந்தாள்.

பேராசிரியர் பெலோஜ்யொரோவ் சீக்கிரம் மாஸ்கோ வுக்கு வந்து சேர்ந்தார். மாஸ்கோவில் ராணுவ வைத்தியப் படைத் தலைமை அலுவலகத்தில் ஒரு புதிய வேலைக்கு அவர் மாற்றப்படுவதுபற்றி விவாதிப்பதற்காக அவர் வரவழைக் கப்பட்டார்.

அவர் அத்தை நாடியாவின் வீட்டுக்குச் சென்றார். அனிஷ்கா மாஸ்கோவில் இருப்பதையும் ஒரு வைத்தியக் கழகத்தில் சேருவதற்காகக் கடுமையாகப் படித்துக் கொண் டிருப்பதாகவும் நாடியா அவரிடம் தெரிவித்தாள். இந்தச் செய்தி பேராசிரியரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. தன் வீட்டுக்கு ஓடோடி வந்தார். அங்கு தன் மகளையும், வேறு இரண்டு பெண்களையும் புத்தகக் குவியல்களுக்கிடையில் கண்ட அவர் மேலும் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தார். அவர்கள் தங்கள் ஆராய்ச்சியிலேயே மூழ்கிப் போயிருந் திருக்க வேண்டும்; ஏனெனில் பேராசிரியர் வந்ததைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை.

அனிஷ்கா காக்கி ராணுவ கவுன் அணிந்திருந்தாள். அவள் தன் தகப்பனாரின் பக்கம் திரும்பியபோது, அவளு டைய நிமிர்ந்த மார்பின்மீது இரண்டு விருதுகளும், வீரப் பதக்கம் ஒன்றையும் அவர் கண்டார். அவளுடைய முகம், ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அமைதியாயிருந்தது. ஆழ்ந்த சிந்தனையில் அவள் ஆழ்ந்திருக்கிறாளோ, என்று பேராசிரியர் நினைத்தார்.

தந்தையைக் கண்டதும் அனிஷ்கா மகிழ்ச்சியடைந்தாள். அதே சமயத்தில் சிறிது கலவரமுமடைந்தாள். தன்னுடைய குழந்தையைப்பற்றி நினைத்தாள். தன் தாயின் சகல உணர்ச்சி பாவங்களும் அதனிடமும் உடனே பிரதிபலித்தது. அது உள்ளுக்குள்ளேயே அசைந்து கொடுத்தது. "உங்களு டைய பேரப் பிள்ளை" என்று அனிஷ்கா தன் மனதிற்குள் ளேயே தகப்பனாரிடம் கூறினாள். தன் தகப்பனாருக்கு ஒரு பேரப் பிள்ளை இருப்பதும், அது அவருக்குத் தெரியாமலிருப் பதும் அவளுக்கு விநோதமாகப்பட்டது.

தன் மகளுக்கு எத்தகைய தீங்கும் ஏற்படவில்லையென் பதையும், அதே சமயத்தில் அவள் வனப்பு மிக்கவளாகவும்,

அமைதியாகவும் இருப்பதையும் கண்டு பேராசிரியர் மகிழ்ச்சி அடைந்தார். கடைசியாக அவள் வைத்தியத்துறையை மேற்கொண்டதற்காக அவர் பாதியளவு பயபக்தியுடனும், பாதியளவு தமாஷாகவும் அவளுக்கு நன்றி தெரிவித்தார். அவள் தனக்கு இஷ்டமான வேலையை மேற்கொள்வதற்கு அவளுக்கு சுதந்திரமிருக்கிறது என்பதை அவர் அவளுக்கு நினைவூட்டினார். தான் அவசரப்பட்டு நடந்துகொண்டதாகவும், இருவருக்கிடையில் தப்பபிப்ராயம் ஏற்பட்டதற்கு வருந்துவதாகவும் அவர் சூசகமாகத் தெரிவித்தார்.

வைத்தியத் துறையில் அவ்வளவு பெரியவர் தங்களுக்கு முன்னால் வந்திருப்பதைக் கண்டு சங்கோஜமடைந்த மற்றைய இரண்டு பெண்களும் எழுந்து சென்ற பின்னால், தன் மகள் திரும்பி வந்ததைக் கொண்டாடும் பொருட்டு ஒயின் குடிப்பதென்ற முடிவுக்கு பேராசிரியர் வந்தார். ஆனால் ஒரு புட்டி ஒயினையும் அவர் மட்டுமே குடிக்க வேண்டிய நிலைமை. ஏனெனில் அவருடைய மகள் தன் குழந்தையைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, ஒயின் குடிப்பதால் அதற்குத் தீங்கு விளையலாம், என்று நினைத்தாள்.

மாலையில் பேராசிரியர் போல்ஷாய் தியேட்டருக்கு டிக்கெட்டுகள் வாங்கினார். அவர்களிருவரும் ''அன்னத் தடாகம்'' பார்ப்பதற்குச் சென்றனர். தியேட்டரிலிருந்த சூழ்நிலை, தியேட்டரின் அகலமான மேற்பரப்பில் வரையப்பட்டிருந்த பழங்காலத்திய சித்திரங்கள், கனத்த கருஞ்சிவப்பு நிற வெல்வெட், எல்லாவற்றுக்கும் மேலாக அந்த பாலே நடனம், இனிமையான சங்கீதம், புகழ்பெற்ற பாலே நடன நிபுணி உலனேவாவின் குறை கண்டுபிடிக்க முடியாத எழில் ஆகியவை அனிஷ்காவுக்கு உவகை ஊட்டுவதாயிருந்தன. புகை சூழ்ந்திருக்கும் அடிவானம், பழுத்த இலைகளையுடைய மரக்கிளைகளால் அடையாளம் கண்டுகொள்ள முடியாமல் மூடப்பட்டிருக்கும் பீரங்கிகள், பெரிய கோட்டுகளை அணிந்த ஆண்கள் முடிவில்லாமல் சாரி சாரியாகப் போய்க்கொண்டிருப்பது, மழையால் கழுவப்பட்டுள்ள முடிவற்ற சாலைகளில் ஓடும் கார்களின் சத்தம்—ஆகிய சமீப கடந்த காலத்திற்கு இது எவ்வளவு நேர் மாறுபட்ட அனுபவம்

என்பது அவளுக்குப் பளிச்சென்று பட்டது. மனித உடலின் அழகையும், மனிதனுல் உண்டாக்கப்பட்ட இசையையும் சபையோர் தன்னிச்சையான முறையிலும், ஆழமாகவும் அனுபவித்து ரசித்து, ராணுவத்தை விட்டுத் தான் நிர்ப் பந்தமாக வெளியே வந்ததற்கு மேலும் ஒரு நியாயம் தந் திருப்பதாக அனிஷ்காவுக்குப்பட்டது.

அனிஷ்கா பிறருடைய கவனத்தைக் கவர்ந்ததும், மக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் அவளேயும் தன்னேயும் கவனித்தார்கள் என்பதையும் பேராசிரியரால் பார்க்காம லிருக்க முடியவில்லே. அவளேப்பற்றி அவர் மிகவும் பெருமை கொண்டார். அவ்வளவு எழில் நிறைந்த, வயதுக்கு வந்த, கட்டமைந்த பெண் தன்னுடைய மகள்தான் என்பதை அவரால் நம்பவே முடியவில்லே.

நாட்கள் சென்றன. ஆயினும், மிகவும் முக்யமான விஷயத்தைப்பற்றித் தன் தகப்பனுரிடம் சொல்வதற்கு அனிஷ்காவால் இன்னும் தன் மனதைத் திடப்படுத்திக் கொள்ள முடியவில்லே. அவ்விஷயம் அவருக்கு நிச்சயம் துன்பத்தையும், துயரத்தையும் ஏற்படுத்தும் என்பதை அவள் உணர்ந்தாள். அவளுடைய சந்தேகங்கள் இன்னும் அதிக ஆதாரமுள்ளவையாகத் தோன்றும். காரணம் அவருக்கு அகிமோவைத் தெரியாது; ஒரு சமயம் அவளேப் பற்றியே கூட உண்மையாகத் தெரியாது. தான் செய்ததைப் பற்றி அவள் எவ்வகையிலும் வருந்தவில்லேயென்ருலும், தன்னுடைய தந்தையின் நீலக் கண்கள் தன்மீது பதியும் போது அனிஷ்கா இக்கட்டான நிலேமையை அடைந்தாள். அதைப்பற்றி அவரிடம் சொல்வதை ஒத்திப் போட்டுக் கொண்டே வந்தாள்.

காலேயில் தகப்பனுருக்கு முன்னுல் அனிஷ்கா படுக் கையைவிட்டு எழுந்தாள். கடைக்குச் சென்று சாமான் வாங்கி வந்தாள். காலே ஆகாரத்தைத் தயாரித்தாள். இரு வரும் ஒன்ருக சாப்பிட்டனர். சாப்பிடும்போது மகிழ்ச்சி கரமான உரையாடல் நிகழ்ந்தது. இருவரும் ஒன்ருக இருக் கும்போது அவர்கள் அதிக மகிழ்ச்சியுடன் இருந்தனர். பின்னர் பேராசிரியர் தற்காப்பு அமைச்சரகத்திற்குச்

சென்றார். அவள் வீட்டு வேலைகளை கவனித்தாள். பாத்தி ரங்களை சுத்தம் செய்தாள். பகலுணவைத் தயார் செய் தாள். அல்லது துணிகளைத் துவைத்தாள். தன் குழந்தைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் தவிர்ப்பதற்காக முடிந்த வரை உட்கார்ந்த வண்ணமே வேலைகளைச் செய்தாள். பின்னர் அவளுடைய இரு நண்பர்களும் வருவார்கள். அவர் கள் ஒன்றாகக் கல்வி பயில்வர்.

தன் மகளிடத்தில் கண்ட மாறுதலைப்பற்றிப் பேராசிரி யர் மகிழ்ச்சி அடைந்தார். அவருடைய ஒரு நீண்ட நாளைய விருப்பத்தை ராணுவம் நிறைவேற்றி வைத்திருந்தது. உடலுழைப்பு வேலையைத் தன் மகள் எடுத்துக்கொள்வதைப் பார்க்க வேண்டுமென்பதே அவருடைய நீண்ட கால விருப்ப மாக இருந்தது. யுத்தத்தின்போது ராணுவத்தை நேசிப்ப தற்கு அவர் கற்றுக்கொண்டார். தன் மகளுக்கு அது செய் துள்ள நன்மை, ராணுவத்திடம் அவரது நன்றியறிதலையும், நன்மதிப்பையும் இன்னும் அதிகரித்தது.

1943ம் ஆண்டு முடிவடைந்ததும், கடைசியாக அகிமோ விடமிருந்து அனிஷ்காவுக்கு ஒரு கத்தை கடிதங்கள் வந்து சேர்ந்தன. அவைகளெல்லாம் ஒன்றாக ஒரு செய்தித் தாளில் வைத்துக் கட்டப்பட்டிருந்தது. அதன் மீது கேப்டன் ட்ரோஸ்டின் கோணல் மாணல் கையெழுத்தில் விலாசம் எழுதப்பட்டிருந்தது.

அக்கடிதங்களையெல்லாம் எது முன்னால் வந்தது, எது பின்னால் வந்தது என்பதைக்கூட கவனிக்காமல், கைக்கு வந்ததை அப்படியே எடுத்து அனிஷ்கா படித்து முடித்தாள். ஒவ்வொரு கடிதமும் அகிமோவினுடைய மதிநுட்பத்திற்கும், அவருடைய சொற்களின் பொருள் வலிமைக்கும், அவரு டைய கட்டுப்படுத்தப்பட்ட அன்புணர்ச்சிக்கும் அவளுடைய பாராட்டுதலை அதிகப்படுத்தியது. அவர் புத்திக் கூர்மை வாய்ந்தவராக இருப்பதுடன் மட்டுமன்றி, தன் உணர்ச்சி களை எழுத்து ரூபத்தில் வடிப்பதற்கும் திறமையுள்ளவராக இருப்பதைக் காண அவள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தாள். ஒவ்வொரு மனிதரையும் அவருடைய படிப் புக்குத் தகுந்தாற்போல் எடைபோடும் கர்வம் மிகுந்த

பழக்கம்—ஜெர்மன் மொழிக் கழகத்திலிருந்தபோது தான் பெற்ற பழக்கம்—இன்னும் தன்னைவிட்டு பூர்ணமாகப் போய் விடவில்லை என்பதை இப்பொழுதுதான் அவளால் காண முடிந்தது. மற்றும், தன்னுடைய காதலன்—போரில் தன்னுடைய வீர சாகஸங்களால் எவ்வளவு புகழ் பெற்றிருந்த போதிலும் நன்கு படித்தவராக இல்லாதிருந்தால் அவள் துயரடைந்திருப்பாள்.

அவள் ஒரு நீண்ட பதில் எழுதி, அதைத் தபாலில் சேர்ப்பதற்கு உடனே ஓடினாள். திரும்பி வந்ததும் அவளால் நிலை கொள்ள முடியவில்லை. புத்தகங்களில் மனது ஓட வில்லை. கடிதங்களைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். மீண்டும் எழுதவேண்டுமென்று விரும்பினாள். அவ்வாறே எழுதவும் செய்தாள். இரண்டாவது கடிதம் முதல் கடிதத்தை விடவும் நீண்டு போயிற்று. அதையும் உடனே தபாலில் சேர்த்தாள்.

தானும் தன்னுடைய மகளும் புத்தாண்டை, தன்னுடைய பழைய நண்பனான ஜெனரல் சிலயேவுடன் சேர்ந்து கொண்டாடுவதென்று புரொபஸர் பெலோஜ்யொரோவ் முடிவு செய்தார். சிலயேவின் குடும்பம், படையெடுப்பின் போது காலி செய்துகொண்டு போனவர்கள் அப்பொழுது தான் ஊருக்குத் திரும்பியிருந்தார்கள். அன்று மாலை ஒரு வழியனுப்பு உபசாரம் நடத்தப்படவேண்டியதாகவும் இருந்தது. ஏனெனில் போர் முனையில் ஒரு பொறுப்புக்கு அப்பொழுதுதான் சிலயேவ் நியமிக்கப்பட்டிருந்தார். அந்த வேலை மாற்றத்திற்கு அவர் நீண்ட காலமாக அவரால் ஆன எல்லா முயற்சியும் செய்துகொண்டு வந்தார். ஏனெனில், உண்மையான சண்டையைப் பார்ப்பதற்குத் தனக்குச் சந்தர்ப்பம் எதுவும் இல்லாமல் போய்விடும் என்ற எண்ணமும், அதனால் போர் முனையில் உள்ள ஜெனரல்கள் பெறும் சிறந்த ராணுவ அனுபவம் தனக்குக் கிடைக்காமல் போய் விடுமோ என்ற எண்ணமும் அவரை சோர்வடையச் செய்தன.

புத்தாண்டு பிறப்பதற்கு முந்தின நாள் வீட்டுக்கு கொஞ்சம் நேரங்கழித்து வந்த பேராசிரியர், தன் மகளை

விரைவில் உடை மாற்றிக் கொண்டு வெளியே போவதற்குத் தயாராகும்படி வற்புறுத்தினர். அவள் தன்னுடைய ராணுவ கவுனைக் கழற்றிவிட்டு, தனக்குப் பிடித்தமான புதிய உடை ஒன்றை அணிந்துகொள்ள முடிவு செய்தாள். அது ஒரு நீளமான, கரு நிறமான, உயர்ந்த கழுத்துடைய கம்பளிச் சட்டையாகும். ஒரு அகலமான இடைக்கச்சும் வட்டவடிவமான காலரும், பளபளக்கும் கருப்பு, வெள்ளை நிறப் பட்டைகள் மாறிமாறி வரும் பட்டுத் துணியால் அந்த உடை தைக்கப்பட்டிருந்தது. அந்தப் பட்டைகள் அவளுடைய தோள் பட்டை வரையிலும் சென்றன. சட்டையின் கைகள் நீளமாகவும் அகலமாகவும் இருந்தன. இறுக்கமான கைப்பட்டிகள் காலரைப் போன்ற அதே துணியில் தைக்கப் பட்டிருந்தன. இந்த உடையில் அனிஷ்கா மிகவும் வனப்பு வாய்ந்தவளாகவும், உண்மையான வயதைவிட அதிக வயதானவளாகவும் தோற்றமளித்தாள். ஏற்கனவே மீண்டும் நீளமாக வளர்ந்திருந்த அவளுடைய கூந்தல், அவளுடைய தோள்களின்மீது, அவளுடைய மினுமினுக்கும் சில்க் காலரின்மீது எழிலுடன் விழுந்தன.

தன்னுடைய எழில்மிக்க உருவத்தைக் கண்ணுடியில் பார்த்தபோது அவளால் தன்னையே அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை. ராணுவ மொழிபெயர்ப்பாளர் பெலோஜ்யரோவா முற்றிலும் ஒரு மாறுபட்ட பெண்ணுக இருந்தாள், என்று நினைத்துக்கொண்டாள்.

அவள் குறிப்பாக வெளியே போக விரும்பவில்லை. ஏனெனில், அகிமோவிடமிருந்து வந்த கடிதங்களிலிருந்து அவர் மகிழ்ச்சியுடனும், கஷ்டங்களில்லாமலும் இருக்கிறுர் என்ற அபிப்ராயத்துடனேயே அவள் இன்னும் இருந்தாள். வெளியில் புத்தாண்டு உறைபனித் துகள்கள் பெரிது பெரி தாக விழுந்துகொண்டிருப்பதை அவள் பார்த்தாள். நகரம் முழுவதும், பனிக்கால முஸ்தீப்பில் ஆவலுடனும்; மோகத் துடனும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதைப்போல் தோன் றியது. கடிதங்கள் கிடந்த மேஜைமீது அவளுடைய பார்வை அடிக்கடி விழுந்தது. ஒவ்வொரு தடவையும் அவள் முறுவலித்தாள். அவளுடைய தகப்பனுர் உள்ளே வந்தார்.

தன் மகளை அந்தப் புதிய மாலை நேர உடையில் கண்ட அவர் திடீரென்று ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கினார். அவளைப்பற்றி அவரால் புரிந்துகொள்ள முடியாத ஒன்றால் அவர் ஆச்சரிய மடைந்தார். புதிதாக ஒன்றை அவளிடம் கண்டார். பெண்மை நிறைந்த தோற்றம். ஒரு பெண்ணுக்கு சாதாரண மாக இருப்பதைவிட அதிகம் முன்னால் தள்ளிய வயிறு அவ ரது பார்வையில் பட்டது.

அவரது பார்வையைக் கண்ட அவளுடைய முகம் வெளுத்தது. பின்னர் அவள் அவரருகில் சென்று, எவ்வித பயமுமின்றி, ஆனால் மிகவும் கடுமையான தொனியில், "ஆம், அப்பா, எனக்கு ஒரு குழந்தை பிறக்கப்போகிறது" என்றாள்.

விஷயத்தைத் தெரிவிப்பதற்கு இதுவல்ல முறை, என் பது வாஸ்தவமே. "அப்பா, நான் திருமணம் செய்துகொண்டு விட்டேன்," என்று சொல்லியிருந்தால், அது இன்னும் நாசுக்காக இருந்திருக்கும். பின்னர், ஒருக்கால் அடுத்த நாளே, மீதி விஷயங்களை அவள், அவரிடம் கூறியிருந்திருக் கலாம். ஆனால் இந்த வார்த்தைகள் மட்டுமே அவளது உதடுகளிலிருந்து வெடித்தன; வேறு எதுவுமல்ல. காரணம் அவைகள்தான் மிகவும் முக்கியமான வார்த்தைகள். மற்றும் தேவையானவற்றைத் தவிர வேறு எதையும் கூறுவதற்கு அவள் விரும்பவில்லை. தன் சொந்தத் தகப்பனாரிடமே தொடர்ந்து நாசூக்காக நடந்துகொண்டிருப்பது தன் அந் தஸ்திற்குக் குறைவானது என்று நினைத்தாள்.

அவள் கூறிய அந்த வார்த்தைகளுக்குப் பேராசிரியரிடம் ஏற்பட்ட பிரதிபலிப்பிலிருந்து மேற்கொண்டு விளக்கங்கள் எதையும் அவசியமற்றதாக்கிவிட்டது. அவருடைய கண்கள் பஞ்சடைந்து பார்வையிழந்ததுபோல் காணப்பட்டன. அவருடைய வழக்கமான நற்சுபாவம் மறைந்தது. கோபத் துடனும், பயங்கரத்துடனும் தன் மகளை நோக்கினார். ஆரம்பத்திலிருந்து தான் எண்ணியது சரியாகப் போய் விட்டது என்று உடனே முடிவுக்கு வந்தார்—அவள் ராணு வத்தில் சேர்ந்து பொது நன்மைக்குப் பாடுபடுவதற்காக அல்ல என்பதே ஆரம்பத்தில் அவர் கருதியது. பெரிய

மோசம் நடந்துள்ளது என்று உடனே முடிவு செய்து கொண்டார்.

"அவள் என்னுடைய மகளாக இருக்க முடியுமா?" தன்னுடைய இளமைப் பருவத்தில் தான் சுற்றி அலைந்ததையெல்லாம் திடீரென்று மறந்து, இவ்வாறு எண்ணினார். அல்லது ஒருக்கால் அவர் அதை மறக்காமலும் இருந்திருக்கலாம். ஒருக்கால், அதற்கு மாறாக, பெண்களிடம்தானே முறை தவறி நடந்து கொண்டிருந்ததின் காரணமாகத் தன்னையறியாமலே தன் மகளை வெறுத்தார்; அகிமோவையும்—இவரைப்பற்றித் தனக்குத் தெரியாது—தன்னுடைய அளவு கோலாலேயே அளந்தார். தங்களுடைய புதல்விகளைக் காதலிக்கும் ஆசாமிகள் அயோக்கியர்களாகத்தான் இருப்பார்கள் என்று சில தகப்பன்மார்கள் எப்படியோ முடிவுக்கு வந்துவிடுகின்றனர். ஒருக்கால், சில சமயங்களில் தாங்கள் அயோக்யர்களாக இருந்ததினால் அவர்கள் இவ்வாறு நினைக்கிறார்கள் போலும்!

வைத்தியக் கழகத்தில் சேர வேண்டுமென்று அவள் விரும்பியதும்கூட ஒரு ஏமாற்று வித்தையென்றும், தன்னைக் குஷிப்படுத்துவதற்கும், சமாதானப்படுத்துவதற்கும்தான் என்றும் இப்பொழுது அவர் சந்தேகப்படவும் செய்தார். அந்தச் சமயத்தில் தன் மகளின்பால் அவர் கற்பிக்காத வஞ்சகம் உலகத்தில் ஒன்று பாக்கியில்லை.

ஒருக்கால் அனிஷ்கா அவரிடத்தில் பேச முயன்று, உண்மை முழுவதையும் அவரிடம் அமைதியாக சொல்ல முயற்சி செய்திருந்தால், அவளுடைய நிலைமையை சரியான பார்வையில் அவர் பார்த்திருக்க முடிந்திருக்கலாம்; அனேகமாக ஒரு ஆணுக்கு ஏற்படுவதைப் போன்ற பொறுமை உணர்ச்சியை அவரால் சமாளித்துக் கொள்ள முடிந்திருக்கலாம். ஆனால் அனிஷ்கா அவருடைய சிந்தனைகளை ஆய்ந்தறிந்தாள். அவள் கண்களில் கோபக் கனல் மூண்டது. தன் கவுரவத்திற்கு ஹானி ஏற்பட்டுவிட்டதென்ற ஆத்திரத்தில் அவள் ஏளனமான முறையில், "எப்படியானாலும் இது என்னுடைய சொந்த விவகாரம், உங்களுடைய அபிப்பிராயத்தை நீங்களே வைத்துக் கொள்ளலாம்," என்றாள்.

பின்னர் தன்னுடைய அறைக்குள் சென்ருள். தன் மகளிடமிருந்து வந்த இந்த வார்த்தைகளைக் கேட்ட தகப்பனுர் சில நிமிஷங்கள் அசைவற்று அப்படியே நின்ருர். பின்னர் தன் தொப்பியையும், கோட்டையும் எடுத்து அணிந்து கொண்டு வெளியே நடந்தார். அவர் ஜெனரல் சிலயேவின் வீட்டுக்குப் போகவில்லை. ஜனவரி 2-ந் தேதியன்று, அவர், மாஸ்கோவில் தனக்கு நிர்ணயம் செய்திருந்த வேலையை ஏற்றுக்கொள்ள உறுதியாக மறுத்துவிட்டார். போர் முனைக்குச் சென்று தன்னுடைய முந்திய வேலையையே ஏற்றுக்கொண்டார்.

5

தன்னுடைய தகப்பனுரின் செலவில் வாழக்கூடாது. என்பதற்காக, அனிஷ்கா அயல்மொழி இலக்கிய நூல் நிலையத்தில் வேலைக்குச் சேர்ந்தாள். புத்தகங்களின் பட்டியலைத் திரட்டும் அவளுடைய வேலை, காலையில் வெகு சீக்கிரத்தில் ஆரம்பமாகும். ஆனுல் வேலை முடிந்த பின்னும்கூட அவள் பல நாட்களில் அங்கேயே அதிக நேரம் தங்குவாள். வைத்தியக் கழகத்தில் சேருவதற்காக விடாப்பிடியாகப் பிடித்தாள்.

அந்த நூல் நிலையத்திலிருந்துதான் அவள் பேவலுக்குத் தன் கடிதங்களையெல்லாம் எழுதினுள். அக்கடிதங்கள் எப்பொழுதும் மகிழ்ச்சிகரமாகவும், ஆரோக்யகரமாகவும், அவளுக்கு ஏற்பட்டதாகக் கருதப்படும் களிப்பூட்டக்கூடிய சம்பவங்கள் நிறைந்ததாகவும் இருக்கும். ஆனுல் அவளுடைய கடிதங்களுக்கும், அவளுடைய சொந்த அன்ருட வாழ்க்கைக்கும் இடையில் இருந்த வேறுபாடு மிகவும் அதிர்ச்சி தரக் கூடியதாக இருந்தது; இது அனேகமாகக் கண்ணீரை வரவழைக்கும் அளவிற்கு அவளுக்கு வேதனை தருவதாக இருந்தது. அவள் தானே தியேட்டருக்குப் போயிருந்ததைப் போல் தியேட்டரைப்பற்றி எழுதினுள். நாடகக் கதையின் கருவைப்பற்றியும், நடிகர்கள் நடித்ததைப் பற்றியும், 5 ஆண்டுகளுக்கு முன்னுல் தான் கண்டவைகளைப்பற்றி நினைவுபடுத்திக் கொண்டு எழுதினுள். தன்

தகப்பனுருடையதும், அத்தை நாடியாவுடையவும் இதர உறவினர்களுடையவும் வாழ்த்துக்களை அவருக்குத் தெரிவிக்க அவள் தவறியதே கிடையாது. நூல் நிலையத்தில் தன்னுடைய வேலையைப்பற்றி எழுதினுள். அதைப்போல் அவ்வளவு உற்சாகமூட்டும், அவ்வளவு கவர்ச்சிகரமான, அவ்வளவு அதிக சம்பளம் கிடைக்கும் வேலை வேறு எதுவும் இல்லாததுபோல் தன் வேலையைப் பற்றிக் கூறிக்கொண்டாள். ஆனுல் யதார்த்தத்தில் அது ஒரு சாதாரணத் தொழிலாகவே இருந்தது.

அனேகமாக ஒவ்வொரு நாளும் அவளுக்கு அகிமோவிடமிருந்து கடிதங்கள் வந்தன. அகிமோவ் அவளுக்கு ஒரு அத்தாட்சிப் பத்திரத்தை அனுப்பி வைத்தார். அதைக் கொண்டு அவள் மாதத்திற்கு ஆயிரம் ரூபிள் பெற முடிந்தது. இதன் மூலம் அவள் அதிக சௌகரியமாக வாழ முடிந்தது.

ராணுவத்தில் சேரவேண்டுமென்ற அவளுக்கிருந்த ஆர்வம், அவளையே அடிக்கடி ஆச்சரியத்தில் ஆழ்த்தும். ராணுவத்தில் பொதுவான நலவுரிமைகள், தீங்கு நேருவதற்கு எதிராகப் பாதுகாப்பு இருக்கிறதென்ற உணர்வு, எல்லோரும் ஆயுதபாணிகளாகவும், உறுதியுடனுமிருந்த, வயதடைந்தவர்களின் அந்த மகத்தான குடும்பத்தில் அவ்வப்போது ஏற்படும் சம்பவங்கள் ஆகியவை அவளை ராணுவத்தின்பால் கவர்ச்சித்தன. அகிமோவ் எங்கு இருக்கிருரோ, அங்கு போக வேண்டுமென்பதுதான் அவளுடைய கனவு. அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவளால் எப்படியாவது முடிந்திருக்கும். ஆனுல் அவளுடைய குழந்தையால்தான் அவளால் அப்படி செய்ய முடியாமல் போயிற்று. குழந்தை இல்லாமல் இருந்தால் தனக்கு நல்லதல்லவா என்று சில சமயங்களில் அவள் தனக்குத் தானே கேட்டுக்கொண்டதுமுண்டு. ஆனுல் அந்தக் கருத்து உடனேயே நிராகரிக்கப்பட்டது. "ஒருக்கால் அந்தக் குழந்தை லெனின் மாதிரியோ அல்லது புஷ்கின் மாதிரியோ புகழ் வாய்ந்த மனிதனுக ஆகிறது என்று வைத்துக் கொள்வோம்? என்று அவள் தனக்குத் தானே குழந்தைப் பிள்ளைத்

தனமான நம்பிக்கையுடன் கூறிக்கொள்வாள். "அல்லது மற்ருெரு பேவல் மாதிரி ஆகிவிடுவானே?" என்று நினைப்பாள்.

பிறக்கும் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டு அவள் பேவலுக்கு, பெண், ஆண் பெயர்களைக் கொண்ட ஒரு பட்டியலை அனுப்பினுள். ஆணுக இருந்தால் ஆண்ட்ரீ என்ற பெயரையும், பெண்ணுக இருந்தால் எகாடெரினு என்ற பெயரையும் அகிமோவ் தேர்ந்தெடுத்து அனுப்பினுர்.

ஜூலை மாதத்தில் அவளுடைய பிரசவ காலம் வந்தது. போல்ஷாயா மோல்சானேவ்காவிலுள்ள பிள்ளைப்பேறு நிலையத்திற்கு மெதுவாக நடந்து சென்ருள். தன்னுடைய தகப்பனுரிடமிருந்து துண்டித்துக் கொள்ளாமல் இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்றும், சமரஸம் செய்து கொள்வதற்கு முதல் நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு வீராப்புடன் தயங்கி, அவரைத் தன் சிந்தனைகளிலிருந்தும் வெட்டிவிடாமல் இருந்திருந்தால் எப்படியிருந்திருக்கும் என்றும் அவளால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. எத்தனை கார்கள், பேராசிரியர்கள், நர்சுகள், தந்திகள் பறந்திருக்கும்! அவர் போர் முனையிலிருந்து மாஸ்கோவிற்கே விமான மூலம் வந்திருப்பார்.

இந்த எண்ணங்கள் அவளை மகிழ்ச்சியற்றவளாக்கவில்லை. அவளுடைய தற்போதைய நிலைமை ஒரு பேராசிரியரின் மகளுடையதல்ல—ஆனுல் பெண்களின் சகல மனக் கஷ்டங்களும், தன்னுடைய செய்கைகளுக்கு உலகத்திற்கு முன்னுல் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியதும், தன்னையே நம்பியிருக்க வேண்டியதுமான ஒரு சாதாரணப் பெண்மணியின் நிலைமை—அவளுடைய போலி கௌரவத்திற்கு, உகந்ததாகவும் இருந்தது.

அந்தப் பிள்ளைப்பேறு நிலையத்தில் தாயாகப் போகிறவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. அவ்வளவு பெரிய வார்டுக்கு 5 பேர்கள் மட்டுமே இருந்தனர். யுத்தம் இன்னும் நடந்துகொண்டிருந்தது.

அடுத்த நாள் இரவில் அனிஷ்காவுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதே சமயத்தில் மற்ருெரு பெண்ணுக்கு ஒரு பையன் பிறந்தான்.

விடியற்காலையில், ஏற்கனவே மற்றையப் பெண்ணினுடைய படுக்கை பூக்களாலும், கடிதங்களாலும் நிரப்பப்பட்டிருந்தது. ஆனால் அனிஷ்காவை பார்ப்பதற்குக்கூட யாரும் வரவில்லை. இது அவளை இன்னும் அதிகமாக மனம் வருந்தச் செய்தது; ஏனெனில் பையனுக்குப் பதிலாகப் பெண் பிறந்ததினால் அவள் சிறிது ஏமாற்றமடைந்தாள், பையன் பிறக்க வேண்டுமென்று அகிமோவ் விரும்பியிருந்தார் என்பதை அவள் அறிவாள்.

பின்னர் நடுப்பகல் சமயத்தில் ஒரே சமயத்தில் நான்கு பூச்செண்டுகள் வந்தன. ரோஜா மலர்கள், வயலெட் மலர்கள், ப்ளோக்ஸ், லிலாக் பூக்கள் ஆகியவற்றால் அவை கட்டப்பட்டிருந்தன. ஆஸ்பத்திரி படுக்கையின் மீதும், மேஜையின் மீதும் அவை நறுமணத்தைப் பரப்பின. இது அனிஷ்காவுக்கு கிராமத்தில் பச்சைப் புல்வெளிகளில் உலாவச் சென்றதையும் மாஸ்கோவுக்கு வெளிப்புறத்தில் உள்ள நிழல் நிறைந்த பூந்தோட்டங்களையும், எல்லாவற்றுக்கும் மேலாக, என்னவென்று வர்ணிப்பதற்குக் கஷ்டமானதொன்றை—ஆனால் அவளுக்கு முக்கியத்துவம் நிறைந்ததொன்றை நினைவுபடுத்தின. கடைசியாக அது அவளுக்கு நினைவுக்கு வந்தது. அந்த இலையுதிர்கால தினத்தில், கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்த போது வேவு பார்ப்பதில் ஈடுபட்டிருந்த சமயத்தில் அகிமோவைத் தான் முதல்முதலாகச்சந்தித்தபோது ஓர்ஷா நகருக்கு அருகில் இருந்த படைப்பகுதிகள் இந்த மலர்களின் பெயர்களால்—புனைப் பெயரிட்டு அழைக்கப்பட்டிருந்தன என்பது அவளுடைய நினைவுக்கு வந்தது. ஆஸ்பத்திரி வார்டு, வயதான நர்சின் சுருக்கம் விழுந்த முகம், பூராவும் திறந்துவைக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த பெரிய மரத்தின் அடர்த்தியான இலைகளைக் கொண்ட கிளைகள் ஆகியவையெல்லாம் அவள் பார்வையினின்றும் மங்கியது. சேறு நிறைந்த போர் அரங்கம், குறுகலான போக்குவரத்துக் குழிகள், முடிவில்லாத மலைச்சரிவுகள், கடுமையான சூறைக் காற்று ஒரு சிற்றாறின் கரைமீது சாய்வாகப் பெய்து கொண்டு

இருந்த மழை ஆகியவற்றின் படமே அவள் கண்முன் காட்சி அளித்தது.

சிறிது நேரத்தில் அவளுக்குக் கடிதங்கள் கொண்டு வந்து கொடுக்கப்பட்டன. அனிஷ்கா பிரித்துப் பார்த்த முதல் கடிதம் அகிமோவினுடையது. அகிமோவ் அங்கு நிச்சயம் இருக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியதும் அவள் அனேகமாக மயக்கமடைந்தாள். ஆனால் விரைவில் அவளுக்கு விளக்கமும் கிடைத்தது. "என் அன்பே, தோழர் கொவலெவ்ஸ்கியின் மூலம் இந்தக் கடிதத்தை உனக்கு அனுப்புகிறேன். இவர் ஒரு மாஸ்கோ பத்திரிகையின் செய்திநிருபர். தலைநகருக்குச் செல்கிறார். இவரால் உன்னைப் பார்க்க முடிவது கண்டு நான் மிகவும் பொறாமைப் படுகிறேன். நான் துரிதமாக முடிக்க வேண்டும். மதியச் சாப்பாடு அவருக்குக் காத்துக் கொண்டிருக்கிறது. என்னைப் பற்றிய எல்லாத் தகவலையும் அவர் உனக்குக் கூறுவார்," இவ்வாறு அகிமோவின் கடிதத்தில் எழுதப் பட்டிருந்தது.

கொவலெவ்ஸ்கியிடமிருந்தும் ஒரு சிறு குறிப்பு இருந்தது. "அன்புள்ள காம்ரேட் பெலோஜ்யரோவா, உங்கள் வீட்டுக்கு நான் சென்றிருந்தேன். நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதை அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் கூறினார்கள். உளமார்ந்த வாழ்த்துக்கள். அகிமோவின் பெயராலும், என் பெயராலும் உங்களுக்குப் பூச்செண்டுகளை அனுப்புகிறேன்".

நாடியா அத்தை, டான்யாநோவிகோவா' அனிஷ்காவுடன் படித்துக் கொண்டிருந்த மாணவிகள், கேப்டன் ட்ரோஸ்ட் ஆகியோரிடமிருந்தும் பாராட்டுச் செய்திகள் வந்திருந்தன. கேப்டன் ட்ரோஸ்ட் ஒரு மாதத்திற்கு முன்பே மாஸ்கோவிலுள்ள ஒரு ராணுவக் கழகத்திற்கு அனுப்பட்டு விட்டார் என்றும், அந்த நாள்முதலே அவர் அனிஷ்காவைத் தேடிக் கண்டு பிடிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரியவந்தது.

பிரசவத்தினால் ஏற்பட்ட வலிகளினாலும், உணர்ச்சிப் பெருக்கத்தினாலும் இன்னும் பலஹீனமான நிலையில் இருந்ததினால், அனிஷ்கா இந்தக் கடிதங்களுக்கு பதில் எழுத முடியாத நிலையில் இருந்தாள். எனவே, தன்னை விசாரித்துக் கடி

தங்கள் எழுதிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தும், தான் நல்ல ஆரோக்கியத்துடனும், சௌகரியமாகவும் இருப்பதாகவும் பதில் கடிதங்களை தன்னை கவனித்து வந்த நர்ஸையே எழுதும்படி கூறிவிட்டாள்:

இதற்கிடையில் நாடியா அத்தை கீழ்த்தட்டில் வரவேற்பு அறையில் கொவலேவ்ஸ்கியிடம் அகிமோவைப் பற்றி கரூராகவும், விரிவாகவும் விசாரணை செய்து கொண்டிருந்தாள். அவர் எப்பேர்ப்பட்ட மனிதர், எப்படியிருப்பார், அவருக்கு வயது என்ன, அவருடைய ராணுவ அந்தஸ்து என்ன, பொறுப்புள்ளவர்தானு, போன்ற பல விஷயங்கள் பற்றியும் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

சிறிது தூரத்தில் நின்று கொண்டிருந்த ட்ரோஸ்ட் மனச்சோர்வடைந்தும், மௌனமாகவும் காணப்பட்டார். டான்யாநோவிகோவாவும், இதர மாணவிகளும், எதிர்காலத் தாய்மார்களின் ஆர்வத்துடனும், ஆவலுடனும் சுற்றிலுமுள்ள ஒவ்வொன்றையும் பரிசோதித்துக் கொண்டிருந்தனர். அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த எதிர்காலத் தகப்பன்மார்கள், தங்களுடைய அருமை மனைவிமார்களுக்கு ஏதோ பயங்கரத் தவறு இழைத்துவிட்ட குற்றம் செய்தவர்களைப் போல் பரிதாபமான தோற்றத்துடன் காணப்பட்டனர். அந்த மாணவிகள் இவர்களை அடிக்கடி கடைக் கண்களால் பார்த்துக் கொண்டனர்.

பிரசவ விடுதியிலிருந்து வெளிவந்ததும் அத்தை நாடியாவின் வற்புறுத்தலுக்கு இணங்க, அனிஷ்கா, நாடியாவுடனேயே தங்கினுள். பேராசிரியருக்கு (அனிஷ்காவின் தகப்பனர்)எதிராக அனிஷ்காவையே நாடியா ஆதரித்து நின்ருள். தன் சகோதரனை (அனிஷ்காவின் தகப்பனர்) அவள் வணங்கினுலும் கூட இந்த சந்தர்ப்பத்தில் அவரது போக்கை நாடியா கண்டிக்கவே செய்தாள்.

“எவ்வளவு முட்டாள்களாக இருக்கிருர்? எல்லா ஆண்களும் முட்டாள்களே!” என்ருள்.

கொவலேவ்ஸ்கி அடிக்கடி அனிஷ்காவைப் போய்ப் பார்த்து வந்தார். அகிமோவைப் பற்றிய தகவல்களையெல்லாம் கூறினுர். வடபிராந்திய கடற்படைக்கு வந்தவுட

னேயே அவர், தன் சேவையின் காரணமாகப் புகழடைந்தது ஒரு பெரிய சப்மரைன் எதிர்ப்புக் கப்பலின் தலைமைப் பொறுப்பு கொடுக்கப்பட்டது, பின்னர் சப்மரைன் எதிர்ப் புக் கப்பல் கோஷ்டி (ஸ்குவாட்ரன்) ஒன்றின் தலைமைப் பொறுப்பே இவரிடம் ஒப்படைக்கப்பட்ட விஷயம் ஆகிய எல்லாவற்றையும் எடுத்துக் கூறினர். மாலுமிகளைப் பற் றியே எப்பொழுதும் அவருக்கு இருந்த உற்சாகத்துடன், அகிமோவைப் பற்றி எடுத்துக் கூறினர். தன்னை அறியாம லேயே, அகிமோவுடன் தனக்கு ஏற்பட்டிருந்த பரிச்சயம் பற்றி மிகவும் யதார்த்தத்திற்கு மாறுபட்ட கருத்தைக் கொடுத்தார். அகிமோவைப் பற்றி அவருக்கு அவ்வளவாக ஒன்றும் தெரியாவிட்டாலும் கூட — எப்பொழுதோ போகிற போக்கில் அவரை ஒரு தடவை சந்தித்துள்ளார்— வடபிராந்தியக் கடற்படையில் அகிமோவ்தான் தனக்குச் சிறந்த நண்பர் என்று கூறிக் கொண்டார்.

அனிஷ்காவை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணம் ஒன் றும் அவருக்கு இல்லை. ஏனெனில், மாஸ்கோவில் தன்னை அகிமோவின் சிறந்த நண்பராக அவர் உண்மையி லேயே கற்பனை செய்து கொண்டிருந்தார். அனிஷ்காவிடம் கூறியவைகளைப் பற்றியெல்லாம் அவருக்குச் சிறிதும் சந்தேகமில்லை. அவரைப் பற்றித் தான் கேட்டவைகளை எல்லாம், தன் கண்களால் நேரில் பார்த்ததைப் போலவே தன் உணர்வு இல்லாமலேயே திருப்பிக் கூறினர். ஒரு சமயம், அகிமோவை இதர அதிகாரிகளுக்கு உதாரண புருஷனுகக் கூறப்பட்டிருந்த பத்திரிகைத் துணுக்குகளை அவர் கொண்டு வந்தார்.

கொவலேவ்ஸ்கி அனிஷ்காவிடம் மிகுந்த அன்புகொண் டார். வெளுத்த முகத்துடன், ஆனல் சுத்தமான உடை யுடன் சாய்வு நாற்காலியில் அனிஷ்கா சாய்ந்துகொண்டு, மிகுந்த கவனத்துடன் படித்து, குறிப்புகள் எடுத்துக்கொள் வதையோ அல்லது தன்னுடைய குழந்தைக்காக கம்பளிச் சட்டை பின்னுவதையோ அவர் மணிக் கணக்காக அமைதி யாக கவனித்துக் கொண்டேயிருப்பார். சில சமயங்களில் அவள் அவரைப்பார்த்து நட்புறவு மிக்க முறையில் புன்

னகை செய்வாள். ''உங்களுக்குச் சலிப்பு தட்டவில்லையா?'' என்று கேட்பாள்; அல்லது அதிகம் மனக்களிப்புத் தரக்கூடிய வேறு எங்காவது போகும்படி அவரிடம் கூறுவாள்.

அகிமோவின் நண்பன் என்ற முறையில் தான் அவளுக்காக மட்டுமே இருப்பதாக அவர் உணர்ந்தார். ஆனால் அந்த எண்ணம் அவரை மனம் வருந்தச்செய்யவில்லை. அவள்மீது அவர் வேறு எந்த உரிமை பாத்யதையும் கொண்டாடவில்லை. அங்கு இருப்பதற்கு அவர் விரும்பினர் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. அவளைப் பார்க்கவும், பாராட்டவும், தொடர்ந்து தூக்கம் மேலிட்டவளாகவே இருப்பதினின்றும் அவள் எவ்வாறு சமாளித்துக் கொள்ளப்போகிருள் என்பதை ஆச்சரியத்துடன் கவனிக்கவுமே அவர் அங்கே இருந்தார். தன்னுடைய மகளின் காரணமாக அவளால் போதிய அளவு தூங்கவே முடியவில்லை. படித்துக்கொண்டேயிருக்கவும், அல்லது அவளுடைய குழந்தையை கவனித்துக் கொண்டேயிருக்கவும் அவர் விரும்பினர்.

குழந்தையின் பிறப்புப் பதிவுப் பத்திரத்தில் எகாடெரின பாவ்லோவ்ன அகிமோவா என்று பெயரிடப்பட்டிருந்தது. அந்த சின்னஞ்சிறு குழந்தைக்கு, நகைப்பூட்டக் கூடியமுறையில் அந்தப்பெயர் நீளமாகவும் கடுமையான பெயராகவும் தோன்றியது. அக்குழந்தையைப்பற்றி இவ்வளவு பரபரப்பு, வியப்பூட்டக்கூடிய முறையிலும் விநோதமாகவும் இருந்தது. மிகவும் ஆச்சரியப் படக்கூடிய விஷயம் அதனுடைய முகம்தான். எல்லாவற்றுக்கும் மேலாக, அது தூங்கிக்கொண்டிருக்கும்போது, எப்பொழுதும் அதனுடைய முகத்தில் கோபம், ஏளனம், அலட்சியம், ஆழ்ந்த சிந்தனை, கர்வம், அசிரத்தை அல்லது கடுமை ஆகிய உணர்ச்சிகளை அவள் முகம் பிரதிபலிப்பதுபோல் தோன்றும். அந்த உணர்ச்சிகளும், மனேநிலையும் ஒரு காலத்தில் அவளுடைய குணும்சங்களாக ஆகலாம்.

அவளுடைய அன்னைக்கு இந்தச் சிறிய உயிர் இந்த உலகமனைத்துக்குமே சமமானதாக இருந்தது. அனிஷ்கா அவளிடம் சொல்லமுடியாத பாசம் வைத்திருந்தாள். தன்னுடைய காட்யா குட்டி இல்லாமல் தன்னல் என்றுமே

எப்படி வாழமுடியும் என்பதை அவளால் கற்பனை செய்து பார்க்கவும் முடியவில்லை. ஆனால் அது நீண்டகாலத்திற்கு முன்னால். யுத்தம், சமாதானம் சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களும், யுத்தத்திற்குப் பின்னர் தாங்கள் எவ்வாறு வாழ்வது என்ற பிரச்னையும் குழந்தையின் எதிர்காலத்தை அடிப்படையாகக்கொண்டே பரிசீலிக்கப்பட்டன.

தற்பொழுது, தான் ஒரு தாயாகி விட்டதால், அனிஷ்கா தன்னை அதிக முக்கியமானவளாகவும், சிக்கலானவளாகவும், மதிப்பிடற்குரியவளாகவும் கருதினாள். ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் அத்தகைய அதிசயத்தைத் தன்னுடைய உடல் செய்து முடித்ததைப்பற்றி அவள் வியப்படைந்தாள். தன்னை பத்திரமாகப் பாதுகாத்துக்கொண்டாள். தெருவை மிகவும் வேகமாகக் கடப்பதற்கும்கூட அவள் பயப்பட்டாள். அவ்வாறு செய்வதால், தற்பொழுது மிகவும் அத்தியாவசியமாக இருக்கிற தன் உயிருக்கு ஆபத்து ஏற்படுமோ என்று பயந்தாள். போர்முனையில் எவ்வாறு சிறிதுகூடக் கவலையின்றி உயிரையே திரணமாக மதித்து இருந்ததை அவள் நினைவுக்குக் கொண்டு வந்து, காட்யாவே இல்லாமல் போயிருந்திருக்கலாம் என்று நினைக்க அவள் உடம்பு பதறியது.

அனிஷ்காவையும், அவளுடைய குழந்தையையும் வியந்து பாராட்டக்கூடிய முறையில் கொவலேவ்ஸ்கி பார்த்தார். தன்னுடைய குழந்தையுடன் கூடியதாயின் உருவம் எல்லா மதங்களிலும் அத்தகைய ஒரு உயர்ந்த அந்தஸ்தைப் பெற்றிருப்பது காரணமில்லாமலல்ல, என்று அவர் நினைத்தார். குழந்தையின் தகப்பனார், ரஷ்யாவின் தூர வடக்குப் பகுதியில் அதனுடைய எதிர்காலத்திற்காகப் போராடி வருகிறார் என்ற நினைவு, அவரை அனேகமாக ஆனந்தக் கண்ணீர் பெருக்கச்செய்தது.

வடக்குப் பகுதியில் அப்பொழுது கோடைகாலமாக இருந்தது. சூரியன் அஸ்தமிக்கவேயில்லை. முடிவில்லாத இரவாக இருந்தது. இப்பொழுது முடிவில்லாத பகலாக மாறி விட்டது. குன்றுகளின் பாறைகளுக்கு இடையில் பச்சைப் பசேலென்ற புல் முளைத்திருந்தது. பல விநோதமான நிறங்

களில் மேகங்கள் வானில் பரவிக்கிடந்தன. பால்போன்ற வெண்மை நிறத்திலிருந்து கருமையான பழுப்புநிறம் வரையில் பலவிதமான மேகங்கள் கடலிலிருந்து நிலப்பரப்பின் மீது மிதந்துவந்தன. சிலசமயங்களில் அவை தாழ்ந்து வந்து பாறைகள் நிறைந்த குன்றுகளைச் சூழ்ந்து கொள்ளும். பழுப்பு நிறமான புகைமண்டலம்போல் அது காட்சியளிக்கும். சுற்றுப்புறம் முழுவதும் ஈரமும், பனியும் நிறைந்த சமவெளிப் பிரதேசம் போன்று தோற்றமளித்தது. பின்னர், புகையை விரட்டுவதைப்போல், காற்று வீசி அந்தப்பனி மண்டலத்தை, அவ்வளவு இலகுவாக விரட்டி அடிக்கும். உடனே குன்றுகளின் உச்சிகள், துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சிக் கட்டப்பட்டிருக்கும் கப்பல்களின் கம்பங்கள் ஆகியவையெல்லாம் மீண்டும் காணப்படும். பெரிய, செந்நிறமான சூரியன் கடல் விளிம்பை நோக்கி இன்னும் சிறிது நேரத்தில் பூரணமாக மறைந்து விடுவதைப்போல் கீழே இறங்கிக்கொண்டிருந்தது. தன்னுடைய அனல் கக்கும் தலையைத் தண்ணீரில் நனைத்து குளிர்ச்சியாக்கிக் கொள்ள வேண்டுமென்று அது ஆவலாகத் துடித்துக்கொண்டிருப்பது போல் தோன்றியது. ஆனால் ஏதோ விநோதமான, கண்ணுக்குத்தெரியாத சக்தி ஒன்று அதைத்தடுத்து நிறுத்திக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் ஆணி அடித்து வைத்ததுபோல் அது நிலையாக இருந்தது; ரத்த நிறமானதும், கரு–ஊதா நிறமானதுமான ஒளிக்கதிர்களை வடித்துக்கொண்டிருந்தது.

"அங்கே எவ்வளவு அழகாக இருக்கிறது?" என்று கொவலேவ்ஸ்கி, அனிஷ்காவிடம் கூறினர். "வருடத்தின் இந்தப்பருவத்தில் வாழ்வதற்கும், போராடுவதற்கும் அது மோசமான இடமேயல்ல, என்று நான் கூறுகிறேன். அங்கு செல்வதற்கு நானே துடித்துக்கொண்டிருக்கிறேன். தாக்குதல் விரைவில் தொடங்கிவிடும்". என்ருர் கொவலேவ்ஸ்கி.

உண்மையில், வடக்கே செல்வதற்கு அவர் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். ஆயினும் செப்டம்பர் வரையிலும் அவருக்கு உத்திரவுகள் கிடைக்கவில்லை. உடனே அவர் அனிஷ்காவைப் பார்ப்பதற்காக விரைந்தார். அவள் அகிமோவுக்கு ஒரு பார்சலையும், ஒரு கடிதமும், குழந்தையின்

ஒரு புகைப்படமும் கொவலேவ்ஸ்கி மூலம் அனுப்பிவைத்தாள். அடிக்கடி வந்து அனிஷ்காவைப் பார்த்ததின் மூலம் போதையூட்டப்பட்ட கொவலேவ்ஸ்கி இன்னும் அதிலிருந்து விடுபடவில்லை. இரகசியமாக அவளிடம் காதல்கொண்டார். தலை, கால் தெரியாமல் அவளிடம் தன் மனதைப் பறிகொடுத்திருந்தார். சிறிதும் கள்ளங்கபடற்ற முறையில் அகிமோவிடம் பொறுமை கொண்டிருந்தார். மாஸ்கோவை விட்டுப் புறப்பட்ட கொவலேவ்ஸ்கி சிறிது நாட்கள் முர்மான்ஸ்க் நகரில் தங்கியிருந்துவிட்டு, கப்பற்படை தளத்திற்கு வந்துசேர்ந்ததும், அவருடைய முதல் சிந்தனை அகிமோவைப் பார்க்கவேண்டும் என்பதுதான். அனிஷ்கா கொடுத்தனுப்பிய பார்சலில் ஆப்பிள்கள் இருப்பதாக அவர் நினைத்தார். எனவே அவை கெட்டுப் போய்விடுமோ என்று அவருக்கு, அச்சமேற்பட்டது!

ஆனால் அகிமோவ் அவருடைய பழைய இடத்தில்இல்லை. சிறிதுகாலத்திற்கு முன்னர்தான் ரைபாச்சி தீபகற்பத்திலுள்ள கடற்படை பட்டாளத்திற்கு மாற்றப்பட்டிருந்தார். தான்கண்ட ஒவ்வொரு காட்சியிலும், நிகழ்ச்சியிலும், விரைவில் ஒரு தாக்குதல் ஆரம்பமாகப் போகிறது என்பது ஊர்ஜிதமாகிறது என்பதை உணர்ந்த கொவலேவ்ஸ்கி, கடற்படைப் பட்டாளத்தை அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை நியமித்து பலப்படுத்துவதற்கு, எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பெரிய சம்பவங்கள் நடைபெறப் போகின்றன என்பதற்கு மேலும் ஓர் அடையாளமாகும் என்று நினைத்தார்.

நடவடிக்கையிலிறங்கும் நேரம் தூரத்திலில்லை என்பதற்குப் பல அறிகுறிகள் தென்பட்டன. கடற்படை தளபதி அடிக்கடி கரீலியன் ராணுவத்தலைமை நிலையத்திற்குப் பறந்து சென்றுவந்தார். கடற்படைத் தலைமை நிலையத்தில் ராணுவ ஜெனரல்கள் அடிக்கடி காணப்பட்டனர். ராணுவ யூனிட்டுகளில் ஆட்களின் பலமும். ஆயுத சாதனங்களின் பலமும் அதிகரிக்கப்பட்டது. கப்பல்கள் அவசர அவசரமாகப் பழுது பார்க்கப்பட்டன, நீர்மூழ்கிக் கப்பல்கள், கடற்படை விமானங்கள் ஆகியவற்றின் நடவடிக்கைப் பிராந்

தியம் விஸ்தரிக்கப்பட்டது. ஹிட்லரின் 20-வது லாப்லண்டு ராணுவத்தின் கடல் போக்குவரத்து நிலைகுலைக்கப்பட்டு, நாசமாக்கப்பட்டது.

இதனாலெல்லாம் கொவலேவ்ஸ்கிக்கு இடைவிடாமல் வேலையிருந்தது. எனவே ரைபாச்சி தீபகற்பத்திற்கு அக்டோபர் ஆரம்பத்தில்தான் அவரால் போய்ச்சேர முடிந்தது.

அத்தியாயம் ஏழு

கரையில்

1

முஸ்தா டுன்டூரி மலைவரிசையின்மீது இருந்த ஜெர்மன் பாதுகாப்புகளைத் தாக்கி அழிப்பதற்கான தயாரிப்புகள் முழு மூச்சுடன் செய்யப்பட்டு வந்தது. அந்தப் போர் நடவடிக்கை முழுவதின் திட்டமும் மிகவும் நுட்பமாக ஏற்பாடு செய்யப்பட்டது. எந்தத் திசையில் எங்கு தன் தாக்குதலைத் தொடங்கவேண்டுமென்பது பற்றி ஒவ்வொரு யூனிட்டுக்கும் திட்டவட்டமாகத் தெரிந்திருந்தது. ரைபாச்சி, சிரிட்னி தீபகற்பங்களில் இருந்த கடற்படை வீரர்களும், காலாட் படை வீரர்களும் அந்த மகத்தான சந்தர்ப்பத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். இதற்கிடையில் இடது பாரிசத்தில் இருந்த கடற்படைப் பட்டாளங்களில் ஒன்று, தன்னுடைய அரங்கத்தை மாற்றிக் கொடுத்துவிடுவதற்குத் தயாராகும்படி உத்தரவிடப்பட்டது.

மாதக் கணக்காக, ஏன், வருஷக் கணக்காகக்கூட, ராணுவ வீரர்கள் சதுப்பான பகுதிகளிலும், குன்றுகளின் சந்துகளிலும், சுண்ணும்புக்கல் பகுதிகளின் மறைவிடங்களிலும்,—நாள்தோறும் அவர்கள்மீது குண்டுகளும், துப்பாக்கி ரவைகளும் பொழிந்துகொண்டிருந்த நிலையில்—வசித்து வந்தனர். இதர முனைகளில் தாக்குதல் நடவடிக்கைகள் நடைபெற்று வருவதைக் கேட்ட அவர்கள் உண்மையாகவே பொருமை அடைந்திருந்தனர். தற்பொழுது, அந்தக் கரடு

முரடான பகுதிகளிலும்கூட தாக்குதலில் இறங்குவதற்கு சமயம் வந்திருந்த காலையில், அவர்கள் திடீரென்று ராணுவ சேவையிலிருந்து திருப்பி அழைக்கப்பட்டனர்.

"அகிமோவ், நீங்கள் உஷாராக இருக்கவேண்டும். உங்களுடைய படை வீரர்களிடம்—ராணுவ சேவையி லிருந்து அவர்களுக்கு ஓய்வு கொடுக்கும் நிமிஷம் வரையிலும் இதுபற்றி ஒரு வார்த்தைகூட நீங்கள் கூறக்கூடாது. அப்படி யிருந்தால்தான் நல்லது", என்று அந்த தீபகற்பங்களில் படைத் தலைமையிலிருந்த ராணுவத் தலைவர், (ஜெனரல்) பட்டாலியன் கமாண்டரிடம் (அகிமோவிடம்) கூறினார்.

பட்டாலியன் கமாண்டரின் முகத்தில் புன் முறுவல் நெளிந்தது. இது ஜெனரலுக்குப் பிடிக்கவில்லை போலும். "நான் சொல்வது புரிந்ததா?" என்று கடுமையாகக் கூறினார்.

"நன்றாக," என்று மற்றவர் பதிலளித்தார். ஆயினும் இன்னும் புன்முறுவல் அவர் முகத்தைவிட்டு அகலவில்லை. "நம்மை அவர்கள் எங்கு அனுப்பப்போகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா, காம்ரேட் ஜெனரல்?" என்று அவர் கேட்டார்.

ஜெனரல் பதிலளிக்கவில்லை. அக் கேள்வி அவர் காது களில் விழாதது போல் அவர் இருந்தார். ஜெனரலின் பாது காப்புக் குழியிலிருந்து அகிமோவ் கிளம்பி, முன்னணிப் பகுதி யிலிருந்த தன் பட்டாலியனிருக்கு மிடத்திற்குச் சென்றார்.

தன்னுடைய சிறு பிராயத்தில் தன் நண்பர்களுடன் சேர்ந்துகொண்டு காட்டில் பறவைகளைப் பிடிக்கப் போகும் போது செய்வதைப்போல் வேலையற்ற முறையில் சீட்டியடித் துக் கொண்டே அவர் நடந்தார். அவர்கள் தங்களுடன் டப் பாக்கள் நிறைய உயிரோடிருக்கும் வண்டுகளையும், புழுக்களை யும், தாங்களே தயார் செய்த வலைகளையும் எடுத்துச் செல் வது வழக்கம். அவர்கள் வில்லோ மரப் புதர்களில் மறைந்து கொண்டு ராப்பாடுங் குருவியின் சங்கீதத்தைக் கேட்பார்கள். அவைகளின் இசையில் ஏற்படும் ஓசை மாற்றங்களைக் கேட்டு ரசிப்பார்கள். ஒவ்வொரு ஓசைக்கும் அவர்கள் ஒவ்வொரு பெயரிட்டிருந்தார்கள்.

அனிஷ்காவிடமிருந்து முதல் கடிதம் அவருக்குக் கிடைத்ததிலிருந்து, தான் இளமை அடைந்துவிட்ட உணர்வு அவருக்கு அடிக்கடி ஏற்பட்டது. உருண்ட, லாவகமான பெண்ணின் கையால் எழுதப்பட்ட சில பக்கங்கள் தன்னுடைய மனோநிலையிலும், தன்னுடைய உடல்நிலையிலும் அப்படிப்பட்ட மாறுதலை ஏற்படுத்த முடியுமென்று அவர் இதற்கு முன்பு கற்பனை செய்ததுகூடக் கிடையாது. ஆனால் அவர் இளமையாகவும், அதிக ஆரோக்கியமாகவும் இருப்பதாக உணர்ந்தது உண்மையே. மற்றவர்களிடத்தில் தான் சதா அடக்கமாகவும், பட்சமாகவும் நடந்துகொண்டதுதான் அவரை இன்னும் அதிக வியப்பில் ஆழ்த்தியது.

மாமூலான ஒரு பிரயாணத்திலிருந்து திரும்பியபின் கப்பலின் மேல்தளத்தில் இருந்தபோது அகிமோவ், அனிஷ்காவினுடைய முதல் கடிதத்தைப் படித்தார். தன்னை யாரும் கவனிக்கவில்லை, என்று அவர் நினைத்தார். அக் கடிதத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் அவரிடத்தில் குபீர், குபீர் என்று மகிழ்ச்சியை ஏற்படுத்தியபோது அவருடைய முகம், மாறி மாறி, சிவப்பு நிறத்தையும், வெண்மை நிறத்தையும் அடைந்தது. கடிதத்தைப் படித்து முடிந்ததும், மீண்டும் ஒரு முறை அதை வாசித்தார். பின்னர் தன் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டார். ஒரு மூன்று நிமிஷ நேரம் அவர் அசைவற்று நின்றார். நட்புறவு மிகுந்த ஒரு குரல் தன்னைக் கூப்பிடும் வரையிலும் அவர் அவ்வாறே நின்றார். அந்தக் குரல் கேட்கப்பட்ட தொனியிலிருந்து அது கேள்வியாகக் கேட்கப்பட்டதா அல்லது சாதாரணமாகக் கூறப்பட்டதா என்பதைக் கூறுவது கடினம். "அப்படியானால், வீட்டில் எல்லாம் சரியாக இருக்கிறது, காம்ரேட் கமாண்டர்?"

அகிமோவ் சுற்றிலும் திரும்பிப் பார்த்தார். க்ரோன்ஸ்டாடிலிருந்து வந்த மாலுமி மத்யூகினுடைய குரல்தான் அது. அவருடைய முகம் வட்ட வடிவமாகயிருந்தது. நிறைய மச்சங்கள் இருந்தன. அவருடைய முகத்தின் மகிழ்ச்சிகரமான தோற்றம் அகிமோவுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவருடைய பேச்சுக்களிலிருந்து, தான் நினைத்திருந்ததை

விட மாலுமிகள் மிகவும் கூர்மையாக கவனிப்பவர்கள் என்பதை அகிமோவ் திடீரென்று உணர்ந்தார்.

அடுத்த நாள் அகிமோவுக்கு மற்றொரு கடிதம் கிடைத்தது. அதற்குப் பின்னர் தொடர்ச்சியாகக் கடிதங்கள் வர ஆரம்பித்தன. ஆரம்பத்தில் அவர் மிகவும் குதூகலமாக இருந்தார். வேறெதைப்பற்றியும் அவர் நினைக்கவில்லை. ஆனால் சிறிது காலத்திற்குப்பின்னர் அவர் தன்னையே நொந்துகொண்டார். "அனிஷ்காவைப்பற்றி அப்படிப் பட்ட எண்ணங்களை நினைப்பதற்கு நீ எவ்வளவு குறுகிய வஞ்சக நெஞ்சம் படைத்தவனாயிருக்கிறாய்?" என்று தன்னைத் தானே கண்டித்துக்கொண்டார். மோசமான குறைபாடுகளுடையவனும், அவளுடைய காதலைப் பெறுவதற்குத் தகுதியற்றவனுமான ஒரு உதவாக்கரை ஆசாமியின்மீது அவள் காதல் கொண்டுள்ளாள் என்பதை அவளுக்கு எழுதிக் கூறுவது ஒருக்கால் அதிக நேர்மையாயிருக்கும், என்று அவர் வாதித்துக்கொண்டார். அவளை நிராகரிப்பதற்கு அனேகமாகத் தயாராயுள்ள நிலைக்கு அவரை ஆக்கும் அளவுக்கு அவரை ஆட்கொண்ட குருட்டுத்தனமான, பயங்கரமான சக்தியை அவரால் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆயினும், பொங்கி வழியும் சந்தேகங்கள் அவரிடம் குடிகொண்டிருந்தபோதிலும்கூட, அவள் விஸ்வாசமானவள், குற்றமற்றவள் என்று தன்னுடைய ஆத்மாவின் அடியாழத்தில் எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனால் அப்படிப்பட்ட பயங்கர சந்தேகங்கள் உள்ள அதே சமயத்தில் அவரிடம் அந்த நம்பிக்கையும் இருக்க முடியுமா?

அவர் மத்யூகின்மீது அன்புகொள்ள ஆரம்பித்தார். ரைபாச்சி தீபகற்பத்தில் கடற்படைக்கு அவரை மாற்றிய போது, அகிமோவ் அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்.

ஆனால் அனிஷ்காவிடமிருந்து கடிதங்கள் வர ஆரம்பித்ததும், அவர் அதிக சகிப்புத் தன்மை வாய்ந்தவராகவும், தன் கீழுள்ள வீரர்களிடம் பட்சமாக நடந்துகொள்பவராகவும் மாறினார். மாலுமிகளின் சொந்த வாழ்க்கையைப்பற்றி அவர் அதிக அக்கரை எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார்.

முன்னுல் படைவீரர்கள் அவரைக் கஞரானவர் என்றும், அதே சமயத்தில் நியாயமானவர் என்றும் கூறினர். ஆனுல் தற்பொழுது, அவர் ஒரு மிகவும் நல்ல மனிதர் என்றும் கூற ஆரம்பித்தனர்.

இதெல்லாம் அவருக்கு மிகவும் நன்ருகத் தெரியும். எத்தகைய கட்டுப்பாடு மேலானதென்று தன்னுள்ளே கேட்டுக்கொள்ளவும் செய்தார். கமாண்டர் கஞராக இருக்க வேண்டுமா, அல்லது அதிக வேலே வாங்குகிறவராகவும் ஆனுல் பட்சமாக இருப்பவராகவும் இருக்கவேண்டுமா என்பதே அவருடைய கேள்வி. அவர் முடிவுக்கு வந்தது என்னவெனில், ''தன்னுடைய கப்பலிலுள்ள ஆட்கள் தன்னுடைய உத்திரவுகளின் ஒவ்வொரு வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து வந்தார்கள். ஏனெனில் முதலாவதாக அவர்கள் அனேவரும் கடமையில் கண்ணுங் கருத்துமாக இருந்தனர். இரண்டாவதாக, அவர்கள் அனேவருக்கும் அவரிடம் பயம் இருந்தது. இங்கே, அதற்கு மாருக, அவர்கள் கடமை தவருதவர்களாகவும், தங்கள் தளபதியை மனம் நோகவைக்கக் கூடாது என்று அஞ்சியதாலுமே அவ்வாறு இருந்தனர்.

பிந்திய வகையான கட்டுப்பாடுதான் மேலானது. பட்டலியனின் தலேமை நிலேயம், சுண்ணும்புக்கல் கரடு ஒன்றிலிருந்த குகையில் இருந்தது. தன்னுடைய அதிகாரி வருவதைக் கண்டதும் மத்யூகினின் முகத்தில் புன்முறுவல் நெளிந்தது. அவர் தன் இருப்பிடத்தினின்றும் எழுந்தார். ஆனுல் அந்த குகையின் தாழ்ந்த கூரை அவர் நிமிர்ந்து நிற்க முடியாமல் செய்தது.

''உட்காருங்கள்'', என்று அகிமோவ், பாதி நட்புறவாகவும், பாதி கேலி செய்யக்கூடிய முறையிலும் கூறினுர். ''உங்களுடைய ஆவலில் உங்களுடைய தலேயை முட்டிக் கொள்ளவேண்டிய அவசியமில்லே' என்ருர். பின்னர் அவர் குகைக்குள் வந்தார்.

அதிகாரியிடம் ஏதோ கேட்கும்தோரணேயில், மத்யூகின் பார்வையை செலுத்தினுர். ஆனுல் ஜெனரல் தன்னே எதற்காகக் கூப்பிட்டார் என்பதைக் கேட்பதற்கு அவர் தன் மனதை திடப்படுத்திக்கொள்ளவில்லே.

அகிமோவின் குணுதிசயத்தைப்பற்றி அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். எனவே, ''ராணுவப் பணியாளர்கள் அவ்வளவு அரட்டைக்கல்லிகளல்ல'' என்ற அர்த்தமற்ற நகைச்சுவைதான் தான் எதிர்பார்க்கும் சிறந்த பதிலாக இருக்கும் என்று தெரிந்துகொண்டிருந்தார்.

தரைப் பகுதியில் நடைபெறும் சண்டைகளைப்பற்றியும், அங்கு போராடும் வீரர்களைப்பற்றியும் அகிமோவ் சொல்லக் கேட்பது மத்யூகினுக்கு மகிழ்ச்சி தரும் விஷயங்களில் ஒன்ருகும். போர் ஓய்ந்துள்ள நேரங்களில் பொதுவாகக் கீழே படுத்துக்கொண்டு. எல்நயா அல்லது ஸ்மோலென்ஸ்க் நகரத்திற்காக நடைபெற்ற போராட்டங்களின் நினைவுகள், அல்லது 1942-ல் காக்கஸஸ் பகுதியிலிருந்த நெருக்கடியான காலகட்டம் ஆகியவைபற்றி அகிமோவ் எடுத்துக் கூறுவார்.

''நீங்கள் எங்கிருப்பதற்கு அதிகம் விரும்புகிறீர்கள்? ராணுவத்திலா, கடற்படையிலா?'' என்று மத்யூகின் கேட்டார்.

திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டவர்போல, அகிமோவ் சிந்தனையுடன் புன்முறுவல் பூத்துக்கொண்டே, ''அது கூறுவதற்கு மிகவும் கஷ்டமானது'' என்று கூறினர்.

''தரையின்மீது போராடுவதுதான் அதிகக் கவர்ச்சிகரமானது. குறைந்தபட்சம் உங்களுக்குக் கீழே பூமியாவது இருக்கிறது. குள்ளநரி வங்கைப்போன்ற ஒரு குழியை நீங்களே தோண்டிக்கொண்டு அதில் பதுங்கிக்கொள்ளலாம். தவிர இங்கே காடு இருக்கிறது; தோப்பு இருக்கிறது. அல்லது அருகில் ரைதான்ய வயல் இருக்கிறது. நீங்கள் பேசாமல் இருந்த இடத்திலேயே இருந்துகொண்டு உத்திரவுக்காக காத்துக்கொண்டிருக்கலாம். ஆனல் பால்டிக் கடலில் வளர்ந்த உங்களைப்போன்ற ஒரு மாலுமிக்கு இதைப்பற்றியெல்லாம் என்ன தெரியும்? கடல், துறைமுகம், அவ்வளவுதான். கடைசியாகப் பார்த்தால் கடல்தான் என்ன? அதைப்பற்றி நினைத்துப் பார்த்தால், நிறையத் தண்ணீர் இருப்பதுதானே கடல் என்பது. அதுவும் உப்புத் தண்ணீர். ஆனல் பூமியில் பலவிதமான பொருள்கள் இருக்கின்றன. பலவித நிறங்களைப் பார்க்கிறேம். மலைகள், குன்றுகள், புல்தரைகள்,

மரங்கள் நிறைந்த காடுகள்! இவைகளையெல்லாம் பார்ப்ப தற்கு எவ்வளவு மனோரம்மியமாக இருக்கிறது! அவர் எப்பொழுதும் கடைசியில் சிரித்துக்கொண்டே, "நாம் இருக்கும் இடத்தைத் தவிர பாக்கி எல்லா இடங்களிலும் ரம்மியமாக இருக்கிறது. இருந்தபோதிலும் அதையெல்லாம் நினைப்ப தற்கு மிகவும் ஆனந்தமாயிருக்கிறது" என்று கூறுவார்.

மத்யூகின் ஒரே பார்வையில் அந்த குகை முழுவதையும் ஒரு பார்வை பார்த்தார். விரைவில் இவையெல்லாம் கடந்து போனவைகளாக மாறிவிடும். இருந்தாலும் அவைகளைப் பற்றி நினைப்பது மகிழ்ச்சிகரமாக இருக்கிறது. "ஆனால் தலைமைக் காரியாலயத்தில் அவர்கள் அவரிடம் என்ன கூறினார்கள்?" என்று பட்டாலியன் கமாண்டரை பக்கவாட்டில் பார்த்தவண்ணம் அவர் யோசித்தார். "நாம் விரைவில் தாக்குதல் ஆரம்பிக்கப்போகிறோமா?"

அதற்கு சிறிது நேரம் கழித்து அவருக்கு பதில் கிடைத்தது. அப்பொழுது மூன்று ராணுவ அதிகாரிகள், அகிமோவின் பட்டாலியனுக்கு பதிலாக பொறுப்பேற்றுக்கொள்வதற்காக வரவிருக்கும் யூனிட்டிலிருந்து வந்தார்கள். அது ஒரு எஞ்சினியர்களின் தாக்குதல் பிரிகேட் ஆகும்.

பாதை செப்பனிடும் அவர்கள், ஆச்சரியத்துடன் கூடிய கூர்மையான பார்வையுடன் சுற்றிலும் பார்த்தார்கள். அந்தக் குகை வெகுதூரம்வரை குன்றின் உள்ளே சென்றது. அங்கே நீங்கள் பேசினால் விநோதமான தொனியுடன் அது எதிரொலித்தது. சுண்ணும்புக்கல்லில் விசேஷமாக வெட்டி எடுக்கப்பட்டதைப்போன்று தோற்றமளிக்கும் இயற்கையான அலமாரிகள் காணப்பட்டன. அவற்றில் ராணுவத்தினரின் பலவிதமான சாமான்கள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. சாப்பாட்டு டப்பாக்கள். விஷவாயுத்தடுப்பு முகமூடிகள், கைகுண்டுகள் போன்றவைகள் இருந்தன. ஒரு சுவற்றுக்கு அருகில் நல்ல படுக்கையுடன்கூடிய கட்டில் ஒன்று தென்பட்டது. அது பட்டாலியன் கமாண்டருடைய படுக்கை. சுவற்றில் ஒரு உஷ்ணமானியும் ஜெர்மன் இஞ்ஜினீரிங் சாதனங்களும் மாட்டப்பட்டிருந்தன. தரையின்மீதிருந்த ரப்பர் மிதியடிப் பாய்கள் கப்பலிலிருந்து கொண்டுவரப்

பட்டவை என்பது தெளிவு. அதுபோலவே அங்கு காணப்பட்ட சிறிய மேஜைகளும், நாற்காலிகளும்கூடக் கப்பலிலிருந்து கொண்டுவரப்பட்டவைதான்.

அந்தக் குகையில் இன்னும் உள்ளே, பட்டாலியன் தலைமைக் காரியாலயத்திலுள்ள ஆட்களுக்குப் படுத்துக்கொள்வதற்கான மெத்தைகள் காணப்பட்டன. இருளில் நகர்ந்து கொண்டிருந்த உருவங்களின்மீது, ஒரு எண்ணெய் விளக்கின் ஒளிபட்டு ஆடிக்கொண்டிருந்தது. பேசும் குரல்கள் கேட்டன. கேபினுக்கும், அதாவது ஆட்கள் தங்கியிருக்கும் இடம், சாப்பாட்டு அறை ஆகியவற்றுக்கும், அதிகாரிகள் தங்கியிருந்த அறைக்கும் இடையில் சுவர் இல்லாவிட்டாலும் கூட, ஒரு கற்பனையான தடுப்பு இருந்தது. இருளடைந்த பள்ளத்திலிருந்து வெளிவரும் மாலுமிகள் உள்ளே நுழைவதற்கு முன் அனுமதி கேட்பதற்குத் தவறவேயில்லை.

"எங்களுடைய குகையை நீங்கள் விரும்புகிறீர்கள் அல்லவா?" என்று ஆச்சரியத்துடன் நிற்கும் எஞ்சினீயர்களைப் பார்த்து அகிமோவ் கேட்டார். "இதை வசதியுள்ளதாகச் செய்வதற்கு நாங்கள் எங்களால் ஆன எல்லாம் செய்துள்ளோம். என்னுடைய ரன்னர்—வேலைக்காரன் என்று ராணுவக்காரர்களாகிய நீங்கள் கூப்பிடுவீர்கள்—ஒழுங்காக எல்லா வசதிகளையும் செய்துவைப்பதில் ஒரு நிபுணராவார்."

தகரத்தினாலான ஒரு பெரிய தேநீர் பாத்திரத்திலிருந்து அதைவிட எவ்விதத்திலும் சிறியவை அல்லாத கோப்பைகளில் மத்யூகின் தேநீரை ஊற்றினார். எஞ்ஜினீயர் அதிகாரிகளின்மீது உஷாரான, அனேகமாக விரோதபாவமுள்ள பார்வையை அடிக்கடி செலுத்தினார். "வாருங்கள், அவர்களுக்கு எல்லாம் தயாராயிருப்பதை வந்து பாருங்கள்", என்று கோப்பைகளை ஒன்றின்மீது ஒன்று உரசும் சத்தத்திற்கிடையில் முணுமுணுத்தார்.

புதிதாக வந்துள்ளவர்களில் மிகவும் இளமையானவரும், மெலிந்தவருமாயிருந்த ஒரு கேப்டன், தன்னுடைய தலையை ஆச்சரியத்துடன் அசைத்தார்.

"முதல் தடவையாக நீங்கள் ரைபாச்சிக்கு வந்திருக்கிறீர்கள், அல்லவா?" என்று அகிமோவ் இவரிடம் கேட்டார்.

“அவர் இதற்கு முன்னுல் வடபிராந்தியத்தில் இருந்ததே இடையாது” என்று கேப்டனுக்கு பதிலாக ஒரு லெப்டி னெனன்ட் கர்னல் பதில் கூறினுர். “தற்பொழுது தான் மாஸ்கோவிலிருந்து வடக்கே வந்திருக்கிருர். ஆனுல் அவ ருடைய துரதிர்ஷ்டம்; இதுபோன்ற ஒரு கன்னங்கரிய இடத் திற்கு அவர் வரும்படியாக ஏற்பட்டுள்ளது.”

“ஆமாம், எல்லாம் மிதவும் விேைதமாக இருக்கிறது. புத்தகங்களில் படிக்கும்போது எல்லாம் மிகவும் இயற்கை யாக இருப்பதாகவே தோன்றுகிறது. ஆனுல் யதார்த்தத் தில் எப்படியோ ஒன்றும் சரியில்லை,” என்ருர் கேப்டன்.

“பல சமயங்களில் அது நேர்மாருக இருக்கிறது,” என்று அகிமோவ் சிறிது சிரித்தவண்ணம் கூறினுர். பின்னர் அவர் கேப்டனைக் கூர்ந்து நோக்கிவிட்டு, “இருந்தபோதிலும் நீங் கள் ஆத்திரமடையவேண்டியதில்லை. பழக்கமாக, ஆக நீங்கள் இதை விரும்புவீர்கள். ஒருக்கால் உங்களுக்கு வீட்டிலிருந்து கடிதங்கள் ஒன்றும் வருவதில்லை போலும்?” என்று அகிமோவ் கேட்டார்.

“இல்லை”, என்று அவர் சிறிது முகம் சிவக்க ஆச்சரிய மடைந்தவராய்க் கூறினுர்.

எஞ்ஜினீயர்களுடன் தன்னுடைய உரையாடலின்போது அகிமோவ் சிறிதும் மனச் சஞ்சலமற்ற முறையில் இருப்ப தாகவே தோன்றினுலும், அவர் உண்மையிலேயே மிகவும் கவலையுடன் இருந்தார். தன்னைப் பீதியில் ஆழ்த்தியது எது என்பதை அவரால் முதலில் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆனுல், ஓராண்டுக்கு முன்னுல் ஓர்ஷாவில் பொறுப்பை ஒப் படைத்ததின் நினைவுதான் தன்னை சங்கடத்திற்குள்ளாக் கியது, என்று அவருக்குப் பட்டது.

“இங்குள்ள மரச் சாமான்கள் அனைத்தும் ஒரு ஜெர்மன் சுரங்கக்கண்ணி எதிர்ப்புக் கப்பலிலிருந்து கிடைத்தவையே யாகும். நம்முடைய டார்பிடோ கப்பல்கள் அதை சுட்டுத் தள்ளின. கரையோர பீரங்கிகள் அதை இறுதியாக நிர்மூல மாக்கின. எங்களுக்கு மிகவும் அருகாமையிலேயே அவை அந்தக் கப்பலை மூழ்கடித்தன’. எனவே நாங்கள் கடலில் மூழ் கிய கப்பலிலிருந்து இந்த சாமான்களையெல்லாம் மீட்டு எடுத்

தோம். என்னுடைய ஆட்கள், பேரன்ட்ஸ் கடலின் அடி ஆழத்திலிருந்து முதலில் ஒரு டிரங்க் பெட்டி, பிறகு ஒரு நாற் காலி அதற்கப்புறம் ஒரு படுக்கை ஆகியவற்றைத் தேடி எடுத்தார்கள். வான மண்டலத்திலுள்ள கிரகங்களின் தூரத்தை அளக்கும் இந்தக் கருவியையும்கூடத்தான். உப யோகமற்ற சாமான்களும்கூட நிறையக் கிடந்தன என்பது உண்மையே. நமது நண்பர் மத்யூகின் நன்கு வேலை செய்தார். காட்டு சாராயம் உள்ள ஒரு பீப்பாவையும் கண்டெடுத்தார். எனக்கு ஒரு விருந்து வைக்கவேண்டு மென்று விரும்பினுர், என்று நான் நினைக்கிறேன். ஆனல், நான் அந்த சாராயத்தையெல்லாம் கடலில் கொட்டிவிடும் படி செய்தேன். அது எப்பேர்ப்பட்ட சாராயம் என்று நினைக்கிருய்? கடல் மீன்களையெல்லாம் அது கொன்று விட்டது,'' என்று அவர் சாவதானமாகக் கூறினுர்.

மத்யூகினின் முகம் நாணத்தால் சிவப்பேறியது. அவரைத் தவிர எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

தான் பேசிக் கொண்டிருந்தபோதே அகிமோவ் லெப்டி னெட் கர்னலை ஓரக்கண்ணுல் பார்த்துக்கொண்டுமிருந்தார். எந்த சமயத்திலும் லெப்டினெட் கர்னல்; ''அதெல்லாம் ரொம்ப சரி, ஆனல் விரோதியின் எந்தெந்த யூனிட்டுகள் இங்கே இருக்கின்றன என்பதும் அவர்களின் பலம் என்ன என்பதும் நமக்கு சரியாகத் தெரியவில்லையே. போராடிக் கொண்டே கொஞ்சம் உளவு பார்க்கும் வேலையையும் நீங்கள் செய்ய வேண்டுமென்று நாங்கள் விரும்புகிருேம்,'' என்று அவர் கூறுவார், என்று அகிமோவ் எதிர்பார்த்துக் கொண் டிருந்தார்.

ஆயினும், லெப்டினென்ட் கர்னல் மிகவும் களிப்புடன் வாய்விட்டுச் சிரிக்கவே செய்தார். இறுதியில் எழுந்து நின்று "மிகவும் நன்றி, தோழர் அகிமோவ், நாங்கள் எல்லோரும் இப்பொழுது போகிருேம். உத்திரவில் குறிப்பிட்டுள்ளபடி காலை 6 மணிக்கு நாங்கள் பொறுப்பை மேற்கொள்கிருேம்'! என்று கூறினுர்.

''இங்கு நேரம் ஒன்றும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய பிரச்சினையேயில்லை'' என்று கேப்டன் முணுமுணுத்தார்.

அவர்களெல்லாம் போனதும் அகிமோவ் 'அப்பாடா. என்று பெருமூச்சு விட்டு ஆஸ்வாசப்படுத்திக் கொண்டார்'

தற்பொழுது அந்தக் குகையில் தன்னுடைய அதிகாரிகள்—தன்னுடைய அரசியல் ஆலோசகர், லெப்டினென்ட் கமாண்டர் மார்டினேவ், கம்பெனி கமாண்டர்கள், லெப்டினென்ட் கோஸ்லோவ்ஸ்கி, வென்ட்சோவ், மினேவிச் ஆகியோர் மட்டுமே இருந்தனர்.

"நம்மை அவர்கள் எங்கு அனுப்புகிறார்கள், என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?" என்று மார்டினேவ் கேட்டார். மற்றவர்கள், ஏமாற்றத்துடன் தங்கள் தலைகளை அசைத்தவண்ணம், சோகத்துடன் உட்கார்ந்திருந்தனர், போர் அரங்கத்தை ஒப்படைக்கும்படி திடீரென்று ஏன் உத்திரவு வந்தது என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த உத்திரவுக்கு சிறிதும் நியாயமில்லை என்று அனைவரும் கருதினர்.

"உண்மையில் எனக்குப் புரியவில்லை. ஏன் இந்த உத்தரவு இட்டார்கள் என்பதற்கு எத்தகைய காரணமும் தெரியவில்லை," என்று அகிமோவ் பதில் கூறினார். "நான் இது பற்றி ஜெனரலைக் கேட்கவில்லை என்று நீங்கள் நினைக்கிறீர்களா? அவர் சொல்லமாட்டேன் என்று சொல்லிவிட்டார். ஒருக்கால் அவருக்கே ஏன் என்று தெரியாமல் இருக்கலாம். நாம் செய்யவேண்டியதெல்லாம் என்னவெனில் ரைபாச்சி நகரிடம் விடைபெற்றுக்கொண்டு கிளம்பவேண்டியதுதான். கடைசி துப்பாக்கி பெல்ட் (Strap) வரையிலும் எல்லா சாமான்களும் சரியாக இருக்கின்றனவா என்று சோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டியதுதான், எல்லா ஆயுதங்களும் சுத்தமாக இருக்கின்றனவா என்பதையும், ஆட்கள் முகக்ஷவரம் செய்து கொண்டிருக்கிறார்களா என்பதையும் கவனித்துக் கொள்ள வேண்டும்," என்று அகிமோவ் கூறினார்.

தன்னுடைய அதிகாரிகளின் உற்சாகமற்ற முகங்களைக் கண்ட அகிமோவ் தனக்குத்தானே மெள்ள சிரித்துக் கொண்டார். தான் தனியாகப் புறப்படவில்லையென்றும், ஆனால், அந்த அதிகாரிகளுடனும், தாங்கள் ஒன்றாக இருந்த

சிறிது காலத்திற்குள் தான் நேசம் கொண்டுவிட்ட ஆட்க ளுடனும் சேர்ந்தே செல்கிறோம் என்று நினைக்க அவருக்கு மனம் ஆறுதலளித்தது. மேஜர் கொலோவினுடைய ரெஜி மெண்டை விட்டுப் போகும்போதோ, அல்லது படேய்கி னுடைய சப்மரைன் எதிர்ப்புக் கப்பலை விட்டுப் போகும் போதோ, அல்லது சமீப காலம்வரையில் அவர் தலைமை தாங்கி வந்த சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்களின் கோஷ் டியை விட்டுப் பிரிந்து வரும்போதோ இருந்ததைவிட தற் பொழுது மிகவும் மன நிம்மதியாயிருந்தது.

ஒருக்கால் இது அவருக்கு ஏற்பட்ட அபிப்பிராயமாக இருக்கலாம். ஆயினும், கப்பலிலுள்ள வீரர்கள் சோல்ஜர் களை விடவும், சாதாரண மாலுமிகளை விடவும் அதிகமாக அவருக்கு மன மகிழ்ச்சியைக் கொடுத்தனர். உண்மை என்னவெனில் அவர்கள் சோல்ஜர்களாகவும் மாலுமிகளாக வும்—இரண்டும் கலந்தவர்களாக இருந்தனர். அவர்களிடத் திலே ஒரு வியப்புக்குரிய ஒற்றுமை உணர்ச்சியும் அசகாயத் துணிச்சலும் இருந்தது. கடலை அதிகம் விரும்புவதின் காரணமாக ஒரு தற்பெருமையும் இருந்தது. அவர்கள் மாலுமிகளைப் போலவே உள்ளும் புறமும் மிகவும் தூய்மை யானவர்களாகவும் கண்யமானவர்களாகவும் இருந்தனர். அதே சமயத்தில் ஒரு சோல்ஜரின் பச்சாத்தாபம் இல்லாத, உணர்வு பூர்வமான வீரம் கொண்டவர்களாகவும் இருந் தனர். தரைப் பகுதியில் முன்னேறுவதுதான் யுத்தத்தில் நிர்ணயமான அம்சம் என்ற தன்நம்பிக்கை கொண்டவர் களாகவும் இருந்தனர்.

ஒன்றரை மாதங்களுக்கு முன்னால் இங்கு வந்து சேர்ந்த பொழுது, அகிமோவ் இங்குள்ளதைப் போன்ற கஷ்டமான நிலைமைகளை தான் எப்பொழுதும் கண்டதில்லை என்று ஒத்துக் கொள்ளும்படி நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆயினும் கடற்படையினரைப் பற்றி அனேகமாக வாய்த் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் நிலைமை இருந்தது. அவர்கள் போர் களில் பயிற்சி பெற்றவர்களாகவும், எந்த சீதோஷ்ண ஸ்தி திக்கும் மயங்காதவர்களாகவும் இருந்தனர். கடல் உப்புத் தண்ணீர் அவர்களின் உடல் தோலையே அரித்திருந்தது

இணைபிரியாத கடற்படை நட்புறவால் அவர்கள் ஒன்ருக இணைந்து பிணைந்திருந்தனர். அவர்கள் குன்றுகளின் மீதோ அல்லது பனிப் பிரதேசத்திலோ எங்கு சென்ருலும், ஒரு கப்ப லின் தளத்தின்மீது நடக்கும் தோரணையிலேயே நடந்து சென்றனர்.

லெனின்கிராட் மாலுமிகளின் குடும்பம் ஒன்றைச் சேர்ந்த மார்டினேவ், மிகவும் உயரமானவராகவும், மெலிந்த வராகவும் இருந்தார். அவருடைய தோள்கள் பரந்ததாக வும், ஒரே நேராகவும், கொஞ்சம் தூக்கலாகவும் இருந்தன. சதா அவர் வாயில் புகையிலைக் குழாய் இருக்கும். அவர் அடக்கமானவராகவும், அமைதியாகவும் இருந் தார். எப்பொழுது பார்த்தாலும் சுத்தமாகவும், நன்கு க்ஷவரம் செய்துகொண்ட முகத்துடனும் காணப்பட்டார். அவருடைய சோப்பு, முகக்ஷவர சாதனங்கள் ஆகியவை ஒவ் வொருவருடைய பாராட்டையும் பெற்றன. அவரிடத்தில் பல அளவுகளில் பலவிதமான பிரஷ்கள், கடற்பஞ்சுகள், பள பளக்கும் நிக்கல் அல்லது தந்தத்திலான சோப்புப் பெட்டி கள் இருந்தன. எப்பொழுதும் எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்துக் 'கொண்டிருப்பார். ஒழுங்காக உடையணிந்து கொண்டிருப்பார். ரெமிஸோவ் சிறிதும் அக்கரையின்றி ஒழுங் கீனமாக உடையணிவதை அகிமோவ் கவனித்துள்ளார். அதொன்றும் மார்டினேவிடம் கிடையாது. இருந்தபோதி லும், மார்டினேவைப் பார்க்கும்போதோ, ஏதோ ஒருவகை யில் ரெமிஸோவின் நினைவு அவருக்கு வரும். பொதுவான லட்சியத்திற்காக இருதயபூர்வமாகவும், நிபந்தனையற்ற முறையிலும் பணிபுரிவது, மௌனமாகத் துன்பங்களை ஏற்றுக் கொள்வது என்பதுதான் அது.

கோஸ்லோவ்ஸ்கி குட்டையாக இருந்தார். ஆனல், தேகக் கட்டு உடையவர். செங்கல்மங்கலான இளமையான முகம், உயிர்த்துடிப்புள்ள கண்கள், சிறிய, உருண்டையான தலை, நீளமான, இளமையான கழுத்தின்மீது நிற்கும் தோற் றம். அதற்கு மாருக வென்ட்சோவ் தடித்த முகமும், அகல மான தோள்களும், சதைப் பிடிப்புள்ளவராகவும் காணப்பட் டார். அவருடைய கண்களுக்குமேல் புருவங்கள் கிடை

யாது. நல்ல சுபாவமுடைய மனிதனைப்போல் தடித்த உதடுகள் கொண்டிருந்தார். மினேவிச் பதட்டமான முகம் கொண்டவராக இருந்தார். அது சதா அசைந்து கொண் டிருக்கும். கருமையான மீசையும், சிறிய தாடியும் வைத்துக் கொண்டிருந்தார்.

எல்லா கடற்படை வீரர்களைப் போலவே அவர்கள் ராணுவ உடை தரித்துக்கொண்டிருந்தனர், ஆயினும் எப் படியோ, அவர்கள் கடற்படையைச் சேர்ந்தவர்கள் என்பது புலப்பட்டது. மீண்டும் ஒரு கப்பலுக்குப் போகவேண்டும் என்பதுதான் அவர்களின் கனவு. ஆனால், அந்தக் கனவு நிறைவேறுகின்ற வரையிலும், அந்த தீபகற்பம், குகை, மற் றும் இந்த உலகம் முழுவதும் அவர்களின் கப்பலாக இருந் தது தன்னுடைய ராணுவத் தொப்பியின்மீது, மினேவிச் தங்கத்திலான ஒரு நங்கூரம் பொருத்தப்பட்ட கடற்படை பேட்ஜ ஒன்றையும் அணிந்து கொண்டிருந்தார்.

தேநீர் அருந்தியபின், அதிகாரிகள் தங்கள் கம்பெனி களுக்குத் திரும்பிச் சென்றனர். அகிமோவும், மார்டினோ வும் கூட அங்கு போக விரும்பினர். ஆனால் அடுத்த போர் அரங்கத்திலிருந்து லெப்டினெட் கமாண்டர் செலிஜ்னயோவ் வருகின்ற வரையிலும் அவர்கள் காத்திருக்க வேண்டியேற் பட்டது. அகிமோவ் விரைவில் போகவிருக்கிறார் என்பதை அறிந்த மினேவிச் மிகவும் மனவருத்தமடைந்தார். அவ ருடைய சோகமயமான தோற்றமே அதைக் காட்டியது. இருந்தபோதிலும், அகிமோவின் "சாதனங்களி"லிருந்து, தனக்கு உபயோகப்படக்கூடிய பொருள்கள் அனைத்தையும் பொருக்கிக்கொள்ள ஆரம்பித்தார். மதிப்புள்ள எந்தப் பொருளையும் இஞ்ஜினியர்களுக்கு விட்டுக் கொடுத்துவிடக் கூடாது என்று அவர் உறுதி கொண்டிருந்தார்.

"சரிதான், ஒரு தடவை சுற்றிப் பார்த்து உங்களுக்கு என்ன வேண்டுமென்பதைப் பாருங்கள். நான் என்னுடைய கம்பெனிகளுக்குச் செல்கிறேன்" என்றார் அகிமோவ்.

போர் முன்னணி மலை உச்சிகளின் ஓரமாக இருந்தது. பாதுகாப்புமிக்க ஒரு பலமான இடத்திற்கும் மற்றொரு இடத் திற்கும் இடையில் போக்குவரத்து மலை உச்சிகளின்மீது அவ்

வளவு உயரத்தில் ஒற்றையடிப் பாதை மூலம்தான் நடைபெற்றது. அந்தப் பாதை வழியாக டெலிபோன் கம்பிகளும், தடித்த கயிறும் போடப்பட்டன. இந்த தடித்த கயிறுகளுக்குப் போர் அரங்கம் முழுவதிலும் எண்கள் இருந்தன. ஏனெனில், அந்த வடதுருவப் பிரதேசத்தின் இருள் சூழ்ந்த இரவுகளில், அவைகள் இல்லாமல் ஒருவரால் வழி கண்டுபிடிப்பது அசாத்யம்.

தற்பொழுது நடுப்பகல். இந்த சமயத்தில் சிறிது நேரம் மட்டுமே வெளிச்சம் இருக்கும். சூரிய வெளிச்சம் எங்கோ விழுகிறது என்பதை ஞாபகமூட்டும் ஒரே ஒரு அடையாளம் இதுதான். பாறையின் ஓரமாக அகிமோவ் நின்று கவனித்த பொழுது, கீழே குண்டுக் கற்களிடையில் இருந்து அதிருப்தி கரமான குரல்கள் கேட்டன. "அவர்களுக்கு ஏற்கனவே தெரியும்" என்று அவர் கூறினர்.

காலடி ஓசையைக் கேட்டு, பட்டாலியன் கமாண்டரும், அவருடைய அரசியல் உதவியாளரும் வருவதைக் கண்ட வுடனே மாலுமிகள் மௌனமாயினர்.

"துல்யாகோவ்", என்று அகிமோவ் கூப்பிட்டார்.

"இதோ வந்துவிட்டேன், காம்ரேட் கமாண்டர்!" என்று பிரதம சிறு அதிகாரி துல்யாகோவ், கருமையான, அடர்த்தியான புருவங்களுடன் கூடிய தன்னுடைய கடு கடுத்த முகத்தை உயர் அதிகாரிகளின் பக்கம் திருப்பிய வண்ணம் பதிலளித்தார்.

"ப்ளூஸ் கிடைத்ததா?"

"சிறிது கிடைத்தது, காம்ரேட் கமாண்டர். தாக்குதல் நடத்தவேண்டிய தருணத்தில் விட்டுவிட்டுப் போவதென் பது வேதனையாக இருக்கிறது. பாறைகள் நிறைந்த இந்த மலைகளில் என்னுடைய பிறந்தநாள் மூன்று தடவை வந்தது. இங்கேயே நான் வளர்ந்து வயதடைந்தேனென்றுகூறலாம்."

"நானும் இங்கே மூன்று வருஷ காலமாக இருந்து வரு கிறேன்," என்று முதல் வகுப்பு சிறு அதிகாரி எகோரோவ் கூறினர். அவருடைய கண்கள் பிரகாசித்தன. விரோதி இருக்கும் திசையில் சுட்டிக்காட்டிய வண்ணம், எதிர்பாராத ஆத்திரத்துடன், "நீ நாசமாய்ப் போக! உன்னை வென்று,

பழிதீர்த்துக் கொள்வதற்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாக நான் கனவு கண்டு வருகிறேன்...'' என்று கூறினர். அவருடைய பெரிய முரட்டுக் கையை இறுக்கமாக மூடி முஷ்டியை உயர்த்தினர். பின்னர் கை தானுக விரிந்து அவர் பக்கம் சாய்ந்தது. அவர் அகிமோவ் பக்கம் திரும்பி அசடு வழியும் சிரிப்புடன், ''நான் அவர்களுடைய பழக்க வழக்கங்கள் அனைத்தையும் இங்கே கற்றுக்கொண்டு விட்டேன். அவர்களில் சிலர் எப்பேர்ப்பட்டவர்கள் என்பதுகூட எனக்குத் தெரியும். இருட்டில் எங்கோ ஓரிடத்திலிருந்து இரண்டாவது வகுப்பு சிறு அதிகாரி குன்யாவின் "அவர்கள் நம்மை எங்கே அனுப்புகிருர்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா? ரிசர்வ் படைக்கா அல்லது வேறு எங்கேயாவதா", என்று கேட்டார்.

அந்தக் கேள்வியில் அவ்வளவு உண்மையான கவலை பொதிந்திருந்தது. இதைக் கேட்ட அகிமோவால் புன்முறுவல் பூக்காமலிருக்க முடியவில்லை. ''கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை. வாலிபர்களே'' என்று கூறிய அகிமோவ், ''நம்மை உல்லாச விருந்து எதற்கும் அவர்கள் அனுப்பவில்லை'' என்ருர்.

எல்லோரும் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

''அதுதான் விஷயம்'' என்ருர் எகோரோவ். தங்களுடைய மேலதிகாரியின் உயரமான, கட்டமைப்பான உடம்பின் மீது பார்வையை செலுத்திய மாலுமிகளின் கண்களில் பெருமை உணர்ச்சி பிரதிபலித்தது. அவர்மீது அவர்கள் அனைவருக்குமே நேசம் ஏறபட்டது. அடிக்கடி அவர்கள் இதர பட்டாலியனைச் சேர்ந்த ஆட்களிடம் ''எங்களுடைய மேலதிகாரி ராணுவத்தில் மாஸ்கோ அருகிலும், ஸ்மோலென்ஸ்க் அருகிலும் போரில் பங்கெடுத்துள்ளார். அவருடன் இருந்தால் உங்களுக்கு எவ்வித ஆபத்தும் நேராது'' என்று தற்பெருமை அடித்துக் கொள்வது வழக்கம்.

அகிமோவ் நடந்துகொண்டே யிருந்தார். வழியில் ஒரு திருப்பத்தில் அவர் நின்று, ஜெர்மன் முன்னணிப் பிரதேசத்தைக் கூர்ந்து நோக்கினர். பூசந்தியின் குறுக்கே முஸ்தா குன்டூரி என்ற உயரமான மலை வரிசை இருந்தது. அவர்

நின்ற இடத்திலிருந்து பார்த்தபொழுது, அந்தப் பெரிய மலைகளைத் தாண்டிச் செல்ல முடியாதோ என்று தோன்றியது. அங்கிருந்து விரோதியின் அரண்களைப் பார்க்க முடிந்தது. அவை வரிசை வரிசையாகக் கற்சுவர்களையும், பீரங்கிகள் அமைக்கப்பட்டிருந்த காங்கிரீட் சுவர்களையும் கொண்டிருந்தன.

சக்திவாய்ந்த அந்தப் பாதுகாப்பு அரண்களைப் பார்த்ததும் அகிமோவுக்கு, எவ்வாறு ஒரு ஆண்டுக்கு முன்னல் ஓர்ஷா அருகில், ஜெர்மானியர்கள் படையெடுத்து வசமாக்கிக் கொண்டிருந்த பைலோ ரஷ்யப் பிரதேசத்தை பாதுகாப்பு அரணின் துவாரத்தின் வழியாகப் பார்த்தார், என்பதும் ஐரோப்பா முழுவதையும் படையெடுப்பாளரின் அடிமை நுகத்தடியின் கீழிருந்து விடுதலை செய்யும் வரையிலும் முன்னேறிக்கொண்டேயிருக்க வேண்டுமென்று தான் கனவு கண்டதும் நினைவுக்கு வந்தது. அப்பொழுது அந்தக் கனவு நிறைவேறுவதற்கு எவ்வளவு தூரமானதாக இருந்தது! ஆனல் தற்பொழுது நமது துருப்புகள் மேற்கில் வார்சாவின் எல்லைப் புறங்களுக்கு வந்துவிட்டன. தெற்கில் ருமேனியா, யூகோஸ்லாவியா, ஹங்கேரி ஆகியவற்றின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றன. வடக்கிலும் நார்வேயின் விடுதலை நெருங்கி வருகிறது.

''அவர்கள் நம்மை எங்கு அனுப்புவார்கள் என்று நினைக்கிறீர்கள்?'' என்று அகிமோவ் எதிர்பாராதவிதமாக மார்டினேவைக் கேட்டார். அதற்கு பதிலைக் கேட்பதற்குக்கூட அகிமோவ் காத்திருக்கவில்லை. ஆனல் மார்டினேவை வியப்புடன் பார்த்து, ''நாம் விரோதியின் பகுதியில் படைகளை இறக்கப் போகிறோம்'' என்று கூறினர்.

''எப்படி நீங்கள் அவ்வாறு நினைக்கிறீர்கள்?'' என்று மார்டினேவ் திடீரென்று கேட்டார்.

''அவர்கள் வேறு எங்கு நம்மை அனுப்ப முடியும்? நான் சொல்வது தவறில்லை என்றல், ஒன்றிரண்டு நாட்களில் நாம் அந்த டிரோல், ஸ்டீயர்மார்க் ஜாகெர்ஸ் ஜெர்மன் படைகளின் பின்னணியில் இருப்போம்.''

"உண்மையாகவா!" என்று மார்டினேவ் கவலையடைந்த தொனியில் கூறினர். பின், ஒரு நிமிஷம் தனக்குள்ளேயே சிந்தித்து "உங்களுடைய ஊகங்களைப் பற்றி தயவுசெய்து ஆட்களிடம் சொல்லாதீர்கள்."

"ஆட்களிடமா?" என்று அகிமோவ் கையை அசைத்த வண்ணம் கூறினர். "ஏற்கனவே அவர்களுக்குத் தெரியாமலிருந்தால், அவர்கள் தாங்களாகவே தெரிந்து கொள்ளுவார்கள். அவர்களிடமிருந்து நீங்கள் அதிகம் மறைக்க முடியாது."

போர் முனை நெடுகிலும் அடக்கமான சப்தம் கேட்டது. ஆயுதங்கள் உரசும் சப்தம் கேட்டது. கம்பெனி சிறு அதிகாரிகள் பொறுமையிழந்து சப்தமிட்டனர். சிறிது நேர இடைவெளியில் படைவீரர்கள் தங்களுடைய தயாரிப்புகளையெல்லாம் முடித்துவிட அவசரப்பட்டனர். அந்த அவகாசம் ஏற்கனவே முடிவுக்கு வந்துகொண்டிருந்தது. வெகு விரைவாக இருளடைந்து வந்தது. அகிமோவ் மீண்டும் தனது குகைக்கு வந்து சேருவதற்குள் எல்லாம் நல்ல இருளில் மூழ்கிவிட்டன.

செலிஜனயோவ் புறப்படுவதற்குத் தயாராயிருந்தார். "'செக்ஸ்டேன்ட்' கருவியை எடுத்துக் கொண்டு செல்லுங்கள்" என்று அகிமோவ் அவரிடம் கூறினர்.

"எதற்காக?"

"அது நல்ல கருவி. அதை வெளியே எறிவதற்கு எனக்கு மனமில்லை. உங்களுக்கு அது ஒரு ஞாபகார்த்தமாக இருக்கும்.

"மிகவும் சரி; உங்களுக்கு நன்றி. அதற்காக என்னுடைய ஆட்களில் சிலரை நான் அனுப்பி வைக்கிறேன்."

"நீங்கள் தாமதப்படுத்தக்கூடாது. இல்லாவிட்டால், பாதை அமைப்பவர்கள் வந்து எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள்."

"படுக்கை சமாச்சாரம் என்ன, காம்ரேட் கமாண்டர்?" என்று மத்யூகின் கோபமாகக் கேட்டார். "அதை நாம் விட்டுப் போகப்போவதில்லை. இல்லையா?"

"நீங்கள் விரும்புவதை எடுத்துச் செல்லலாம். ஆனல் எல்லாவற்றையும் நீங்கள்தான் சுமந்துகொண்டு போக வேண்டும் என்பது நினைவிருக்கட்டும்."

அந்த எச்சரிக்கையில் பொருள் இருப்பதை மத்யூகின் உணர்ந்தார். மிகுந்த கஷ்டத்துடன் தான் சேகரித்த படுக்கையையும், இதர பொருள்கள் அனைத்தின்மீதும் வருத் தங்கலந்த பிரிவுபசாரப் பார்வையே செலுத்தினர்.

அது ஏற்கனவே கடந்த காலத்தின் பகுதியாகிவிட்டது. அதைப் பற்றிய வெறும் நினைவு மட்டுமே இருந்தது. அறிய முடியாத ஒரு எதிர்காலம் முன்னல் இருந்தது.

2

அடுத்த நாள் கொவலேவ்ஸ்கி வந்தபொழுது, எஞ்சினீயர்கள் ஏற்கனவே அகிமோவின் குகையை தங்கள் வசமாக்கிக் கொண்டிருந்தனர். நிருபர் கொவலேவ்ஸ்கி கொஞ்சம் களைப்பாகத்தான் இருந்தார். ஏனெனில் ஆப்பிள் பார்சலுடன், காரிலிருந்து இறங்கி பாறைகள் மீது ஏறி, ஏறி மேலே வந்து சேர்ந்திருந்தார்.

அகிமோவும், அவரது பட்டாலியனும் யாருக்கும் தெரியாத ஒரு இடத்திற்குப் புறப்பட்டுவிட்டார்கள் என்று கேட்டதும், அவர் மனம் உடைந்து போனர். அவர் அந்த இடத்தை விட்டுப் புறப்படும் தருணத்தில், எஞ்சினீயர்கள் மீது அவருக்கு அக்கறை ஏற்பட்டது. அவர்களுடன் சிறிது பேசியபின், அவர்களைப் பற்றி எழுதுவதற்கு சுரங்க வெடிகளை அகற்றும் கப்பலிலிருந்து மீட்ட படுக்கையின் மீது உட்கார்ந்தார். "இந்தப் பாதை அமைப்பவர்கள், மாலுமிகளாக இல்லாவிட்டாலும்கூட, வியக்கத்தக்க முறையில் துணிவு நிறைந்த இளைஞர்கள்" என்று அவர் உணர்ச்சிவசப்பட்டு சிந்தித்து, தன் நோட்டுப் புத்தகத்தின் பக்கங்களை விரைவாக நிரப்பினர். பின்னர் அவர், அண்டையிலுள்ள கடற்படை யூனிட்டுக்குப் புறப்பட்டார். கனத்த குண்டு மாரிக்கிடையில் அகப்பட்டுக்கொண்ட அவர் அனிஷ்காவின் பார்சலை கெட்டியாகப் பிடித்தவண்ணம் அரை மணி நேரம் பூமியில் மல்லாக்கப் படுத்துக்கொள்ள வேண்டியேற்பட்டது. அதிர்ஷ்ட வசமாக அவர் யாதொரு ஆபத்துமின்றித்

தப்பினர். பின்னர் அவர் பிரதம சிறு அதிகாரியை சந்தித்தார். அவருக்குச் "சோவியத் யூனியனின் வீரர்" என்ற பட்டம் வழங்கப்பட்டிருந்தது. அவருடைய பெயர் கடற்படை பூராவுக்கும் தெரிந்திருந்தது. இவரைப் பற்றி எழுதுவதற்குத்தான் கொவலோவ்ஸ்கி நீண்ட காலமாக விரும்பி வந்தார்.

அவருடன் மூன்றுமணி நேரம் உரையாடி, ரெஜிமெண்டு ஒன்றில் 'ரஸ்கு'களும், 'சூப்'பும் சாப்பிட்ட பின்னர், அவர் மீண்டும் புறப்படுவதற்கு எழுந்தார். ஆனல் அப்பொழுது ஜெர்மன் மோட்டார் படகு ஒன்றை கரையோர பீரங்கி ஒன்று தாக்கி அண்மையில் மூழ்கடித்தது என்ற செய்தியை அவர் கேட்டார். அது ஒரு நல்ல செய்தியாயிற்றே என்று நினைத்தவண்ணம் எழுந்து, அதைப் பார்க்கச் சென்றார். வழியில் அவரும், அவருக்கு வழிகாட்ட வந்தவரும் இயந்திர பீரங்கியின் தாக்குதலில் அகப்பட நேர்ந்தது. அதிலிருந்து உயிருடன் திரும்புவோம் என்று அவர் நினைக்கவேயில்லை.

தான் ஒரு மகா கோழையாயிருப்பதை நினைக்க கொவலேவ்ஸ்கி தனக்குத்தானே வேதனைப்பட்டார். தினமொன்றுக்கு ஆயிரந்தடவை அவருடைய இருதயம் ஒடுங்கியது. ஆயினும் எங்கெங்கு கூட்டம் இருப்பதாகத் தெரிந்ததோ அங்கெல்லாம் விடாப்பிடியாகச் சென்று வந்தார். ஏனெனில் அங்கு ஏதாவது ருசிகரமான பேட்டி கிடைக்கும், அல்லது ஒரு நல்ல ருசிகரமான செய்திக்கு ஏ தா வ து விஷயம் கிடைக்குமல்லவா? பயத்தால் முகம் வெளுக்க, கைகால் நடுங்கிக் கொண்டிருந்த போதிலும், அவர் சோல்ஜர்களுடன் எங்காவது உட்கார்ந்துகொண்டு குறிப்புகள் எடுத்துக் கொள்வார். அவர்களைக் கேள்விகள் கேட்பார். அவர்களின் கண்களில் அமைதி நிலவுவதைக் கண்டு பொறுமைப்படுவார். அவர்கள் தன்னைப் பாராட்டும் தோரணையில் பார்ப்பதை கவனிக்கமாட்டார். "அந்த நிருபர் ஒரு துணிச்சலான ஆசாமி" என்று அவர்கள் கூறுவார்கள். "போர் முனையிலும்கூட நம்மைத்தேடி இன்பம் வருகிறது!" தன்னுடைய ஆத்மாவையே அவர்கள் உணர முடியும் என்று கொவலேவ்ஸ்கி நினைத்தார். ஒருக்கால் அவர்களால் முடியும்.

அவரைக் குற்றம் சொல்வதற்கு நேர்மாறாக, அவரிடம் மிகுந்த மரியாதை வைத்தனர். மிகவும் உயர்வாகக் கருதினர்.

தன்னுடைய வேலை முடிந்ததும், கொவலேவ்ஸ்கி ஆப்பிள்கள் உள்ள பெட்டியை மீண்டும் தோள்மீது போட்டுக் கொண்டு, தன்னுடைய கார் நிற்கும் இடம் நோக்கி விரைந்தார். மலைகளின் பாதுகாப்பில். போர் அரங்கத்திலிருந்து தொலைவில் சென்ற பிறகுதான் அவருடைய பயம் மறைந்தது. கொஞ்சம் தைரியம் ஏற்பட்டது. கடற்படை தளபதியின் ஒரு விசேஷ மகாநாட்டிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சில அதிகாரிகளை அவர் சந்தித்தபோது, முஸ்தாடுன்டுரி மலையில் உள்ள விரோதியின் நிலைகளைத் தகர்த்துக் கொண்டு முன்னேறுவதற்கு, அதற்கு மறுநாள் ஒரு தாக்குதல் நடைபெறப் போவதாக அவர்கள் கூறினர். உடனே அவர் திரும்பிச் சென்று, கடற்படை யூனிட்டுகள் ஒன்றின் ஸ்டோரில் ஆப்பிள்கள் அடங்கிய பெட்டியை அங்கே வைத்துவிட்டார். பின்னர் உணர்ச்சிவயப்பட்டவராய், சுற்றிலும் கூர்ந்து கவனித்து, குறிப்புகள் எடுத்துக் கொள்வதற்குத் தயாரானர்.

போர் முன்னணிப் பகுதி இருளிலும், அமைதியிலும் மூழ்கியிருந்தது. திடீரென்று எல்லோரும் குதித்தனர். வடமேற்குத் திசையில் சிறிது தொலைவில் பீரங்கிகள் வெடிக்கும் சப்தம் கேட்டது. இடையிடையே இயந்திரத் துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசையும் கேட்டது.

''எங்கே அந்த ஓசை கேட்கிறது?'' என்று கொவலேவ்ஸ்கி, தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாதவராய்க் கேட்டார். தளபதி செலிஜ்னயோவ் தன்னுடைய பூகோளப் படத்தை விரித்து கூர்ந்து நோக்கினர். ''இதோ இங்கே இருக்கிறது, மட்டிவனே பியோர்ட்'' என்று கூறினர், ''நம்முடைய துருப்புகள் நிச்சயம் அங்கே கரையிறங்கியிருக்கும். அகிமோவும் அதிலிருக்கிருர் என்று நான் சவால் விட்டுக்-கூறுகிறேன்!'' என்ருர்.

கொவலேவ்ஸ்கியின் இருதயம் சுருங்கியது. விரோதியின் அணிகளுக்குப் பின்னே திடீரென்று தாக்குதல் நடத்தி

இறங்குவது என்றால் என்ன அர்த்தம் என்பது அவருக்கு மிக வும் நன்றாகத் தெரியும். உடனே அனிஷ்காவையும், அவளு டைய குழந்தையையும் அவரால் நினைக்காமலிருக்க முடிய வில்லை.

முஸ்தாடுன்டூரிலிருந்த ஜெர்மானியர்கள் தங்களுக்குப் பின்னணியில் சண்டை மூண்டுள்ளது என்று கேள்விப்பட்ட தும், அவர்கள் ஸ்ரெட்னி தீபகற்பத்திலுள்ள சோவியத் நிலை களின்மீது கண்மண் தெரியாமல் பயங்கரமாகத் தாக்க ஆரம் பித்தனர். ஆனால் அங்குள்ள நமது பீரங்கிப் படை அமைதி யாக இருந்தது. ஏதோ எல்லோரும் தூங்குவதுபோல் தோன்றியது. அதற்குச் சிலமணி நேரத்திற்குப் பிறகு, நம் படைகள் வெற்றிகரமாகக் கரையிறங்கிவிட்டன என்பது தலைமை நிலையத்திற்கு நிச்சயமாகத் தெரிந்த பின்னரே, ரைபாச்சி, ஸ்ரெட்னி தீபகற்பங்களில் இருந்த பீரங்கிகள் முழங்க ஆரம்பித்தன.

ஒன்றரை மணி நேரம் பீரங்கிகள் சுட்டன. பின்னர் ரைபிள் ரெஜிமெண்டுகளும், மரைன் யூனிட்டுகளும் தாக்கு தலில் இறங்கின. ஜெனரல் ரெண்டுலிட்ஸ் தலைமையின் கீழிருந்த மலைப் படைகள் பெரிய எதிர்ப்பு ஒன்றையும் கொடுக்கவில்லை. வெகு விரைவில் முஸ்தாடுன்டூர் சோவியத் வீரர்கள் வசமாயிற்று. குண்டுகள் வெடிப்பதால் ஏற்படும் ஒளியால் சுற்றுப்புறம் முழுவதும் பிரகாசமாகக் காட்சி அளித்தது. அதே சமயத்தில் அந்தப் பிரதேசம் முழுவதிலும் வெற்றிக் கொண்டாட்டத்தின் ஆரவாரம் காது செவிடு படும்படியாக எதிரொலித்தது.

ராணுவத் தலைமை நிலையத்திலிருந்து சிறிது நேரத்திற் கெல்லாம் வந்த ஸ்டாப் அதிகாரிகள், கரையிறங்கிய துருப்பு கள், பொரவாராவுக்குச் செல்லும் பாதையைத் துண்டித்து விட்டனரென்றும், இதனால் ஜெர்மானியர்களிடையில் குழப் பம் ஏற்பட்டுள்ளதென்றும், நடவடிக்கையின் வெற்றிக்கு இது உத்திரவாதமாக இருக்கிறதென்றும் கொவலேவ்ஸ்கி யிடம் கூறினார்கள்.

அது நடந்தது அக்டோபர் 10-ல்.

இடைவெளி வழியாக நமது துருப்புகள் மேற்குத் திசை நோக்கி முன்னேற ஆரம்பித்தனர். கடற்படைத் தலைமை கொடுத்திருந்த ஒரு காரில் ஏறிக்கொண்டு கொவலேவ்ஸ்கி, சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்த லாரிகள், இதரவண்டிகள், பீரங்கிகள் ஆகியவற்றினூடே மிகவும் சிரமத்துக் கிடையில் முன்சென்றுர்.

உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் சம்பவங்களினிடையிலும் அவர் அனிஷ்கா கூறியனுப்பிய செய்தியை மறக்கவில்லை. தான் எதிர்ப்பட்ட ஒவ்வொருவரையும் அகிமோவ் எங்கிருக்கிறுர் என்று கேட்டுக்கொண்டே வந்தார். அகிமோவின் படைகள் மட்டிவுஞேபியோர்டில் கரையிறங்குவதில் ஈடுபட்டிருப்பதாக அவருக்குத் தகவல் தெரிந்தது. ஆனுல், அந்தப் படைகள் இப்பொழுது எங்கிருக்கின்றன என்பது பற்றி யாராலும் திட்ட வட்டமாக கூற முடியவில்லை. லிஞஹமாரி என்ற இடத்திலுள்ள கடற் படை தளத்திற்கு அருகில் அக்டோபர் 13-ந்தேதி இரவில் மேலும் அதிக துருப்புகளை கடற்படை கொண்டுபோய் இறக்கியுள்ளது என்று வதந்திகள் உலாவின. இந்தத் துருப்புகள் துறைமுகத்தைப் பிடித்துக்கொண்டு, ஜெர்மன் படைத்தலைமை தன்னுடைய துருப்புகளை கடல் மார்க்கமாக வெளியேற்றிக் கொண்டு போக முடியாமல் தடைசெய்தது. அகிமோவ் அங்கு இருப்பதற்கான சாத்தியப்பாடு இருந்தது.

முன்னேறும் யூனிட்டுகளின் முன்னேற்றம் மெதுவாகவே இருந்தது. ஏனெனில், அவர்கள், குவியல் குவியலாக மரக் கட்டைகளும், சதுப்பு நிலங்களும், ஆங்காங்கே உள்ள பாலைவனம் போன்ற ஒரு பீடபூமிப் பிரதேசத்தைக் கடக்க வேண்டியிருந்தது. முன்னணிப் படையான காலாட்படை யூனிட்டுகளைத் தொடர்ந்து இஞ்சினியர்கள் சென்றனர். அவர்கள் ராணுவ வண்டிகளுக்கும், பீரங்கிகளுக்கும், அந்த ஆள் அரவமற்ற சதுப்பான துருவப் பிரதேசத்தில் பாதைகளைச் செப்பனிட்டனர்.

ராணுவ வண்டிகள் அடிக்கடி சதுப்பு நிலங்களில் புதைந்து கொண்டன. அப்பொழுது அந்த வண்டிகளிலுள்ள சாதனங்களெல்லாம் துரிதமாக இறக்கப்பட்டன.

ஏற்கனவே முன்னேறிச் சென்றிருந்த பீரங்கிகளுக்கு ஆட்கள் குண்டுகளை எடுத்து சென்றனர். பிறகு புதைந்த வண்டிகளின் சக்கரங்களை ஆட்கள் கையால் பிடித்துத்தள்ளி சேற்றிலிருந்து வெளியேற்றினர். ஒன்றுே இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருந்தது. அல்லது உறைபனி பெய்து கொண்டிருந்தது. மிகவும் குளிராகவும், ஈரமாகவும் இருந்தது. கொவலேவ்ஸ்கியின் கார் மண்ணுக்குள் புதைந்துவிட்டால் — பலதடவை அவ்வாறு புதைந்தது — அவர் அருகில் சென்றுகொண்டிருக்கும் யூனிட்டிடம் சென்று, தனக்கு உதவி வேண்டுமென்று கேட்டார். ஆரம்பத்தில் சோல்ஜர்கள் அவ்வாறு உதவி செய்வதற்கு அவசரப்படவில்லை.

ஏனெனில், ஒரு உயர்தர லெப்டினென்ட் ஒரு பிரயாணிகள் காரில் ஏன் பிரயாணம் செய்யவேண்டும் என்பதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனுல், அவர், தான் ஒரு பத்திரிக்கை நிருபர் என்று கூறியதும், அவர்கள் அவருடைய காரை சேற்றிலிருந்து வெளியேற்றி மீண்டும் ரோடுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு ஆர்வமுடன் உதவினர். ராணுவத்தைச் சேராத வெளி ஆள் ஒருவர் தாங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களை வந்து பார்ப்பதையும், அதைத் தென்பகுதியிலுள்ள மக்களுக்குத் தெரியும்படி செய்ய முனைந்துள்ளதையும் காண அவர்கள் மிகவும் பெருமிதமடைந்தனர். தாங்கள் இருக்கும் இடத்திலிருந்து மாஸ்கோவும் கூட மிகவும் தூரமாக இருப்பதாக அவர்கள் கருதினர்.

ராணுவத் தந்தி நிலையம் இருக்குமிடத்தை கொவலேவ்ஸ்கி கண்டு பிடித்துக்கொண்டு, அங்கு சென்று, ஆச்சரியம் நிறைந்த பத்திரிகைச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார். "என்னுடைய கார், முன்னேறிச் செல்லும் துருப்புகளுடன் கூடவே சென்று கொண்டிருக்கிறது. பெசெங்கா எங்களுக்கு முன்னுல் வந்துவிட்டது," என்ற வார்த்தைகளுடன் அந்தச் செய்தி ஆரம்பமாகியது.

பெட்சாமோ என்ற பின்னிஷ் பெயரால் முன்பு அழைக்கப்பட்டு வந்த பெசெங்கா உண்மையில் மிகவும் அருகில்

சமீபித்து விட்டது. மூடுபனியால் மூடப்பட்டிருந்த அந்தத் தாழ்ந்த பிரதேசம் பீரங்கிகளின் வெடி சத்தத்தால் அதிர்ந்தது. மூன்று ஜெர்மன் கைதிகள் காரில் கொண்டு வரப்பட்டனர். அவமானம் தாங்க முடியாத தோற்றத்துடன் காணப்பட்ட அவர்களைப் பார்ப்பதற்குப் பரிதாப மாக இருந்தது. அவர்கள் டைரோல் பகுதியிலிருந்து வந்தனர். ஆல்ப்ஸ் மலையில் ஸ்கோர்னர், டீய்ட் ஆகியவர்களால் பயிற்றுவிக்கப் பட்டவர்கள் "நீல நரி" என்று கூறப்பட்ட படைத் தலைமையின் தஸ்தா வேஜுகளில் கூறப்பட்ட இயக்கத்தின் ஆரம்பத்தில் அவர்கள் இருந்த நிலையுடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது, தற்பொழுது அவர்கள் பார்ப்பதற்கு சோகமயமாக இருந்தனர்.

கொவலேவ்ஸ்கி அங்கேயே அவர்களுடன் பேசினார். உடனேயே ஒரு செய்தியையும் தயாரித்து, அப்பொழுதே மாஸ்கோவுக்குத் தந்தி மூலம் தெரிவித்தார். அந்த செய்தி "இங்கே கிரீட், நார்விக் போர்களின் வீரர்கள் என் முன்னால் நிற்கிறார்கள். துந்தரப் பிரதேசத்தில் தங்கள் தலைகள் கவிழ்ந்தவண்ணம் நடந்து வந்து கொண்டிருக்கிறார்கள்," என்று ஆரம்பமாயிற்று.

பெட்சாமோ பிடிபட்டதற்கு மறுநாள் கொவலேவ்ஸ்கி அங்கு போய்ச் சேர்ந்தார். அங்கு ஜெனரல்களையும், படை வீரர்களையும் பேட்டி கண்டார். மாலுமிகளிடத்திலும், கடற்படை வீரர்களிடத்திலும் அரட்டை அடித்தார். உலகத்தின் கண்கள் பூராவும் அப்பொழுது வடக்குநோக்கிப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதாக அவர் நினைத்தார்.

பெட்சாமோ! இந்த இடத்திலிருந்து தான் ஜெர்மன் கப்பல்கள் செயல்பட்டன. இங்கிருந்து வந்துதான் நாஜி விமானங்கள், நீண்ட காலமாகத் துன்பத்திற்காளாகியிருந்த மூர்மான்ஸ்க் நகரின் மீது குண்டு மாரி பொழிந்தன. நமக்கு ஒரு இடையூறாக இருந்ததும், பிடிக்க முடியாததுபோல் தோன்றியதுமான அந்த நகரம் தற்பொழுது நம்முடைய கைகளுக்கு வந்துவிட்டது.

ஒரு பிரிகேட் தலைமைக் காரியாலயத்தின் அருகில் தங்கிக்கொண்டு, கொவலேவ்ஸ்கி எழுத ஆரம்பித்தார். முதல் கட்டுரை இவ்வாறு ஆரம்பமாயிற்று. "என்னுடைய கார் பெசெங்காவின் தெருக்களின் வழியே மெதுவாகப் போய்க் கொண்டிருக்கிறது. பெசெங்கா நகரம் தற்பொழுதுதான் நம் படைகளால் விடுதலை செய்யப்பட்டது." பெசெங்காவில் ஒருவீதியும் கூடக்கிடையாதென்று சொல்லலாம். ஒரே ஒரு தெரு மட்டும் இருந்தது. அதில் இங்குமங்கும் விட்டு விட்டுக் கொஞ்சம் மரக் கட்டிடங்கள் மட்டும் இருந்தன.

அகிமோவுக்குக் கொடுக்கவேண்டிய பார்சலை கொவலேவ்ஸ்கி மறந்தே போய் விட்டார். அது நினைவுக்கு வந்ததும், அவருடைய மனச்சாட்சி குத்தியது. கடைசியாக அகிமோவுடன் எவ்வாறு தொடர்பு கொள்வது என்பதைக் கண்டறிவதற்காக, நகரத்திலுள்ள கடற்படை இணைப்பு அதிகாரியிடம் ஓடினார். லிஞஹமாரி என்ற இடத்தில்தான் அனேகமாக அகிமோவைக் கண்டுபிடிக்கலாம் என்ற தகவலைக்கேட்டு, கொவலேவ்ஸ்கி உடனே அதை நோக்கிப் புறப்பட்டார். ஆனால் அந்த சமயத்தில் ஆப்பிள்களைக் காணோம். கொவலேவ்ஸ்கி அந்தப் பழங்கள் கொண்ட பெட்டியை மரைன்யூனிட்டில் வைத்திருந்தார். ஆனால் அந்த யூனிட் ரொம்பக் காலத்திற்கு முன்பே நார்வீஜிய எல்லையை நோக்கிப் புறப்பட்டுவிட்டது. "எனது துரதிர்ஷ்டம்!" என்று முணுமுணுத்தார் கொவலேவ்ஸ்கி. அந்த ஆப்பிள்கள் உண்மையில் பெரிய தலைவலியைக் கொடுத்தது. அவற்றை அகிமோவிடம் எப்படியும் சேர்த்து விடவேண்டுமென்று கொவலேவ்ஸ்கி மிகவும் ஆவலாக இருந்தார். அதனால் அகிமோவ் எவ்வளவு மகிழ்ச்சியடைவார், எவ்வளவு நன்றி செலுத்துவார் என்பது அவருக்குத் தெரியும். தொலைத் தூரத்தில் வடதுருவப் பிரதேசத்தில் செழுமையான ஆப்பிள்கள் கிடைத்தால் எப்படியிருக்கும் என்பதை சிறிது கற்பனை செய்து பாருங்கள்!

அனிஷ்காவைப் பற்றியும், அவளுடைய குழந்தை மகனைப் பற்றியும், புகுமுகப் பரீட்சையில் அனிஷ்காவின்

வெற்றியைப்பற்றியும், அகிமோவின்பால் அவள் கொண் டுள்ள மகத்தான அன்பைப் பற்றியும் கூறினுல் அகிமோவ் எவ்வளவு களிப்படைவார் என்பதையும், அதனுல், தயக்கத் துடன் தனக்கு ஏற்படும் திருப்தியைப் பற்றியும் கொவலோவ்ஸ்கி கற்பனைசெய்து பார்த்தார். ஆப்பிள்களைக் காட்டிலும் இந்த செய்தி மிகவும் முக்கியமானது என்று அவர் நினைத்தார். எனவே அவர் லினுஹமாரியை நோக்கிப் புறப்பட்டார். ஆனுல் அங்கும் அகிமோவைக் காணவில்லை. அதற்குச் சில மணி நேரத்திற்கு முன்பாகத்தான் கரை யிறங்கும் தாக்குதல் படையினர் எங்கோ ஓரிடத்திற்குக் கிளம்பிப் போயினர்.

3

ஜெர்மன் பின்னணியிலும், பக்கவாட்டிலும்— இந்தத் தடவை நார்வீஜியப் பிரதேசத்தில் கப்பற்படை வீரர்கள், மேற்கொண்டும் ஓரிடத்தில் கரையிறங்குவதற்காக தாக்கு தல் படகு ஒன்றில்புறப்பட்டுச் சென்றிருந்தனர். கடந்த சில தினங்களில் எதிரியின் பிரதேசத்தில் கரையிறங்குவது இது மூன்ருவதாகும்.

இந்த நடவடிக்கை பின்வருமாறு திட்டமிடப்பட்டது: முன்னணிப்படை பத்து சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்களில் புறப்பட்டது. அதற்குப் பத்து மைல்களுக்குப் பின்னுல், அதைத் தொடர்ந்து பத்துக் காவல் கப்பல்கள், பத்து சுரங்க வெடிகளை அகற்றும் கப்பல்கள், இதுபோல் மற்ருெருபடை 10 அல்லது 12 மைல்களுக்குப் பின்னுல் வந்து கொண்டிருந்தது. மிகவும் ரகசியமாகக் கரையிறங்கினர். கப்பலிலிருந்து கீழே இறங்குவதற்குப் போடும் பாலத்தில் நடப்பதால் ஏற்படும் சத்தமும், துப்பாக்கிகள் முதலியவற்றை எடுத்துச் செல்வ தால் ஏற்படும் சத்தமும் தவிர வேறு ஒரு சத்தமும் கிடையாது.

துருப்புக்கள் முன்னேறுவதற்கு முன்னுல், கடற்படைக் கமாண்டர், இதர ஸ்டாப் அதிகாரிகள் புடைசூழ, கரை யோரமாக, ஒரு பட்டாலியனிலிருந்து மற்ருெரு பட்டாலி யனுக்கும், ஒரு கம்பெனியிலிருந்து மற்ருெரு கம்பெனிக்கு

மாகச் சென்றனர். இங்கு மங்கும் டார்ச் ஒளிகள் பளிச்சிட்டு அட்மிரலுக்கு வழிகாட்டின.

அகிமோவின் பட்டாலியனுக்கு அவர் வந்ததும், தன்னுடைய வழக்கமான கரகரப்பான குரலில், (வடபிராந்திய கடற்படையிலுள்ள கடைசிக் கப்பலின் சமையல்காரர் உட்பட ஒவ்வொருவருக்கும் அறிமுகமாயுள்ள குரலாகும் இது) "இங்கே யார் கரையிறங்கப் போகிறுர்கள்?" என்று கேட்டார்.

அகிமோவ் உரிய முறையில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். பின்னர் அகிமோவ் உடன்வர அட்மிரல் கடற்படை வீரர்களிடையில் சென்று, அவர்களுடன் உரையாடினுர். அவர் புறப்பட விருந்த தருணத்தில், திடீரென்று அவர் அகிமோவின் முகத்தில் தன் டார்ச் விளக்கை அடித்தார். பட்டாலியன் கமாண்டரின் முகம் தட்ப வெட்ப நிலையால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அவரது முக பாவங்கள் மிகவும் பரபரப்பாகவும், கடுமையாகவும் இருந்தன. "ஒரு கப்பலுக்குத் திரும்பிப் போக நீங்கள் விரும்பவில்லையா?" என்று அட்மிரல் கேட்டார்.

இக்கேள்வி அகிமோவை வியப்பில் ஆழ்த்தியது. எங்கோ, நீண்ட காலத்திற்கு முன்பு, ஒருநாள் இரவில் இதே டார்ச் ஒளியின் கீழ் யாரோ ஒருவர் இதே கேள்வியைக் கேட்டது அவருக்கு நினைவுக்கு வந்தது. அது உண்மைதாஞ, அல்லது தன்னுடைய சிந்தனையின் விகாரமா என்பதை அவரால் நினைவுக்குக் கொண்டு வரமுடியவில்லை.

"அது படைத் தலைமையைப் பொறுத்த விஷயம்" என்று அவர் பிடிகொடுக்காமல் பதில் கூறினுர்.

அட்மிரல் டார்ச் விளக்கை அணைத்தார். உடனே இருள் சூழ்ந்தது. சிறிது மௌனத்திற்குப்பின் அட்மிரல், "கொஞ்சம் பொறுத்துக் கொண்டிருங்கள், அகிமோவ். நீங்கள் இந்த வேலையை முடித்ததும், நான் உங்களைத் திரும்பவும் கடற்படைக்கே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறேன். நீங்கள் தரையில் போதிய அளவு சண்டையில் ஈடுபட்டு விட்டீர்கள். சம்மதம் தானே?"

“ சரிதான் ” என்று அகிமோவ் பதிலளித்தார். திடீ ரென்று அவர், எப்படியோ அட்மிரலுக்காகக் கவலைப் பட்டார். அட்மிரலின் குரல் மிகவும் தளர்வுற்றும், கவலை நிறைந்தும் காணப்பட்டது, “கவலை வேண்டாம், காம்ரேட், அட்மிரல், நாங்கள் வெற்றிகரமாகக் காரியத்தை முடித்து விடுவோம் ” என்றார்.

அட்மிரல் அகிமோவின் கையை பலமாகவும், உறுதி யாகவும் பிடித்துக் குலுக்கினார். மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் கரையோரமாக நடந்து சென்றார். பாக்கெட் டார்ச் விளக்குகளின் வெளிச்சம் விரைவில் தூரத்தில் மங்கி மறைந்தது.

அகிமோவ் தனக்கென்று ஒதுக்கப்பட்ட சப்மரைன்—எதிர்ப்புக் கப்பலுக்குச் சென்றார். கோஸ்லோவ்ஸ்கியின் கம்பெனியிலும் அதே கப்பலில் செல்ல வேண்டுமென்று திட்டமிடப்பட்டிருந்தது. மற்றவர்கள் ஏற்கனவே முதலில் சென்ற படையுடன் சென்று விட்டார்கள். படைகள் வேக மாகக் கப்பலில் ஏற்றப்பட்டு வந்தன. சப்மரைன்-எதிர்ப்புக் கப்பல்களிலிருந்த மாலுமிகள் கப்பற்படை வீரர்களுக்கு தணிந்த குரலில் உத்திரவுகள் கொடுத்தனர். கேபின்களுக் குள் போகும்படி அவர்களுக்கு உத்திரவிடப்பட்டது. “ அவர்களுக்கு வாளிகளும், கிண்ணங்களும் கொடுப்பதற்கு மறந்து விடவேண்டாம். ஏனெனில், அவர்கள் சுகவீனம் அடைய ஆரம்பித்தால், கப்பல் முழுவதும் எச்சில் துப்பிவிடு வார்கள். இன்று கடல் நாற்றம் பிடித்ததாக இருக்கிறது,” என்று நல்லெண்ணம் நிறைந்த ஒரு குரல் கேட்டது.

“ நாங்கள் துப்ப மாட்டோம்; நீங்கள் பயப்பட வேண் டாம்,” என்று கடற்படை வீரர்களில் ஒருவர் அதே தோனியில் பதிலளித்தார். “ உங்களுடைய கப்பலைவிட இன்னும் அழகான கப்பல்களை நாங்கள் பார்த்திருக் கிறோம். ”

“ நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ?” சரி, அந்த சிக ரெட்டை அப்பால் எறியுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் வேறு எதையாவது பார்ப்பீர்கள்”, என்று அந்தக் கடற் படைவீரர் உரத்த சிரிப்பொலியுடன் கூறினார்.

கப்பலின்மீது ஏறுவதற்கான பாலத்தின்மீது ஏறியபின் அகிமோவ் ஒரு நிமிஷம் நின்று தன்னுடைய படைவீரர்கள் கீழே கேபினுக்குள் சென்று மறைவதைக் கண்டார். பின்னர் அவர் பாலத்தின்மீது ஏறி சப்மரைன்—எதிர்ப்புக் கப்பலின் கேப்டனிடம் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்ளச் சென்றார். கரைக்குப் போகும் சப்பலின் கேப்டனுடன் நல் உறவு இருப்பது, போர் நடவடிக்கைகளின் வெற்றிக்குப் பெரிய உதவியாகும்.

அவர் பாலத்தை அடைந்தாரோ இல்லையோ, கப்பல் ஊழியர் ஒருவர்மீது மோதிக்கொண்டார். அவரை சற்று கூர்ந்து நோக்கவே, அவர் ஜிகாலோ என்பது தெரிந்தது.

''ஜிகாலோ! நீ இங்கேயா இருக்கிறாய்?'' தன் கண்களையே நம்ப முடியாதவனாய் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''கமாண்டர் அகிமோவ்!'' என்று ஜிகாலோ பதிலளித்தார். ''உண்மையில் நீங்களா இங்கிருப்பது?'' அவர் மகிழ்வுடன் கை குலுக்கிவிட்டு ''நம்முடைய கமாண்டர் மகிழ்ச்சியாக இல்லையா?'' என்று கேட்டார்.

அகிமோவ் பாலத்திற்கு விரைந்து சென்று குட்டையாக இருந்த லெப்டினென்டைக் கட்டித் தழுவிக்கொண்டார். இதனால் அவர் உணர்ச்சி வசப்பட்டு என்ன சொல்வதென்றே தெரியாமல் திண்டாடினார். தொண்டையை அடைத்துக் கொண்டது. ''நீங்கள் நம்புவீர்களா?'' என்று மட்டுமே அவரால் கேட்க முடிந்தது.

இருவரும் சம்பாஷணையைத் தொடங்குமுன் கடலில் புறப்படுவதற்கான சமிக்ஞை கொடுக்கப்பட்டுவிட்டது.

புயற் காற்றின் வேகத்தில் காற்றடித்தக்கொண்டிருந்தது. சப்மரைன்—எதிர்ப்புக் கப்பல் கிளிஞ்சல் கூடு போல் தண்ணீரில் அலைக்கழிக்கப்பட்டது. பேரன்ட்ஸ் கடல், தான் எவ்வளவு ஈவிரக்கமற்ற முறையில் இருக்க முடியும் என்பதை சிறு கப்பல்களுக்குக் காட்டவேண்டுமென்ற எண்ணத்தில், அவைகளின்மீது பயங்கரமாக மோதி அடித்தது. அத்துடன் கூடவே 'ஓ'வென்ற இரைச்சலுடன் காற்றும் ஊளையிட்டுக்கொண்டிருந்தது.

அகிமோவ், கப்பலின் பாலத்தின்மீது படேய்கின் அருகில் நின்ருர். அவ்வப்போது தன் முகத்தின்மீதிருந்த நீர்த் திவலைகளைத் துடைத்தெறிந்துகொண்டு அந்தக் குட்டையான கேப்டனை மகிழ்ச்சியுடன் கண்அசைத்துப் பார்த்தார். மற்றவரும் அதற்கு பதிலளிக்கு முகத்தான் புன்முறுவல் பூத்தார். அப்பொழுது அவரது தட்டையான முகம் இன்னும் அதிக மகிழ்ச்சிகரமாகியது என்பதை அகிமோவ் நினைவுபடுத்திக்கொண்டார்.

''மிகவும் ஒல்லியாகப் போய்விட்டீர்களே'' என்று படேய்கின் உரத்துக் கூறினர்.

காற்றின் இறைச்சலில் அதைக் கேட்க முடியாதவராய், ''என்ன?'' என்று அகிமோவ் கேட்டார்.

''மெலிந்துவிட்டீர்களே''

''எனக்கு சமையல் செய்து போடுவதற்கு உங்கள் நீனு இல்லை!''

''ஹா—ஹா!''

''வாழ்த்துக்கள்!'' என்று அகிமோவ் உரக்கக் கூறினர்.

''எதற்காக?''

''உங்களுடைய பதவிஉயர்வுக்காக, காம்ரேட், சீனியர் லெப்டினென்ட். இதற்கு முன்னுல் கவனிக்கவில்லை.''

''நன்றி'' என்று படேய்கின் புன்சிரிப்புடன் கூறினர்.

''என்ன?''

''நன்றி!''

''இது உங்களுக்கேற்ற காலநிலை!'' என்று அகிமோவ் சிரித்துக்கொண்டே கூறினர்.

''இதைக்காட்டிலும் நல்லதாக எங்கு இருக்கிறது?'' என்று படேய்கின் காற்றின் இரைச்சலைவிடவும் உரக்கக் கத்தினர்.

''இங்கேயா, அல்லது ராணுவத்திலா?''

''எல்லா இடத்திலும்'' என்று அகிமோவ் சிரித்த வண்ணம் கூறினர். பின்னர் அவர் படேய்கின் பக்கம் சாய்ந்து அவரது காதில், ''நீங்கள் எனக்கும் வாழ்த்துக் கூறலாம். எனக்கு ஒரு மகள் பிறந்திருக்கிருள்.

''என்ன?''

''ஒரு குழந்தை, ஒரு மகள், காட்டியா.''

''வாழ்த்துக்கள்.''

ஒரு பெரிய அலை வந்து கப்பலை ஒரு பக்கமாக சாய்த்தது. மேல் தளத்தின் மீது வந்து கும்பலாகக் கூடிக்கொண்டிருந்த தன்னுடைய ஆட்களைப் பார்த்து ''வாலிபர்களே, தாக்குப் பிடித்து நில்லுங்கள்'' என்று அகிமோவ் உரக்கக் கூறினார். அவருடைய சக்தி வாய்ந்த குரல், காற்றின் இரைச்சலையும் மீறிக்கொண்டு கேட்டது. நீரால் நனைந்த முகங்கள், எல்லாம் நம்பிக்கையூட்டும் புன்முறுவல் தவழும் முகங்கள், கப்பலின் தளத்திலிருந்து அவரை நோக்கி உயர்த்தப்பட்டன. காஷெவரோவ், கப்பலைச் செலுத்தும் பொறுப்பிலிருந்து ஒரு வினாடி அப்பால் திரும்பி, அகிமோவைப் பார்த்தார். அவரைப் பார்த்தபோது அவருடைய இளமையே அவருக்கு நினைவுக்கு வந்தது. அகிமோவ் காஷெவரோவின் தோள்மீது தட்டிக்கொடுத்தார். காஷெவரோவ் முறுவலித்து ஏதோ கூறினார். அதை அகிமோவால் புரிந்துகொள்ள முடியவில்லை. கப்பல் தளத்தின் மீது நின்றுகொண்டிருந்த தன்னுடைய ஆட்களைப் பார்த்தபோது அகிமோவ், கருப்புக் குல்லாய்களை அணிந்துகொண்டு காட்சியளித்த அவர்களில் தனக்கு மிகவும் நன்கு தெரிந்தவர்களை அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. துல்யாகோவ், மாத்யூகின், குன்யாவின், எகரோவ், மற்றும் இதரர்கள். கொஞ்சம் பொறுமையுடன், தன்னுடைய கப்பல் ஊழியர்கள் படேய்கினுடைய ஊழியர்களை விடவும் எந்த விதத்திலும் கீழானவர்கள் அல்ல. அவர்களை வைத்துக்கொண்டு மகத்தான காரியங்களை சாதிக்க முடியும் என்று நினைத்தார்.

நன்கு பழக்கமான கடற்கரை ஓரம் அகிமோவின் கவனத்தைக் கவர்ந்தது. கடலுக்கு மேல் உயரத்தில் தலை தூக்கிக்கொண்டிருந்த கறுப்பான பாறைகள் நிறைந்த மலை உச்சிகள்—இவைளுக்கும், தான் முன்பு பார்த்தவைகளுக்கும் இடையில் எவ்வித வேறுபாட்டையும் அகிமோவால் பார்க்க முடியவில்லை. இருந்தபோதிலும், அவை தங்களுக்கே உரித்தான கவர்ச்சியுடன் காட்சியளித்தன. தற்பொழுது அவர்கள் வாரங்கர்பியோர்டின் முகத் துவராத்திற்கு வந்துவிட்டனர்.

படேய்கினின் உதவியாளராக, இதே சப்மரீன்-எதிர்ப்புக் கப்பலில் அகிமோவ் இதே இடத்திற்கு முன்பு வந்துள்ளார். அங்கு சிறிது தூரம் தள்ளி அவர்கள் லெட்யாகினேயும், அவருடைய உளவு வேலே கோஷ்டியினரையும் இறக்கிவிட்டிருந்தார்கள். படேய்கின் அதையும் நினைவில் கொண்டிருந்தார். அவர் அகிமோவின் தோள்மீது தட்டி, கரையை நோக்கிக் காண்பித்தார். "ஏய்" என்ருர், அகிமோவ்.

குளிர் நிறைந்த, கரடுமுரடான அந்தக் கடற்கரையில் இறங்கிய உளவுப் படை வீரர்கள் எவ்வளவு கடினமான, ஆபத்தான சூழ்நிலேயில் இருக்கின்றனர் என்பதற்காக அவர்கள்மீதுதான் அனுதாபப்பட்டதை அவர் மீண்டும் ஞாபகப் படுத்திக்கொண்டார், தற்பொழுது அவரே அங்கு இறங்க வேண்டியுள்ளது. ஆயினும் அதில் எத்தகைய பயங்கரத்தையும் அவர் காணவில்லே. தன்னுடைய சொந்தக் கூட்டாளிகளான மக்கள் அன்னிய ஆக்கிரமிப்பின் கீழ் சோதனேகளே அனுபவித்து வரும் ஒரு அன்னிய நாட்டின் கரையில் இறங்குவதென்ற எண்ணம், தன்னுடைய நாட்டையும், தான் ஒரு உறுப்பினஞக இருக்கக்கூடிய ராணுவப் படைகளுடையவும் பலத்தையும், மாண்பையும் பற்றிப் பெருமை கொள்ளச் செய்தது. பேரன்ட்ஸ் கடலிலிருந்து கருங் கடல் வரையில் உள்ள பிரதேசத்தை—தன்னுடைய சொந்த நாட்டை சோவித் ராணுவம் ஏற்கனவே விடுதலே செய்துவிட்டது என்ற எண்ணமும் தற்பொழுது அதனுடைய பணி இனி ஒரு போதும் தன்னுடைய சொந்த மக்களேத்தற்காப்பது என்பது அல்ல, ஆனல் மற்றவர்களே விடுதலே செய்வதுதான் என்ற எண்ணமும் அவரைப் பெருமிதமடையச் செய்தது. மிகவும் செய்யவேண்டிய அவசியமான பணி; அதை அவர்களால் செய்ய முடியும்; செய்யவும் செய்வார்கள்.

அவர் இளங் கம்யூனிஸ்ட் சங்கத்திலிருந்தபொழுது, உலகம் முழுவதையும் பயங்கர ஆட்சியினின்றும், அடக்குமுறையினின்றும் விடுதலே செய்ய வேண்டுமென்ற பலவிதமான, கற்பஞரீதியான, ஆனல் உன்னதமான, உணர்ச்சிமிக்க கனவுகளால் புளகாங்கிதமடைந்திருந்தார். தற்பொழுது அந்தக் கனவுகளெல்லாம் யதார்த்தமாகி வருகின்றன.

அவைகள் ஒரு திட்டவட்டமான உருவத்தை எடுத்துள்ளன. ஆனால் அவர் தன் இளமையில் கண்ட அதே கனவுகளல்ல; ஆயினும் மிகவும் வனப்பு மிக்கவை. ஆம். இதுதான் யதார்த்தம்; கொடிக் கம்பத்திலிருந்து சோவியத் கொடி காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. சப்மரீன் எதிர்ப்புக் கப்பலின் இஞ்ஜினின் ஓசை கேட்டுக்கொண்டே யிருந்தது. மின் விளக்குகள் கண் சிமிட்டி, குழூக் குறிகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தன. தரையில் இறங்கப்போகிறோமென்ற எண்ணம், தளத்தின் மீது இருந்தவர்களிடை பரபரப்பான மனோபாவத்தை ஏற்படுத்தியிருந்தது. இன்னும் இளமையாயுள்ள அவருடைய இருதயமே உணர்ச்சி வயப்பட்டு அடித்துக்கொண்டிருந்தது. மக்கள் விடுதலை வேட்கை கொண்டு ஆவலுடன் காத்திருந்த அந்தப் பிரதேசத்தின் அன்னியக் கடற்கரையின் கறுப்பான எல்லைக் கோடுகள் தெரியலாயின.

அந்தக் கரை மேலும் மேலும் அருகில் வத்துகொண்டிருந்தது. மலைகளின் எல்லைக் கோடும் மேலும் மேலும் தெளிவாகத் தெரியலாயிற்று. அந்த மலை உச்சிகள் மேலும் மேலும் வானில் உயர்ந்து செல்வதைப் போன்று தோன்றிற்று. கடைசியாக சப்மரீன்—எதிர்ப்புக் கப்பல்கள் கரையருகில் இரண்டு உயரமான செங்குத்தான பாறைகளின் இடையில் உள்ள ஆழமான, குறுகிய நீர்ப்பகுதியில் மிதந்து கொண்டிருந்தன.

அக்கப்பல்கள் விளக்குகள் இன்றியும், வயர்லெஸ் அடையாளங்கள் இல்லாமலும், கப்பலின் தண்ணீருக்கு அடிப்பகுதியிலுள்ள இன்ஜின்கள் மட்டுமே வேலை செய்துகொண்டிருந்த போதிலும், வெகு சீக்கிரத்தில் கரையிலிருந்து அவை கண்டு பிடிக்கப்பட்டுவிட்டன. ஒரு பிரகாசமான மின்வெட்டுப் போன்ற ஒளி வீசியது. ஒரு பீரங்கி சுட்டது. ஒரு வெடி குண்டு கடலில் சற்று அருகில் வந்து விழுந்து வெடித்தது. செங்குத்தான பாறைகளின் இரு பக்கங்களிலிருந்தும் சுட ஆரம்பித்தனர். தலைக்கு மேல் உயரத்தில் குண்டுகள் 'உய்' என்ற மெதுவான சப்தத்துடன் பறந்தன. இரு மருங்கிலுமுள்ள பாறைகளில் டஜன் கணக்கான தீ ஜுவாலைகள் மேலே கிளம்பி மெதுவாகத் தண்ணீரில் இறங்கி மூழ்கின.

ஒரு புகைப்படலத்தை உண்டாக்கும்படி படேய்கின் உத்திரவிட்டார். இதர கப்பல்கள் அவ்வாறே செய்தன. அந்த புகைத் திரையின் பின்னே எல்லாக் கப்பல்களும் கரையை நோக்கி விரைந்தன. வெகு சீக்கிரத்தில் குபு குபு வென்று எழும் புகை மண்டலத்தில் அந்தப் பகுதியே மறைந்தது. அதனுள்சகலமும் மறைந்தன். ஜெர்மன் கரையோர பீரங்கிகள் இடைவிடாமலும் கண்டவாறும் சுட்டுக் கொண்டேயிருந்தன. சில சமயங்களில் ஒரு வெடியின் மங்கலான சிவப்பு ஒளி புகையினுள் தோன்றி மறையும். பச்சை நிறமான கடல் நீர் ஸ்தம்பங்களாக வியக்கத்தக்க அழகுடன் மேலே எழும். படேய்கினுக்கு இந்தக் கரையைப் பற்றி நன்கு தெரியும்—கடற்கரையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இடத்திற்குத் தன் கப்பலைக் கொண்டு வந்து நிறுத்துவதில் அவருக்கு எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால் அகிமோவுக்காக அவர் கவலைப்பட்டார். தன்னுடைய தோழர் நிர்ப்பந்தமாக கரையில் ஓரிடத்தில் இறங்கி மனிதன் வாழ்வதற்குத் தகுதியற்ற அந்தப் பிரதேசத்திற்குள் செல்லவேண்டி யேற்பட்டதற்கு வருத்தப்பட்டார். அங்கு காய்வதற்கோ, வெது வெதுப்பாக்கிக்கொள்வதற்கோ ஒரு இடம் கூடக் கிடையாது. தன்னுடைய கன்னங்களில் உறைந்துகொண்டிருந்த உப்பு நீரை வழித்தெறிந்து கொண்டே, "நம்மைப்போன்ற மாலுமிகள் என்றால் கவலையில்லை; போருக்காக அவர் கரைக்குச் சென்று தரைப் பிரதேசத்திற்குள் சென்றிருக்கவே கூடாது," என்று படேய்கின் நினைத்தார்.

கரையில் இறங்குவதற்கான சமிக்ஞை கொடுக்கப் பட்டது.

சப்மரைன் எதிர்ப்புக் கப்பல்கள் ஏற்கனவே கரையை நெருங்கிவிட்டன. கப்பலின் பீரங்கிகளும், இயந்திரத் துப்பாக்கிகளும், கரையில் உள்ள விரோதிப் படைகளின்மீது சுடவாரம்பித்தன, ஜெர்மன் பீரங்கிகள் சுடுவதினால் ஏற்பட்ட ஒளி மிகவும் பலஹீனமாகவே இருந்தது. வானத்தில் அவை நடுங்குவதாகவே தோற்றமளித்தன. அவைகளின் ஒளியில், கொந்தளிக்கும் கடல், மாலுமிகளின் உணர்ச்சி

பொங்கும் முகங்கள்—ஆகியவை, உணர்ச்சி ஏதுமற்ற கறுத்த நிழல்களின் மத்தியில் ஒரு அமெச்சூரின் போட்டோ படத்தில் காண்பதுபோல் எடுத்துக்காட்டாகக் காடடப்பட்டன.

ஒரு வெடிகுண்டு அருகில் விழுந்து வெடித்தது. அதிலிருந்து கிளம்பிய எஃகுத் துண்டுகள் 'உய்' என்று எல்லாப் பாகங்களிலும் சிதறி விழுந்தன. கனத்த இயந்திர பீரங்கிகள் கப்பலிலிருந்து சுட ஆரம்பித்தன. மற்றுமொரு குண்டு வெடித்தது. ஒரு ஆசாமி முணு முணுத்துக்கொண்டு விழுந்தான். மற்ருெருவன் தண்ணீரில் விழுந்தான். கரையிறங்கும் துருப்புகளின் கரிய உருவங்கள் கப்பலிலிருந்து ஏணியின் வழியாக இறங்கி கரை எங்கும்பரவி ஓடினர். மூன்ருவது குண்டும் வெகு அருகில் விழுந்து வெடித்தது.

"கொலிஷன் மேட்ஸ்!" என்று படேய்கின் கர கரத்த குரலில் உத்தரவிட்டார்.

"நம்முடைய கப்பல் குண்டினுல் தாக்கப்பட்டதோ," என்று அகிமோவ் நினைத்தார். ஆனுல் அதைப்பற்றி நினைப்பதற்கு தற்பொழுது அவருக்கு நேரமில்லை. அவருடைய எண்ணமெல்லாம் ஏற்கனவே கரையில் இறங்கி போரில் ஈடுபட்டுவிட்ட தன்னுடைய ஆட்களைப் பற்றியதாகவே இருந்தது. அவர் படேய்கினிடம் போய் வருகிறேன் என்றுகூட சொல்லவில்லை. ஒன்ருே அவர் மறந்துவிட்டார். அல்லது அவ்வாறு சொல்வதினின்றும் அவர் தடுக்கப்பட்டார்.

ஆனுல் கப்பலிலிருந்து இறங்கும் ஏணிப் பாலத்தின் மீது அவர் கால் வைத்ததும், உதவி தேவைப்படும் நிலையிலுள்ள தன்னுடைய நண்பனை தனியே விட்டுச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதைப் பற்றி, குற்றமிழைக்கும் ஒரு உணர்வு அவருடைய இருதயத்தைத் தாக்கியது.

அவர் கரையில் இறங்கியதும், ஒரு பெரிய வெடி அதிர்ச்சியினுல் பக்கவாட்டில் தள்ளப்பட்டார். தண்ணீரில் விழும் நிலைமையில், அருகிலிருந்த பாறையைப் பிடித்துக்கொண்டார். அவருடைய காதுகளில் இரைச்சல் கேட்டுக்கொண்டிருந்தது. திடீரென்று, தகிக்கும் காற்று தன்னைச் சூழ்ந்துகொண்டதுபோல் உணர்ந்தார். பின்னுல் திரும்பிப் பார்த்தபோது தன்னுடைய சப்மரைன்-எதிர்ப்புக் கப்பல் தீப் பற்றி

எரிந்துகொண்டிருந்ததைப் பார்த்தார். திரும்பிச் செல்லாமலிருப்பதற்கு பலமான மனோ திடம் தேவைப்பட்டது. ஆனால் தன்னை சமாளித்துக்கொண்டு, உணர்ச்சிகளை விழுங்கிக் கொண்டு கரையேறினார். சப்மரைன் எதிர்ப்புக் கப்பலில் கடைசியாக அவர் பார்த்தது ஜிகாலாவைத்தான். அவர் இன்னும் தன்னுடைய இயந்திர பீரங்கியின் பக்கமே இருந்து கொண்டு, கரையின் மீதுள்ள ஜெர்மன் அரண்கள் மீது சுட்டுக்கொண்டே யிருந்தார். அதே சமயத்தில் அவருக்குப் பின்னால் தீ ஜுவாலை விட்டு 'ஹிஸ்' என்ற ஓசையுடன் எரிந்துகொண்டிருந்தது, தொடர்ந்து ஏற்பட்ட பலமான வெடிகள் வானத்தைப் பிளப்பதுபோல் இருந்தது.

4

"முன்னேறுங்கள்! முன்னேறுங்கள்!" என்று மெதுவான குரலில் வலியுறுத்திக்கொண்டே அகிமோவ் ஊர்ந்து வந்தார். அவருக்கு அருகில் மத்யூகின் இருந்தார். அவர்களுக்குப் பின்னால் சிறிது தூரத்தில், 'வயர்லெஸ்' இயந்திரத்துடன் கடற்படையைச் சேர்ந்தவர்கள் வந்தனர். இவர்களுடைய பணி கப்பலிலிருந்து கரையை நோக்கிச் சுடுவதற்கு வழி காட்டுவதாகும்.

ஒரு கடுமையான, மனதை வாட்டும் வெஞ்சினம் அகிமோவின் நெஞ்சைப் பிளப்பது போலிருந்தது. திரும்பிப் பார்க்காமலிருப்பதற்கு அவர் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தார். ஆயினும், அவர் குனிந்த வண்ணம் செல்லும் போது வீசிய அன்னிய மண்ணின் பழக்கமில்லாத வாசனை கூட, காற்றடிப்பதின் காரணமாக தன் பக்கத்தில் வீசிய எரியும் பெயிண்டின் வாசனையைப் போக்கிவிட முடியவில்லை. பீரங்கிகளின் இடி முழக்கம், தன்னைச் சுற்றிலும் ஊர்ந்து வரும் மாலுமிகளின் பெரு மூச்சுகள், பக்கவாட்டுகளில் சுட்டு வரும் இயந்திர பீரங்கிகளின் இரைச்சல் ஆகிய இவை யாவும் தனக்குப் பின்னால் கடலில் மூழ்கி வரும் சப்மரைன் எதிர்ப்புக் கப்பலிலிருந்து வரும் வெடிக்கும் ஓசை, கப்பலின் பாகங்கள் எரிந்து சட சடவென்று விழுவது, சிறு சிறு வெடி சப்தங்கள், எச்சரிக்கைக் குரல்கள் ஆகியவற்றைக் கேட்பதினின்றும் தடுக்க முடியவில்லை.

"முன்னேறுங்கள்! முன்னேறுங்கள்!" என்று அவர் தன்னுடைய மெதுவான குரலில் சொல்லிக்கொண்டே ஒரு மலையுச்சியின் பக்கம் ஊர்ந்தார். அங்கிருந்துகொண்டு போராட்டத்திற்கு வழிகாட்ட முடிவு செய்தார். கடைசியாக அவர் அந்த போய்ச் சேர்ந்தபோது, கோர்ஸ்லோவ்ஸ்கி ஏற்கனவே அங்கு இருப்பதைக் கண்டார். தனக்கு முன்னுல் செங்குத்தாக உயர்ந்து கொண்டு வரும் போர் அரங்கப் பகுதியைப் பார்த்தார். கப்பலிலிருந்து கரையிறங்கிய துருப்புகள் முன்னேறிச் சென்றுகொண்டிருந்தன,

அவர்களில், முன்னணியில் சென்றவர்கள், தண்ணீரிலிருந்து கொஞ்ச தூரம் சென்றுவிட்டார்கள். ஆனுல் எதிரித் தரப்பிலிருந்து சுட்டுக்கொண்டே யிருந்ததால், அவர்கள் பூமியில் தாழப் படுத்துக்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஒரு சிறிய இடம்—அரை வட்ட வடிவமான பிரதேசம் பிடிக்கப் பட்டுவிட்டது.

இடது பக்கத்தில் மிகவும் மூர்க்கத்தனமான சண்டை நடந்துகொண்டிருந்தது. அங்கு துல்யாகோவ் இயந்திர பீரங்கியால் விடாது சுட்டுக்கொண்டேயிருந்தார். மலையின் அடிவாரத்தில் நன்கு அரண் அமைத்து நின்ற ஜெர்மன் கரையோர பீரங்கிப் படைக்கு ஆதரவாக பலமான காலாட் படையும் இருந்தது. அங்கிருந்து பீரங்கித் தாக்குதல் மேலும் மேலும் உக்ரமாயிற்று.

அகிமோவ் கப்பல்கள் வருவதைக் கண்டுபிடிப்பவர்களிடம், கடற்படையிலுள்ள பீரங்கிப் படையினரிடம் போர் நிலைமையைப் பற்றி எடுத்துக் கூறும்படி சொல்லிவிட்டு, முன்னணிப் பிரதேசத்தை நோக்கி ஊர்ந்து சென்ருர். அங்கு கடற்படை வீரர்கள் தரையில் படுத்துக்கொண்டிருந்தனர்.

"தயாராயிருங்கள்!" என்று அவர் மெதுவான குரலில் கூறினுர். தங்களுடைய தளபதியின் வாயிலிருந்து மிகவும் பழக்கமான கடற்படை உத்திரவு வார்த்தையைக் கடற்படை வீரர்கள் கேட்டதும், அவர்கள் அதைப் புரிந்து கொண்டதைக் காட்டுவதற்காகத் தலையை அசைத்தனர். மறைவாக வைக்கப்பட்டிருந்த விரோதியின் பீரங்கிகளிலிருந்து, முதலில் தண்ணீரின் கரையோரத்திலும், பின்னர்

படிப்படியாக கடற்படை வீரர்களின் அருகிலும் குண்டுகள் விழுந்து, காதுகளைத் துளைத்தன. அகிமோவ் கூர்மையாகக் கவனித்தார். கடைசியாக கப்பலிலிருந்து பீரங்கிகள் சுட ஆரம்பித்துவிட்டதை உணர்ந்தார். பின்னர் ஏதோ ஒன்று வெடிப்பதையும், இடது பக்கத்தில் வெடித்து தீ ஜுவாலை யாக மாறுவதையும் பார்த்தார்.

ஒரு கணம் அசைந்தாடும் தீ ஜுவாலை சுற்றிலுமுள்ள எல்லாவற்றையும் ஒளியிட்டுக் காண்பித்தது. மனச் சோர்வை உண்டாக்கும் மலைகள், அவற்றின்மீது படர்ந்து வளர்ந்துள்ள பாசி, முரட்டுத்தனமான செடிகள், அதிக உயரமில்லாத மரங்கள், மலை உச்சிகளில் கறுநிறமான ஷெட்டுகள் ஆகிய யாவும் தெரிந்தன.

"இதோ போகிறது" என்று அகிமோவ் கூறிக்கொண்டே நேராக எழுந்து நின்று, தன்னுடைய கைத் துப்பாக்கியை உறையினின்று வெளியே எடுத்தார்.

மத்யூகின் தன்னுடைய ஒளியை உண்டாக்கும் கைத் துப்பாக்கியை எடுத்து மூன்று முறை வெடித்து வெளிச் சத்தை உண்டாக்கினார்.

படைவீரர்கள் அனைவரும் அகிமோவைத் தொடர்ந்து எழுந்து நின்றனர். எல்லோரும் ஒரே சமயத்தில், அவர்கள் அதிக உஷ்ணத்தை அனுபவிப்பவர்கள் போல் தங்களுடைய உடைகளின் முன் பகுதியைத் திடீரென்று திறந்தார்கள். மத்யூகின் சாவதானமாகத் தன் சட்டைப் பையிலிருந்து, மாலுமிகள் அணியும் தன் தொப்பியை வெளியில் எடுத்தார். தலையில் அணிந்துகொண்டார். அதேபோல் சாவதான மாகவே தன்னுடைய ராணுவத் தொப்பியை எடுத்து தன் னுடைய பெரிய கோட்டின் பைக்குள் திணித்துக் கொண்டார்.

மார்டினேவ் எப்பொழுதும் சுத்தத்தையும் ஒழுங்கையும் விரும்புபவர். ஒழுங்கு விதிகளை மீறியதற்காகப் பலமுறை கப்பல் ஊழியர்களைக் கடிந்துகொண்டிருக்கிறார்! அவர்கள், கண்கலங்க, அவர் சொல்வதைக் கூர்ந்து கவனிப்பார்கள். ஆனால் அடுத்த நடவடிக்கையின்போதே அவர்கள் அதே காரியத்தைத்தான் செய்வார்கள்.

பயமுறுத்தல் ரீதியில் கப்பல் ஊழியர்கள் சைகை காட்டுவது, மாலுமிகள் போட்டுக்கொள்ளும் கோடுபோட்ட தங்கள் உள்ளாடைகளை—மாலுமிகளின் சின்னத்தை-வெளியில் காட்டிக்கொள்ளவேண்டும் என்ற விருப்பத்தின் காரணமாகவேயாகும். மாலுமிகளுக்கு பயம் என்பதே இன்னதென்று தெரியாது. தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்வதற்கு அவர்கள் தயார் என்பதையும், மரணத்தைத் திரணமாக மதிக்கிறார்கள் என்பதையும் அது எடுத்துக் காட்டுகிறது.

பரபரப்பான நிலைமையால் போதையூட்டப்பட்டவராய், "முன்னேறுங்கள்!" என்று அகிமோவ் கர்ஜனை புரிந்தார்.

அவர்கள் அனைவரும் செங்குத்தான மலைச் சரிவில் முன்னேக்கிப் பாய்ந்தனர். வழக்கமாக காலாட் படையினர் செய்வதுபோல் அவர்கள், முன்னேறும்போது சப்தமிடவில்லை. ஆனால் அமைதியாக உறுதியாக அடியெடுத்து வைத்து நடந்தனர். அவர்கள் மலை முகட்டை அடைந்ததும், அதன் மீதும், அதைத் தொடர்ந்த பீடபூமியின்மீதும் வேகமாகப் பாய்ந்து முன்னேறினர். இங்கு எல்லாம் இருள் மயமாக இருந்தது. எங்கும் தீயினால் ஏற்படும் ஒளி தென்படவில்லை. ஒருக்கால், சுட்டுக்கொண்டிருந்த ஜெர்மானியர்கள் போர்முனையை விட்டு ஓடிப் போயிருக்கவேண்டும். இனி ஒருபோதும் கடல் தென்படவில்லை. ஏனெனில் மலை முகடுகள் கடலை மறைத்துவிட்டன. கடலில் இருந்த அனைத்தும், அவர்கள் அருமையாக நேசித்த கப்பல்களும், தங்களுடைய சகோதர மாலுமிகள், தங்களுடைய தாய்நாட்டின் கொடி ஆகிய யாவும் பார்வையினின்றும் மறைந்தன. கடல் மார்கமாகவே திரும்புவது என்பது நடைமுறையில் சாத்தியமற்றதாகவும், மிகவும் தூரத்தில் உள்ள ஒன்றாகவும் கருதப் பட்டது.

அகிமோவ் மலை முகடுள்மீது சிறிது நேரம் தாமதித்தார். கடற்கரையையும், பக்கவாட்டிலுள்ள பிரதேசங்களையும் இனி பார்க்க முடியாதே என்பதினால்தான்.

கப்பலில் வயர்லஸ் கருவியை இயக்குபவர்கள் மீண்டும் வயர்லஸ் கருவியை 'ரெடி' ஆக்கினுர்கள். மத்யூகின் ஒளியை உண்டாக்கும் குண்டுகளை வெடித்து எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறோம் என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வகை செய்தார். ஒவ்வொருவரும் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்தனர். காயமடைந்தவர்கள் வேகமாக ஊர்ந்து கடலை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். ரன்னர்கள் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து, தகவல் கூறிவிட்டு, பின்னர் மீண்டும் இருளில் ஓடி மறைந்தனர். ஒரு ஸ்தம்பிப்பான நிலைமை ஏற்பட்டது. ஆனுல் அந்த ஓய்வான நிலைமை துரோகம் செய்யக்கூடியதாகத் தோன்றியது. பரபரப்பாகவும், பீதி ஏற்படுத்தக்கூடியதாகவும் இருந்தது. பின்னர் மீண்டும் ஓர் முறை தீயின் ஒளிக் கற்றைகளால் சகலமும் பிரகாசமாகத் தெரிந்தன.

''மீண்டும் தொடங்குகிறது'' என்று அகிமோவ் தெரிவித்தார்.

ஜெர்மானியர்கள் முன்னைவிடவும் மிகவும் சக்தி வாய்ந்த முறையில் சுட ஆரம்பித்தனர்.

ஒரு மனிதன் இடது பக்கத்திலிருந்து ஓடோடி வந்து கொண்டிருந்தார். சில சமயங்களில் கீழாகக் குனிந்த வண்ணம் வந்தார். தீ ஜுவாலைகளின் ஒளியில் அவரது கண்கள் பிரகாசித்தன. எதிர்ப்பு மனுேபாவத்தினுலோ, அல்லது பயத்தின் காரணத்தினுலோ அப்படியிருக்கலாம். இன்னும் அதிக தூரத்திலிருக்கும்போதே அவர், பலமாக இரைச்சலிட்டுக் கூறிய வார்த்தைகள் அவர் மகிழ்ச்சியுடனிருப்பதைக் காட்டின. ''ஜெர்மானியர் திண்டாடிக் கொண்டிருக்கிறுர்கள். அவர்களுக்கு சூடாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்'' என்றுர், பட்டாலியன் கமாண்டரை அடையாளம் தெரிந்துகொண்ட அவர், அணிவகுப்பு பயிற்சி மைதானத்தில் நிற்பதைப்போல் 'அட்டென்ஷனி'ல் நின்று, ''விரோதி எதிர்த்துத் தாக்கிக்கொண்டிருக்கிறுன், காம்ரேட் கமாண்டர். துல்யாகோவ் உதவி கேட்கிறுர்'' என்றுர்.

அகிமோவ், அந்தக் கப்பல் ஊழியரை அவர் யாரென்று தெரிந்து கொள்ள முடியாமல் அரை நிமிஷம் பார்த்தார்.

ஏனெனில் அவருடைய முகம் முழுவதும் சேறும், ரத்தமும் பூசப்பட்டிருந்தது.

''எவ்வளவுபேர் எஞ்சியுள்ளனர்?'' என்று அவர் முன்னால் ஆடி அசைந்துகொண்டிருக்கும் மரங்களின் நிழலைப் பார்த்தவண்ணம் கேட்டார். ஆனால் அந்த மாலுமி, அந்தக் கேள்வி தனக்கும் முன்னால் உள்ள வேறு யாரையோ பார்த்து கேட்கப்பட்டதாக நினைத்துக்கொண்டு, பதிலளிக்காமல் இருந்தார்.

''உங்களிடத்தில்தான் நான் கேட்கிறேன்'' என்றார் அகிமோவ்.

அந்த மாலுமி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, பின்னர் அகிமோவின் அருகில் வந்து காதோடு காதாக ''ஒரு சிலர் மட்டுமே'' என்றார்.

''நீங்கள் பத்துப்பேரை அழைத்துக்கொண்டு அங்கு செல்லுங்கள்'' என்று அகிமோவ் கொஸ்லோவ்ஸ்கியிடம் கூறினார்.

அந்த லெப்டினென்ட், தன்னுடைய ஆட்களுடன் மலைச் சரிவில் கீழே இறங்கிப்போக ஆரம்பித்தார், இலேசான இயந்திர பீரங்கிகளின் வாய்முகப்புகள் வெளிச்சத்தில் பளபள வென்று பிரகாசித்தன. ரத்தக்கறை படிந்த முகத்துடன் கூடிய மாலுமி லெப்டினென்ட்டைக் கடந்து ஓடினார். விநோதமான முறையில் பாய்ந்துகொண்டும், முணுமுணுத் துக்கொண்டும் சென்றார். அப்பொழுதுதான் அவர் எகோரோவ் என்று அகிமோவ் உணர்ந்தார்.

மீண்டும் போர் தணிந்தது. ஜெர்மன் குண்டுகள் தண்ணீருக்கருகிலேயே வெடித்தன. ''என்ன இது?'' என்று அகிமோவ் நினைத்தார். அதே சமயத்தில் அவருக்குப் பின்னா லிருந்து பலருடைய காலடி சப்தம் வருவதைக் கேட்டார். பிறகு யாரோ கீழிருந்து அவரைக் கூப்பிட்டனர். பிறகு சில நிமிஷங்களில் லெப்டினென்ட் கமாண்டர்:மார்டினோவ், மூச்சுத் திணற ஓடிக்கொண்டு வந்து, அனேகமாக அவருக்குப் பக்கத்தில் வந்து விழுந்தார். ''நாம் இங்கேதான் இருக்கிறோம்'' என்றார் அவர்.

திடீரென்று அந்தப் பகுதி முழுவதும் ஆட்களால் நிரம்பி யிருப்பதுபோல் தோன்றியது. சத்தமும், இரைச்சலும் ஏற் பட்டது. அகிமோவ் பிரிவுபசாரம் கூறுவதைப்போல் கடைசி முறையாகக் கடலேயும், கரைக்குச் சற்றுத் தொலே வில் நிற்கும் கப்பல்களேயும் ஒரு பார்வை பார்த்தார். உயி ருடனிருக்கும் தன் நண்பர்களுக்கும், இறந்துபோன தன் னுடைய நண்பர்களுக்கும் தன்னுடைய மனதிற்குள்ளேயே பிரிவுபசாரம் கூறினர். பின்னர் தன் பட்டாலியனுக்குத் தலைமை வகித்துக்கொண்டு முன்னே சென்ருர். பட்டாலி யன்கள் பாறைகள் நிறைந்த பாதை வழியே சென்றன. தங்களுக்கு அறிமுகமில்லாத கடற்கரைப் பிரதேசத்தில் குறுகிய கணவாய்கள் வழியாக உள் நாட்டுக்குள் சென்றன.

சிறிது நேர ஓய்வின்போது, அகிமோவ், படைத் தளபதி களேயெல்லாம் ஒன்ருக அழைத்து வைத்துப் பேசினர். "எகோ ரோவுக்கு என்ன ஏற்பட்டது?" என்று கேட்டார். "காய மடைந்துவிட்டாரா?" என்று கேட்டதற்கு "ஆம்; ஆனல் அவர் போர்முனேயை விட்டு விலகிச் செல்வதற்கு மறுத்து விட்டார்" என்று பதில் வந்தது.

"புய்கோவைப் பற்றி என்ன?"

"காயமடைந்தார்; ஆனல் போர்முனேயை விட்டகல மறுத்துவிட்டார்.

செமியானேவ்?"

"கொல்லப்பட்டார்."

"லெவாஷோவ்?"

"கொல்லப்பட்டார்."

"சோட்னிகோவ்?"

"தலேயில் காயம் பட்டது, வெளியே கொண்டுபோகப் பட்டார்."

"போய்செங்கோ?"

"காயமடைந்தார். ஆனல் பின்னணியிலேயே இருந்து விட மறுத்துவிட்டார்."

மார்டினேவ் முகம், கைகால் அலம்பிக்கொண்டார். ஒரு பிரஷ்ஷினல் தன் கைகளேத் தேய்த்துக் கொண்டார். அவருடைய க்ஷவரக் கத்தி ஒரு பட்டையான கல்லின்மீது

கிடந்தது. முகக்ஷவரம் செய்து கொள்வதற்காக அருகில் தண்ணீர் நெருப்பில் சூடாகிக் கொண்டிருந்தது. ''சிறந்த முறையில்சேவை செய்தவர்களுக்குப் பரிசுகள்வழங்க சிபார்சு செய்யப்பட-வேண்டும்,'' என்று அவர் கூறினர்.

கீழே அக்கம் பக்கமாகப் படுத்துக் கிடந்த மாலுமிகளை அகிமோவ் பார்த்தார். '' தற்பொழுது தேவைப்படுவது பரிசுகள் அல்ல, ஆனல் தூக்கம் தான் '' என்று ஒரு பக்க மாகப் புன்முறுவல் பூத்த வண்ணம் கூறினர். களைப்புடன் அவர் எழுந்து, ''உங்களுடைய முகக்ஷவரத்தை யெல்லாம் சீக்கிரம்முடியுங்கள். அணிவகுத்து நிற்பதற்கு உத்திரவிடுங்கள். நாம் கிரிகினெஸாக்குப் போவோம்'' என்ருர்.

அத்தியாயம் எட்டு

கரையின்மீது

கிரிகினெஸ் என்ற நகரமே தற்பொழுது இல்லை. ஜெர்மானியர்கள், அதை விட்டு வெளியேறுவதற்கு முன் திட்டமிட்டு அதை வெடி வைத்துத் தகர்த்து விட்டனர். வீடு வீடாக எரித்துச் சாம்பலாக்கி விட்டனர்.

கரையோரத்தில் இருந்த நிலக்கரிக் குவியல்களுக்கும் ஜெர்மானியர்கள் நெருப்பு வைத்தனர். கண்களால் பார்க்க முடிகின்ற தூரத்திற்கு, அந்தத் தீ நீல நிறமாக ஒளி விட்டுக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் நெருப்பினுடைய வும், நாசத்தினுடையவும் இடிபாடுகளிலிருந்து வரும் நெடி மூக்கைத் துளைத்தது. ஸ்மோலென்ஸ்க் பகுதியிலும், பைலோ ரஷ்யாவிலும் இருதயத்தை பிளக்கும் இந்த நெடியை அகிமோவ் அனுபவித்திருக்கிறார். இதை ஒருவர் எப்பொழுதும் மறக்க முடியாது.

சுற்றிலும், எங்கும் மயான அமைதி நிலவியது. நகருக்கு எதிரிலுள்ள ஸ்கோகிராய் பாறைத்தீவை இன்னும் தங்கள் வசத்தில் வைத்திருந்த ஜெர்மானியர்கள் ஒவ்வொரு அரை மணிக்கொரு தடவை, முட்டாள் தனமாக, மூளையற்ற முறையில் சுட்டுக் கொண்டிருந்தனர். சுட்டெரிந்து போய்க் கிடந்த வீதிகளில், அந்த குண்டுகள் பொத்தென்ற எதிரொலியுடன் வெடித்துக் கொண்டிருந்தன.

அகிமோவும், அவருடைய ஆட்களும் வெறிச் சோடிப் போயிருந்த அந்த நகரத்தில் மௌனமாக ரோந்து வந்தனர்.

இடிபாடுகளுக் கிடையில் இங்கும் மங்கும் தலை நீட்டிக் கொண்டிருந்த புகை போக்கிகளைக் கொண்டும், அழகான கம்பி வலைப்பின்னல் தோட்ட வேலிகளைக் கொண்டும், தெருக்களின் அமைப்பை ஊகித்துத் தெரிந்து கொண்டனர். வியக்கத்தக்க முறையில் சுத்தமான தெருக்களாக இருந்திருப்பவை, தற்பொழுது சிக்குண்டு கிடக்கும் பலவண்ண ஜெர்மன் டெலிபோன் கம்பிகள் நிறைந்தவைகளாகக் காட்சியளித்தன. தரை கடலுக்குள் நீட்டிக்கொண்டிருந்த ஒரு இடத்தில் ஒரு மாதாகோயில் இருப்பதை பூகோளப் படம் காட்டியது. எனவே, அந்த நகரத்திற்கு 'சர்ச்முனை' என்று பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த சர்ச்சும் நாசமாக்கப்பட்டிருந்தது. சர்ச்சின் முன்புற மைதானத்தின் உருக்குத் தண்டவாளத்தினாலான வேலி மட்டும் எஞ்சி நின்றது.

அவர்கள் இடது பக்கத்தில் 'சுட் வாரங்கர் ஓர்க்ஸ். இருக்கு மிடத்திற்குச் சென்றனர். உயரமான புகைப் போக்கி ஒன்று மட்டும் இன்னும் அங்கே காணப்பட்டது' அது தவிர, அங்கு எஞ்சி நின்றது பெரிய செங்கல் குவியல் மட்டுமே. இங்கும் கொடூரமான அமைதி நிலவியது. உயிருடன் கூடிய ஒரு ஆள் கூட சுற்றிலும் காணப்படவில்லை.

"ஓர்ஷா அருகிலிருந்த அதே ஜெர்மானியர்களே இங்கும் இருந்துள்ளனர். அதைப்பற்றி சந்தேகமே வேண் டாம். அவர்களின் கை வேலைகளையே இங்கேயும் பார்க்கி றோம்" என்று அகிமோவ் கூறினார்.

"ஆம். லெனின்கிராடில் நடந்தது போல்தான் இங்கும்," என்று மார்டினேவ் கூறினார். அப்பொழுது மற்றொரு தடவை ஜெர்மன் குண்டுகள் வெடிக்கும் இரைச்சல் அவரது காதுகளைத் துளைத்தது.

அகிமோவ் கம்பியில்லாத் தந்தி மூலம் ராணுவத் தலைமை நிலையத்துடன் பேசினார். போர்னெவாட் என்ற கிராமத் திற்குப் போகும்படியும், மேற்கொண்டு உத்திரவுகளுக்குக் காத்திருக்கும்படியும் அவருக்கு தாக்கீது வந்தது. அவர் தன்னுடைய பட்டாளத்தை, மூன்று நாட்களுக்குத் தேவை யான உணவுடனும், வெடி மருந்துடனும் கடற்கரை அருகில்

மினேவிச் நகரில் விட்டு விட்டு தன்படையின் இதரபகுதிகளே அழைத்துக்கொண்டு தெருக்களின் வழியாகவும், இடிபாடு களின் வழியாகவும், அப்பாலுள்ள ரோடுக்குச் சென்ருர். அந்த ரோடு தெற்கு நோக்கி சென்றது. அதன் பக்கத்தில், சதுப்பான உறை பனித்துளிகள் நிறைந்த துந்தரப் பிரதேசத்தின் மீது ஒரு குறுகிய கேஜ் (narrow gauge) ரயில்வேயின் கறுமை நிறமான தண்ட வாளங்களேப் பார்க்க முடியும். மற்றும் அங்குமிங்கும் உறைபனியால் மூடப்பட்ட துருப்பிடித்த தள்ளு வண்டிகளும் காணப்பட்டன.

கிர்கினெஸ் நகரத்தைப்போல் போர்னெவாட் அவ்வ ளவு பாதிக்கப்படவில்லே. வெள்ளே விளிம்புடன் கூடிய நீல நிற சிலுவையைக் கொண்ட சிவப்பு நிறமான நார்வீஜியக் கொடி ஏற்கனவே வீடுகளுக்கருகில் உயரமான கொடிக் கம் பங்களில் பறந்து கொண்டிருந்தன. வீடுகளிலிருந்தவர்கள் வெளியே வந்து, அடக்கமான மகிழ்ச்சியுடன் சோவியத் துருப்புகளே வரவேற்றனர். அவர்கள் கிராமத்தின் எல்லே யில் குகைகளிலும், சுரங்கங்களிலும் வசித்து வந்தனர். மிகவும் களேப்படைந்து, மனவேதனே நிரம்பிய முகங்களுடன் காணப்பட்ட நார்வீஜியர்களே சோவியத் ராணுவ வீரர் களும், கடற்படை வீரர்களும் அனுதாபத்துடன் பார்த்தனர்.

அகிமோவ் தன்னுடைய ஆட்களே ஒரு நீளமான, சிவப்பு நிற மரக்கட்டிடத்தில் தங்கவைத்தார். அந்தக் கட்டிடம் குளிக்கும் அறைகளாக இருந்ததுபோல் தோன்றியது. மற்றும் இதர மூன்று கட்டிடங்களிலும் துருப்புகள் தங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கட்டிடங்களில் கடைசி நிமிஷம் வரையிலும் ஜெர்மானியர்கள் தங்கிக் கொண்டிருந்தனர். ஆகவே அவற்றை வெடி வைத்துத் தகர்க்காமல் விட்டு விட்டுப் போய் விட்டனர். அவற்றினுள் இரும்புக் கட்டில்களும், ராணுவப் போர்வைகளும் இருந்தன.

காவல் பணியிலிருந்த சோல்ஜர்களேத் தவிர மற்றவர்கள் அனேவரும் உடனே படுத்துத் தூங்க ஆரம்பித்து விட்டனர். பட்டாளத்தின் சமையல்காரர்கள் சாப்பாடு தயாரிக்கும்

வரைக்கும் கூட அவர்கள் காத்திருக்கவில்லை. அவர்களுக்கு நேரத்தைப் பற்றிய ஒரு கண்ணோட்டமே இல்லாமல் போய் விட்டதின் காரணமாக, சாப்பாடு காலை உணவா, மதிய உணவா, இரவு உணவா என்ற வித்தியாசமே தெரியவில்லை. தன்னுடைய ஆட்களை எல்லாம் கட்டிடங்களில் அமர்த்திய பின்னர், அகிமோவ் படுக்கப் போகும் தருணத்தில், நாட் கணக்கில் குண்டுகள் வெடிப்பதைக் கேட்டுக் காதுகள் அரை செவிடாய் இருக்கும் நிலைமையிலும் கூட, சமீபத்தில் எங்கோ ஒரு குழந்தை அழுவது அவரது காதில் கேட்டது. அவர் வெளியில் தெருவுக்குச் சென்றார். அந்த சமயத்தில் மாத்யூகின், களைப்பின் காரணமாக செத்த பிணம் போல் இருந்த போதிலும் கூட, தன்னுடைய மேலதிகாரி வெளியில் போவதைப் பார்த்ததும், தானும் அவரைப் பின்தொடர்ந் தார். அகிமோவ் சுரங்கத்திற்குள் சென்றார். அங்கு உள்ளே எங்கோ ஓரிடத்தில் பெண்கள், அழும் குழந்தைகளை சமா தானப்படுத்த முயசித்துக் கொண்டிருந்ததைக் கேட்டார்.

அவர் இருட்டான சுரங்கப் பாதையில் பிரவேசித்தார். அங்கு குழந்தைகளைப் பார்த்ததும், அவர், இது வரையிலும் தான் ஒரு தந்தை என்பதைத் தெரிந்து கொண்டிருக்க மட்டுமே செய்துள்ள அவர், தற்பொழுது முதன் முதலாகத் தான் ஒரு தந்தை என்பதை உணரவே செய்தார். அங்கு கார்பைட் விளக்குகளின் வெளிச்சத்திலும் மிகவும் பயங்கர மான முறையில் ரத்த மில்லாமல் வெளிறிப் போயிருந்த குழந்தைகளின் முகங்களைப் பார்த்த அவருடைய இருதயம் வெகு தூரத்தில் மாஸ்கோவில் உள்ள தன்னுடைய சொந்த சிறிய மகளைப் பற்றிக் கவலையினாலும், பரிதாப உணர்ச்சியினா லும் விம்மியது. அவர்களுக்கு அருகில் மௌனமாக நின்று கொண்டிருந்த ஆட்கள்-அவர்களிடமிருந்த சகலவற்றையும் திருடர்களால் கொள்ளை யடித்துக் கொள்ளப்பட்டுவிட்ட வெறும் மனித ஜந்துக்களாக மட்டும் அவருக்குத் தென்பட வில்லை. அவர்களுக்கு வேறு ஏதோ இருந்தது. அதைத் தானும் பகிர்ந்து கொண்டார். அவர்கள் தங்களுடைய குழந்தைகளுக்காகக் கவலைகொள்ளும் தந்தையர்களாகவும் இருந்தனர்.

அனேகமாக எல்லோரும் உயரமாகவும், அழகிய தலை முடி உடையவர்களாகவும் இருந்தனர். அவர்களின் முகங்கள் தட்பவெட்ப நிலைகளினால் பாதிக்கப்பட்ட மீன்பிடித் தொழிலாளரின் முகங்களாயிருந்தன. கடற்கரை வாசிகளாக அவர்கள் இருந்தனர். அவர்களில் பெரும்பான்மையினர், பெண்களும் கூட, வர்ண கம்பளிச் சட்டைகளையும், கால் சட்டைகளையும் அணிந்துள்ளவர்களாகக் காணப்பட்டனர்.

அகிமோவ் சலனமின்றியும், உறுதியில்லாமலும் அப்படியே நின்றார். என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. சுரங்கத்தின் ஆழத்திலிருந்து சோவியத் ராணுவ உடையில் ஒரு ஆசாமி மேலே வருகின்றவரையிலும் அகிமோவ் அப்படியே நின்றார். அவரை லெடியாகின் என்று அகிமோவ் அடையாளங் கண்டுபிடித்துக் கொண்டு, அவரை நோக்கி வேகமாகச் சென்றார்.

''ஓ, நீங்கள் இங்கேயும் இருக்கிறீர்களா?'' என்று கேட்டார் லெடியாகின். அவரது வெளிரிய முகம் மகிழ்ச்சியினால் பிரகாசமடைந்தது. பின்னர் அவர் தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைச் சுட்டிக் காண்பித்து, மன வருத்தத்துடன், இங்கே என்ன ஏற்பட்டுள்ளது என்பதைப் பாருங்கள். ஜெர்மானியர்கள் எல்லாவற்றையும் வெடி வைத்துத் தகர்த்து விட்டார்கள். மீன் பிடிக்கும் வலைகளையும், மோட்டார் படகுகளையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். ஜனங்கள் மீன் பிடிப்பதற்குக்கூட போக முடியாது. அவர்கள் பட்டினி கிடந்து கொண்டிருக்கிறார்கள்'' என்றார்.

அகிமோவ் ஒருகணம் சிந்தித்துவிட்டு, ''ஆரம்பத்தில் இருநூறு பேர்களுக்கு என்னால் உணவளிக்க முடியும்—என்னுடைய சமையல் வீட்டில் இப்பொழுது வேலை நடைபெற்று வருகிறது'' என்றார்.

லெடியாகினுடைய முகம் மலர்ந்தது. நார்வீஜியர்களிடம் ஏதோ சில வார்த்தைகள் கூறினார். உடனே அவர்கள் பெண்களையும், குழந்தைகளையும் அழைப்பதற்காகச் சுரங்கத்திற்குள் சென்று மறைந்தனர். அவர்கள் சிறிது நேரத்தில் மேலே வந்தனர். மத்யூகினைப் பின்பற்றி சமையல் வீட்டுக்குச் சென்றனர். பெண்களுடன் ஆண்கள்

செல்லவில்லை என்பதையும், அவர்கள் இருந்த இடத்தி லேயே இருந்ததையும் கண்டு அகிமோவ் மகிழ்ச்சி யடைந்தார்.

''அவர்களும் போகட்டுமே'' என்று அவர் கூறினர். பின்னர் அவர் சிரித்துக்கொண்டே ''ஐந்து ரொட்டித் துண்டுகளைக் கொண்டு ஒரு டிவிஷன் படை முழுவதற்குமே இயேசு கிறிஸ்து உணவளித்தார் என்று கூறுகிறார்கள் அவரைவிட நான் இன்னும் நல்ல நிலைமையிலிருக்கிறேன். என்னிடம் அதிக உணவு இருக்கிறது. ஒரு வாய்கூட சாப்பிடாமல் நாங்கள் இரண்டு நாள் போரிட்டோம்'' என்றார். பின்னர் மறு சிந்தனைக்குப் பின், ''தவிரவும் பட்டாலியனில் தற்பொழுது அவ்வளவு அதிக ஆட்களும் இல்லை'' என்று கூறும்போது அவரது கண்கள் கலங்கின.

அகிமோவும், லெட்டியாகினும் மெதுவாக நார்வீஜியர் களைப் பின்பற்றி சமையலறைக்குள் சென்றனர். தற் பொழுது சமையல்காரர்களாக உள்ள டெர்யாபின் போரின் போது இயந்திர பீரங்கியை இயக்குபவராக இருந்தார். ஒரு உண்மையான கப்பல் சமையல்காரரைப்போல் பருத்த சரீரத்துடனும், பட்சமான இருதயம் உடையவராகவும் காணப்பட்ட இவர், மத்யாகினுடைய உதவியுடன், தூங்கிக் கொண்டிருக்கும் கப்பல் மாலுமிகளுடைய சாப் பாட்டு டப்பாக்களையெல்லாம் ஒன்றுகத் திரட்டினர். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சாதாரணமான, ஆனல் கெட்டியான, திருப்தியளிக்கும் தானியக் கஞ்சியை ஊற்றிக் கொண்டிருந்தார். பட்டாலியன் கமாண்டரைப் பார்த்த அவர், ''காம்ரேட் கமாண்டர், ரொட்டியிருக்கிறதே!'' என்றார். ''அவர்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்!'' என்று அகிமோவ் பதிலளித்தார்.

லெட்டியாகினைப் பார்த்ததும் அவர் அடைந்த மகிழ்ச் சிக்கு எல்லையே இல்லை. உளவு வேலை மேலதிகாரி ஒன்றும் பேசாமல் இருந்தார். ஆனல் நார்வேக்கு வடக்கில் உள்ள பிரதேசத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளவை களெல்லாம் அவருக்குத் தெரியும். அவர்களின் மொழியில் நன்கு தங்குதடையற்ற முறையில் பேசினர். அவர்களுடன்

மிகவும் சுமுகமாக, சங்கோஜம் எதுவுமில்லாமல் நடந்து கொண்டார். நார்வீஜியர்கள் அவரை விசேஷமாக மிகவும் நட்புறவுடன் நடத்தினர்கள். அவரிடத்தில் மிகுந்த நம்பிக்கை வைத்திருந்ததாகத் தோன்றியது. ஜெர்மன் அணிகளுக்குப் பின்னல் அவர் செயல்பட்டு வந்த நாள் முதலாக அவர்களில் பலரும் அவரை அறிவார்கள். அவர்கள் அவருடைய பெயரைக்கூட மாற்றிவிட்டார்கள். லெட்டிகர் அல்லது "கடற்படையை வேட்டையாடுபவர்" என்று அழைத்தார்கள். அவரைப் பற்றி அவர்களுடைய கருத்தையே இது பிரதிபலித்தது.

"நீங்கள் எங்கே சாப்பிடப் போகிறீர்கள்?" என்று அகிமோவ் கேட்டார்.

"எங்கு வேண்டுமானுலும்" என்று புன்முறுவலுடன் பதில் வந்நது.

"அல்லது ஒருக்கால் எங்கும் இல்லையோ? என்னுடன் சேர்ந்து சாப்பிடலாம், வாருங்கள்."

"நன்றி" என்ருர் லெட்டியாகின். பின்னர் அவர் திரும்பிப் பார்த்து "கமாண்டன்ட் வருகிருர்" என்ருர்.

தலை நரைத்த கர்னலாகிய அந்த கமாண்டன்ட் ஒரு சீனியர் லெப்டினென்டுடன் வந்தார். நார்வீஜியர்கள் சாப்பிடுவதை ஒருகணம் கவனித்துவிட்டு அவர் அகிமோவிடம் "நீங்கள்தான் இங்கு படைத் தளபதியாக இருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"ஆமாம்."

"அவர்களுக்கு சாப்பாடு போட்டதின் மூலம் நீங்கள் நல்ல காரியம் செய்தீர்கள்" என்ருர்.

"இவர்தான் லோகினேவ், மொழிபெயர்ப்பாளர்" என்று சீனியர் லெப்டினென்ட் அறிமுகப்படுத்தி வைத்தார்.

லோகினேவ் மிகவும் வாலிபமாக இருந்தார். தந்தத்தினுல் ஆன ஓரங்களையுடைய மூக்குக் கண்ணுடியை அணிந்து கொண்டிருந்தார். மகிழ்ச்சிகரமான அழகான முகமுடையவராகவும் இருந்தார். கடற்படை அதிகாரியின் (அகிமோவின்) மீது அவருக்கு உடனே பிரியம் ஏற்பட்டது. குறிப்பாக ஜனங்களுக்கு சாப்பாடு போடுவதில் அவர் எடுத்துக்

கொண்ட பாராட்டத்தக்க முன் முயற்சியின் காரணமாக அகிமோவ் மீது அவருக்கு மிகுந்த விருப்பம் ஏற்பட்டது. ஜனங்கள் சாப்பிடுவதை எப்பொழுதுமே பார்த்திராதது போல், நார்வீஜியர்கள் சாப்பிடுவதை கர்னல் மீண்டும் கூர்ந்து கவனித்தார். பின்னர் அவர் அதிக சப்ளைகள் வந்து, திட்டவட்டமான ஏற்பாடுகள் செய்யப்படும் வரையிலும் ஸ்தல மக்களுககு உணவு அளிக்கும்படி அந்த கிராமத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள எல்லா ராணுவ யூனிட்டுகளுக்கும் உத்திரவிட்டார்.

விரைவில் லோகினேவ் பர்கோமாஸ்டரை (ஸ்தல பஞ்சாயத்து அதிகாரியைப் போன்றவர்) அழைத்து வந்தார். எல்லா நார்வீஜியர்களைப் போலவே அவரும் உயரமானவராகவும், அழகானவராகவும், ஆனல் மிகவும் பயந்த தோற்றமுடையவராகவும் காணப்பட்டார். அவர் எங்கோ இடிபாடுகளுக்கிடையில் ஒளிந்துகொண்டிருந்தார். கிர்கினெஸ் நகரத்திலும் அதன் சுற்றுப் பிரேதேசத்திலும் என்ன நடந்து கொண்டிருந்தது என்பது ஒன்றுமே அவருக்குத் தெரியாது. மிகவும் கஷ்டப்பட்டுத் தேடியபின் லோகினேவ் அவரைக் கண்டுபிடித்தார். பின்னர் சம்பிரதாயச் சடங்குகளுடன் அவரை நேச நாடுகள் நிர்வாகத்தின் சிவில் பிரதிநிதியாக நியமித்தார்.

பர்கோமாஸ்டரும், கமாண்டெண்டும் சுரங்கங்களில் வசிக்கும் மக்களைப் போய்ப் பார்க்கும்படி லெட்டியாகின் யோசனை கூறினர். "இந்த நார்வீஜிய மக்கள் மிகவும் நல்லவர்கள். அவர்கள் பலதடவை எனக்கு உதவி செய்துள்ளனர்" என்று அவர், அவர்கள் விஷயமாகத் தான் எடுத்துக் கொண்டுள்ள அக்கரையை நியாயப்படுத்துவது போல் கூறினர்.

நடுங்கிக் கொண்டிருக்கும் குழந்தைகளையும், வெளிரிய முகங்களுடன் காணப்பட்ட பெண்களையும், உற்சாகமற்ற தகப்பன்மார்களையும் மேலும் ஒருமுறைக் கூர்ந்து பார்த்தபின், அகிமோவ் ஒரு பெருமூச்சுடன் "நாம் அவர்களுக்கு வீடுகளை ஒப்படைத்தாக வேண்டும்" என்ருர். பின்னர் அவ்வளவு இளகிய மனதுடையவனுக இருப்பதற்காக

மன்னிப்புக் கேட்டுக் கொள்வதைப்போல், "நம்முடைய ஆட்கள் மீண்டும் குகைகளிலும், பாதுகாப்புக் குழிகளிலும் தான் வசிக்க வேண்டும். அதற்கு வேறு வழியொன்றும் கிடையாது" என்ருர்.

இதற்குக் கர்னல் கடுமையான ஆட்சேபனை தெரிவித்தார். "நம்முடைய வீரர்களுக்கு ஓய்வு தேவை. அவர்களும் மனிதர்களே" என்ருர்.

ஒருகணம் தாமதித்து, அவர் தன் கைகளை உயர்த்திஞர். அவருடைய கடுமையான, சதுரமான முகம் ஆதரவற்ற ஒரு தோற்றத்துடன் காட்சியளித்தது. அந்த நிலையில், மிகவும் இருதய வேதனையுடன் கூறும் தொனியில் "இறுதியாகப் பார்த்தால் நீங்கள் கூறுவது சரிதான், மேஜர் அவர்களே குழந்தைகள் இங்கே இருப்பது சங்கடமாக இருக்கிறது. அது சரியென்றும் தோன்றவில்லை. ஆம், லோகிஞேவ், சிதையாமல் இருக்கக்கூடிய எல்லா வீடுகளையும் விடுவிப்பதாக ஒரு உத்திரவை எழுதுங்கள். அதுதான் சரி," என்ருர்.

கமாண்டெண்டின் முடிவைப்பற்றி உடனே லோகிஞேவ் பர்கோ மாஸ்டருக்குத் தெரிவித்தார். லோகிஞேவ் தன்னுடைய அடக்கத்தை சமாளித்து, ஆச்சரியம் கலந்த திருப்தியை வெளிப்படுத்திஞர்.

அகிமோவ் தன்னுடைய பட்டாலியனுக்குத் திரும்பிச் சென்ருர். முன்பு குளிக்கும் அறைகளாக இருந்த கட்டிடங்களில் அவர் தங்கவைத்த அவருடைய படை வீரர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டு, நல்ல தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர். அப்பொழுது காவல் பணியில் இருந்த நபரும் ஒரு சூடான வட்டவடிவ இரும்பு அடுப்புக்கு அருகில் பாதி உறக்கத்தில் இருந்தார். பட்டாலியன் கமாண்டர் வரும் அரவத்தை எகோரோவ் ஒருவர் மட்டுமே காதால் கேட்டார். உடனே அவர் விழித்துக் கொண்டு, பாதி எழுந்து, நிந்திக்கும் தொனியில்

"தோழர் கமாண்டர் அவர்களே, நீங்கள் படுத்துக் கொஞ்சம் தூங்க வேண்டும்" என்ருர்.

"இதோ, சீக்கிரத்தில்" என்று அகிமோவ் மறந்த நினைவில் கூறிஞர்.

அவர் அணிந்திருந்த மாலுமியின் சின்னமுள்ள உள்ளாடையைச் சுட்டிக் காட்டி, புன்சிரிப்புடன், "உடைகளைக் கழற்றி விட்டீர்களே. இரண்டரை வருட காலத்தில் ஒருக்கால், இதுதான் முதல் தடவையாக இருக்கும். மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறீர் அல்லவா," என்றார்.

அகிமோவ் முகம் சிவக்க, வேறுபக்கம் திரும்பிக் கொண்டார். "இறகுகளலான படுக்கையும், வென்னீர் புட்டி ஒன்றும் உங்களுக்கு வேண்டுமா? என்று கேட்டார். பின்னர் அவர் காவல்பணியிலிருந்தவரை உலுக்கி விட்டார். "எல்லோரும் எழுந்திருங்கள்" என்றார்.

"ரிவெய்ல்!" என்று காவலாளி உரக்க சப்தமிட்டார். உடனே எல்லோரும் குதித்தெழுந்து வேகமாகத் தங்கள் உடைகளை அணிந்துகொள்ள ஆரம்பித்தனர்.

அவர்களை எழுப்பியதற்கான காரணத்தை அகிமோவ் சுருக்கமாக விளங்கினார். பின்னர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு அவர் போக விரும்பினார். ஆனால் எப்படியோ அவரால் நகர முடியவில்லை .அங்கேயே நின்றார். படை வீரர்களின் முகங்களை உஷாராக கவனித்தார். அவர்கள் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கோட்டுகளை அணிந்து கொண்டும், போர்வைகளை சுருட்டிக்கொண்டுமிருந்தனர். அவர்களிடத்தில் அதிருப்திக்கான ஏதாவது அடையாளம் இருக்குமா என்று கண்டுபிடிக்க அகிமோவ் முயன்றார். ஆனால் அவர்களின் முகங்களில் ஒரு சிறு அளவு கூட அதிருப்தியோ மனத்தாங்கலோ கண்டுபிடிக்க முடியாதது கண்டு அவர் பெரிதும் மனநிம்மதி அடைந்தார். படை வீரர்கள், உத்திரவை மிகவும் சர்வ சாதாரணமாக இயற்கையானதாக எடுத்துக் கொண்டார்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

2

அகிமோவ் தன்னுடைய படை வீரர்களைத் தங்கவைத்த ஒரே கட்டிடம் முன்பு குளிக்கும் அறைகள் இருந்த கட்டிடம் தான். அங்கு சமையல் வீடு, சாப்பிடும் அறை, கிளப் போன்ற ஒரு அறை, பட்டாலியன் அலுவலகம் ஆகியவை

இருந்தன. அவர் தன்னுடைய வீரர்களை வீடுகளிலிருந்து வெளியே செல்லும்படி கூறிவிட்டு அவற்றைப் பெண்களும், குழந்தைகளும், வயதானவர்களும் தங்குவதற்காக ஒதுக்கிக் கொடுத்தார்.

''இதுதான் நமக்கு ஏற்ற இடம்,'' என்று அகிமோவ், தானும் தன்னுடைய இதர அதிகாரிகளும் வந்து குடியேறியுள்ள பாதுகாப்புக் குழியைச் சுற்றிலும் ஒரு பார்வை பார்த்து ஏளனச் சிரிப்புடன் கூறினார். ''மத்யூகின், எல்லாவற்றையும் ஒழுங்காக வையுங்கள், என்றார். டெரியாபின், அதிகாரிகளுக்கு வறுத்த மீன் கொண்டுவந்து கொடுத்தார். ''இப்பொழுதுதான் பிடித்துத் தயாரித்த புதிய மீன்கள்'' என்று புன்சிரிப்புடன் கூறினார்.

அவர்கள் அதைச் சாப்பிட்டுப் படுத்துத் தூங்க ஆரம்பித்தனர். அமைதி நிலவியது. கப்பல் வீரர்களும் தூங்கிக்கொண்டிருந்தனர். மத்யூகினைத் தவிர இதர எல்லோரும் தூக்கத்தில் ஆழ்ந்தனர். மத்யூகின் வெளியில் சென்று ஒரு சிறிய மேஜை, சில நாற்காலிகள், ஒரு கார்பைட் விளக்கு, ஒரு கைகழுவும் பேசின் ஆகியவற்றைக் கொண்டு வந்தார். மாடிப்படியில் விரிக்கும் கம்பளியின் தீய்ந்து போன ஒரு துண்டை வாசற்படியின் முன்னால் விரித்தார். அந்த பாதுகாப்புக் குழி விரைவில், போர் முன்னணியில் நன்கு பராமரிக்கப்பட்ட ஒரு சாப்பாட்டு அறையாகக் காட்சி அளித்தது. பணியாளர் திருப்தியுடன் புன்முறுவல் பூத்தார். கடைசியாக அவர் படுக்கப்போகும் தருணத்தில், வயதடைந்த நார்வீஜியர் ஒருவருடன் மொழி பெயர்ப்பாளர் வந்தார்.

''ஷ்ஷ்'' என்று மத்யூகின் அவர்களைக் கோபத்துடன் எச்சரித்து ''கமாண்டர் தூங்கிக்கொண்டிருக்கிறார். கடந்த ஒருவார காலமாக அவருக்குத் தூக்கமேயில்லை' என்று கூறினார்.

''அதற்காக என்ன செய்யமுடியும்'' என்று லோகினோவ் மன்னித்துக் கொள்ளும்படி கூறும் தொனியில் கூறினார். ''இப்பொழுது அவரிடம் பேச வேண்டியுள்ளது. உண்மையாகச் சொல்லுகிறேன்'', என்றார்.

அந்த நார்வீஜியர் ஸ்தலப் பாதிரியார் என்று தெரிய வந்தது. குளிக்கும் அறைகள் உள்ள கட்டிடத்தில் மத வழிபாடு நடத்துவதற்கு அனுமதி கேட்பதற்கு அவர் வந்திருந்தார். அந்தக் கிராமத்தில் அது ஒன்றுதான் போதிய அளவு பெரிய கட்டிடமாயிருந்தது.

அகிமோவ் தன் நெற்றியைத் தேய்த்துக்கொண்டே லோகினேவையும், அந்த நார்வீஜியரையும் தூக்கக் கலக்கத்துடன் பார்த்தார். தாம் எங்கிருக்கிறோமென்பதோ, அல்லது தம்மிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறதென்றோ அவருக்குப் புரியவில்லை. கடைசியில் அவருக்கு உணர்வு ஏற்பட்டது. "ஆம், நாம் நார்வேயில் இருக்கிறோம். நீங்கள் மதவழிபாடு நடத்த விரும்புகிறீர்களா?", என்றார்.

இதைக் கேட்டதும் மார்டினேவ் தன் கண்களைத் திறந்தார். குதித்தெழுந்தார். "முடியாது, நாம் இதை அனுமதிக்க முடியாது", என்று கோபத்துடன் கூறினார். "அந்த இடம் பூராவும் படங்களாலும், கோஷங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. கட்சித் தலைவர்கள், சர்க்கார் தலைவர்கள் ஆகியோரின் படங்களைப் பின்னணியாகக் கொண்டு மதச் சடங்குகள் நடத்துவதைக் கற்பனை செய்து கூட பார்க்க முடியுமா?" என்று கேட்டார். அகிமோவ் சிரித்தார். அந்த லூதரன் பாதிரியார் மீது மார்டினேவ் கடுகடுப்பான பார்வையைச் செலுத்தியது வேடிக்கையாக இருந்தது. இதைக் கண்டு குழப்பமடைந்த பாதிரியார் அந்த சுரங்க அறையின் ஒரு மூலையில் போய் நின்று கொண்டார்.

"இதில் சிரிப்பதற்கு ஒன்றுமில்லை" என்று மார்டினேவ் கோபத்துடன் கூறினார். "சிவப்புக் கடற்படையின் கிளப் ஒன்றில்மத வழிபாடுகள் நடத்துவதற்கு நான் அனுமதிக்கவே முடியாது", என்றார்.

அதைப்பற்றிக் கொஞ்சம் வாதப் பிரதிவாதம் நடந்தது. "அவர்கள் மத வழிபாடுகள் நடத்தட்டும். யாரும் பிரார்த்தனை செய்வதைக் கட்சி தடை செய்யவில்லை. ஆனால் ஸ்தல மக்களை மனம் நோகும்படி செய்வதைக் கட்சி தடை செய்கிறது" என்று மத்யூகின் அபிப்பிராயம் கூறினார்.

'மக்களின் குரலே கடவுளின் குரல்'', என்று கூறி அகிமோவ் சிரித்தார்.

ஒரு மணி அவகாசத்திற்குள் நார்வீஜியர்கள் அந்தக் கிளப்பில் வந்து குவிய ஆரம்பித்தார்கள். அவர்கள், கைகளில் பிரார்த்தனைப் புத்தகங்களுடன் வந்து பெஞ்சிகளில் ஒழுங்காக அமர்ந்தனர். போதிய அளவு பெஞ்சிகள் இல்லாததால், பலர் சுற்றிலும் நின்று கொண்டனர். பாதிரியார் நீளமான அங்கியை அணிந்துகொண்டு வந்தார். அவருடைய குறுகலான, தட்ப - வெப்பநிலைமைகளால் பாதிக்கப்பட்ட, செம்படவரைப்போன்ற முகத்தில் பயபக்தியும், ஏதோ சோகமே உருவான தோற்றமும் காணப்பட்டது. வழிபாடு நடத்தும்போது மதப்பாதிரிமார்கள் உலகம் பூராவிலும் இத்தகைய தோற்றத்துடனேயே காணப்படுகின்றனர். வாசிலி பாதிரியார், கொவ்ரோவ்போப் ஆகியவர்களைப்போலத்தான் என்று அகிமோவ், தன்னுடைய இளமையை நினைவு படுத்திக் கொண்டார்.

பிரார்த்தனையைக் கேட்பதற்காக லோகினேவ் அங்கேயே தங்கிக்கொண்டார். கடைசியில், அகிமோவிடம், எந்த அரசியல் பிரசங்கமும் இதைவிட மேலான பலனைத் தந்திருக்க முடியாது என்றார். அந்தப் பாதிரியார் சோவியத் துருப்புக்களுக்கும் சோவியத் ராணுவத் தலைமைக்கும் நன்றி தெரிவித்து, இதர பாதிரிகள் அனைவரும்கூட அவர்களுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும், நார்வே முழுவதும் விடுதலை பெறுவதற்கும், மத பக்தியற்ற ஜெர்மன் ராணுவங்கள் பூரணமாக முறியடிக்கப்பட வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்யும்படிக் கேட்டுக்கொண்டார். அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரும் பிரார்த்தனை கீதம் பாடினர்.

"கடைசியில் அவ்வளவு ஒன்றும் மோசமில்லை'' என்று கருத்துத் தெரிவித்த மார்டினேவ், "ஆனால் அவர் கடவுளை இதில் ஏன் கொண்டுவந்தார் என்பதுதான் புரியவில்லை,'' என்றார்.

வழிபாடு முடிந்ததற்குப் பின்னால், பாதிரியார், பர்கோமாஸ்டர், இதர இரண்டு நார்வீஜியர்கள்—அந்த கிராமத்தில் செல்வாக்கு வாய்ந்தவர்கள் என்று தெரிகிறது—ஆகி

யோர் அகிமோவிடம் வந்து, அங்கு மத வழிபாடு நடத்துவதற்கு அனுமதி தந்ததற்காகவும், ஸ்தல மக்களிடத்தில் கருணையுடன் நடந்துகொண்டதற்காகவும் நன்றி தெரிவித்தனர்.

"ஓல்சென், பள்ளிக்கூட உபாத்தியாயர்; விக்கோலா என்ற இவர் ஒரு பணக்கார விவசாயி. ஒரு மகா அயோக்கியன். ஜெர்மனியர்களுடன் கை கோர்த்துக்கொண்டு வேலை செய்தார். காட், சால்மன் ஆகிய மீன்கள் விற்பனையில் மொத்த வியாபாரி. ஸ்தலத்திலுள்ள எல்லாக் கடைகளுக்கும் சொந்தக்காரர்," என்று மொழிபெயர்ப்பாளர் ருஷ்ய மொழியில் கூறினார்.

அவர் பேசிய தொனி கடுமையாகவும், பலமாகவும் இருந்தது. விக்கோலாவின் முகம் சிவப்பாகவும், அறுவறுக்கத்தக்கதாகவும், மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் இருந்தது. கோழைத்தனம் நிறைந்த அவருடைய பெரிய கண்களில் மட்டுமே அசைவு இருந்தது.

அகிமோவ் எவ்வகையிலும் ஒரு ராஜ தந்திரி அல்ல. அந்த மனிதனுடன் கை குலுக்குவதற்கு மறுத்தார். ஆனால் லேசாகத் தலையை அசைத்து அவர் இருப்பதை உணர்வதாகத் தெரிவித்தார். அந்த வியாபாரியின் கண் இமைகள் பயத்தால் துடித்தன.

"பயமாக இருக்கிறதா? கிழட்டு தொந்தி வயிறனே?" என்று அகிமோவ் கேட்டார். லோகினோவ் சிறிது புன்முறுவல் பூத்து, பின் அவசரமாக, "உனக்கு என்னால் ஆகவேண்டியது என்ன?" என்று மொழி பெயர்த்தார்.

அந்த நார்வீஜியர்கள் ஒவ்வொருவராகப் பேசினர். முதலில் பர்கோ மாஸ்டர், பிறகு பாதிரியார், பின்னர் பள்ளிக்கூட ஆசிரியர், இறுதியாக விக்கோலா. யாரைக் காட்டிலும் அவருக்குத்தான் அதிகம் சொல்லிக் கொள்ள வேண்டியிருந்தது. அவருடைய குரல் அமைதியாக இருந்தது. ஆனால் அவரது கண்கள் வஞ்சகம் நிறைந்த முறையில் அசைந்து கொண்டேயிருந்தன.

"வெற்றிவாகை சூடிய ருஷ்யத் துருப்புகளை மனப்பூர்வமாக வரவேற்பதாக அவர் கூறுகிறார். யுத்தம் முடிவடைந்து

வருவது குறித்து கிர்கினெஸ் மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேன்மை தங்கிய மன்னர் ஹாக்கன் அவர்களுடைய எல்லா உத்திரவுகளையும், லண்டனிலுள்ள நார்வீஜிய சர்க்கார், சோவியத் ராணுவத் தலைமை ஆகியவற்றின் எல்லா உத்திரவுகளையும் கிர்கினெஸ் மக்கள் கடமை உணர்வுடன் நிறைவேற்றுவார்கள் என்றும் அவர் கூறுகிறார். படையெடுப்பாளர்களின் பயங்கர ஆட்சியிலிருந்து விடுதலை செய்யப்பட்டதற்காக மகிழ்ச்சி அடைவதாக மான வெட்கமில்லாமல் கூறுகிறான். அப்பட்டமான அயோக்யன்,'' என்று லோகினோவ் கூறினார்.

மொழிபெயர்ப்பாளர் கூறியதை விக்கோலா புரிந்து கொண்டானா என்று கூறுவது கஷ்டம். ஒரு சமயம் அவன் அகிமோவின் கண்களிலிருந்து, நெசவாளர்களின் மகனும், பேரனுமாகிய அவர் இந்த குலாக் (பணக்கார விவசாயி) இன்...சுரண்டல்காரனின்பால் என்ன அபிப்பிராயங் கொண்டார் என்பதைத் தெரிந்து கொண்டிருப்பான். எப்படியிருந்தபோதிலும் வெளியே செல்லும்போது அவன் மரியாதையுடன் குனிந்து வணங்கிக்கொண்டு சென்றான். சோவியத் அதிகாரிகளின் கண்பார்வை தன் பார்வையில் விழாமல் உஷாராகச் சென்றான்.

அந்த நார்வீஜியர்களை சுரங்க அறையிலிருந்து வெளியே கொண்டுபோய் விட்டுவிட்டு அகிமோவும், லோகினோவும் திரும்பி வந்தனர். கிராமத்தில் பெரிய அளவுக்கு கலகலப்பு ஏற்பட்டிருப்பதை அவர்கள் கவனித்தனர். ஆண்கள், குழந்தைகளுடன் பெண்கள் சைக்கிள்களைத் தள்ளிக்கொண்டும், சாமான் பைகளை முதுகில் தொங்கப் போட்டுக்கொண்டும், காடுகளில் அவர்கள் ஒளிந்துகொண்டிருந்த இடங்களிலிருந்தும், அல்லது மலைப்பகுதிகளில் உள்ள குழிகளிலிருந்தும் திரும்பி வந்துகொண்டிருந்தனர். பெரியவர்களைவிடவும் நல்ல உடைகளை அணிந்துகொண்டும், கம்பளி நூலால் பின்னப்பட்ட, குஞ்சங்களுடன் கூடிய தொப்பிகளை அணிந்துகொண்டும் வந்த சின்னஞ்சிறுமிகளைப் பார்த்ததும் அகிமோவ் புன்முறுவல் பூத்தார். தங்களுடைய தகப்பனாருடைய அல்லது தாயாருடைய கைகளைப் பிடித்துக்கொண்டும், அல்லது சைக்

இன்களின் 'சீட்'டுகளைப் பிடித்துக்கொண்டும் வந்த சிறுமிகள், தங்கள் பெற்ருேர்களுடன் சரிசமமாகச் செல்வதற்கு அனேகமாக ஓட வேண்டியிருந்தது. அவர்களின் பார்வை மறையும் வரையிலும் ருஷ்யர்களை அவர்கள் உற்றுப் பார்த்தவண்ணம் சென்றனர்.

வடக்கில் வெகு தூரத்தில் குவியல் குவியலாக நிலக்கரி எரிந்து கொண்டிருப்பதினின்றும் வந்த நீல நிற தீ ஜுவாலையின் வெளிச்சத்தைக் கண்ட அகிமோவ் லோகினேவ் பக்கம் திரும்பி, "அந்த நிலக்கரியை அவர்கள் ஏன் அணைக்காமல் விட்டு வைத்திருக்கிருர்கள்? தங்களுடைய வீடுகளை வெப்பமாக்கிக் கொள்வதற்கு ஒன்றுமில்லாமல் இருக்கும்போது வீணில் எரிந்து நிலக்கரி சாம்பலாவதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது," என்ருர்.

லோகினேவ் பர்கோமாஸ்டரிடம் சில வார்த்தைகள் கூறினர்.

பர்கோமாஸ்டர் ஒரு நிமிஷம் சிந்தனையுடன் கூடிய மௌனத்திற்குப்பின் நார்வீஜிய மொழியில் ஏதோ கூறினர். "அது எங்களுடையதல்ல" என்று அகிமோவ் மொழி பெயர்த்துக்கூறினர். பின்னர் அவர் மெல்லிய குரலில் வாய் நிறைய சிரித்துவிட்டு, அந்த நிலக்கரி, தொழிற் சாலைக்குச் சொந்தமானது என்றும், நகர ஸ்தல ஸ்தாபனத்திற்குச் சேர்ந்ததல்லவென்றும் விளக்கிக் கூறினர்." அதை அவர்களிடம் மீட்டுச் சேர்ப்பதற்கு நாம் நம்முடைய துருப்புகளைப் பயன்படுத்த வேண்டும்" என்று கூறி முடித்தார்.

நார்வீஜியர்கள் அங்கிருந்து கிளம்பினர்கள். லோகினேவும் புறப்படுவதற்குத் தயாரானர். அப்பொழுது ஒரு வயதுமுதிர்ந்தவர், நேராக அகிமோவின் சுரங்க அறைக்குள் வந்தார். பட்டாலியன் கமாண்டரைப் பார்த்ததும் அவர் சிறிது தூரத்திலேயே நின்று, அவரை வெறிக்க வெறிக்கப் பார்த்தார். ஏதோஒன்றைப்பற்றி அவருக்குபூர்ண நம்பிக்கை ஏற்பட்டு விட்டது போல் தோன்றியது. அது அவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது- அருகில் வந்தார். தன்னுடைய தொப்பியைக் கழற்றினர். அவருடைய நரைமுடி அவருடைய உயரமான நெற்றியின் மீது படிந்திருப்பது

தெரிந்தது. அவர் திட்டமிட்ட முறையில் ஒரே மாதிரியான ஆனால் சோக மயமான குரலில் பேசினார். அவருடைய ஸ்திர மான, பளபளக்கும் கண்களின் பார்வை அகிமோவுக்கும், லோகினோவிற்கும் இடையில் ஒரு இடத்தில் பதிந்திருந்தது.

அந்த வயதான செம்படவர் பேச ஆரம்பித்ததும் மொழிபெயர்ப்பாளரின் முகம் சிவந்தது.

"அவருடைய மோட்டார் படகை நம்முடைய ஆட்கள் திருடிவிட்டார்களாம்", என்று அவர் மொழிபெயர்த்தார்.

"அவர் ஒரு செம்படவர். அவருடைய பெயர் காரே பெடர்சென். அந்த மோட்டார் படகை ஜெர்மானியர் களுக்குத் தெரியாமல் அவர் சாமர்த்தியமாக ஒளித்து வைத் திருந்தாரென்றும், ஆனால் ரஷ்யர்கள் அவரைவிட சாமர்த் தியசாலிகளா யிருக்கிறார்களென்றும், அவர்கள் அதைக் கண்டுபிடித்து விட்டார்களென்றும் அவர் கூறுகிறார். மிக வும் கண்ணியக் குறைவான செய்கை. உண்மையில் அவ மானகரமானது," என்றார்.

அகிமோவ் கோபத்தால் கொதித்தெழுந்தார். கண்ணி யக் குறைவு என்றும், அவமானகரமானது என்றும் அவ் வளவு சீக்கிரத்தில் கூறிவிட வேண்டாம். ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாதா? நாடு நகரங்களெல்லாம் எரிந்து கொண்டிருக்கிறதே? ஒரு படகு காணாமல் போய்விட்டதினால் ஒரு பெண்ணைப்போல் முகம் சிவந்து தலை குனிவதின் பொருள் என்ன? ஏதோ பயங்கர மான ஒன்று ஏற்பட்டுவிட்டதாகவோ, இத்துடன் உலகமே முடிந்துவிடுகிறதென்றும் அல்லது மனித சமூகத்தின் முன் னால் நம்மை நாமே இழிவுக்குள்ளாக்கிக் கொண்டோமென் றும் நினைக்கிறீர்களா" என்று அகிமோவ் கேட்டார். ஆனால் மௌனமாகவும், அசைவற்றும், கையில் தொப்பியுடனும் அந்த முதியவர் நின்று கொண்டிருந்த காட்சி, மீதி வார்த்தைகளை அவருடைய வாயிலிருந்து வெளிவராமல் அப்படியே உறையவைத்துவிட்டது. "அதை நாம் கவனிப் போம். என்று அவரிடம் கூறுங்கள்," என்று கடுகடுப்பான தொனியில் கூறினார்.

லோகினேவும், வயதான பெடெர்செனும் அங்கிருந்து வெளியே சென்றதற்குப் பின்னல், அகிமோவ் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து புகைத்துத் தள்ளினர். பின்னர் படை வீரர்கள் தங்கியுள்ள பாதுகாப்புக் குழிகளுக்குச் சென்ருர்.

ஆட்கள் இன்னும் தூங்கிக்கொண்டிருந்தனர். யாருக்கும் உபயோகப்படாத ஒரு பழைய படகுக்காக அவர்களை இப்பொழுது ஏன் எழுப்பவேண்டும்? என்று நினைத்த வண்ணம் ஒரு நிமிஷம் அங்கேயே நின்ருர். தன்னுடைய பூட்சுகளுடனும், பெரிய கோட்டுடனும் தூங்கிக்கொண்டிருந்த எகோரோவை ஓரக்கண்ணுல் பார்த்தார். பின்னர் போவதற்காகத் திரும்பினர். ஆனல் திடீரென்று நின்று, காவலிலிருந்த வீரனிடம், "அவர்களை எல்லாம் எழுப்பு", என்ருர்.

தூங்கிக்கொண்டிருந்த ஆட்கள் அனைவரும் எழுந்து வரிசையாக நின்ற பின்னர், "படகை எடுத்தவர்கள் யார்?" என்று அகிமோவ் கேட்டார்.

சுமார் ஒரு நிமிட நேரம் எதுவும் பேசவில்லை. கடைசியில் பிரதம சிறு (Petty) அதிகாரி ஒரு அடி முன் வந்து "எந்தப் படகைப் பற்றிக் கேட்கிறீர்கள், காம்ரேட் கமாண்டர்? நான் ஒரு படகை எடுத்தேன்", என்று அமைதியாகக் கூறினர்.

அகிமோவ் தன்னுடைய காதுகளையே நம்ப முடியவில்லை. "எதற்காக எடுத்தீர்கள்? என்று கேட்டார்.

சிறிது நேரம் என்ன பதில் சொல்வதென்றே தெரியாமல் திகைத்து நின்றுவிட்டு, "மீன் பிடிக்கச் செல்வதற்காக" என்று துல்யாகோவ் பதிலளித்தார்.

"மீன் பிடிக்கவா? எதற்காக?"

"உங்களுக்காக, காம்ரேட் கமாண்டர், என்று துல்யாகோவ் தணிந்த குரலில் கூறினர்.

"எனக்காகவா?" அகிமோவின் முகம் வெளுத்தது.

"ஆகவே மீன் இல்லாமல் நான் உயிர்வாழ முடியாதென்று நீங்கள் நினைக்கிறீர்களா? ஹே? எனக்காக வருந்துகிறீர்களே, அப்படியா?" எனவே, என்னைத் திருப்திப்படுத்து

வதற்காக, நீங்கள் போய், உங்களையும், என்னையும் எல்லோர் முன்னிலையிலும் அவமானத்திற்குள்ளாக்கி விட்டீர்கள்? படகு எங்கே?

"எங்கிருந்து கிடைத்ததோ அங்கேயே வைத்து விட்டேன்?"

"சரி, நீங்கள் போகலாம்", என்று கூறி அகிமோவ் அனைவரையும் கலைந்து போகும்படி கூறினார்.

மனநிம்மதியுடன் அவர்கள் அனைவரும் பாதுகாப்புக் குழிகளுக்குக் கலைந்து சென்றனர். துல்யாகோவ் மட்டும் தனியாக பட்டாலியன் கமாண்டருடன் நின்றார்.

"அந்த இடத்தைக் காட்டுங்கள்" என்று அகிமோவ் உத்திரவிட்டார்.

துல்யாகோவ் முன்னால் சென்றார். நீண்ட தூரம் நடந்த பின்னர் அவர்கள் வலது பக்கத்தில் பாறைகளுக்கிடையில் ஒரு சிறு குறுகலான கடற் பகுதிக்கு வந்து சேர்ந்தனர். எத்தகைய தயக்கமுமின்றி அவர் கரையோரமாக நடந்து சென்றார். ஒரு கணம் சிந்திப்பதற்காக நின்று விட்டு, தண்ணீரின் ஓரத்திற்கே சென்றார். அங்கு இரண்டு பாறைகளுக்கிடையில் ஒரு சந்தில் அந்தப் படகு கிடந்தது.

"இதை எங்கிருந்து எடுத்தீர்கள்? இங்கே தானா?" என்று அகிமோவ் கேட்டார்.

"ஆமாம். இங்கிருந்துதான் என்று நான் நினைக்கிறேன்."

அகிமோவ் சுற்றிலும் பார்த்தார். அந்த இடத்திலிருந்து சுமார் 300 அடிகளுக்கு அப்பால், செம்படவனின் வீடுபோன்று ஏதோ ஒன்று கறுப்பாகத் தென்படுவதை அவரால் பார்க்க முடிந்தது. அவர் அருகில் சென்றார். அங்கு வேலியின்மீது வலைகள் காய்ந்து கொண்டிருந்ததைக் கண்டார். அந்த வேலியைத் தாண்டிக் குதித்து, அங்கிருந்த கதவைத் தட்டினார். உடனே அது திறக்கப்பட்டது. ஒரு பெண்ணின் குரல்—நார்வீஜிய மொழியில் ஏதோ கேட்டது.

"பெடெர் சென்?" என்று அகிமோவ் கேட்டார்.

"ஜா" என்று அந்தப்பெண் பதிலளித்தாள். ஜெர்மன் மொழியில் அந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று அகிமோவ் புரிந்து கொண்டார்.

"காரே பெடெர்சென்?" என்று அவர் மீண்டும் வற்புறுத்தினர்.

அந்தப்பெண் நார்வீஜிய மொழியில் பாட்டுப் பாடுவது போன்ற தொனியில் பதில் கூறினுள். தென் ரஷ்யாவில் பேசும் பாணிக்கு அது ஒத்திருந்தது கேட்டு அகிமோவ் வியப்படைந்தார்.

'கேம்லி மேன்' என்று அந்தப் பெண் கூறியது யார் என்று புரியாமல் அகிமோவ் "யார் அவர்? மொழி பெயர்ப் பாளரை வரவழைக்க வேண்டியது தான்", என்ருர்.

"அதற்கு அர்த்தம் நார்வீஜிய மொழியில் 'வயதான மனிதர்' என்பதாகும், என்று துல்யாகோவ் சிரிப்பை அடக்கிக்கொண்டு பதில் கூறினுர்.

"அப்படியானுல் உங்களுக்கு நார்வீஜிய மொழி தெரியுமா?', என்று அகிமோவ் கோபமும் ஏளனமும் கலந்த முறையில் கேட்டார். "நீங்கள் மிகவும் சாமர்த்தியசாலி தான், இல்லையா? ஆனுல் அந்த 'கேம்லி மேனி'ன் படகை எடுக்காமல் இருந்திருந்தால் நீங்கள் இன்னும் அதிக சாமர்த்தியசாலியாக இருந்திருப்பீர்கள்!" என்ருர் அகிமோவ்.

அவர் அந்தப் பெண்ணிடம் தன்னுடன் வரும்படி கெஞ்சிக் கேட்டுக்கொண்டு, அவளை, அந்தப் படகு கிடக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்ருர். ஆரம்பத்தில் அவள் பயப்படுவது போல் தோன்றியது. ஆனுல் அந்தப் படகைப் பார்த்தவுடனேயே அவள் மகிழ்ச்சி பொங்கக் குரலெழுப்பி னுள்.

அகிமோவ் துல்யாகோவ் பக்கம் திரும்பி, "அடுத்த தடவை நீங்கள் எதையாவது கைமாற்முக வாங்கவேண்டு மென்ருல் அதன் உரிமையாளரிடம் முதலில் கேளுங்கள். பின்னர் அவரிடம் நேரில் அந்தப் பொருளைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். தெளிவாகப் புரிந்ததா! என்று அறிவுறுத்தினர்.

"ஆமாம்."

"நிச்சயம் அவ்வாறு தான் செய்ய வேண்டும்."

படை வீரர்கள் தங்கியிருக்கும் பிரதேசத்திற்கு இருவரும் திரும்பப் புறப்பட்டனர். நீண்ட நேரம் அகிமோவ் ஒன்றும் கூறவில்லை. பின்னர் துல்யாகோவ் பக்கம் திரும்பி அவர் "சர்வதேச சிக்கலில் நீங்கள் நம்மை மாட்டிவிடப் போகிறீர்கள். பின்னர் மாலடோவ் இது பற்றி விளக்கம் எழுதி சமாதானம் கூறியாக வேண்டும். யாருடைய தவறின் காரணமாக? எல்லாம் பிரதம 'பெட்டி ஆபீசர்' இல்யா துல்யாகோவின் தவறின் காரணமாகத்தான். துல்யாகோவ்-1920-ல் பிறந்தவர்—இளங் கம்யூனிஸ்ட் சங்கத்தின் உறுப்பினர்; தவருன நடத்தை; இனி உங்களுக்கு இங்கு இடமில்லை", என்ருர்.

அகிமோவ் மனப்பூர்வமாக துல்யாகோவைக் கோபித்துக்கொள்ளவில்லை. தன் மனச் சாட்சிபூர்வமாக அவர், துல்யாகோவின் மீது குற்றங்காண முடியாது. அவர் படகை எடுத்து உபயோகப்படுத்தியது வாஸ்தவமே. ஆனுல் எதார்த்தமாகப் பார்த்தால், அவர் அந்தப் படகை எங்கிருந்து எடுத்தாரோ, அங்கேயே திரும்பக் கொண்டுபோய் வைத்து விட்டார். அவர் அதை அந்தக் கிழவனின் குடிசைக்குள் கொண்டுபோய் விட முடியாது. எனவே அருகில் உள்ள தண்ணீரில் விட்டுவிட்டு வந்தார்.

இந்த மர்மம் சிறிது நேரம் கழித்து தெளிவாகி விட்டது. அகிமோவ், தன்னுடைய அதிகாரிகளுடன் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அப்பொழுது லெட்டியாகின் வந்தார். அவரும் அவர்களுடன் சேர்ந்து உணவு கொள்ளும் படி அழைக்கப்பட்டார். அப்பொழுது கிழவர் பெடெர்சென் அவசர அவசரமாக சுரங்க அறைக்குள் வந்தார்.

அவர் மிகவும் பெருமிதத்துடன், மகிழ்ச்சி பொங்க வந்தார். முன்பு சோக மயமாக அசைவற்றும் கடுகடுப்புடனும் காணப்பட்ட அவருடைய கண்கள் தற்பொழுது பிரகாசமாகவும், சந்தோஷம் தாண்டவமாட ஒளிவீசும் முறையிலும் காணப்பட்டன. அகிமோவின்பாலும், இதர அதிகாரிகளின் பாலும் அவருடைய மனுேபாவம் மிகவும் அடக்கமற்ற தன்மையிலும், தன் பிள்ளைகளிடம் ஒரு தந்தை காட்டும் போக்குடனும் இருந்தது. மற்ருெரு நாட்டின்

ராணுவ உடையை அவர்கள் அணிந்திருந்த போதிலும் அவர்களை சாதாரண இளைஞர்களைப் போலவே, தன்னு டைய நண்பர்களைப் போலவே அவர் பாவித்தார். இப்படிப் பட்ட எதிர்பாராத ஆழமான—ஆனல் அடக்கமான நன்றி உணர்வு காட்டப்பட்டது கண்டு, அகிமோவ் மிகவும் புள காங்கிதமடைந்தார்; உணர்ச்சி வசப்பட்டார்.

அந்தப் படகைப் பற்றிக் கேட்கும்படி அவர் லெட்டி யாகினிடம் கூற, அவர் அதை கேட்கப் பின் வரும் தகவல் கிடைத்தது. பாறைகள் நிறைந்த சந்துகளைக் கொண்ட கடற்கரை ஓரமுள்ள நிலப்பகுதி சிறுசிறு பிரிவுகளாகப் பிரிக் கப்பட்டு, அவை வெவ்வேறு ஆட்களுக்குச் சொந்தமான தாக இருக்கின்றன. துல்யாகோவ், மேலே குறிப்பிட்ட முதியவரான செம்படவரின் சிறு நிலப் பகுதியிலிருந்து எடுத்த படகை, திரும்பக் கொண்டுபோய் சேர்க்கும் போது வேருெருவருக்குச் சேர்ந்த நிலப்பகுதியின் அருகில் விட்டு வந்து விட்டார். பெடெர்சென், மற்ருெருவருடைய நிலத்தில் போய்த் தன் படகைத் தேடுவதற்குத் தனக்கு எத்தகைய உரிமையுமில்லை என்று மிகவும் உணர்ச்சியுடன் விளக்கினர். மற்றும் அந்த நிலங்களின் சொந்தக்காரர்கள் ஒவ்வொருவரும், வேற்று மனிதரைத் தனக்குப் பாத்யமான பிரதேசத்திற்குள் வருவதற்கு அனுமதிக்கமாட்டார்கள்.

''ஆமாம், இங்கே இந்த முறைதான் இருந்து வருகிறது'' என்ருர் லெட்டியாகின்.

வாஸ்தவத்தில் அங்கு நிலம், தீவுகளிலும் கூட சிறு சிறு உடைமைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை பலவற் றிலும் ''உள்ளே வரக்கூடாது' என்ற அறிவிப்புப் பலகை யும் இருந்தது. ஒவ்வொரு நிலவுடைமையாளருக்கும் அவருடைய கேவலம், சிறிய துண்டு நிலத்திற்குச் செல்லும் தனிப்பட்ட, அவருக்கே சொந்தமான நடைபாதையும் இருந்தது. அங்குதான் அவர் வசித்து வந்தார். சுற்றிலும் குட்டையான பர்ச் மரங்கள், முட்டைக் கோஸ் செடிகள், சிறிய நீளமான புல்வெளி நிலம், ஆகியவையும் இருந்தன. அவைகளைச் சுற்றிலும், மனித சஞ்சாரமற்ற, பயிர் பச்சை யற்ற பீடபூமிப் பிரதேசம் இருந்தது. அப்பிரதேசங்களில்

கோடை காலம் முழுவதும், லாப் மக்களின் பனிப்பிரதேச மான்கள் மேய்ந்து கொண்டிருக்கும்.

அந்த வயதான செம்படவரைத் தங்களுடன் விருந்துக்கு வருமாறு அதிகாரிகள் அழைத்தனர். கருப்பு நிற ரை தான்ய மாவினுல் செய்யப்பட்ட ரொட்டி உட்பட எல்லாவற்றையும், அந்த செம்படவர் நன்கு ரசித்து சாப்பிட்டார். அந்த ரொட்டி வெண்ணெயினுல் பொறிக்கப்பட்டதென்று நார் வீஜியர்கள் பேசிக் கொண்டனர். அதைக் கேட்டு 'ஓ, அப் படியா? ஜனங்கள் என்னவெல்லாமோ கற்பனை செய்து கொள்கின்றனர்!'' என்று அகிமோவ் ஆச்சரியத்துடன் கூறினுர்.

அவருடைய வார்த்தைகளை ஊர்ஜிதம் செய்யக்கூடிய முறையில்அந்தமுதியவர், மிகவும் ஜாக்ரதையாக, ரஷ்யர்கள் நார்வீஜியர்களின் நன்மைக்காக எப்பொழுதும் அங்கேயே தங்கியிருக்கப் போகிறுர்களென்பதும், அவர்கள் நார்வே பூராவையும் தங்கள் வசப்படுத்தி, எல்லா படகுகளையும், நிலம், காடுகள், கால்நடைகள், பெண்கள் எல்லாம் பறி முதல் செய்யப்போகிறுர்களென்பதும் உண்மையா, என்று கேட்டார். ''பெண்களில் இளம் வயதுடையவர்களை மட்டும் தான் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்று நான் நினைக்கிறேன்?" என்று தன்னுடைய வெளுத்த நீல நிறக் கண்களை வஞ்சகமாக மூடித் திறந்து கூறினுர்.

அந்த வயதான மனிதனுடன் நீண்ட நேரமும், கோப மாகவும் பேசியதின் பின், லெட்டியாகின், மனந்தளர்ந்த நிலையில் ''அவைகளெல்லாம் குவிஸ்லிங் சரடுகள்" என்றுர்.

''விக்கோலாவும் அவரைப் போன்றவர்களும், இவ்வாறு தான் சொல்லிக்கொண்டு இருக்கிறுர்கள்.'' அவர் மார்டினே வைப்பார்த்தார். மார்டினேவ் மிகவும் உணர்ச்சி வயப்பட்டி ருந்தார்.'' அது நம்முடைய வேலையல்ல, காம்ரேட், லெப்டி னென்ட் கமாண்டர், அது நார்வீஜிய சர்க்கார் செய்ய வேண்டிய வேலை, மாஸ்கோவிலிருந்து நமக்கு வந்துள்ள தாக்கீதுகள் அவ்வாறு கூறுகின்றன;'' என்றுர் அவர்.

அந்த முதியவர் தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெளியேறினுர். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் லெட்டியா

யாகினும் எழுந்தார். அவருடைய உளவு வேலை ஆட்களும் அவரை தேடி வந்தனர்.

"நீண்ட தூரம் செல்லுகிறீர்களா ?" என்று அகிமோவ் கேட்டார்.

"ஓரிரு தினங்களில் வந்து விடுவேன்."

"அப்படியானல் நேராக எங்களிடமே வாருங்கள் என்ன ?"

"சரிதான் நன்றி. நல்ல இளைஞர்களை இங்கு நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்."

அகிமோவ் அவரை வழி அனுப்பினர்.

"போய் வருகிறேன், அகிமோவ்," என்று லெட்டியா கின் கூறினர். உளவு பார்ப்பவர்கள் வெளியில் இருட்டான ஒரு இடத்தில் அவருக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

"வெற்றி ஏற்படட்டும்"!

லெட்டியாகின், போய்க்கொண்டிருந்தவர், திடீரென்று பின்னல் திரும்பி, "படேய்கினை ஞாபகம் வைத்துக்கொள் ளுங்கள். வைத்துக்கொள்வீர்களா ?" என்று அகிமோவிடம் கேட்டார்.

"ஆமாம்."

"நீங்கள் அவருடைய கப்பலில் இருந்தீர்கள் என்பது என்பது எனக்குத் தெரியும். தாக்குதல் படை ஒன்றைக் கரையில் இறக்கும் தருணத்தில் அவருடைய சப்மரைன் எதிர்ப்புக் கப்பல் கடலில் மூழ்கடிக்கப்பட்டது. அவர் பலமா கக் காயமடைந்தார்."

"அவ்வாறு அவர் காயமடைந்தாரா ?" என்று அகிமோவ் கேட்டார்.

உளவுப்படை அதிகாரியும், அவரது ஆட்களும் சாலையின் ஒரு திருப்பத்தில் சென்று மறைந்தனர்.

திடீரென்று அகிமோவ், சமாளிக்க முடியாத ஒரு விதக் களைப்பு-உடல் நலிவு அடைவதைப்போல்-தனக்கு ஏற்படு வதை உணர்ந்தார். வெகு விரைவில் படுத்துத் தூங்க வேண்டுமென்று விரும்பினர். ஒரு மணி நேரம் மட்டுமல்ல; நீண்ட காலத்திற்குத் தூங்க விரும்பினர். தூங்கி எழுந்தால் பல விஷயங்களை மறந்து போயிருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்

டிருக்க வேண்டும்.. அதில் ஒன்று இன்னும் அவருடைய காதுகளில் கேட்டுக்கொண்டிருந்த இடைவிடாத இரைச்சல். அவர் வீடுகளைக் கடந்துசென்றபோது, நார்வீஜியர்கள் ஏற்கனவே வந்து குடியமர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். மக்கள் ஒளித்து வைத்திருந்த அல்லது புதைத்து வைத்திருந்த தங்கள் சாமான்களையும், சொத்துக்களையும் திரும்பிக் கொண்டு வந்து கொண்டிருந்ததால் வீடுகளின் கதவுகள் மூடுவதும், திறப்பதுமாக இருந்தன.

"நல்லது, அதுதான் நன்றாயிருக்கிறது?" என்று அகிமோவ் முணுமுணுத்தார்.

பட்டாலியன் ட்யூடி அதிகாரியாயிருந்த லெப்டினென்ட் வெண்ட்சோவ் தன்னை அழைப்பதை அவர் கேட்டார்.

"கம்பியில்லாத் தந்திச் செய்தி!"

"விளக்கு இருக்கிறதா?"

லெப்டினென்ட் தன்னுடைய டார்ச் விளக்கைப் போட்டார்.

அகிமோவ் செய்தியை வாசித்தார். "அதுதான் அது" என்று கூறிக்கொண்டே சுரங்க அறைக்குள் காலடி எடுத்து வைத்தார். லெப்டினென்ட் கோஸ்லோவ்ஸ்கி தூங்கிக்கொண்டிருந்தார். தன்னுடைய கைதார் வாத்தியத்தைக் கையில் வைத்துக் கொண்டிருந்த நிலையிலேயே உறங்கிக் கொண்டிருந்தார். மத்யூகின் ஒரு மூலையில் அரைத் தூக்கத்தில் இருந்தார். பட்டாலியன் கமாண்டர் உள்ளே வருவதைக் கேட்டதும், அவர் குதித்தெழுந்தார். திருப்தியுடன் புன்முறுவல் பூத்தார். சுரங்க அறையை அழகு படுத்துவதற்கு என்னென்ன பொருள்களை சேகரித்திருக்கிறார் என்பதை சைகை மூலம் காண்பித்தார். "காம்ரேட் கமாண்டர் அவர்களே, நான் செய்திருப்பது உங்களுடைய மேபொரோடா செய்வது போல் அவ்வளவு நன்றாக இருக்கிறதா?" என்று கேட்டார்.

"அதுபோல் நன்றாக இருக்கிறது என்றுதான் நான் நினைக்கிறேன்" என்று அந்த ஏற்பாடுகளையெல்லாம் பார்க்காமலே கூட அகிமோவ் பதிலளித்தார். அவர் தன்னுடைய 'மேப்'பை எடுத்து வைத்துக்கொண்டு, வயர்லெஸ் செய்தியில் வரையறுக்கப்பட்ட போக்குவரத்து மார்க்கத்தை

ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். துந்தரப் பிரதேசத்தின் வழியாக டானெல்வ் என்ற இடத்திற்குப் போவதற்கு அந்த மார்க்கம் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தப் பாதையின் ஓரமாக ஒரு நீளமான நதி சென்று தாணு பியோர்டில் போய் விழுந்தது. அந்த சாலையில் ஒரு நகரமோ, கிராமமோ கிடையாது.

மத்யூகின் பட்டாலியன் கமாண்டரைக் கூர்ந்து நோக்கினார். பெருமூச்சு விட்டார். போர்வைகளை சுருட்டிக் கொண்டு எழுந்து, தன் சாமான்களையெல்லாம் திரட்டி சேர்க்க ஆரம்பித்தார்.

"மார்டினோவ் எங்கே?" என்று அகிமோவ் கேட்டார்.

மார்டினோவ், துருப்புகள் இருக்குமிடங்களுக்கு-அவர்கள் தூங்கிவிட்டார்களா, என்று பார்ப்பதற்குச் சென்றுள்ளார். என்று கூறப்பட்டது.

"தூங்குகிறார்களா!" என்று கோபமாகக் கேட்டார், "அவர்கள் போதிய அளவு தூங்கிவிட்டார்கள்."

அகிமோவ் திரும்பிப் பார்க்காமலே, கதவருகில் நின்று கொண்டிருந்த வென்ட்சோவிடம் துருப்புகள் தயாராகும்படி உத்திரவிடும்படி தாக்கீது விடுத்தார்.

அகிமோவ் அசைவற்று நின்றார். தூரத்தில் வென்ட்சோவின் காலடி ஓசை தணிந்து காதில் விழாமல் போகும் வரை கேட்டுக் கொண்டிருந்தார். கோஸ்லோவ்ஸ்கி கவலையில்லாமல் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். அவரைத் தட்டி எழுப்புவதை வெறுத்தார். மேலும் 5 நிமிஷங்களுக்கு அமைதி நிலவியது. பின்னர் சுற்றுப்புறமெங்கும் இரைச்சலும், பலமாகக் காலடி எடுத்து வைத்து நடப்பதும் ஆயுதங்கள் உரசுவதும் ஒலித்து எதிரொலித்தன. அகிமோவ் தான் இருந்த இடத்திலேயே மேலும் ஐந்து நிமிஷங்கள் இருந்தார். கடைசியாக, "அணிவகுத்து நில்லுங்கள்!" (Fall in) என்று பலத்த குரலில் உத்தரவிடும் சத்தத்தையும் கேட்டார். மார்டினோவ், எப்பொழுதும்போல் நிமிர்ந்த தலையுடனும், சுத்தமாகவும், ஒழுங்காகவும் வந்து நின்றார். ஒரு வார்த்தையும் பேசாமல், அவர் மேஜைவரையிலும் சென்று, செய்தியை வாசித்துவிட்டு உட்கார்ந்தார்.

கோஸ்லோவ்ஸ்கி உள்ளே வந்தார். தூக்கத்திலிருந்து அவரைத் தட்டி எழுப்பியிருந்தார்கள். அவர் அவசரமாகத் தன் கைடார் வாத்யத்தைப் பெட்டியில் வைத்து பந்தோபஸ்து செய்துவிட்டு, குளிரில் நடுங்கிக் கொண்டே வந்து நின்றார்.

அகிமோவ் சிறிது நேரம் கவனமாகக் கேட்டுவிட்டுப் பின்னர் வெளியே சென்றார்.

"அட்டென்ஷன்" என்று வென்ட்சோவ் உத்திரவிட்டார். பின்னர் அவர், தன்னுடைய இளமையான, கணீரென்ற குரலில், அந்த இருளில் பலமாகவும், கச்சிதமாகவும் 'உத்திரவின்படி பட்டாலியன் அணிவகுத்து நிறுத்தப்பட்டுள்ளது' என்றார்.

பட்டாலியன் கமாண்டர் அணிவகுப்பைப் பார்வையிட்டார். தன்னுடைய படை வீரர்களின் நன்கு பழக்கமான கண்கள் அவரை அமைதியாகவும், நம்பிக்கையுடனும் பார்த்தன. அவர்களைப் பார்வையிட்டது அகிமோவையே உற்சாகப்படுத்தியது, அவருக்கே துணிவையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.

3

நீல நிறமான சந்தி வெளிச்சம் எல்லாப் பக்கங்களிலிருந்தும் பட்டாலியனைச் சூழ்ந்தது. மங்கலான வட பிராந்திய வெளிச்சம் தலைக்குமேல் அமைதியாகக் காணப்பட்டது. பாறைகளின் இடையில் பறவைகள் கிரீச்சிட்டன.

படை வீரர்களின் முகத்தில் வீசியடித்த குளிர் காற்று அவர்களின் தூக்கக் கலக்கத்தைக் கலைத்தது. காதில் சுர்ரென்று பாயும் பறவைகளின் கூப்பாடு, பழக்கமில்லாத சுற்றுப்புற நிலைமை, ஆகியவையெல்லாம் கடற்படை வீரர்களிடம் ஒரு விநோதமான பீதி உணர்ச்சியை ஏற்படுத்தியது. அதுபோன்ற நேரங்களில் பட்டாலியன் கமாண்டரின் பெரிய உருவம் ஆடி அசைந்து கொண்டு தங்களுக்கு முன்னால் செல்வதும், அவருடைய பரந்த, பாதி ஏளனம் செய்யக்கூடிய முறையிலும், பாதி உற்சாகமூட்டும் அமைதியான தோற்றமும் கொண்ட முகத்தை அவர்கள் பார்க்கும் வகையிலும்

அவர் அடிக்கடி பின்னல் திரும்பிப் பார்ப்பதும் படை வீரர் களுக்கு உத்வேகமளிப்பவையாயிருந்தன. சில சமயங்களில் அவர் பேசுவார். அப்பொழுது அவருக்கு அருகிலிருந்த வீராகள் புன்முறுவல் பூத்தனர். அவர் என்ன சொன்னர் என்பதைக் கேட்க முடியாவிட்டாலும்கூட பின்னலிருந்தவர் களும் புன்முறுவல் பூத்தனர்.

"அதுதான் தேவைப்படுவது" என்று எகோரோவ் ஆமோதிக்கும் வகையில் முணுமுணுத்தார்.

வயர்லெஸ் செய்தி வந்தது. அதில், அந்த பட்டாலியன் தற்காலிகமாக ஒரு ரைபிள் டிவிஷனின் கமாண்டரின் உத் திரவுகளின்படி நடக்க வேண்டுமென்று கூறப்பட்டது. அந்த ரைபிள் டிவிஷனின் பிரதிநிதிகள், கிர்கினெஸுக்குத் தெற்கே, இன்னும் சிதைவுபடாமல் எஞ்சி நின்ற வீடுகளின் அருகில், இரண்டு பாதைகள் ஒன்றையொன்று வெட்டுமிடத் தில், இவர்களை வந்து சந்திப்பதாக இருந்தது. ஆனல் கடற் படை வீரர்கள் அங்கு வந்ததும், அங்கு யாரையும் காண வில்லை. அகிமோவ் காவலுக்கு சில வீரர்களை வைத்துவிட்டு மற்றவர்களை அந்த வீடுகளில் தங்கி காத்திருக்கும்படி கேட்டுக் கொண்டார். பின்னர் அவர், இரண்டு ஆட்களை அனுப்பி மினேவிச்சின் கம்பெனியை அழைத்து வரும்படி உத்திரவிட்டார். அதே சமயத்தில் அவரும், மார்டினேவும், மத்யூகினும் முதல் வீட்டின் கதவைத் தட்டினர். அந்த வீட்டினருகில் நார்வீஜியக் கொடி பறந்து கொண்டிருந்தது.

அந்தச் சிறிய வீடு நிறைய நார்வீஜிய ஆண்களும், பெண் களும், குழந்தைகளும் இருந்தனர். சிலர் மெத்தைகளின் மீது படுத்திருந்தனர். சிலர் நாற்காலிகளில் உட்கார்ந்திருந் தனர். சிலர் சுவர்களின் ஓரத்தில் வெறும் தரையின்மீது உட்கார்ந்திருந்தனர். அது பிரயாணிகள் கும்பலாகத் தங்கி யிருக்கும் ஒரு சத்திரம்போல் காணப்பட்டதே தவிர, ஒரு வீடுபோல் காணப்படவில்லை. அகிமோவ் உள்ளே நுழைந் ததும், எல்லாப் பக்கங்களிலுள்ள குழந்தைகளும் அவரையே உற்றுப் பார்த்தன. மிகவும் இக்கட்டான நிலையில் அவர் அப்படியே நின்றுவிட்டார். ஏற்கனவே சகிக்க முடியாத அளவுக்கு அந்த வீடு முழுவதிலும் ஆட்கள் நிரம்பியிருந்த

திஞல் மேற்கொண்டு தானும் அங்கு தங்குவது முடியாத காரியம் என்று அகிமோவ் நினைத்தார். ஆனுல் தாடி வளர்ந்த கன்னங்களை உடைய ஒரு உயரமான, ஒல்லியான மனிதன் மேஜையிலிருந்து எழுந்து, உணர்ச்சிப் பெருக்கால் கண்களை முழித்த வண்ணம் அவரை நோக்கி வந்தான். அவன் பேச ஆரம்பித்தான். அந்த அறை முழுவதிலுமிருந்து குழந்தைகளின் கண்கள் ஒளிவிட்டுப் பிரகாசித்தன. பெண் களின் முகங்களில் புன்முறுவல் நெளிந்தது. ஆண்கள் மரியாதையான முறையில் பெருமூச்சு விட்டனர்.

அகிமோவுக்கும் அவருடைய சகாக்களுக்குமாக மூன்று நாற்காலிகள் சிறிது நேரத்தில் ஒரு நீளமான மேஜையின் அருகில் போடப்பட்டன. அந்த மேஜையின்மீது கார்பைட் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. அந்த வீட்டின் எஜமானர் பேசிக்கொண்டே யிருந்தார். அவரது பேச்சை ருஷ்யர்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும்—இது அவருக்கு நன்கு தெரியும்—அவருடைய முக அசைவுகள் மிகவும் ஸ்பஷ்டமாக இருந்ததிஞல், அகிமோவும், மார்டினே வும், மத்யூகினும்கூட புன்முறுவல் பூத்தனர். தங்களுடைய நிலைமை மிகவும் இக்கட்டாகவும், அதே சமயத்தில் மிகவும் மகிழ்ச்சிகரமாக இருப்பதையும் உணர்ந்தனர்.

அந்த வீட்டுக்காரர் ஒரு சுரங்கத் தொழிலாளி. அவர், வந்துள்ள விருந்தாளிகளுக்கு விஷயத்தை விளக்குவதற்கு மிகவும் ஆவலாயிருந்தார். அவருடைய கடைசி மகள் ஓஸே என்ற பெயருடைய, புத்திக் கூர்மை வாய்ந்த தோற்ற முடைய அந்தப் பெண், சுரங்கத் தொழிலாளியின் உடையா லும், கையில் ஒரு நீளமான இரும்புக் கரண்டியுடனும் உள்ள தன் தகப்பஞரின்படமொன்றைக் காட்டிய பிறகு தான், கடைசியாக அவர் சுரங்கத் தொழிலாளி என்பது தெரிய வந்தது. பின்னர் ருஷ்யர்கள் அவருடன் மகிழ்ச்சி பொங்கக் கை குலுக்கினர். பின்னர் அவர், அவர்களிடம் வேறு ஏதோ விஷயத்தை சொல்ல ஆரம்பித்தார். ஆனுல் அதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று தெரிந்த தும், தன் கைகளால் சைகை காண்பித்தும், கண்களை உருட்டி யும், அவர்களுக்குப் புரியவைக்க முயற்சித்தார்.

அவர்களால் புரிந்துகொள்ள முடிந்த வார்த்தைகள் கம்யூனிஸ்ட், டைஸ்கர் என்ற இரண்டு வார்த்தைகளே. இரண்டாவது வார்த்தை நார்வீஜிய மொழியில் ஜெர்மானியர்களைக் குறிப்பதாகும். அந்த இரண்டு வார்த்தைகளைத் தெரிந்து கொண்டதே போதுமானதாக இருந்தது.

"அவர் ஒரு கம்யூனிஸ்டா?" என்று மார்டினேவ் தயக்கத்துடன், அந்த வீட்டு சொந்தக்காரரை சுட்டிக் காட்டிக் கொண்டே கேட்டார்.

"ஜா, ஜா, ஜா!" என்று அந்த அறையிலுள்ளவர்கள் அனைவருமே ஒரே குரலில் பதிலளித்தனர்.

அதைப் பற்றி எவ்வித சந்தேகமுமில்லை. ருஷ்ய அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெறுவதற்காகக் கையாளப்பட்ட தந்திரமல்ல அது. கிர்கினெஸ் நகர பர்கோமாஸ்டர், பள்ளிக்கூட ஆசிரியர். ஓல்ஸென், அல்லது பணக்கார விக்கோலா ஆகியோரிடத்தில் அகிமோவ் கண்டபல்லை இளிக்கும் போக்கும், போலி மரியாதையையும், அது போன்ற எதுவும் இங்கு காணப்படவில்லை.

நார்வீஜியர்களைப் போலவே மார்டினேவும் உணர்ச்சி வயப்பட்டார். அவர் தன் சட்டைப்பையிலிருந்து கட்சி உறுப்பினர் அத்தாட்சிக் கார்டை வெளியில் எடுத்து அதைத் தன் நெஞ்சின்மீது வைத்து, பின்னர் அவ்வாறே அகிமோவின் நெஞ்சின் மீதும் வைத்து, "பாருங்கள், நான், அவர் எல்லோரும் கம்யூனிஸ்டுகள்" என்றார்.

அந்த வீட்டின் உடமையாளர் அந்தக் கட்சி அங்கத்தினர் அத்தாட்சிக் கார்டை அதிஜாக்ரதையுடன் எடுத்து தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், மற்றவர்கள் அனைவருக்கும் காட்டினார். பின்னர் மார்டினேவிடமே திரும்பக் கொடுத்துவிட்டார். மார்டினேவ் கட்சிக் கார்டை மேஜையின் மீது வைத்ததும், அந்த சுரங்கத் தொழிலாளி எதிர்பாராத விதமாக முதலில் மார்டினேவையும், பிறகு அகிமோவையும் கட்டித் தழுவினார். பின்னர் அவர் தயக்கத்துடன் மத்யூகினிடம் போய் சற்று தூரத்தில் நின்று கொண்டு, "கம்யூனிஸ்டா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று மத்யூகின் குழப்பத்துடன் தலையை அசைத்துக் கொண்டே "நான் கட்சிப் பற்றற்றவன்," என்றார்.

இதைக்கேட்டதும் அந்த சுரங்கத் தொழிலாளி ஆச்சரியமடைந்தார். ஏனெனில் ரஷ்யாவில் ஒவ்வொருவரும் ஒரு கம்யூனிஸ்ட் என்று அவர் நினைத்தார். ஆனால் அகிமோவால் சிரிப்பைத் தாங்க முடியவில்லை. வாய் விட்டுச் சிரித்து அவரை மத்யூகின் பக்கம் தள்ளி விட்டார். அந்த நார்வீஜியர் தானும் சிரித்து, மத்யூகினை கட்டித் தழுவவும் செய்தார்.

தன்னுடைய பெயர் இங்கிரிட் என்று மிகவும் மரியாதையுடன் ரஷ்யர்களிடம் கூறிய ஒரு சிறு பெண் அடுத்த அறைக்குள் ஓடிச் சென்று, 'நெக்கி பிரோட்' எனப்படும் கொஞ்சம் தட்டையான சாப்பிடும் பதார்த்தங்களைக் கொண்டு வந்தாள். அங்குள்ள மக்கள் ரொட்டிக்கு பதிலாக அதைச் சாப்பிட்டார்கள். நீண்டநேரம் யோசித்த பின் மத்யூகின், தன்னுடைய துணிப் பையிலிருந்து, தான் காப்பாற்றி வைத்திருந்த ஒருபுட்டியை வெளியில் எடுத்தார். மேஜையின் மீது கண்ணாடி டம்ளர்கள் எடுத்து வைக்கப் பட்டன. ஒவ்வொன்றிலும் ஒரு துளி அளவு ஊற்றப் பட்டது. எல்லோரும் எழுந்து நின்றார்கள். ரஷ்யர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த நார்வீஜியர்கள், தங்கள் கண்ணாடி டம்ளர்களை தங்களுடைய நெஞ்சுக்கு எதிராக உயர்த்தினர். பின்னர் 'ஸ்கால்' என்று கூறி மெதுவாகக் குடித்தனர். ரஷ்யர்கள் 'நாத்ரோவையீ' என்று கூறி அதை ஒரே மடக்கில் குடித்து முடித்தனர்.

வீட்டின் எஜமானர் சில சமயங்களில் பேசிக்கொண்டும், சில சமயங்களில் வெறுமனே புன்முறுவல் பூத்துக்கொண்டும் இருந்தார். தன்னைப் பிறர் புரிந்து கொள்ளும்படி செய்ய முடியாமல் போனபோது, நிராசையினால் தன் இரு கைகளையும் ஒன்றையொன்று பிணைத்துக் கொண்டும் இருந்தார். அங்கு கம்யூனிஸ்டுகளுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்ததென்றும், 'சுட் வாரங்கர்' தொழிற்சாலையின் சொந்தக்காரர்கள் எவ்வாறு அந்தப் பகுதி முழுவதையும் தங்களது தனிப்பட்ட ராஜ்யமாகக் கருதி ஆதிக்கம் செலுத்தி வந்தார்

கள் என்றும், அந்தத் தொழிற்சாலையில் முதலாளிகளுக்கு வால் பிடிக்கும் தொழிற் சங்கங்கள் எவ்வாறு அதிகாரம் செலுத்தி வந்தனவென்றும் அவர் கூறினர். அவர், ஒரு சாதாரண சுரங்கத் தொழிலாளி என்ற முறையில், வீடுகள் எரிந்துபோன பல குடும்பங்களுக்கு இருக்க இடம் கொடுத்துள்ளதாகக் கூறினர். தான் ஒரு கம்யூனிஸ்ட் என்பதால், அவ்வாறு செய்ததாகவும், துரதிருஷ்ட வசமாகக் கொடுமைகளுக்காளானவர்களுக்கு உதவுவதற்குந் தான் கடமைப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினர். ஆனல் எல்லோரும் அதே மாதிரியான ஒருமைப்பாட்டு உணர்ச்சியைக் கொண்டிருக்கவில்லை. வீடிழந்த பல குடும்பங்கள் தெருவிலேயே வாழவேண்டி ஏற்பட்டது.

மார்டினேவ் தன் தலையை அசைந்துக்கொண்டே கவனமாகக் கேட்டார். தங்களை உபசரிப்பவர் கூறும் விஷயங்கள் மிகவும் முக்யமானவை என்றும், அவரைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதற்காக அவர் தனக்குத் தானே கோபமடைந்தார். "நான் சொல்வதைக் கேளுங்கள்; நாம் நார்வீஜிய மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று அவர் அகிமோவின் காதில் மெதுவாகக் கூறினர்.

அங்கிருந்த பெண்களில் ஒருவர் கிராமபோனை முடுக்கி வைத்தார். ஒரு சமயம் கிராமிய நடனமொன்றை ஏற்பாடு செய்ய அவர்கள் விரும்பி யிருந்திருக்கலாம். அப்பொழுது தான் ஒரு கதவு படாரென்று திறக்கப்பட்டது. தோலினல் ஆன ஒரு கோட்டையும் ஒரு அஸ்ட்ரகான் தொப்பியையும் அணிந்திருந்த ஒரு உயரமான கர்னல் வேகமாக உள்ளே வந்தார். தரையில் போடப்பட்டிருந்த பலகைகள் அவருடைய கனந் தாங்க முடியாமல் கிரீச்சிட்டன. அவர், ரைபிள் டிவிஷனின் பிரதிநிதி. அவருடைய வருகைக்குத்தான் அகிமோவ் காத்துக்கொண்டிருந்தார். பலவண்ண உடைகளை அணிந்துகொண்டு சுற்றிலும் கூடியிருந்தவர்களைக் கண்டு அவர் ஆச்சரியமடைந்தார். ஆனல் ஒன்றும் பேசவில்லை. பின்னர் அவர் அகிமோவிடம் சென்று "வாருங்கள்" என்ற ஒரே வார்த்தையைக் கடுமையாகக் கூறினர்.

அவருடைய கண்களில் சங்கடமான பார்வை காணப்பட்டது. அகிமோவ் உடனே எழுந்து கதவை நோக்கி

அவரைப் பின் தொடர்ந்து சென்றார். ஆனால் அங்கு சென்றதும் அவர் பூமியோடு சேர்த்து ஆணி அறையப் பட்டவர்போல் அப்படியே அசையாது நின்றார். அப்பொழுது கிராமபோனில் வைக்கப்பட்ட இசைத் தட்டு அவருடைய மனதில் பழைய நினைவைக் கொண்டுவந்தது. அதற்கும் மேலாக, அது எப்படியோ, அவருடன் ஒன்றிவிட்ட ஒரு அம்சமாகவே இருந்தது. அது ஒளிவீசும் அந்நியோன்யமான பழைய நினைவுகள் நிரம்பியதாயிருந்தது.

"கிரெய்க் தயாரித்த அனித்ராவின் நடனம்" என்று அவர் கூறினர்! அந்த வார்த்தைகள் அவருடைய உதடுகளிலிருந்தல்ல, ஆனால் அனிஷ்காவின் உதடுகளிலிருந்து வந்ததாகவே தோன்றியது. அந்த சுரங்கக் குழியில் வில்லோ மரத்தால் ஆன பலகைகள் பாவப்பட்டிருந்ததையும், அந்த இசையுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் அவர் மிகவும் தெளிவாகப் பார்த்தார்.

அந்தப் பழக்கமான வார்த்தைகள் ரஷ்ய அதிகாரியின் உதடுகளிலிருந்து வந்ததைக் கேட்டபோது நார்வீஜியர்கள் ஆச்சரியத்துடன் கூடிய மகிழ்ச்சி அடைந்தனர். உடனே அந்த அறை முழுவதுமே "ஜா, ஜா, ஜா!" என்று சந்தோஷத்தால் ஆரவாரம் செய்தனர்.

"இதோ, ஒரு நிமிஷம்" என்று அகிமோவ் கூறினர். கர்னல் பொறுமையிழந்த தோற்றத்துடன் காட்சி அளித்த போதிலும், அந்த இசைத்தட்டு முடியும் வரையிலும் அவர் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை. தனக்கு மிகவும் பிரியமான ஒரு சங்கீதம் அவ்வளவு தூரமான ஒரு பிரதேசத்தில் எப்படி இசைக்க்ப்படுகிறது என்பதை அறிய அவருக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. சப்தம் நின்று போன பிறகுதான் அந்த சங்கீதத்தை உருவாக்கியவர் ஒரு நார்வீஜியர் என்பது அந்த நாட்டின்! புதல்வர்-அந்நாட்டு மக்களால் பாராட்டப் படுபவர் என்பது அவரது நினைவுக்கு வந்தது.

கடைசியாக, அகிமோவ் அந்த சிறிய நார்வீஜிய வீட்டை விட்டுப் புறப்பட்டு அந்தக் கர்னலுடன் வெளியே காத்துக் கொண்டு நிற்கும் பச்சைக் கார் இருக்குமிடத்திற்கு சென்றார்.

இரண்டு அதிகாரிகளும் தங்களுடைய 'மேப்'புகளை எடுத்துக் காண்பித்தனர்.

"நிலைமை சிக்கலானது" என்று கர்னல் கூறினர். "போல்மாக் பகுதியில் டானேல்வ் என்ற இடத்தில் ஜெர் மானியர்கள் எதிர்த் தாக்குதல் துவக்கியிருக்கின்றனர். அது ஒரு மிகவும் கடுமையான எதிர்த் தாக்குதலாக இருக்கும் நதியின் மேற்குக் கரையில் விரோதிப் படைகள் பெரிய அளவில் குவிந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குறைந்த பட்சம் உங்களுடைய பட்டாலியனின் ஒரு பகுதியையாவது அங்கு எடுத்துச் செல்வதற்கு நான் உங்களுக்குப் பத்து லாரிகளைக் கொடுக்கிறேன். ஆனல் தற்போதைக்கு உங்க ளுக்கு என்னுல் அதிகம் கொடுக்க முடியாது. மற்றவர்கள் கால் நடையாகத்தான் செல்ல வேண்டும். உடனடியாக நட வடிக்கையிலிறங்க வேண்டும்" என்ருர்.

"எனக்குப் புரிகிறது; சகலமும் செய்யப்படும்'' என்ருர் அகிமோவ். சிறிது நேரம் அவர் மௌனமாக இருந்தார். பின்னர், புன்முறுவல் பூத்தவண்ணம், உங்களுக்குத் தெரிந்த சங்கீதத்தை நீங்கள் கேட்கும்போது, ஒரு பழைய நண்பனை சந்திப்பது போலிருக்கிறது'' என்ருர்.

"யே, என்ன சொன்னீர்கள்?'' என்று கர்னல் கேட்டார். அவருடைய சிந்தனைகள் சங்கீதத்திற்கு வெகு தூரத்தில் இருந்தது. அகிமோவ் பதிலளிக்கவில்லை. அவர் நீண்ட அடி எடுத்துவைத்து அசைந்தவண்ணம் நடந்து தன் பட்டா லியன் இருக்குமிடத்திற்குச் சென்ருர். படை வரிசை ஏற் கனவே சாலையில் அணிவகுத்து நின்றிருந்தது. முதல் கம் பெனி லாரிகளில் ஏறிப் புறப்பட்டது. புறப்பட்ட முதல் லாரியில் குதித்து ஏறிய அகிமோவ், துணியெல்லாம் எண் ணெய்க் கறை பட்டிருந்த குட்டையான ட்ரைவரிடம் "புறப் படுங்கள், நாம் கிளம்புவோம்!'' என்ருர். லாரிகள் பறந்தன.

"லாரிகளின் முன்புறத்து விளக்குகளைப் போடுங்கள். என்ன பயப்படுகிறீர்கள், என்று கூறிக்கொண்டே அகிமோவ் ட்ரைவருக்கு அடுத்த இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டார்.

“இந்தப் பாதையில் நாம் நீண்ட தூரம் போகமாட்டோம். ஆனால் நாம் சீக்கிரமாகப் போகவேண்டும். ஜெர்மானியர்கள் ஏதோ திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.”

பாறைகளுக்கிடையில், கற்களால் பாவப்பட்ட பாதையில் லாரிகள் விரைந்தன. வழி நெடுக வினோதமான, இனிமையான இசை அகிமோவின் காதில் விழுந்துகொண்டேயிருந்தது. அது ஒருபோதும் சோகமயமாக இல்லை. ஆனால் சவால் விடும் தன்மையிலும், மனதைக் கவர்வதாகவும் இருந்தது. அது ஓரளவு பயமுட்டுவதாகவும் இருந்தது. அவருடைய மனதில் பழைய சம்பவங்களையெல்லாம் அது நினைவுக்குக் கொண்டுவந்தது. அவருக்குச் சுற்றிலுமிருந்த கரடுமுரடான பிரதேசம் அதனுடைய கொடூரமான தன்மையை இழப்பது போலவும், கவர்ச்சி பெறுவது போலவும் தோன்றியது. தலைக்குமேல் பறவைகளின் இரைச்சல், நீல நிறமான அந்தி நேர வெளிச்சம் ஆகிய எதுவும் அவருக்கு இனி ஒருபோதும் மனச் சலிப்பைக் கொடுக்கவில்லை. ஒரு கணம் அவர் அநேகமாக யுத்தத்தையே மறந்தார். முன்பின் தெரியாத, கவர்ச்சியான பிரதேசங்கள் வழியாகத் தான் பிரயாணம் செய்து கொண்டிருப்பதாகவும், அவைகளைப் பற்றியெல்லாம் சீக்கிரத்தில் அனிஷ்காவிடம் சொல்லவேண்டும் என்றும் அவர் நினைத்தார். எதையும் மறந்துவிடாமலிருப்பதற்கும் ஒவ்வொரு நுட்பமான விபரத்தையும் நினைவில் கொள்வதற்கும் தான் நிச்சயம் முயற்சி செய்ய வேண்டும். சாலை நெடுக குன்றுகளின் மீது உயரப் பறக்கும் பறவைகளின் கிரீச்சிடும் ஒலிகள், நார்வீஜிய ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நன்றி உணர்வுடன் கூடிய முகங்கள், நீல நிறச் சிலுவையுடன் கூடிய நார்வீஜிய சிவப்புக் கொடி, நாடு விடுதலையடைந்ததற்கு அடையாளமாக எல்லாக் கொடிக் கம்பங்களிலும் பறந்து கொண்டிருந்த காட்சி; இன்னும் இதுபோன்ற எத்தனையோ இதர விஷயங்கள் ஆகிய எல்லாவற்றையும் ஒன்றுவிடாமல் அனிஷ்காவிடம் கூறுவதற்கு முயற்சி செய்யவேண்டும் என்று அகிமோவ் நினைத்தார்.

திடீரென்று குண்டுகள் வெடிப்பது கேட்டது. எதிரில் தீப்பிடித்து எரிவது தெரிந்தது. அதனுல் ஏற்பட்ட ஒளி யில், தூரத்தில் ஒரு கிராமமும், நீளமான துண்டுக் காடு ஒன்றும் தென்பட்டது. தானெலெவ் பள்ளத்தாக்கின் ஓர மாகச் செல்லும் காடாகத்தான் இருக்க வேண்டும் என்று அகிமோவ் நினைத்தார். ஏனெனில் மரங்களுக்குப் பின்னுல் குன்றின் ஓரம் நதிப் படுகை ஓரமாக வளைந்து செல்வதை அவரால் ஊகிக்க முடிந்தது.

சாலையின் இடது பக்கத்தில் ஒரு குன்றின் மீது கருப் பான உருவங்கள், மேற்கு நோக்கி 'பைனுகுலர்கள்' வழியாக பார்ப்பதைக்காண முடிந்தது, அதே சமயத்தில் குன் றின் அடிவாரத்தில் சமிக்ஞை காட்டுவோர் டெலிபோன் கம்பிகள் சுற்றப்பட்ட உருளைகளை இழுத்துவந்து கொண் டிருந்தனர்.

அகிமோவ் லாரிகளை நிறுத்தினுர். வெளியில் குதித்து, குன்றின் மீது சென்று, அங்குள்ள அதிகாரிகளிடம் "என்ன நடந்து கொண்டிருக்கிறது? நான்தான் அகிமோவ், கடற் படை வீரர்களுடன் வந்துள்ளேன்" என்ருர்.

அவர்கள் அனைவரும் திரும்பிப் பார்த்தனர். அவர் களின் முகங்களில் குதூகலம் ஒளிவிட்டது. அவர்களில் ஒரு வர்—ஒருக்கால் உயர்தர அதிகாரியாயிருப்பார்—தூரத்தில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைச் சுட்டிக்காட்டினுர்.

"நீங்கள் செல்லவேண்டிய திசை அதுதான், காம்ரேட் அகிமோவ், உங்களுடன் ஒரு பீரங்கிப் படையை அனுப்பு கிருேம்" என்று கூறிய அவர் "ஹே! பீரங்கிகளே!" என்று உரக்கக் கூவினுர்.

பீரங்கிப்படை தளபதி அகிமோவுக்கு வணக்கம் செலுத்திவிட்டு, "உங்களுடைய உத்திரவுகளை எதிர்பார்க் கிறேன்" என்ருர்.

அதிகாரிகளுடன் உரையாடியபின் அகிமோவ் குன்றி லிருந்து கீழே இறங்கி வந்தார். அகிமோவின் உத்திரவுக் கிணங்க கப்பல் படையினர் லாரிகளை விட்டுக் கீழே இறங் கினர். ஒரு விநாடியில் அணிவகுத்து நின்றனர். பின்னர் ராணுவ நடைபோட்டுப் புறப்பட்டனர். அகிமோவும்,

கோஸ்லோவ்ஸ்கியும், பீரங்கிப் படை அதிகாரியும் முன் வரிசையில் சென்றனர். அகிமோவ் பீரங்கிப்படை அதிகாரியைப் பக்கவாட்டில் பார்த்து, "என்னுடைய உத்திரவு இல்லாமல் உங்கள் பீரங்கிகளைச் சுடவேண்டாம். ஒரு பிரயோஜனமுமில்லாமல் வீடுகளை நொறுக்கிப் பயனில்லை" என்று கூறினர்.

சற்று தொலைவில் சில ஜெர்மன் குண்டுகள் வந்து விழுந்து வெடித்தன. அவை நதியின் மேற்குக் கரைப் பகுதியிலிருந்து தான் வந்திருக்க வேண்டும்.

"வீரர்களை ஒரே வரிசையில் விஸ்தாரமாக நிறுத்தி வையுங்கள்" என்று அகிமோவ் உத்திரவிட்டார். பின்னர் கோஸ்லோவ்ஸ்கி பக்கம் திரும்பி "நாம் போகலாம்" என்றார்.

மாலுமிகள் பாறைகளின் மீது தவழ்ந்த வண்ணம் ஏறினர். வெளிச்சம் நிறைந்த வானத்தின் பின்னணியில் அவர்களின் உருவங்கள் தெளிவாகத் தனியாகத் தெரிந்தன.

"உங்களுடைய பெயர் என்ன?" என்று அகிமோவ் பீரங்கிப் படை தளபதியைப் பார்த்துக் கேட்டார்.

"செலிவெர்ஸ் டோவ், காம்ரேட் மேஜர்" "சரி, காம்ரேட் செலிவெர்ஸ்டோவ், "இன்னும் சுட ஆரம்பிக்காதீர்கள். என்னுடனேயே நில்லுங்கள். நாம் செய்ய வேண்டியதென்ன வென்றால், ஜெர்மானியர் வீடுகளை வெடி வைத்துத் தகர்ப்பதற்கு அவகாசம் கொடுக்காமல் அவர்களை கிராமத்தை விட்டுத் துரத்த வேண்டும். அந்த பீரங்கிகளை சுடுவதற்கு உங்களுக்கு அனுமதி கொடுத்தால், உங்களுடைய எண்ணம் நல்லவையாக இருந்தபோதிலும், நீங்களே அவற்றைத் தாக்கி நொறுக்கி விடுவீர்கள். ஆகவே கோபித்துக் கொள்ள வேண்டாம்."

"நான் ஒன்றும் கோபித்துக்கொள்ளவில்லை," என்று செலிவெர்ஸ்டோவ், சங்கடப்பட்டவராய் கூறினர்

அவர்கள் மெதுவாக முன்னேறினர். செய்தி கொண்டு வருபவன் ஒருவன் ஓடி வந்து, ஜெர்மானியர்கள் வீடுகளுக்கு நெருப்பு வைத்துவிட்டு, சாவதானமாக பின் வாங்கிக்

கொண்டிருக்கிறார்கள், அங்கு குடியிருக்கும் மக்கள் வெளியேறி காடுகளுக்குள் ஓடித் தஞ்சம் புகுந்துகொண்டிருக்கிறார்கள். நதியில் மோட்டார்ப் படகுகள் நிறைய இருக்கின்றன. மேற்குக் கரையிலிருந்து பீரங்கிகள் சுட்டுக் கொண்டிருக்கின்றன, என்றான்.

"நீங்கள் தாக்குதலில் இறங்கியாக வேண்டும்!" என்று அகிமோவ் உரத்துக் கூறினார். "நீங்கள் இங்கு ஏன் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்கள்? அவர்கள் தங்களுடைய காரியத்தை முடித்துக்கொண்டு ஓடுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறீர்களா?"

அகிமோவ் ஒரு பாறையின் மீது ஏறிப் பார்த்தார். காடுகள் நிறைந்த எதிர்க்கரை காணப்பட்டது. அக்கரையில் தற்பொழுது ஓரிடத்திலும், பிறகு வேறிடத்திலுமாக பீரங்கிகள் இருப்பது காணப்பட்டன.

"படேய்கினுக்காக, உங்களை மண்ணைக் கவ்வ வைக்கப் போகிறேன்" என்று முணுமுணுத்தார். வீடுகளுக்கு நெருப்பு வைப்பதற்கு உங்களுக்கு நான் கற்றுக் கொடுக்கப் போகிறேன்!" என்றார்.

அவர் குன்றிலிருந்து வேகமாக இறங்கி வந்து காட்டின் பக்கம் சென்றார். விரைவில் மரங்கள் இருக்குமிடத்திற்குச் சென்றார். அங்கு இருட்டாக இருந்தது. ஒளி வீசும் நதியின் நீண்ட தாரை காட்டின் ஓரமாகச் செல்வதை அடிமரங்களுக்கு இடையில் உள்ள சந்துகள் வழியாக அவர் பார்த்தார். அதற்கு சற்று தூரமாக இடது பக்கத்தில் நதியின் ஒரு வளைவில் ஏராளமான சிறு மோட்டார்ப் படகுகள்—அவைகள் நார்வீஜியப் படகுகள் என்று தெரிந்தது—நதி நெடுகிலுமிருந்து அங்கே திரட்டி வைக்கப்பட்டிருந்தது காணப்பட்டது.

"மாலுமிகளே முன்னேறுங்கள்!", என்று அகிமோவ் உரத்துக் குரல் கொடுத்தார்.

இயந்திர பீரங்கிகள், டாம்மி துப்பாக்கிகள், ரைபிள்கள் ஆகியவை கரை நெடுகிலும் சுடுவது கேட்டது. பின்னர் ஹூர்'ராஹ்!" என்றொரு பலமான குரல் ஒலித்தது.

“செலிவெர்ஸ்டோவ், இப்போது உங்களுடைய சந்தர்ப்பம். அந்தப் படகுகளிடம் உங்கள் கைவரிசையைக் கொஞ்சம் காட்டுங்கள்,” என்று அகிமோவ் கூறினர்.

தன்னுடன் வரும்படை வீரர்களிடம் செலிவெர்ஸ்டோவ் சில வார்த்தைகள் கூறிவிட்டு, தொலை நோக்கும் கண்ணுடி (பைனுகுலர்ஸ்)யை கண்களுக்கு நேராக உயர்த்திப் பார்த்தார். குண்டுகள் மரங்களிடையே ‘உய்’ என்று ஓசையிட்டுக்கொண்டு சென்றன. விசைப் படகுகளின் மோட்டார்கள் செயல்பட ஆரம்பித்தன. அழகான பல வண்ண வெளிச்சங்கள் மேலே தோன்றின.

அகிமோவ் நதியின் பக்கம் ஓடினர். அடிக்கொரு தடவை ‘பர்’ மரங்களின்மீது உரசிக்கொண்டார். மரங்களின் கடினமான தன்மை அவருக்கு மன நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

“ஓ, துல்யாகோவ் தானு,” என்று இயந்திர பீரங்கியின் பக்கம் இருந்த ஒருவரைப் பார்த்துக் கூறினர்.

“ஆம், காம்ரேட் கமாண்டர்”

“அவர்கள் தாக்கட்டும், அவர்கள் தாக்கட்டும்! அந்த மனிதன் செலிவெர்ஸ்டோவ் என்ன செய்து கொண்டிருக்கிருன்? நதி ஒன்றும் மோசமாக இல்லை. அழகாகத்தான் இருக்கிறது. நீர் வீழ்ச்சிகளும் இருக்கின்றன. தண்ணீர் உறைவதும் இல்லை. மலை அருவி. கரை வழியாகவே இடது பக்கத்திற்குச் செல்லுங்கள்”

படை வீரர்கள் மெதுவாக இடது கரை வழியாக கிராமத்தை நோக்கிச் சென்றனர். கடைசியாக பீரங்கிகள் நெருப்பை உமிழ ஆரம்பித்தன. நதியிலிருந்த ஜெர்மன் படகுகள் நாலா பக்கமும் சிதறிச் சென்றன. சுற்றிலுமுள்ள எல்லாம் உருண்டு கொண்டும், நடுங்கிக் கொண்டு மிருந்தன. குண்டுகள் மரங்களினூடே பயங்கரமாக ஓசையிட்டுக் கொண்டு சென்றன.

“காம்ரேட் கமாண்டர்! காம்ரேட் கமாண்டர்! அவர் எங்கே?”

“அவர் இப்பொழுதுதான் இங்கே இருந்தார்.”

“காம்ரேட் கமாண்டர்!”

அதற்கு எவ்வித பதிலுமில்லை. மத்யூகின் மரங்களி னூடே அகிமோவைத் தேடி அலைந்தார்.

“துல்யாகோவ்! துல்யாகோவ்!” என்று மத்யூகின் இயந்திர பீரங்கியை முடுக்குகிறவர் பக்கம் குனிந்த வண்ணம் குரல் கொடுத்தார்.

“பதில் சொல்லுங்கள்” என்றார்.

“என்ன?”

“பட்டாலியன் கமாண்டர் எங்கே?

“அதோ! அவர் அங்கே யிருக்கிறார்” என்றார் துல்யா கோவ். அவர் தன்னுடைய இயந்திர பீரங்கியிலிருந்து அப்பால் திரும்பி, ஆச்சரியத்தால் வெறிக்க, வெறிக்கப் பார்த்தார். பட்டாலியன் கமாண்டர் அங்கே இல்லை.

அகிமோவ் நதியின் ஓரத்தில் படுத்துக் கிடப்பதை மத்யூ கின் பார்த்தார். ஒரு கை பெரியதாகவும், சூரிய வெப்பத் தால் நிறம் மாறியுமிருந்த அந்தக் கை தண்ணீரில் தொங்கிக் கொண்டிருந்தது. விரல்களினூடே தண்ணீர் நான்கு சிறு நீர் வீழ்ச்சிகளைப் போல் ஓடிக்கொண்டிருந்தது. “ஆ-ஆ-ஆ!” என்று மத்யூகின் ஒரு பெண்ணைப் போல் கதறினார்.

அவர் அலறியதன் ஓசை, துப்பாக்கிகள், பீரங்கிகள் ஆகியவற்றின் கர்ஜனைக்கும், ஓடும் தண்ணீரின் இரைச்ச லுக்கும் ஜெர்மானியர்களின் கூக்குரலுக்கும் மேலாக எல்லோருக்கும் கேட்டது. ஒவ்வொருவராக ஓடி வந்தனர். முதலில் வலது புறத்திலிருந்து வென்ட்சோவின் ஆட்கள், பின்னர் மார்டினேவ், கோஸ்லோவ்ஸ்கி ஆகியோர் இடது புறத்திலிருந்தும் ஓடி வந்தனர். அவர்கள் அகிமோவை வாரி எடுத்துக்கொண்டு கிராமத்திற்குள் தூக்கிச் சென் றனர். யாரோ மத்யூகினைப் பிடித்து அப்பால் இழுக்க முயன்றனர். ஆனால் அவர் வர மறுத்தார். “என்னைத் தொடாதீர்கள். என்னைத் தனியாக விட்டுவிடுங்கள். நான் வாழ விரும்பவில்லை.”

மத்யூகின் ஓலமிட்டதை அகிமோவ் கேட்டார். ஆனால் அவர், அது நீர்வீழ்ச்சிகளின் சத்தமாக இருக்கும் என்று எண்ணினார். அல்லது இரவு நேரப் பறவையின் கூச்சலாக இருக்கும் என்று எண்ணினார். மனிதனிடமிருந்து வந்த

சத்தமல்ல, ஆனால் இயற்கையினிடமிருந்து எழுந்த ஏதோ ஒரு சத்தம் என்று எண்ணினர். அவர்கள் அவரைத் தூக்கிச் சென்று கொண்டிருந்தபொழுது, ஒரு வினாடி தன்னுணர்வு பெற்றார். மார்டினேவும், மத்யூகினும், மற்றும் யாரோ ஒருவர் தன்னுடைய படுக்கை அருகில் ஒவ்வொரு இரவும் விடாமல் தொடர்ந்து உட்கார்ந்திருப்பதாக நினைத்தார். தன் உடல் நலம் சரியாகத்தான் இருப்பதாகவும், அவர்கள் போய் அவசியம் தூங்க வேண்டுமென்றும், ஏனெனில் அவர்களுக்கு நிச்சயமாகத் தூக்கம் தேவைப்படுகிறது என்றும் அவர்களிடம் சொல்லவேண்டுமென்றும் விரும்பினார்.

அவர் அவ்வாறு சொன்னதாகவும், அவர்கள் சென்றுவிட்டதாகவும், அப்படியே மறைந்துவிட்டதாகவும் நினைத்தார். தனக்குத் தாகமாக இருப்பதாகவும், அருந்துவதற்கு ஏதாவது கொடுப்பதற்கு ஒருவரும் இல்லை யென்றும், ஏனெனில் அவர்கள் எல்லோரையும் போய்விட வேண்டுமென்றுதான் தான் சொன்னதாகவும் நினைத்தார். கப்பலில் தன்னுடைய மேடையின் மீது தான் படுத்துக்கொண்டிருப்பதாகவும் அது இங்குமங்கும் ஆடிக்கொண்டிருப்பதாகவும், மேலும் மேலும் பலமாக ஆடிக்கொண்டிருப்பதாகவும், அதே சமயத்தில் தன்னுடைய இருதயம் தனியாக, ஏதோ கூர்மையாகவும் அதே சமயத்தில் மழுங்கியும் இருக்கும் ஒன்றின் மீது மோதுவதாகவும் மனதில் நினைத்தார். அது மிகவும் பயங்கரமாக ஊஞ்சலாடத் தொடங்கியது. இருதயம் மிகவும் வேகமாக ஆடியது. அதனால் அது கூர்மையாகவும் மழுங்கியும் இருந்த பொருளின் மீது மிகவும் வேகமாகத் தாக்கியதின் காரணமாக, வலியும், வேதனையும் மேலும் மேலும் அதிகரித்து அவரால் தாங்க முடியாத எல்லையை எட்டியது. அது அப்படியே நீடிக்க முடியாதென்றும், நிற்க வேண்டியேற்படும் என்றும் அவர் நினைத்தார். தன்னுடைய இருதயத்தை அவ்வாறு சித்திரவதைக் குள்ளாக்க அவரால் முடியாது. அது அவருடையதல்ல. அந்த நிமிஷத்தில் ஒரு சமயம் அவர் அனிஷ்காவை நினைத்திருக்கக்கூடும். அவளுடைய பெயரை அவரால் சிந்திக்க முடியவில்லை. அவளுடைய முகத்தை அவரால் நினைவுபடுத்திக் கொள்ளக்

கூட முடியவில்லை. அவள் யாரென்றுகூட அவரால் நினைவு கூர முடியவில்லை. ஆனால் அவருடைய தலையில் ஒரு மூலையில் ஒளியும், ஆனந்தமும் தாண்டவமாடியது. அதில் அவளும், வாழ்க்கையில் அவர் நேசித்த சகலமும் ஐக்யப்பட்டிருந்தன. ஒளியும், ஆனந்தமும் கொண்ட அந்த புள்ளிக்குத்தான் வேதனையாலும், போராட்டத்தாலும் நடுங்கிக் கொண் டிருந்த அவருடைய இருதயம் சொந்தமாக இருந்தது.

அவருடைய உடம்பு குலுங்கியது. பின்னர் அமைதி யடைந்தது.

"எல்லாம் முடிந்துவிட்டது", என்று மார்டினேவ் கூறினர். ஒரு தாக்குதலில் இறங்குவதற்கு முன்னல் மாலுமி கள் செய்வதைப்போல் அவர் தன் சட்டையின் முன்புறத் தைக் கிழித்துத் திறந்தார்.

அவர்கள், பட்டாலியன் தளபதியை—அவர் உயிருடன் இருப்பதைப் போன்ற எண்ணத்தில்—மிகவும் உஷாராக தூக்கிக்கொண்டு சென்றனர். ஏனெனில், அத்தகைய பரந்த வலிமை வாய்ந்த உடல், அத்தகைய சோம்பலற்ற வீரம் நிறைந்த இருதயம், சற்று முன்பு வரையிலும் ஜீவத் துடிப்பு நிறைந்திருந்தது—மடிந்து விட்டது என்பதை யாரும் நம்ப மாட்டார்கள். அவர் சலனமற்றுக் கிடப்பதை—ஏதோ அவர் எப்பொழுதும் அதே நிலையில் கிடந்தது போலும், வேறு எந்த நிலையிலும் கிடப்பதற்கு அவர் விரும்பாததுபோலவும்- டப்பதைப் பார்க்க அசாதரணமாக இருந்தது. கொல்லப் பட்ட வேறு இருவரும் அவருக்குப் பின்னல் தூக்கிக்கொண்டு வரப்பட்டனர். இவானேவ், கோர்யுஷ்கின் என்ற இரண்டு இளம் மாலுமிகளே அவர்கள். அகிமோவின் நண்பர்கள் அவரைத் தெரிந்திருப்பது போலவே, அந்த இளம் மாலுமி களைத் தெரிந்தவர்களுடைய இருதயங்களும் அவர்களின் மரணத்தால் சொல்லொணுத் துயரமும் நிராசையும் அடையும்.

லாப்லந்தியர் வாழும் பகுதிக்கருகில், பனிப் பிரதேச மான்களின் தோல்களை மூங்கில்களில் மாட்டி அமைத்திருந்த ஏழை மக்களின் குடிசைகளின் நடுவில் செல்லும்போது, பிர

யாணத்தை நிறுத்தும்படி மார்டினேவ் உத்திரவிட்டார். விரைவில் உறைபனி பலமாகப் பெய்ய ஆரம்பித்தது. லாப்லந்தியர் தங்களுடைய மிருகங்களை 'ஸ்லே' வண்டிகளில் இழுத்துப் பூட்டினர். கொல்லப்பட்ட மிருகங்கள் அந்த வண்டிகளில் கிடந்தன. ரெயின்டீர்கள் (பனிப் பிரதேச மான்கள்) தங்கள் கொம்புகளை உயர்த்தி, தங்கள் காதுகளை உஷாராகக் கூர்மையாக்கிக் கொண்டன. லாப்லந்தியர்—பயந்துபோன சிறிய உருவத்தினரான அவர்கள்—தங்கள் ஸ்லே வண்டிகளின் பக்கம் நடந்தனர். அவர்களிடமிருந்து மீன் வாசனை வீசியது. ஒரு விதூஷகனைப் போன்று, பல நிறங்களைக் கொண்ட உயரமான, கூர் முனையைக் கொண்ட தொப்பிகளை அவர்கள் அணிந்திருந்தனர்.

உளவு பார்க்கும் படையினர் தோன்றினர். எங்கிருந்து அவர்கள் வந்தனர் என்பது யாருக்கும் தெரியாது. முன்னணியில் இருந்த லெட்டியாகின் அங்கு வந்து தளபதி அகிமோவ் எங்கேயிருக்கிறார் என்று கேட்டார். ஸ்லே வண்டியிருந்த திசையை நோக்கி சைகை காட்டப்பட்டது தான் அவருக்குக் கிடைத்த ஒரேபதில். அவருடைய நெற்றியில் இருந்த சிவப்பு நிறமான கீறல் வெளுத்தது.

அவர்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர். லெட்டியாகின் ஸ்லே வண்டியின் பக்கமாகவே நடந்து சென்றார். அடிக்கொரு தடவை உறைபனியில் சிக்கி இடறியது அவருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. ஆயினும் அவர் தொடர்ந்து நடந்து சென்றார். ஏனெனில் மூடப்பட்டிருந்த துணிக்கு அடியில் உள்ள அகிமோவின் முகத்தைப் பார்க்க வேண்டியது அவசியமானது முக்கியமானது என்று அவருக்குத் தோன்றியது.

கொவலேவ்ஸ்கி கடைசியாக ஆப்பிள்களைக் கண்டு பிடித்து விட்டார். அவைகளுடன் கிர்கினெஸுக்கு வந்து அகிமோவுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஆப்பிள்கள் இன்னும் நன்றாகவிருந்தன. அவை சிறந்த அண்டனேவ்கா ரகத்தைச் சேர்ந்தவை. நடந்ததைக் கேள்விப்பட்டபோது அவரால் நடக்க முடியாமல் மூடமானார். தேம்பித் தேம்பி அழுதார். கண்களில் நீர் வழிய, அவர் பெசங்காவுக்குத்

திரும்பிச் சென்றார். கடற்படை-விமானப் பிரிவு பகுதிக்குச் சென்றார். அதற்கு 'சிவப்புப் பதாகை' (ரெட் பேனர்) என்ற விருது கொடுக்கப்பட்டிருந்தது. அதைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுவதற்கு அவர் விரும்பினார்.

ஹோய் புட்மூயென் பீடபூமியின் அடிவாரத்தில், கல்லறைக்காக ஒரு இடத்தை நார்வீஜிய அதிகாரிகள் ஒதுக்கியிருந்தனர். நார்வேக்குக் கும்பல் கும்பலாகக் கொண்டு போகப்பட்டு நாஜிகளால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட ரஷ்யர்கள் அங்குதான் புதைக்கப்பட்டிருந்தனர். கிர்கினெஸ் படைகளிலிருந்தும், கப்பல்களிலிருந்தும் கடைசி நாள் போரில் கொல்லப்பட்ட ராணுவ அதிகாரிகள், படை வீரர்கள் ஆகியோரின் சடலங்களும் அங்கு கொண்டுவரப் பட்டன. நார்வீஜியர்கள் தங்கள் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டனர். கருநிற உடைகளை அணிந்துகொண்டு அவர்கள் புதிதாக விழுந்த உறைபனியின் மீது பனிச் சறுக்கல் கட்டைகளிலோ அல்லது கால் நடையாகவோ புதிய கல்லறைக்கு வந்து சேந்தனர். சோவியத் ராணுவப் படையினரும், கப்பற் படை பகுதியினரும் அணிவகுத்து அங்கு வந்து சேர்ந்தனர்.

லெடியாகினும், மார்டினேவும் அக்கம்பக்கமாக மௌனமாகச் சென்றனர். ராணுவ உத்திரவுகளின் கூர்மையான வார்த்தைகள் ஒரு விநோதமான உயிரற்ற சோகமயமான எதிரொலியை பாறைகளினிடையிலும் குன்றுகளினிடையிலும் கிளப்பியது போலிருந்தது. உறைபனி கனமாகவும், பலமாகவும் விழ ஆரம்பித்தது.

வேதனை நிறைந்த நார்வீஜிய ஆண்களின் முகங்களையும், கண்ணீர் வடியும் பெண்களின் முகங்களையும் கண்ட லெடியாகின், கடந்த சில தினங்களில் நடைபெற்ற சம்பவங்கள், அவர்களுக்கு உலக வரலாற்றில் ஒரு இடத்தைக் கொடுத்துள்ளது என்பதை அவர்கள் உணர்ந்துள்ளார்களா என்று ஆச்சரியப்பட்டார். ஜார்பியோட்போடென், ஒல்வெனெஸ் பிஜோர்னெலாடன், ஹோய்புட்மூயென், இன்றும் ஐரோப்பாவின் விளிம்பிலுள்ள இதர இடங்கள், ரஷ்ய இரத்தத்தால் தோய்ந்த பின்மார்க் மாகாணம், ஆகியவை இனிமேல்

வெறும் பூகோள அம்சங்களாக அல்லாமல் சரித்திரப் புகழ் பெறும் இடங்களாக ஆகின்றன என்பதை அவர்கள் உணர்ந் துள்ளார்களா என்றும் அவர் ஆச்சரியப்பட்டார்.

படை வீரர்களின் சலனமற்ற முகங்களை லெடியாகின் உற்று நோக்கினுர். எந்த அந்நிய ராணுவமும்—அது நேச நாட்டு ராணுவமாக இருந்தபோதிலும்—ஒரு நாட்டின் மண்ணில் இருப்பது அந்த மக்களுக்கு ஒரு சுமையாக இருக்கும். ஆனுல் சுமையில்லாமல் செய்வதற்கு சோவியத் ராணுவத்தைப்போல் வேறு எந்த ராணுவமும் எப்பொழு தும் முயற்சி செய்ததில்லை. இத்தகைய சுயேச்சையான சகிப்புத்தன்மையை வேறு எந்த ராணுவமும் கடைப் பிடித்தது கிடையாது. அல்லது சோவியத் ராணுவத்தைப் போல் வேறு எந்த ராணுவமும் சுயநலமற்ற தன்மையையும், நட்புறவையும் காட்டியதில்லை.

இத்தகைய கடுமையான, ஆனுல் உற்சாகமூட்டும் சிந்தனைகள் நிரம்பியவராய், லெடியாகின் அகிமோவின் முகத்தைப் பார்ப்பதென்று கடைசியாக முடிவு செய்தார். அது அமைதியாகவும், வனப்பு மிக்கதாயும் இருந்தது. அகிமோவ் கண்களைத் திறந்து ஏதோ சொல்லப் போகிருர் என்று லெடியாகின் நினைத்தார். அவரால் என்ன சொல்ல முடியும்? அவருடைய ஆழமான உணர்ச்சிகரமான குரல், ஒருக்கால் கிண்டலான நகைச்சுவையுடன், "இது போதுமே! வேதனையை ஏன் நீடிக்கிறீர்கள்? என்னைப் புதைத்து அத் துடன் கைகழுவுங்களேன்!" என்று கூறலாம்.

இந்தக் கேலிக்கூத்தான எண்ணம், அனேகமாக லெடி யாகினின் கண்களிலிருந்து நீரைப் பெருக்கெடுத்தோடச் செய்தது. தன் உதடுகளைச் சேர்த்து அழுத்தியவண்ணம் அவர் பக்கத்திலிருந்த மார்டினேவை நோக்கித் திரும்பினுர். மார்டினேவ் வெள்ளைத் துணியைப்போல் அவ்வளவு முகம் வெளுத்து நின்று கொண்டிருந்தார்.

கடைசி மரியாதைக் குண்டு சுடப்பட்டது. பெண்கள் உலக முழுவதிலும் உள்ள பெண்கள் செய்வதுபோலவே— அழுது புலம்பினுர்கள். "உங்களை நாங்கள் என்றுமே மறக்க முடியாது!" என்று ஒரு வயோதிக செம்படவர் நார்வீஜிய

மொழியில் உரத்துக் கூறினர். இரண்டு பெண்கள்—ஆச்சரியப்படத்தக்க முறையில் ஒரே மாதிரியிருந்த அந்த இருவர்—பலமாகக் கதறி அழுதார்கள். அகிமோவின் கதை முடிந்தது.

ஒவ்வொருவராக எல்லோரும் கலைந்து சென்றனர். லெடியாகினும், மார்டினேவும் மட்டும், சமாதியின் மீது வைக்கப்பட்டிருந்த சிவப்பு நட்சத்திரம் பொறிக்கப்பட்ட, மரத்தினலான நினைவுச் சின்னத்தின் அருகில் சுமார் அரை மணி நேரம் நின்று கொண்டிருந்தனர்.

"அவரை நம்முடைய நாட்டுக்கே நாம் திரும்ப எடுத்துக் கொண்டு போய்விடவேண்டும். தாயகத்தின் மண்ணிலேயே புதைக்கப்படுவதுதான் நல்லது" என்ருர் லெடியாகின். ஆனல் கொஞ்சம் சிந்தித்த பின், அவர் தன்மனதை மாற்றிக் கொண்டார். "வேண்டாம், நார்வே நாட்டு மக்கள் நல்லவர்கள். அவர்கள் அவர்களுக்கு மரியாதை செலுத்துவார்கள். கல்லறைகளை அவர்கள் பாதுகாப்பார்கள். உறைபனியை அப்புறப்படுத்திவிடுவார்கள்" என்ருர்.

வாரங்கர் பியோர்டின் மீது வெண்பனி மேகம் படர்ந்தது. உறைபனி கனமான துக்ள்களாக கடல்மீதும், தரைமீதும் விழுந்தது. கடலையும், குன்றுகளையும், பீடபூமியையும் மூடி மறைத்து விடுவதைப்போல் உறைபனி பெய்தது. ஆனல் கடல் அலைகள் அதை விழுங்கிவிட்டன; பாறைகள் நிறைந்த மலை உச்சிகளின்மீது படர்ந்த வெண்பனியை பலமான காற்று ஊதித் தள்ளிவிட்டது. சதுப்பான பள்ளமான பிரதேசங்களில்தான் சலனமற்று உறைபனி விழுந்து கிடந்தது. ஆழமாகவும் அலட்சியமாகவும் அது விழுந்து கிடந்தது.

அத்தியாயம் ஒன்பது

இறந்தவர்களின் வாழ்க்கை

1

1949 ல் மாஸ்கோவிலுள்ள வைத்தியக் கழகத்தில் அவள் தன்னுடைய படிப்பை முடித்துக்கொண்டு, ஒரு டாக்டரான போது, அன்ன அலெக்ஸாண்ட்ரோவ்ன பெலோஜ்யோ ரோவோ, டூலா நகரத்தில், தன் மகளுடன் வசிக்கத் தொடங்கினள். அங்கு ஒரு ஆஸ்பத்திரியில் பணியாற்றுவதற் காக அவள் அனுப்பப்பட்டிருந்தாள். அங்கு அவளுக்கு மகிழ்ச்சி தந்த பல காரணங்களில் ஒன்று, அவளைப் பார்ப் பதற்காக அவளுடைய தகப்பனர்ஒவ்வொரு ஞாயிறுதோறும் காரில் வந்து போவார். போர்ச்சீசியரின் இந்தப் பழக்கத்தை அந்த ஆஸ்பத்திரி வெட்கமில்லாமல் பயன்படுத்திக் கொண் டது. அவரும் புன்முறுவலுடன் அதை ஏற்றுக் கொண்டார். ஆஸ்பத்திரிக்கு ஆலோசனைகள் கூறுவார். எப்போதாவது. மிகவும் கடுமையான அறுவை சிகிச்சையையும் செய்வார்.

அனிஷ்காவுக்கு நிகழ்ந்ததைப் பற்றி பேராசிரியர் பெலோஜயோரோவா நீண்ட காலத்திற்கே முன்பே சமா தானம் அடைந்து விட்டார். அதைப்பற்றி யெல்லாம் மீண்டும் நினைக்கும்போது, அவர் ஒரு முடிவுக்குத்தான் வந்தார். இந்த நிலைமை மற்றவர்களுக்கு ஏற்பட்டிருக் கிறது என்று யாராவது அவரிடம் சொல்லி யிருந்திருப்பார் களானல், இருதயமற்ற ஒரு மூடாத்மாவாக் இருக்கிருயே

என்று அந்தத் தகப்பனுரை நிச்சயமாகக் கடிந்து கொண்டிருப்பார்.

காலம் செல்லச் செல்ல, அவருடைய கடு கடுப்பான தன்மை அவருக்கு மேலும் மேலும் அதிகமான மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தியது. அவர் தன்னுடைய அகங்காரத்தையெல்லாம் கைவிட்டார். ஒரு விவேகமான தந்தைக்கும் ஒழுக்கத்திற்கும் தான் ஒருபோதும் உதாரணமாக யில்லை என்பதை அவர் தனக்குத் தானே ஒத்துக் கொண்டார். ஆனல் முன்பெல்லாம், தன்னைப் போன்ற முன்மாதிரியான தந்தை யாரும் கிடையாதென்று அவர் அகம்பாவம் கொண்டிருந்ததுண்டு.

1944ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் அவர் அனிஷ்காவுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் மனப்பூர்வமாக இதை ஒத்துக் கொண்டுள்ளார். பின்னர் அவர் போர் முனையிலிருந்து திரும்பிய பின், தன்னுடைய குற்றத்தை இல்லாமல் செய்வதற்காக அவர் சகலமும் செய்தார். அனிஷ்காவின் மகள்—தன்னுடைய பேத்தி காட்யாவிடம் மிகவும் அன்புள்ள தாத்தாவாக நடந்து கொண்டார்.

ஒரு ஜெனரலாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள தன்னுடைய பழைய நண்பர் வெர்ஸ்டோவ்ஸ்கியை ஒரு நாள் அவர் சந்தித்தார். அந்த நண்பர் ராணுவப் படைகள் மந்திராலயத்தின் அந்நிய உறவு இலாகாவில் இருக்கிருர் என்பதைக் கேள்விப்பட்டதும், நார்வேயில் அனிஷ்காவின் கணவரின் கல்லறையைப் பற்றித் தகவல் சேகரிக்கும்படி அவரிடம் கேட்டுக் கொண்டார்.

"அவருடைய பெயர் பேவல்கோர்யேவிச் அகிமோவ், அவர் கடற்படையில் தளபதியாக இருந்தார். அவர் புதைக்கப்பட்ட இடம்...ஒரு நிமிஷம், பார்த்துச் சொல்கிறேன்... நார்வேயில் ஹோய்புட்மூயென் என்ற இடத்தில்," என்று பேராசிரியர் கூறினர்.

வெர்ஸ்டோவ்ஸ்கி இவற்றையெல்லாம் தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொண்டே வந்தார். திடீரென்று அவர், "அகிமோவ் என்ரு கூறினீர்கள்? நான் யோசிக்கிறேன். அந்த பட்டாலியன் கமாண்டராக இருப்

பாரா ? உயரமான, பிடிவாதம் நிறைந்த, தமாஷான பேர் வழி. அவர் கடற்படையிலும் இருந்துள்ளார்.''

''உங்களுக்கு அவரைத் தெரியுமா ?''

''ஆமாம், எனக்கு நன்கு தெரியுமே! ஆம் அவரே தான்! அனிஷ்காவும் அதே ரெஜிமெண்டில் இருந்தார். அவர் கொல்லப்பட்டு விட்டாரா ? என்ன பரிதாபம் ? எவ்வளவு நல்ல அதிகாரி !''

சாதாரணமாக உற்சாகமாகப் பேசும் பழக்கம் வெர்ஸ்டோவ்ஸ்கியிடம் கிடையாது என்பது பேராசிரியருக்குத் தெரியும். அனிஷ்காவின் துன்பத்திற்குக் காரணமானவர் என்றுதான் ஒரு சமயம் குறைகூறிய அந்த மனிதரைப்பற்றி அவருடைய உயர்ந்த அபிப்பிராயத்தைக் கேட்க பேரா சிரியர் மனம் கரைந்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

அகிமோவின் சாமர்த்தியத்தைப்பற்றிய தகவலை சேக ரித்துக் கொடுப்பதாக வெர்ஸ்டோவ்ஸ்கி வாக்களித்தார். விரைவில் பேராசிரியருக்கு டெலிபோன் செய்து, அவரை எப்பொழுது சந்திக்கலாம், என்று கேட்டார்.

''ஆம். நான் நினைத்த அதே மனிதர்தான் அவர், ஒரு சிறந்த அதிகாரி. அவர் கடற்படைக்குத் திரும்ப அழைக்கப் பட்டார். ஓர்ஷாவில் என் முன்னுலேயே அது பற்றிப் பேச்சு நடந்ததுகூட எனக்கு நினைவிருக்கிறது. வட பிராந் திய கடற்படை மாலுமிகள் அவரை நன்கு நினைவில் கொண் டுள்ளனர். உண்மையில் அவரை யாரும் அவ்வளவு சுலபமாக மறந்துவிட முடியாது. தற்பொழுது கடற்படை தலைமைக் காரியாலயத்தில் உள்ள லெப்டினென்ட் கமாண்டர் லெடி யாகின், அவர் எந்த சூழ்நிலையில் இறந்தார் என்பதைச் சரியாகக் கூறுவார். அவருடைய சமாதியைப் பற்றித் தகவல் சேகரிக்கும்படி நான், நார்வேயிலுள்ள நம் ராணுவப் பிரதி நிதியைக் கேட்டுக்கொண்டுள்ளேன். அகிமோவ் உங்களுக் கும் எனக்கும் உறவினர் என்றும், அனிஷ்காவின் கணவர் என்றும் கூறியுள்ளேன். தகவல்கள் சேகரிப்பதாக அவர் வாக்களித்துள்ளார்.

அனிஷ்கா தற்பொழுது இருபத்தெட்டு வயதுடைய வளாய் பூர்ண அழகு குலுங்கக் காணப்படுகிறுள். திறமை

4-B

வாய்ந்த டாக்டராக முன்னுக்கு வந்துள்ளாள். மக்கள் எல்லோருடனும் ஒரேமாதிரியாக நடந்துகொள்வதினாலும், சர்வசாதாரணமாக இருப்பதாலும், வியாதியஸ்தர்களும் சரி, அவளுடைய சகாக்களும் சரி—அனைவரும் அவளை நேசித்தார்கள்.

அவளுடைய தந்தையின் வேண்டுகோளின் பேரில் சீக்கிரத்தில் அவள் தலைநகரில் ஒரு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டாள். ஒரு புகழ் வாய்ந்த பேராசிரியரின் மகளாக இல்லாமலிருந்திருப்பாளேயானால், அவளுடைய வெற்றி இன்னும் உயர்வாகப் பாராட்டப்பட்டிருக்கும். தற்பொழுது அவளுடைய நுண்ணறிவுக்கும், திறமைக்கும், அவளுடைய தகப்பனாரின் வழிகாட்டுதல் காரணமாகக் கூறப்பட்டது. ஏதோ பரம்பரையாக வரும் குணம் என்று கொள்ளப்பட்டது.

ஆனால் அவள் அதுபற்றிக் கவலைப்படவில்லை. ஏனெனில், வைத்தியத் துறையில் தான் முதிர்ச்சி அடைய ஆரம்பித்து வருவதாக அவள் உணர்ந்தாள். தன்னுடைய தந்தையும் இதர புகழ்மிகு சர்ஜன்களும் வெளிக்காட்டிய வியக்கத்தக்க திறமையின் ஆரம்பங்கள் ஏற்கெனவே தன்னிடம் இருப்பதையும் அவள் உணர்ந்தாள்.

அவளுடைய வாழ்க்கை அமைதியாகவும், எத்தகைய நிர்ப்பந்தமு மற்ற முறையிலும் நடந்து வந்தது. தன் வேலையிலும், தன் மகளைப் பற்றியுமே அவளுடைய கவனமெல்லாம் செலுத்தப்பட்டு வந்தது. அவளுடைய பதட்டமற்ற தோற்றத்திலிருந்து, ஒரு காலத்தில் அவளை வருத்திய, தற்பொழுதும் கூட சிலசமயங்களில் அவளைப் பீடிக்கும் துன்பத்தின் சாயல் எதையும் காண்பது கஷ்டமான காரியம்.

இடையறுத, கொடிய துன்பம் சூழ்ந்த நிலையில் இரண்டு ஆண்டுகளைக் கழித்தாள். படிப்பில் எத்தகைய இடையூறுமின்றி முன்னேறினாள். ஆனால் அவள் மாணவியா யிருந்த காலம் அவளுக்கு எத்தகைய கவலையுமின்றிக் கழிந்ததாகத் தோன்றியது. ஒரு பெரிய கடலலை தன்னை—தன்னுடைய முயற்சி எதுவுமின்றியே தூக்கிச்சென்றதாக அவள் உணர்ந்தாள். அந்த அலை கடமை, பொறுப்பு; நாட்டின் மீது

நேசம், தாயின் அன்பைப் போன்ற அன்பு, அல்லது வேறு ஏதோவாகத்தான் இருந்திருக்க வேண்டும். அது அனிஷ்காவை என்றுமே மூழ்கும்படி செய்ததில்லை.

ஆனல் அனிஷ்கா என்ன செய்தபோதிலும், எப்பொழுதுமே அவளுக்கு முன் இந்தக் கேள்வி நிற்கும். அவர் இறந்துள்ளபொழுது நான் எப்படி ஒரு புத்தகத்தைப் படிக்க முடியும்? அவர் இனி ஒருபோதும் உயிருடனில்லாமலிருக்கும் பொழுது நான் எப்படி சாப்பிடுவது, அருந்துவது? அவர் இனி ஒருபோதும் எனக்கு இல்லாமலிருக்கும்பொழுது நான் எப்படி கையுறைகளைப் போட்டுக்கொள்ள முடியும்? இருந்தபோதிலும் அவள் புத்தகங்களைப்படித்தாள். சாப்பிட்டாள், அருந்தினுள். கையுறைகளைப் போட்டுக் கொண்டாள். தன்னுடைய மகன் யுத்தத்தில் போனவன் திரும்பி வரவில்லையென்றபோதிலும் அத்தை நாடியா அவைகளையெல்லாம் செய்ததைப் போலவே அனிஷ்காவும் செய்தாள்.

இது சில சமயங்களில் அனிஷ்கா தன் மீதே கடுங்கோபம் கொள்ளும்படி செய்தது. வாழ்க்கையுடன் இவ்வளவு பரிதாபகரமாக ஒட்டிக்கொள்வதற்குத் தான் ஒரு வெறுக்கத்தக்க ஜந்துவாக இருக்க வேண்டும் என்று அவள் நினைத்தாள். அகிமோவ் இறந்துவிட்டதன் காரணமாக, அவள் உயிர் வாழ விரும்பவில்லை. அத்தகைய சூழ்நிலையில் ஒரு உண்மையான பெண் உயிர்வாழ முடியாது என்று அவள் நினைத்தாள். ஆயினும் அவள் உயிர் வாழ்ந்தாள். தனக்காகவும், காட்யாவுக்காகவும், தன் தந்தைக்காகவும், தான் வாழ்ந்த சமுதாயத்திற்காகவும் தான் ஆற்ற வேண்டிய பணிகளையெல்லாம் ஆற்றினுள்.

நார்வேயைப் பற்றி என்னென்ன புத்தகங்கள் கிடைக்குமோ அத்தனையையும் அவள் வாசித்தாள். நார்வீஜிய மொழியைக்கூட பயின்ருள். அது ஜெர்மன் மொழியைப் போல் இருந்ததால், அதைக் கற்பது அவளுக்கு அவ்வளவு கஷ்டமாக இருக்கவில்லை. அந்த சிறிய, கடினமாக உழைக்கும், நேர்மையான மக்களைப் பற்றி அவள் படிக்கும்போது, அந்த மக்கள் சிறியவர்களாகவும், கடின - உழைப்பாளிகளாகவும், நேர்மையானவர்களாகவும் இருந்ததன் காரண

மாகவே பேவல் அகிமோவ் இறந்தது நியாயமாகிறது என்ற சிந்தனையில் அவளுடைய மனத்திற்கு நிம்மதி கிடைத்தது.

2

பேவலின் பெற்றோர்களைப் பார்ப்பதற்காக, ஒரு நாள் கொவ்ரோவுக்குச் செல்வதென அவள் முடிவு செய்தாள். அப்பொழுது 1946-ஆம் ஆண்டின் வேனிற்காலம். மாலையில் அவள் ரயிலேறினாள். அடுத்த நாள் காலையில் அங்கு போய்ச் சேர்ந்தாள். அபெல்மேன் தெரு வழியாக அவள் நடந்தாள். பின்னர் கடைவீதி வழியாக, பழைய கற்கட்டிடங்களை உடைய கடைகளைக் கடந்து, பாலத்தின் மீது ஏறிச்சென்று, ஜாரெச் நயா ஸ்லோபோட்காவுக்குச் சென்றாள். அங்கு மரத்தினாலான சிறு வீடுகள் பச்சைப் பசேலென்ற செடிகளுக்கிடையில் மறைந்து நிற்பதைக் கண்டாள்.

அண்டையிலுள்ள வீடுகளிலிருந்து பிரித்துக் காண்பிப்பதற்கான விசேஷ அம்சங்கள் எதுவுமில்லாதிருந்த போதிலும், தான் தேடிவந்த வீட்டைக் கண்டு பிடிப்பதில் அவளுக்கு எவ்விதக் கஷ்டமும் இருக்கவில்லை. வீட்டுக்கு வெளியில் ஒரு பெஞ்சியின் மீது ஒரு வயதான தாய் உட்கார்ந்திருந்தார். மகனைப் போன்ற சாயலிருந்த அந்த அம்மையார் தான் பேவலின் தாயார் என்பதை அனிஷ்கா உடனேயே தெரிந்து கொண்டு விட்டாள். அத்தகைய சிறிய, அடக்கமான, வயதான, கருணை ஒளி பிரகாசிக்கும் அம்மையாருக்கு ஆஜானுபாகுவான பேவலைப் போன்ற ஒரு மகன் இருந்தது விநோதமானதே. அவர் இறந்து போன பின் அந்த அம்மையார் அந்த பெஞ்சியின் மீது உட்கார்ந்து கொண்டிருந்ததும் கூட விநோதமாக இருந்தது.

"மரியா கபிடோனோவ்னு, எப்படியிருக்கிறீர்கள்?" என்று அனிஷ்கா விசாரித்தாள். "நான் தான் அன்னு பெலோஜ்யொரோவா. நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன்."

அந்த வயோதிக அம்மையார், உணர்ச்சி வசப்பட்டு அவளைக் கட்டித் தழுவினாள். ஒரு வார்த்தையும் பேசாமல் அவளை வீட்டுக்குள் அழைத்துச் சென்றார்.

பின்னர், அவருடைய உணர்ச்சிகள் சிறிது அடங்கியபின் "என்னுடைய சிறிய பேத்தியை ஏன் கொண்டு வரவில்லை? அல்லது ஒருக்கால் நீ கொண்டு வந்திருக்கிறாயா?"

"இல்லை. நான் கொண்டு வரவில்லை. அடுத்த தடவை அவளை நான் கொண்டு வருகிறேன்."

"சரி, நீ எப்படியிருக்கிறாய் என்று நான் பார்க்கட்டும்' என்று கூறி, அந்த வயோதிகத் தாய், தன் சோகம் நிறைந்த பார்வையை அனிஷ்கா மீது செலுத்தினார்.

அனிஷ்கா வந்துள்ள செய்தி அண்டையிலுள்ளவர்களுக்குத் தெரிய வந்தது. பேவல் அகிமோவின் மனைவியைப் பார்க்க வேண்டுமென்று ஆவலாயுள்ளவர்கள் வந்து பார்ப்பதற்காகக் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. அவர்களில் பெரும்பான்மையோர் நெசவாளிகள். வயதடைந்து கொண்டிருக்கும் ஆண்களும் பெண்களும் வந்தனர். சிலர் குழந்தைகளையும் கொண்டு வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் அனிஷ்காவை ஓரளவு பயபக்தியுடன் முகமன் கூறி வரவேற்றனர். அவள் ஒரு புகழ் மிகு டாக்டருடையவும் ஜெனரலுடையவும் மகள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால். அவர்களுடைய ஆவலைத் தூண்டியது அதுவல்ல. அவர்களில் சிலருடைய புதல்வர்கள் ஜெனரல்களாகவும், கட்சி ஊழியர்களாகவும் மானேஜர்களாகவும் செல்வாக்கு வாய்ந்தவர்களாகவும் இருந்தனர். தொழிலாளர்—விவசாயிகள் ஆட்சியில் அவர்கள் அதிகாரத்திற்கு மிகவும் அருகில் இருந்தனர். அவர்களிடத்தில் அளவுக்கு அதிகமான அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. எனவே அதற்கு அவ்வளவு முக்கியத்துவத்தை அவர்கள் கொடுக்கவில்லை. உண்மையான காரணமென்னவெனில் அவர்களுக்கு பேவல் அகிமோவை மிக நன்றாகத் தெரியும். அவரை மிகவும் நேசித்தனர். ஜாரெக்னயா ஸ்லோபோட்காவில் அகிமோவ் மிகவும் வலிமை வாய்ந்தவர்களில் ஒருவனாகவும், மிகவும் நல்ல பையன்களில் ஒருவனாகவும் இருந்து வந்துள்ளான். மற்றும் ஒரு பிரசித்தமான—முன்னணித் தொழிலாளியாகவும், ஊழியராகவும் இருந்துள்ளார்.

அங்கிருந்த சில வயதான தாய்மார்கள் தங்களுடைய புதல்விகளை அவருக்கு திருமணமுடித்து வைப்பதற்கும் கூடத் திட்டமிட்டிருந்தனர். எனவே, பேவல் யாரைத் தன் மனைவியாகத் தேர்ந்தெடுத்துள்ளான் என்பதைத் தெரிந்து கொள்வதில் அக்கறை காட்டினர். ஏனெனில் இந்த விஷயத்தில் அவ்வளவு சுலபமாக திருப்திப்படுத்த முடியாத இளைஞனாகவும் பேவல் இருந்தான்.

அவர்கள் அனிஷ்காவுடன் உரையாடுவதற்காக அமர்ந்தனர். அவளுடன் சேர்ந்து செர்ரி பழ அல்வா சாப்பிட்டு, தேநீர் அருந்தினர். பின்னர் அகிமோவ், எவ்வளவு நல்ல பெண்ணைத் தேடித் திருமணம் புரிந்துள்ளான் என்று நினைத்துக்கொண்டே சென்றனர்.

இன்னும் திருமணமாகாத அகிமோவின் தங்கை வார்யா சற்று நேரத்தில் வேலையிலிருந்து திரும்பி வந்தாள். அவள் ஒரு பள்ளிக்கூட ஆசிரியை. நெ. 1 பள்ளிக்கூடத்தில் கீழ் வகுப்புகளில் மாணவர்களுக்குக் கல்வி போதித்து வந்தாள். இதே பள்ளிக்கூடத்திற்குத்தான் முன்பு பேவலும் சென்று கொண்டிருந்தான். அதற்கு முன்னால் அது ஒரு பயிற்சிசாலையாக இருந்தது. வார்யா, பேவலைப் போலவே, அப்படியேப அச்சடித்தமாதிரி இருந்தாள். அவளைப் பார்த்ததும் அனிஷ்கா அப்படியே அசந்து போனாள். அவளை மிகுந்த அன்புடன் கட்டித் தழுவிக்கொண்டாள். வார்யா பொலபொலவென்று கண்ணீர் உகுத்தாள். அழுகை அவளை மீறிக்கொண்டு வந்தது.

இன்றும் நெசவாலையில் 'போர்மேன்' ஆகப் பணியாற்றி வந்த பேவலின் தகப்பனார் கோர்டேபெட்ரோவிச், கடைசியாக வீட்டுக்குத் திரும்பினார். அவர் ஒரு உயரமான மனிதர். அடர்த்தியான முடி நிறைந்த புருவங்களும், ஒளி வீசும் கண்களும் உடையவர். அவர் உள்ளே வந்ததும், யாரென்று தெரிந்துகொள்ளாமலேயே கூட அனிஷ்காவை வரவேற்றார்.

"இதோ நான் வந்து விட்டேன், நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? இங்கு நான் பார்க்கும் இந்த அழகி யாரென்று தெரியவில்லையே? கொவ்ரோவில் இவளை நான் என்றுமே கண்டதில்லையே?" என்றார்.

அவருடைய வார்த்தைகளுக்கு மவுனம் தான் பதிலாக இருந்ததைப் பார்த்த அவர் கொஞ்சம் உஷாரானார். பின்னர் அவர் மேஜையின் மீது பேவலின் புகைப் படத்தைப் பார்த்தார். அதைப் பார்த்ததும் அவருடைய அகன்ற முகத்தில் தெளிந்த புன்முறுவல் சோகமாக மாறியது.

"ஓ! அதுதானா, அப்படியா?" என்றார். பின்னர், அவர் "என்னுடைய பேத்தி எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டார்.

"நன்றாக இருக்கிறாள்" என்று பதிலளித்தாள் அனிஷ்கா. "உங்களைப் பார்ப்பதற்கு அவளை மற்றொரு தடவை கூட்டிக்கொண்டு வருகிறேன்", என்றார்.

மறுநாள் அனிஷ்கா நகரத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வருவதற்காக வெளியே சென்றாள். வார்யாவும், அவளுடைய தகப்பனாரும், முன்பு பேவல் வேலை செய்த பெரிய எக்ஸ்கவேட்டர் (பள்ளந் தோண்டும் கருவிகள்) தொழிற்சாலையை அவளுக்குக் காண்பித்தனர். அதைப்பற்றி அவருக்கு நினைவிருந்ததை யெல்லாம் அவளுக்குக் கூறினார். ஒரு காலத்தில் அது ஒரு சாதாரண ஒர்க் ஷாப்பாக இருந்ததையும், எல்லாமே அங்கு கையால் செய்யப்பட்டு வந்ததையும் வெளிச்சத்திற்கு பெட்ரோல் விளக்குகளை உபயோகப்படுத்தி வந்ததையும் அவரால் அப்பொழுது கூட நினைவுக்குக் கொண்டு வர முடிந்தது. கருமான் பட்டரையில் அப்பொழுது, மூச்சுத் திணறும் வகையில் ஒரே புகையாக இருக்கும், என்றார். புகையைத் தாங்க முடியாத நிலைமை ஏற்படும்பொழுது கருமான் வெளியில் ஓடிப் போய், சிறிது நேரம் உறைபனியில் படுத்திருந்து விட்டுப் பிறகு மீண்டும் வேலைக்குப் போவார்.

தற்பொழுது அந்த ஒர்க்ஷாப்பின் கட்டிடம் பெரிதாகக் கட்டப்பட்டு, பெரிய ஜன்னல்களும் அமைக்கப்பட்டுள்ளன. பின்கட்டில் புதிய கெய்ரோவெட்ஸ் எக்ஸ்கவேட்டர்கள்— ட்ராம்களைப் போல் எல்லாம் சிவப்பு வர்ணம் பூசப்பட்டுக் காட்சியளித்தன.

ஷைரினா குன்றை அனிஷ்காவின் மாமனார் காண்பித்தார். அங்குதான் முன்பு ஆர்ப்பாட்டங்களும் தலைமறைவுக்

கூட்டங்களும் நடைபெற்றன. கடந்த காலத்தில் மல் யுத்தங்கள் அங்கு நடப்பது வழக்கம்.

அந்த நகரத்தில் உலோகத் தொழிலாளர்களும், நெசவாளிகளும் நிறைந்திருந்தனர். புரட்சிக்காகவும், சோஷலிசத்திற்காகவும், தங்கள் சக்தியையும் ரத்தத்தையும் அர்ப்பணித்த பல ரஷ்ய நகரங்களில் அதுவும் ஒன்றாகும். இடது சாரி—சோஷலிஸ்ட் புரட்சிக்காரர்கள் எனப்படும் கட்சியினரின் கலகம் வெடித்தபொழுது, கொவ்ரோவ், 250-வது காலாட் படையையும், சோவியத்தின் தலைவரும் ஸ்தலக் கட்சிக் கமிட்டியின் காரியதரிசியுமான ஏபெல்மேன் தலைமையில் ஸ்தல போல்ஷெவிக்குகளையும் மாஸ்கோ தொழிலாளர்களின் உதவிக்கு அனுப்பிவைத்தார். ஏபெல்மேன் கொல்லப்பட்டார். மாஸ்கோ நகர வாயில்களில் ஒன்றுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டது. கொவ்ரோவ்வின் போல்ஷெவிக்குகளும் தொழிலாளர்களும், முரோம் வெண் காவலர்களின் கலகத்தை அடக்குவதற்கும் கூட ஆட்களை அனுப்பி வைத்தனர். குளுசினிக்கோவ், பெல்கோவ் பகுதிகளில் குலாக்குகள் தொடங்கிய கலகங்ளும் கூட இவ்வாறே ஒடுக்கப்பட்டன. பின்னர் அவர்கள் தங்களுடைய தொழிற்சாலைகளையும், பேக்டரிகளையும் சீரமைப்பதற்காக மிகுந்த உறுதியுடன் வேலை செய்தனர். முதல் எகஸ்கவேட்டர் 1931-ல் நிர்மாணிக்கப்பட்டது. இரண்டாண்டுகளுக்குப் பிறகு எக்ஸ்கவேட்டர்கள் தொடர்ந்து உற்பத்தி செய்யப்படலாயின.

‘‘பின்னர், அந்த மகத்தான தேசபக்த யுத்தத்தில்......’’ பெரியவர் கொஞ்சம் தாமதித்து, தாழ்ந்த தொனியில் ‘‘கொவ்ரோவின் மக்க்ள் தங்களால் சாத்தியமான அனைத்தையும் கொடுத்தனர்’’ என்றார்.

3

பேவல் அகிமோவின் கதையை இங்கே நாம் முடித்துக்கொண்டு அவருக்குப் பின்னால் வாழ்ந்த மக்களின் இன்பங்களையும், துன்பங்களையும் சொல்லப் புகுவோம். துயரத்துடன் நம் கதாநாயகனை விட்டுப் பிரியவேண்டி யேற்பட்

டாலும், உண்மையில் இக்கதையின் முடிவைக் கூறிவிட்டுத் தான் நம் பேனவைக் கீழே வைக்கவேண்டும்; இதர சிந்தனை களில் நாம் ஈடுபட வேண்டும்.

ஆனல் துரதிர்ஷ்டவசமாக நாம் அவ்வாறு செய்ய முடியாது.

1951 ஆகஸ்டில் ஆட்கள் கடப்பாறைகளுடனும், மண் வெட்டிகளுடனும், வெடிமருந்துடனும், 'புல்டோஸர்' இயந் திரங்களுடனும், நார்வேயிலுள்ள ரஷ்ய ராணுவக் கல்லறை களுக்கு வந்தனர். அவர்கள் வெடி வைத்துத் தகர்த்துக் கல்லறைகளைத் திறந்தனர். மனிதர்களின் சடலங்களை குழி களுக்குள் வீசி எறிந்தனர். அவர்கள் மட்டும் உயிருடன் இருந்திருப்பார்களேயானல், கல்லறைகளைக் களங்கப் படுத்திய கயவர்களை—இன்னும் அதிக எண்ணிக்கையில் இருந்தபோதிலும்—தலைதெறிக்க ஓடும்படி செய்திருப் பார்கள். அவர்கள் கனமான ரோலர்களைக் கொண்டு நிலத்தை சமதரையாக்கினர். ஸ்தல மக்களின் பயபக்தி யுள்ள கைகளால் வைக்கப்பட்டிருந்த மலர்களையும் கூட்டித் தள்ளி மண்ணில் புதைந்து போகும்படி செய்தனர்.

இவ்வாறு அவமதிப்புக்குள்ளாக்கப்பட்ட கல்லறைகளில் பின்மார்க்கிலிருந்த கல்லறையும் ஒன்ருகும். அங்குதான் அகிமோவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டிருந்தது. மலைப் பகுதி பீட பூமியில் ஒரு விமான நிலையத்தை நிர்மாணிக்க ஆரம்பித்தனர். நார்வேயை விடுதலை செய்வதற்காக முதலில் துருப்புகளை அனுப்பியதும், விடுதலைக்குப் பின் முதலில் துருப்புகளை வாபஸ் பெற்றதுமான ஒருநாட்டின்மீது தாக்குதல் தொடுப்பதற்கு குண்டு வீசும் போர் விமானங்கள் தங்குவதற்கே இந்த விமான நிலையம் கட்டப்பட்டது.

இதரர்களின் உழைப்பால் வாழ்பவர்கள் இதர நாடு களின் மீது ஒரு யுத்தத்தைத் தொடுப்பதற்குத் தயாரிப்புகள் செய்ய விரும்பினர். அண்மைக்கால சம்பவங்களின் நினைவு கள் அவர்களின் திட்டங்களுக்கு இடைஞ்சலாக இருந்ததால், அதை உலகத்திலிருந்தே அழிந்தொழிப்பதற்கு முடிவு செய் தனர். இறந்தவர்கள் அவர்களின் திட்டங்களுக்கு இடை

யூருக இருந்தனர். எனவே அவர்களே இரண்டாவது தடவை யாகக் கொல்வதற்குத் திட்டமிட்டனர்.

இந்த அவச் செய்கைகளின் செய்தி உடனடியாக வெளி யாக்கப்படவில்லை. அது பல்வேறு ராஜதந்திர, இதரத் துறைகளின் வழியாக வடிகட்டப்பட்டு, மீண்டும் மீண்டும் தணிக்கை செய்யப்பட்டது; அப்படிப்பட்ட அதிர்ச்சி தரும் விஷயங்கள் உண்மையாயிருக்க முடியுமா என்பதை நம்புவது கூடக் கடினமாயிருந்தது.

நார்வேயிலுள்ள ராணுவப் பிரதிநிதியால், அங்கு என்ன ஏற்பட்டது என்பதை ஜெனரல் வெர்ஸ்டோவ்ஸ்கிக்குத் தெரியப்படுத்தப்பட்டபோது அவர் அதிர்ச்சி அடைந்து, திடுக்கிட்டார். அகிமோவின் சடலம் அங்கு புதைக்கப்பட் டிருந்தது என்பதுதான் அவரை மிகவும் மனவருத்தமடையச் செய்தது.

பேராசிரியர் பெலோஜ்யரோவைப் பார்ப்பதற்கு அவர் சென்ருர். அவருடைய தனி அறையில் அவரை சந்தித்து தான் கேள்விப்பட்டதையெல்லாம் ஜெனரல் வெர்ஸ் டோவ்ஸ்கி, அவரிடம் கூறினர். அதைக் கேட்டதினல் ஏற் பட்ட அதிர்ச்சி பேராசிரியரின் முகத்தின் நிறத்தை மாற்றி யது. வேகமாக சூழ்ந்துவரும் இருளில் உட்கார்ந்த வண்ணம் இருவரும், அனிஷ்காவிடம் சொல்லலாமா வேண்டாமா என்பது பற்றி மனதை திடப்படுத்திக் கொள்ள முடியாமல் தத்தளித்தனர். அடுத்த அறையிலிருந்து குழந்தைத்தன மான சிரிப்பொலிகளும், அடக்கமான குரல்களும் கேட்டன.

''எப்படியும் அதைப்பற்றி அவள் கேள்விப்படத்தான் போகிருள்'' என்ருர் வெர்ஸ்டோவ்ஸ்கி. ''விரைவில் அது வெளியில் தெரியத்தான் போகிறது.''

''அப்படியாஞல் நாம் என்ன செய்யலாம்? அவளிடத்தில் கூறலாமா ?''

''அவள் மீண்டும் திருமணம் செய்து கொள்ளவேண்டும்.''

''அவளுக்கு விருப்பமில்லே.''

நல்ல இருட்டாயிருக்கும்போது, அனிஷ்கா கதவைத் தட்டினுள். தணிந்த குரலில் ''அப்பா, தூங்கிவிட்டீர் களா?'' என்று கேட்டாள்.

இரு ஜெனரல்களுக்கும் மறுமொழி கூறுவதற்குத் துணிவில்லை. அனிஷ்கா தன் அறைக்குத் திரும்பிச் சென்றாள்.

"இறந்துபோனவர்களும்கூட அவர்களுக்கு இடையூறாக இருக்கிறார்கள்" என்று வெர்ஸ்டோவ்ஸ்கி மனச் சோர்வடைந்தவராய்க் கூறினார்.

பேராசிரியர் தன்னுடைய நரைத்த மீசையை விரல்களால் வருடிக்கொண்டே, நம்முடைய பூமியில் அத்தகைய விஷயங்கள் ஏற்படுவதற்காக திகைப்படைந்தார்; வேதனை அடைந்தார். அவருடைய முகத் தோற்றம் கடுமையாக இருந்தது. கல்லைப்போன்று உணர்ச்சியும், அசைவுமின்றி இருந்தார், உலகத்திலுள்ள எல்லா கடியாரங்களையும் நிறுத்திவிடலாம். ஆனால் அதனாலெல்லாம் காலம் கடந்து செல்வதைத் தடுத்து நிறுத்திவிட முடியாது என்று அவர் நினைத்தார். வெகு தொலைவில் ஐரோப்பாவின் வடக்கு விளிம்பில் வீரர்களின் கல்லறைகளை நாசப்படுத்துவது, ஆர்க்டிக் பிரதேசத்தில் இரவுநேரத்தில் அமைதியாக டிக்,டிக் என்று நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கும் சின்னஞ்சிறு கடியாரங்களை—காலத்தைத் தடுத்து நிறுத்தும் முட்டாள்த்தனமான நம்பிக்கையில், நிறுத்துவதாகும்.

"நாம் அவளிடம் சொல்லியாக வேண்டும்" என்று அவர் திடீரென்று கூறி, அனிஷ்காவைக் கூப்பிட்டார்.

அனிஷ்கா வெர்ஸ்டோவ்ஸ்கி கூறுவதை கவனித்துக் கேட்டுப் பின்னர் அசையாமல் அப்படியே நின்றாள். அவள் ஆச்சரியமும், பயங்கரமும், அவமான உணர்ச்சியும் நிரம்பியவளாய் நின்றாள். மனித சமுதாயத்தினிடம் அவளுடைய நம்பிக்கை கரைந்து போவதைப் போல் அவள் உணர்ந்தாள். ஒரு க்ஷணம்—அந்த க்ஷணம் பயங்கரமாகத் தோன்றியது—அவள் "நீங்கள் ஏன் அங்கு சென்றீர்கள்? உங்களுடைய உயிரை எதற்காக அர்ப்பணம் செய்தீர்கள்? உங்களுடைய உன்னதமான சிந்தனைகளையும், உங்களுடைய வீரத்தையும், உங்களுடைய அன்பையும் யாருக்காக தியாகம் செய்தீர்கள்?" என்று அவள் அகிமோவிடம் கேட்டாள்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக அவள் அந்த மனோ நிலையில் அதிக நேரம் இருக்கவில்லை. அந்த அவமதிப்பு தனியாகத்

தனக்கு மட்டும்ஏற்பட்டதல்ல என்பதை அவள்உணர்ந்தாள். மனிதசமுதாயம்பூராவுக்குமேஇழைக்கப்பட்ட அவமரியாதை யாகும். மனித இனம் மிகவும் உன்னதமானது. அதன்மீது விழுந்து கவ்வும் பயங்கரமான மிருகத்துடன் அதைப் போட்டுக் குழப்பக்கூடாது. தன்னுடைய உணர்ச்சிகளை அவள் விரைவில் சமாளித்துக் கொண்டாள். பின்னர் அனேகமாக அமைதியான குரலில் ''தற்பொழுது அவர் இறந்துவிட்ட போதிலும், அவர் உயிருடனிருக்கும்போது எப்படி விரோதியிடம் நடுக்கத்தை உண்டுபண்ணியிருந் தாரோ, அதுபோல் இப்பொழுதும் செய்யவேண்டும்'' என்றாள். ''அவருடைய விதி அசாதாரணமானதாயிருக்க வேண்டும். ஏனெனில் இறந்த பிறகும் அவர் வாழ்கிறார்.' என்று கூறினாள்.

அனிஷ்கா தன் தந்தைக்கும், ஜெனரலுக்கும் 'நல் இரவு' கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

மறுநாள் பள்ளிக்கூட ஆண்டு தொடங்கும் நாள். பேவல் அகிமோவின் மகள், சிறுமி காட்யா, ஏற்கனவே 7 வயது சிறுமியாகிவிட்டாள். இதுதான் பள்ளிக்கூடத் திற்கு அவள் செல்லும் முதல் நாள். குழந்தையின் வெள்ளை உடுப்பை அனிஷ்கா 'இஸ்திரி'ப் பெட்டி கொண்டு தேய்த்து வைத்தாள். அதன்மீது தண்ணீர் தெளிப்பதற்கே அவசியமில் லாமலிருந்தது. தாயின் இருதயத்திலிருந்தும், கண்களிலிருந் தும் மழைத் துளிகளைப்போல் [illegible] சொரிந்த கண் ணீரிலேயே அது போதிய அளவுக்கு ஈரமாகியிருந்தது.

(முற்றும்)